12-ஆழ்வார்கள்
108-திவ்யதேசம்
திருயாத்திரை




சூலூர் கலைப்பித்தன்

"12 – ஆழ்வார்கள் 108 – திவ்யதேசம் திருயாத்திரை" நூல் வெளியீட உதவிய டால்ஃபின் ராமனாதன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் ஆசி பெறுதல்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி செல்வி **ஜெ. ஜெயலலிதா** அவர்களிடம் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழக முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு **மதுரை டால்ஃபின் பள்ளி தாளாளர் ஏ.ஆர். ராமனாதன் ரூ. 1,08,000/–** பள்ளியின் சார்பாக தலைமைச் செயலகத்தில் முதல்வரிடம் 12-01-2005ல் வழங்கிய போது எடுத்தபடம்.

ஸ்ரீமதே ராமானுஜாய நம:



12 - ஆழ்வார்கள்


108 - திவ்யதேசம் திருயாத்திரை

- சூலூர் கலைப்பித்தன்

இந்தப்புத்தகம் உள்ள இல்லத்தில் இறைவன் குடி புகுந்துள்ளான் என்று அர்த்தம் !
இந்தப்புத்தகத்திற்கு கொடுக்கும் பணம் திருப்பதி உண்டியலில் போடுவதற்குச் சமம் !!
எல்லாம் நிறைவாகும், எல்லாம் நிறைவேறும், செல்வம் மிகவாகும், செழிப்பாய் உயர்வாகும் !!!

இந்த நூல் வெளியிட உதவி செய்தவர் :

இறைப் பணியில்...
தேவகோட்டை டால்ஃபின் AR. ராமனாதன்
(அரு.லெ. வீடு)
தாளாளர், டால்ஃபின் பள்ளி மதுரை – 10
Phone : 93451 69639, 99439 25200, 0452 - 2387787
Email : dolphinschool2009@yahoo.in



நூல் தலைப்பு : **12 - ஆழ்வார்கள், 108 - திவ்யதேசங்கள்**

ஆசிரியர் : சூலூர் கலைப்பித்தன்

மொழி : தமிழ்

பதிப்பு ஆண்டு : 2012

பதிப்பு விவரம் : முதற் பதிப்பு

விலை : ரூ. 250/-

உரிமை : ஆசிரியர்
சூலூர் கலைப்பித்தன்
கலைபித்தன் கலை, இலக்கிய, இயற்கைப் பாதுகாப்பு அறக்கட்டளை
33, பழனியப்பத் தேவர் சந்து, சூலூர் அஞ்சல்
கோயமுத்தூர் - 641 402
அலைபேசி : 94424 83066

தாளின் தன்மை : 18.6 கி.கி. மேப்லித்தோ + ஆர்ட் பேப்பர் 100gsm

நூலின் அளவு : டெம்மி 1/5th சைஸ் (21cm x 19cm)

அச்சு எழுத்து அளவு : 13 புள்ளி

கணினி வடிவமைப்பு : கோல்டன் கிராபிக்ஸ்
7-வது வீதி, காந்திபுரம், கோயமுத்தூர் - 641 012
போன் : 0422-4374253 அலைபேசி : 94866 17546

ஒளிப்படம் : சூலூர் கலைப்பித்தன்


அச்சிட்டோர் : தி கிளாசிக் பிரிண்டர்ஸ்
208, நாயக்கர் புது வீதி (சக்தி சிவம் தியேட்டர் சாலை)
மதுரை - 625 001. போன் : 0452-2323819, 4381603

33-1


108 - திவ்யதேசங்கள்

1. சோழநாட்டு திருப்பதிகள் - 40
2. சேரநாட்டு திருப்பதிகள் - 13
3. பாண்டிய நாட்டு திருப்பதிகள் - 18
4. தொண்டைநாட்டு திருப்பதிகள் - 22
5. நடுநாட்டு திருப்பதிகள் - 2
6. வடநாட்டு திருப்பதிகள் - 11
7. நில உலகில் பார்க்க முடியாத திருப்பதிகள் - 2

ஆக மொத்தம் 108



சோழநாட்டுத் திருப்பதிகள்





கோயில்கள் குடிகொண்ட ஊர்கள்

சோழநாட்டு திருப்பதிகள் - 40

1. திருவரங்கம்
2. திருஅரிமேய விண்ணகரம்
3. திருஅன்பில்
4. திருஆதனூர்
5. திருஇந்தளூர்
6. திருக்கண்டியூர்
7. திருக்கண்ணங்குடி
8. திருக்கண்ணபுரம்
9. திருக்கண்ணமங்கை
10. திருக்கரம்பரனூர் (உத்தமர் கோயில்)
11. திருக்கவித்தலம்
12. திருக்காவளம்பாடி
13. திருக்காழிச்சீராம விண்ணகரம் (சீர்காழி)
14. திருக்குடந்தை (கும்பகோணம்)
15. திருக்கூடலூர்
16. திருக்கோழி (உறையூர்)
17. திருச்சித்ரகூடம் (சிதம்பரம்)
18. திருச்சிறுபுலியூர்
19. திருச்செம்பொன்செய் கோயில்
20. திருச்சேறை
21. திருத்தஞ்சை மாணிக்கோயில்
22. திருத்தலைச்சங்க நாண்மதியம் (தலைச்சங்காடு)
23. திருத்தெற்றியம்பலம்
24. திருத்தேவனார் தொகை
25. திருநந்திபுர விண்ணகரம்
26. திருநறையூர் (நாச்சியார் கோயில்)
27. திருநாகை (நாகப்பட்டினம்)
28. திருபார்த்தன்பள்ளி
29. திருப்புள்ளம்பூதங்குடி
30. திருப்பேர்நகர்
31. திருமணிக்கூடம்
32. திருமணிமாடக் கோயில்
33. திருவண்புருடோத்தமம் (திருநாங்கூர்)
34. திருவழுந்தூர் (தேரழுந்தூர்)
35. திருவாலியும் திருநகரியும்
36. திருவிண்ணகர் (ஒப்பிலியப்பன் கோயில்)
37. திருவெள்ளக்குளம்
38. திருவெள்ளறை
39. திருவெள்ளியங்குடி
40. திருவைகுந்த விண்ணகரம்

33-1

நடுநாட்டுத் திருப்பதிகள் - 2

41. திருக்கோவலூர்
42. திருவஹீந்த்ரபுரம்

தொண்டைநாட்டுத் திருப்பதிகள் - 22

43. திருஅஷ்டபுயகரம் (காஞ்சீபுரம்) (1)
44. திருஇடவெந்தை (திருவடந்தை) (2)
45. திருஊரகம் (காஞ்சீபுரம்) (3)
46. திருஎவ்வுள் (திருவள்ளூர்) (4)
47. திருக்கச்சி-அத்திகிரி (காஞ்சீபுரம்) (5)
48. திருக்கடல்மல்லை (மஹாபலிபுரம்) (6)
49. திருக்கடிகை (சோளிங்கபுரம்) (7)
50. திருக்கள்வனூர் (காஞ்சீபுரம்) (8)
51. திருக்காரகம் (காஞ்சீபுரம்) (9)
52. திருக்கார்வானம் (காஞ்சீபுரம்) (10)
53. திருத்தண்கா (தூப்புல்-காஞ்சீபுரம்) (11)
54. திருநிலாத்திங்கள் துண்டம் (காஞ்சீபுரம்) (12)
55. திருநின்றவூர் (திண்ணனூர்) (13)
56. திருநீரகம் (காஞ்சீபுரம்) (14)
57. திருநீர்மலை (15)
58. திருப்பரமேச்சுர விண்ணகரம்(காஞ்சீபுரம்) (16)
59. திருப்பவளவண்ணம் (காஞ்சீபுரம்) (17)
60. திருப்பாடகம் (காஞ்சீபுரம்) (18)
61. திருப்புட்குழி (19)
62. திருவல்லிக்கேணி (20)
63. திருவெஃகா (காஞ்சீபுரம்) (21)
64. திருவேளுக்கை (காஞ்சீபுரம்) (22)

வடநாட்டுத் திருப்பதிகள் - 11

65. திருக்கண்டமென்னும் கடிநகர் (தேவப்ரயாகை) (1)
66. திருச்சாளக்ராமம் (2)
67. திருச்சிங்கவேள்குன்றம் (அஹோபிலம்) (3)
68. திருத்வாரகை துவாரபதி (4)
69. திருநைமிசாரண்யம் (5)
70. திருப்பிருதி (ஷோஷிமட்) (6)
71. திருவடமதுரை (மதுரா) (7)
72. திருவதரியாச்ரமம் (பத்ரிநாத) (8)
73. திருவயோத்தி (அயோத்யா) (9)
74. திருவாய்ப்பாடி (கோகுலம்) (10)
75. திருவேங்கடம் (திருப்பதி) (11)

மலைநாட்டுத் திருப்பதிகள் - 13

76. திருக்கடித்தானம் (1)
77. திருக்காட்கரை (2)
78. திருச்செங்குன்றூர் (திருச்செற்றாறு) (3)
79. திருநாவாய் (4)
80. திருப்புலியூர் (குட்டநாடு) (5)
81. திருமூழிக்களம் (6)
82. திருவண்பரிசாரம் (7)
83. திருவண்வண்டூர் (திருவமுண்டூர்) (8)
84. திருவல்லவாழ் (திருவல்லா) (9)
85. திருவனந்தபுரம் (10)
86. திருவட்டாறு (11)
87. திருவாறன்விளை (ஆரம்முளா) (12)
88. திருவித்துவக்கோடு (13)

பாண்டியநாட்டுத் திருப்பதிகள் - 18

89.	திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி)	(1)
90.	திருக்குளந்தை (பெருங்குளம்)	(2)
91.	திருக்குறுங்குடி	(3)
92.	திருக்கூடல் (மதுரை)	(4)
93.	திருக்கோட்டியூர்	(5)
94.	திருக்கோளூர்	(6)
95.	திருச்சீரிவரமங்கை (வானமாமலை)	(7)
96.	திருத்தண்கால்	(8)
97.	திருத்தொலைவில்லிமங்கலம்	(9)
98.	திருப்புல்லாணி	(10)
99.	திருப்புளிங்குடி	(11)
100.	திருப்பேரை	(12)
101.	திருமாலிருஞ்சோலை (அழகர்கோயில்)	(13)
102.	திருமோகூர்	(14)
103.	திருவரகுணமங்கை	(15)
104.	திருவில்லிபுத்தூர் (ஸ்ரீவில்லிபுத்தூர்)	(16)
105.	திருவைகுண்டம் (ஸ்ரீவைகுண்டம்)	(17)
106.	திருமெய்யம் (திருமயம்)	(18)

நில உலகில் பார்க்க முடியாத ஸ்தலங்கள் - 2

107.	திருப்பரமபதம்	(1)
108.	திருப்பாற்கடல்	(2)

ஓம் நமோநாராயணா

விநாயகர் வேண்டுதல்



வெற்றி விநாயகா வேறெதுவும் வேண்டாம்உன்
பொற்பாதம் பற்றித் தொழுதெழுத – கற்பேன்
கலையும் இலக்கியமும் காலமெல்லாம் என்று
அலையும்நான் பித்தன் அருள்.




ஆஞ்சிநேயர் வேண்டுதல்

ஆஞ்சிநேயா உந்தன் அடிபோற்றி கும்பிட்டேன்
காஞ்சி திருக்கடிகை கண்டுவந்தேன் – ஊஞ்சலாம்
நூற்றியெட்டு திவ்யதேசம் நூலாக மேலோங்க
ஆற்றிவாய் ராமன் அருள்

லட்சுமி வணக்கம்



லட்சுமி உன்னருள் லட்சியம் மேலோங்க
லட்சலட்சம் கோடிகோடி லாபமாய் – தட்சணை
எல்லோரும் வாழவேண்டும் எல்லாமும் காணவேண்டும்
பல்லுயிரும் வாழ பணம்.



திருவரங்கம் கோயில் திருவரங்கா உந்தன்
அருள்வேண்டி நானும் அணுகி – வருவேன்பார்
நூற்றியெட்டு திவ்யதேச நூலில் எழுதுவேன்
போற்றியுந்தன் நாமப் புகழ்!

12 - ஆழ்வார்கள், 108 - திவ்யதேசங்கள்

என்னுரை



நான் 63-நாயன்மார்கள் சிவதிருத்தலங்களுக்கு திருயாத்திரை மேற்கொண்டு தரிசித்து, ஆய்வு செய்து அதை நூலாக எழுதினேன்.

அந்த சிவபெருமான் திருவருளால் ஆனந்த விகடன் பிரசுரம் அதை நூலாகப் பதிப்பித்து, அந்த நூல் 5 பதிப்புக்கும் மேலாக வெளிவந்து எனக்கு பெருமை சேர்த்தது.

ஆறுபடைவீடு, அம்மன் திருக்கோயில்கள், சிவதிருக்கோயில்கள் என ஆன்மீக சுற்றுலா சென்று வந்த பிறகு 108 திவ்யதேசப் பெருமாள் கோயில்களுக்கும் சென்று வரத்தோன்றியது. அது இறைவன் கட்டளையாகவும் இருக்கலாம். அந்த அடிப்படையில் ஆழ்வார்கள் திருத்தலங்களுக்கும் சென்று வந்த பின்னர் நாலாயிர திவ்யப் பிரபந்தம் முழுவதும் படித்து முடித்தேன். அதன்பிறகு என் ஆன்மீகப் பயணத்தைத் தொடங்கினேன். இது திருமாலாகிய பெருமாள் எனக்கு அருளிய மிகப்பெரிய புண்ணியமாகக் கருதி எனது யாத்திரையைத் தொடங்கினேன்.

பொதுவாக தமிழ்நாட்டில் தஞ்சைப் பெருங்கோயில், தாராசுரம் கோயில், கங்கை கொண்ட சோழபுரம், சிதம்பரம் நடராசர் கோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில், நெல்லையப்பர் கோயில், இராமேசுவரம் கோயில், சென்னை பார்த்தசாரதி கோயில், காஞ்சிபுரக் கோயில்கள் என இப்படித்தான் இந்த கோயில்களைத்தான் பெரிய கோயில்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் என்னைப் பொறுத்தவரை நான் சென்று வந்த 63-நாயன்மார்கள் சிவத்தலங்கள், 108 திவ்யதேசப் பெருமாள்கள் ஆகியவற்றை பார்த்து வந்த வகையில் பல கோயில்கள் வியப்புக்குரியதாக இருக்கின்றன. கட்டிடம், சிற்பம், ஓவியம், பண்பாடு, கலாச்சாரம் இந்த அடிப்படையில் பார்க்கும் போது உலக அதிசயங்களாகத் தெரிகின்றன. நான் அடிக்கடி பல நண்பர்களிடம் இந்தக் கோயில்களின் அருமை. பெருமைகளைக் கூறி, அரசாங்கம் இவற்றையெல்லாம் ஆய்வு செய்ய வேண்டும் எனக் கூறியிருந்தேன்.

சமீபத்தில் திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோயில் ரகசிய பாதாள அறைகளில் ஒரு லட்சம் கோடிக்கும் அதிகமான தங்கநகைகள், ஆபரணங்கள் கண்டெடுக்கப்பட்டு, அந்த சம்பவம் பெரிய அளவில் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகிறது. அதைக் குறிப்பிட்டு பல பத்திரிகைகள், அதேபோல தமிழ்நாட்டில் உள்ள கோயில்களையும் ஆய்வு செய்தும், திறக்கப்படாமலிருக்கும் கதவுகளைத் திறந்து பார்த்தும் சோதனை செய்ய வேண்டும் என்றும் கூறியிருக்கின்றன.

அதே கருத்தைத்தான் நானும் பலகாலமாக அனுபவத்தின் அடிப்படையில் கூறிவருகிறேன். 63 நாயன்மார்கள் சிவ தலங்களையும், 108 திவ்ய தேசப் பெருமாள் கோயில்களையும், இன்னபிற பெரிய கோயில்களையும் திறந்து பார்த்து அவற்றையெல்லாம் ஆய்வு செய்ய வேண்டும்.

நான் சென்ற பல பெரிய கோயில்களில் எண்ணெய் கூட இல்லாமல் தீபம் ஏற்றப்படுவதில்லை. பலகோயில் சிதிலமடைந்து கிடக்கின்றன. பல கோயில்கள் பராமரிக்கப்படுவதில்லை. பல கோயில்களுக்கு சொத்துக்களும், நிலங்களும் நிறைய இருக்கின்றன. அவற்றையெல்லாம் பலபேர் அனுபவித்தும்

ஆக்ரமித்தும் வருகிறார்கள். அரசாங்கம் அவற்றையெல்லாம் கண்டுபிடித்து, மீட்டு, கணக்கெடுத்து அந்த கோயில் வளர்ச்சிக்கும், அந்த ஊர் வளர்ச்சிக்கும், கலை, பண்பாடு, வளர்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டும். அந்தந்த ஊரில் உள்ள அந்தக் கோயில்களை அந்தந்த ஊரைச் சேர்ந்த உண்மையான, முறைகேடு செய்யாதத் திருத்தொண்டர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் மேற்பார்வையில் விடவேண்டும்.

இறைபக்தியின் மேன்மையால்தான் மக்கள் தங்கள் சொத்துக்களையும், பணங்களையும் கோயில்களுக்கு எழுதி வைத்தும், உண்டியல்களை நிறைத்தும் தங்கள் பக்தியைக் காட்டி வந்துள்ளார்கள், காட்டி வருகிறார்கள். 12 ஆழ்வார்கள், 63 நாயன்மார்கள் போன்ற திருத்தொண்டர்கள் மூலம் இந்தக் கோயில்கள் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, இந்த உலகத்திற்கு தமிழ்நாட்டின் ஆன்மீகப் பெருமையையும், சிறப்பையும் எடுத்துக்காட்டவே இந்த நூல் எழுதப்படுவது வேள்வியாகும்.

எனது இந்த ஆன்மீகச் சுற்றுலா முழுக்க முழுக்க உணர்வுபூர்வமாக சுற்றி வந்ததாகும். இது அருள் நோக்கமேயன்றி பொருள் நோக்கமல்ல. அந்த வகையில் இதை நூலாக வடிவம் செய்யும் பொருட்டு பல முயற்சிகள் மேற்கொண்டேன்.

ஒருநாள் எல்.ஐ.சி. ராமசந்திரன் அவர்களிடம் 108 திவ்யதேச சுற்றுப்பயணத்தின் சுருக்கத்தையும், நான் அங்கெல்லாம் சென்று எடுத்து வந்த ஒளிப்பட ஆல்பத்தையும் கொடுத்து வந்தேன்.

பிறகு ஒருநாள் என்னை அழைத்து இதை புத்தகவடிவமாக்க நானே முடிவு செய்துவிட்டேன் என்று கூறி, அவருடைய பூஜை அறையில் திருப்பதி அருள்மிகு திருவேங்கட பெருமாள் படத்தில் முன்னால் நின்று ரூ. 101/- கொடுத்து வாழ்த்துடன் பணியைத் தொடங்கக் கூறினார். அதன் பிறகு இந்த நூல் கணினி (DTP) வடிவமைப்புக்குண்டான செலவு முழுவதும் அவர் ஏற்றுக் கொண்டார். அவருக்கு எனது பெருமனதுடன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் அவருக்கும், அவர் குடும்பத்தினருக்கும் செல்வச் சிறப்பும், பிள்ளைப் பேற்று நடப்பும் புகழ்பெற கிடைக்க ஆண்டவனை வேண்டுகிறேன்.

ஒருநாள் மதுரை டால்ஃபின் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் தாளாளர் அரு. ராமநாதன் அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அவர் தான் பதிப்பிக்கவிருக்கும் "ஆருத்ரா தரிசனம்" நூலில் தான் எழுதிய 63-நாயன்மார்கள் பற்றிய வெண்பாக்களை பயன்படுத்திக் கொள்ள ஒப்புதல் கேட்டார். நானும் ஒத்துக் கொண்டேன்.

அதன் வழியாக அவர் நான் எழுதிய 12 - ஆழ்வார்கள், 108 - திவ்யதேசங்கள் நூல் மாதிரி வடிவமைப்பை பார்த்து விட்டு, அதை நானே நூலாக்கி முடித்துத் தருகிறேன் என்று கூறி, அதை இப்போது உங்கள் கரங்களில் தவழ விட்டிருக்கிறார்.

அதற்காக அவருக்கும் அவர் குடும்பத்தாருக்கும் எனது கோடான கோடி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த நூலுக்கு கணினி (DTP) தட்டச்சு செய்து கொடுத்த ஒய். முகம்மது இர்பான் அவர்களுக்கும், அழகான முறையில் அச்சிட்டு நூல் வடிவம் செய்து கொடுத்த மதுரை அச்சகத்தாருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

– சூலூர் கலைப்பித்தன்



நூலுக்கு தொடக்கம் கொடுத்தவர்
எல்.ஐ.சி. ராமச்சந்திரன்

நன்றி மலர்!



நூலை முடித்துக் கொடுத்தவர்
டால்ஃபின் அரு. ராமனாதன்

நாரணர் பெருமாளும் கிருஷ்ணர் என்னும்
திருமாலின் அவதாரம் பத்து ஆகும்
காரணமாம் ராமநாதர் ராமச் சந்தர்
கம்பனவன் பெயரதிலும் ஒன்று ஆகும்
தோரணமாய் திவ்யதேசம் சென்ற பின்னர்
நூரிகையில் எழுதியதை முடித்த போது
தேரெனவே நூல்வடிவம் ஆகிக் காண
தெய்வமென வந்திட்டார் இவர்கள் தானே!

நூல்ப்பணியை தொடக்கிவைத்தார் ராமச் சந்தர்
நூறுரூபாய் பூசையிலே வைத்துத் தந்தார்
கால்நோக கைவலிக்க ஆயுள் காப்பு
கழகத்தில் தொழில்செய்த அந்த அண்ணன்
மேல்ஓங்கி மேல்ஓங்கி மேலா ளர்ஆய்
மேன்மையாக வாழ்க்கையில் உயர்ந்து விட்டார்
பால்எனவும் தேன்எனவும் இனிப்பு மாக
பாரெங்கும் புகழ்பெற்றார் நன்றி! வாழ்க.

நூல்வடிவை முடித்திட்டார் ராம நாதன்
நூறாண்டு அவர்வாழ நன்றி சொல்வேன்
கோலோச்சும் கல்வியகம் டால்ஃபின் பள்ளி
கொடைவள்ளல் ராமநாதன் தாளா ளர்ஆம்
கால்பதித்து மதுரைக்குச் சென்று வந்தேன்
கண்டபின்னே வியந்துபோய் நின்று கொண்டேன்
மேலான கோயில்போல் பள்ளிக் கூடம்
இறைவனெல்லாம் குடிகொண்டார் நன்றி சொல்வேன்!

12 - ஆழ்வார்கள்

திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி

மங்களா சாசனம்

நாலாயிர திவ்யப் பிரபந்தம் என்ற 12-ஆழ்வார்கள் பாடிய அதாவது மங்களா சாசனம் செய்த பாடல்களின் தொகுப்பு என்றாலும் அதில் திருமங்கையாழ்வார் பாடிய, மங்களாசாசனம் செய்த பெரிய திருமொழி குறிப்பிடத்தக்க சிறப்புப் பொருந்தியதாகும்.

இவர் ஆசுகவி, மதுரகவி, சித்ரகவி, விஸ்தரம்கவி என்ற நான்கு வகை கவிதைகளிலும் ஈடு இணையற்று விளங்கினார். அந்த இலக்கண கவிகளின் மூலம் திருக்குறுந்தாண்டகம், திருநெடுதாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் உட்பட 6-திவ்ய பிரபந்தங்களையும் அருளினார்.

அந்த 6-திவ்ய பிரபந்தங்களில் முதலிடம் பெறுவது பெரிய திருமொழி ஆகும். திருமங்கையாழ்வாரின் வரலாறு மிகப்பெரியதும், சுவையானதும் ஆகும். அதில் ஒரு அங்கம். சிறப்புக்குரிய அவரது 'நாராயணா' என்ற நாமத்தை உச்சரித்துத் தொடங்கிய திருத்தல யாத்திரை ஆகும்.

அவர் தனது யாத்திரையை இமயத்தில் தொடங்கி கன்னியாகுமரியில் முடிப்பதே பெரிய சிறப்புக்குரியதாக அமைகிறது என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.


அவர் 8-ஆம் நூற்றாண்டில் பிறந்தார். விஞ்ஞானம், போக்குவரவு, சாலைவசதி அமையாத அந்த காலத்தில், அவர் சென்ற அந்த பயணத்தை ஆராயும் போது, விஞ்ஞான ரீதியில், ஆராய்ச்சி அடிப்படையில் ஒருவரைபட பயண திட்ட அடிப்படையில் வழிகாட்டுதல் அமைப்பில் அது அமைந்திருப்பது வியப்புக்குரியதாக இருக்கிறது.

இமயத்தில் தொடங்கி குமரி முடிய அவர் மங்களா சாசனம் செய்துள்ள பாடல்கள் பெற்ற தலங்களின் வரிசையில் நாம் சென்றால் பயணத்திட்டம் அழகாகவும், காலஅளவு குறைவாகவும் அமைய அது வழி காட்டுகிறது.

இப்போது நான் திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்த பாடல் தலங்களின் வரிசையும், நாலாயிர திவ்யப் பிரபந்த வரிசை எண் அடிப்படையிலும் இந்த திவ்யதேச தொடரை தொடங்கி எழுதியுள்ளேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். சரி! நாமும் 'நாராயணா' என்ற நாமத்தை உச்சரித்து பயணத்தை தொடங்கலாமா?

திருவரங்கம் – திருச்சிராப்பள்ளி மாநகரில் உள்ளது. கோயமுத்தூரிலிருந்து திருச்சிக்கு காலை 7.30 மணிக்கு கோவை – மயிலாடுதுறை ரயலில் செல்லலாம். ஆனால் கோவை – சிங்காநல்லூரிலிருந்து ஐந்து நிமிடத்திற்கு ஒரு பேருந்து திருச்சிராப்பள்ளிக்கு செல்கிறது.

திவ்யதேசம் - 1



திருவரங்கம்
(அரங்கநாதன்)

மூலவர் - அரங்கநாதன்
பெரிய பெருமாள்
நம் பெருமாள்
அழகிய மணவாளன்
புஜங்க சயனம்
ஆதிசேஷ சயனத் திருகோலம்

உற்சவர் - நம்பெருமாள் நிற்கும் கோலம்

தாயார் - அரங்கநாயகி ரங்கநாச்சியார்

தீர்த்தங்கள் : வில்வ தீர்த்தம், நாவல் தீர்த்தம், புன்னை தீர்த்தம், மகிழ் தீர்த்தம், சந்திர புட்கரணி, கொள்ளிடம்.

மங்களாசாசனம்:


பத்து ஆழ்வார்கள், ஆண்டாள் – 11 (மதுரகவி தவிர)

எல்லா ஆழ்வார்களும் பாடிய ஒரே திவ்யதேசம் இதுதான்.

1.	பெரியாழ்வார்	-	183, 189, 212, 245, 402-432
2.	ஆண்டாள்	-	607 - 616
3.	குலசேகராழ்வார்	-	647 - 676, 728
4.	தொண்டரடிப் பொடியாழ்வார்	-	872 - 936
5.	திருப்பாணாழ்வார்	-	927-936
6.	பொய்கையாழ்வார்	-	2087
7.	பூதத்தாழ்வார்	-	2209, 2227, 2251, 2269
8.	பேயாழ்வார்	-	2342, 2345
9.	நம்மாழ்வார்	-	2505, 3348 - 58
10.	திருமழிசையாழ்வார்	-	772, 800-806, 844, 870, 2384, 2411, 2417, 2441
11.	திருமங்கையாழ்வார்	-	1213, 1378-97, 1506, 1571, 1664, 1829, 1978, 2029, 2038, 2043, 2044, 2050, 2062, 2063, 2065, 2069, 2070, 2073-76, 2673(71), 2678 (118)
மொத்தம்		-	247 பாசுரங்கள்

"எழிலுடைய வம்மனைமீர்! என்னரங்கத் தின்னமுதர்
குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்
எழுகமலப் பூவழக ரெம்மானார், என்னுடைய
கழல்வளையைத் தாமும் கழல்வளையே யாக்கீனாரே" (608)

என்று ஆண்டாள் பாடுவார்.




ஆனிரை மேயக்கநீ போதி
அருமருந்த தாவ தறியாய்,
கானக மெல்லாம் திரிந்துன்
கரிய திருமேனி வாட,
பானையிற் பாலைப் பருகிப்
பற்றாதா ரெல்லாம் சிரிப்ப,
தேனி லினிய பிரானே
<u>**செண்பகப்**</u> பூச்சூட்ட வாராய் (182)

கருவுடைய மேகங்கள் கண்டால்
உன்னைக்கண் டாலொக்கும் கண்கள்
உருவுடை யாய்!உல கேழும்
உண்டாக வந்து பிறந்தாய்,
திருவுடை யாள்மண வாளா
திருவரங் கத்தே கிடந்தாய்,
மருவி மணம்கமழ் கின்ற
<u>**மல்லிகைப்**</u> பூச்சூட்ட வாராய். (183)

மச்சொடு மாளிகை யேறி
மாதர்கள் தம்மிடம் புக்கு,
கச்சொடு பட்டைக் கிழித்துக்
காம்பு துகிலவை கீறி
நிச்சலும் தீமைகள் செய்வாய்
நீள்திரு வேங்கடத் தெந்தாய்
பச்சைத் தமனகத் தொடு
<u>**பாதிரிப்**</u> பூச்சூட்ட வாராய். (184)



தெருவின்கண் நின்றிள வாய்ச்சி
மார்களைத் தீமைசெய் யாதே
மருவும் தமனக மும்சீர்
மாலை மணம்கமழ் கின்ற
புருவம் கருங்குழல் நெற்றி
பொலிந்த முகிற்கன்று போலே,
உருவ மழகிய நம்பீ
<u>**உகந்திவை**</u> சூட்டநீ வாராய் (185)



புள்ளினை வாய்ப்பிளந் திட்டாய்
பொருகரி யின்கொம் பொசித்தாய்
கள்ளவ ரக்கியை மூக்கொடு
காவல னைத்தலை கொண்டாய்
அள்ளிநீ வெண்ணெய் விழுங்க
அஞ்சா தடியே னடித்தேன்
தெள்ளிய நீரி லெழுந்த
செங்கழு நீர்சூட்ட வாராய் (186)

எருதுக ளோடு பொருதி
யேதுமு லோபாய்காண் நம்பீ,
கருதிய தீமைகள் செய்து
கஞ்சனைக் கால்கொடு பாய்ந்தாய்
தெருவின்கண் தீமைகள் செய்து
சிக்கென மல்லர்க ளோடு
பொருது வருகின்ற பொன்னே
புன்னைப்பூச் சூட்டிட வாராய் (187)

குடங்க ளெடுத்தேற விட்டுக்
கூத்தாட வல்லவெங் கோவே,
மடங்கொள் மதிமுகத் தாரை
மால்செய்ய வல்லவென் மைந்தாய்,
இடந்திட் டிரணியன் நெஞ்சை
இருபிள வாகமுன் கீண்டாய்
குடந்தைக் கிடந்தவெங் கோவே!
குருக்கத்திப் பூச்சூட்ட வாராய் (188)

சீமா லிகனவ னோடு
தோழமை கொள்ளவும் வல்லாய்,
சாமா றவனைநீ யெண்ணிச்
சக்கரத் தால்தலை கொண்டாய்
ஆமா றறியும் பிரானே!
அணியரங் கத்தே கிடந்தாய்
ஏமாற்ற மென்னைத் தவிர்த்தாய்
இருவாட்சிப் பூச்சூட்ட வாராய் (189)



அண்டத் தமரர்கள் சூழ
அத்தாணி யுள்ளங்கி ருந்தாய்
தொண்டர்கள் நெஞ்சி லுறைவாய்
தூமல ராள்மண வாளா
உண்டிட் டுலகினை யேழும்
ஓரா லிலையில்துயில் கொண்டாய்
கண்டுநா னுன்னை யுகக்கக்
கருமுகைப் பூச்சூட்ட வாராய் (190)

செண்பக மல்லிகை யோடு
செங்கழு நீரிரு வாட்சி
எண்பகர் பூவும் கொணர்ந்தேன்
இன்றிவை சூட்டவா வென்று
மண்பகர் கொண்டானை யாய்ச்சி
மகிழ்ந்துரை செய்தவிம் மாலை
பண்பகர் வில்லிபுத் தூர்க்கோன்
பட்டர் பிரான்சொன்ன பத்தே (191)

என்று பெரியாழ்வார் பகவானுக்கு சூட்ட வேண்டிய எட்டு மலர்களை இங்கே குறிப்பிடுகிறார். அதாவது, பெருமாளுக்கு செண்பகம், மல்லிகை, பாதிரி, செங்கழுநீர், புன்னை, குருக்கத்தி, இருவாச்சி, கருமுகை ஆகிய எட்டு மலர்களை சூட்டலாம் என்று குறிப்பிடுகிறார்.

அந்த எட்டுவகை மலர்களையும் சூட்டி நாம் நம் திருவரங்கநாதனை தரிசிப்போம் வாருங்கள்.


'சோழநாடு சோறுடைத்து' என்று கூறுவார்கள். பொதுவாகப் பார்க்க போனால் திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்கள் நெற்களஞ்சியமாகவும், சொற் களஞ்சியமாகவும் காணப்படுவது போல, திருக்கோயில்கள் நிறைந்த பூமிகளாகவும் திகழ்கின்றன.

சைவத் திருக்கோயில்கள் என்று எடுத்துக் கொண்டால் தஞ்சைப் பெருங்கோயில் தலை நிமிர்ந்து காணப்படுகிறது. அதுபோல கங்கை கொண்ட சோழபுரம், தாரசுரம் கோயில்கள் உலக கலாச்சாரப் பட்டியலில் இடம் பெற்றுவிட்டன. அப்படியே நூற்றுக்கணக்கான கோயில்கள், நவக்கிரகங்கள், அம்மன்கள், விநாயகர், முருகன் வடிவில் குடிகொண்டுள்ளன.

அதேபோல மேற்கூறிய மாவட்டங்களில் வைணவக் கோயில்களும் நிறைந்து காணப்படுகின்றன. சிவத்தலங்கள் 63-நாயன்மார்களால் பாடப்பெற்றவை. அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரால் பாடப்பெற்ற தலங்களாயின. வைணவ தலங்கள் 12-ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்றன. அப்படி ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருத்தலங்கள் 108-திவ்ய தேசங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றில் முதல் திவ்யதேசம் திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) ஆகும்.

சிவத்தலங்களில் எப்படி தஞ்சைப் பெருங்கோயில் முதன்மை பெற்று விளங்குகின்றதோ அதுபோல வைணவத் தலங்களில் முதன்மை பெற்றது திருவரங்கம் ஆகும்.

காவிரி கொள்ளிடத்திற்கும் இடையே ஒரு பூவிரிந்த சோலையாக பாமிகுந்த கலைச்சாலையாக ஒரு தீவுபோல கம்பீர தோற்றத்தோடு, கலாச்சார ஆற்றலைக் காட்டிக்கொண்டு நிற்பதுதான் திருவரங்கம். தாஜ்மஹால் மட்டும் கட்டிடக்கலையின் அதிசயம் அல்ல! திருவரங்கமும் கூட கட்டிடக் கலையின் அதிசயந்தான்.



நீளத்திலும் அகலத்திலுமாக இந்த கோயிலில் ஏழு மதில் சுவர்கள் அமைக்கப் பட்ட பிரகாரங்கள் உடைய தாகும். இங்கே ஏழு திருவீதிகள் உள்ளன. அதில் முதல் பிரகாரத்தில் திருஅரங்கநாதர் காட்சி தருகிறார். அவர் இங்கே காட்சி தரும்நிலை சயனநிலை என்று கூறுவர். அதாவது படுத்தநிலை, கிடந்த நிலை என்று கூறுவர்.

திருஅரங்கநாதர் ஒரு வருடத்தில் மூன்று நிலைகளில் இங்கே பக்தர்களுக்கு காட்சி தந்து பரவசமூட்டுகிறார். அவை சயனம், உத்தானம், வைகுண்டம் என்பதாகும். அவைகள் மூன்று ஏகாதசியில் காணப்படுகிறது. ஆனி மாதம், சயன ஏகாதசி, அதாவது படுத்த நிலை. கார்த்திகை மாதம் உத்தான ஏகாதசி அதாவது உட்கார்ந்த நிலை. மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசி அதாவது நின்ற நிலை.

திருவரங்கத்தில் ஏழு மதில் சுவர்களால் அமைக்கப்பட்ட பிரகாரங்களுடைய ஏழு திருவீதிகளில் முதல் திருவீதி பிரகாரத்தில் கிடந்த கோலத்தில் அரங்கநாதர் காட்சி தருகிறார். மற்ற திருவீதிகளில் இரண்டாவது ராஜமகேந்திரன் திருவீதி, மூன்றாவது குலசேகரன் திருவீதி, நான்காவது ஆலிநாடன் திருவீதி, ஐந்தாவது அகளிங்கன் திருவீதி, ஆறாவது பிரகாரம், ஏழாவது சித்திரைத் திருவீதி ஆகும்.

இதில் ஆலிநாடன் வீதி என்பது திருமங்கையாழ்வாரைக் குறிப்பதாகும். இது ஒரு பெரிய வரலாறு அடங்கிய திருப்பெயராகும்.

திருவரங்கத்தில் திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் மட்டும் செய்யாமல் திருப்பணிகளும் செய்தார். திருமங்கையாழ்வார் இந்த திருப்பணிகள் செய்த விதம் வியப்புக்குரியதாக உள்ளது. அவர் திருட்டு, வழிப்பறி, கொள்ளை இவற்றின் மூலமே திருவரங்கத் திருப்பணி செய்தார்.

12-ஆழ்வார்களில் திருமங்கையாழ்வார் மன்னராக, திருடனாகயிருந்து பெருமாளுக்கு சேவை புரிந்தார் என்றால் வியப்புத்தானே?

திருமங்கையாழ்வார்


திருமங்கையாழ்வார்

சோழநாட்டில் திருவாலி திருநகருக்கு அருகே திருகுறையலூரில், கி.பி. எட்டாம் நூற்றாண்டில், நள வருஷம் கார்த்திகை மாதம் பௌர்ணமி வியாழக்கிழமை, கார்த்திகை நட்சத்திரத்தில் திருமாலின் ஐம்படைகளில் ஒன்றான சார்ங்கம் என்னும் வில்லின் அம்சமாக திருமங்கையாழ்வார் அவதரித்தார்.

சோழராசாவின் படைத் தலைவருக்கு மகனாகப் பிறந்த இவர் நீலநிறமாகயிருந்ததால் நீலன் என்ற பெயர் பெற்றார்.

நீலன் ஐந்தாம் வயது தொடங்கி கல்வி கேள்விகளிலும், கலைகளிலும் தேர்ச்சி பெற்றார். ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நான்கு வகை கவிகளிலும் தேர்ச்சி பெற்றான்.

போர்ப்படைத்தலைவனுடைய புதல்வன் என்ற வகையில் வில், வேல், வாள் போன்ற போர்ப்படை கலன்கள் பயிற்சி முதன்மை பெற்றார். குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை, காலாற்படையில் வீரத்தளபதியாகத் திகழ்ந்தார்.

இவருடைய வீரதீரங்களை போற்றிய சோழ மன்னன், இவரை திருமங்கை நாட்டின் தலைவனாக்கினான். அதனால் இவருக்கு திருமங்கை மன்னன் என்ற பெயர் ஏற்பட்டது.


ஒருநாள் குமுதவல்லி என்ற தேவமங்கை பொய்கையில் நீராடிக் கொண்டு வரும் போது, அவளைப் பார்த்த திருமங்கை மன்னன் அவள்மீது காதல் கொள்கிறான். தன் தாய் தந்தையரிடம் முறையாக பெண் கேட்க, குமுதவல்லியின் பெற்றோரும் சம்மதம் தெரிவிக்கிறார்கள்.

ஆனால் குமுதவல்லி வைணவ முறைப்படி ஆடை அணிகலன் அணிந்து, திருமண் காப்பு முதலிய பஞ்ச சமஸ்காரமுடைய ஒரு வைணவரையே மணப்பேன் என்று கூறிவிட்டாள்.

அதைக்கேட்ட திருமலைமன்னன் திருநறையூரிலுள்ள நாச்சியார் கோயில் நம்பி எம்பெருமாளைத் தொழுது, வைணவராக மாறிக் கொண்டார்.

குமுதவல்லியின் நிபந்தனையையேற்று நீலன் திருநறையூர் என்னும் நாச்சியார் கோயிலிலுள்ள சீனிவாசப் பெருமானிடம் போய் தன்னை வைணவனாக மாற்றும்படி மண்டியிட்டு வேண்டினார்.

அதன்படி திருநறையூர் நம்பி நீலனுக்கு பஞ்ச சமஸ்காரம் செய்து வைத்தார். பஞ்ச சமஸ்காரம் என்பது, விதிமுறைப்படியும், நெறிப்படியும் உடலில் குறிப்பிட்ட 12 இடங்களில் திருமண் இட்டு 12 திருநாமங்கள் ஓதி மந்திரத்தை உச்சரிப்பதும்,




இரண்டாவது, ஒருவன் வைணவனாக மாறும்போது தாய் தந்தை இட்ட பெயரை விட்டு, விஷ்ணு பெருமாளின் பெயரையோ அல்லது அவரது அடியார்களின் பெயிரையோ வைத்துக் கொள்வதும்,

மூன்றாவது, விஷ்ணு பெருமான் வலது கரத்தில் சக்கரத்தையும், இடது கரத்தில் சங்கையும் கொண்டு திகழ்வதின் அடையாளமாக ஒரு வைணவன் வலதுபுஜத்தில் தீயில் பொறித்த சக்கரத்தையும், இடது புஜத்தில் தீயில் பொறித்த சங்கினையும் இட்டுக் கொள்வதும்,

நான்காவது, தினந்தோறும் ஏதாவது ஒரு பிரசாதம் செய்து பெருமாளுக்குப் படைத்து பூஜை செய்வதும்,

ஐந்தாவது, ஓம் நமோ நாராயணா என்ற மந்திரத்தை பொருளுணர்ந்து ஓதுவதும் ஆகும்.



குமுதவல்லி கூறிய இரண்டாவது நிபந்தனைகளையும் ஏற்ற திருமங்கையார் தாம் பிறந்த திருக்குறையலூருக்கு அருகே ஒரு மடம் எழுப்பி, நாள்தோறும் ஆயிரத்தெட்டு வைணவ அடியார்களுக்கு அன்னமிட்டும், அவர்கள் பாததீர்த்தத்தை கழுவியும் ஓராண்டை பூர்த்தி செய்தார். அதனால் அவரது அரசு கருவூலம் தீர்ந்து போனது. முறைப்படி அரசனுக்கு கப்பம் கட்ட முடியவில்லை. அதனால் திருமங்கை மன்னன் சோழமன்னரால் சிறைவைக்கப்பட்டார்.

சிறையில் மூன்றாம் நாள் திருமங்கை மன்னன் கனவில் காஞ்சி வரதராசப் பெருமாள் தோன்றி, "உம்மை சோதிக்கவே யாம் இவ்வாறெல்லாம் செய்தோம். நீ காஞ்சி நகருக்கு வந்தால் உமக்கு வேண்டிய நிதி கொடுத்து உதவுவோம்" என்று கூறி மறைந்தார்.

திருமங்கை மன்னன் இந்த செய்தியை மன்னரிடம் சொல்ல, மன்னர் அனுமதி கொடுத்து, ஒரு அமைச்சருடன் திருமங்கையாரை காஞ்சிக்கு அனுப்பிவைத்தார்,

காஞ்சி சென்ற திருமங்கையார் வரதராச பெருமாள் அடையாளம் காட்ட வேகவதி நதியில் நிதியிருந்ததையெடுத்து மன்னர் கப்பம் கட்டி கடன் தீர்த்தார்.

ஆயினும் அவருக்குத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் செய்ய நிதி ஆதாரம் கிடைக்கவில்லை. ஆகவே அவர் வழிப்பறி செய்து, அதன்மூலம் அடியார்களுக்கு அன்னதானம் செய்து வந்தார்.

திருமங்கைமன்னன் தன் வழிப்பறி, திருட்டு ஆகியவற்றிற்கு நால்வகை திறமை வாய்ந்த நால்வரை தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

அதில் ஒருவன், 'தோலா வழக்கன்' என்பவன் ஆவான். அவனுடன் வாதம் செய்து எவரும் வெற்றி பெறமுடியாது. இரண்டாமன் 'தாளூதுவான்' எனப்படுவான். அவன் எத்தகைய பெரிய பூட்டையும் சாவியில்லாமல் தன் வாயால் ஊதியே திறந்து விடுவான். மூன்றாவது ஆள், 'நிழலொதுங்குவான்' என்பான். அவன் யாருடைய நிழலைத் தொட்டாலும் அவர்களால் பிறகு அசைய முடியாது. நான்காமவன், 'நீர்மேல் நடப்பான்' ஆவான். அவன் தரைமீது நடப்பது போல் தண்ணீர் மேலும் நடப்பான். இவர்களைக் கொண்டு பலவழியிலும் திருமங்கை வழிப்பறி, களவாடல் போன்ற செயல்கள் மூலம் செல்வம் திரட்டி வந்தார்.

தனது திருத்தொண்டர் இவ்வளவு வழிப்பறி செய்தும், திருட்டுத் தொழில் செய்தும் செல்வம் சேர்த்து, அதை அடியார்களுக்கு அன்னமிட்டு நன்மை செய்வது கண்டு திருவரங்கர் அவரை ஆட்கொள்ள முடிவு செய்தார். ஆகவே பகவான் தன்னை தன் பிராட்டியாரோடு ஒரு திருமண மக்களாக அலங்கரித்துக் கொண்டு, தனது தேவர் பரிவாரத்தோடு காட்டு வழியே செல்லலானார். அப்போது காட்டு வழியில் மறைந்திருந்து பார்த்துவிட்ட திருமங்கையாழ்வார் அந்தத் திருமணக் கூட்டத்தை வழிமறித்து ஆடை அணிகலன்களை அபகரித்தனர். திருமணக் கூட்டத்தாரிடம் எல்லாவற்றையும் அபகரித்த திருமங்கையார், மணமகன் அணிந்திருந்த மணிமோதிரத்தைப் பார்த்து

விட்டு, மணமகள் விரலை இழுத்து மோதிரத்தை கழற்றினார். ஆனால் அதை கழற்ற முடியவில்லை. அதன்பின் அவர் அவர்களிடம் பறித்த பொருட்களையெல்லாம் ஒரு மூட்டையாக கட்டி எடுக்க முயன்றார்கள். ஆனால் அது தூக்கமுடியாத கனமாக அவருக்கு பெரும் சுமையானது. அதனால் பெரும் சினம் கொண்ட திருமங்கையார், மணமகனாக வந்த இறைவனை நோக்கி, 'நீ என்ன மந்திரம் செய்தாயா? அந்த மந்திரத்தை எனக்குச் சொல்லாவிட்டால் உம்மை கொல்லச் செய்வேன்' என்று மிரட்டினார்.

அதைக்கேட்ட பெருமாள் சிரித்துக் கொண்டு, "திருமங்கையாரே, அந்த மந்திரத்தை யாம் உமக்கு சொல்கிறோம். எமது அருகில் வாரும்" என்று கூறி, அருகில் வந்த திருமங்கையார் காதில் அஷ்டாரட்சர மந்திரமான திருவெட்டமுத்தை உபதேசம் செய்தார்.

"ஓம் நமோ நாராயணா" எட்டெழுத்து மந்திரத்தைக் கேட்ட திருமங்கை மன்னன் நிமிர்ந்து பார்த்த போது, எதிரே திருமால் லட்சுமி பிராட்டியுடன் காட்சியளித்து அவருக்கு அருளினார்.

இறைவன் காட்சி தந்து மறைந்தார். திருமங்கையாருக்கு அப்போது தெளிவு பிறந்தது. இறைவன் தன்னிடம் திருவிளையாடல் புரிந்தான் என்பதை தெரிந்து கண்ணீர் சொரிந்தார். இறைவன் தனக்களித்த அருளையும், அறிவையும், மந்திரத்தின் சிறப்பையும் எண்ணியவராக, கண்களில் நீர் வழிய, தன் வாயால் பண்பாடத் தொடங்கினார்.

"வாடினேன், பாடி வருந்தினேன்; மனத்தாற்
பெருந்துயரி டும்படையில் பிறந்து
கூடினேன்; கூடி யிளையவர் தம்மோ
டவர்தரும் கலவியே கருதி
ஓடினே னோடி யுய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதந் தெரிந்து
நாடினேன்; நாடி நான்கண்டு கொண்டேன்
நாராய ணவென்னும் நாமம்" (948)

திருமங்கைமன்னர் இவ்வாறு பாடி முடித்த போது, திருமால் தேவி லட்சுமியோடு காட்சி தந்து, "திருமங்கையாழ்வாரே! உம்முடைய பண்தமிழ் பாக்கேட்டு மகிழ்ந்தோம். மேலும் நீவீர் நாம் கோயில் கொண்டுள்ள திருத்தலங்களுக்கெல்லாம் சென்று, இந்த உலகம் செழிக்கும் பொருட்டு செந்தமிழ் பாப்பாடி வலம் வருவீராக" என்று கூறி மறைந்தார்.

இறைவன் திருச்சொல்கேட்ட திருமங்கையாழ்வார் தன் திருயாத்திரையை தொடங்கினார். திருமங்கையாழ்வார் தன் யாத்திரையை முதலில் வடத்திசையில் தொடங்கினார். அவர் கோதாவரி ஆற்றில் நீராடி பின்பு இமயமலையை அடைந்தார். அங்கே முதலில் அவர் திருப்பிருதியை மங்களா சாசனம் செய்தார்.

"கார்கொள் வேங்கைகள் கனவரைத் தழுவிய
கறிவளர் கொடிதுன்னி,
போர்கொள் வேங்கைகள் புனவரைத் தழுவிய
பூம்பொழி லிமயத்துள்
ஏர்கொள் பூஞ்சுனைத் தடம்படிந் தினமலர்
எட்டுமிட் டிமையோர்கள்
பேர்க ளாயிரம் பரவிநின் றடிதொழும்
பிருதிசென் றடைநெஞ்சே!" (964)

என்ற இந்த பாடல் உட்பட பத்து பாசுரங்கள் பாடி யாத்திரையைத் தொடர்ந்தார். அவ்வாறு அவர் தன் திவ்யதேச திருயாத்திரையை தொடர்ந்து திருவதரி, திருவதரியாச்சிரமம், நைமிசாரணியம், விட்டு திருவேங்கடம் வந்து சேர்ந்தார்.

திருவேங்கட மலையில் கால்பட்டதும் அவர் கண்களில் நீர் கொட்டியது. அவர்வாயின் தமிழ்பா அந்த திருவேங்கடவன் செவியில் எட்டியது.

"தாயே தந்தையென்றும்
தாரமேகிளை மக்களென்றும்
நோயே பட்டொழிந்தேன்
நுனைக்காண்பதோ ரசையினால்
வேயேய் பூம்பொழில்சூழ்
விரையார்திரு வேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன்
நல்கியாளென்னைக் கொண்டருளே" (1028)


திருமங்கையாழ்வார்

திருவேங்கடத்தாளைப் பாடிய திருமங்கையாழ்வார் பிறகு திருவள்ளூர், திருவல்லிக்கேணி, திருச்சித்ரகூடம் என திருநாங்கூர் வந்தடைந்தார்.

திருநாங்கூர் வந்த திருமங்கையார் திருநாங்கூர் 11-திருத்தலங்களை மட்டும் பாடாமல், திருநாங்கூர் இயற்கை வளம், நகரமைப்பு, பண்பாடு, பழக்க வழக்ககங்கள் என யாவற்றையுமே பாடினார்.

திருநாங்கூர் உட்பட எல்லா திவ்ய தேசங்களையும் தன் நான்கு சீடர்களுடன் தரிசித்து, மங்களா சாசனம் பாடிய திருமங்கையாழ்வார் இறுதியில் திருவரங்கம் வந்து சேர்ந்தார். 108 திவ்யதேசங்களில் திருவரங்கம் முதல் திவ்ய தேசமாகும். ஆனால் திருமங்கையாழ்வாரின் திருயாத்திரையில் அது இறுதி தேசமானது இறைவன் திருவிளையாடலாகும்.

திருவரங்கம் வந்த திருமங்கையாழ்வார் அந்த கோயில் இருந்தநிலை கண்டு நிலைகுலைந்து போனார். அது அப்போது சீர்குலைந்து காணப்பட்டது. வௌவால்கள் தோரணமாகத் தொங்கின. கோயிலைச் சுற்றிலும் புல்லும் புதர்களுமாகப் பாம்புகள் குடிகொண்டிருந்தன. காட்டு நாய்களும், குள்ள நரிகளும் ஊளையிட்டுக் கொண்டிருந்தன. அதனால் அர்ச்சகர் அச்சப்பட்டு, பொழுது சாயும் முன்னரே, சம்பரதாயத்திற்காக வழிபாடு செய்துவிட்டு போனார்.

இறைவன் படைப்பால் தானே எழுந்த திருவரங்கத் திருக்கோயில் இப்படி குறைபட்டு குப்பை மேடாய் இருப்பதைக் கண்ட திருமங்கையாழ்வார் அந்த கோயிலைப் புதுப்பித்துக் கட்ட உறுதி பூண்டார். ஆனால் எப்படி அதைச் செய்வது? தன் சீடர்களுடன் கலந்தோசித்தார். பெரும் பணக்காரர்களிடம் பணம் திரட்டுவது என்று முடிவு செய்தனர்.

ஆனால் எந்தப் பணக்காரர்களும் உதவி செய்ய முன் வரவில்லை. தவிர திருமங்கையாழ்வார் ஒரு திருடன் என்று இழிபேச்சுப் பேசினர். அந்த இழிச்சொல் கேட்ட திருமங்கையாழ்வார் கோப எல்லையில் எரிமலையானார். தன்னுடைய கோபத்தையும், மனச்சோகத்தையும் தன் சீடர்களிடம் கூறலானார். "சீடர்களே! நாம் அரங்கனுக்கு ஆலயங்கட்ட இந்த செல்வந்தர்களை நாடினோம். அவர்கள் செவி சாய்க்கவில்லை. அவர்களுக்கு அரங்கன்மேல் உண்மையான அன்பு இல்லை. சுயநலத்திற்காக அவரிடம் வருகிறார்கள். காலை முதல் மாலை வரை கடுமையாக உழைத்து ஏழை மக்களை ஏமாற்றத்தான் அவர்கள் தங்கள் செல்வத்தை குவித்திருக்கிறார்கள். ஆகவே அந்த செல்வத்தை திருடி, அரங்கனுக்கும், ஏழை மக்களுக்கும் இன்னலை தீர்க்கவும் பயன்படுத்துவோம் எழுந்து வாருங்கள்" என்று அறைகூவல் கொடுத்தார்.

அதன்படி அந்த நான்கு சீடர்களும் அவரவர்கள் அற்புத சக்தியைக் கொண்டு தன் குருவுக்குச் செல்வத்தைத் தேடித் தந்தார்கள். தோலா வழக்கன் செல்வந்தர்களோடு வலியப் போய் தர்க்க வாதத்தில் ஈடுபட்டு செல்வந்தரை தன் வாதத்தில் ஈடுபடுத்தி, அவர்களிடம் மற்ற எல்லாவற்றையும் மறக்க செய்தார். அந்த தருணத்தில் திருமங்கையாழ்வார் அவர்கள் செல்வங்களை களவாடினார்.

தாளூதுவான் பூட்டியிருந்த செல்வந்தர்களின் வீட்டிற்குப் போய், அவர்கள் பூட்டிப் போயிருந்த வீட்டுப் பூட்டை "பூ" என்று ஊதி அதைத் திறக்கச் செய்து, அவர்கள் சேர்த்து வைத்திருந்த செல்வத்தை கொள்ளையடிக்க உதவினார்.

நிழலில் ஒதுங்குவான், பணம் தேடிக் கொண்டு, தம் இல்லம் நாடி வந்து கொண்டிருந்த பணக்காரர் வழிப்போக்கர்களின் நிழலைத் தொட அவர்கள் அசைவற்று நின்று போயினர். அப்போது திருமங்கையாழ்வார் அவர்கள் செல்வங்களை வழிப்பறி செய்தார்.

நீர்மேல் நடப்பான் அகழிசூழ்ந்த மன்னர்களின் கோட்டையின் அகழிநீரின்மேல் நடந்து போய் கோட்டைக்குள் புகுந்து, அந்த மன்னர்களின் பொன், பொருள், செல்வத்தை கொள்ளையடிக்க உதவினார்.

இவ்வாறு பெரும் செல்வத்தைச் சேர்த்த திருமங்கையாழ்வார் அவற்றையெல்லாம் திருவரங்கத்தில் ஒரு தீவில் கொண்டு போய் ரகசியமாக மலையென சேர்த்து வைத்தார்.

அப்படி திருப்பணி மேற்கொண்ட போது நாகபட்டிணத்தில் ஒரு புத்தர் சிலை இருப்பதாகவும் அதை கவர்ந்து வந்தால் திருப்பணி முழுவதும் நிறைவேற்றி விடலாம் என்று கூற, திருமங்கையார் நாகபட்டிணம் விரைந்தார். அங்கே அந்த புத்தர் சிலை விமானத்தோடு சேர்ந்து வெளியே எடுக்க முடியாதபடி சிற்ப சூத்திர அடிப்படையில் பிணைக்கப்பட்டிருந்தது. திருமங்கையோ விமானம் உடையாமல் புத்தர்சிலை எடுக்கப்பட வேண்டும் என்று எண்ணி ஒரு சூழ்ச்சியால், தந்திரத்தால் அந்த புத்தர் சிலை கோயிலை அமைத்த சிற்ப கம்மாளனை ஏமாற்றி, பிறகு அந்த புத்தர் சிலையை திருடிக்கொண்டு பாதயாத்திரையாய் திருவரங்கம் நோக்கி நடந்தார். வரும்வழியில் களைப்பும், சோர்வும் ஏற்பட்டது. ஆகவே ஆழியூர் திருகண்ணங்குடியில் ஓய்வு எடுக்க தங்கினார். இரவில் அங்கிருந்த புளியமரத்தின் கீழ் தூங்க எண்ணிய அவர் தான் கொண்டுவந்த புத்த விக்ர தங்கத்தை பக்கத்தில் சேறும் சகதியுமாக இருந்த ஈரநெல்வயல் பூமியில் புதைத்து வைத்து விட்டு, "புளியமரமே, நான் கொஞ்சம் தூங்குகிறேன். நீ தூங்காமல் தங்கத்தையும், என்னையும் காவல் காக்க வேண்டும்" என்று கூறிவிட்டு தூங்கினார். காலையில் எழுந்து பார்த்தபோது புளியமரத்தின் இலைகள் முழுவதும் திருமங்கையார் உடல் முழுவதும் உதிர்ந்து காணப்பட்டது. அதைப்பார்த்து வியந்து போன திருமங்கையார் "உறங்கா புளியே நீ வாழ்க" என்று நன்றி கூறினார். அன்றுமுதல் இந்த ஊரில் புளிய மரங்கள் வேகமாக வளர்ந்து வருகிறது.



பிறகு திருமங்கையார் தான் புதைத்து வைத்த தங்கத்தை யாருக்கும் தெரியாமல் எடுக்க வேண்டும் என்று எண்ணியபோது, தங்கத்தை புதைத்து வைத்த நிலத்தை உழ, நிலச் சொந்தக்காரன் வந்தான். அவனை உழக்கூடாது என்று திருமங்கையார் சண்டை போட, பிரச்சனை பஞ்சாயத்திற்கு சென்றது. பஞ்சாயத்தார் நிலப்பட்டாவை இருவரிடமும் கேட்க, நிலச் சொந்தக்காரன் தனது பட்டாவை பஞ்சாயத்தில் காட்டினார். திருமங்கையார் தனது பட்டா திருவரங்கத்தில் உள்ளது எடுத்து வந்து தருகிறேன் என்று கூறிவிட்டு, யாருக்கும் தெரியாமல் புதைத்த தங்கத்தை எடுத்துச் சென்றவர் பிறகு பஞ்சாயத்துக்கு திரும்பவே இல்லை. அதனால் அந்த வழக்கு இன்று வரை முடியவேயில்லை. அதனால் இந்த ஊரில் அன்று முதல் இன்று வரை எந்த வழக்கும் முடியாமல் பாதியிலேயே நின்று போகிறது. அதை மக்கள் தீரா வழக்கு, தேரா வழக்கு, தோலா வழக்கு என்று கூறி, ஊருக்கு தேரா வழக்கு திருக்கண்ணங்குடி என்றாயிற்று.

திருக்கண்ணங்குடியில் திருமங்கையார் பஞ்சாயத்து முடிந்த பிறகு தாகம் எடுக்கவே ஒரு பெண்ணிடம் தண்ணீர் கேட்டார். ஆனால் யாருமே இவர் சண்டைக்காரர் என்று கூறி தண்ணீர் கொடுக்க மறுத்துவிட்டனர். அதனால் கோபமடைந்த திருமங்கையார் "இந்த ஊர் கிணற்றில் இனி தண்ணீர் ஊறக் கூடாது" என்று சாபமிட, இன்றுவரை இந்த ஊர் கிணற்றில், தண்ணீர் ஊறுவதில்லை. ஆகவே அதை "ஊறாக்கிணறு" எனக்கூறுவர்.

பிறகு தாகமும் பசியுமாக திருமங்கை அங்கிருந்து புறப்பட்டபோது, அங்கிருந்த மகிழ மரத்தடியில் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவர் சோர்ந்து பசியோடும், தாகத்தோடும் வரும் திருமங்கையாரைப் பார்த்து, "வழிப்போக்கரே! மிகவும் களைப்பாக வருகிறீர்கள். இந்தாருங்கள், உணவும், நீரும், உண்டு குடியுங்கள்" என்று கூறி பிச்சையிட்டார். அதையுண்டு மகிழ்ந்த திருமங்கையார், "பெருமாளே தனக்கு மனித உருவில் வந்து, உணவு தந்தார்" என்று உணர்ந்து மகிழ்ந்து, அதற்கு காரணமாக தங்க நிழல் கொடுத்த மகிழ வைத்த, "காயா மகிழ மரம் ஆக" எனக் கூற, அது இன்று வரை காயாத பசுமை நிறைந்த மகிழமரமாக திகழ்கிறது.

அதனால் திருக்கண்ணங்குடி தலத்தை "காயா மகிழ, உறங்காப்புளி, தேறா வழக்கு அல்லது தீரா வழக்கு, ஊறாக் கிணறு" என்று பழமொழி கூறுவர்.

திருமங்கையாழ்வார் இவ்வாறு பல வழிகளிலும் திருவரங்கத் திருப்பணிக்காக பணம் திரட்டினார். பிறகு ஒரு நல்ல நாளில் திருவரங்கம் அரங்கநாதருக்கு கோயில் கட்ட அடிக்கல் நாட்டினார்.


ஆயிரக்கணக்கான சிற்பிகளைக் கொண்டு ஆலயப்பணிகளைத் தொடங்கினார். சுற்றுப்புறச் சுவர், கருவறை, விமானம், சன்னதிகள் என வேலைகள் பம்பரமாய் சுழற்றி விடப்பட்டது. இரண்டு ஆண்டில் உட்பிரகாரம், நான்காண்டில் முதற்பிரகாரம், ஆறாண்டில் இரண்டாம் பிரகாரம், எட்டாண்டில் மூன்றாம் பிரகாரம், பத்தாண்டில் நான்காம் பிரகாரம், பன்னிரண்டாம் ஆண்டில் ஐந்தாம் பிரகாரம், பதினெட்டாண்டில் ஆறாம் பிரகாரம் என அறுபது ஆண்டுகளில் திருவரங்கப் பெருமாள் திருக்கோயிலை கம்பீரமாகக் கட்டிமுடித்தார்.

அப்போது திருமங்கையாழ்வாருக்கு எண்பது வயது நிறைவானது. சீடர்களுக்கும் அவ்வாறே வயது முதிர்ந்தது.

அதன்பிறகு நாடெங்குமிருந்த மன்னர்களும், செல்வந்தர்களும், திருமங்கையாழ்வாரின் திருட்டுத் திருப்பணிக்குப் பயந்தும், அவரின் திருவரங்கப் பெருமானின் கோயில் திருப்பணியைப் பாராட்டியும் தாமாகவே செல்வங்களை கொண்டு வந்து குவித்தார்கள்.

அவற்றையும் சேர்த்து திருமங்கையாழ்வார் திருவரங்கத்தின் மகர்லோகம் என்ற எழுபிரகார 4வது திருமதில் கோயிலைக் கட்டி முடித்தார். அப்போது அவர் சிற்பிகளுக்கு சரியாக முறையாக கூலியும், பொற்கிழியும் வழங்கி அவர்களை மகிழ்ச்சி கொள்ள வைத்தார். அந்த நிலையிலும் திருமங்கையாழ்வார் நாள்தோறும் பிச்சையெடுத்து வந்தே சாப்பிட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு திருமங்கையாழ்வார் செல்வப் பெருக்கில் உயர்ந்த பொழுது, சில திருடர்கள் திருமங்கையாழ்வாரை கொலை செய்யவும், பொருட்களையும், செல்வத்தையும் கொள்ளையடிக்கவும் வந்து சூழ்ந்து கொண்டார்கள். அப்போது நீர்மேல் நடப்பான் புத்தி கூர்மையோடு, "எமது குருவை கொல்ல வேண்டாம். நாங்கள் சேர்த்து வைத்துள்ள பொருளும், செல்வமும் காவிரி வடகரையில் ஒரு தீவில் உள்ளது. எம்முடன் வாருங்கள்" என்று கூட்டிச் சென்று, அவர்களை படகேற்றி, காவிரியின் நடுப்பகுதிக்கு கொண்டு சென்றார். கண்ணுக்கெட்டா தூரம் சென்றதும் கடும்புயலும், காற்றும் வீச ஒரு மௌன நிலை உண்டானது. காவிரி நடுப்பகுதிக்குச் சென்ற திருடர்கள் மாண்டார்கள். நீர்மேல் நடப்பான் தன் சக்தியால் உயிர் மீண்டு கரைசேர்ந்து திருமங்கையாழ்வார் காலடி வீழ்ந்தார்.



அதன்பிறகு திருமங்கையாழ்வார் தன் திருட்டுத் தொழிலை விட்டு, இறைவனின் திருப்பணியை தொடங்கினார். சீடர்களும் அவ்வாறே அவரைத் தொடர்ந்தனர்.

திருமங்கையாழ்வார் திருவரங்கத்தில் ராசமகேந்திரம் சுற்றுச் சுவர் மற்றும் தென்மேற்கு மூலையில் ஒரு நூற்றுக்கால் மண்டபம் கட்டினார். குலசேகர திருவீதியில் மதிலும் அதன் தென்வட கோபுரங்களைக் கட்டினார்.

தற்போதுள்ள சந்திர புட்கரணியலிருந்து வெள்ளியழகியான் வாசல் வரையுள்ள திருநடை மாளிகை நடைபாதையை கட்டினார். குலசேகரன் வீதி தென்கிழக்கில் ஒரு மாடப்பள்ளி கட்டினார். நான்காம் வீதியின் திருமதில், இதே நான்காம் வீதியில் நான்காம் திருச்சுற்றின் வடக்குக் கோபுரத்தில் கோயில் கொண்டுள்ள சிங்க நாயனாருக்கு கோவிலும், விமானமும் படைத்தார். மேலும் இதே வீதியில் தென்மேற்கு மூலையில் அமைந்துள்ள கருவூலம், வடக்கே ஒரு தானிய களஞ்சியம் அமைத்தார்.

கொள்ளிடக் கரையில் ஒரு படியவாளன் துறையமைத்து அதனருகே ஒரு கோயில் படைத்தார். அதில் தம்முடைய விக்ரமும் தசாவதாரச் சிலைகளும் வைத்தார். நீர்மேல் நடப்பான் திருடர்களை படகிலேற்றி காவிரியாற்றின் நடுப்பகுதியில் கொண்டு கொலை செய்தார். அது அப்போது கொலையிடம் என்று கூறப்பட்டது. அதுதான் இப்போது கொள்ளிடம் ஆகும்.

ஆக, திருமங்கையாழ்வார் திருவரங்கக் கோவிலுக்கு செய்த திருப்பணிக்கு சான்றாக அவர் எழுப்பிய 4-வது திருமதில் உள்சுற்றுக்கு 'ஆலிநாடான் வீதி' என்று அவராண்ட ஆலிநாட்டுப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. அந்த திருமதிலின் நுழைவாசலுக்கு அவர் பிறந்த நட்சத்திரமான கார்த்திகை நட்சத்திரத்தின் நினைவாக கார்த்திகை வாசல் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு திருமங்கை மன்னன் திருவரங்கப் பெருமாளுக்கு கோயில், விமானம், மண்டபம், திருத்தனிகை, திருமதிற்சுவர்கள், கோபுரங்கள் எனத் திருப்பணிகள் செய்தார்.

அவ்வாறோ, எவ்வாறோயிருப்பினும் திருவரங்கக் கோயிலின் சிறப்பு வியப்பிற்குரியதாகும்.

திருவரங்கத்தின் மொத்தப் பரப்பளவு 155½ ஏக்கர் என்று கூறுவர். இதில் 21-கோபுரங்கள் உள்ளன. இதன் ராசகோபுரம் 236 அடியாகும். ஆசிய கண்டத்திலேயே இதுதான் உயரமான கோபுரமாகும். திருவரங்கத்தின் விமானம் அழகிய தங்கத்தால் செய்யப்பட்டுள்ளது. இங்கே ஆயிரங்கால் மண்டபமும் உண்டு.

108 - திவ்யதேசங்களில் முதல் திவ்யதேசமான திருவரங்கம் இன்னும் பல சிறப்புக்களைக் கொண்ட புண்ணிய தலமாகும். இந்தத் தலம் தானாகத் தோன்றிய சுயம்பு வடிவத் தோன்றலாகும்.

திருமால் தலங்களில் தானாகத் தோன்றிய தலங்கள் எட்டு என்று கூறுவர். அவற்றில் திருமுட்டணம், திருவேங்கட திருப்பதி மலை, சாளக்ராம மலை, நைமிசாரண்யம், தோத்தாத்திரி, புஷ்கர ஷேத்தரம், பத்ரி ஆகிய மற்ற ஏழு தலங்களாகும்.

12 - ஆழ்வார்களில் மதுரகவி ஆழ்வாரைத் தவிர மற்ற 11 - ஆழ்வார்களும் திருவரங்கப் பெருமாளை மங்களாசாசனம் செய்துள்ளனர். அவர்கள் மொத்தமாக 246 - பாடல்கள் பாடியுள்ளனர்.



"அல்லி மாத ரமரும்
திருமார்வ னரங்கத்தை
கல்லின் மன்னு மதிள்மங்
கையர் கோன்கலி கன்றிசொல்
நல்லிசை மாலைகள் நாலி
ரண்டுமிரண் டுமுடன்
வல்லவர் தாமுல காண்டு
பின்வானுல காள்வாரே" (1387)

"பொன்னுமா மணியும் முத்தமும் சுமந்த
பொருதிரை மாநதி புடைசூழ்ந்து
அன்னமா டுலவும் அலைபுனல் சூழ்ந்த
அரங்கமா நகரமர்ந் தானை
மன்னுமா மாட மங்கையர் தலைவன்
மானவேல் கலியன்வாயொலிகள்
பன்னிய பனுவல் பாடுவார் நாளும்
பழவினை பற்றறுப் பாரே" (1417)

இவ்வாறு திருமங்கையாழ்வார் திருவரங்கப் பெருமாளை தினமும் பாடிப்பாடி மகிழ்ந்து போனவர். அவர் மட்டும் 72 பாடல்களை அரங்கநாதனை போற்றி பாடியுள்ளார். மேற்குறிப்பிட்ட பாடல்களில் அவர் பாடும் போது, திருவரங்க அரங்கநாதனை எண்ணி எண்ணி துதிப்போர், "மண்ணும் விண்ணும் ஆள்வர், பொன்னுலகில் வாழ்வர், அவரை நினைத்தாலே தீவினைகள் தீரும், பழவினைகள் அகலும்" என்று கூறியுள்ளார்.

"சுயம்பாக, தானாக தோன்றிய எட்டுத் திருத்தலங்களில் எட்டுத் திசையில் எட்டியுள்ள ஊர்களெல்லாம் வாழும் பக்தர்களுக்கு மரண பயமில்லை. அங்கு பிறந்தவர், வாழ்பவர், மரணமெய்பவர் எவருக்கும் நன்மையே உண்டாகும்" என்று அரங்கனே அருள்வதாகக் கூறுவர்.

மற்றும் மற்ற ஆழ்வார்களில் ஒருவரான தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கத்தினுள் நந்தவனம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். திருவரங்கத்தின் தாயார் சன்னதி நுழைவாசலின் பக்கத்திலுள்ள மேட்டு அழகிய சிங்கர் கோயில் மண்டபத்தில்தான் கம்பர் தான் படைத்த கம்பராமாயணத்தை அரங்கேற்றம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எழிலுடைய வம்மனைமீர்! என்னரங்கத் தின்னமுதர்
குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்
எழுகமலப் பூவழக ரெம்மானார், என்னுடைய
மகழல்வளையைத் தாமும் கழல்வனையே யாக்கினாரே”

என்று திருவரங்கத்தை ஆண்டாள் பாடியுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

திருவரங்கத்தில் நடைபெறும் விசேடங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தது வைகுண்ட ஏகாதசி ஆகும். 108 திவ்யதேசங்களில் 7 பிரகாரங்கள் கொண்ட ஒரே வைணவ திருத்தலம் திருவரங்கமாகும். அதனால்தான் இந்த தலம் முதல் தலமாக விளங்கி, இங்கே வைகுண்ட ஏகாதசி சொர்க்க வாசல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

“அன்றாயர்கு லக்கொடி யோடணிமா
மலர்மங்கையொ டன்பள விஅவுணர்க்
கென்றானு மிரக்கமி லாதவனுக்
குறையுமிட மாவது, இரும்பொழில்சூழ்
நன்றாயபு னல்நறை யூர்திருவா
லிகுடந்தை தடந்திகழ் கோவல்நகர்
நின்றானிருந் தான்கிடந் தான்நடந்தாற்
கிடம்மாமலை யாவது நீர்மலையே” (1078)

என்ற ஒரு பாசுரத்தை திருமங்கையாழ்வார் திருநீர் மலையை மங்களாசாசனம் செய்துள்ளார்.

அதாவது நாச்சியார் கோவிலுள்ள திருநறையூர் சென்றால் திருமால் நின்ற கோலத்தில் இருப்பார். திருவாயிலில் உட்கார்ந்திருப்பார். திருக்குடமான கும்பகோணத்தில் படுத்திருப்பார். திருக்கோவலூரில் விண்ணும் மண்ணும் அளந்து, உலகளந்தவராய் நிற்பார்.

அந்த அடிப்படையில் ஒரு வருடத்தில் மூன்று ஏகாதிபதிகள் முக்கியமானதாகும். அவை ஆனி மாத சயன நிலை, கார்த்திகை மாத உத்தான நிலை, மார்கழி மாத வைகுண்ட நின்ற நிலை என்பர்.

அதாவது அரங்கநாதப் பெருமாள் ஆனி மாதத்தில் சயனம் என்னும் படுத்த நிலையில் பக்தர்களுக்கு அருள் செய்கிறார். கார்த்திகை மாதத்தில் உத்தாளமாகிய உட்கார்ந்த நிலையில் அருள் செய்கிறார். மார்கழி மாதத்தில் வைகுண்டம் என்னும் நின்ற நிலையில் அருள் செய்கிறார் என்று வழங்கப்படுகிறது. இதையே வைகுண்ட ஏகாதசி எனக் கூறுகிறார்கள்.

108-திவ்யதேசங்களில் 108-வது திவ்யதேசம் பரமபதம் என்பதாகும். இது நிலவுலகில் கிடையாது. வைகுண்ட சொர்க்கம் என இதை குறிப்பிடுவர். அதாவது பரமபதம் வடக்கு நோக்கி இருக்கிறது. வைகுண்ட ஏகாதசி நாளில் மரணமடைந்தால் வடக்குள்ள சொர்க்கம் அடைவர் என்பார்கள்.

"உயிருக்கு வாழ்வு அளிப்பவன் அரங்கநாதனை அடி தொழுவோமே"

ஆகவே வைகுண்ட ஏகாதசியன்று திருவரங்கத்தில் சொர்க்கவாசல் திறக்கும் போது பக்தர்கள் படைபடையாக உள்ளே செல்வார்கள். அப்போது வாசலுக்கு மேலே சிற்ப வடிவமாக இரண்டு தங்க பல்லிகள் பதிக்கப்பட்டிருக்கும். அதை பக்தர்கள் பயபக்தியோடு வணங்குவர்.

அதாவது பல்லி புவி ஈர்ப்பு சக்தியால் ஈர்க்கப்படாமல், தானே சுற்றுச் சுவர்களிலும், மேற்சுவர்களிலும் வேகமாக ஊர்ந்து செல்லும் இயல்புடையதாகும். அதுபோல பக்தர்கள் உலக பந்தங்களில் பற்றுவைக்காமல், விட்டுவிலகி சென்றால், இறைவனின் சொர்க்கவாசல் அவர்களுக்குக் கிடைக்கும் என்பது அதன் தத்துவமாகும்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு"

என்ற குறளை இதற்கு ஒப்பிடலாம்.



ஒன்றுக்கும் மேற்பட்ட தடவை நான் திருவரங்க அரங்கநாதன் தாள் தொட்டு வந்தேன் என்று கூறலாம். ஆயினும் முறையாக வைணவத் திருத்தல பெருமாளையும், அவனை மங்களா சாசனம் செய்த ஆழ்வார் கோயில் களையும் தரிசிக்க முடிவு எடுத்த பிறகு இப்போது அரங்கநாதனை மறுபடியும் தரிசித்தேன்.

திருவரங்கம் சென்று அரங்கனை தரிசித்த பின் நான் அவனைப் பாடினேன்.

"திருவரங்கம் சென்று திருவாசல் தொட்டேன்
ஒருகுரல் கேட்டேன் உரக்க - வருக
பெருக பெறுகபெரும் செல்வமும் என்று
உருகக் கொடுத்தான் பொருள்"

திருவரங்கப்பெருமாளை பாடியபின் அவன் எனக்கு பாட்டுக்குப் பொருள் கொடுத்தான். நான் பட்ட பாட்டுக்கும் பொருள் கொடுத்தான், மேலும் கொடுப்பான் என்ற நம்பிக்கையில் -

திருவரங்கப் பெருமாளை பாடிய பின் நான் திருக்கோழி என்னும் உறையூருக்கு புறப்பட்டேன்.

திவ்யதேசம் - 2



திருக்கோழி
(உறையூர்)

மூலவர் - அழகிய மணவாளப் பெருமாள்
நிற்கும் திருக்கோலம்
வடக்குத் திருமுகம்

தாயார் - பெருமாள் உடனமர்
கமலவல்லி நாச்சியார்,
உறையூர் வல்லி
வீற்றிருக்கும் திருக்கோலம்.
வடக்கு திருமுகம்
திருமணக் கோலம்

தீர்த்தம் :
கல்யாண தீர்த்தம், சூரிய புட்கரிணி, குடமுருட்டிநிதி

மங்களாசாசனம் :
திருமங்கையாழ்வார் - 1762
குலசேகராழ்வார் - 667
மொத்தம் - 2 பாசுரங்கள்

பொதுவாக திருச்சிராப்பள்ளி எல்லைக்குள் நுழைந்து விட்டாலே நமது கண்ணுக்கு கம்பீரமாகத் தெரிவது திருச்சி மலைக்கோட்டை. திருச்சி மலைக்கோட்டையில் நிலை கொண்டிருப்பவர் தாயுமானவர் சுவாமி. இது தெய்வம்.

இந்தத் தெய்வத்தையே வணங்கி, பிறகு அவர் நாமத்தையே பெற்றவர் தவத்திரு. தாயுமானவ அடிகள். இவர் கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் திருச்சியில் சேடிலியப்ப பிள்ளை - கெசவல்லியம்மை என்ற தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். வளர்ந்து வயது உயர்ந்த பிறகு விராலி மலைக்குச் சென்றவர். சித்தர்களின் உபதேசத்தால் ஞானம் பெற்று துறவியானவர் இவர்தான்.

"எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே"

என்று பாடியவர்.

நான் திருவரங்கத்தைப் பார்த்து விட்டு உறையூருக்கு பேருந்தில் வந்த போது இவர்தான். எனக்கு நினைவுக்கு வந்தார். பிறகு இங்கே பிறந்த எம்.கே. தியாகராச பாகவதர், எழுத்தாளர் சுஜாதா, கவிஞர் வாலி ஆகியோரும் வந்தனர்.

உறையூர் திருச்சிக்குள்ளேயே உள்ள ஒரு பகுதியாகும். அதாவது திருச்சி மாநகராட்சி எல்லைக்குள்ளேயே இருக்கிறது. இதற்கு திருக்கோழி, நிசுளாபுரி, உறந்தை என்ற பெயர்கள் உண்டு. திருச்சி பேருந்து நிலையத்திலிருந்து 3-கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. நகர பேருந்தில் செல்லாம். ஆட்டோவிலும் செல்லலாம்.

திருக்கோழி என்னும் உறையூர் 108 திவ்ய தேசங்களில் 2வது ஆகும். மூலவர் அழகிய மணவாள பெருமாள். தாயார் கமலவல்லி நாச்சியார், உறையூர் வல்லி.

சோழமன்னரின் திருமகள் கமலவல்லி நாச்சியார் திருரங்கநாதன் மேல் காதல் கொண்டு விரதம் இருந்தார். விரதமேன்மையறிந்த மணவாளப் பெருமான் இங்கே நேரில் வந்து அவரை திருமணம் செய்து கொண்டதாக புராண வரலாறு கூறுகிறது.

திருபாணாழ்வார் உறையூரிலேயே அவதரித்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவருக்கு இங்கே சன்னதி ஒன்றும் உள்ளது.

“கோழியும் கூடலும் கோயில் கொண்ட
கோவல ரேயொப்பர் குன்ற மன்ன
பாழியும் தோளுமோர் நான்கு டையர்
பண்டிவர் தம்மையும் கண்ட றியோம்
வாழிய ரோவிவர் வண்ண மெண்ணில்
மாகடல் போன்றுளர் கையில் வெய்ய
ஆழியொன் றேந்தியார் சங்கு பற்றி
அச்சோ ஒருவர் அழகியவா!” (1762)



என்று இதை திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார்.

“அல்லிமாமலர் மங்கைநாதன்
அரங்கன்மெய்யடி யார்கள்தம்
எல்லியிலடி மைத்திறத்தினில்
என்றுமேவு மனத்தனாம்
கொல்லிகாவலன் கூடல்நாயகன்
கோழிக்கோன்குல சேகரன்
சொல்லினில்தமிழ் மாலைவல்லவர்
தொண்டர்தொண்டர்க ளாவரே” (667)

என்று குலசேகராழ்வாரும் உறையூரை மங்களாசாசனம் செய்துள்ளார்.

உறையூர் மணவாளப் பெருமானை தரிசித்த நான், பிறகு ஒரு வெண்பா எழுதி விட்டு, விடை பெற்றேன்.

உறையூர் அழகில் உறையும் மணவாளா
நிறைந்தது உள்ளம் நெகிழ – சிறந்தது
திவ்யதேச யாத்திரை தீர்த்தம் துளசிநீர்
செவ்வாயில் இட்டேன் சிறப்பு

உறையூர் பார்த்த பிறகு நான் திருகரம்பனூர் உத்தமர் கோயிலுக்குச் சென்றேன். உத்தமர் கோயில் திருச்சியிலிருந்து திருவெள்ளறை செல்லும் பேருந்தில் சென்று வழியில் இறங்கலாம். திருச்சி பேருந்து நிலையத்திலிருந்து நகர பேருந்துகள் உண்டு. திருவரங்கத்திலிருந்து மிகவும் அருகில் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

திவ்யதேசம் - 3



மூலவர் - புருஷோத்தமன்

தாயார் - பூர்வா தேவி

தீர்த்தம் - கதம்ப தீர்த்தம்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் - 1399

மொத்தம் : 1 பாசுரம்


திருகரம்பனூர்

"பேரானைக் குறுங்குடியெம்
 பெருமானை திருக்கண்கால்
ஊரானைக் கரம்பனூர்
 உத்தமனை, முத்திலங்கு
காரார்திண் கடலேழு
 மலையேழிவ் வுலகேழுண்டும்
ஆராதென் றிருந்தானைக்
 கண்டதுதென் னரங்கத்தே" (1399)

என்று இவ்வூரை திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார்.

ஒவ்வொரு ஊராகச் சென்று திருமாலை தரிசனம் செய்து வந்த ஜனகர், கதம்பவனம் என்ற காட்டிற்கு வந்து ஒரு பெரிய யாகம் செய்தார். அதற்குப் பலனாக ஜனகருக்கு கதம்ப மரத்தில் திருமாலாகிய அரங்கநாதர் காட்சி தந்தார். அவர் மட்டுமின்றி பிரம்மன், சிவபெருமான் தரிசனமும் அவருக்குக் கிடைத்தது. திருமால் திருவிடத்தில் மும்மூர்த்திகளின் திருகாட்சி உத்தமம் தனக்கு கிடைத்ததால், ஜனகர் அந்த இடத்தை உத்தமர் கோயில் என்று கூற, அந்த பெயர் வழங்கலாயிற்று.

பிரம்மன் எப்போதும் கர்வம் கொண்டவராக விளங்கினார். அவரது கர்வத்தை அடக்க, சிவபெருமான் அவருடைய ஐந்தாவது தலையைக் கிள்ளப் போனார். ஆனால் அந்த தலையோ சிவபெருமான் கையிலேயே ஒட்டிக் கொண்டது. அந்த கபாலத்தில் முழுதும் பிச்சையெடுத்து அரிசி நிரம்பினால்தான் அந்த பாவம் நீங்கும் என்றாகி விட்டது.



சிவபெருமான் பல இடங்களில் பிச்சையெடுத்து அரிசி வாங்கி வந்த போதும் கபாலம் நிரம்பவில்லை. அப்போது சிவபெருமான் புருஷோத்தமன் குடிகொண்ட கதம்பவனம் வந்தார். சிவபெருமான் பிச்சைக்கோலம் கண்ட புருஷோத்தமர் தன் மகலாட்சுமியிடம் அதைக்கூற இருவரும் சேர்ந்து அந்த கபாலத்தில் அரிசியை நிரப்ப, உடனே பிச்சையெடுத்த பிட்சாடனா தோடிபாவம் நீங்கியது. அது முதல் இந்த கோயில் பிட்சாண்டர் கோயில் என்றும் வழங்கப்படுகிறது.

இந்த உத்தம புருஷோத்தமர் கோயிலுக்கும் பின்புறம் சிவபெருமான் பிட்சாண்டர் கோயிலும் உள்ளது. உத்தமர் கோயிலுக்கு சென்ற நாள் மும்மூர்த்திகளையும் அங்கே தரிசனம் செய்து விட்டு, திருவெள்ளாறை புண்டரீகாசன் கோயிலுக்கு சென்றேன்.

"பிரம்மன் சிவனும் பெருமாளும் கூடி
நிரம்ப அருளும் நிலமாம் - கரம்தனில்
பித்தனுக்கு பிச்சை பெருமாளும் இட்டதால்
உத்தமர் கோயில் உரைப்பு!"

திவ்யதேசம் - 4



திருவெள்ளறை

புண்டரீகாசன் திருக்கோயில்

மூலவர் - புண்டரீகாசன்
செந்தாமரைக் கண்ணன்

தாயார் - செண்பக வல்லி

தீர்த்தம் - திவ்ய, கந்த சூரபுட்கரணி,
சக்கு, புட்கல, ப்தம,
வராக மணிகர்ணிகம்

மங்களாசாசனம் :

பெரியாழ்வார் : 71, 192-201
திருமங்கையாழ்வார் : 1368-77, 1851,
2673(70), 2674

மொத்தம் : 24 பாசுரங்கள்

இந்தக் கோயில் திருச்சி - துறையூர் செல்லும் பாதையில் 20 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. வழியிலேயே இறங்க வேண்டும். உத்தமர் கோயில் வழியாகவும் செல்லலாம். பேருந்தில் இறங்கி உள்ளே 2 கிலோ மீட்டர் நடக்க வேண்டும். ஆட்டோவிலும் செல்லலாம்.

திருக்கரம்பனூர் உத்தமர் கோயில் வரலாறுதான் இது. சிவபெருமான் பிரம்மனின் தலையைக் கிள்ளியதால் அவர் கையில் கபாலம் ஒட்டிக் கொண்டது. சிவன் கையில் ஒட்டிக் கொண்ட சாபத்தை மகாலட்சுமியைக் கொண்டு தீர்த்துக் கொண்டதாக இதன் வரலாறு என்று திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார்.

இந்த கோயில் பாறைகளால் ஆனதாகும். பாறைமலை மீது ஒரு கோட்டைபோல் இந்த கோயில் காட்சியளிக்கிறது.

இந்த கோயிலில் தட்சணாயன, உத்தராயன என்று இரண்டு வாசல்கள் உள்ளன. தை மாதம் முதல் ஆனி மாதம் வரை உத்தராயன வாசலிலும், ஆனி மாதம் முதல் ஆடி மாதம், மார்கழி மாதம் முடிய தட்சிணாயன வாசலிலும் இந்த கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

ஒருநாள் திருமால் இரவில் நெடுநாழி கழித்து வந்தார். அதற்கு தாயார் செண்பக வல்லி, "ஏன் இவ்வளவு நாழி தாமதம்" என்று கேட்டாராம். அதனால் இதற்கு "நாழி கேட்டான் வாசல்" என்ற பெயரும் உண்டு.



"போதமர் செல்வக் கொழுந்து
புணர்திரு வெள்ளறை யானை
மாதர்க்கு யர்ந்த அசோதை
மகன்தன்னைக் காப்பிட்ட மாற்றம்
வேதப் பயன்கொள்ள வல்ல
விட்டுசித் தன்சொன்ன மாலை
பாதப் பயன்கொள்ள வல்ல
பத்தருள் ளார்வினை போமே!" (201)

என்று பெரியாழ்வார் இத்தலத்தை மங்களா சாசனம் செய்துள்ளார்.

"மஞ்சு லாமணி மாடல்கள் சூழ்திரு
வெள்ளறை யதன்மேய
அஞ்ச னம்புரை யும்திரு வுருனை
ஆதியை யமுதத்தை
நஞ்சு லாவிய வேல்வல வன்கவி
கன்றி சொல் ஐயிரண்டும்
அஞ்ச லின்றிநின் றேத்தவல் லாரிமை
யோர்க்கர சாவர்களே" (1377)

சிபிச் சக்கரவர்த்திக்கு பெருமாள் இத்தலத்தில் வெள்ளைப் பன்றியோடு காட்சியளித்ததால் இதற்கு வேதகிரி என்ற பெயரும் உண்டு. வேதம் என்றால் பன்றி என்று வடமொழியில் கூறுவர்.



இந்த கோயிலைச் சுற்றி நாற்புறமும் காவிரி ஓடுவது குறிப்பிடத் தக்கதாகும். இந்த கோயிலுக்குச் சென்று விட்டு, நான் துறையூர் பிராதன சாலைக்கு நடந்து வந்து கொண்டிருக்கும் போது, சென்னை யிலிருந்து தொலைபேசி வந்தது. அதில் "உடனே சென்னைக்குப் புறப்பட்டு வாருங்கள். உங்களுக்கு அன்பு தொகை கொடுக்க முடிவாகியுள்ளது" என்ற செய்தியும் வந்தது. நான் மிகவும் மகிழ்ச்சியடைந்து ஒரு வெண்பா எழுதினேன்.

**"புண்டரீ காச தெருவெள் ளறைக்கோயில்
கண்டேனே ஈசன் கருணையை - கண்டதும்
நல்லவொரு செய்தி நடுக்காட்டில் கேட்டேன்
புல்லறித்துப் போனேன் புரிந்து"**

திவ்யதேசம் - 5



மூலவர் – வடிவழகி நம்பி

தாயார் – அழகிய வல்லி நாச்சியார்

தீர்த்தம் – மண்டுக புட்கரிணி,
கொள்ளிடம்

விசேடம் – கல்வெட்டு

மங்களாசாசனம் :

திருமழிசையாழ்வார் - 2417

மொத்தம் : 1 பாசுரம்

திருஅன்பில்

இந்தக் கோயிலுக்கு திருச்சி - கல்லணை - கும்பகோணம் பேருந்து வசதியுள்ளது. லால்குடி மற்றும் டோல்கேட் வழிப் பேருந்துகளிலும் செல்லலாம். கும்பகோணம் - திருவையாறு பேருந்தில் வந்து, அங்கிருந்து கல்லணை மார்க்கம் கோயிலடியில் இறங்கி, கொள்ளிட ஆற்றைக் கடந்து வரலாம்.

"நாகத் தணைக்குடந்தை வெஃகா திருவெவ்வுள்
நாகத் தணையரங்கம் பேரன்பில் - நாகத்
தணைப்பாற் கடல்கிடக்கு மாதி நெடுமால்
அணைப்பார் கருத்தனா வான்"

என்று இத்திருத்தலத்தைப் பற்றி திருமங்கையாழ்வார் மட்டும் ஒரு வெண்பாப் பாடியுள்ளார்.

இந்தப் பாடலில் ஒரு சிறப்பை நீங்கள் காண வேண்டும். அதாவது திருமால் குடந்தை, காஞ்சிபுரம் திருவெஃகா, திருவள்ளூர் திருஎவ்வுள், திருஅன்பில், 107-வது திருப்பாற்கடல் ஆகிய தலங்கில் நாகத்தை படுக்கையாகக் கொண்டு படுத்திருப்பார். இந்தபாட்டில் திருமங்கையாழ்வார் அவற்றை மங்களா சாசனம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த 108 திவ்யதேச திருயாத்திரைபற்றி இங்கே முக்கியமாக ஒன்றை குறிப்பிட வேண்டும். அதை நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த திருஅன்பில் திருத்தலத்திற்கு முன்னமே கூறியதுபோல திருச்சி - கல்லணை - கும்பகோணம் என்று வழிப்பாதையை கூறியுள்ளோம். அதேபோல இந்த திருத்தலத்திற்கு கும்பகோணம் - சுவாமிமலை மார்க்கமாகவும் வரலாம்.

கும்பகோணம் சுற்றுப்புறத்திலுள்ள திவ்ய தேசங்களில் திருவையாற்றைக் கடந்து திருக்கண்டியூர், திருப்பேர்நகர் என்னும் கோயிலடி திருத்தலங்கள் வருகின்றன. நாம் திருக்கண்டியூர் சென்று விட்டு, கோயிலடி அப்பக்குடத்தான் ரங்கநாதனை தரிசனம் செய்துவிட்டு அப்படியே திருஅன்பில் வர குறுக்கு வழியுண்டு.

அதாவது கோயிலடியை யொட்டி கொள்ளிடக் கரையுள்ளது. ஒரு கிலோ மீட்டர் தூரம் உள்ள அதைக் கடந்தால் திருஅன்பிலை அடையலாம் என்பது எனது அனுபவம். நான் அப்படித்தான் அக்கரையைக் கடந்து திருஅன்பிலை அடைந்தேன்.

நான் தொடக்கத்திலேயே கூறியபடி, "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பது இங்கேயும் நிகழ்ந்தது.

நான் கும்பகோணம் சுவாமிமலையிலிருந்து திருவையாறு வந்து திருக்கண்டியூரில் இறங்கி விட்டு, பிறகு கோயிலடி சென்று திருஅப்பக்குடத்தானை தரிசித்து விட்டு வந்தேன். பிறகு குறுக்கு வழியில் திருஅன்பில் எப்படி செல்வது என்று ஒருவரிடம் வழி கேட்டேன். அவர் கொள்ளிட ஆற்றின் வழியை காட்ட, நான் அதை நோக்கி நடந்தேன். அந்த கொள்ளிட கரையை அடைந்ததும் அதைப் பார்த்த போது ஒரு சஹாரா பாலைவனம் போல ஒரே மணல் மயமாக தெரிந்தது. தண்ணீர் கிடையாது. கொஞ்சம் தயங்கியபடி நின்றேன்.

அப்போது ஒருவர் அந்த பக்கமாக காட்டுவேலை செய்து கொண்டிருந்தார். சந்தேகப்பட்டு அவரிடம் வழி கேட்டேன். அதற்கு அவர், "கொஞ்சம் தூரம் போங்கள். அந்த கரைப்பக்கம் துணி துவைத்துக் கொண்டிருப்பார்கள். அன்பிலை அடையலாம்" என்றார். நான் அப்படியே சென்றேன். ஆனால் எனக்கு அக்கரை தெரியவில்லை. ஒரு காக்கை குருவி கூட தெரியவில்லை. எனக்கு கொஞ்சம் பயம் வந்து விட்டது. திடீரென்று ஒரு ஞானம் இந்த கொள்ளிட ஆற்றில் திடீரென்று வெள்ளம் வந்துவிட்டால் . . . ? பயம் உச்சகட்டத்தை அடைந்தது. வந்த வழியிலேயே திரும்பி ஓடினேன்.

நான் திரும்பி வருவதைப் பார்த்த எனக்கு முதலில் வழிகாட்டிய நபர், 'ஏங்க திரும்பி வருகிறீர்கள்?' என்று கேட்டார். நான் பயமாக இருக்கிறது என்று கூறினேன். அதற்கு அவர் 'அதெல்லாம் ஒன்றுமில்லீங்க, பயப்படாமல் போங்கள். சீக்கிரம் போய்விடலாம். இல்லையென்றால் 30 கிலோமீட்டர் சுற்றி வரவேண்டும்' என்றார்.

நான் நின்று மீண்டும் கொஞ்சம் யோசித்தேன். பிறகு ஒரு திடமான முடிவோடு, "அந்த பெருமாளே நமக்கு துணை" என்று எண்ணிக் கொண்டு மீண்டும் கொள்ளிட ஆற்றுக்குள் புகுந்தேன். ஒரே மணலாக இருந்ததால் கால் அதற்குள் பதிந்து பதிந்து செல்ல மிகவும் கஷ்டமாக இருந்தது. நான் போய் கொண்டேயிருந்தேன். அப்பாடா, எப்படியோ, தூரத்தில் தண்ணீரும், சிலர் அங்கே துவைத்துக் கொண்டிருப்பதும் தெரிந்தது. நான் அவர்கள் இருக்கும் இடம் நோக்கி தூரமாக சென்று கொண்டேயிருந்தேன். சிறிது நேரத்தில் தண்ணீரை அடைந்ததும் அப்போது அக்கரையில் துவைத்துக் கொண்டிருந்தவர் 'இப்படி வராதீர்கள், அப்படி போங்கள்' என்று கையசைத்துக் கத்த நானும் திண்டாடி, திணறி அப்படியும், இப்படியும் போனேன். இந்த கூத்து ஒரு பத்து நிமிட நேரம் நடந்தது. இப்போது எனக்கு முழுமையாக எப்படி போவது என்று தெரியாமல் மேலும் பயம் மேலோங்க அப்படியே நின்று விட்டேன். ஆற்றைக் கடக்கவும் முடியாமல், திரும்பி போகவும் முடியாமல் அசைவற்று நின்றேன்.

சிறிது நேரத்தில், தூரத்தில் நான் வந்த வழியிலிருந்து ஐந்தாறுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஜட்டியோடும், லுங்கியோடும் வந்து கொண்டிருந்தார்கள். எனக்கு கொஞ்சம் தெம்பு ஏற்பட்டது. அவர்கள் என்னை நெருங்கினார்கள். நான் அவர்களை நோக்கிச் சென்றேன். என்னை மேலும் கீழும் பார்த்த அவர்கள், சாமியார் கோலத்தில் தோள் பை, பெட்டி சகிதமாக இருந்த என்னைப் பார்த்து, "என்னங்க ஐயா, எங்க போறீங்க? ஏ, இப்படி நிற்கறீங்க? என்று கேட்டனர்.

அதற்கு நான், "அக்கரைக்குச் செல்ல தெரியவில்லை? எப்படி தண்ணீரை கடப்பது என்று தெரியவில்லை"? என்றேன்.

"அய்யய்யோ, என்னப்பா நீங்க, இது ரொம்ப ஆழமாச்சே, எப்படி போவீங்க? நாங்களே வரும்போது நீந்தித்தானே வந்தோம்? உங்க கழுத்தளவுக்கு தண்ணியிருக்கு . . . " என்றனர். நான் வழி தெரியாத குழந்தைபோல விழித்துக் கொண்டு நின்றேன். பிறகு இன்னொரு பையன், "சரி, பரவாயில்லேப்பா? நீங்க வேட்டி சட்டையெல்லா கழட்டிடுங்க, நாங்க உங்களை கூட்டிட்டு போறோம்" என்று கூறினான். நான் வேட்டி சட்டையை கழட்டிவிட்டு, காவல்நிலைய கைதி போல அண்டர்வேரோடு நின்றேன். ஒரு பையன் எனது தோள்பையை வாங்கிக் கொண்டான். ஒரு பையன் பெட்டியை வாங்கிக் கொண்டான். மற்றவர்கள் என்னை இரண்டு பக்கமும் பிடித்துக் கொள்ள நான் ஆற்றில் இறங்கினேன். அதுபோகப் போக ஆழமாகி, தண்ணீர் எனது கழுத்தைத் தொட்டது. அந்த பையன்கள் என்னை தாங்கலாக தூக்கிக் கொண்டு போய் அக்கரையில் சேர்த்தனர். பிறகு நான் அவர்களுக்கு நன்றி கூறிவிட்டு, வேட்டி, சட்டையை அணிந்து கொண்டு அவர்களோடு அன்பில் கோயிலடைந்தேன். நன்றிக்காக அந்த பையன்களுக்கு தேநீர் வாங்கிக் கொடுத்து, அவர்களிடம் விடைபெற்றேன்.

இந்த நிகழ்ச்சி மறக்க முடியாததாகும். அந்த அரங்கநாதன் வந்துதான் எனக்கு உதவி செய்தான் என்பதில் இப்பவும் எனக்கு கொஞ்சமும் ஐயப்பாடில்லை.

இறைவனை நினைத்து எதையும் சரியாகச் செய்தால், அவன் ஏதோ ஒரு ரூபத்தில் வந்து நமக்கு உதவி செய்வான்.

பிறகு நான் திருஅன்பில் வடிவழகிய நம்பியை சென்று தரிசித்து விட்டு, அங்கேயே அமர்ந்து அவனைப் பாடினேன்.

"கொள்ளிட ஆற்றில் குடிகொண்ட அன்பில் காண்
பள்ளிகொண்ட எந்தன் வடிவம்பி - கொள்ளிடம்
அக்கரை சென்றிட அக்கறையாய் நீவந்து
அக்கணம் காட்டினாய் அன்பு"

திருச்சியிலிருந்து திருவரங்கம், திருஉறையூர், திருஅன்பில், திருக்கரம்பனூர், திருவெள்ளறை ஆகிய 5 திவ்யதேசக் கோயில்களைக் காணலாம்.

அத்தோடு திருச்சி மலைக்கோட்டை சமயபுரம் மாரியம்மன் மற்றும் 63-நாயன்மார்களுக்குட்பட்ட, திருச்சி திருமங்கலத்தில் வாழ்ந்த ஆனாய நாயனார், நிலம், நீர், காற்று, நெருப்பு, வானம் என்ற ஐந்து வகைக்கு அடையாளங்களில் நீருக்குண்டான திருவாணைக்காவல் கோச்செங்கட் சோழன், உறையூர் புகழ் சோழ நாயனார், திருமங்கலம் ஆனாய் நாயனார், கரூரில் எறிபத்த நாயனார் ஆகியோர் வாழ்ந்த சிவத்தலங்களையும் காணலாம்.

தஞ்சை - கும்பகோணம்

இனி நாம் தஞ்சைக்கு வருவோம். தஞ்சையை நினைத்தாலே நெஞ்சம் இனிக்கிறது.

“தஞ்சைக்குப் பேரழகு தஞ்சைப் பெருங்கோயில்
நெஞ்சைக் குளிர்விக்கும் நெற்பயிர்கள் - மிஞ்சும்
இசைநிகழ்ச்சி நாட்டியம் இன்பத் தமிழும்
வசியப் படுத்தும் வளம்”

திருச்சி உள்ளிட்ட தஞ்சை, கும்பகோணம் சோழநாட்டுக் கோயில்களை எடுத்துக் கொண்டால் 40 திவ்யதேசக் கோயில்களும், 32 நாயன்மார் சிவத்தலங்களும் உள்ளன. இவைகள் தவிர ஏராளமான கோயில்கள் கும்பகோணத்தைச் சுற்றிலும் உள்ளன.

ஆகவே தஞ்சை-கும்பகோணம் கோயில்களைப் பார்க்க வேண்டுமென்றால் நாம் கும்பகோணத்தில் தங்குவதுதான் வசதியாகும். அங்கு நிறைய தங்கும் விடுதிகள், போக்குவரத்து வசதிகள் உள்ளன.

திருச்சி கோயில்களைப் பார்த்துவிட்டு நான் தஞ்சை, கும்பகோணம், கோயில்களைப் பார்க்க கும்பகோணத்தில்தான் தங்கினேன்.


நான் 63-நாயன்மார்கள் சிவத்தல கோயில்களுக்கு ஆன்மீக ஆய்வுப் பயணம் மேற்கொண்ட போது, சில விவரங்கள் தெரியவில்லை. அதற்குப் பிறகு 108-திவ்யதேச யாத்திரை மேற்கொண்ட போதுதான் சரியான வழிமுறையைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

அதாவது 63-நாயன்மார் சிவபெருமான் கோயில்களுக்கும், 108 திவ்யதேச பெருமாள் கோயில்களுக்கும் விவரம் தெரியாமல் நான் தனித்தனியாகத்தான் பயணம் செய்தேன். அதனால் எனக்கு காலநேரம், பயணகாலம், பணச்செலவு என எல்லாமே இரட்டிப்பு செலவுகளாகவே இருந்தது. அதனால் எனக்கு பெரிய கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டது. அதையே திட்டமிட்டு ஒரே பயணமாக மேற்கொண்டால் இரண்டு பயணம், இரண்டு செலவு எல்லாம் ஒன்றாகி செலவு மிச்சப்படும்.

அந்த அடிப்படையிலேயே இந்த ஆன்மீகப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அறுபடை வீடுகளில் ஒன்றான கும்பகோணம் சுவாமி மலையிலுள்ள கே.வி. குப்புசாமி அண்ணாரின் ஆர்.வி.எஸ். குடிலில் தங்கித்தான் எனது கும்பகோணம் கோயில்கள் பயணத்தைத் தொடங்கினேன்.

தஞ்சாவூர்



6. திருப்பேர்நகர் (கோயிலடி)
7. திருத்தஞ்சை மணிக்கோயில்
8, திருக்கண்டியூர்
9. திருக்கண்ணங்குடி
10. திருநாகை

கும்பகோணம்

1. திருக்கண்டியூர் :

தஞ்சையிலிருந்து திருவையாறு செல்லும் வழியில் 10 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

மூலவர் - ஹரசாப விமோசன பெருமாள்

சிவன் கோயில் - பிரம்மசிர கண்டீசுவரர் கோயில்

சிவன் பிரம்மன் தலையை கிள்ள, அதன் கபாலம் அவர் கையில் ஒட்ட, அந்தப் பாவத்தை இந்த பெருமாள் விமோசனம் செய்ததாக வரலாறு.

2. திருநந்தி விண்ணகரம் (நாதன் கோயில்) :

கும்பகோணம் - கொருக்கை. அங்கிருந்து 2.5 கிலோமீட்டர் வாய்க்காலை கடக்க வேண்டும். மினி பேருந்து உண்டு.

3. தஞ்சை மாமணிக்கோயில் :

1. தஞ்சை மாமணிக்கோயில் - நீலமேகப் பெருமாள்
2. மணிக்குன்றம் - மணிக்குன்ற பெருமாள்
3. தஞ்சையாணி நகர் - நரசிம்மன்

மூன்று சேர்ந்து ஒரு திவ்யதேசம். தஞ்சையிலிருந்து 4 கிலோமீட்டர்.

4. திருக்கண்ணமங்கை :

கும்பகோணத்திலிருந்து திருவாரூர் பேருந்து மூலம் 40 கிலோமீட்டர். மூலவர் - பக்தவச்ல பெருமாள்.

5. திருக்கண்ணபுரம் :

கும்பகோணம் – நன்னிலம் சென்று, அங்கிருந்து திருப்புகலூர் – 7 கிலோமீட்டர். திருப்புகலூரிலிருந்து 2 கிலோமீட்டர் நடக்கவும்.

மூலவர் – நீலமேகப் பெருமாள்

6. திருக்கண்ணங்குடி :

கும்பகோணம் – திருவாரூர். திருவாரூரிலிருந்து 14 கிலோமீட்டர். சிக்கலுக்கும், கீவளூருக்கும் இடையே ஆழியூர். அங்கிருந்து 1 கிலோமீட்டர் நடை.

மூலவர் – லோகநாதர் சியாமள மேனி பெருமாள்

7. நாகப்பட்டிணம் : நீலமேகப் பெருமாள் கோயில்.

தொண்டரடிப் பொடியாழ்வார்


தொண்டரடிப்பொடியார்

சோழவள நாட்டில், இயற்கைக் சூழ்ந்த பச்சைப்பசேலென்ற வயல்வெளி களிலுள்ள சோலைகள் சூழ்ந்த குளம், குட்டைகளில் துள்ளி குதித்து விளையாடும் திருமண்டக்குடி என்ற ஊரில் ருக், யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களிலும் தேர்ந்த முன்குடுமி சோழியப் பிராமண குடும்பங்கள் நிறைய வாழ்ந்து வந்தனர். விப்ர பிராமணர் என்றும் அவரைக் குறிப்பிடுவர்.

அக்குலத்தில் வேத விசாரதர் என்ற சோழிய பிராமணர் திருமால் தாசராக விளங்கி, அவருக்கு நாள்தோறும் பாதபூஜை செய்து வந்தார்.

அவருக்கு பிரபவ வருடம், மார்கழி மாதம், கிருஷ்ண சதுர்த்தி செவ்வாய்க் கிழமையன்று கேட்டை நட்சத்திரத்தில் திருமாலின் வைஜயந்தி வனமாலையின் அம்சமாக ஒரு புதல்வர் பிறந்தார். அவருக்கு பெற்றோர் விப்ர நாராயணன் என்று பெயரிட்டனர்.

விப்ர நாராயணன் வேத தத்துவத்திலும், தென்மொழியிலும், வடமொழியிலும் கற்க வேண்டிய அனைத்தையும் தேர்ந்து கற்றார்.

தவிர அவர் அறிவும், அடக்கமும் மேலாக பேரழகும் வாய்ந்தவராகத் திகழ்ந்தார். இவ்வாறான விப்ர நாராயணனுக்கு திருமாலின் படைத்தலைவர் சேனை முதலியார் தோன்றி, மெய்ப்பொருளை உணர்த்திச் சென்றார்.

அதுமுதல் விப்ர நாராயணன் திருமாலிடம் பற்றும் பாசமும் கொண்டவராய் திகழலானார். அதனால் அவர் திருமணம் செய்வதை விரும்பாமல் பிரம்மச்சரியத்தையே மேற்கொண்டார்.

இந்நிலையில் விப்ர நாராயணன் தலயாத்திரை மேற்கொள்ள முடிவு செய்து, முதல் தலமாக திருவரங்கம் சென்றார். அங்கு பாம்பு படுக்கையில் கருநீல மேனி கொண்டு, முடியை மேற்புறம் வைத்தும், திருவடிகளை கிழபுறம் நீட்டியும், விபீடணன் வரவுக்காக முகத்தை தெற்குப் புறமாகவும் திருப்பி இலங்கையை நோக்கி இருக்க, அவர் பாத திருவடிகளை தேவியர் பிடித்து கொண்டுமிருந்த நிலை கண்டு தன்னை மறந்தார்.

அப்போது அரங்கநாதன் அவரை ஆட்கொண்டு தன்வசப்படுத்தினார். அது முதற்கொண்டு விப்ர நாராயணன் அரங்கன் அடிமையானார்.

பிறகு அவர் தினந்தோறும் அரங்கநாதருக்கு மாலை சூட்டும் பணியை மட்டும் மேற்கொண்டார்.

அதன்பின் அவர் திருவரங்கத்தில் ஒரு நந்தவனம் அமைத்தார். அதில் பலவித மாஞ்செடி கொடிகளை வைத்தார். பொய்கை நீரோடைகளை அமைத்தார். அவற்றில் செந்தாமரை, வெண்தாமரை, அல்லி, கருங்குவலி போன்ற மலர்களை வளர்த்தார். அங்கே பூத்துக்குலுங்கும் மலர்களைப் பறித்து, அரங்கநாதருக்கு சூட்டி வந்தார்.

அப்போது திருகாம்பனூர் என்ற ஊரில் இரண்டு தாசிகள் இருந்தார்கள். அக்காள் – தங்கைகள். தேவி, தேவதேவி என்ற பெயர்கள். ஆடல், பாடல், அறிவில் மேம்பட்டவர்கள். மேலாக பேரழுகு வாய்ந்தவர்கள்.

அவர்கள் இருவரும் உறையூர் அரச மண்டபத்தில் ஆடல், பாடல் நிகழ்ச்சியில் பங்கேற்று, பரிசில் பல பெற்று ஊர் திரும்பிக் கொண்டிருந்தார்கள். அப்போது வழியில் திருவரங்க பெருமாளை தரிசிக்க வேண்டுமென்று ஆசை அவர்களுக்கு ஏற்பட்டது. அதனால் திருவரங்கம் நோக்கிச் சென்றனர். வழியில் விப்ர நாராயணன் நந்தவனத்தை கண்டு, மயங்கி உள்ளே சென்று, அதன் அழகைப் பார்த்துவிட்டு வியப்படைந்தார்கள். தேவலோகத்துக் கற்பகச் சோலையா, கானகத்து நறுமண ஆலயமா எனக்கூறி, இந்த சோலைவனத்தை அமைத்த விப்ர நாராயணன் ஒரு நல்ல கலைஞன், கவிஞனாகத்தான் இருக்க வேண்டும் என்று பேசிக் கொண்டார்கள்.

அப்போது அங்கே வந்த விப்ர நாராயணனைக் கண்ட தேவதேவி அவன் அழகில் மயங்கி, அவன் மேல் காதல் கொள்ளலானாள்.

தேவதேவி அவனைத் தன்வயப்படுத்த ஆடல், பாடல், பேச்சு, சிரிப்பு, அபிநயம் என என்னன்னவோ செய்து பார்த்தாள். ஆனால் அவன் அவற்றைக் கண்டு கொள்ளவேயில்லை.

தங்கை தேவி அவனை மறந்துவிடக் கூறினாள். தேவதேவி அதை மறுத்ததோடு, 'ஒருமாத காலத்தில், அந்த பிரம்மச்சாரியை பெண்ணடியமையாய் மாற்றிக் காட்டுகிறேன்' என்று சபதம் பூண்டாள். தன் ஆடை, அணிகலன்களைக் களைந்துவிட்டு சாதாரண ஆடைகளை அணிந்து கொண்டாள்.

பிறகு விப்ர நாராயணனிடம் சென்று, "அரங்கபெருமான் அடியவரே! எனக்கு ஆடிப்பிழைக்கும் வாழ்க்கை அலுத்துவிட்டது. என் அழகை அரசர் கூட்டம் ஆனந்தமாய் காணும் கொடுமை, ஐயோ என்ன சொல்வேன்? முற்பிறப்பில் செய்தபாவம், இப்பிறப்பில் இப்படியொரு சாபம்? போதும்!

அன்புடையீர்! உங்களைப் பற்றி கேள்விப்பட்டேன். உங்களது சிஷ்யையாகயிருந்து, இந்த அரங்கனுக்கு சேவை செய்ய விரும்புகிறேன். தயவு செய்து உங்களது அடியவளாக என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று அழுது புரண்டு, அருமையாக நடித்தாள். விப்ர நாராயணன் அதில் ஏமாந்தான்.

இரண்டு மூன்று நாட்கள் சென்றன. ஒருநாள் பெருமழை பெய்தது. தேவதேவி முழுவதுமாக நனைந்தாள். உடலை ஒட்டிய அவளது ஈர உடை தூரநின்ற விப்ர நாராயணனை என்னவோ செய்தது. அவன் அவளை உள்ளே வர அழைத்தான். ஈரத்தை துடைத்துக் கொள்ள தன்னுடைய மேலாடையை தந்தான். இவளோ தன் மேலாடையை நீக்கி, அவன் மேலாடையால் தன் தங்க மேனியைத் தடவினாள். ஆஹா . . . அதுவே அவனுக்கு மின்னல் தாக்கியது போல் துடிக்க வைத்தது.

"பெருமானே! உங்கள் ஆடையைத் தந்து என் அங்கத்தை தழுவ வைத்ததுபோல, உங்கள் அடியைத் தொட்டு காலடி வலியைப் போக்க அனுமதி வேண்டும்! அது என் பாக்யமாக வேண்டும்" என்றாள். "அப்படியே ஆகுக" என்றான்.

இப்படியாக அவள் அவன் இதயம் தொட்டு, பிறகு இன்ப கட்டிலுக்கும், இளமையைக் கட்டவிழ்த்து விட்டாள். இப்போது அடியாரின் அடியாள், அவனது இதயத்தில் குடியேறினாள்.

குடியைவிட மோசமானது கோதையர் இன்பம். விப்ர நாராயணன் இப்போது அரங்கனின் அடியைவிட, தேவதேவியின் மடியே கதியென ஆயினான். அவளோ மடியுள்ள ஆவின் பாலை கறப்பது போல, அவனிடமிருந்த பொன் பொருட்களைப் பறித்தாள். என்னவாயினும் அவள் தாசியன்றோ? தாசியின் தாய் ஆசைமிகக் கொண்டவள். காசு, பொன்,பொருள் என்று அலைபவள்.


"அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் – அக்குளத்தின்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு"

என்பது ஔவை கூறியது போல, அதாவது நீர்வற்றிய குளத்திலிருந்து நீங்கிப் போகின்ற நீர்ப்பறவை போல், பணம் இல்லாத போது நீங்குவோர் உறவினர் அல்ல, என்பது போல், விப்ர நாராயணனிடம் எல்லாப் பொருளும் தீர்ந்த பின்னர் தேவதேவி அவனைவிட்டு விலகிப் போனாள்.

பொருளுக்காக மட்டுமல்ல, அவள் இங்கு வந்தது, ஒரு சபதத்திற்காகவும். ஆகவே அவளது செயல் தவறு என்றும் கூறிவிட முடியாது.

அச்சமயம், இறைவனும், இறைவியும் தன் அடியவராகிய விப்ர நாராயணனுக்கு மேலும் துன்பத்தைக் கொடுக்கக் கூடாது என்று முடிவு செய்தார்.

அதற்காக அரங்கநாதர், தாமே ஒரு மனித உருவம் எடுத்து, தன் திருக்கோயிலிலுள்ள ஒரு தங்கவட்டிலை எடுத்துக் கொண்டுபோய் தேவதேவியிடம் சென்று, விப்ர நாராயணன் கொடுத்ததாகக் கூறி கொடுத்து வந்தார். அதைப் பெற்றுக் கொண்ட தேவதேவியின் தாயார் மீண்டும் விப்ர நாராயணனை தன் மகள் தேவதேவியுடன் சேர்த்து வைத்தாள்.




அப்போது அரங்கநாதர் கோவிலில் ஒரு பொன் வட்டில் களவு போனதாக மன்னரிடம் புகார் வந்தது. மன்னர் அதை கண்டுபிடிக்க ஆணையிட்டார். மன்னர் ஆணைப்படி தேவதேவியின் வீட்டில், அதை பொன்வட்டில் கண்டுபிடிக்கப்பட்டு, விப்ர நாராயணன் சிறையில் வைக்கப்பட்டார்.

பிறகு அரங்கநாதர் மன்னரின் கனவில் தோன்றி, "விப்ர நாராயணன் இறைவனின் திருத்தொண்டை மறந்து, விலைமகள் வசப்பட்டமையால் நாமே இத்திருவிளையாடலை மேற்கொண்டோம். அவரை விடுதலை செய்க" என்றுகூற, விப்ர நாராயணன் விடுதலை செய்யப்பட்டார்.


விடுதலையடைந்த விப்ர நாராயணன் தம் தவற்றையுணர்ந்து, மெய்யடியார்கள் அறிவுரைப்படி, அதற்கு பிராயசித்தமாக தொண்டர்களின் திருவடிபற்றி, போற்றி பாடினார். அதுமுதல் அவர் "தொண்டரடிப் பொடியாழ்வார்" எனப் பெயர் பெற்றார்.

பின்னர் அவர் திருவரங்கனையே பாடிப்பாடி மகிழ்ந்தார். அவர் திருமாலை, திருப்பள்ளியெழுச்சி ஆகிய பிரபந்தங்களை இயற்றினார்.



"ஊரிலேன் காணி யில்லை
உறவுமற் றொருவ ரில்லை
பாரில்நின் பாத மூலம்
பற்றிலேன் பரம மூர்த்தி
காரொளி வண்ண னே!என்
கண்ணனே! கதறு கின்றேன்
ஆருளர்! களைக ணம்மா
அரங்கமா நகரு ளானே!" (900)


என்று திருமாலையிலும்,



"கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ
கதிரவன் கனைகடல் முளைத்தன இவனோ
துடியிடை யார்சுரி குழல்பிழிந் துதறித்
துகிலுடுத் தேறினர் சூழ்புன லரங்கா
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடி யென்னும்
அடியனை, அளியென் றருளியுன் னடியார்க்
காட்படுத் தாய்!பள்ளி யெழுந்தரு ளாயே!" (926)

என்று திருப்பள்ளியெழுச்சியிலும் பாடி, அவனடி தொழுது வந்தார்.

திவ்யதேசம் - 6



திருப்பேர் நகர் (கோயிலடி)

தஞ்சாவூர் மாவட்டம்

மூலவர் - அப்பக்குடத்தான்
அப்பாலா ரங்கநாதன்
அருகில் உபமன்யூ முனிவருக்கு ஆசி கூறும்போது, வலதுகரம் ஓர் அப்பக்குடத்தை அணைத்திருத்தல். மேற்குத் திருமுகம்

தாயார் - இந்திரா தேவி, கமலவல்லி

தீர்த்தம் - இந்திர தீர்த்தம், கொள்ளிடம்

மங்களாசாசனம் :

பெரியாழ்வார் : 173, 205

திருமங்கையாழ்வார் : 1428-37, 1851, 1857, 2048, 2050, 2059, 2060, 2070, 2673 (70), 2674 (118)

திருமழிசையாழ்வார் : 2417

நம்மாழ்வார் : 3744-54

மொத்தம் : 33 பாசுரங்கள்

இந்த திருத்தலத்தை திருப்பேர்நகர் என்றால் அதிகம் பேருக்குத் தெரியாது. கோயிலடி என்றால்தான் உடனே தெரியும். இந்த கோயிலுக்குச் செல்ல பல வழிகளைச் சொல்லலாம். ஒருவழி, நான் கோயிலடியில் இருந்துதான் கொள்ளிட ஆற்றைக் கடந்து திருஅன்பில் சென்றேன்.

அதேபோல திருஅன்பிலுக்குச் சென்று விட்டு, கொள்ளிடத்தைக் கடந்து கோயிலடி அப்பக்குடத்தானை தரிசிக்கலாம். தஞ்சை - திருக்காட்டுப்பள்ளி - தோகூர் பேருந்தில் வரலாம். திருக்காட்டுப் பள்ளியிலிருந்து கல்லணை செல்லும் சில பேருந்துகள் கோயிலடி வழியாகவே செல்கின்றன. கோயில் பக்கத்திலேயே இறங்கலாம். இன்னொரு வழி கும்பகோணம் - சுவாமிமலை - திருவையாறு வழியாக திருக்கண்டியூர் - திருக்காட்டுப்பள்ளி வழியாகவும் வரலாம். திருச்சியிலிருந்தும் வரலாம். பிறகு வேன்களும் உண்டு.

மூலவர் : அப்பக்குடத்தான். அப்பாலர் ரங்கநாதப் பெருமாள் என்றும் கூறுவர். புஜங்கசயன கோலத்திலிருக்கும் பெருமாள் அப்பக்குடத்தோடு அருகிலிருக்கும் உபமன்யு முனிவருக்கு ஆசி கூறிக் கொண்டிருப்பதால், இதற்கு அப்பக்குடத்தான் என்று பெயர் வந்ததாம்.

இந்த இடத்திலிருந்துதான் நம்மாழ்வார் கடைசி காலத்தில் பரமபதமாகிய மோட்சத்தை அடைந்தார் என்று கூறப்படுகிறது.

அதாவது திருமாலே இவரது திருமேனி மீது ஆசை கொண்டு, தாமாகவே இவரை பரமபதத்திற்கு அழைத்துக் கொண்டாராம். அப்போது நம்மாழ்வார் கொஞ்சம் காலம் தாழ்த்தி, 'இத்தனை நாட்கள் ஏன் என்னை நீ இங்கே இருக்க வைத்தாய்? அப்போதே அழைத்து சென்றிருக்கலாமே?' என்று கேட்டுப் பாடினாராம்.

அப்பாடல்கள்,

"திருமாலி ருஞ்சோலை மலையென்றே னென்ன
திருமால்வந் தென்நெஞ்சு நிறையப் புகுந்தான்
குருமாமணி யுந்து புனல்பொன்னித் தென்பால்
திருமால்சென் றுசேர்வி டம்தென் திருப்பேரே" (3744)

என்று தொடங்கி,


"நில்லா அல்லல் நீள்வயல்சூழ் திருப்பேர்மேல்
நல்லார் பலர்வாழ் குருகூர்ச் சடகோபன்
சொல்லார் தமிழா யிரத்துள் இவைபத்தும்
வல்லார் தொண்டராள் வதுசூழ் பொன் விசும்பே" (3754)

என்று அந்தாதி பாடல்களால் முடியும்!

இந்த பாடலே நம்மாழ்வார் பாடிய கடைசிப் பாடல் என்று கூறுவர். இதை பாடி முடித்ததும் பெருமாள் இவரை மோட்சத்திற்கு அழைத்துக் கொண்டாராம்.

"அப்பக் குடத்தான் அரங்கனின் கோயிலடி
ஒப்பித்தார் நம்மாழ்வார் சொற்பாட்டால் - அப்பப்பா
கல்லணை செய்த கரிகாலன் மண்ணில்என்
சொல்லடி யாத்தேன் சுவைத்து"

திவ்யதேசம் - 7



திருக்கண்டியூர்

மூலவர் - ஹரசாப விமோசனப் பெருமாள்

தாயார் - கமலவல்லி

தீர்த்தம் - கபால தீர்த்தம், குடமுருட்டி நதி

திருமால், பரமசிவன், பிரம்மன் என்ற மூன்று தலங்ளும் இங்கேயுண்டு. ஆகவே இதை திரிமூர்த்தி தலம் என்றும் கூறுவர்.

<u>மங்களாசாசனம் :</u>

திருமங்கையாழ்வார் : 2050

மொத்தம் : 1 பாசுரம்

தஞ்சையிலிருந்து - திருவையாறு செல்லும் வழித்தடத்தில் 15 கிலோமீட்டர் தூரத்தில் கும்பகோணத்திலிருந்து திருவையாறு வழியாக கோயிலடி செல்லும் பேருந்தில் செல்லலாம். தஞ்சை நகர பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து உண்டு.



"பிண்டியார் மண்டை ஏந்திப்
பிறர்மனை திரிதந் துண்ணும்
உண்டியான் சாபம் தீர்த்த
ஒருவனூர், உலக மேத்தும்
கண்டியூர் அரங்கம் மெய்யம்
கச்சிபேர் மல்லை என்று
மண்டினார் உய்யல் அல்லால்
மற்றையார்க் குய்ய லாமே?" (2050)

என்று திருமங்கையார் மட்டும் ஒரே ஒரு பாசுரம் இக்கோயிலைப் பற்றி எழுதியுள்ளார்.


"பிரம்மன் சிரத்தை பிடித்திழுத்துக் கிள்ளி
சிரம்மம் அடைந்தார் சிவனும் - அரனும்
திருமகளும் பாவ விமோசனம் தந்த
திருக்கண்டூர் கண்டேன் திகைத்து"

ஹரசாப விமோசனக் கோயிலுக்குள்ளேயே இடதுபுறத்தில் ஒட்டிய வண்ணம் பிரம்ம சரஸ்வதி கோயில் உள்ளது. அதை அடுத்து பக்கத்தில் பிரம்ம சிர கண்டீஸ்வரர் கோயிலும் உள்ளது.

ஆக, சிவன், பிரம்மன், விஷ்ணு என மூன்று பேரும் உள்ள கோயில் இங்கு தான் உள்ளது.

தஞ்சாவூரிலிருந்து திருக்கண்டியூர், திருவையாறு செல்பவர்கள் அப்படி திங்களூர் சென்று அப்பூதியடிகள் நாயன்மார் கோயிலை தரிசிக்கலாம். திங்களூர் நவக்கிரக கோயில்களில் ஒன்றாகும்.

திவ்யதேசம் - 8



திருக்கூடலூர்
ஆடுதுறை பெருமாள் கோயில்

மூலவர் - வையங்காத்த பெருமாள்
ஜெகத்ரட்சகன்
உய்யவந்தார்
நிற்கும் திருக்கோலம்
கிழக்குத் திருமுகம்

தாயார் - பத்மாசினி, புஷ்பவல்லி

தீர்த்தம் - சக்ர தீர்த்தம், காவிரி நதி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் 1358 - 67

மொத்தம் : 10 பாசுரங்கள்

கும்பகோணத்தில் தங்கினால் 13 திவ்ய தேசங்களைத் தரிசிக்கலாம். அவற்றில் ஒன்று திருக்கூடலூர்.

திருக்கூடலூர் திருப்புள்ளம் பூதங்குடி, திருக்கவித்தலம், திருஆதனூர் ஆகியவற்றை சுவாமி மலையில் தங்கியும் காணலாம்.

திருக்கூடலூர்க்கு கும்பகோணம் - திருவையாற்றுப் பேருந்தில் வரலாம்.

தேவர்கள் இங்கே நந்தக முனிவரோடு கூடி வந்து பெருமாளை தரிசித்ததால் இதற்கு கூடுதுறை என்று பெயர் வந்ததாம்.

"பெருகு காத லடியேன் உள்ளம்
உருகப் புகுந்த வொருவ ரூர்போல்
அருகு கைதை மலர கெண்டை
குருகென் றஞ்சும் கூட லூரே" (1366)

என்று திருமங்கையாழ்வார் பாடுவதேயாகும்.



இந்த ஊர் காவேரி வெள்ளத்தில் மூழ்கிப் போனபோது, பெருமாள், மங்கம்மாள் கோயிலை புதுப்பித்து ஊரைக் காப்பாற்றியதால் இந்த ஊர் பெருமாளுக்கு வையங்காத்த பெருமாள் என்று பெயர் வந்ததாகக் கூறுவர்.

கூடிப் பெருமாளை கும்பிட்டார் தேவர்கள்
கூடலூர் ஆனது கோயிலும் - ஆடு
துறையில் பெருமாளைக் கும்பிட்டு வந்தேன்
நிறைவான நெஞ்சோடு நின்று.

திவ்யதேசம் - 9



திருக்கவித்தலம் (கபிஸ்தலம்)

மூலவர் - கஜேந்திர வர்மன்
புஜங்க சயனம்
கிழக்குத் திருமுகம்

தாயார் - ரமாமணிவல்லி
பொற்றாமரையாள்

தீர்த்தம் - கபில தீர்த்தம், கஜேந்திர புட்கரணி

<u>மங்களாசாசனம் :</u>

திருமங்கையாழ்வார் : 2431

மொத்தம் : 1 பாசுரம்

கும்பகோணத்திலிருந்தும், சுவாமி மலையிலிருந்தும் திருவையாறு பேருந்தில் வரலாம்.

ஆதிமூலமே என்றழைத்த யானைக்கு அடைக்கம் கொடுத்த இடமாகும். காவிரிக் கரையில் இக்கோயில் இருப்பதால் 'ஆற்றங்கரை கிடக்கும் கண்ணன்' என்றும் அழைப்பர்.

"கூற்றமும் சாரா கொடுவினையும் சாராதீ
மாற்றமும் சாரா வகையறிந்தேன் - ஆற்றங்
கரைகிடக்கும் கண்ணன் கடல்கிடக்கும் மாயன்
உரைகிடக்கு முள்ளத் தெனக்கு" (2431)

என்று திருமிழிசையாழ்வார் பாடுவார்.

"கவித்தலம் தன்னை கபிஸ்தலம் என்பார்
புவித்தலம் ஆதிமூலம் போனேன் - தவித்த
கஜேந்திரன் காத்த கருமை யிடத்தில்
கஜேந்திரன் நிற்பான் கனிந்து"

என்று நான் பாடி வந்தேன்.



திவ்யதேசம் - 10



மூலவர் - வல்வில் ராமன்
புஜங்க சயனம்
கிழக்கு திருமுகம்

தாயார் - பொற்றாமையம்மாள்

தீர்த்தம் - ஜடாயு தீர்த்தம்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1348-57

மொத்தம் : 10 பாசுரங்கள்

திருப்புள்ளம் பூதங்குடி

கும்பகோணத்திலிருந்தும், சுவாமி மலையிலிருந்தும் திருவைகாவூர் செல்லும் பேருந்தில் செல்ல வேண்டும். திருவையாறு பேருந்தில் சென்று திருவைகாவூரில் இறங்கி உட்பகுதியில் உள்ளது. அங்கிருந்து ஆட்டோவில் செல்லலாம். 6 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள 10-வது திவ்யதேசம்.


"வெற்பால் மாரி பழுதாக்கி
விறல்வா ளரக்கர் தலைவன்றன்
வற்பார் திரள்தோ ளைநான்கும்
துணித்த வல்வில் இராமனிடக்
கற்பார் புரிசை செய்குன்றம்
கவினார் கூடம் மாளிகைகள்
பொற்பார் மாட மெழிலாரும்
புள்ளம் பூதங் குடிதானே" (1351)



என்று இத்தலத்தை திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார்.

இராமன் ஜடாயு என்னும் பெரியவுடையாருக்கு மோட்சம் கொடுத்த பிறகு, பரிகாரம் செய்து கொள்ள இங்கே கோயில் கொண்டதாகக் கூறுவர். அப்போது சீதையை பிரிந்திருந்த காலமாகையால் இங்கே சீதை பக்கத்தில் இல்லை.

புள்ளம்பூ தங்குடி புல்மரச் சோலைக்குள்
கள்ளங் கபடமற்ற காளையாய் - உள்ளமுடை
வல்வில் இராமனாய் வாழ்ந்திடக் கண்டிடும்
நல்லமுதே, நன்மையை நல்கு"



என்று நான் பாடி வந்தேன்.

திவ்யதேசம் - 11



மூலவர் - ஆண்டளக்குமையன்
புஜங்க சயனம்
தலையின் கீழ் மரக்காலும்
இடது கையில் ஓலை எழுத்தாயும்
இருப்பது சிறப்பு
கிழக்கே திருமுகம்

தாயார் - ரங்கநாயகி

தீர்த்தம் - சூர்ய புட்கரிணி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 2674 (130)

மொத்தம் : 1 பாசுரம்

திருஆதனூர்

திருஆதனூர் சுவாமி மலையிலிருந்து 5 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. பொதுவாகக் கூறப்போனால் திருப்புள்ளம் பூதங்குடி, திருக்கூடலூர், திருமண்டங்குடி ஆகியவற்றோடு இந்த திருஆதனூரையும் சேர்த்து ஒரு ஆட்டோவில் சென்று பார்ப்பது வசதியாகும்.

திருமண்டங்குடி 12-ஆழ்வார்களில் ஒருவரான தொண்டரடிப் பொடியாழ்வார் அவதரித்த திருத்தலமாகும்.

"அன்னவனை ஆதனூர் ஆண்டனைக்கும் ஐயனை
நென்னலை யின்றினை நாளையை"

என்று இக்கோயிலை திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார்.


இப்பெருமாளுடைய பாதார விந்தங்களில் திருமங்கையாழ்வாரும், காமதேனுவும் உள்ளனர். இப்பெருமாளை 'ஆதனூர் ஆண்டாளுக்கும் ஐயன்' என்றும் அழைப்பர்.

**"ஆதனூர் ஆண்டளூ ஆண்டவன் வேண்டினேன்
வேதனை தூர விலகியது - பாதமதைத்
தொட்டுப் பணிந்தேன் தொடங்கியது நற்பயன்
எட்டியது வெற்றி எனக்கு"**

தஞ்சாவூர் மாவட்டத்தில் திருநாட்டியாத்தான் குடியில் கோட்டிலி நாயனார், சியாத்த மங்கையில் திருநீல நக்கர், திருக்கண்ண புரத்தில் செறுத்துணை நாயனார், திருச்செங் காட்டான் குடியில் சிறுத்தொண்டர் நாயனார், திருப்புகலூரில் முருகநாயனார், சேய்நலூரில் சண்டேசுரநாயனார் ஆகியோரின் சிவத் தலங்களை தரிசிக்கலாம்.

திருக்குடந்தை (கும்பகோணம்)

கும்பகோணம் - 12



11. திருக்கண்ணபுரம்
12. திருக்கண்ணமங்கை
13. திருச்சேறை
14. திருநறையூர்
15. திருவிண்ணகர்
16. திருக்குடந்தை
17. திருஆதனூர் (சுவாமி மலை)
18. திருப்புள்ளம் பூதங்குடி
    (திருமண்டங்குடி - தொண்டரடிப் பொடியாழ்வார்)
19. திருக்கவித்தலம் (கபிஸ்தலம்)
20. திருக்கூடலூர்
21. திருநந்திபுர விண்ணகரம்
22. திருவெள்ளியங்குடி

திருச்சி - திருவரங்கம் - நாயனார் 4

1.	உறையூர்	-	புகழ்சோழ நாயனார்
2.	திருமங்கலம்	-	ஆனாயநாயனார்
3.	திருவனைக்காவல்	-	கோச்செங்கட் சோழன்
4.	கரூர்	-	எறிபத்த நாயனார்

63 - நாயன்மார்கள்

பொதுவாகக் கூறப்போனால் கும்பகோணத்திலிருந்து திருநறையூர், திருச்சேறை, திருக்கண்ணமங்கை, திருப்புகலூர் செல்பவர்கள் அப்படியே திருவாரூர் வரை செல்லும் போது 63 – நாயன்மார்கள் சிவத்தலங்களையும் தரிசிக்கலாம்.


1. கோட்புரிநாயனார் - திருநாட்டியாத்தாங்குடி
2. முருகநாயனார் - திருப்புகலூர்
3. திருநீலநக்கர் - கோயில்சாத்தமங்கை
4. செறுத்துணை நாயனார் - திருக்கண்ணபுரம்
5. சிவத்தொண்டர் நாயனார் - திருச்செங்காட்டாங்குடி
6. இசைஞானியார் - திருவாரூர்
7. விறண்மிண்டர் - திருவாரூர்
8. தண்டியடிகள் - திருவாரூர்
9. அமர்நீதி நாயனார் - தராசுரம்
10. உற்றுவநாயனார் - களப்பால்



கும்பகோணம் - திருவாரூர் வழியில் நாகப்பட்டிணம் வரை சென்றால் பார்க்கக் கூடிய நாயன்மார் கோயில்கள்

1. சோமாசிமாற நாயனார் - அம்பார்மாகாளம்
2. ஏனாதி நாயனார் - ஏனநல்லர்
3. சத்தி நாயனார் - வரிஞ்சையூர்
4. அரிவட்டய நாயனார் - கணமங்கலம்
5. அதிபத்த நாயனார் - நாகப்பட்டிணம்
6. காரைக்கால் அம்மையார் - காரைக்கால்
7. ருத்ரபசுபதி நாயனார் - திருத்தழையூர்
8. நமசித்த அடிகளார் - திருநெய்பேர்

திவ்யதேசம் - 12



திருக்குடந்தை (கும்பகோணம்)

மூலவர் – சாரங்கபாணி
ஆராவமுதன்
ஆதிசேஷசயனம்
கிழக்கே திருமுகம்

சிறப்பு – திருமழிசையாழ்வாருக்காகக் கிடந்தவாறெழுந்திருக்க முயலும் நிலை, 'உத்தநசாயீ' என்றழைப்பர்

தாயார் – கோமளவல்லி (படிதாண்டா பத்தினி)

தீர்த்தம் : ஹேமபுட்கரிணி (பொற்றாமரை)

மங்களாசாசனம் :

பெரியாழ்வார் : 173, 177, 188, ஆண்டாள் : 628,
திருமழிசையாழ்வார் : 807-812, 2417,
திருமங்கையாழ்வார் : 949, 954, 991, 1078, 1202, 1205, 1394, 1526, 1538, 1570, 1606, 1732, 1759, 1853, 1949, 1975, 2010, 2037, 2045, 2068, 2070, 2080, 2672, 2673(73), 2674(114).
பூதத்தாழ்வார் : 2251, 2278
பேயாழ்வார் : 2311, 2343
நம்மாழ்வார் : 3194 - 3204
மொத்தம் : 51 பாசுரங்கள்

இக்கோயில் கும்பகோணம் ரயில்நிலையத்திலிருந்து 4 கிலோமீட்டருக்குள் உள்ளது. நகரப் பேருந்து வசதிகளும் உண்டு.

கும்பகோணத்தைச் சுற்றிலுள்ள சிவ-வைணவ, அம்மன், நவகிரகங்கள், கோயில்கள் உட்பட நூற்றுக்கணக்காகவுள்ள எந்த கோயில்களைப் பார்க்க வேண்டுமானாலும் இங்கே தங்கியிருந்து பார்ப்பதுதான் வசதி. அப்படிப் போய்ப்பார்ப்பதற்கு ஒவ்வொரு தங்கும் விடுதிகளிலும் வழிகாட்டி அட்டவணைகள் உண்டு.

கும்பகோணம் கோயில்கள் கொண்ட ஒரு புண்ணிய சொர்க்க பூமியாகும். இங்கு சிவ-வைணவம் மற்றும் அனைத்து மதக்கோயில்களும் உள்ளன.

குறிப்பாக ஆயிரத்துக்கும் மேல் பெரிய, சிறிய கோயில்கள் உள்ளன. அவற்றில் சைவ 63-நாயன்மார்களுள் பாடிய சிவத்தலங்கள் மட்டும் 37-உள்ளன. நால்வர் பாடிய பாடல் பெற்ற சிவதலங்களும் உள்ளன. 12-ஆழ்வார்கள் பாடிய 108-திவ்ய தேசங்களில் இங்கு மட்டும் 40-கோயில்கள் உள்ளன. அதுபோல் சிறிய பெரிய அம்மன் கோயில்களும் உள்ளன.

கும்பகோணம் நகரிலுள்ள கோயில்களில் ஆதி கும்பேசுவரர் கோயில், சக்ரபாணி, சாரங்கபாணி, இராமசாமி கோயில்கள் குறிப்பிடத்தக்கது.

இராமசாமி கோயிலில் இராமன் பட்டாபிஷேகக் காட்சியில் சீதை, பரதன், சத்ருகன், லட்சுமணன் ஆகியோர் வெண்கொற்ற சாமரக் கொடையின் கீழ் சாமரம் வீசிக் கொண்டிருக்கும் காட்சியையும், ஆஞ்சிநேயர் வீணாகானம் செய்து கொண்டிருப்பதையும் காணலாம். கோயில் சுற்றுச்சுவரின் இராமாயணத்தையே ஓவியமாக வரைந்திருப்பது எல்லோரும் காணவேண்டிய காட்சியாகும்.

கோயில் கும்பாபிஷேகத்திற்கு வேண்டிய அனைத்து மூலப் பொருட்களும் அடங்கிய அமிர்த குடம் இங்கே இருப்பதால் இதற்கு திருக்குடந்தை என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

12-ஆண்டுக்கொருமுறை குரு சிம்மராசியில் வரும் மகாமகத் திருநாள் உலகப் பிரசித்தி பெற்றதாகும். அந்த நாளில் லட்சக்கணக்கான மக்கள் வந்து அந்த பலவகைப்பட்ட தீர்த்தத்தில் நீராடி புண்ணியத்தைப் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

சாரங்கபாணி பெருமாளிக்கெதிராக நதி தேவதைகள் அவரை வணங்கிக் கொண்டிருப்பதாகக் காட்சியளிக்கிறார்கள்.

இங்குதான் நாத முனிகள் நாலாயிரம் திவ்ய பிரபந்தத்தை தொகுத்தளித்தார் என்று கூறப்படுகிறது.

நாதமுனிகள் வீரநாராயணபுரம் என்னும் காட்டுமன்னார் கோயில் திவ்யதேசத்தில் அவதரித்தவராவார். இவர் ஒரு முறை இந்த திருக்குடந்தைக்கு வந்து சாரங்கபாணியை தரிசித்துக் கொண்டிருக்கும் போது, வைணவர்கள் 'ஆராவமுதே' என்று தொடங்கும் திருவாய் மொழியை இசையமைத்து பாடிக் கொண்டிருப்பதாகக் கேட்டு, மனமகிழ்ந்து, அந்த ஓராயிரம் பாடலை கேட்க விரும்பினார். அதற்கு வைணவர்கள் நம்மாழ்வார் அவதரித்த திருக்குருகூரை சென்றால் கேட்கலாம் என்று கூற நாதமனிகள் அங்கு சென்று கண்ணி நுண்சிறுத்தாம்பு பாசுரத்தை பண்ணிரண்டாயிரம் தடவை பாட, நம்மாழ்வார் இவர் முன்தோன்றி, "நாம் இயற்றிய திருவாய் மொழி மட்டுமல்ல, மற்றைய ஆழ்வார்கள், மங்களா சாசனம் செய்த மூவாயிரம் பாடல்களையும் சேர்த்து தொகுக்க" என்று கூற, நாதமுனிகள் திருக்குடந்தை வந்து நாலாயிரம் திவ்ய பிரபந்தத்தை தொகுத்ததாகக் கூறலாம்.

திருக்குடந்தையில் சாரங்கபாணி உத்தான சமானத்தில் காட்சியளிக்கிறார். உத்தான சயனம் என்றால் 'படுத்திருந்தால் எழுந்திருக்க முயலும் நிலை' என்று கூறுவர்.


திருமழிசையாழ்வார் இவரை மங்களா சாசனம் செய்யும் போது,

"இலங்கைமன்ன னைந்தொடைந்து
பைந்தலைநி லத்துக,
கலங்கவன்று சென்றுகொன்று
வென்றிகொண்ட வீரனே
விலங்குநூலர் வேதநாவர்
நீதியான கேள்வியார்
வலங்கொளக்கு டந்தையள்கி
டந்தமாலு மல்லையே" (807)



என்று தொடங்கி,

"நடந்தகால்கள் நொந்தவோ
நடுங்குஞால மேனமாய்
இடந்தமெய்கு லுங்கவோவி
லங்குமால்வ ரைச்சுரம்
கடந்தகால்ப ரந்தகாவி
ரிக்கரைக்கு டந்தையுள்
கிடந்தவாறே முந்திருந்து
பேசுவழி கேசவனே" (812)



என்று பாடியபோது, சாரங்கபாணி பெருமாள் இவரது திருச்சந்த விருத்தம் கேட்டு படுத்திருந்தவாறு எழுந்திருந்து அவருக்குச் சிறப்பாகக் காட்சி தந்தார். ஆகவே பெருமாள் இக்கோயிலில் உத்தான சயனத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

திருப்பதி சீனிவாசப் பெருமாள் மகாலட்சுமியோடு விளையாட்டுக்காக பயந்தவர் போல் நடித்து, இத்திருத்தலத்தில் வந்து மறைந்திருந்ததாக ஒரு புராணக் கதை கூறுகிறது.

இந்த கோயிலை ஆனந்தமாகத் தரிசித்த நான் பிறகு,

**"குடந்தைசா ரங்கபாணி கும்பிடச் சென்றால்
கிடந்தெழுந்த காட்சி கிடைக்கும் - அடடாபோ
பன்னிரெண்டாம் ஆண்டு மகாமகம் நீராட
இன்னலெல்லாம் போகும் எழுந்து"**

என்று பாடி வந்தேன்.

திவ்யதேசம் - 13



திருவிண்ணகர்
(உப்பிலியார் கோயில்)

மூலவர் - ஒப்பிலியப்பன் - ஒப்பற்றவன்
சீனிவா:ன்
வெங்கடாசலபதி போல அதே
தோற்றத்தில் நிற்கும் கோலம்
ஒப்பிலியப்பன் வலக்கை
வைரங்களால்
பொறிக்கப்பட்டது
கிழக்குத் திருமுகம்

தாயார் - பூதேவி - பூமிநாச்சியார்
பெருமாளை வலதுபுறம்
கீழே மண்டியிட்டு வணங்கும்
திருக்கல்யாணக் கோலம்

தீர்த்தம் : அகோராத்ர புட்ககணி
ஆர்த்தி புட்கரணி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1448-77, 1855, 2080, 2673 (72), 2674 (113)
பேயாழ்வார் : 2342, 2343
நம்மாழ்வார் : 3249 - 59
மொத்தம் : 47 பாசுரங்கள்



"பாண்டேன் வண்டுறை யும்குழ
லார்கள்பல் லாண்டிசைப்ப
ஆண்டார் வையமெல் லாம்அர
சாகிமுன் னாண்டவரே
மாண்டர் ரென்றுவந் தார்அந்
தோ!மனை வாழ்க்கைதன்னை
வேண்டேன் நின்னடைந் தேன்திரு
விண்ணகர் மேயவனே" (1462)

என்று திருமங்கையாழ்வார் இத்தலத்தைப் பாடுவார்.




திருப்பதி வெங்கடாசலத்தைப் போலவே இங்கே உப்பிலியப்பன் காட்சி தருவதைக் காணலாம். திருப்பதிக்குச் செல்ல வேண்டி பிரார்த்தனை செய்து கொண்டவர்கள் போக முடியாமல் போனால், இங்கு வந்து பிரார்த்தனை செய்தால் தப்பில்லை என்று சொல்லப்படுகிறது.

இக்கோயில் பிரசாதத்தில் உப்பு சேர்க்காமையால் இதற்கு உப்பிலியப்பன் என்றும் கூறுவர்.

இக்கோயிலுக்குள் உப்புள்ள பண்டங்களை கொண்டு சென்றால் நரகம் கிடைத்து பாவியாவர் என்று கூறுவார்கள்.

ஒப்பாம் திருப்பதிக்கு! ஒப்பில்லா கோயிலில்
உப்பில்லா பண்டம் உணவாகும் - செப்புவார்
உப்பிலி யென்னுமிவர் ஒப்பிலி யப்பனாவார்
சொப்பனத்தில் எப்போதும் சொல்.

திவ்யதேசம் - 14



திருநறையூர்
(நாச்சியார் கோவில்)

மூலவர் : சீனிவாசன், திருநறையூர் நம்பி, வாசுதேவன் என்றும் கூறுவர்.

தாயார் : நம்பி நாச்சியார் பெருமாள் பக்கத்தில் திருமணக் கோலத்தில் காட்சி தருவார். இதற்கு நாச்சியார் கோயில் என்ற பெயரே சிறப்பாக விளங்குகிறது.

இங்கே பெருமாள் நாச்சியார் தாயாரை சங்கர்சணன், பிரத்தியுமனன், அநிருத்தன், புருடோத்தமன், வாசுதேவன் என்ற ஐந்து உருவங்களில் திருமணம் செய்து கொள்வது குறிப்பிடத்தக்கதாகும்.

மங்களாசாசனம்:

திருமங்கையாழ்வார் : 1078, 1329, 1470, 1478-1577, 1611, 1659, 1852, 2067, 2068, 2673(71), 2674(73) (133) - 110 பாசுரங்கள்.

இந்த கோயில் கும்பகோணத்திலிருந்து 10 கிலோமீட்டர் தூரத்திலுள்ளது. உப்பிலியப்பன் கோயிலிலிருந்து நகரப் பேருந்தில் செல்லலாம். ஆட்டோவிலும் செல்லலாம்.

துளசி திருமத்நாராயணன் அருளைப் பெற விரும்புகிறாள். அதற்கு நாராயணன் குடந்தையை அடுத்த திருவிண்ணகரம் சென்று துளசி செடியாக மாறி தவமிருக்கக் கூறுகிறார். அவ்வாறே துளசி தவமிருக்கிறது.

அப்போது லட்சுமிதேவி ஒரு குழந்தையாகப் பிறக்கிறார். அப்போது அங்கு வந்த மார்க்கண்டேய மகரிஷி அந்த குழந்தையைப் பார்த்து, எடுத்து, தானே வளர்க்கிறார்.

குழந்தைக்கு ஐந்து வயதானபோது திருமந் நாராயணர் முனிவரிடம் விளையாட்டுகாட்ட, ஒரு நோய்வாய்ப்பட்ட, கண்கள் இருண்ட, தள்ளாடும் ஒரு முதியவராக கோல் ஊன்றிக் கொண்டு அங்கு வருகிறார். வந்தவர், அந்த குழந்தையைப் பார்த்து விட்டு, மார்க்கண்டேய முனிவரிடம் அந்த குழந்தையை தனக்கு மணம் முடித்துத் தர வேண்டுகிறார். அதைக்கேட்டு அதிர்ச்சி ஆகிறார் முனிவர். ஆனால் முதியவரோ பிடிவாதமாகத் திரும்ப திரும்ப அந்த குழந்தையைத் திருமணம் செய்து

கொடுக்க வற்புறுத்துகிறார். அப்போது மார்க்கண்டேய மகரிஷி என்ன செய்வதென்று தெரியாமல் தலைமேல் கைவைத்துக் கொண்டு 'நாராயணா' என்று கூப்பிடுகிறார்.

அப்போது திருமண் நாராயணர் அவர் முன் தோன்றி, மார்க்கண்டேய மகரிஷியே முதியவராக வந்தது யாமே! இந்த சிறுமி மகாலட்சுமி. இவளை மணம் புரியவே யாம் வந்தோம் என்று கூறி லட்சுமியை ஒரு அழகிய மணப்பெண்ணாக மாற்றி, மணமுடிக்கிறார்.

அதற்குப் பிறகு நாராயணர் மாக்கண்டேய மகரிஷியைப் பார்த்து, "மகரிஷியே இந்த பெண் உப்பிட்டு சமைத்தாலும், உப்பின்றி சமைத்தாலும் தப்பின்றி அது சுவையாகக் காணும்" என்று அருளினார்.

அதுமுதல் இந்த தலம் உப்பிலியாபுரம் என்று மாறியதோடு, இங்கு சமைக்கப்படும் எல்லா சமையலும் உப்பின்றியே சமைக்கப்படுகிறது.

இந்த கோயிலில் 16 கோபுரங்கள் பெரிதாக உள்ளன. இங்கு கருட பறவைகள் நிறைய உலாவி வந்தன. அவைகள் இறைவனடி சேர்ந்த பிறகு, இங்கேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இங்கு அந்த கல்கருட சேவைத் திருநாள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. கருட சேவையின் போது அதன் 4 சன்னதியில் தொடங்கி, பிறகு அது 64 பேராக வாசலில் எழுந்தருளும் காட்சி சிறப்பாக இருக்கும்.

இந்த கோயிலில் 7 வியாழக்கிழமை தொடர்ந்து வந்து கருட பகவானை அர்ச்சனை செய்து கும்பிட்டு வந்தால், நாம் வேண்டிய பிரார்த்தனைகள் நிறைவேறும் என்பது நம்பிக்கை ஆகும். இங்கு மார்கழி மாதம் பிரமோத்சவம் சிறப்பாக நடக்கும்.

திருமங்கையாழ்வாருக்கு பெருமாள் இங்கே காட்சி தந்து உபதேசம் செய்துள்ளார். அதாவது திருமங்கையாழ்வார் இறைவனுடைய பரமபதம் சென்றடைய விருப்பம் கொள்ள, பெருமாள் அதற்கு "பரமபதத்தால் என்ன இருக்கிறது? அதன் சிறப்பெல்லாம் நறையூரிலேயே இருக்கிறது" என்று கூற இந்த நறையூரின் சிறப்பை மட்டும் திருமங்கையாழ்வார் 100 பாசுரங்கள் பாடியுள்ளார்.

இந்த நூறு பாசுரங்களில் ஒரு சில பாடல்கள் ஆராய்ச்சிக்குள்ளவைகளாக இருக்கின்றன. அதாவது 'அம்பரமும்' என்ற தலைப்பில் வரும் திருநறையூர் - 3 ஆம் பாசுரத்தில் தொடங்கும் 1498 ஆம் பாசுரத்திலிருந்து 1507 ஆம் பாடல் வரை 10 பாடல்களில் சோழன் என்ற பெயர் வருகிறது. அது திருநறையூர் சோழ நாட்டில் இருப்பதால், சோழன்தான் மன்னனாக இருப்பான் என்று சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. குறிப்பாக அதில் கோச்செங்கணான் என்ற பெயர் வருகிறது. அதுதான் ஆய்வுக்கு ஆட்கொள்ளும் பேராக இருக்கிறது.

அதாவது,

"அம்பரமும் பெருநிலனும் திசைக ளெட்டும்
அலைகடலும் குலவரையும் உண்ட கண்டன்
கொம்பமரும் வடமருத்தி விலைமேல் பள்ளி
கூடினான் திருவடியே கூடுகிற்பீர்
வம்பவிழும் செண்பகத்தின் வாசமுண்டு
மணிவண்டு வகுளத்தின் மலர்மேல் வைகு
செம்பியன்கோச் செங்கணான் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின் களே" (1498)

என்று திருமங்கையாழ்வார் தொடங்குகிறார். பிறகு அந்த சோழன் என்ற பெயர் தொடர்ந்து 9 பாடல்களிலும் வருகிறது.

அதேபோல புறநானூற்றிலே ஒரு கோச் செங்கணான் வருகிறான். அவனும் சோழ மன்னனே ஆவான்.

"குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரிஇய
கேளல் கேளீர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரத் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே"

என்று புறநானூற்றில் ஒரு பாடல் வருகிறது.

சேரன் கணைக்கால் இரும்பொறை என்பவன் சேர நாட்டை ஆண்டு வந்தான். இவன் புலவர்களாலும் சான்றோர்களாலும் கோச்சேரமான் என்னும், சேரமனை என்றும் சிறப்பாகப் பாடப்பட்டவன். போர்த்திறன் பெற்றவன். தொண்டி இவனது தலைநகர். இங்கே அவனுக்கு ஒரு பெரிய கோட்டையிருந்தது. அந்த கோட்டையில் மூவன் என்ற அரசனை போரில் கொன்று, வென்று, அவன் வாயிலிருந்த பல்லைப்பிடுங்கி அந்த கோயில் கோட்டை வாயிற்கதவில் பொருத்தி வைத்தானாம் சேரன்.

அப்படி வீரம் சொறிந்த சேரனுக்கு, பக்கத்தில் சோழ நாட்டையாண்ட சோழன் செங்கணானுக்கு அடிக்கடி போர் நடக்குமாம். போரில் சோழன் செங்கணானனே வெற்றி பெறுகிறான். கடைசிப் போரிலும் சேரன் கணைக்கால் இரும்பொறை தோற்றுப் போய் சிறையில் அடைக்கப்படுகிறான்.

சிறையில் சிறைக் காவலர்களை சேரன் குடிக்கத் தண்ணீர் கேட்க, அவர்கள் அவனை கேலி பேசி, காலதாமதமாகத் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க, அதை குடிப்பதை விட, இறப்பதே மானம் என்று கூறி இறந்து போகிறான். அப்போது பாடப்பட்ட பாடலே மேற்குறிப்பிட்ட புறநானூற்றுப் பாடலாகும்.

அந்த சோழன் செங்கணானுக்குத் திருமங்கையாழ்வார் பாடிய சோழன் செங்கணானுக்கும் ஒரே காலமா, இருவரும் ஒன்றா? என்பதே எனது ஆய்வுக் கேள்வியாகும்.



அதாவது புராணம் பொய் என்று புனைவோர் உண்டு. புறநானூற்று புலவர்களோ, மன்னர்களோ பொய்மை அல்ல! அப்படியென்றால் இதைப்பற்றிக் கூட நாம் ஆராய்ந்து பார்க்கலாம் என்பதற்கே இதை எழுதினேன்.

குழந்தை இறந்தாலும், அல்லது ஊனமாகப் பிறந்தாலும் அது வீரத்திற்கு ஆகாது எனக்கூறி, வீரத்தின் அடையாளமாக அந்த குழந்தையை வாளால் வெட்டிப் புதைப்பர் வீரசேரமக்கள். அப்படி வாள் படாமல் நாய்போல் சங்கிலியால் பிணைக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு, கேவலமாக கொண்டு வந்து கொடுத்த தண்ணீரைக் குடித்து உயிர் வாழ்வதைவிட, சாவதே மேல் எனக்கூறி சேரன் மாண்டான் என்பதே அந்த பாட்டின் பொருளாகும்.

திருநறையூர் சென்ற நான் சீனிவாசனையும், நாச்சியார் தாயாரையும் தரிசித்து, ஒரு பாடல் பாடித் திரும்பினேன்.

"திருநறையூர் காணும் திருநறையூர் நம்பி
திருநாச்சி யார்கோயில் என்பார் – பெரும்புகழ்
கல்கருட வாகன கண்கவர் காட்சிதான்
நல்லருள் பெற்றேன் நயந்து"

திவ்யதேசம் - 15



மூலவர் : சாரநாதன்

தாயார் : சாரநாச்சியார்

தீர்த்தம் : சாரபுட்கரணி

<u>மங்களாசாசனம்:</u>

திருமங்கையாழ்வார் : 1578-87, 1853, 2673 (72), 2694 (115)

திருச்சேறை


இந்த கோயில் கும்பகோணத்திலிருந்து 24 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. முன்னர் பார்த்த நாச்சியார் கோயிலிருந்து 15 கிலோமீட்டர் தூரம் திருவாரூர் வழித்தட பேருந்தில் செல்லலாம். குடவாசல் நகருக்கு பக்கமுள்ளது.

இங்கே பிரம்மாவும், விஷ்ணுவும் ஒன்றாக இருப்பதைக் காணலாம்.

தைப்பூசத் திருநாளில் இங்கே திருச்செல்வி, பூதேவி, நீலாதேவி, மகாலட்சுமி, சாரநாயகி ஆகியோர் ஒன்றாக காட்சி கொடுப்பது சிறப்பாகும்.

“உண்ணாது வெங்கூற்றம் ஓவாது
பாவங்கள் சேரா, மேலை
விண்ணோரும் மண்ணோரும் வந்திறைஞ்சும்
மென்தளிர்போ லடியினானை
பண்ணார வண்டியம்பும் பைம்பொழில்சூழ்
தண்சேறை யம்மான் றன்னை
கண்ணாரக் கண்டுருவிக் கையாரத்
தொழுவாரைக் கருதுங் காலே” (1585)

என்று திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார்.



குளக்கரையில் காவேரியம்மனுக்கு ஒரு சன்னதி உண்டு. இந்த தலத்திலுள்ளதைப் பூசத்தன்று தேரில் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி, நீலாதேவி, மகாலட்சுமி, சாரநாயகி என்ற 5 தாயாருடன் காட்சி கொடுப்பது விசேடம்.

இந்த தலத்தின் கெட்டியான மண்ணைக் கொண்டு ஒரு குடம் செய்து அதில் வேதங்களை வைத்து காத்ததாக ஒரு கதையுண்டு.

சாரநாதனை வணங்கும் அடியார்க்கு துன்பமே கிடையாது என்பது அதன் பொருளாகும்.

நாச்சியார் கோயில் சென்ற நான் அப்படியே அதற்கு 10 கிலோமீட்டர் தூரத்திலுள்ள சாரநாதனை தரிசித்து விட்டு, வெண்பா பாடி வந்தேன்.



"திருச்சேறை சாரநாதன் திருநின்ற கோலம்
திருச்செல்வி ஐந்துபேர் நிற்க - அருள்வார்
அருள்வேண்டி நல்ல அறிவும் கொடுக்க
திருவடி தாழ்ந்தேன் விரைந்து"

திவ்யதேசம் - 16



மூலவர் : பக்தவச்லப் பெருமாள், பத்தராவிப் பெருமாள், நிற்கும் திருக்கோலம், மிகப்பெரிய திருவுருவம், கிழக்குத் திருவுருவம்.

தாயார் : அபிஷேக வல்லி

தீர்த்தம் : தர்சன புட்கரிணி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1638-47, 1848, 2008, 2673 (71), 2674 (116)

திருக்கண்ணமங்கை

மொத்தம் - 14 பாசுரங்கள்



"மண்ணாடும் விண்ணாடும் வானவரும்
தானவரும் மற்றுமெல்லாம்
உண்ணாத பெருவெள்ளம் உண்ணாமல்
தான்விழுங்கி யுய்யக்கொண்ட
கண்ணாளன் கண்ணமங்கை நகராளன்
கழல்சூடி, அவனையுள்ளத்
தெண்ணாத மானிடத்தை யெண்ணாத
போதெல்லா மினியவாறே"

என்று திருமங்கையாழ்வார் 2008 ஆம் பாடலில் பாடுவார்.

கோவிலுக்கு வேண்டிய விமானம், மண்டபம், அரண்யம், சிரசு, தலம், ஆறு, நகரம் ஆகிய ஏழு அம்சங்களும் அழகாகயிருப்பதால், இதற்கு சப்தாமிருத்தலம் என்ற பெயரும் உண்டு. இந்த தலத்தில் ஒரு இரவு தங்கினாலும் கூட மோட்சம் கிடைக்கும் என்பது பெரியோர் வாக்கு. தாயார் சன்னதியில் தேன்கூடு போன்ற ஒரு புனிதப் பொருளுக்கு தினந்தோறும் பூசை நடந்து வருகிறது. அதன் காரணம் என்னவென்று தெரியவில்லை. இங்குள்ள சிலைகள் அற்புதமானவை. குறிப்பாக இங்குள்ள சிற்பங்களில் வைகுண்டநாதன் சிலையும், கருடன் மேல் எழுந்தருளியிருக்கும் மகாவிஷ்ணுவின் சிலையும் மிக அழகானவையாகும்.

நாதமுனிகளின் சீடரான திருக்கண்ணமங்கையாண்டான் இங்கு ஆனித்திருவோணத்தன்று அவதரித்து துளசி மாலையிட்டு வழிபாடு செய்து வந்தார். திருமகளின் மூன்று திருநாமங்களோடு கூடிய மந்திரத்தை இத்தலத்தில் ஓதினால் சித்தியடைவர் என்று கூறுவர். இங்கு லட்சுமிதவம் செய்ததால் லட்சுமிவனம் என்றும் பெயரும்ண்டு.



சிவபெருமான் இத்திருத்தலத்தில் நான்கு உருவங்கள் கொண்டு நான்கு பக்கங்களையும் காத்து வருகிறார்.

இந்த தலத்தை மனம்குளிர தரிசனம் செய்த நான், பிறகு வெண்பாவில் திருக்கண்ண மங்கையைப் பாடினேன்.

இந்த கோயில் கும்பகோணத்திலிருந்து 40 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. கும்பகோணம் திருவாரூர் பேருந்தில் கோயிலுக்குச் செல்லலாம்.


"திருக்கண்ண மங்கை திருக்கோயில் சென்று
கருவண்ண தெய்வத்தைக் கண்டேன் - உருகிட
வெண்ணெயில் பொங்கலிட்டு வேண்டுதல் செய்தபோது
கண்ணனைக் கண்டேன் கனிந்து"

கும்பகோணம் நவக்கிரக கோயில்

சூரியனார் கோயில்	-	கும்பகோணத்திலிருந்து 15 கி.மீட்டர் தூரம்.
சுக்கிரன்	-	கஞ்சனூர் 18 கி.மீ. தூரம்
வியாழன்	-	ஆலங்குடி 17 கி.மீ. தூரம்
இராகு	-	திருநாகேசுவரம் 5 கி.மீ. தூரம்

தவிர அறுபடை வீடான சுவாமிமலை, இந்திரன் அமைத்த கடல்நுரை, வெள்ளைப் பிள்ளையார் உள்ள திருவலஞ்சுழி, திருஞான சம்பந்தருக்கு ஈசுவரன் முத்துப்பந்தல் தந்த பட்டீசுவரம் ஆகிய முக்கிய கோயில்களும் கும்பகோணத்திற்கு பக்கத்திலேயே இருக்கிறது.

திவ்யதேசம் - 17



திருக்கண்ணபுரம்

மூலவர் : நீலமேகப் பெருமான், சௌரிராசன், நிற்கும் திருக்கோலம், கிழக்கே திருமுகம்.

உற்சவர் : சௌரிராச பெருமாள்

தாயார் : கண்ணபுர நாயகி (ஸ்ரீதேவி, பூதெவி, ஆண்டாள், பத்மினி)

தீர்த்தம் : நித்ய புட்கரிணி

மங்களாசாசனம் :

பெரியாழ்வார் : 71, ஆண்டாள் : 535,

குலசேகராழ்வார் : 719-729

திருமங்கையாழ்வார் : 1648-1747, 2067, 2078, 2673 (72), 2674 (90, 13),

நம்மாழ்வார் : 3656 - 3666

மொத்தம் : 128 பாசுரங்கள்

"காட்டில் வேங்கடம் கண்ண புரநகர்
வாட்ட மின்றி மகிழ்ந்துறை வாமனன்
ஓட்ட ராவந்தென் கைப்பற்றி, தன்னொடும்
கூட்டு மாகில்நீ கூடிடு கூடவே" (535)

என்று ஆண்டாளும்,

"தேவரையு மசுரையும்
திசைகளையும் படைத்தவனே
யாவரும்வந் தடிவணங்க
அரங்கநகர்த் துயின்றவனே
காவிரிநல் நதிபாயும்
கணபுரத்தென் கருமணியே,
ஏவரிவெஞ்சிலைவலவா!
இராகவனே! தாலேலோ"

என்று குலசேகராழ்வார் 728 ஆம் பாடலிலும்,

"சரணமா கும்தன தாளடைந் தார்க்கெலாம்
மரணமா னால்வைகுந் தம்கொடுக் கும்பிரான்
அரணமைந் தமதிமதிள் சூழ்திருக் கணபுரத்
தரணியா ளன்தன தன்பர்க்கன் பாடுமே" (3660)

5

என்று 3660 பாடலில் நம்மாழ்வாரும் இத்தலத்தைப் பாடுவார்.

“திருக்கண் ணபுரம் சௌரிராச கோயில்
பெருமாள் திருக்காட்சி பெற்றேன் – திருப்புகலூர்
கண்ணபுர ராயாக் காப்பாற்றும் தாயாராகி
எண்ணியதைச் செய்வான் எழுந்து”

இந்த திருத்தலத்திற்கு கும்பகோணத்திலிருந்து, நாகப்பட்டிணம் – நன்னிலம் சாலையிலுள்ள திருப்புகலூரில் இறங்க வேண்டும். திருப்புகலூர் முருகநாயனார் அவதாரத்தலமாகும். அங்கிருந்து 2 கிலோ மீட்டர் மேற்கே நடந்து சென்றால் திருக்கண்ணபுரம் நீலமேகப் பெருமாள் கோயிலை அடையலாம்.

இந்த கோயில் பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், குலசேகராழ்வார், நம்மாழ்வார், ஆண்டாள் ஆகியோர் மங்களாசாசனம் செய்த கோயிலாகும்.

இந்த கோயில் பல சிறப்புக்கள் பெற்றதாக பூஜை செய்த அர்ச்சகர் கூறினார். இந்த கோயில் திருமங்கையாழ்வாருக்கும், திருமந்திரம் உபதேசம் செய்த இடமாகும்.

ரங்கப்பட்டர் என்ற அர்ச்சகர் பூஜைக்கு வந்த சோழமன்னரிடம் பெருமாளுக்கு திருமுடி வளரும் காட்சியை காட்டுவதாக வாக்களிக்க, அதை நிறைவேற்ற பெருமாள் தனது தலையில் திருகுழலிகற்றை வளர்த்து, கோலத்தை காட்டி அர்ச்சகர் வாக்கை காப்பாற்றி அருளினார். அதனால் இப்பெருமாளுக்கு சௌரிராஜ பெருமாள் என்று பெயர் வந்ததாம்.

திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் பாடிய ‘பாடல்களில்’ இந்த திருக்கண்ணபுரம் சௌரிராஜ பெருமாளை மட்டும் எட்டாம் பத்தில் நூறு பாடல்கள் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

வீகடாஷன் என்ற அரக்கன் மகரிஷிகள் தவத்திற்கு இடையூறு செய்துவர, அந்த மகாரிஷிகள் தங்களை காப்பாற்ற பெருமாளை வேண்ட, இத்தல பெருமாள் அந்த அரக்கனை தன் சக்ராயுதத்தால் கொன்ற இடமும் இதுவேயாகும்.




தவிர முனையதரையர் என்ற பெருமாள் பக்தர் தனது மனைவி சமைத்த பொங்கலை அர்த்தஜாமத்திற்குப் பிறகு பெருமாளுக்கு படைக்க முடியாமல் போக, மானசீகமாக பக்தியுடன் அதை படைக்க, பெருமாள் அதை மூடிய கோயிலில் மணியோசையுடன் வெண்பொங்கல் வாசனையுடன் ஏற்றுக் கொண்டார். அதுமுதல் இந்த கோயிலில் அர்த்தஜாம பொங்கல் நிவேதனம் செய்யப்பட்டது. அதற்கு அன்று முதல் முனியோதரம் பொங்கல் என்ற பெயர் உண்டானது என்றும் கூறுவர்.

முருகநாயனார் அவதரித்த திருப்புகலூரில் சுந்தரர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடிய சிவாலயம் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

63-நாயன்மார்களில் திருநீலநக்கர், செறுத்துணை நாயனார், சிறுத்தொண்டநாயனார், முருகநாயனார் ஆகியோர் இந்த எல்லைக்குள் உள்ளன.

திவ்யதேசம் - 18



திருக்கண்ணங்குடி

மூலவர் : லோகநாதன் தாமோதர நாராயண பெருமாள்

தாயார் : லோகநாயகி, அசவிந்த வல்லி. தாமோதர பெருமாள் இடது கரத்தை இடுப்பில் வைத்திருப்பார்.

தீர்த்தம் : ராவண புட்கரிணி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1748-1757

மொத்தம் : 10 பாசுரங்கள்

திருக்கண்ணங்குடி திருவாரூரிலிருந்து பிரிந்து நாகப்பட்டிணம் செல்லும் வழியில் 15 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. அந்த வழியில் கீவளூருக்கு அடுத்த ஆழியூரில் இறங்கி காட்டுப்பாதையில் 3 கிலோ மீட்டர் தூரம் நடக்க வேண்டும்.



"வங்கமா முந்நீர் வரிநிறப் பெரிய
வாளர வினணை மேவி
சங்கமா ரங்கைத் தடமல ருந்திச்
சாமமா மேனியென் தலைவன்
அங்கமா றைந்து வேள்விநால் வேதம்
அருங்கலை பயின்று, எரிமூன்றும்
செங்கையால் வளர்க்கும் துளக்கமில் மனத்தோர்
திருக்கண்ணங் குடியுள்நின் றானே" (1748)

என்று திருமங்கையாழ்வார் 1748 ஆம் பாசுரத்தில் இத்தலத்தைப் பாடுவார்.

திருமங்கையாழ்வார் திருவரங்கம் அரங்கநாதர் திருப்பணிகள் செய்த போது, அதனுடைய கோபுர பிரகாரத்திற்கு நாகப்பட்டிணத்திலிருந்த புத்த கோயிலின் தங்க விக்ரகத்தை தன் சீடர்களின் உதவியால் தந்திரமாக எடுத்து வைத்து, செல்லும் வழியில் இந்த கோயிலில்தான் புதைத்து வைத்ததாகக் கூறுவர்.

காயாமகிழ், உறங்காபுளி, தேறாவழக்கு, ஊறாக்கிணறு, உடையது திருக்கண்ணங்குடி என்று கூறுவர்.

கோவை பேரூர் பட்டீசுவரர் திருக்கோயிலுக்கு பல சிறப்புகள் உண்டு. அதில், இறவாத பனை, பிறவாத புளி, எலும்பு கல்லாவது, புழுக்காத சாணம், வலதுகாது மேல் நோக்கிய நிலையில் இருப்பது என்ற சிறப்புகளாகும்.

அதில் பிறவாத புளி என்பது இங்குள்ள புளியமரம் ஒரேயொரு பிறப்புக்கு மட்டும் வரம் பெற்றதாகும். அதாவது புளியமரத்தில் விதைகளை விதைத்தால் மரம் வராது. வெளிநாட்டு விஞ்ஞானிகள் வந்து பரிசோதனை செய்தும் விதை முளையவில்லை.

அதுபோல திருக்கண்ணங்குடியில் உறங்காபுளி என்ற சிறப்பு இருக்கிறது. உறங்காபுளி, தேறாவழக்கு, ஊறாக் கிணறு போன்றவை இப்போது இல்லை. காயாமகிழ் என்று காய்ந்து பட்டுப் போகாத தலவிருவுமாகிய மகிழமரமாகும்.

இந்தக் கோயிலில் மூலவராகிய லோகநாத சியாமள மேனிப் பெருமாளும், உத்சவராகிய தாமோதர நாராயணனும் ஒரே முகத்தோற்றத்திலிருப்பது அதிசயமாகும்.

இந்த கோயில் புராண வரலாற்றில், வசிஷ்டர் கண்ணன் மேல் மிகவும் பக்தி கொண்டு, அவரை உருகி தண்ணீராகாதபடி வெண்ணெயால் உருவம் செய்து வணங்கி வந்தாராம். அதற்காக கோபாலன் உருவில் விளையாடி வந்த கண்ணன் இங்கே வசிஸ்டருக்கு காட்சி தந்ததால் இதற்கு திருக்கண்ணங்குடி என்ற பெயர் ஏற்பட்டதாம்.

எனது 108-திவ்யதேச யாத்திரையில் இறைவன் இருப்பதற்கான ஆதார நிகழ்ச்சிகள் சில திருத்தலங்களில் நடந்த நிகழ்வுகளை இங்கே சொல்லியே ஆகவேண்டும்.

தஞ்சாவூர் - நாகபட்டிணம் மாவட்ட திருத்தலங்களை நான் 4-முறைக்கு மேலாகச் சென்றுதான் பூர்த்தி செய்தேன். கடைசியாக நான் எனது குடும்ப நண்பர் ஒருவரின் திருமணத்திற்கு சென்றுவிட்டுத்தான் யாத்திரையைத் தொடர்ந்தேன்.

அன்று ஞாயிற்றுக்கிழமை, முகூர்த்த நாள். காலை 8.00 மணிக்கு திருமணத்தில் கலந்துவிட்டு நானும் எனது திரைப்பட நண்பர் இயக்குனர் தண்டபாணியும் திருச்சி கைலாசபுரத்திலிருந்து தஞ்சாவூர் பேருந்து நிலையம் அடைந்தேன்.

திருக்கண்ணங்குடிக்கு தஞ்சாவூரிலிருந்து நாகப்பட்டிணம் செல்லும் பேருந்தில் செல்ல வேண்டும். திருவாரூர் சென்று அங்கிருந்து திருவாரூர் - நாகப்பட்டிணம் பேருந்தில் செல்லலாம். அடிக்கடி பேருந்து சென்று வருகிறது. அந்த பாதையில் இடையே ஆழியூரில் இறங்க வேண்டும். அங்கிருந்து 3 கிலோமீட்டர் காட்டுப்பாதையில் நடந்து கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

அன்று தஞ்சாவூர் பேருந்து நிலையத்தில் கூட்டம் அலைமோதியதால் எங்களால் நாகப்பட்டிணம் திருவாரூர் போன்ற பேருந்தில் ஏறி இடம் பிடித்து செல்ல முடியவில்லை. தஞ்சாவூர் - திருவாரூர் 60 கிலோமீட்டர். பேருந்தில் நின்றும் போகமுடியாத நிலை.

எனக்கு திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. தஞ்சாவூரிலிருந்து மன்னார்குடி சென்று, அங்கிருந்து திருவாரூர் சென்று, அங்கிருந்து நாகை வழியே செல்லும் பேருந்தில் ஆழியூர் அடையலாம் என்று முடிவு செய்து, அதன்படியே சென்றோம்.


ஆழியூர் பேருந்து நிறுத்தத்தில் இறங்கியபோது மணி மதியம் இரண்டு. நல்ல கடும் வெயில். மதியம் சாப்பாடும் சாப்பிடவில்லை. சரி ஆட்டோவில் செல்லலாம் என்று கேட்டால் ஐம்பது ரூபாய் என அநியாயமாக சொன்னார். அதற்குள் தண்டபாணி அவர்கள் நடந்தே செல்லலாம் என்றுகூறி இருவரும் நடக்கத் தொடங்கினோம்.

தண்டபாணி குடை கொண்டு வந்திருந்தார். குடையை விரித்து பிடித்துக் கொண்டு நடந்தோம். இருவருக்கும் பசியும், தாகமும் அதிகமாக இருந்தது. ஆனாலும் நடந்தோம்.

கொஞ்சதூரம் நடந்த போது, நான் தண்டபாணியைப் பார்த்து, "வரும்போது நமக்கு ஏதாவது ஒரு வாகனம் கிடைக்கும்' என்று கூறினேன். தண்டபாணி மௌனமாக நடந்து வந்தார்.

ஒரு நிமிடம் கடந்திருக்கும். எங்கள் பின்னாலே ஒரு ஆட்டோ வந்து கொண்டிருந்தது. அதற்குள் உட்கார்ந்திருந்தவர் 'எங்கே போறீங்க?' என்று கேட்டு, "ஏறிக் கொள்ளுங்கள்" என்று கூற, நாங்கள் ஏறி உட்கார்ந்தோம். நாங்கள் கோயில் பக்கம் சென்று இறங்கினோம்.

அப்போது அந்த ஓட்டுநர், 'சாமி கும்பிட்டு விட்டு உடனே திரும்புவதாகயிருந்தால் இந்த ஆட்டோவிலேயே போய் விடலாம்! நான் பத்து நிமிடத்தில் வந்துவிடுவேன்' என்று கூறிச்சென்றார்.



நாங்களும் பத்து நிமிடத்தில் தரிசனம் செய்தோம். நான் கோயிலின் வெளிப்புறத் தோற்றத்தை நிழற்படம் எடுத்துக் கொண்டேன்.

பத்து நிமிடத்தில் ஆட்டோ திரும்ப வந்தது. நாங்கள் ஏறி உட்கார்ந்து, ஆழியூர் பேருந்து நிறுத்தம் வந்து இறங்கிக் கொண்டோம்.


திருக்கண்ணங்குடி பெருமாள் எங்களுக்கு இப்படி உதவி செய்தது எங்கள் இறைநம்பிக்கைக்குச் சான்றாக அமைந்தது.

அந்த வகையில் இந்தக் கோயிலுக்கு நாங்கள் சென்ற போது பெருமாள் வழித்துணையாக வந்து, ஆட்டோவில் ஏற்றிச் சென்று உதவியது அதிசயமான உண்மை நிகழ்ச்சியாகும்.

**"தாமோ தரப்பெருமாள் தாள்திருக்கண் ணங்குடி
ஆமோதிக் கக்கண்டேன்! ஆங்கவர் - பூமியில்
கால்நடந்து செல்ல கண்டவர் தந்தார்
மேல்வண்டி யொன்று விரைந்து"**

**"கண்ணங்குடி மண்ணில் காயாப் புளியங்காய்
தண்ணீரும் ஊறாத் தலமாகும் - வெண்ணெய்
கண்ணன் விளையாடும் கண்ணங் குடிமண்ணாம்
புண்ணிய பூமிக்குப் போம்"**

திவ்யதேசம் - 19



திருநாகை (நாகப்பட்டிணம்)

மூலவர் : நீலமேகப் பெருமாள் கதையுடன் நிற்கும் திருக்கோலம் கிழக்கே திருமுகம்

உற்சவர் : சௌந்திரராசன்

தாயார் : சௌந்திரவல்லி, உற்சவத் தாயார், கஜலட்சுமியாகக் காட்சி

தீர்த்தம் : சார புட்கரிணி

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1758-67

மொத்தம் : 10 பாசுரங்கள்


"அன்னமும் கேழலும் மீனு மாய
ஆதியை நாகை யழகியாரை
கன்னிநன் மாமதிள் மங்கை வேந்தன்
காமரு சீர்க்கலி கன்றி, குன்றா
இன்னிசை யால்சொன்ன செஞ்சொல் மாலை
ஏழு மிரண்டுமொ றொன்றும் வல்லார்
மன்னவ ராயுல காண்டு மீண்டும்
வானவ ராய்மகிழ் வெய்துவரே"

என்று 1767-ஆம் பாடலில் திருமங்கையாழ்வார் பாடுவார்.

நாகைப் பகுதியில் ஒரு வனப்பகுதி. ஒரு சுரங்கத்தில் பாதாள உலக மன்னன் நாகராசாவின் மகள், மூன்று ஸ்தலங்களுடன் யார் கண்ணிலும் தென்படாமல் வசித்து வந்தாள். ஒருநாள் அவள் நாகை நீலமேகப் பெருமாளை தரிசிக்க வந்தாள், அப்போது சாலிசுகன் என்ற மன்னனும் பெருமாளைத் தரிசிக்க வந்தான். அவளைப் பார்த்த நாகராசா மகள் அவன்மீது மையல் கொள்ள, அவளது மூன்றாவது ஸ்தனம் மறைந்து போனது. அவளை பார்த்த மன்னனும் அவள்மீது காதல் கொண்டான். இருவரும் பெருமாளை வேண்ட, எந்தவித இடையூறுமின்றி திருமணம் நிறைவேறியது. குழந்தையும் பிறந்தது.

அந்த வகையில் பிள்ளைப் பேறில்லாதவர்கள் நாகை திருநீல பெருமாள் கோவிலுக்கு வந்தால் பிள்ளை பிறக்கும் என்று கூறுவர்.

நாகப்பட்டிணம் திருவாரூரிலிருந்து 25 கிலோ மீட்டர். ஆழியூர், திருக்கண்ணங்குடி பார்த்துவிட்டு ஆழியூரிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள நாகப்பட்டிணத்திற்கு திருவாரூர் - நாகப்பட்டிணம் பேருந்தில் செல்லலாம். மயிலாடுதுறையிலிருந்தும் வந்து தரிசிக்கலாம். 3 மணி நேரம் பேருந்து பயணநேரமாகும். ஊருக்குள்ளேயே இந்த கோயில் உள்ளது. பேருந்து கோயில் பக்கத்திலேயே நிற்கிறது.



இந்த கோயிலிலுள்ள நரசிம்மப் பெருமாளின் வெண்கலச் சிலை இரணிய விதத்தை விளக்குவதாகக் காணப்படுகிறது. ஒருகை பக்த பிரகலாதனின் தலைமேல் இருந்து ஆசீர்வதித்து காப்பது போலவும், மற்றொரு கை இரணியனை வதம் செய்வது போலவும் காணப்படுகிறது.

கோயிலை தரிசித்து விட்டு நான்,

"நாகைத் திருநீல மேகப் பெருமாள்கோப்
போகப் புறப்பட்டு போனபோது - தாகம்
பசியும் தணியப் பணிந்தேன் அவர்தாள்
கசிந்தது கண்ணீரும் கண்டு"


"நீலமேகப் பெருமாளே உம்மை நானும்
நினைத்திடுவேன் தொழுதிடுவேன் மழையை யூற்று
ஆலவிதை போட்டவுடன் வானம் ஓங்கி
ஆமைரம் நிழல்கொடுக்கும் ஊருக் கெல்லாம்
கோலமகள் மணமாகி காலம் சென்றும்
குழந்தையொன்றும் இல்லையென்றால் கொடுமை யன்றோ?
கோலமிட்டுக் கொண்டாட பிள்ளை வேண்டும்
கொடுப்பனென்று சொல்லிவிட்டேன் கருணை காட்டு"

என்று இரண்டு பாடல்கள் எழுதி, பாடிவிட்டு வந்தேன்.

பிள்ளைவரம் வேண்டுபவர்கள் இந்தப் பாட்டைப் பாடி நீலமேகப் பெருமாளை வேண்டலாம்.

63-நாயன்மார்களில் ஒருவரான அதிபத்தி நாயனார் நாகப்பட்டிணத்தில்தான் அவதரித்தார். காரைக்கால் அம்மையார் அருகிலுள்ள காரைக்காலில் அவதரித்தார். கோயில் - நாகைக்காரணம் காயாரோ கணேசுவரர் திருக்கோயில், காரைக்கால் அம்மையார் கோயில்.

திவ்யதேசம் - 20



திருத்தஞ்சை மாமணிக்கோயில்

மூன்று கோயில்களை உள்ளடக்கியது இந்த தலமாகும்!

தஞ்சை மாமணிக்கோயில்

மூலவர் : நீலமேகப் பெருமாள். வீற்றிருக்கும் கோலம் கிழக்கே திருமுகம்
தாயார் : செங்கமல வல்லி
தீர்த்தம் : அமிர்த தீர்த்தம்

மணிக்குன்றம்

மூலவர் : மணிக்குன்றப் பெருமாள். வீற்றிருக்கும் கோலம் கிழக்கே திருமுகம்
தாயார் : அம்புஜ வல்லி
தீர்த்தம் : இராம தீர்த்தம்

தஞ்சையாளி நகர்

மூலவர் : நரசிம்மர்
தாயார் : தஞ்சை நாயகி
தீர்த்தம் : ராம தீர்த்தம்
மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் 953, 1090, 1576 பூதத்தாழ்வார் : 2251
நம்மாழ்வார் 3139 மொத்தம் : 5 பாசுரங்கள்

"எம்பிரா னெந்தை யென்னுடைச் சுற்றம்
எனக்கர சென்னுடை வாணாள்,
அம்பினா லரக்கர் வெருக்கொள நெருக்கி
அவருயிர் செகுத்தவெம் மண்ணல்
வம்புலாஞ் சோலை மாமதிள் தஞ்சை
மாணிக் கோயிலே வணங்கி,
நம்பிகாள் உய்யநான் கண்டுகொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம்"

என்று 953 ஆம் பாடலில் திருமங்கையாழ்வாரும்,



"என்செய் கேனடி னேனுரை யீர்இதற்
கென்று மென்மனத் தேயிருக் கும்புகழ்
தஞ்சை யாளியைப் பொன்பெய ரோன்றன்
நெஞ்ச மன்றிடந் தவனைத்தழ லேபுரை
மின்செய் வாளரக் கன்றகர் பாழ்படச்
சூழ்க டல்சிறை வைத்துஇமை யோர்தொழும்
பொன்செய் மால்வரை யைமணிக் குன்றினை
அன்றி யென்மனம் போற்றியென் னாதே"

என்று 1576-ஆம் பாடலிலும் பாடுகிறார்.



பகவான் திருமால் தஞ்சக யானையைப் பிளக்க, நரசிம்ம அவதாரம் எடுத்து, அந்த யானையை நகங்களால் குத்தி கிழித்த போது, தஞ்சகன் வேண்டாம் என்று வேண்டிக் கொண்டான். அதனால் இந்த ஊருக்கு தஞ்சாவூர் என்று பெயர் வந்ததாம். தஞ்சை என்றும் அழைப்பர்.

பெருமாள் அதனால் இந்தக் கோயிலில் நரசிம்ம அவதாரம் எடுத்து காட்சியளிக்கிறார்.

தஞ்சை பேருந்து நிலையத்திலிருந்தோ, கும்பகோணம் பேருந்து நிலையத்திலிருந்தோ இங்கே வரலாம். வெண்ணாற்றங்கரை என்று கேட்டு வர வேண்டும். தஞ்சையிலிருந்து உள்ளூர் பேருந்து உண்டு. வெண்ணாற்றங்கரையில் இந்த மூன்று கோயில்களும் அருகருகே உள்ளன. மூன்று கோயில்களையும் தரிசித்த நான் அங்கேயே அமர்ந்து பாடல் எழுதினேன்.

"தஞ்சை மணிக்குன்றம் மாமணி நீலமேகம்
அஞ்சா நரசிம்மர் ஆலயம் - நெஞ்சில்
நிறைந்த திருக்கோயில் நிற்பார் பெருமாள்
திறக்கும் கதவு தினம்"

திவ்யதேசம் - 21



மூலவர் : ஜெகந்நாதன், தாதநாதன், விண்ணகரப் பெருமாள், வீற்றிருக்குலம் கோலம்

தாயார் : செண்பகவல்லி

தீர்த்தம் : நந்தி தீர்த்த புட்கரிணி

திருநந்திபுர விண்ணகரம் நாதன்கோயில்

"எண்ணில்நினை வெய்தியினி யில்லையிறை யென்றுமுனி
யாளர் திருவார்
பண்ணில்மலி கீதமொடு பாடியவ ராடலோடு
கூட எழிலார்
மண்ணிலிது போலநக ரில்லையென வானவர்கள்
தாம மலர்கள்தூய்,
நண்ணியுறை கின்றநகர் நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே"



என்று 1445 ஆம் பாடலில் திருமங்கையாழ்வார் திருவாய் மொழிவார்.

இந்த கோயிலின் சன்னதியில் இடது பக்க சுவற்றில் நந்தி இருக்கிறார். இந்த கோயிலில் அர்ச்சகர் மாலை நேரத்தில்தான் விளக்கேற்ற வருவார் என்று கூறப்படுகிறது.

பொதுவாகவே நான் பார்த்துவந்த 63-நாயன்மார்கள் சிவத்தலங்களிலும், இப்போது பார்த்து வந்த 108-திவ்யதேச வைணவக் கோயில்களிலும் பல கோயில்களில் அர்ச்சகர்கள் கிடையாது. பராமரிப்பும் கிடையாது. ஆனால் அந்த கோயில்கள் மிகப்பெரிய கோயில்களாக நமது கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் கோயில்களாக இருக்கின்றன. அரசும் சன்னிதானங்களிலும் இதைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

நந்தி இந்த இடத்தில் தவம் இருந்து சாபவிமோசனம் பெற்றதால், இதற்கு நந்திபுரம் என்றும், பெருமாளுக்கு நந்திநாதன் என்றும் பெயர்வந்ததாம். இது நந்திவர்மன் ஏற்படுத்திய ஊர் என்றும் கூறுவர். அதனாலும் இப்பெயர் என்பர்.

"நந்திபுர விண்ணகரம் நாதன்கோ யில்காண
முந்திப்போய் சென்றும் முடியவில்லை - விந்தையாய்
மூன்றாம் முறைதான் முகம்பார்த்துக் கும்பிட்டேன்
தோன்றியது ஞானத் தொடர்பு"

இந்த கோயிலுக்கு கும்பகோணத்திலிருந்து கொற்கை என்னும் கொருக்கை ஊருக்குச் சென்று, அங்கிருந்து 2.5 கிலோமீட்டர் நடந்து செல்ல வேண்டும். இடையில் ஒரு வாய்க்காலை கடந்து செல்ல வேண்டும். இந்த கோயிலுக்கு மினி பேருந்தும் செல்கிறது.

நான் மூன்று முறை கும்பகோணம் சென்று பல திவ்யதேச கோயில்களை தரிசித்து பாடினேன். ஆனால் இந்த நாதன் கோயிலுக்கு வழி தெரிந்து செல்வது மட்டும் எனக்கு கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. இரண்டு தடவை முயற்சி செய்தும் இந்த கோயிலை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனால் சில நேரங்களில் பெருமாளே எனக்கு துணைக்கு வந்ததுண்டு. அதுபோலத்தான் மூன்றாவது முறை நான் இந்தக் கோயிலுக்கு செல்ல முயற்சி செய்து கொண்டிருக்கும் போது, இறைவனே தானே வந்து எனக்கு உதவி செய்தார்.

கோவை காமாட்சிபுரம் ஆதீனம் சிவலிங்கேஸ்வர சுவாமிகள் ஒரு நாள் என்னை அழைத்து, கும்பகோணம் முழையூரில் ஒரு கும்பாபிஷேக விழா நடக்கிறது. நீங்களும் என்னோடு வாருங்கள். அப்படியே எஸ்.வி.எல். சிலை பற்றியும் பேசி வரலாம் என்று அழைத்தார். நானும் அவருடன் கும்பகோணம் சென்றேன்.

29-5-2007 ஆம் நாள் திங்கட்கிழமை முழையூரில் கும்பாபிஷேகம் நடந்தது. அங்கே நான் சென்றபோது ஒரு பேருந்தில் கொற்கை என்று எழுதப்பட்டிருந்தது. அதை பார்த்தும் எனக்கு "நாதன் கோயில் இங்குதான் எங்கோ இருக்கிறது" என்ற சந்தேகம் எழுந்தது. தவிர அங்கே நடப்பட்டிருந்த கல்வெட்டு பெயர் பலகையிலும் பெருமாள் கோயில் 5 கிலோமீட்டர் என்று எழுதப்பட்டிருந்தது. உடனே அங்கிருந்த ஒரு பெரியவரிடம், இங்கே நாதன் கோயில் எங்கிருக்கிறது எனக் கேட்க, அவர் பக்கத்தில் தான் இருக்கிறது என்று கூறி, அங்கு சைக்கிளிலேயே செல்லாம் என்று கூறினார்.

முன்பின் தெரியாத ஊரில் எப்படி சைக்கிளில் போய் கண்டு பிடிப்பது? என்று யோசனை செய்த நான், ஆட்டோவில் போகலாம் என்று முடிவு செய்தென். ஆனால் அந்தப் பெரியவர் என்னை விடவில்லை. வாங்க நா சைக்கிள் எடுத்து தருகிறேன் என்று கூறி, என்னை அழைத்துச் சென்று போய் ஒரு சைக்கிள் எடுத்துக் கொடுத்து, கோயிலுக்குப் போக அடையாளம் கூறி என்னை அனுப்பி வைத்தார்.

நானும் ஒரு தைரியத்தில் சைக்கிள் ஏறி, அமர்ந்து கொண்டு அழுத்தினேன். நேராக சென்று வடலங்கைமான் என்ற ஒரு இடத்தில் ஒரு பெயர் பலகை இருந்தது. அதிலிருந்து தெற்கே சென்றால் கீழபழையாறை என்ற ஒரு ஊர். இந்த ஊர் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதை அடுத்து வந்தது நாதன் கோயில். மிக அருமையாகயிருந்தது என்று கூறலாம். நான் போகும் போது கோயிலுக்குள் யாருமே இல்லை. கோயில் மூலவர் சந்திதானம் திறக்கவும் இல்லை. நான் வெளிப்பக்கம் போட்டோ எடுத்துக் கொண்டேன். பிறகும் அர்ச்சகர் வந்தபாடில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு ஒரு ஆச்சாரக் குடும்பம் காரில் வந்து இறங்கியது. அதில் ஒரு பெரியவர் வைதீகமாக பூணூல் எல்லாம் தரித்திருந்தார். அவர் போய் அர்ச்சகரை அழைத்து வந்தார். கோயில் சந்நதி கதவு திறக்கப்பட்டு, பூஜை நடந்தது. எப்படியோ நாதன் பெருமான் எனக்கு காட்சி தந்தார்.



இந்த கோயில் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட கோயிலாகும். இந்த கோயிலில் இடது சுவற்றில் நந்தியின் உருவம் வரையப்பட்டுள்ளது. நந்தி இங்கே தவமிருந்து சாபவிமோசனம் பெற்றதால் இந்த கோயிலுக்கு நந்திபுரம் விண்ணகரம் என்று பெயர் வந்ததாகக் கூறுவர்.

சிபி சக்கரவர்த்தி புறாவின் உயிரைக் காப்பாற்றி, தராசு தட்டில் தன்மாமிசத்தை வைத்துவிட்டு, அது சமமாக இருக்க தானே இன்னொரு தட்டில் அமர்ந்தான். அந்த அதிசயத்தைக் காண நந்திநாத பெருமாள் கிழக்கு முகமாக இருந்தவர் மேற்கு முகமாக திரும்பி உட்கார்ந்தார் என்று கூறுவர். ஆகவே இந்த கோயிலில் ஜெகந்நாத பெருமாள் மேற்கு முகமாகவே காட்சியளிப்பார்.

இந்த கோயிலுக்குப் பக்கத்தில் தாராசுரம், பட்டீஸ்வரம், திருப்புவனம், அய்யாவாடி பிரத்யங்கர, பழைபாறை போன்ற முக்கிய கோயில்கள் உள்ளன.

திவ்யதேசம் - 22



மூலவர் : கோலவல்வில்லிராமன், புஜங்கசயனம், கிழக்கே திருமுகம்

உற்சவர் : சிருங்கார சுந்திரன்

தாயார் : மரகதவல்லி


தீர்த்தம் : சுக்ர தீர்த்தம், பிரம்ம தீர்த்தம் இந்திர தீர்த்தம், பராசுர தீர்த்தம்

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் 1338-47

மொத்தம் : 10 பாசுரங்கள்

திருவெள்ளியங்குடி



"காற்றிடைப் பூளை கரந்தன அரந்தை
உறக்கட லரக்கர்தம் சேனை
கூற்றிடைச் செல்லக் கொடுங்கணை துரந்த
கோலவில் இராமன்றன் கோயில்
ஊற்றிடை நின்ற வாழையின் கனிகள்
ஊழ்த்துவீழ்ந்த தனவுண்டு மண்டி
சேற்றிடைக் கயல்க ளுகள்திகழ் வயல்சூழ்
திருவெள்ளி யங்குடி யதுவே"

என்று திருமங்கையாழ்வார் தமது 1343 ஆம் பாடலில் பாடுகிறார்.

இந்த கோயிலுக்கு பேருந்து வசதி மிகவும் குறைவு. குறிப்பிட்ட ஓரிரு பேருந்துகள்தான் செல்கின்றன. அதைத் தெரிந்து அதன்படி சென்று, அந்த பேருந்து திரும்பி வருவதற்குள் பெருமாள் தரிசனத்தை முடித்துக் கொண்டு அதே பேருந்தில் வருதல் நல்லது. கார் வசதி இருந்தால் எப்போதும் செல்லலாம். கும்பகோணத்திலிருந்து அணைக்கரை செல்லும் பேருந்தில் செல்ல வேண்டும். அங்கிருந்து இறங்கி ஒரு கிலோமீட்டர் நடந்து செல்ல வேண்டும். மாயவரத்திலிருந்தும் செல்லலாம்.

சுக்கரனுக்கு வெள்ளியார் என்ற பெயரும் உண்டு. அவரை வணங்குவதற்கு இப்பெருமாள் அருள் செய்ததால் வெள்ளியங்குடி என்ற பெயர் வந்ததாம். அதனால் இது திருவெள்ளியங்குடி என்ற பெயரைப் பெற்றது. திருமங்கையாழ்வாருக்கு திருவந்தளூரில் பெருமாள் தரிசனம் கிடைக்காத போது இப்பெருமான் அவருக்கு அருளியதாகக் கூறுவர். இந்தக் கோயிலை தரிசித்தால் 108 திவ்ய தேசங்களையும் தரிசனம் செய்த புண்ணியம் கிடைக்குமாம்.

**"கோலவல்வில் ராமன் குடில்வெள் ளியங்குடி
மாலையில் சென்றேன் மயங்கியே - கோலத்
திருமுகம் கண்டோர்கள் திவ்யதேசம் கண்ட
பெரும்வரம் பெற்றவராம் கேள்"**

திவ்யதேசம் - 23



திருவழுந்தூர் (தேரழுந்தூர்)

மூலவர் : தேவாதிராசன், நிற்கும் திருக்கோலம், கிழக்கே திருமுகம். பெருமாளுக்கு இடதுபுறம் கருடாழ்வாரும், வலதுபுறம் பிரகலாதாழ்வாரும் இருக்கிறார்கள். இடதுகையில் ஊன்றிய கதை. இடதுபுறம் காவிரித்தாய்.

உற்சவர் : உபய நாச்சியாருடன் ஆமருவியப்பன் அருகில் பசுங்கன்று அழகுடன்.

தாயார் : செங்கமலவல்லி

தீர்த்தம் : தர்சன புட்கரிணி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் 1588-1627, 1854, 2066, 2077, 2673(22), 2674 (123)
மொத்தம் : 45 பாசுரங்கள்



"பகலு மிரவும் தானேயாய்ப்
பாரும் விண்ணும் தானேயாய்
நிகரில் சுடரா யிருளாகி
நின்றார் நின்ற வூர்போலும்
துகிலின் கொடியும் தேர்த்துகளும்
துன்ன மாதர் கூந்தல்வாய்
அகலின் புகையாய் முகிலேய்க்கும்
அணியார் வீதி அழுந்தூரே"

என்று திருமங்கையாழ்வார் தமது 1592 ஆம் பாடலில் எல்லாம் ஆனவர் நின்ற ஊர் இது என்று கூறுகிறார்.

மயிலாடுதுறைக்கு நாகப்பட்டிணத்திலிருந்தும் வரலாம். கும்பகோணத்திலிருந்தும் வரலாம். இந்த திருவழுந்தூர் என்பது தேரழுந்தூர் என்றே கூறப்படுகிறது. இது மாயவரம் என்னும் மயிலாடு துறையிலிருந்து தென்மேற்கே 23 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. நகர பேருந்து வசதியுண்டு. 10ஏ என்ற எண்ணுள்ள பேருந்து செல்கிறது.

இந்த கோயிலின் மூலவச் தேவாதிராசன். உற்சவர் ஆமருவியப்பன். அருகில் பசு உள்ளது. ஆமருவிக் கண்ணன் என்று கூறுவர். தேவாதிராசன் பசு மேய்ந்ததால் ஆமருவிக்கண்ணன் என்று கூறினர். தாயார் செங்கமலவல்லி.

உப்பரி சரவசமப்பன் என்ற அரசன் தேர் ஓட்டி வர, தேவாதிராச பெருமாள் அந்தத் தேரை இடது கை கட்டவிரலால் அழுத்த, தேர் அழுந்தி கீழே போனதாம். அதனால் இந்த ஊருக்கு தேரழுந்தூர் என்று காரணப்பெயர் ஏற்பட்டது என்று அந்த கோயிலில் அமர்ந்திருந்த ஒரு முதுபெரும் அர்ச்சகப் பெரியவர் கூறினார். அதை நான் என் செவி வழியாகக் கேட்டேன்.

நான் பார்த்தவகையில் இந்தக் கோயிலின் வாயிலின் முகப்பை தூரத்திலிருந்து பார்க்கும் போது பள்ளிவாசல் அமைப்பாகத் தெரிகிறது. இங்கே முஸ்லீம் சகோதரர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். பள்ளிவாசலும் உள்ளது. இந்த ஊரில் இந்து முஸ்லீம் ஒருமைப்பாடு தெரிகிறது.

கோயிலின் முன்புறம் ஒரு பெரிய தெப்பக்குளம் இருக்கிறது. தீர்த்தம் காவேரி தீர்த்தம் ஆகும்.



"தந்தை காலில் பெருவி
லங்கு தாளவிழ, நள்ளிருட்கண்
வந்த எந்தை பெருமானார்
மருவி நின்ற வூர்போலும்
முந்த வானம் மழைபொழியும்
மூவா வருவில் மறையாளர்
அந்தி மூன்று மனலோம்பும்
அணியார் வீதி அழுந்தூரே" **என்று தொடங்கி,**

"பன்றியாய் மீனாகி யரியாய்ப் பாரை
படைத்துக்காத் துண்டுமிழ்ந்த பரமன் றன்னை
கன்றிநெடு வேல்வலவ னாலி நாடன்
கலிகன்றி யொலிசெய்த வின்பப் பாடல்
ஒன்றினொடு நான்குமோ ரைந்தும் வல்லார்
ஒலிகடல்சூ முலகாளு மும்பர் தாமே" **என்று முடியும்**

1588-1627 40 பாடல்களும் மேலும் 5 பாடல்களாக மொத்தம் 45 பாடல்களை திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் தன் திருவாய் மொழிந்து பாடியுள்ளார்.

இந்த திருவழுந்தூர் என்னும் தேரழுந்தூர் கவிச்சக்ரவர்த்தி கம்பன் பிறந்த ஊராகும். இந்த கோயிலுக்கு மேற்கே கம்பன் மேடு என்று அவர் வாழ்ந்ததாகக் கூறப்படும் ஊர் இருக்கிறது. நாம் தேரழுந்தூர் பேருந்தைவிட்டு, கோயிலுக்கு செல்லும் முன்பாகவே கம்பன் மணிமண்டபம் காணப்படுகிறது. இங்கே ஆண்டு தோறும் கம்பன் விழா நடைபெறுகிறது.

**"ஆமருவிக் கண்ணன் அசைந்திடும் தேரைத்தன்
பூமலர்க் கையால் பொருந்திட - தாமழுத்த
தேரழுந்தூர் பேராச்சு! தேன்கவி கம்பனும்
ஊரிங்கே வாழ்ந்தான் உணர்"**

திவ்யதேசம் - 24



மூலவர் : அருள்மா கடல், சலசயன பெருமாள், புஜங்க சயனம், தெற்கே திருமுகம்

உற்சவர் : கிருபா சமுத்திரப் பெருமாள், அருள்மா கடல்

தாயார் : திருமாமகள் நாச்சியார்

உற்சவர் : தயாநாயகி

தீர்த்தம் : மானச புட்கரிணி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் 1628-37

மொத்தம் : 10 பாசுரங்கள்


திருச்சிறுபுலியூர்

இந்த ஊர் திருப்புலியூர் என்றும் சிறுப்புலியூர் என்றும் அழைக்கப்படுகிறது. மயிலாடு துறையிலிருந்து திருவாரூர் செல்லும் பாதையில் 10 கிலோமீட்டர் தூரத்தில் கொல்லுமாங்குடி ஊர் வருகிறது. அங்கிருந்து 3 கிலோமீட்டர் தூரத்தில் காட்டுப்பகுதியில் திருப்புலியூர் உள்ளது. ஒருசில பேருந்துகளும், சிற்றூந்தும் இருக்கிறது. இருந்தாலும் திருப்புலியூர் சாலையில் இறங்கி, பிறகு உள்ளே ஒரு கிலோமீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டும். கொல்லுமாங்குடியிலிருந்து ஆட்டோவில் செல்லலாம்.

"கருமாமுகி லுருவா! கனலுருவா! புனலருவா
பெருமால்வரை யுருவா! பிறவுருவா! நினதுருவா
திருமாமகள் மருவும்சிறு புலியூர்ச்சல சயனந்து
அருமாகட லமுதே!உன தடியேசர ணாமே" (1636)

என்ற பாடல் உட்பட, திருமங்கையாழ்வார் இந்த கோயிலைப்பற்றி 10 பாசுரங்கள் மங்களா சாசனம் செய்துள்ளார். நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் 1628-1637 வரை அந்த பாசுரங்கள் வருகிறது.

பெருமாள் சலசயனத்திலேயே இது சிறிய உருவம் கொண்டதாக, மிக அழகாக இருக்கிறார் பெருமாள்.



திருமங்கையாழ்வார் இந்த அருள்மாக் கடல் பெருமாளை தன் பத்துப் பாசுரங்களிலும் சிறுப்புலியூர்ச் சாலசயனத்து அருமா கடலே என்று ஒரு சிறுகுறையாகப் பாடியதையறிந்து, அவருக்கு அருளிச் செய்து, எனது பெரிய திருவுருவைத் திருக்கண்ணமங்கையில் சென்று காண்க என்று கூறியதாகக் கூறப்படுகிறது.

வியாக்ரபாதர் என்ற முனிவர் சிவபெருமானை நோக்கி தவமிருந்து, புலிக்கால்களையும், கைகளையும், கண்களையும் தவப்பயனாகப் பெற்று, இங்கு அருள்மா கடல் பெருமாளிடம் வந்து, அவரை வணங்கி அருள்பெற்று திருவைகுண்டம் அடைந்தார். இந்த ஊருக்கு சிறுப்புலியூர் என்ற பெயர் வந்தது. பெருமாளின் திருவடியில் வியாக்ர பாதர் திருவருவம் செய்யப்பட்டு பூஜை நடைபெறுகிறது.

"சிறுபுலி யூரின் திருமாக் கடலோன்
சிறுஉருவம் கண்டு சிலிர்த்தேன் - அறிக
சிவபெருமான் சீடர் வியாபாதர் வேண்ட
தவஅருள் தந்த தலம்"

கும்பகோணம் - மயிலாடுதுறை செல்பவர்கள் அப்படியே பார்க்க வேண்டிய நாயன்மார் சிவத்தலங்கள்

1. ஏயன்கோன் கலிக்காமநாயனார் - பெருமங்கலம்
2. நந்தனார் - ஆதனூர்
3. தேசநாயனார் - கொரநாடு மாயவரம்
4. முனையடுவார் - திருநீடூர்
5. மானகஞ்சாற நாயனார் - ஆனதாண்டபுரம்
6. சிறப்புலி நாயனார் - ஆக்கூர்
7. இயற்பகை நாயனார் - காவிரி பூம்பட்டிணம்
8. குங்குலிய கலய நாயனார் - திருக்கடையூர்
9. காரி நாயனார் - திருக்கடையூர்
10. திருமூலநாயனார் - திருவாவடுதுறை

6

மயிலாடுதுறை - சீர்காழி

செவ்வாய் - வைத்தீசுவரன் கோயில், சீர்காழி

புதன் - திருவெண்காடு

கேது - கீழ்பெரும் பள்ளம், திருவெண்காடு

சனி - திருநள்ளாறு, காரைக்கால்

இந்த நவக்கிரக கோயில்கள் மயிலாடுதுறை - சீர்காழி பகுதியிலிருந்து 30 கி.மீ. தூரத்தில் உள்ளன.

தவிர, மயிலாடுதுறை தருமபுரத்தில் மார்க்கண்டேயரின் உயிரைப் பறித்த குற்றம் நீங்க எமன் வழிபட்ட கோயில் உள்ளது.

திருக்கடையூர் டி. மணல்மேட்டில் மார்கண்டேயர் ஆலயம் உள்ளது. பக்கத்திலுள்ள அனந்த மங்கலத்தில் ஆஞ்சிநேயர் கோயில் உள்ளது.

திருவெண்காடு சாய்காட்டில் இயற்பகை நாயனார் சிவன் கோயில் உள்ளது. பக்கத்தில் காவிரி பூபம்பட்டிணம்.

வைத்தீசுவரன் கோயில் திருப்புன் ஊரில் சுந்தரர் பாடில் பாடி மழை பெய்ய வைத்தும், நிறுத்தியும் 12 வேலி நிலத்தை இராசேந்திர சோழனிடம் பெற்றது. நந்தனாருக்கு நந்தி விலகிய இடம்.

மயிலாடுதுறை குற்றாலம் திருமணஞ் சேரியில் ஈசுவரவன் உமையம்மை திருமணம் நடந்த இடம். இங்கு சென்று தரிசித்தால் திருமணம் நடக்கும்.


குத்தாலம் பக்கத்தில் மேற்கே திருநல்லம் கோனேரி ராசபுரத்தில் உலகிலேயே பெரிய நடராசர் விக்கிரகம் உள்ளது.

குத்தாலம் பக்கம் திருவீழி மழலையில் அப்பரும், சுந்தரரும் படக்காசு பெற்ற கோயில் உள்ளது.

சீர்காழி திருநல்லூர் பெருமாளாம் திருஞானசம்பந்தர் திருமணக் கோலத்துடன் சோதியில் கலந்த இடமாகும்.

திருக்கோலக்கா சப்த புரீசுவரர் கோயிலின் திருஞான சம்பந்தர் பொற்றானம் ஓசையுடன் பெற்றார்.

திவ்யதேசம் - 25



மூலவர் : நாண்மதியப் பெருமாள், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுகம்

உற்சவர் : வியோம ஜோதிபிரான்

தாயார் : தலைச்சங்க நாச்சியார்

தீர்த்தம் : சந்த்ர புட்கரிணி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் 1736, 2674 (134)
மொத்தம் : 2 பாசுரங்கள்

திருத்தலைச்சங்க நாண்மதியம் (தலைச்சங்காடு)

"கண்ணார் கண்ணபுரம் கடிகை கடிகமமும்
தண்ணார் தாமரைசூழ் தலைச்சங்க மேல்திசையுள்
விண்ணோர் நாண்மதியை விரிகின்ற வெஞ்சுடரை
கண்ணாரக் கண்டுகொண்டு களிக்கின்ற திங்கென்றுகொலோ!"

என்று இத்தலத்தை திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்வார்.



இந்தப் பாடல் நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் 1736-ஆவது பாடலாக வருகிறது. திருமங்கையாழ்வாரைப் போலவே எனக்கு இந்தப் பெருமாளை எப்போது கண்டுகளிப்போமோ என்ற ஏக்கம் இருந்தது.

சோழநாட்டுத் திருப்பதிகள் எல்லா திருத்தலங்களையும் பார்த்த பின்னரும், இந்தத் திருத்தலம் மட்டும் விட்டுப் போயிருந்தது. உலகத்தைச் சுற்றி வருவது என்பது சிவன் சக்தியை சுற்றி வந்தாலே போதும் என்ற விநாயகர் தத்துவப்படி நானும் மயிலாடுதுறை மண்ணையும், சீர்காழி மண்ணையும் மிதித்தே நாண்மதியத்தை கண்டு கலித்ததாக முடிவு செய்திருந்தேன். ஆனால் எனது மனம் ஒப்புக் கொள்ளவில்லை. நேரடியாக இந்த தலத்திற்கு செல்லாமல் வந்தது ஒருகுறையாகவே இருந்தது. பிறகுதான் 10-8-2007 ஆம் நாள் சென்று இந்த பெருமாளை தரிசித்து வந்தேன்.

இந்த கோயிலுக்குச் செல்வதற்கு மயிலாடுதுறையிலிருந்து பொறையூர் செல்லும் பேருந்திலோ அல்லது ஆக்கூர் செல்லும் நகரப் பேருந்திலோ செல்ல வேண்டும். மயிலாடுதுறையிலிருந்து ஆக்கூர் 18 கிலோமீட்டர் தூரம். ஆக்கூர் முக்கூட்டம் என்று அழைக்கப்படுகிறது. சீர்காழி-நாகப்பட்டிணம், காரைக்கால், வேளாங்கண்ணி பிரதான சாலையும், மயிலாடுதுறை சாலையும் ஆகிய மூன்று சாலைகளும் சந்திக்கும் இடம்தான் ஆக்கூர் முக்கூட்டம் என்று கூறுகிறார்கள். ஆக்கூர் முக்கூட்டத்திலிருந்து நாகை-சீர்காழி செல்லும் பேருந்தில் ஏறிச் சென்றால் திருத்தலைச்சங்காடு பேருந்து நிற்குமிடத்தில் இறங்கலாம். இறங்கிய இடத்திலேயே தலைச்சங்காடு நாண்மதியப் பெருமாள் என்கிற லட்சுமி நாராயணன் திருக்கோயில் என்ற பெயர்ப்பலகையோடு கோயில் நுழைவாயில் உங்களை வரவேற்கும். அங்கிருந்து கால்நடையாக ஒருகிலோமீட்டர் வயற் காட்டுக்குள் நடந்து சென்றால் இந்த தலம் காணும்.



இந்தக் கோயிலை நான் இரண்டு தடவை தரிசித்தேன். ஒரு இரவு திருகடவூர் தரிசிக்க சென்ற போது இந்த தலம் அதற்கு பக்கத்திலேயே இருப்பதை ஆட்டோவில் சென்று கண்டுபிடித்தேன்.

நாலாயிர திவ்யதேசங்களின் வரிசை எண் கணக்கு, எனக்கு குழப்பமாகயிருக்கிறது. இருப்பினும் அங்கேயுள்ள அர்ச்சகர் கூறியபடி இது 13-வது திவ்யதேசமாயிருப்பினும், திவ்யபிரபந்தபாட்டின்படி 25-வது தேசமேயாகும்.

"தலைச்சங்க நாண்மதியத் தானாம் பெருமாள்
நிலைகொண்டு காண்பார்காண் நின்று - நிலைகாணும்
காடும் வயலும் களிப்பூட்டும் குட்டையிலேத்
தேடிப்போய்க் கண்டேன் வியந்து"

சண்டேசுவரர் - சேய்ஞலூர்

இது கும்பகோணத்திலிருந்து சென்னை செல்லும் பிரதான சாலையில் 10 கி.மீட்டர் தூரத்தில் இருக்கிறது.



புகழ்துணை நாயனார் - அழகாபுத்தூர்

கும்பகோணத்திலிருந்து இங்கு தனியாகச் செல்ல வேண்டும்.

சீர்காழி

108 திவ்யதேசதங்களில் 11 தேசங்கள் சீர்காழியிலிருந்து 10 கி.மீட்டர் தூரம் கடந்து செல்ல வேண்டும்.

அப்படி சீர்காழி செல்லும் போது, சீர்காழியில் அவதரித்த திருஞானசம்பந்தர், கணநாதர் இரண்டு நாயன்மார் சிவதலங்களையும் காணலாம்.

திவ்யதேசம் - 26



மூலவர் : பரிமள ரங்கநாதன் – மருவினிய மைந்தன்

தாயார் : பரிமள ரங்கநாயகி

தீர்த்தம் : இந்து புட்கரிணி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் 1328 –1337, 2674(126)
மொத்தம் : 11 பாசுரங்கள்

திருஇந்தளூர்

இந்த கோயில் மயிலாடுதுறைக்குள்ளேயே மேற்குப்புறத்தில் 3 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. பேருந்து வசதியுண்டு. ஆட்டோவிலும் போகலாம்.

நான் மாயவரம் பேருந்து நிலையம் சென்று இறங்கிவிட்டு, ஆட்டோவில் போக முடிவு செய்து, ஒரு ஆட்டோவை வாடகை பேசினேன். அவன் வாடகை ரூ. 25/- என்று கூறினார். குறைக்கவில்லை. சரியென்று ஆட்டோவில் ஏறிச் சென்றோம். ஒரு பத்து நிமிடத்தில் பெருமாளை தரிசித்து விட்டு, அதே ஆட்டோவில் திரும்பினோம். பழைய பேருந்துக்கு பக்கத்திலேயே புதிய பேருந்து நிலையம் உள்ளது. அங்கே ஆட்டோவை விடச் சொன்னேன். அங்கே சென்று இறங்கிவிட்டு, வாடகை கேட்டால் ரூபாய் 90/- வேண்டும் எனக் கேட்டார். போக 25, வர 25 ஐம்பதுதானே என்ன இப்படி கேட்கிறாய் என்று கேட்டால் அவன் பிடிவாதமாகவே 90 ரூபாய் வேண்டும் எனக் கேட்டார். நான் பேசாமல் கொடுத்து வந்தேன். இப்படிப்பட்ட ஆசாமிகளை என்ன செய்வது? பெருமாள் இரணியனை வதம் செய்ததுபோல வதம் செய்ய வேண்டும். பெருமாள் அவனுக்கு தண்டனை கொடுத்திருப்பார்.

சயனத் திருக்கோலத்தில் காணும் பரிமள ரங்கநாதா தலைமாட்டில் காவேரித் தாயாரும், கால்மாட்டில் கங்கைத் தாயாரும் உள்ளனர்.

காவேரியும், கங்கையும் சங்கமம் ஆகும் இடத்தில் கடைமுக நீராடல், முடவண் முழுக்கு நீராடச் சிறப்பு வாய்ந்ததாகும்.

குழந்தைப் பேறு வாய்க்க இக்கோயிலுக்கு வந்தால் பலன் கிடைக்கும்.

முத்துசாமி தீட்சிதர் இப்பெருமாள் பற்றி கீர்த்தனைகள் இயற்றியுள்ளார். இந்த கோயிலில் அரங்கநாதர் ஆதிசேடன் மீது பள்ளி கொண்டுள்ளார். காவிரி கரையிலுள்ள திவ்யதேச அரங்கன் கோயில்களில் இந்த கோயில் கீழ் கோடியில் உள்ளது.

"முன்னை வண்ணம் பாலின் வண்ணம்
முழுவதும் நிலைநின்ற
பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம்
வண்ண மெண்ணுங்கால்
பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம்
புரையுந் திருமேனி
இன்ன வண்ணமென்று காட்டீர்
இந்த ளூரிலே" (1335)

என்று திருமங்கையாழ்வார் 11 பாசுரங்கள் பாடியுள்ளார்.

திருமங்கையாழ்வார் இந்த இந்தளூர் அரங்கநாதனை தரிசிக்க வந்த போது கதவு சாத்தப்பட்டு விட்டது. அதனால் வேதனையடைந்த ஆழ்வார், "வாழ்ந்தேபோம் நீரே" என்று கூறிய இடம் இதுவாகும்.

"பரிமள ரங்கநாதா பாதம் பணிய
விரைந்திட வந்த பிறகு - சரியாம்
பணத்துக்கு மேலே பணம்கேட்ட ஆளின்
குணத்துக்கு தண்டமென்ன கூறு?"

சிதம்பரத்தில் திருநீலகண்ட நாயனார், கணப்புல்ல நாயனார் ஆகிய இரண்டு தலங்களைக் காணலாம்.

சிதம்பரத்திலிருந்து பண்ருட்டி வழியாகச் சென்றால் பார்க்கக் கூடிய நாயன்மார்கள்

1. மெய்ப்பொருள் நாயனார் - திருக்கோவிலூர்
2. சுந்தரமூர்த்தி நாயனார் - திருநாவலூர்
3. சடையர் - திருநாவலூர்
4. நரசிங்க முனையர் - சேத்தமங்கலம்
5. திருநாவுக்கரசர் - திருவாமூர்
6. திருக்கண்ட யாழ்ப்பாணர் - விருத்தாச்சலம், எருக்கத்தம் புலியூர்
7. கலிக்கம்ப நாயனார் - பெண்ணாடம்

திவ்யதேசம் - 27



மூலவர் : கோபாலகிருஷ்ணன் (ராசகோபாலன்) ருக்மணி – சத்யபாமாவுடன் நின்றகோலம் கிழக்கே திருமுகம்

தாயார் : மடவரல் மங்கை, செங்கமல நாச்சியார்

தீர்த்தம் : தடமலர்ப் பொய்கை

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் 1298 – 1307

மொத்தம் 10 பாசுரங்கள்

திருக்காவளம்பாடி (திருநாங்கூர்)

"தாவளந் துலக முற்றும்
தடலமலர்ப் பொய்கைப் புக்கு,
நாவளம் நவின்றங் கேத்த
நாகத்தின் நடுக்கம் தீர்த்தாய்
மாவளம் பெருகி மன்னும்
மறையவர் வாழும் நாங்கைக்
காவளம் பாடி மேய
கண்ணனே! களைகண் நீயே"

என்று நாலாயிர திவ்யப் பிரபந்தம் 1298-ஆம் பாடலில் திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

திருமங்கையாழ்வார் திவ்யதேச யாத்திரையில் தான் பிறந்த திருக்குறையலூர் பக்கமுள்ள திருவாலி சென்று பாடி, பிறகு திருநாங்கூர் சென்று, அங்குள்ள 11-திவ்ய தேசத்திற்கும் தன் கால்பதித்து சென்று பாசுரங்களைப் பாடிச் சென்றார்.

அவ்வாறு அவர் பாடிச் சென்றபோது வயல்வழியில் நெற்பயிர்களை மிதித்துச் சென்ற போது, அந்த பயிரெல்லாம் பசுமையாகச் செழித்து வளர்ந்ததாம். திருமங்கையாழ்வார் பாடிய, 11-திவ்யதேச திருநாங்கூர் பாடல்களில் திருகாவளம்பாடி ராசகோபால் பெருமாளுக்குப் பாடிய முதல் பாட்டு இதுவாகும்.



இந்த திருத்தலத்திற்கு தனி அர்ச்சகர் கிடையாது. கீழச் சாலையிலிருந்துதான் அவர் வர வேண்டும். அங்கு நாம் சென்றுதான் அவரை அழைத்து வர வேண்டும்.

திருக்காவளம்பாடி கோபாலசாமி திருக்கோயில் சீர்காழியிலிருந்து 10 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. திருவெண்காட்டுக்கு அருகில் உள்ளது. சென்னை-மயிலாடுதுறை ரயில்பாதையிலும், வைத்தீஸ்வரன் கோயில் வந்தால், 8 கி.மீ. தூரத்திலும் உள்ளது.

**"திருக்கா வளம்பாடி ராசகோ பாலன்
திருக்கோலம் கண்டு திளைத்தேன் - இருக்கும்
திருமங்கை யாழ்வார் திருக்குறைய லூர்காண்
திருமடம் வாழ்க திகழ்ந்து"**

திவ்யதேசம் - 28



மூலவர் : திரிவிக்ரமன், தாடாளன்
உலகளந்த திருவுருவம் நின்ற
திருக்கோலம்
கிழக்குத் திருமுகம்

உற்சவர் : திரிவிக்ரம நாராயணன்

தாயார் : லோகநாயகி

உற்சவர் : மட்டவிழ் குழலி

தீர்த்தம் : சங்க புட்கரிணி
சக்ர தீர்த்தம்

திருக்காழிச்சீராம விண்ணகரம் சீர்காழி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் 1178 - 1187

மொத்தம் : 10 பாசுரங்கள்


"ஒருகுறளா யிருநிலமூ வடிமண் வேண்டி
உலகனைத்து மீரடியா லொடுக்கி, ஒன்றும்
தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த
தாடாளன் தாளணைவீர், தக்க கீர்த்தி
அருமறையின் திரள்நான்கும் வேள்வி யைந்தும்
அங்கங்கள் அவையாறு மிசைக ளேழும்
தெருவில்மலி விழாவளமும் சிறக்கும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே" (1178)

என பத்துப் பாசுரத்தில் முதல் பாசுரமாக தொடங்குவார் திருமங்கையாழ்வார்.

இந்த ஊரில்தான் சைவசமய குரவர் திருஞானசம்பந்தர் பிறந்தார். உமையாள் அவருக்கு ஞானப்பால் ஊட்டியதும் இந்த ஊர் தோணியப்பர் ஆற்றங்கரையில்தான்.

இந்த கோயிலில் பெருமாள் தன் இடது காலைத் தூக்கி விண்ணை அளந்து நிற்கிறார்.

பிரம்மாவுக்கு தன் ஆயுள் பற்றி கர்வம் ஏற்பட்ட போது, ரோமசமுனிவர் சினம் கொண்டு, "உன் ஆயுசு என் தலை ஒன்றுக்குச் சமம்" என்று கூறி அவர் கர்வத்தை அடக்கியதலம்.



திருஞானசம்பந்தரும், திருமங்கையாழ்வாரும் இந்த ஊரில் தமிழ்நெறிவாதப் போர் நிகழ்த்தியதாகக் கூறுவர்.


இந்த கோயில் சீர்காழி பேருந்து நிலையத்திலிருந்து சிதம்பரம் செல்லும் மார்க்கத்தில், இரண்டு கிலோமீட்டர் தூரத்தில், சாலையோரத்தில் உள்ளது.

சீர்காழி வட்டத்தில் மட்டும் 13-திவ்ய தேசங்கள் உள்ளன. அவற்றில் திருக்காழிச்சீரமா விண்ணகரமும் ஒன்று.

"திருக்காழிச் சீராம விண்ணகரம் தன்னில்
திருக்கோல விக்ரமதா டாளன் - பெருமாள்
இடக்காலால் விண்ணளந்து இன்முகம் காட்டி
கொடுப்பானாம் செல்வம் குவித்து"

இங்கே திருநாங்கூர் திவ்யதேசங்கள் 11 தேசம் தவிர, வைத்தீஸ்வரன் கோயில், திருவெண்காடு (புதன்), கீழப்பெரும்பள்ளம் (கேது), சிலப்பதிகாரப் புகழ் பூம்புகார், பத்தனிக்கோட்டம் மற்றும் பட்டினத்தார் அவதரித்த பல்லவனம் ஆகிய புகழ் பெற்ற தலங்களும் உண்டு.

திவ்யதேசம் - 29



திருஅரிமேய விண்ணகரம் (திருநாங்கூர்)

மூலவர் : குடமாடு கூத்தன்
(தைலகாப்புத் திருமேனி)
வீற்றிருந்த திருக்கோலம்
கிழக்கே திருமுகம்

உற்சவர் : சதுர்புஜங்களுடன் கோபாலன்

தாயார் : அமிருதகடவல்லி

தீர்த்தம் : கோடி தீர்த்தம், அம்ருத தீர்த்தம்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் 1238 - 1247
மொத்தம் : 10 பாசுரங்கள்

"சென்றுசின விடையேழும்
படவர்த்துப் பின்னை
செவ்வித்தோள் புணர்ந்துகந்த
திருமால்தன் கோயில்
அன்றையனு மரன்சேயு
மனையவர்கள் நாங்கூர்
அரிமேய விண்ணகர
மமர்ந்த செழுங் குன்றை
கன்றைநெடு வேல்வலவன்
மங்கையர்தம் கோமான்
கலிகன்றி யொலிமாலை
யைந்தினொடு மூன்றும்
ஒன்றினொடு மொன்றுமிவை
கற்றுவல்லார் உலகத்
துத்துமர்கட் குத்தமரா
யும்பருமா வர்களே" (1247)





என திருமங்கையாழ்வார் இத்திருத்தலத்தைப்பற்றி 10-வது பாசுரத்தில் கூறுகிறார்.

சீர்காழியிலிருந்து 10 கிலோமீட்டருக்குள் திருநாங்கூருக்குள்ளேயே இத்திருத்தலம் உள்ளது. சீர்காழியிலிருந்து பேருந்து வசதியுண்டு. குடமாடு கூத்தர் கோயில் என்றால்தான் தெரியும்.

**"திருநாங்கூர் கண்ணுற்றேன் சீர்காழி மண்ணில்
திருஅரிமேய் விண்ணகரம் என்பார் - பெருமாள்
குடமாடு கூத்தர் குறிக்கோளாய் சென்றால்
நடமாடி வீற்றிருப்பார் நன்று"**

திவ்யதேசம் - 30



மூலவர் : புருடோத்தமன் நின்ற திருக்கோலம்
கிழக்கே திருமுகம்

தாயார் : புருடோத்தம நாயகி

தீர்த்தம் : திருப்பாற்கடல் தீர்த்தம்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1258 - 1267

மொத்தம் : 10 பாசுரங்கள்

திருவண்புருடோத்தமம்
(திருநாங்கூர்)

இதுவும் சீர்காழியிலிருந்து 10 கி.மீ. தூரத்திலேயே, திருநாங்கூருக்குள்ளேயே உள்ளது.

மேலும், திருமணிமாடக் கோயில், திருஅரியமேய விண்ணகரம், திருத்தெற்றியம்பலம், திருவண்புருடோத்தமம் இவை திருநாங்கூருக்குள்ளேயே ஒரே தெருவில் உள்ளது.

அதாவது திருமணிமாடக் கோயில், திருஅரியமேய விண்ணகரம், திருத்தெற்றியம்பலம், திருவண்புருடோத்தமம் நான்கு பெருமாள் கோயில்களும், இந்த திருநாங்கூரில் ஒரே தெருவில் அருகருகேயிருந்து, நால்வகை அருள் பரிபாலிப்பதால் இதனால் நாற்பெரும்பயன் கிட்டும் என்று கூறுவர்.

தை அமாவாசைக்கு மறுநாள் நடக்கும் கருடசேவை இங்கே சிறப்புடையதாகும்.



"மண்ணு ளார்புகழ் வேதியர் நாங்கூர்
வண்புரு போத்தமத்துள்
அண்ணல் சேவடிக் கீழடைந் துய்ந்தவன்
ஆலிமன் அருள்மாரி
பண்ணு ளார்தரப் பாடிய பாடலிப்
பத்தும்வல் லார், உலகில்
எண்ணி லாதபே ரின்பமுற் றிமையவ
ரோடும் கூடுவரே"

என திருமங்கையாழ்வார் இந்த 10-ஆம் பாசுரத்தில் பாடி முடிப்பார்.



**"திருவண் புருடோத் தமக்கோயில் மண்ணில்
திருபுரு போத்தமன் நின்ற - திருக்கோலம்
அருமைத் திருவுருவம் அந்த அழகு
கருடசேவை கண்டால் கரும்பு"**

திவ்யதேசம் - 31



மூலவர் : பேரருளாளன்
நின்ற திருக்கோலம்
கிழக்கே திருமுகம்

உற்சவர் : செம்பொன்னரங்கர்

தாயார் : அல்லிமாமலர் நாச்சியார்

தீர்த்தம் : நித்ய புட்கரணி கனக தீர்த்தம்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் 1268 - 1277
10 பாசுரங்கள்

திருச்செம்பொன் செய்கோயில்

இக்கோயிலை செம்பொன்னரங்கக் கோயில் என்று கூறுவர். மற்றும் செம்பொன்னரங்கர், பேரருளாளன் என்ற பெயர்களும் உண்டு.

இந்த கோயிலுக்கு ஒரு புராண கதையும் கூறுவர். அதாவது இராமன்-இராவணன் போரின் முடிவில், ராவணன் போரில் மாண்ட பிறகு, ராமன் ஓய்வுக்காக இந்த ஊருக்கு வந்து, இங்கே தவமியற்றி வந்த தீருடநேத்ரர் என்ற முனிவர் ஆசிரமத்தில் தங்கினார். அப்போது அந்த முனிவர் உபதேசித்தபடி தங்கத்தில் ஒரு பசு செய்து, அதை மூன்று நாட்கள் பூஜை செய்து, பிறகு அதை ஒரு பிராமணருக்கு தானம் செய்தாராம். அந்த பிராமணர் அந்த தங்கபசுவை வாங்கி, இந்த கோயிலை கட்டினாராம். அதனால் இந்தக் கோயிலுக்கு திருச்செம்பொன் செய்கோயில் என்று பெயர் வந்ததாம்.

சிவபெருமான் பிரகமஹத்யா என்ற தோசத்திலிருந்து விடுபட, ஏகாதசருத்ர என்ற அசுவமேத யாகம் செய்தபோது, விஷ்ணுபெருமாள் பதினொரு உருவத்தில் ருத்ரன் பிரார்த்தனை வெற்றி பெற பக்தர்களுக்கு அருள்பாலித்தார் என்று கூறுவர். அதை முன்னிட்டுத்தான் தை அமாவாசைக்கு அடுத்தநாள் திருநாங்கூர் திருமணி மாடத்திலிருந்து 11 கருடசேவை தொடங்கி சிறப்பாக நடந்து வருகிறது என்று கூறுவர். அந்த வகையில் திருநாங்கூர் 11-திவ்ய தேசங்களும் ருத்திரன் வழிபாட்டுக்காக ஏற்பட்டது என்றும் கூறுவர்.



"தேனமர் சோலை நாங்கைநன் னடுவுள்
செம்பொன்செய் கோயிலி னுள்ளே
வானவர் கோனைக் கண்டமை சொல்லும்
மங்கையார் வாட்கலி கன்றி
ஊனமில் பாட லொன்பதோ டொன்றும்
ஒழிவின்றிக் கற்றுவல் லார்கள்
மானவெண் குடைக்கீழ் வையக மாண்டு
வானவ ராகுவர் மகிழ்ந்தே" (1277)

என்று திருமங்கையாழ்வார் இத்தலப் பத்தாவது பாடலாக இதை நிறைவு செய்வார்.

"திருச்செம்பொன் செய்கோயில் சீர்திரு நாங்கூர்
பெரும்பேர் அருளாளன் நின்ற - திருக்கோலம்
சீர்காண் பதினொன்றாம் திவ்ய கருடசேவை
பேர்பெற்ற தேசம் பெரிது"

திவ்யதேசம் - 32



திருமணிமாடக் கோயில்
(திருநாங்கூர்)

மூலவர் : நாராயணன்
நந்தா விளக்கு
வீற்றிருந்த கோலம்
கிழக்கே திருமுகம்

உற்சவர் : நாராயணன்
அளந்தற்கரியான் வீற்றிருக்கும் தோற்றம்

தாயார் : புண்டரீகவல்லித் தாயார்

தீர்த்தம் : இந்திர புட்கரணி
ருத்ர புட்கரணி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1218-27, 1850, 2674 (132)

மொத்தம் : 12 பாசுரங்கள்

"நந்தா விளக்கே! அளத்தற் கரியாய்
நரநா ரணானே! கருமா முகில்போல்
எந்தாய், எமக்கே யருளாய், என நின்று
இமையோர் பரவு மிடம், எத்திசையும்
கந்தா ரமந்தே னிசைபா டமாடே
களிவண் டுமிழற் றநிழல் துதைந்து
மந்தா ரநின்று மணமல் குநாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கெள் மனனே!" (1218)

என்று திருமங்கையாழ்வார் இத்தலம் பற்றி பாடுவார்.


இது ஒரு முக்கிய திருத்தலமாகும். 11-பெருமாள்கள், 11-கருடசேவை தொடங்கும் புனிதத் தலம் இது.

தை அமாவாசைக்கு பிறகு மறுநாள் திருநாங்கூரில் 11-கருடசேவை நடக்கும். அது இத்தலத்திலிருந்தே தொடங்கும். திருநாங்கூர் 11-திவ்யதேசத்து பெருமாள்களும், கருட வாகனங்களில் எழுந்தருள்வார்கள். அப்போது திருமங்கையாழ்வார் தமது இல்லக்கிழத்தியார் குமுத வல்லியுடனும், அவர் அடிபோற்றிய பெருமாள், உபய நாச்சியாருடனும், திருப்பல்லக்கில் ஏறி, 11-திவ்ய தேசங்களுக்கும் வயல்வழி இறங்கி பயிர்களை மிதித்துக் கொண்டு வருவார்.

அவ்வாறு வரும்போது அந்த பயிர்கள் நன்றாக செழித்து வளரும் என்பது நம்பிக்கை. அவ்வாறு ஒவ்வொரு திவ்யதேசத்திலும் மங்களா சாசனம் செய்து, திருவத்திக்காப்பு ஆகி, தை அமாவாசைக்கு மறுநாள் நாராயண பெருமாள் வாசலில் 11-திவ்யதேசப் பெருமாள்களும் கருடவாகனத்தில் எழுந்தருள, ஒவ்வொரு பெருமாளையும் திருமங்கையாழ்வார் பிரதட்சணமாக வந்து மாலை மரியாதைகள் நடத்த, பிறகு வீதிப் புறப்பாடு என்பது மிகவும் அற்புக் கண்காட்சியாக இருக்கும்.

இந்த கோயிலில் திருக்கோட்டியூர் நம்பி குடிகொண்டுள்ளார். திருநாங்கூரில் இரண்டு மூன்று கோயில்களுக்கு ஒரே அர்ச்சகர் என்பதால் நாம் அவரை அழைத்துப் போய் திருத்தலங்களை தரிசத்தலே நலமாகும்.

"திருமணி மாடம் திருநாங்கூர் காணும்
பெருமாள் கருடன் பெருமை - திருமங்கை
கால்பட்டு நெற்பயிர் காணும் செழிப்பாக
சொல்கேட்டேன் திவ்யதேசத் துள்"



திவ்யதேசம் - 33



திருவைகுந்த விண்ணகரம் (திருநாங்கூர்)

மூலவர் : வைகுந்தநாதன், தாமரைக் கண்ணுடைய பிரான்
உபயநாச்சிமார்கள் உடனிருப்பு
கிழக்கே திருமுகம்

உற்சவர் : அதே நிலை

தாயார் : வைகுந்த வல்லி

தீர்த்தம் : லட்சுமி புட்கரணி
உதங்க உட்கரிணி
விரசா தீர்த்தம்

மங்களாசாசனம் :
திருமங்கையாழ்வார் 1228-37
10 பாசுரங்கள்

"அண்டமுமிவ் வலைகடலு
மவனிகளு மெல்லாம்
அமுதசெய்த திருவயிற்றன்
அரன்கொண்டு திரியும்,

முண்டமது நிறைந்தவன்கண்
சாபமது நீக்கும்
முதல்வனவன் மகிழ்ந்தினிது
மருவியுறை கோயில்,

எண்டிசையும் பெருஞ்செந்நெ
லிளந்தெங்கு கதலி
இலைக்கொடியொண் குலைக்கமுகொ
டிகலிவளம் சொரிய,

வண்டுபல விசைபாட
மயிலாடு நாங்கூர்
வைகுந்த விண்ணகரம்
வணங்குமட நெஞ்சே" (1230)

என்று திருத்தலத்தின் வளத்தை திருமங்கையாழ்வார் பாடுவார்.

7




எம்பெருமான் திருவைகுண்டத்தில் எழுந்திருப்பதுபோல், இவ்விடத்தில் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் எழுந்தருளியிருப்பதால், இதற்கு வைகுந்த விண்ணகரம் என்ற பெயர் ஏற்பட்டது.

சீர்காழியிலிருந்து 5 கிலோமீட்டர் தூரத்தில் திருநாங்கூரிலேயே உள்ளது.

"திருவைகுந்த விண்ணகரம் சீர்காழி நாங்கூர்
திருவைகுந்தர் என்னும் திருமால் - பெருமாளாம்
தாமரைக் கண்ணோடு தன்னோடு நாச்சியாரும்
பூமுகமாய் வீற்றிருப்பார் போற்று"

திவ்யதேசம் - 34



திருவாலி - திருநகரி

மூலவர் : லட்சுமி நரசிம்மர்
வயலாளி மணவாளன்
வீற்றிருந்த கோலம்
மேற்குத் திருமுகம்

உற்சவர் : திருவாலி நகராளன்

தாயார் : அம்ருதவல்லி

தீர்த்தம் : இலாட்சினி புட்கரணி

மங்களாசாசனம் :

குலசேகராழ்வார் : 725

திருமங்கையாழ்வார் : 1078, 1188-1217, 1329, 1733, 1735, 1850, 2014, 2027, 2063 (71), 2074 (115)

மொத்தம் : 42 பாசுரங்கள்

"ஆலினிலைப் பாலகனா
யன்றுலக முண்டவனே,
வாலியைக் கொன்றரசிளைய
வானரத்துக் களித்தவனே,
காலின்மணி கரையலைக்கும்
கணபுரத்தென் கருமணியே
ஆலிநகர்க் கதிபதியே!
அயோத்திமனே! தாலேலோ!" (725)

என்பது குலசேகராழ்வார் பாடிய அந்த மங்களா சாசனப் பாடலாகும்.

திருநகரியை அடுத்த பக்கத்து திருத்தலம் திருகுறையலூர்தான் திருமங்கையாழ்வார் அவதரித்த திருத்தலமாகும். அவர் வழிபட்ட ஐந்து நரசிம்மர்களில் இரண்டு மூர்த்திகள் இங்கே உள்ளனர். இந்த கோவிலுக்குள் திருமங்கையாழ்வார் சன்னதி இருக்கிறது. அதில் இவர் ஆழ்வாருக்குண்டான வேடத்தில் காட்சி தருகிறார். ஆழ்வாரின் பக்கத்தில் அவர் வாழ்ந்த காலத்தில் போற்றி வந்த சிந்தனைக்கினியாள் என்ற உத்சவமூர்த்தி உள்ளார்.

திருநகரியிலிருந்து ஓரிரு கி.மீ. தூரமுள்ள வேதராசபுரம் என்ற இடத்தில் தான் திருமங்கையாழ்வார் பெருமாளை வழிப்பறி செய்தார். அப்போதுதான் பெருமாள் இவருக்கு திருமந்திர உபதேசம் செய்தார். அந்த நிகழ்வை உணர்த்தும் விதமாக இங்கு வேடுபறி உத்சவம் நடந்து வருகிறது. ரங்கநாதப் பெருமாள் புதிய தம்பதிகளாக ஆழ்வார்களுக்குக் காட்சியளித்து தடுத்தாட்க் கொண்ட இடம். கல்யாண கோலத்தில் காட்சி தந்ததால் இவர் கல்யாண ரங்கநாதர் என்று அழைக்கப்படுகிறார்.

“வந்துன தடியேன் மனம்புகுந்தாய்
புகுந்தற்பின் வணங்கும் என்
சிந்தனைக்கினியாய்! திருவே!என் னாருயிரே
அந்தளி ரணியா ரசோகி ளிந்தளிர்கள்
கலந்து அவையெங்கும்
செந்தழல் புரையும் திருவாலி யம்மானே” (1188)

என்று திருவாலி பற்றி திருமங்கையாழ்வார் 1188-ஆம் பாடலில் கூறுகிறார்.

இந்த திவ்ய தேசத்தில் வயலாளி மணவாளர் திருவாலியில் இல்லாமல் திருநகரியில் உள்ளார்.



திருநகரி திருவாலியிலிருந்து 5 கி.மீ. செல்ல வேண்டும். தெப்பத்தூர் வழியாக, சுப்பிப் பாதையில் செல்லலாம். சீர்காழியிலிருந்து பூம்புகார் செல்லும் பேருந்திலும் செல்லலாம்.

வயலாளி மணவாளருக்கு வேதராசன் என்ற பெயரும் உண்டு. ஆகவே இதற்கு வேதராசபுரம் என்ற பெயரும் உண்டு. திருமங்கையாழ்வார் பெருமாளை வழிப்பறி செய்த போது, அவருக்குள் காட்சி தந்து ஞானம் போதித்த இடம் இதுவாகும்.

திருவாலி மணவாளர் அங்கு இல்லாமல் திருநகரியில் இருப்பதால், திவ்யதேசப் பட்டியலில் திருவாலி-திருநகரி இரண்டு ஊரும் ஒரே ஊராகக் கணக்கிடப்பட்டுள்ளது.

சீர்காழி, திருவாலி-திருநகரி போக மீதி 11-திவ்ய தேசங்கள், திருநாங்கூரிலேயே உள்ளன. இந்த 11-திருத்தலங்கலும் ஒன்றோடொன்று சங்கிலித் தொடர்புபோல் இருப்பதால், இங்கு செல்ல தக்க போக்குவரத்து வாகனத்தோடு செல்வது நன்மையாகும்.

திவ்யதேசம் - 35



திருத்தேவனார் தொகை

மூலவர் : தெய்வ நாயகன்
நின்ற திருக்கோலம்
கிழக்கே திருமுகம்

உற்சவர் : மாதவப் பெருமாள்

தாயார் : கடல்மகள் நாச்சியார்

உற்சவர் : மாதவ நாயகி

தீர்த்தம் : சோவன புட்கரணி
தேவசா புட்கரணி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் 1248 - 57
10 பாசுரங்கள்

"போதலர்ந்த பொழில் சோலைப்
புறமெங்கும் பொருதிரைகள்
தாதுதிர வந்தலைக்கும்
தடமண்ணித் தென்கரைமேல்,
மாதவன்றா னுறையுமிடம்
வயல்நங்கை, வரிவண்டு
தேதெனவென் றிசைபாடும்
திருத்தேவ னார்தொகையே"




என்று 1248-ஆம் பாடலில் தொடங்குகிறார் திருமங்கையாழ்வார்.

தேவர்கள் திருமந் நாராயணனைத் தரிசிக்க வந்து நின்றவிடமாதலால் இவ்வூருக்குத் திருத்தேவனார் தொகை எனப்பெயர் வந்தது. இதைக் கீழசாலை என்றும் கூறுவர். திருநாங்கூரிலிருந்து சுமார் 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. இதுவும் ஒரு திவ்யதேசமாகும்.

**"திருத்தேவ னார்தொகை தெய்வநாயன் என்பார்
திருக்கோலம் நின்ற நிலையாம் - திருநாங்கூர்
கீழ்ச்சாலை மண்ணில் கிழக்கு முகமாய்
அழகோடு காண்பான் அறி"**

திவ்யதேசம் - 36



திருத்தெற்றியம்பலம்

மூலவர் : செங்கண்மால், ரங்கநாதன்
4 புஜங்கள்
புஜங்கசயானத் திருக்கோலம்
கிழக்குத் திருமுகம்

தாயார் : செங்கமல வல்லி

தீர்த்தம் : சூரிய புட்கரணி

சிறப்பு : பள்ளி கொண்ட பெருமாள்
என்றே அழைப்பர்

மங்களாசாசனம் :
திருமங்கையாழ்வார் 1278 - 87
10 பாசுரங்கள்

"சீரணிந்த மணிமாடம்
திகழும் நாங்கூர்த்
திருத்தெற்றி யம்பலத்தென்
செங்கண் மாலை
சூரணிந்த வேல்வலவன்
ஆலி நாடன்
கொடிமாட மங்கையர்கோன்
குறைய லாளி
பாரணிந்த தொல்புகழான்
கலியன் சொன்ன
பாமாலை யிவையைந்து
மைந்தும் வல்லார்
சீரணிந்த வுலகத்து
மன்னராகிச்
சேண்விசும்பில் வானவராய்த்
திகழ்வர் தாமே"

என்று 1287-ஆம் பாடலில் கூறுகிறார் திருமங்கையாழ்வார்.

திருத்தெற்றியம்பலம் திருநாங்கூர்த் திவ்ய தேசங்களில் ஒன்றாகும். இதைப்பள்ளி கொண்ட பெருமாள் சன்னதி என்றும் கூறுவர். இங்கே பெருமாள் திருவனந்தாழ்வான் மீது பள்ளி கொண்டுள்ளார்.

சீர்காழியிலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

"திருத்தெற் றியம்பலம் திவ்யநாங்கூர் தேசம்
பெருதற் கரியதாம் பேறு - வருவோர்
அரசாளும் வல்லமை ஆகிடக் காண்பார்
முரசொலிக்கக் காணும் முகம்"



திவ்யதேசம் - 37




திருமணிக்கூடம்

மூலவர் : வரதராசப் பெருமாள்
மணிக்கூட நாயகன்
நின்ற கோலம்
கிழக்கே திருமுகம்

தாயார் : திருமாமகள் நாச்சியார் பூதேவி

தீர்த்தம் : சந்திர புட்கரணி

மங்களாசாசனம் :
திருமங்கையாழ்வார் 1288 - 97
10 பாசுரங்கள்




"குன்றமும் வானும் மண்ணும்
குளிர்புனல் திங்க ளோடு,
நின்றவெஞ் சுடரும் அல்லா
நிலைகளு மாய எந்தை
மன்றமும் வயலும் காவும்
மாடமும் மணங்கொண்டு, எங்கும்
தென்றல்வந் துலவும் நாங்கூர்த்
திருமணிக் கூடந் தானே" (1294)

என்று பஞ்சபூதங்கள் தங்குமிடமென பாடுகிறார் மங்கையார்.

**"திருமணிக் கூடம் திருநாங்கூர் மண்ணில்
வரதராசர் நின்று அருள்வார் - உரமாய்
திருமங்கை யாழ்வார் திருப்பா சுரங்கள்
பெருமாளைக் கூறும் பெரிது"**

என்று நான் பாடி வந்தேன்.

திவ்யதேசம் - 38



திருவெள்ளக்குளம் (அண்ணன் கோயில்)

மூலவர் : சீனிவாசன், கண்ணன், நாராயணன்
அண்ணன் பெருமாள்
நின்ற திருக்கோலம்
கிழக்கே திருமுகம்

தாயார் : அலர்மேல் மங்கை

உற்சவர் : பத்மாவதி, பூவார் திருமகள்

தீர்த்தம் : திருவெள்ளக் குளம்

மங்களாசாசனம் :
திருமங்கையாழ்வார் 1308 - 1317
10 பாசுரங்கள்

"கண்ணார் கடல்போல் திருமேனி கரியாய்
நண்ணார்முனை வென்றிகொள் வார்மன்னு நாங்கூர்
திண்ணார் மதிள்சூழ் திருவெள்ளக் குளத்துள்
அண்ணா, அடியே னிடரைக் களையாயே"

"பூவார் திருமா மகள்புல் லியமார்பா
நாவார் புகழ்வே தியர்மன் னியநாங்கூர்த்
தேவா! திருவெள்ளக் குளத்துறை வானே,
ஆவா! அடியா னிவன், என்றருளாயே"

என்று 1308, 1316 பாடல்களில் பெருமானிடம் அருள் கேட்கிறார் திருமங்கையாழ்வார்.

திருமங்கையாழ்வாரின் இல்லக்கிழத்தியார் குமுதவல்லித்தாயார் பிறந்த தலம் இது. ஆகவே திருமங்கையாழ்வாருக்கு மாமனார் வீட்டில் தனிமரியாதை என்று கூறலாம். அதனால்தான் வரதட்சணை கேட்பதுபோல், மாமனாரிடம் கடனை அடைக்க பொருள் கேட்பது போல, இடரைத் துடைக்க பேரருளைக் கேட்கிறார்.

ஆனால் குமுதவல்லித் தாயாரின் புராண வரலாறு என்னவென்றால், அவர் ஒரு குமுதமலரில் பிறந்தவர் என்றும், அதனால் அவருக்கு குமுதவல்லி என்ற திருநாமம் சூட்டினர் என்று கூறுவர். இவர் ஒரு பிராமணரால் கண்டெடுக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு, திருமங்கையாழ்வாருக்கு வாழ்க்கைப்பட்டார் என்று கூறுவார்கள்.

திருவெள்ளக் குளத்தை தென்திருப்பதி என்று கூறுவார்கள். ஆகவே திருவேங்கடப் பெருமானை இங்கேயே பிரார்த்தனை செய்து, திருமணங்களும் செய்கின்றனர்.




சூரிய வம்சத்தில் பிறந்த துந்துமாரன் என்ற அரசனுடைய மகன் சுவேதன் 9-வது வயதில் இந்த தலத்திற்கு வந்து புட்கரணியில் நீராடி, வில்வ மரத்தடியில் வடக்குமுகமாக அமர்ந்து மந்திரம் ஓதி தவம் செய்ய, நாராயணன் அவனுக்கு மார்க் கண்டேயன் போல தீர்க்காயுசு வழங்கியதாக தலபுராணம் கூறுகிறது.

அதாவது, சூரிய வம்சத்தில் பிறந்த துந்துமாரன் என்ற அரசனுடைய மகன் சுவேதன் என்ற 9-வயது சிறுவனுக்கு ஆயுட்குறைவு தோஷம் என்று கூற, அரசன் தன் மகனை இந்த தலத்திற்கு அழைத்து வந்து, இங்குள்ள கங்கா தீர்த்தத்தில் நீராட்டி, பிறகு மருத்தர் என்ற முனிவரின் உபதேசம் பெற்று, வில்வ மரத்தடியில் வடக்கு முகமாக அமர்ந்து மந்திரம் ஓதி தவமிருக்க சீனிவாச பெருமாள் அவன் முன்காட்சி தந்து, மார்கண்டேயனைப் போல் சாகா வரம் தந்ததாக புராணம் கூறுகிறது.

“திருநாங்கூர் வெள்ளக் குளம்அண்ணன் கோயில்
திருவேங் கடம்தென் திசைக்கு - திருமங்கை
யாழ்வார் குமுதவல்லித் தாயார் திருமணம்
சூழ்ந்து நடந்துவிடம் சொல்”

திவ்யதேசம் - 39



மூலவர் : தாமரையாள் கேள்வன்
நின்ற திருக்கோலம்
மேற்குத் திருமுகம்

உற்சவர் : பார்த்த சாரதி

தாயார் : தாமரை நாயகி

தீர்த்தம் : கங்கா தீர்த்தம்

மங்களாசாசனம் :
திருமங்கையாழ்வார் 1318 - 1327
10 பாசுரங்கள்

திருபார்த்தன்பள்ளி (திருநாங்கூர்)

"கண்ணனென்றும் வானவர்கள்
காதலித்து மலர்கள்தூவும்
எண்ணனென்று மின்பமென்றும்
மேலுலகுக் காதியென்றும்
திண்ணமாட நீடுநாங்கைத்
தேவதேவ னென்றென்றோதி
பண்ணினன்ன மென்மொழியாள்
பார்த்தன்பள்ளி பாடுவாளே"

என்று 1326-ஆம் பாசுரத்தில் திருமங்கையாழ்வார் அவர் பாடிய இந்த 10 பாசுரங்களில் தம்மை நாயகியாக பாவித்துக் கொண்டு திருமாலிடத்தில் தாம் ஈடுபட்ட செயல்களை பாக்களால் வடிவமைத்து வர்ணித்துக் கூறுகிறார்.

வர்ணபகவான் வேண்டுகோளுக்கிணங்க திருமந் நாராயணன் பார்த்தசாரதி திருக்கோலத்தில் இங்கு வந்து தொண்டு செய்வதால் இத்தலத்திற்கு திருப்பார்த்தன்பள்ளி என்று பெயரானது.

திருப்பார்த்தான் பள்ளி சீர்காழி - பூம்புகார் சாலையில் 12 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இடையிலே ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும். திருவெண் காட்டிலிருந்து 3 கிலோமீட்டர் தூரத்தில் ஒரு சிறிய பாதை உண்டு.

**"திருப்பார்த்தன் பள்ளி திருநாங்கூர் எல்லாம்
பெரும்பேறாய் நான்காணப் பெற்றேன் - உருமாறி
பார்த்தசாரி வேடமிட்டு பார்த்திடக் காட்டினார்
சேர்த்தேன் கைதன்னை வியந்து"**

இங்கே இப்போது மிகவும் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், இந்த திருநாங்கூர் திருப்பதிகளான 11-திவ்ய தேசத்திற்கும் எப்படிச் செல்வது என்பதாகும்.

போக்குவரத்து, விஞ்ஞானம், நாகரிகம், ஆடம்பரம் என்று கிராமங்களில் கூட பரவி விட்ட, 2011-ஆம் ஆண்டை தாண்டிவிட்ட இந்த காலகட்டத்தில் கூட, இந்த திருநாங்கூர் வட்டாரம் எந்த வளர்ச்சியும் அடையாமல், அந்த பழைய இயற்கைச் சூழ்நிலையிலேயே காணப்படுகிறது.

நான் எதார்த்தமாக கும்பகோணத்திலிருந்து புறப்பட்டு, சீர்காழி சென்று, அங்கிருந்து புறப்பட்டு, உள்ளூர் பேருந்து மூலம் திருநாங்கூர் திருநகரி சென்றடைந்தேன். அங்குள்ள வேதராசப் பெருமாளைத் தரிசித்துவிட்டு, சுற்றியுள்ள 11-திவ்யதேசக் கோயில்களையும் காணவேண்டும் என்று விசாரித்த போது, அங்கெல்லாம் செல்ல போதிய பேருந்து வசதிகள் கிடையாது என்று எனக்கு பதில் வந்தது. எனக்கு அதைக் கேட்டதும் தூக்கி வாரிப்போட்டது.

பிறகு என்ன செய்வது என்று கேட்டபோது, "பக்கத்து மடத்தில் ஒருவர் பூக்கட்டிக் கொண்டிருப்பார் அவரிடம் சென்று கேளுங்கள்" என்று பதில் வந்தது.

அவரைத் தேடிச் சென்று கண்டுபிடித்து, விவரத்தைச் சொன்னேன். அதற்கு அவர், நீங்கள் செல்லவிருக்கும் கோயில்களுக்குச் செல்ல பேருந்துகள் கிடையாது. நடந்தோ, சைக்கிள்களிலோதான் செல்ல வேண்டும் என்று கூறினார். எனக்குக் குழப்பம் அதிகமானது. பூ கட்டிக் கொண்டிருந்தவரைப் பார்த்து, 'உதவி செய்ய முடியுமா?' என்று கேட்டேன். அதற்கு எனக்குத் தெரிந்த சைக்கிள் கடை இருக்கிறது. அங்கு வாடகைக்கு சைக்கிள் எடுத்துக் கொண்டு செல்லலாம். நான் கூட வருகிறேன் என்று புறப்பட்டார்.

எனக்கு நிம்மதி ஏற்பட பெருமூச்சுவிட்டேன். ஆனால் அது தற்காலிகம் தான். காரணம் சைக்கிள் கிடைக்கவில்லை.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற ஒரு பழமொழி உண்டு. இங்கே எனக்கு அது உண்மையானது. எனக்கு உதவிக்கு வந்தவர் ஒரு ஏழை வைணவர். அந்த பெருமாளுக்கு மாலை கட்டிக் கொடுத்தால் கோயிலில் அவருக்கு சாப்பாடு. சைக்கிள் கடைக்கு சென்றபோது சைக்கிள் கிடைக்கவில்லை. இனி என்ன செய்வதென்று அவரிடம் நான் கேட்டபோது, "மங்கைமடம் சென்றால் சைக்கிள் கிடைக்கும். எனக்கு தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். அது இரண்டு மூன்று கிலோமீட்டர் தூரம். கொஞ்ச நேரத்தில் ஒருபஸ் வரும். அதில் போய் இறங்கி சைக்கிள் எடுத்துக் கொள்ளலாம்" என்றார். கொஞ்ச நேரம் காத்திருந்தோம். பேருந்து வரும் அடையாளமே தெரியவில்லை. அப்போது அங்கே ஒருவர் வந்தார். அவரிடம் கேட்டபோது, "சீர்காழி பஸ்தான் வரும். அதுவும் 12 மணிக்குத்தான்" என்றார். நான் மணியை பார்த்த போது 9 ஆகியிருந்தது. எனக்கு குழப்பம் அதிகரித்தது.

"இங்கு எதாவது ஆட்டோ கிடைக்குமா? அது கிடைத்தால் திருநாங்கூர் 11-தேசத்தையும் பார்க்கலாமே, எவ்வளவு கேட்பார்கள்?" என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், "ஒன்றிரண்டு ஆட்டோ இருக்கிறது. ஆனால் இப்போது அதையும் இங்கே காணவில்லை. தவிர அதிக பணம் கேட்பார்கள். மங்கைமடம் போனால் குறைந்த வாடகைக்கு கிடைக்கும்" என்றார். அதற்கு நான், "அதுதான் மங்கை மடத்திற்கு பேருந்து வரவில்லையே? பிறகு எப்படி போவது?" என்று நொந்து கொண்டேன். கும்பகோணத்திலிருந்து நான் வந்தபோது காலையில் சாப்பிடக் கூட இல்லை பசி எடுத்தது. ஆனால் அந்த திருநகரி ஊரில் ஒரு டீ கடை கூட கிடையாது. ஒரு அரைமணிநேரம் இப்படியே குழம்பிப் போய் நின்று கொண்டிருந்தோம்.


அப்போது நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்கு கொஞ்சம் தூரம், எதிரே ஒரு ஆட்டோ வந்து நின்றது. நான் அந்த வைணவரிடம் அந்த ஆட்டோவைக் காட்டினேன். அந்த ஆட்டோவை எனக்குத் தெரியும் என்று கூறி வைணவர் என்னை அங்கு அழைத்து செல்கிறார். ஆட்டோக்காரரிடம் "நான் 11-திவ்ய தேசத்தையும் பார்க்க வேண்டும், எவ்வளவு கட்டணம்?" என்று கேட்டுவிட்டு, எழுதி வைத்திருந்த திருநாங்கூர் 11-திருப்பதிகளில் பட்டியலைக் காட்டினேன். ஆட்டோக்காரர் பார்த்து விட்டு, "நல்லா எழுதி வைச்சிருக்கீங்க! எனக்கு எல்லா கோயிலும் தெரியும்" எனறு கூறி ஒரு வாடகையைக் கூறினார். நான் சரி என்று கூற, அதில் ஏறி திவ்ய தேச சுற்றுப்பயணத்தைத் தொடங்கினோம்.

நன்றாக கேளுங்கள்! என்னுடன் உதவிக்கு வந்த வைணவர் பெயர் திருமலைக்கண்ணன். வைணவத்தில் ஆழ்ந்த ஞானமுள்ளவர். அதே திருத்தொண்டில் வாழ்க்கை நடத்தி வருகிறார். ஆட்டோ ஓட்டுநர் பெயர் சிற்றரசு. ஆட்டோவில் சென்று கொண்டிருந்த போது அவர் பாடிய திவ்ய பிரபந்த பாடல்களை கேட்டு நான் பிரமித்துப் போனேன். அவர் என்னை முதலில் அழைத்துச் சென்ற திருகோயில் பார்த்தசாரதி கோயில். அங்குதான் அவர் முதலில் அழைத்துச் சென்றார். அங்கு ஒரு வயது முதிர்ந்த வைணவ அர்ச்சகர் இருந்தார். அவரிடம் ஆட்டோக்காரர் என்னை அறிமுகப் படுத்தினார். பெரியவர் எனக்கு திவ்யதேசம் பற்றி விளக்கிக் கூறினார்.

"கீதையில் பார்த்தசாரதி அர்ச்சுனனுக்கு தேரோட்டியாக வந்தார். அதுபோல நான் அந்த கண்ணனுடைய திருத்தலங்களை திவ்ய தேசங்களைக் காண இப்போது எனக்கு துணையாக அந்த கண்ணனே திருமலை கண்ணனாக, சிற்றரசாக உருமாறி வந்துள்ளார்" என்று நான் கூறியதைக் கேட்டு பெரியவர் என்னை ஆசீர்வதித்தார்.

ஆட்டோக்காரர் அந்த 11-திவ்யதேசத்திற்கு அறிமுகப்பட்டவராக இருந்தார். அங்கே பூஜை செய்யும் அர்ச்சகருக்கு பழக்கப்பட்டவராக இருந்தார். நான் திருநகரியில் ஆட்டோவில் ஏறும்போது, ஆட்டோக்காரர், "இப்போது மார்கழி மாதம்! கோயில் அதிகாலை 4 மணிக்கு திறந்து 8 மணிக்கு சாத்தியிருப்பார்கள். ஆகவே கோயில் திறந்திருக்காது. எப்படி தரிசனம் செய்வீர்கள்?" என்று கேட்டார். "கோயிலில் தரிசனம் மட்டும் எனது நோக்கம் அல்ல. அதை ஆய்வு செய்யவும் வந்திருக்கிறேன். நான் அங்கு சென்று அதன் வாசற்படியை தொட்டு கும்பிட்டால் போதும்" என்றேன். ஆனால் பெருமாள் எனக்கு அப்படி செய்யவில்லை. நாங்கள் போனபோது எல்லாக் கோயில்களும் திறந்திருந்தன. சாத்தியிருந்த கோயில்கள் திறக்கப்பட்டன. எப்படி?

ஒரு முக்கிய பிரமுகர் தன் குடும்பத்தோடு திருநாங்கூர் 11-திருப்பதிகளையும் தரிசிக்க வந்ததின் காரணமாக அவர்கள் சம்பந்தப்பட்ட அர்ச்சர்களை கூடவே அழைத்துவர அவர்கள் அந்த கோயில்களைத் திறந்து அர்ச்சனையும், ஆராதனையும் செய்தார். அந்த நேரத்தில் நானும் செல்ல, எனக்கும் அந்த அருள் கிடைத்தது. மேலாக ஓரிரு அர்ச்சகர்கள் எங்கள் ஆட்டோவிலேயே வந்து கோயிலைத் திறந்து, நாங்கள் வழிபாடு செய்ய உதவினர். ஆகவே இறைவனே எனக்கு வந்து உதவி செய்தார் என்பதில் எனக்கு முழு நம்பிக்கையானது. ஆகவேதான், "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்று கூறினேன்.



இப்போது நான் பொதுவாக கூறப்போவது என்னவென்றால், திருநாங்கூர் 11-திவ்யதேச திருப்பதிக்குச் செல்ல வேண்டுமென்றால் நாம் காரிலோ அல்லது ஆட்டோவிலோதான் செல்ல வேண்டும். தவிர அந்த கோயில் சம்பந்தப்பட்ட அர்ச்சகர் களையோ அல்லது போய் வந்து கொண்டிருக்கும் ஆட்டோவிலோ தான் செல்ல வேண்டும். தவிர இரண்டு மூன்று கோயில்களுக்கு ஒரே அர்ச்சகர் என்பதால், அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, திட்டமிட்டு இந்த திருத்தலங்களைக் காணவேண்டும். எல்லாவிதத்திற்கும் மேலாக திருநாங்கூர் வயல்களால் சூழப்பட்ட ஊர். இங்கே பேருந்து வசதிகள் மிகவும் குறைவு. புதிதாக செல்பவர்கள் வழி தெரிந்து செல்வது மிகவும் கஷ்டம். ஏனென்றால் அங்குள்ள மக்கள் வயல் வரப்புகளில் ஒரு கிலோமீட்டர் தூரம் நடந்து வந்து, பிறகுதான் பிரதான சாலைகளை அடைகிறார்கள். நமக்கெல்லாம் அந்த வழித்தடங்கள் தெரியாது. ஆகவே திருநாங்கூருக்கு குடும்பத்தோடு செல்பவர்கள் அங்குள்ள சம்பந்தப்பட்ட அர்ச்சகர்களையோ, அலுவலகர்களையோ உடன் வைத்துக் கொண்டு காரிலோ, ஆட்டோவிலோ செல்வதுதான் சரியாக இருக்கும்.

அப்படியில்லாமல் தனியாக நாம் மட்டும் சென்று பார்ப்பது என்பது மிகவும் கஷ்டமாகும்.

எப்படியோ பெருமாள் புண்ணியத்தில் நான் திருநாங்கூர் 11-திருப்பதிகளையும், சீர்காழி மற்றும் திருவாலி-திருநகரி பெருமான்களையும் தரிசித்துவிட்டு கும்பகோணம் வந்து சேர்ந்தேன்.

திவ்யதேசம் - 40



திருச்சித்ரக் கூடம் - சிதம்பரம்

மூலவர் : கோவிந்தராசன், பார்த்த சாரதி வீற்றிருக்கும் கோலம்

உற்சவர் : சித்ரக்கூடத்துள்ளான், உபயநாச்சியாருடன்

தாயார் : புண்டரீக வல்லி

தீர்த்தம் : புண்டரீக புட்கரிணி

மங்களாசாசனம் :

குலசேகராழ்வார் : 741 - 751

திருமங்கையாழ்வார் : 1158 - 1177, 2674(124)

மொத்தம் : 32 பாசுரங்கள்

தமிழ்நாட்டில் எந்தத் திருத்தலத்தைப் பாடினாலும், பேசினாலும் அவற்றோடு சிதம்பரத்தைச் சேர்க்காமல் எழுத முடியாது.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களிலேயே உயர்ந்து நிற்பது சிதம்பரமாகும். இங்கே சிவனும், பெருமாளும் சேர்ந்தேயிருக்கிறார்கள். சைவமும், வைணவமும் சங்கமித்துள்ள திருத்தலம் இதுவாகும்.

ஒரு தத்துவத்தின் சின்னம் சிதம்பரம். கலை, பண்பாடு, சிற்பம், ஓவியம் இவற்றின் அடையாளம் சிதம்பரம். வேத ஞானத்தின் ஊற்று சிதம்பரம்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன ஐவகை நிலங்கள். கண், காது, மூக்கு, வாய், மெய் என்பன ஐம்புலன்கள். பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் பஞ்சலோகம் என்பர்.

சிந்தாமணி, சூடாமணி, குளாமணி, சியந்தகமணி, கௌத்துவமணி ஐவைக் தெய்வ மணிகள் என்பர். கருமை, வெண்மை, செம்மை, பச்சை, மஞ்சள் ஐவண்ணங்கள் என்பர்.

அதுபோல ஐம்பூதம் என்பது நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்பதாகும். இந்த ஐம்பூதங்களுக்கு அடையாளம் திருக்கோயில்களேயாகும். திருவாரூர் கோயில் மண்ணாக - நிலமாக, திருவாணக்காவல் நீராக, திருவண்ணாமலை தீயாக, திருக்காளத்தி காற்றாகயிருக்க, திருச்சிதம்பரம் ஆகாயமாக உயர்ந்து நிற்கிறது.

சிதம்பரம் கோயில் 51-ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. இதற்கு நான்கு ராச கோபுரங்கள் அமைந்துள்ளன. நான்கு கோபுரங்களும் 40.5 மீட்டர் அதாவது 135 அடி உயரமுடையதாகும். இந்த ராச கோபுரங்கள் 90 அடி (27 மீட்டர்) நீளமும், 60 அடி (15 மீட்டர்) அகலமும் உடையதாகும்.

நான்கு ராசகோபுரங்களின் கீழ் அமைந்துள்ள கோபுர வாயில்கள் நான்கும் மிகவும் உயரமானவை. ஒவ்வொரு ராசகோபுர வாயிலும் 40 அடி (12 மீட்டர்) உயரம் உடையதாகும்.

தில்லை நடராசர் ஒரு கலைப்பித்தர். அதனால் ராசகோபுர வாயில்களில் இரண்டு பக்கங்களிலும் நாட்டிய முத்திரையாகிய பரதக் கலைச் சிற்பங்கள் பார்க்க அழகுடன் காட்சியளிக்கின்றன.

தேவசபை என்று சொல்லப்படுவது பேரம்பலம் ஆகும். இங்குதான் உத்சவ மூர்த்திகள் இருக்கின்றனர். மேலும் இங்குதான் தில்லைவாழ் அந்தணர்கள் சபையை கூட்டி பேசுவர்.

தேவ சபையையும், அதன் மேற்பட்ட சன்னதிகளையும் வழிபட்ட பின்னர் சென்றால் முதற்பிரகாரம் செல்ல வேண்டும். அந்த பிரகாரத்திற்கு செல்லும் வாயில் வழியாக உள்ளே சென்றால், முதலில் சிற்றம்பலத்தின் தங்க ஓடுகள் வேய்ந்த விமானம் தெரியும். இங்குதான் நடராச பெருமாளும், சிவகாம சுந்தரியும் ஆனந்த நடனம் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

சித்சபையும், கனகசபையும் ஒன்றாய் சேர்ந்த இடம் பொன்னம்பலம். சித்சபையாகிய பொன்னம் பலத்தின்மேல் ஒன்பது தங்கக் கலசங்கள் உள்ளன. இந்த ஒன்பதும் ஒன்பது சக்திகளாகும்.

பொன்னம்பலத்தில் 64 கைமரங்கள் உள்ளன. இவைகள் ஆய கலைகள் 64-ஐக் குறிப்பினவாகும். 21600 ஓடுகள் வேயப்பட்டுள்ளன. இவைகள் மனிதர்கள் ஒவ்வொரு நாளும் விடுகின்ற மூச்சு சுவாத்தின் எண்ணிக்கையைக் குறிப்பனவாகும். 72000 ஆணிகள் பொருத்தப் பட்டுள்ள இவைகள் மனிதனுடைய சுவாச சஞ்சார ஆதரமான நாடிகளின் எண்ணிக்கையை உணர்த்துவனவாகும்.

இறைவன் இந்த உலகத்தை இயக்கிக் கொண்டிருக்கிறான். அந்த இயக்கம் விஞ்ஞான அறிவியலோடு சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதற்கு இந்த சிதம்பரக் கோயில் அமைப்பே சாட்சியாகும்.

மனிதனுடைய இதயத்தையும் இறைவனே இயக்கிக் கொண்டிருக்கிறான். அதை உணர்த்தவே மனித உடல்போல கோயில்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இதைத்தான் திருமூலர்,

“உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பிலே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே”



என்றும்

“உள்ளம் பெருங்கோயில் ஊன்உடம்பு ஆலயம்
வள்ளல் பெருமானுக்கு வாய்கோ புரவாசலே
தெள்ளத் தெளிந்தார்க்கு சிவன் சிவலிங்கம்
கள்ளப் புலன்ஐந்தும் காளா மணிவிளக்கு”

என்றும் கூறுகிறார்.

கனக சபையில் உள்ள இரண்டாவது பரமேசுவரரான நந்தி பெருமானை வணங்கிய பிறகே நடராசப் பெருமானைத் தரிசிக்க வேண்டும்.

மனிதனுடைய இருதயம், உடம்பின் நடுவேயில்லாமல் இடப்புறத்தே தள்ளியிருப்பது போல, கர்ப்பக்கிருகம் திருக்கோயிலின் மத்தியில் இல்லாமல் சிறிது தள்ளி அமைந்திருக்கிறது.

மனித இருதயத்தில் இரத்தம் நேரில் செல்லாமல், பக்கங்களிலிருந்தே செல்வது போல், இந்த திருக்கோயிலும் நேராக வழி இல்லாமல் இருபக்கங்களிலுமே செல்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கனகசபையிலுள்ள 18 தூண்களும் பதினெண் புராணங்களை உணர்த்துவதுதாக அமைக்கப் பட்டுள்ளது. 5-வெள்ளிப்படிகளும் ஐந்தெழுத்துக்களை உணர்த்துவனவாக உள்ளன. 96-வெள்ளிப் பலகணிகள் தொண்ணூற்றாறு தத்துவங்களை உணர்த்துகின்றன.

சித்சபையில் உள்ள 5-தூண்களும் ஐம்பொறிகளை உணர்த்துகின்றன.

பிரமபீடத்தின் உள்ள 10-தூண்களில் கீழேயுள்ள 6-தூண்களும் ஆறு சாத்திரங்களை உணர்த்துகின்றன. மேலே இருக்கின்ற 4-தூண்களும் நான்கு வேதங்களை உணர்த்துகின்றன.

இவ்வாறு முட்டாள்தனமாக இல்லாமல், அறிவியல் தத்துவத்தோடு அமைக்கப்பட்டுள்ள பிரவண பீடம், சதாசிவ பீடங்களில் இரகசியமாக நடராசப் பெருமாளும் சிவகாம சுந்தரி அம்பாளும் எழுந்தருளியிருக்கிறார்கள்.

தயவுசெய்து பகுத்தறிவு சிந்தனைவாதிகள் இவற்றை கொஞ்சம் சிந்தனை செய்து பார்த்துவிட்டு, திருமூலரின் திருமந்திரத்தையும் படிக்க வேண்டும். அப்போதுதான் கடவுள் கல்லா, கற்றாராய வேண்டிய தெய்வமா என்று புரியும்.

ஏற்கனவே கூறியதுபோல, திருவாரூர் காஞ்சியிலே நிலமாக, திருவணைக்காவில் நீராக, திருவண்ணாமலையில் நெருப்பாக, திருக்காளத்தியில் காற்றாகயிருக்கும் இறைவன் இங்கே ஆகாயமாக இருக்கின்றார். அதுவே சிதம்பர இரகசியம் ஆகும்.

அதாவது, சிற்சபையில் சபாநாயகரின் வலப்பக்கத்தில் உள்ளது ஒரு சிறுவாயில். அதில் உள்ள திரை அகற்றப்படும். அதன்பிறகு ஆரத்தி எடுப்பார்கள். அதனுள்ளே எந்தவித உருவமும் இல்லாமல் வெற்றிடமாகக் காட்சியளிக்கும். தங்கத்தால்ஆன வில்வ தளமாலை ஒன்று மட்டும் தொங்க விடப்பட்டிருக்கும். அதுமட்டுமே தொங்கிய நிலையில் காட்சியளிக்கும். அதன் இரகசியம் இறைவன் ஆகாயமாக இருக்கிறான் என்பதாகும். இது சிதம்பர ரகசியம் ஆகும்.

இந்த சிதம்பர திருத்தலத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்தது, ஐந்து சபைகள் ஆகும். சிற்றம்பலம், பொன்னம்பலம், பேரம்பலம், நிருத்தசபை, ராசசபை என்பன அதுவாகும்.

நடராசப் பெருமாள் திருநடனம் புரியும் இடம் சிற்றம்பலம். சிற்சபை என்பர். இறைவன் இங்கு ஆக்குதல், அழித்தல், கொடுத்தல், மறைத்தல், அருளுதல் என ஐந்தொழில்கள் புரிந்து, இந்த உலகத்தை ஆட்டுவித்துக் கொண்டிருக்கிறார். அந்த ஆட்டம் நின்று போனால் நமது ஆட்டங்களும் நின்று போகும். இந்த உலக இயக்கம் நின்று விடும்.

பொன்னம்பலம், கனகசபை என்று கூறப்படும். இது சிற்றம்பலத்தின் முன்னால் உள்ளது. இது அபிடேகம் செய்யும் இடம். இங்கு படிக இலங்கத்திற்கு நாள்தோறும் ஆறுகால பூசையும், இரண்டாங் காலத்தில் இரத்தின சபாபதிக்கு அபிடேக வழிபாடும் நடக்கின்றன.

மூன்றாவது, பேரம்பலம் என்பதை 'தேவசபை' என்று கூறுவர். இப்பேரம்பலத்தில் பஞ்சமூர்த்திகளும் குடிகொண்டுள்ளனர்.

"நிறைவெண் கொடிமாடம்
நெற்றி நேர்தீண்டப்
பிறைவந் திறைகாக்கும்
பேரம்பலம்"



என்று திருஞான சம்பந்தர் பாடுவார்.

நான்காவது, நிருத்த சபை. நிருத்த சபை என்பது நடராசப் பெருமாளின் கொடிமரத்துக்குத் தென்பால் உள்ளது. நடராசப் பெருமாள் ஊர்த்துவத் தாண்டவம் செய்த இடம். இங்கே அப்பெருமான் காட்சியளிக்கிறார்.

ஐந்தாவது ராச சபையாகும். ராச சபை என்பது ஆயிரங்கால் மண்டபம். ஆனி, மார்கழி மாதங்களில் ஒன்பதாம் திருநாள் அன்று நடைபெறும். அப்போது நடராச பெருமாள் திருத்தேரில் நான்கு வீதிகளிலும் உலா வருவார். பிறகு இரவில் இந்த ஆயிரங்கால் மண்டபத்தில் தங்குவார். பிறகு விடியற்காலை எழுந்து, அபிடேகப் பூஜைகள் பெற்று, பத்தாம் நாள் பிற்பகல் பொழுதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்குத் திருக்காட்சி தருவார். அப்போது நடராசப் பெருமாள் முன்னேயும், சிவகாம சுந்தரியார் பின்னேயும் மாறி மாறி திருநடனம் புரிந்து சிற்றம்பலத்திற்கு எழுந்தருள்வார்கள். இக்காட்சியே அற்புத திருவருள் காட்சியாகும்.

அப்பர் என்னும் திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் ஆகியோர் சமயக்குரவர் நால்வர் என்று அழைக்கப்படுவர்.


அவர்களுள் மாணிக்கவாசகர் சுவாமிகள், ஈழத்தைச் சார்ந்த ஒரு புத்தமன்னன் மகள் ஊமையாக இருந்தாள். அவளை இந்த ஆயிரங்கால் மண்டபத்தில் இருத்தி, புத்தலெட்சுகளோடு வாதம் செய்து, பிறகு அவளை பேச வைத்து அருள் செய்தார்.

அதேபோல இந்த ஆயிரங்கால் மண்டபத்தில்தான் மாணிக்கவாசகர் திருவாசகத்தை பாடி அரங்கேற்றம் செய்தார். அவ்வாறு அவர் பாடிய திருவாசகத்தை, இறைவன் அந்தணர் உருவில் சென்று ஏட்டில் எழுதி, தம் கைச்சாத்திட்டு அருளினார்.

அவ்வாறே சேக்கிழார் பெருமான் 63-நாயன்மார்களின் வரலாற்றை தொகுத்து திருத்தொண்டர் தொகை என்ற பெரிய புராணத்தை இயற்றுவதற்கு இங்குவந்து இறைவனை வேண்டி, எப்படி எழுதுவது என வேண்டிநின்ற போது, இறைவன் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுக்க, சேக்கிழார் அதைத் தொடர்ந்து,

"உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்"

என்று பாடி அதை முடித்தார்.



இதற்கெல்லாம் மேலாய், நடராசப் பெருமாள் பிரம்மாவின் தலைகளை மாலையாக அணிந்திருக்கிறார். அம் மாலையில் முப்பத்திரண்டு தலைகள் உள்ளன. எம்பெருமான் ஆகும் பொழுது திருமுடியிலுள்ள சந்திரனிடமிருந்து அமிர்த தாரைகள் மாலையிலுள்ள பிரம்மாவின் தலைகளின் மீது விழ, அத்தலைகள் அமிர்த்தனுடைய சம்பந்தத்தினால் பாடத் தொடங்கின. இதிலிருந்துதான் இசை உண்டாயிற்று என்று சங்கீத சாத்திரங்கள் கூறுவதாக தல புராணங்கள் கூறுகின்றன. ஆகவேதான் இச்சபையில்லோரும், நாட்டியம் பயில்வோரும் முதலில் இந்த ஆயிரங்கால் மண்டபத்தில் வந்து அரங்கேற்றம் செய்கிறார்கள். ஆண்டவன் மூலம் அருள் பெறுகிறார்கள்.

இவ்வாறு எவ்வளவோ அற்புதங்களைக் கொண்ட இந்த சிதம்பரம் சிற்சபையின் பிரபாகரங்களைத் தரிசித்து விட்டு, கீழ்ப்பகுதிக்கு வந்தால், அங்கே மேற்கூறிய நாட்டிய சம்பந்தமான சிற்பங்களும், பிறவகைச் சிற்பங்களும் இன்னபிற கலை அற்புதங்களும் காணப்படுகிறது. இப்பிரகாரம் வழியாக, மீண்டும் நடராசர் சன்னதி வழியாக, எதிரில் உள்ள படிகளின் மேல் ஏறிச்சென்று நின்று பார்த்தால், தெற்கு முகமாக உள்ள நடராசர் சன்னதியையும், கிழக்கு முகமாக உள்ள கோவிந்தராச பெருமாள் சன்னதியை கண்டு வழிபடலாம். இவ்வாறு ஒரே இடத்தில் சிவனும், விஷ்ணுவும் சேர்ந்திருக்கும் சிறப்பு வேறு எந்த கோயில்களிலும் கிடையாது.

இந்த கோவிந்தராச பெருமான் 'சித்ரக்கூடம்' பல்லவன் நந்திவர்மன் கட்டியதாகும்.

நாம் சிதம்பரம் சித்ரகூடத்தை இவ்வாறு விவரிக்கக் காரணம், சிதம்பரம் கோயில் ஆன்மீகத்தையும், அறிவியலையும் நமக்கு உணர்த்தும் திருத்தலம். இதுபோன்ற ஒரு கோயில் எங்குமே கிடையாது என்று கூறலாம்.

தமிழ் தமிழ் என்று பகுத்தறிவுவாதிகள் பேசலாம். அந்தத் தமிழுக்கு ஆதரமாக, சின்னமாக, எவற்றை அவர்கள் கூற முடியும்?

தமிழை வளர்த்தவர்களில் முக்கிய பங்குள்ளவர் ஆழ்வார்கள், நாயன்மார்கள், சமயக்குரவர்கள், அடியார்கள் தான். அந்த தமிழுக்கு சின்னமாகத் திகழ்வது கோயில்கள்தான். கோட்டையை நீங்கள் ஆதாரமாகக் காட்டினால்கூட, அங்கேயும் கோயில்கள்தான் உள்ளன. இனி நாம் சித்ரகூட கோவிந்தராசப் பெருமாளைப் பார்ப்போம்.

சீர்காழியிலிருந்து 30 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது சிதம்பரம். சென்னையிலிருந்து நேரடி பேருந்து உண்டு. ஆனாலும் சென்னை கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி பேருந்துகள் மூலம் வரலாம்.

இந்த சித்ரகூடத்துள்ளே சிவனும், பெருமாளும், சீர்மிகு சிற்பக் கலையையும், நடனக் கலையையும் இலக்கணத்தோடு, இந்த வையத்திற்கு தந்தருளிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறலாம். சிவனும், பெருமாளும் சேர்ந்திருக்கும் கோயில்களில் இது சிறப்பு வாய்ந்ததாகும்.

தில்லை நடராசர் கோயிலுக்குள் சித்ரகூடம் அமைந்திருந்தாலும், கோவிந்தராச பெருமாளுக்கு தனிக்கோயில், கர்ப்ப கிரகம், ராஜகோபுரம், கொடிமரம், மடப்பள்ளி எல்லாம் தனியாகவே உள்ளது.

"வந்தெதிர்த்த தாடகைதன் உரத்தைக் கீறி
வருகுகுதி பொழிதரவன் கணையொன் றேவி
மந்திரங்கொள் மறைமுனிவன் வேள்வி காத்து
வல்லரக்க ருயிண்ட மைந்தன் காண்மின்,
செந்தளிர்வாய் மலர்நகைசேர் செழுந்தண் சோலைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
அந்தணர்க ளொருமூவா யிரவ ரேத்த
அணிமணியா சனத்திருந்த வம்மான் றானே" (742)

என்று குலசேகராழ்வார் பாடிய 10 பாசுரங்களில் இப்பாடல் ஒன்றாகும்.

தில்லை நடராசர் கோயிலுக்கு மூவாயிரம் அந்தணருடன் திருசித்ரகூட கோவிந்தராச பெருமாள் வந்த போது, பெருமாள் நடராசர், ஆடல் அழகைக்காண ஆசைப்பட்டபோது, ஆடலரசர் அங்கு ஆடியபோது பெருமாள் ஆனந்தமாக ரசித்துப் பார்த்தாராம். இது ஒரு ஐதீக வழக்கமாக விழா எடுக்கப்பட்டு வருகிறது.


கோவிந்தராச பெருமானின் கோயில் பக்கத்திலேயே நடராச பெருமானின் சிதம்பர ரகசிய கர்ப்ப கிரகம் இருந்து, மூடி வைக்கப்பட்டுள்ளது.

உலகிலுள்ள எல்லாவிதமான நடனங்களும் இங்கு சிற்ப வடிவில் உள்ளது. பரத முனிவர் நாட்டிய சாஸ்திரத்தை இங்குதான் உருவாக்கினார்.

தில்லை பெருமாட்டியும் நடராசரும் ஆனந்த தாண்டவம் ஆடியதால் இதற்கு தில்லை நகர் என்று பெயர் வந்தது என்று கூறுவர்.

"காடுமலைகளில் அலைந்து திரிந்து, உடம்பை வருத்தி, கிடைக்கும் காய்கனி இலை தழைகளை உண்டு, காடு, மலை, குகைகளில் கடும் தவமிருந்து மோட்சத்தையடையலாம் என்பதை விட, தில்லை சித்ரகூடத்திற்கு வந்தாலே போதும், மோட்சம் அடையலாம்" என்று திருமங்கையாழ்வார் தனது முதல் பாசுரத்திலேயே மங்களா சாசனம் செய்கிறார்.

"ஊன்வாட வுண்ணா துயிர்காவ லிட்டே
உடலிற் பிரியா புலனைந்தும் நொந்து,
தாம்வாட வாடத் தவம்செய்ய வேண்டா
தமதா இமையோ ருலகாள கிற்பீர்
கானாட மஞ்ஞைக் கணமாட மாடே
கயலாடு கானீர்ப் பழனம் புடைபோய்
தேனாட மாடக் கொடியாடு தில்லைத்
திருசித்ர கூடம் சென்றுசேர் மின்களே" (1158)



என்று திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் திருச்சித்ர கூடத்து கோவிந்தராசனை மங்களாசாசனம் செய்ததில் குலசேகராழ்வார் பாடிய 11 பாசுரங்களும், திருமங்கை யாழ்வார் பாடிய 21 பாசுரங் களுமாக மொத்தம் 32 பாசுரங்கள் உள்ளன.


நான் சித்ரகூட கோவிந்த ராசனை தரிசிக்க சென்ற நேரம் இரவு 9.00 மணிக்கு மேலாகும். ஆனால் கோயில் திறந்திருந்தது. கண்குளிர கோவிந்தராசனை கண்டு களித்தேன். திரும்பி வரும்போது சூடாக வெண்பொங்கல் கிடைத்தது. சிதம்பர ரகசிய சன்னதியில் மணியோசை யொலித்தது. ஆனந்த கூத்தாட்டத்தில் எனக்கு கவிதை பிறந்தது.

"திருசித்தி ரக்கூடம் தில்லைகோ விந்தர்
வரவழைத்துத் தந்தாய் வரத்தை - பொருளும்
அமுதமாய் பொங்கலும் ஆழ்ந்த தியான
அமைதியும் காட்டினாய் ஆடு"

சிதம்பரம் வருபவர்கள் அப்படியே 63-நாயன்மார்களான திருநீலகண்ட நாயனார், கணப்புல்ல நாயனார் சிவத்தலங்களைக் காணலாம்.

நடுநாட்டுத் திருப்பதிகள் - 2

திவ்யதேசம் - 41



திருவந்திபுரம் (அயிந்தை)

மூலவர் : தெய்வநாயகன்
நின்ற திருக்கோலம்
கிழக்கே திருமுகம்

உற்சவர் : அடியவருக்கு மெய்யன்

தாயார் : ஹேம்புஜவல்லித் தாயார்
வைகுண்ட நாயகி

தீர்த்தம் : கருடநிதி, சந்திர தீர்த்தம்

மங்களாசாசனம் :
திருமங்கையாழ்வார் : 1148 - 1157

10 பாசுரங்கள்

"வைய மேழுமுண் டாலிலை வைகிய
மாயவன், அடியவர்க்கு
மெய்ய னாகிய தெய்வநா யகனிடம்
மெய்தகு வரைச்சாரல்
மொய்கொள் மாதவி சண்பகம் முயங்க
முல்லையங் கொடியாட
செய்ய தாமரைச் செழும்பணை திகழ்தரு
தருவயிந் திரிபுரமே" (1150)

என்று இத்தலத்தை திருமங்கையாழ்வார் 16 - பாசுரங்கள் மங்களாசாசனம் செய்துள்ளார்.

நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் 1148 முதல் 1157 வரை அந்த பாடல்கள் வருகின்றன. தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் சண்டை ஏற்பட்ட போது, சிவன், பிரமன், விஷ்ணு மூவரும் அதில் சம்பந்தப்பட்ட இடம் இந்த திருவந்திபுரம் ஆகும்.

108-திவ்யதேசங்களில் சில திருப்பதிகளின் பெயருக்குள்ளே எப்படியோ வடமொழிச் சொற்கள் இடைச் சேர்க்கையாகச் சேர்க்கப்பட்டுள்ளன என்று எனக்குத் தெரிகிறது.

ஸ்ரீரங்கம், திருவஹீந்த்ரபுரம், ஸ்ரீவில்லிப்புத்தூர், ஸ்ரீவைகுண்டம் என்பனவெல்லாம் இடச் சேர்க்கைக்குட்பட்ட பெயராக எனக்குத் தெரிகிறது.

41-வது திவ்ய தேசமாக வருவது திருவஹீந்த்புரம் ஆகும். ஆனால் அங்கு அந்த திருப்பதியில் பெயர் திருவந்திபுரம் என்றே எழுதப்பட்டுள்ளது.

"கற்றது கையளவு கல்லாதது கடலளவு, உலகளவு" என்று கூறுவார்கள். சில நேரங்களில் நாம் எல்லாம் தெரிந்துவிட்டது போல நடந்து கொள்வோம். பிறகு பார்த்தால், அது தவறு, இன்னும் நமக்கு தெரிய வேண்டியது நிறைய உள்ளது என்பன போன்ற ஒரு சில நிகழ்ச்சிகள் நடக்கும்.

108-திவ்ய தேசய யாத்திரையின் போது எனக்கு அப்படியொரு அனுபவம் ஏற்பட்டது. காதை கை மூலம் முகத்துக்கு முன்னே சென்று தொடாமல், தலையைச் சுற்றி பின்னே சென்று தொடுவது போன்ற ஒரு அனுபவம் திருவந்திபுரம் திருக்கோயில் சென்றபோது எனக்கு ஏற்பட்டது.

நடுநாட்டு திருப்பதிகள் என்று குறிப்பிடப்படுவன திருக்கோவலூர், திருவந்திபுரம் என்ற இரண்டு திருத்தலங்கள் மட்டுந்தான்.

அதில் முன்னமே நான் திருக்கோவலூர் சென்று விட்டேன். அதுவும் சரியாக வழித்தடம் தெரியாமல் அப்படி செல்ல வேண்டியதாயிற்று. அதே போல திருவந்திபுரம் கோயில் சென்ற போது ஏற்பட்டதை உணர்ந்தேன்.

திருவந்திபுரம் ரயில்மார்க்கமாகச் செல்லும் போது சென்னை - திருச்சி செல்லும் வழியில் திருப்பாதிரி புலியூரில் இருக்கிறது. ரயிலில் செல்லும் போது, திருப்பாதிரி புலியூரில் இறங்கி, மேற்கே 5 கிலோமீட்டர் தூரம் சென்றால் திருவந்திபுரம் வரும்.

நான் கடலூர் செல்லும் பேருந்தில் சென்னையிலிருந்து பாண்டிச்சேரி வழியாக கடலூர் சென்று, அங்கிருந்து நகரப்பேருந்து மூலம் திருவந்திபுரம் சென்றேன். அங்கிருந்து மூன்று ரூபாய் கொடுத்தால் ஆட்டோ மூலம் கோயிலை அடையலாம். நடந்தும் செல்லலாம்.

அப்படி சென்ற போதுதான் எனக்கு ஒரு உண்மை தெரிந்தது. அதாவது கடலூரிலிருந்து பண்ருட்டிக்கு பேருந்துகள் போய் வந்தவண்ணமாக இருக்கின்றன. கடலூரிலிருந்து திருக்கோவிலூருக்கு 65 கிலோமீட்டர்தான் உள்ளது என்று மைல்கல் மூலம் தெரிந்து கொண்டேன்.

அப்படி பார்க்கும்போது, நடுநாட்டு திருப்பதிகள் பார்க்க செல்லும் போது இரண்டு கோயில்களையும் ஒரே நாளில் பார்த்துவிடலாம். பார்த்து விடவேண்டும். அப்படிப் பார்த்தால் காலநேரமும், பணமும் நிறைய மிச்சமாகும். சென்னையிலிருந்து வருபவர்கள் ரயில் மூலமோ, பேருந்து மூலமோ கடலூர் வந்து, திருவந்திபுரம் கோயிலை தரிசித்துவிட்டு, பிறகு பண்ருட்டி வந்து திருக்கோவலூர் செல்லாம். அல்லது விழுப்புரம் சென்று திருக்கோவலூர் தரிசித்து விட்டு, அங்கிருந்து கடலூர் பேருந்து மூலமாக திருவந்திபுரம் வரலாம். அதுதான் நடுநாட்டு திருப்பதிகள் செல்ல சரியான பயணத்திட்டமாகும்.

ஒரு காலத்தில் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் சண்டை ஏற்பட்டது. தேவர்கள் நாராயணன் உதவியை நாடினர். அசுரர்கள் சிவபெருமான் உதவியை நாடினர். அப்போது நாராயணனும், சிவனும் சந்தித்து, தெய்வ வழிபாட்டில் பேதம் வரக்கூடாது என்ற தத்துவத்தை உலகத்திற்கு உணர்த்த வேண்டுமென்று ஒரு முடிவு செய்து கொண்டு, இருவரும் எதிரிகள் போல் சண்டையிட்டனர். சண்டையில் தேவர்கள் தோற்று நாராயணனை சரணடைந்தனர். அப்போது நாராயணன் சிவன், விஷ்ணு, பிரமன் என மும்மூர்த்தியாக காட்சி தந்து தேவர்களுக்கு அருள்பாலித்தார். ஆகவே இங்கே நாராயணனுக்கு தேவநாதன் என்ற பெயர் விளங்குவதாயிற்று.

இங்கே நாராயணன் தேவநாதன் உருவில் பக்தர்களுக்கு காட்சியளிக்கிறார். இதுவே அகிந்தரன் எனப்படும் ஆதிசேஷன் ஒரு நகரத்தை உண்டு பண்ணினார். அதுவே திருஅகிந்திரபுரம் என்றாயிற்று. பக்தர்கள் சிவனை தரிசிக்க எண்ணி பக்கத்தில் திருப்பாதிரி புலியூர் அவர் சிவனாக குடிகொண்டார். திருப்பாதிரி புலியூர் அந்த காலத்தில் பாடலிபுத்திரம் என்ற பெயரில் விளங்கியது.

"இருவராம் தேவர் அசுரரின் சண்டை
பெரும்போராய் ஆகிப் பிறகு - ஒருவரே
திருமால் சிவனும் பிரம்மன் உருவாய்
திருவந்தி யூர்வந்தார் நின்று"



திவ்யதேசம் - 42



திருக்கோவிலூர்
(உலகளந்த திரிவிக்ரம்)

மூலவர் : திரிவிக்ரமன்
திருவடியை உயரத்தூக்கிய நிலை
நின்ற திருக்கோலம்
கிழக்கே திருமுக மண்டபம்

உற்சவர் : ஆயனார் - கோபாலன்

தாயார் : பூங்கோவல் நாச்சியார்

உற்சவர் : புஷ்பவல்லி

தீர்த்தம் : பெண்ணையாறு
கிருஷ்ண தீர்த்தம் - சக்ர தீர்த்தம்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1078, 1138-1147, 1569, 1641, 2057, 2058, 2068, 2673(69), 2674(122)

பொய்கையாழ்வார் : 2158, 2167

பூதத்தாழ்வார் : 2251

மொத்தம் : 21 பாசுரங்கள்

"மஞ்சாடு வரையேழும் கடல்க ளேழும்
வானகமும் மண்ணகமும் மற்று மெல்லாம்
எஞ்சாமல் வயிற்றடங்கி யாலின் மேலோர்
இளந்தளிரில் கண்வளர்ந்த ஈசன் றன்னை
துஞ்சாநீர் வளஞ்சுரக்கும் பெண்ணைத் தென்பால்
தூயநான் மறையாளர் சோமுச் செய்ய,
செஞ்சாலி விளைவயலுள் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே"

என்று இத்திருத்தலத்தை திருமங்கையாழ்வார் தொடங்குவார். மஞ்சாடு என 1138 ஆம் பாடலாய் இப்பாசுரம் தொடங்கும்.

"நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்
பாயும் பனிமறைத்த பண்பாளா - வாயில்
கடைகழியா வுள்புகாக் காமர்பூங் கோவல்
இடைகழியே பற்றி யினி"

என்று 2167 ஆம் பாடலில் பொய்கையாழ்வார் பொழிவார்.

திருக்கோவலூர் திருக்கோயிலூர் என்று வழக்குச்சொல் திருத்தலமாக விளங்கி வருகிறது. இந்த கோயிலுக்கு விழுப்புரம்-காட்பாடி ரயிலில் சென்று, திருக்கோவிலூர் நிலையத்தில் இறங்கிச் செல்லலாம். ரயில் நிலையத்திலிருந்து 3 கிலோமீட்டர் தூரம்.

சென்னையிலிருந்து அல்லது மற்ற மாவட்டங்களிலிருந்தோ வருபவர்கள் பேருந்து மூலம் விழுப்புரம் வந்து திருக்கோவிலூர் வரலாம். ஆனால் கள்ளக்குறிச்சி-திருக்கோவிலூருக்கு நேரடியாக அதிகப் பேருந்துகள் உள்ளன. ஆகவே கள்ளக்குறிச்சியிலிருந்து வருவது நல்லது. கோவை, சேலம், ஈரோடு, நீலகிரி பகுதியிலிருந்து வருபவர்கள் கள்ளக்குறிச்சி வந்து வரலாம். தெற்கு மாவட்டங்களிலிருந்து வருபவர்கள் கடலூர் வந்து வருவது சிறந்தது.

நடுநாட்டுத் திருப்பதிகளாகிய திருவந்திபுரம், திருக்கோவிலூர் செல்பவர்கள் அந்த இரண்டு தலங்களையும் சேர்ந்து பார்ப்பதே வசதியாகும். அதுவும் கடலூர் சென்று திருவந்திபுரம் தரிசித்த பின்னர் திருக்கோவிலூர் சென்று தரிசிப்பது சிறப்பாகும்.

திருக்கோவிலூர் சிறப்பு வாய்ந்த ஒரு திருக்கோயிலாகும். இது பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற மூன்றுபேரையும் ஒன்று சேர்த்த திருத்தலமாகும். அதனால் இவர் முதலாழ்வார்கள் என்று அழைக்கப்பட்டனர்.



“வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக – செய்ய
கடராழி யானாடி சூட்டினேன் சொல்மாலை
இடராழி, நீக்குவே யென்று”

என்று பொய்கையாழ்வாரும்,

“அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா – நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்”

என்று பூதத்தாழ்வாரும்,

“திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் – செருக்கிளரும்
பொன்னாளி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பாள் இன்று”

என்று பேயாழ்வாரும் திருக்கோவிலூர் திரிவிக்ரம பெருமாளைப் பாடுகிறார்கள்.

இறைவனாகிய திருக்கோயிலூர் திரிவிக்ரம பெருமாள் இந்த பொய்கையாழ்வார், பூதத்தார், பேயாழ்வார் மூன்றுபேரையும் ஒன்று சேர்த்து பார்க்கும் நோக்கில் நாடகம் ஆடுகிறார். பெருமாள் அங்கு வந்து அந்த மூவருக்கும் சங்கு சக்கர கோலத்தில் காட்சியளிக்கிறார். அந்த காட்சி கண்டு மெய்மறந்த முதலாழ்வார்கள் மூவரும் பாடிய பாடல்களே முதலில் நாம் கூறிய பாடலாகும்.

அந்த பாடல்களை அவர்கள் பாடிய திருத்தலமே இந்த திருக்கோவிலூராகும். அந்த பாடல்களில் பொய்கையார் கடலை எண்ணெயாகவும், பூமியை திரியாகவும், சூரியனை விளக்காகவும் வைத்துப் பாடினார். பூதத்தாழ்வார் மனதை திரியாகவும், பக்தியை எண்ணெயாகவும், அறிவை விளக்காகவும் வைத்துப் பாடினார். பேயாழ்வார் அதுபோல அவர் திருவுருவத்தைப் போற்றி பாடினார்.

அந்த திருக்காட்சியைத்தான் இந்த மூன்று ஆழ்வார்களும் 'வையம் தகளி', 'அன்பே தகளி', 'திருக்கண்டேன்' என்று மூவரும் மூன்று அந்தாதிகளை அருளினர். அவற்றில், பொய்கையார் பாடியது முதற்றிருவந்தாதி, பூதத்தாழ்வார் பாடியது இரண்டாந்திருவந்தாதி, பேயாழ்வார் பாடியது மூன்றாந்திருவந்தாதி ஆகும்.

இந்த திருக்கோயில் பஞ்சகிருஷ்ணாரண்யத் திருத்தலங்களில் ஒன்றாகும். திருக்கண்ணங்குடி, திருக்கண்ணகவித்தலம், திருக்கண்ணபுரம், திருக்கண்ணமங்கை என்பன மற்ற நான்கு தலங்களாகும்.

திருக்கோவிலூர் உலகளந்த திரிவிக்ரம பெருமாள் திருக்கோவில் :

மிருகண்டு முனிவருக்கு மகாவிஷ்ணுவின் திரிவிக்ரம அவதாரத்தைக் காண வேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. அதற்காக அவர் திருக்கோவிலூர் தென்பெண்ணை ஆற்றங்கரையில் ஆசிரமம் அமைத்து தவமிருந்தார்.

அப்போதுதான் திவ்ய தேசங்களை திருவலம் வந்து கொண்டிருந்த பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மூவரும் இங்கு வந்தார்கள். மூவரையும் ஒன்று சேர்க்க நினைத்த திரிவிக்ரமர் மழையை வரவழைத்தார். அந்த மழைக்கு முதலில் ஒதுங்கிய பொய்கையார் நடந்து வந்த களைப்பால் அப்படியே படுத்துக் கொண்டார். அப்போது இரண்டாவதாக வந்த பூதத்தாழ்வார் கொஞ்சம் இங்கே மழைக்கு ஒதுங்கலாமா? என்று கேட்க, 'ஒருவர் படுக்கலாம் இருவர் அமரலாம்' என்று கூறி, பொய்கையாழ்வார் அவருக்கு இடம் கொடுக்க, இருவரும் அமர்ந்து கொண்டார்கள். அப்போது மூன்றாவதாக மழைக்கு ஒதுங்க வந்த பேயாழ்வார் தானும் ஒதுங்க இடம் கேட்க, அதற்கு அவர்கள் ஒருவர் படுக்கலாம், இருவர் அமரலாம், மூவர் நிற்கலாம் என்று கூறி, இடம் கொடுக்க, மூவரும் நின்றனர். அப்போது இடி, மின்னலும் அதிகரிக்க, அவர்கள் நின்ற இடத்தில் அந்த இடகழியில் இன்னொருவரும் வந்து நிற்பது போல நெருக்குதல் ஏற்பட்டு இடநெருக்கடி ஏற்பட, அதை உணர்ந்த அந்த மூன்று ஆழ்வார்களும் என்ன இது இப்படி இடநெருக்கடி ஏற்படுகிறது? யார் நம்மை நெருக்குவது? என்று கேட்க, 'யாம் உங்களை நெருக்க வரவில்லை, நெருங்க வந்தோம்' என்று கூறி திரிவிக்ரம் அவர்களுக்கு நான்கு கைகளுடன் வலது காலை தூக்கியபடி காட்சி தந்தார். அந்த காட்சியை மிருகண்டு முனிவரும் கண்டு களித்து தன் தவபேற்றை நிறைவேற்றிக் கொண்டார்.

இந்த கோயில் பெருமாளுக்கு உலகளந்த பெருமாள் என்று ஏன் பெயர் வந்தது? பெருமாள் ஏன் வலது காலை தூக்கி நின்று காட்சி தருகிறார்?

மகாபலி என்ற சக்ரவர்த்தி உலகத்தில் தன்னைவிட கொடை குணத்தில் உயர்ந்தவர்கள் யாருமில்லை என்று இறுமாப்புக் கொண்டிருந்தான். அவனுக்கு பாடம் புகட்ட எண்ணினார் திரிவிக்ரமர். அதற்காக அவர் வாமனவதாரம் எடுத்தார். வாமனம் என்பது குள்ள உருவம் ஆகும். அந்த குள்ள உருவத்துடன் மகாபலி அரசனிடம் போய், "தனக்கு குடியிருக்க மூன்றடி நிலம் தானமாய் தரவேண்டும்'' என்று கேட்டார். தன் முழங்கால் அளவுக்கு மூன்றடியில் நின்று கொண்டிருந்த குள்ளனை ஏளனமாகப் பார்த்த மாபலி அரசன், "மூன்றடி நிலந்தானே, எடுத்துக் கொள்" என்றான். அப்போது திருமால் ஒருகால் பூமியைத் தொட்டு நிற்க, இன்னொரு கால் அதாவது வலதுகால் விண்ணைத் தொட்டு நிற்க காட்சி தந்தார். அரசன் அவரை அளந்த போது ஓரடியால் மண்ணையும், ஈரடியால் விண்ணையும் அளந்து நின்றான். அப்போது இறைவன் "இரண்டடிதானே கொடுத்துள்ளாய், மூன்றடி எங்கே?" என்று கேட்க, அரசன் தன் இறுமாப்பை உணர்ந்து, அடங்கி, தன் கையை கட்டி இறைவன் தாள் பணிந்து நிற்க, இறைவன், மூன்றாம் அடியால் அவன் தலைமீது தன் காலை வைக்க, அவன் பாதாளம் சென்றடைந்தான்" என்று கதை கூறுகிறது. ஆகவே திரிவிக்ரமரும் உலகளந்த பெருமாள் என்ற பெயர் ஏற்பட்டது.

இந்த கோயிலின் தல விருட்சம் புன்னை மரம். மூன்று பெரிய கோபுரங்களும், சிறிய கோபுரங்களும் இந்தக் கோயிலுக்கு அழகு சேர்க்கின்றன. கோயிலுக்கு வடக்கே தென்பெண்ணை ஆறு ஓடுகிறது.

கோயிலின் ராஜகோபுரம் ஏழு நிலைகளும் சுமார் 150 அடி உயரமும் உடையது. தமிழ்நாட்டில் இரண்டாவது மிக உயரமான கோபுரம் இதுவாகும்.

"பொய்கையார் பேயாழ்வார் பூதத்தார் மூவரையும்
தெய்வம் பெருமானார் சேர்த்த - வையமாம்
திருக்கோவில் காணும் திரிவிக் ரமனாய்
பெருவுல களந்ததரு மால்"

திருகோயிலூரில் மெய்பொருள் நாயனார் வாழ்ந்த சிவத்தலம் மற்றும் பண்ருட்டி வழியில் திருநாவலூர் சுந்தரமூர்த்தி நாயனார், சடையர், சேந்தமங்கலம் நரசிங்க முனையர் மற்றும் பண்ருட்டி வந்து திருநீலகண்டயாழ்ப்பாணர், பெண்ணாடம் கலிகம்ப நாயனார் ஆகிய சிவ தலங்களை தரிசித்து வரலாம்.




தொண்டை நாடு மற்றும் நடு நாட்டுத் திருப்பதிகள்





தொண்டை நாட்டுத் திருப்பதிகள் - 22

திவ்யதேசம் - 43



திருக்கச்சி - அத்திகிரி
அந்தியூர் - காஞ்சிபுரம்

மூலவர் : வரதராசன், பேரருளாளன், தேவாதிராசன், தேவ பெருமாள்
நின்ற திருக்கோலம்
மேற்கே திருமுகம்

தாயார் : பெருந்தேவி தாயார்

தீர்த்தம் : வேகநதி, அனந்தசரசு, சேச, வராக, பிரம்ம, பத்ம, அக்னிகுசல முதலிய பல தீர்த்தங்கள்

மங்களாசாசனம் :
திருமங்கையாழ்வார் : 1541, 2050, 2060, 2066
பூதத்தாழ்வார் : 2276, 2277
பேயாழ்வார் : 2307

மொத்தம் : 7 பாசுரங்கள்

காஞ்சிபுரம் என்றாலே கருணைக் கடவுள்கள் குடி கொண்டுள்ள திருத்தலம் என்று கூறலாம்.

கற்பனை செய்ய முடியாத அற்புதமான கற்களால் செதுக்கப்பட்ட பொற்கோயில்கள் என கம்பீரமாக நிற்கின்ற அழகான ஊர். இங்குள்ள இறைவனின் பொற்பாதங்களை தொட்டுக் கும்பிட்டால் புண்ணியங்கள் பல கோடி எனக் கூறுவர்.

சைவம், வைணவம் என இங்கே கோயில்கள் குவிந்து காணப்படுகின்றன.

இப்போதும் சொல்கின்றேன், இங்குள்ள சைவ, வைணவக் கோயில்கள் மட்டுமல்ல, கும்பகோணம் திருநாங்கூர் - 11 திருத்தலங்கள், தெற்கேயுள்ள தென்திருப்பதி - 9 என எல்லாவற்றையுமே தனியாக ஒரு காரோ, சிற்றூந்தோ எடுத்துச் சென்று பார்ப்பதுதான் நல்லது என்று கூறுவேன். அதுவும் குடும்பத்தோடு செல்பவர்கள் அவ்வாறே செல்ல வேண்டும்.

இல்லையென்றால் பாருங்கள், இங்கே திருமங்கையாழ்வார் அவர்களைத் தேடி அலைவது போல நாமும் தேடித்தேடி கஷ்டப்பட வேண்டியதுதான்.

"வங்கத்தால் மாமணிவந் துந்து முந்நீர்
மல்லையாய்! மதிள்கச்சி யூராய்! பேராய்
கொங்கத்தார் வளங்கொன்றை யலங்கல் மார்வன்
குலவரையன் மடப்பாவை யிடப்பால் கொண்டான்
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்
பணிவரையி னுச்சியாய்! பவள வண்ணா
எங்குற்றாய் எம்பெருமான்! உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதரு கேனே!"

என்று திருமங்கையாழ்வார் பாடுவார். இந்தப் பாசுரம் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் 2060 ஆம் பாடலாக வருகிறது.

"அத்தியூ ரான்புள்ளை யூர்வான், அணிமணிக்கு
துத்திசேர் நாகத்தின் மேல்துயில்வான் – முத்தீ
மறையாவான் மாகடல்நஞ் சுண்டான் றனக்கும்
இறையாவான் எங்கள் பரான்"

என்று 2277 ஆம் பாடலில் பூதத்தாழ்வார் பாடுகிறார்.

"சிறந்தவென் சிந்தையும் செங்கண் அரவும்
நிறைந்தசீர் நீள்கச்சி, யுள்ளும் – உறைந்ததுவும்,
வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப் பாடியுமே,
தாம்கடவார் தாண்டுழா யார்"

என்று பேயாழ்வார் பாடுகிறார்.

பொய்கையாழ்வார் புண்ணிய தலம் இது. திருவரங்கத்தைப் போலவே வேத விற்பனர்களில் கதாகாலச் சேபங்களாலும், மற்றபல உபதேசங்களாலும் வைணவம் வளர்க்கப்பட்ட திவ்யதேசம் இது. இங்கு குளத்தில் மூழ்கிக் கிடத்தப்பட்டிருக்கும் அத்திவரதர் என்ற அத்தி மரத்தாலான சிலை 40 வருடங்களுக்கொரு முறை வெளியே எடுத்துக் கொண்டு வரப்பட்டு 10 நாட்களுக்கு விழாவாகக் கொண்டாடப்படுகிறது.



இங்கே கச்சிப் பெருமானின் விசாக கருடசேவை சிறப்புமிக்கதாகும்.

ஐராவதமே மலையுருவத்தில் எம்பெருமாளைத் தாங்கி நின்றமையால், இதற்கு அத்திகிரி என்றும், வேதகிரி என்றும் பெயர் வந்தது என்று கூறுவர்.

இங்கு பிரம்மா செய்த யாகத்திற்கு உட்பட்டு எம்பெருமாள் வரம் தந்ததால், வரதராசப் பெருமாள் என்று அழைக்கப்படுகிறார்.



இங்கே பெருமாளைத் தவிர, மேலே ஒட்டியுள்ள பல்லிகளை வணங்கிச் சென்றால் பாவம் தீரும் என்று கூறுவர்.

அயோத்தியாதிபதியான சகரனுடைய மகன் அசமஞ்சனும், அவன் மனைவியும் சாபவசத்தால் பல்லிகளாக மாறினர். உபமன்யு என்பவர் இந்தப் பல்லிகளை வரதராசப் பெருமாளுக்கு பணி செய்ய வைத்ததின் பயனாக, அவைகள் சுய உருவம் பெற்று சுவர்க்கம் சென்றன. உபமன்யுவின் சரணாகதி அற்புதங்கள் உலகுக்கு நிரந்தரமாக பிரகாசிக்க பல்லிகளின் உருவங்கள் கோயில் பிரகாரத்திலேயே இருக்கட்டும் என்றும், தன்னை வணங்கவரும் பக்தர்கள், அந்த பல்லிகளையும் தொட்டு வணங்கிச் சென்றால் அவர்கள் செய்த பாவங்களும், நோய் நொடிகளும் நீங்கும்" என்று வரதராசப் பெருமாள் திருவருள் புரிந்தார். அவ்வாறே இங்கே பாவங்கள் செய்தோரும், பற்பல நோய்களில் கஷ்டப்படுவோரும் இங்கே வந்து கச்சிநாதரை வணங்கியும், பல்லிகளைத் தொட்டு வணங்கியும் நற்பயன் பெற்று செல்கிறார்கள்.

கச்சி வரதராசர் காஞ்சித் திருக்கோயில்
உச்சியில் வெள்ளிதங்கப் பல்லியுண்டு - நிச்சியம்
பாவநோய் தீரும்! பகவான் அருள்வார்
பாவலர் பொய்கையாழ்வார் ஊர்

பொய்கையாழ்வார் :


பொய்கையார்

17-12-2006 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நான் சென்னையிலிருந்து பூவிருந்தவல்லி சென்று, அங்கிருந்து பேருந்து மூலம் காஞ்சிபுரம் சென்றேன்.

சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து பூவிருந்தவல்லி வழியாக நிறைய பேருந்துகள் காஞ்சிபுரம் செல்கின்றன. எல்லா திசைகளிலிருந்து இங்கே செல்ல பேருந்து வசதியுண்டு.

சென்னை - செங்கற்பட்டு ரயில்பாதை வழியாகவும், கடற்கரை - காஞ்சீபுரம் ரயில்பாதை வழியாகவும் காஞ்சிபுரம் செல்லலாம்.

பொதுவாக, சரியாகச் சொன்னால் காஞ்சிபுரம் செல்வதென்றால் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையம் சென்று, அங்கிருந்து காஞ்சிபுரம் செல்வதுதான் சரியாக இருக்கும். பூவிருந்தவல்லி வழியாகச் செல்லும் பேருந்தில் செல்வதுதான் பக்கமாகவும், காலநேரம் குறைவாகவும் இருக்கும்.


தொண்டை நாட்டின் தலைநகரம் காஞ்சிபுரம் ஆகும். இதை கச்சி என்றும், திருஅத்தியூர் என்றும் கூறுவர். இதை திருமழிசையாழ்வார் வரலாற்றில் பார்த்தால், 'பூங்கச்சி' என்று கணிக்கண்ணரும், காமரு பூங்கச்சி என்று திருமழிசையாழ்வாரும் பாடியிருப்பதைப் பார்க்கலாம். சின்ன காஞ்சிபுரம் என்றும் கூறுவர்.

இங்கே குடிகொண்டுள்ள பெருமாள் திருயதோக்தகாரி பெருமாள் என்பர். திருமழிசையாழ்வார் வரலாற்றுப்படி **"சொன்ன வண்ணம் செய்த பெருமாள்"** என்றும் கூறுவர்.

பிரம்மன் செய்த வேள்வியை அழிக்கவந்த வேகவதி நதியைத் தடுப்பதற்காகக் குறுக்கே அணையாகப் பள்ளி கொண்டவராதலால் இப்பெருமாளுக்கு வேகாசேது என்று பெயர் ஏற்பட்டது. பிறகு அதுவே மருவி திருவெஃகா என்ற திருத்தலமாக மாறியது என்று திருக்கோயில் தலவரலாறு கூறும்.

திருவெஃகா யாதோத்காரி என்னும் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோயில் பக்கமுள்ள பொய்கையில் தேவர்களும், வானுலகத் தேவியரும் நீராடி மகிழ்வர். அங்கே நீராடினால் யாவருக்கும் வீடு பேற்றைக் கொடுக்கும். அப்பொய்கை, பெருமானின் கருணையுள்ளம் போன்று குளிர்ச்சியுடையதாகும். அப்பொய்கையிலே அழகிய நறுமணங் கமழும் செந்தாமரையும், வெண் தாமரையும், கருங்குவளை நீரோற்பலம், அல்லி போன்ற மலர்கள் இதழ் விரித்துப் பூத்துகுலுங்கும். அம்மலர்களிலே உண்டான தேனை உண்டு வண்டினங்கள் மயங்கித் திண்டாடித் தவிக்கும். அன்னக் கூட்டங்கள் கூட்டங்கூட்டமாக அந்த மலர் கூட்டங்களிக்கிடையே புகுந்து புகுந்து நீந்திச் செல்லும்.

இவ்வாறான மேற்சிறப்புப் பெற்ற பொய்கைக் குளிர்ச் சோலையிலே பூத்த தாமரைப் பூவிலே, துளசி செடிபோல் வாசம் மிகுந்து, ஞானச் சுடரொளியாக பூத்தவர்தான் பொய்கையார் ஆவார். பொய்கையிலே பிறந்ததால் அவருக்கு பொய்கையார் என்ற பெயர் ஏற்பட்டது.



சித்தார்த்தி வருடம் ஐப்பசி மாதத்தில் சுக்லாஷ்டமி செவ்வாய்க்கிழமையன்று திருவோண நட்சத்திரத்தில் திருவரங்கப் பெருமானின் ஐம்படைகளில் ஒன்றாகிய பஞ்ச சந்தியம் என்னும் திருச்சங்கின் அம்சமாக பொய்கையாழ்வார் அவதரித்தார்.

பொய்கையாழ்வார் கற்பனயாவற்றையும் கசடற கற்றுத் தேர்ந்தார். நாராயணனே யாவும் என இவர்தம் பாடல் மூலம் தெரிவிக்கிறார்.

நாலாயிரம் திவ்யப்பிரபந்தம் தோன்ற மூல ஆழ்வாராக இவர் திகழ்கிறார். முதலாழ்வார் மூவரில் இவர் முதல் ஆழ்வார் ஆவார்.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் பேயாழ்வார் மூவரும் திருக்கோவலூரில் இடக்காழியில் சந்தித்த போது, இறைவன் நாராயணன் நான்காவதாக வந்து, இடநெருக்கடி தந்து, பிறகு இவர்களுக்குக் காட்சி தந்தார். அப்போது மூவரும் ஒவ்வொரு பாடலைப் பாடுகிறார்கள். அதில் இவர் பாடும் பாடல்,



"வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்யக் கதிரோன் விளக்காக – செய்யகத்
சுடராழி யானடிக்கே சூட்டினேன்சொன் மாலை
இடராழி நீங்குகவே என்று"

என்பதாகும். இப்பாடலே நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் இவர் பாடிய முதற்திருவந்தாதியில் முதல் பாடலாகத் தொடங்குகிறது.

"ஓரடியும் சாடுதைத்த ஒண்மலர்ச் சேவடியும்
ஈரடியும் காணலா மென்நெஞ்சே – ஓரடியில்
தாயவனைக் கேசவனைத் தண்டுழாய் மாலைசேர்
மாயவனை யேமனத்து வை"


என்ற இந்த வெண்பாப் பாடல் நூறாவது பாடலாக முடிகிறது.

"வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கில் நீள்கோவல் பொன்னகரும் – நான்கிடந்த
நின்றா னிருந்தான் கிடந்தான் நடந்தனே
என்றால் கெடுமாம் இடர்"

என்ற பாடலில் திருவெஃகாவை குறிப்பிடுகிறார்.

ஆயினும் திருவெஃகா திருத்தலத்தில் இவர் பிறந்திருந்தாலும், இவர் பற்றிய செய்தி வேறு அதிகமாக இல்லை. திருவெஃகாவுக்கு திருமழிசையிலிருந்து வந்த திருமழிசையாழ்வார் பற்றிய செய்திகளே அதிகமாக வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திவ்யதேசம் - 44



அஷ்டபுயகரம் (காஞ்சீபுரம்)

மூலவர் : ஆதிகேசவப் பெருமாள்
கசேந்திரவர்மன், சக்ரதரர்
நிற்கும் திருக்கோலம்
மேற்கு திருமுகம்

தாயார் : அலர்மேல் மங்கை பத்மாசினி

தீர்த்தம் : கசேந்திர புட்கரணி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1118-1127, 2674(128)

பேயாழ்வார் : 2380

மொத்தம் : 12பாசுரங்கள்

"கலைகளும் வேதமும் நீதி நூலும்
கற்பகமும் சொற்பொருள் தானும், மற்றை
நிலைகளும் வானவர்க் கும்பிறர்க்கும்
நீர்மையி னாருள் செய்து, நீண்ட
மலைகளும் மாமணி யும்மலர் மேல்
மங்கையும் சங்கமும் தங்குகின்ற
அலைகடல் போன்றிவ ரார்கொலென்ன
அட்ட புயகரத் தேனென்றாரே" (1122)

என்று 1123-ஆம் பாடலில் திருமங்கையாழ்வார் பாடுவார்.

"தொட்ட படையெட்டும் தோலாத வென்றியான்
அட்ட புயகரத்தான் அஞ்ஞான்று - குட்டத்துக்
கோள்முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்
தாள்முதலே நங்கட்டுச் சார்பு"

என பேயாழ்வார் கூறுவார்.

மூலவருக்கு 8 திருக்கரங்களோடு சேர்ந்து 8 ஆயுதங்கள் உள்ளன. வலது நான்கு திருக்கரத்தில் சக்கரம், கத்தி, மலர், அம்பு ஆகியவையும், இடது நான்கு கரத்தில் சங்கம், வில், கதை, கேடயம் ஆகியவையும் உள்ளன.

உத்சவருக்கு நான்கு தோள்களே உள்ளன. கதையும் வேலும் உண்டு. நரசிம்மனைக் கொல்ல வேண்டும் என்று வந்த சரபம், அட்டபுசத்தான ஐகண்டு அஞ்சி, விருஷ்ணுவை சரண் அடைந்தது. பகவான் அருள்படி யாகசாலைக்கு வாயு முனையில் சரபேசன் என்ற பெயருடன் சிவன் யாகத்தைக் காப்பதாக கூறுவர். ஒரு யானை ஒரு திருவிழாவின் போது அட்டபுசக் குளத்தில் தாமரைப் பூப்பறித்து ஆதிகேசவப் பெருமாளை பூசை செய்து வரும்போது, ஒருநாள் யானையை முதலை பிடித்துக் கொண்டது. அப்போது யானை பகவானை வேண்ட பகவான் தன் சக்தியினால் முதலையைக் கொன்று யானையைக் காப்பாற்றிய தலம் இதுவாகும்.

"ஆதிகேச வப்பெருமாள் ஆயுதம் எண்கரத்தில்
சோதி முகமான தோற்றத்தில் - வேதயாக
யானையைக் காக்க முதலையைக் கொன்றதாம்
ஆனதையும் சொல்லும் தலம்"

இத்தலம் காஞ்சி வரதராச சன்னதியிலிருந்து 1 கி.மீ. தூரத்தில் உள்ளது.



திவ்யதேசம் - 45



மூலவர் : தீபப்பிரகாசர்
விளக்கொளி பெருமாள்
நிற்கும் திருக்கோலம்
மேற்கே திருமுகம்

தாயார் : மரகதவல்லி

தீர்த்தம் : சரஸ்வதி தீர்த்தம்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1849, 2065

மொத்தம் : 2 பாசுரங்கள்

திருக்கண்கா
(தூப்பல், காஞ்சீபுரம்)



"பொன்னை மாமணி யையணி யார்ந்தோர்
மின்னை வேங்கடத் துச்சியிற் கண்டுபோய்
என்னை யாளுடை யீசனை யெம்பிரான்
றன்னை யாம்சென்று காண்டும்தண் காவிலே"


என்று திருமங்கையாழ்வார் 1849-ஆம் பாடலில் பாடுவார்.

பருஹம்சர் செய்த யாகத்தைக் கெடுக்க வந்த அசுரர்கள் உலகம் முழுவதையும் இருட்டாக்கிவிட, எம்பெருமாள் ஒரு பேரொளியாய்த் தோன்றி இருட்டைப் போக்கியதால், தீபப்பிரகாசர் என்றும், விளக்கொளி என்றும் பெயர் ஏற்பட்டது.

இந்த கோயில் அஷ்ட புயகரத்திலிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் உள்ளாரே உள்ளது.

**"பிரம்மாவின் யாகத்தைப் பேரழிவு செய்து
அரக்கர் இருட்டை அழித்தார் - உரைக்க
விளக்கொளி தீப பிரகாசர் நாம
விளக்கமான கோயில் இது"**

திவ்யதேசம் - 46



திருவேளுக்கை
(காஞ்சீபுரம்)

மூலவர் : அழகிய சிங்கர், நரசிம்மர்
முகுந்த நாயகன்
நிற்கும் திருக்கோலம்
கிழக்கே திருமுகம்

தாயார் : வேளுக்கை வல்லி
அம்ருதவல்லி

தீர்த்தம் : பிரகலாத தீர்த்தம்

மங்களாசாசனம் :

பேயாழ்வார் : 2307, 2315, 2343
திருமங்கையாழ்வார் : 2674 (127)

மொத்தம் : 4 பாசுரங்கள்



"சிறந்தவென் சிந்தையும் செங்கண் அரவும்
நிறைந்தசீர் நீள்கச்சி யுள்ளும் - உறைந்ததுவும்,
வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப் பாடியுமே
தாம்கடவார் தண்டுழா யார்"

என்று பேயாழ்வார் 2307 ஆம் பாசுரத்தில் பாடுவார்.

நரசிம்மன் ஹஸ்திசைல குகையில் இருந்தபடியே வேறொரு நரசிம்ம வடிவம் கொண்டு மேற்குத் திசையில் அசுரர்களைத் துரத்திக் கொண்டு போய், பிறகு அசுரர்கள் மீண்டும் வராதபடி செய்ய, தான் அங்கேயே யோக நரசிம்மராக இருக்கிறார். இதற்கு காமாசிக நரசிம்மன் சன்னதி என்று பெயராகும். 'வேள்' என்ற சொல்லுக்கு ஆசை என்று பொருள் கூறுவர். நரசிம்மர் ஆசையுடன் வசிக்கும் இடமாதலால் வேள் இருக்கை வேளிருக்கை என்ற பெயர் பெற்றது.

இது காஞ்சிபுரத்தில் அஷ்ட புயகரத்திலிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**"அசுரர்கள் ஓட அவரைத் துரத்த
விசுவருபம் கொண்ட வேளுக்கை - அசுரர்கள்
மேலும் வராதிருக்க யோக நரசிம்மர்
காலூன்றிய சன்னதி காண்"**

திவ்யதேசம் - 47



மூலவர் : இல்லை

உத்சவர் : ஜகதீச்வர்
நிற்கும் திருக்கோலம்
கிழக்குத் திருமுகம்

தாயார் : நிலமங்கை வல்லி

தீர்த்தம் : அக்ரூர தீர்த்தம்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 2059

மொத்தம் : 1 பாசுரம்

திருநீரகம் (காஞ்சீபுரம்)

“நீரகத்தாய்! நெடுவரையி னுச்சி மேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய் நிறைந்த கச்சி
ஊரகத்தாய், ஒண்துறைநீர் வெஃகா வுள்ளாய்
உள்ளவா ருள்ளத்தாய், உலக மேத்தும்
காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய், பேராதென் நெஞ்சி னுள்ளாய்!
பெருமான்உன் திருவடியே பேணி னேனே!”



என்று ஒரேயொரு பாசுரத்தைப் பாடுகிறார். இந்தப்பாடல் 2059 ஆம் பாடலாக வருகிறது.

இதன் கோயிலோ, மூலவரோ, தீர்த்தமோ எங்குள்ளது என்று தெரியவில்லை.

உலகளந்தப் பெருமாள் கோயிலின் வடபுறத்தில் ஒரு பிரகாரத்தில் ஒரு மிகச்சிறிய சன்னதியில் உத்சவர் மட்டும் குடிகொண்டுள்ளார்.

“மூலவர் இல்லாத உத்சவர் கோயிலிது
காலம் இடமெல்லாம் காணாதாம் - கோலம்
செகதீச்வர் உத்சவர் நின்றிருக்கும் கோலம்
முகவரி யில்லா முகம்”

திவ்யதேசம் - 48



மூலவர் : பாண்டவர் தூதர்
வீற்றிருக்கும் கோலம்
கிழக்கே திருமுகம்

தாயார் : ருக்மிணி, சத்யபாமா

தீர்த்தம் : மத்ஸ்ய தீர்த்தம்

மங்களாசாசனம் :

திருமிழிசையாழ்வார் : 814, 815

திருமங்கையாழ்வார் : 1541, 2674 (127)

பூதத்தாழ்வார் : 2275

பேயாழ்வார் : 2311

மொத்தம் : 6 பாசுரங்கள்

திருப்பாடகம்
(பெரிய காஞ்சீபுரம்)

பெரிய காஞ்சீபுரம் என்று கூறுவர். பெரிய காஞ்சீபுரத்தில் 9-திவ்ய தேசங்கள் அருகருகே உள்ளன. கங்கை கொண்டான் மண்டபத்தின் அருகில் இந்த சன்னதி இருக்கிறது.

"நன்றிருந்து யோகநீதி
நண்ணுவார்கள் சிந்தையுள்
சென்றிருந்து தீவினைகள்
தீர்த்ததேவ தேவனே,
குன்றிருந்த மாடநீடு
பாடகத்து மூரகத்தும்
நின்றிருந்து வெஃகணைக்கி
டந்ததென்ன நீர்மையே?"

என்று திருமழிசையாழ்வார் 814 ஆம் பாசுரத்தில் பாடுவார்.

"கல்லார் மதிள்சூழ் கச்சி நகருள்
நச்சிப் பாடகத்துள்,
எல்லா வுலகும் வணங்க விருந்த
அம்மான், இலங்கைக்கோன்
வல்லா ளாகம் வில்லால் முனிந்த
எந்தை, விபீடணற்கு
நல்லா னுடைய நாமம் சொல்லில்
நமோநா ராயணமே"

என்று 1541-ஆம் பாடலில் திருமங்கையாழ்வார் பாடுவார்.

"உற்று வணங்கித் தொழுமின், உலகேழும்
முற்றும் விழுங்கும் முகில்வண்ணம் - பற்றிப்
பொருந்தாதான் மார்பிடந்து பூம்பா டகத்துள்
இருந்தானை, ஏத்துமென் நெஞ்சு"

என்று 2275 ஆம் பாடலில் பூதத்தாழ்வார் பாடுவார்.

"சேர்ந்த திருமால் கடல்குடந்தை வேங்கடம்
நேர்ந்தவென் சிந்தை நிறைவிசும்பு - வாய்ந்த
மறையா டகம்அனந்தன் வண்டுழாய்க் கண்ணி
இறைபாடி யாய இவை"

என்று பேயாழ்வார் தனது 2311 ஆம் பாடலில் திருமால் எங்கெங்கு தங்கியுள்ளார் எனக் கூறுகிறார்.

சனமே செயமகராசன் வைசம்பாயனரிடம் பாரதக் கதையைக் கேட்டு, அதில் கிருஷ்ணன் பாண்டவர்களுக்காக அஸ்தினாபுரம் தூது சென்று விசுவரூபம் எடுத்ததைக் கேள்விப்பட்டு, அதை நேரில் பார்க்க விரும்பி காஞ்சி வந்து அசுவமேத யாகம் செய்கிறான். அந்த அசுவமேத யாகம் முடிந்ததும் கிருஷ்ணபகவான் பாண்டவரிடம் தூது சென்ற வேடத்தில் வந்து அருள் பரிபாலித்ததாக புராணம் கூறுகிறது.



**"பாண்டவர்க்கு தூதுசென்ற பார தகிருஷ்ணன்
பூண்ட விசுவரூப பூரணத்தை - ஆண்ட
மகராசன் செய்த அசுவமேத யாகம்
நிகழ்த்திடத் தோன்றினார் நின்று"**

திவ்யதேசம் - 49



திருநிலாத்திங்கள் துண்டம்
(பெரிய காஞ்சீபுரம்)

மூலவர் : நிலாத்திங்கள் துண்டம்
சந்திரச் சூடப் பெருமாள்
நிற்கும் திருக்கோலம்
மேற்குத் திருமுகம்


தாயார் : நேர்ஒருவரில்லா வல்லி
நிலாத்திங்கள் துண்டத் தாயார்

தீர்த்தம் : சந்திர புட்கரிணி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 2059

மொத்தம் : 1 பாசுரம்



"நீரகத்தாய்! நெடுவரையி னுச்சி மேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி"

என்று திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

இங்கே ஒரு மாமரத்தின் கீழே பார்வதி தவம் செய்தார். பார்வதியின் தவத்தை சோதிக்க எண்ணிய சிவபெருமான் மாமரத்தை எரித்து விடுகிறார். அதனால் கோபமுற்ற பார்வதி வாமனனை உதவிக்கு வரக்கேட்க, வாமனர் சங்கு சக்கரத்தோடு அமிர்த கிரணங்களைக் கொண்டு மாமரத்தைத் தழைக்கச் செய்கிறார். அதன்பிறகு பார்வதி கோபம் தீர்ந்து தவத்தைத் தொடர்ந்து செய்கிறார். பார்வதியின் தாபத்தைத் துண்டித்ததால் பெருமாளுக்கு 'நிலாத்திங்கள் துண்டித்தான்' என்ற பெயர் உண்டாயிற்று.

பார்வதியின் வேண்டுகோளின்படி வாமனர் அவள் பக்கத்தில் இன்னும் இருப்பதாக புராணம் கூறுகிறது.

"பார்வதி செய்த தவத்தைப் பரமசிவன்
சீர்குலைக்க, பார்வதி சீறினாள் - பார்வதி
வாமனனை வேண்டிய மாமரம் பூத்திட
ஆமதனால் துண்டத்தான் ஆம்"

திவ்யதேசம் - 50



திருஊரகம்
(காஞ்சீபுரம்)

மூலவர் : திருவிக்ரமன்
உலகளந்த பெருமாள்
நிற்கும் திருக்கோலம்
மேற்கே திருமுகம்

உத்சவர் : பேரகத்தான்

தாயார் : அமுதவல்லி நாச்சியார்

தீர்த்தம் : நாக தீர்த்தம்

மங்களாசாசனம் :
திருமழிசையாழ்வார் : 814, 815
திருமங்கையாழ்வார் : 2059, 2064,
2673(70), 2674 (128)

மொத்தம் : 6 பாசுரங்கள்

"கல்லெடுத்துக் கல்மாரி காத்தாய்! என்றும்
காமருபூங் கச்சியூ ரகத்தாய்! என்றும்
வில்லிறுத்து மெல்லியல்தோள் தோய்ந்தாய்! என்றும்
வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தே! என்றும்
மல்லடர்த்து மல்லரையன் றட்டாய்! என்றும்
மாகீண்ட கைத்தலத்தென் மைந்தா! என்றும்
சொல்லெடுத்துத் தன்கிளியைச் சொல்லே என்று
துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின் றாளே"

என்று வருமாறு திருமங்கையாழ்வார் நன்று பாடியுள்ளார்.

இந்த தலத்தில் ஊரகம் (பேரகம்) தவிர, நீரகம், காரகம், கார்வானம் ஆகிய மூன்று திவ்ய தேசங்களின் பெருமாள்களும் எழுந்தருளியிருக்கின்றார்கள்.

பரிசக்ரவர்த்தி பகவான் திருவிக்ரமாவதாரம் செய்த போது, பகவானைப் பணிய, அவரின் திருவடியின்கீழ் அகப்பட்டுக் கொண்டபடியால், திருவிக்ரம கோலத்தை தரிசிக்க முடியவில்லை. ஆகவே திருவிக்ர கோலத்தை பார்க்க வேண்டும் என்று தவப்பிரார்த்தனையை இந்த காஞ்சீபுர


தலத்தில் செய்தார். அதற்கிணங்க பகவான் அந்த அவதாரத்தை எடுத்துக் காண்பித்ததாக உலகளந்த கோவில் வரலாறாகும். உலகளந்த பெருமாள், ஊரகம் என்ற இரண்டும் இங்கே ஒரே தேசமாகக் கூறப்படுகிறது.

நரசிம்மப் பெருமாளின் மிகப்பெரிய திருவுருவத்தை நிமிர்ந்து பார்க்க முடியாமல் போன மகாபலிக்காக, உலகளந்த பெருமாள் சன்னதிக்குப் பக்கத்தில் ஒரு சிறிய சன்னதியில் எம்பெருமான் ஆதிசேஷனாய திருக்கோலம் கொண்டு சேவை செய்ததாக ஊரகத் தலவரலாறு கூறுகிறது.

"பகவானின் தாள்கீழ் பலிசக்ர வர்த்தி
அகப்பட்ட போதுஅவ தாரம் - முகமாய்
உலகளந்த கோலம் உயர்த்திய விக்ரம்
திலகமாய் தோன்றினார் நின்று"



திவ்யதேசம் - 51



திருவெஃகா
(பெரிய காஞ்சீ - 4)

மூலவர் : யதோக்தகாரி
சொன்னவண்ணம்
செய்த பெருமாள்
புஜங்கசயனம்
மேற்குத் திருமுகம்

தாயார் : கோமளவல்லி நாச்சியார்

தீர்த்தம் : பொய்கைப் புட்கரிணி

மங்களாசாசனம் :
திருமழிசையாழ்வார் : 814, 815, 2417
திருமங்கையாழ்வார் : 1854, 2059, 2064, 2065, 2673 (70), 2674 (127)
பொய்கையாழ்வார் : 2158
பேயாழ்வார் : 2307, 2343, 2345, 2357
நம்மாழ்வார் : 2503

மொத்தம் : 15 பாசுரங்கள்

"வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கில் நீள்கோவல் பொன்னகரும் - நான்கிடத்தும்
நின்றா னிருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமா மிடர்" (2158)

என்று பொய்கையாழ்வார் புனைவார்.

"பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும் ஐந்து
நெருப்பிடையே நிற்கவும்நீர் வேண்டா - விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர்தூய்க் கைதொழுதால்
அஃகாவே தீவினைகள் ஆய்ந்து"

என்று பேயாழ்வார் கூறுவார்.


திருவெஃகாவும் திருமழிசையாழ்வாரும் இணைந்த ஒரு சிறப்பு வாய்ந்த தலம் இதுவாம். சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்ற திருநாமமே திருமழிசையாழ்வார் ஒரு நிகழ்ச்சியை பெருமானிடம் சொன்னவண்ணம் செய்ததால் வந்ததாகும். ஆகவே அந்த நிகழ்ச்சியை திருமழிசையாழ்வாரின் வாழ்க்கை வரலாற்றோடு சேர்த்து தெரிந்து கொள்ளலாம்.



பொய்கை புட்கரிணியில்தான் பொய்கையாழ்வார் ஒரு பொற்றாமரையில் அவதரித்தார். அசுரர்கள் பிரார்த்தனைக்கிணங்க, பிரம்மா செய்யும் யாகத்தை அழிக்க கோபம் கொண்டு வேகவதி ஆறாக சீறி ஓடி வந்தாள். அதைக் கண்ட பிரம்மாவும், தேவர்களும் விஷ்ணுவைச் சரணடைந்து காப்பாற்றக் கேட்டனர். அதற்காக விஷ்ணு பெருமாள் வேகவதியாற்றின் வெள்ளத்தைத் தடுக்கப் பெருமாளே அணையென சயனித்தார். அதனால் வேகவதியணை வேகிண-வெஃகிணை எனப் போய், கடைசியில் வெஃகா என்று மருவியதாகும்.

"திருமழிசை யாழ்வார் திருச்சொல் கேட்டு
பெரும்பாம் பணைப்பா யெடுத்தார் - பெருமாள்
திரும்பிட சொல்ல திரும்பியும் வந்தார்
அருள்சொன்ன வண்ணபெரு மாள்!"

திவ்யதேசம் - 52



மூலவர் : கருணாகர பெருமாள்
நிற்கும் திருக்கோலம்
தெற்கே திருமுகம்

தாயார் : பத்மாமணி நாச்சியார்
ராமாமணி நாச்சியார்

தீர்த்தம் : அக்ராய தீர்த்தம்

மங்களாசாசனம் :
திருமங்கையாழ்வார் : 2059

மொத்தம் : 1 பாசுரம்

திருக்காரகம்
(பெரிய காஞ்சீ - 5)



"காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய், பேராதின் நெஞ்சி னுள்ளாய்
பெருமான்உன் திருவடியே பேணி னேன்"

என்று திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

இந்த திவ்யதேசம் இருக்குமிடம் தீர்த்தம் இருக்குமிடம் தெரியவில்லை. சன்னதி பெரிய காஞ்சியில் உலகளந்த பெருமாள் கோயில் பிரகாரத்தில் உள்ளது.

**"கருணா கரப்பெருமாள் காணாத தேசம்
இருப்பிடம் தீர்த்தம் இல்லை - திருக்கா
ரகம்உலக ளந்த பெருமாள் தலத்தில்
முகம்கொண்டார் சன்னதி யாய்"**

திவ்யதேசம் - 53



திருக்கார்வானம்
(பெரிய காஞ்சீ - 6)

மூலவர் : கார்வானர்
நிற்கும் திருக்கோலம்
மேற்கே திருமுகம்

தாயார் : கமலவல்லி (தாமரையாள்)

தீர்த்தம் : கௌரி தடாகம்
(தராதர தீர்த்தம்)

மங்களாசாசனம் :
திருமங்கையாழ்வார் : 2059

மொத்தம் : 1 பாசுரம்



"காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய், பேராதின் நெஞ்சி னுள்ளாய்
பெருமான்உன் திருவடியே பேணி னேன்"

என்று திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

திருமங்கையாழ்வார் பாடிய இந்த 2059 ஆம் பாடல் : திருநீரகம், திருப்பாடகம், திருநிலாதிங்கள்துண்டம், திருஊரகம், திருவெஃகா, திருக்காரகம், திருக்கார்வானம், திருக்கள்வனூர் என்ற 9 திவ்யதேசத்திற்கும் பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த திருத்தலமும் காஞ்சியில் உலகளந்த கோயில் பிரகாரத்தில் ஒரு சன்னதியாக உள்ளது.

"கார்வானம் கோயிலிங்கு கண்டிடும் சன்னதியால்
பேராம் உலகளந்த கோயிலுள் - உள்ளத்தில்
தாயார் கமலவல்லி கார்வானம் என்றிங்கு
வாயால் குறிப்பிடுவார் வந்து"

திவ்யதேசம் - 54



மூலவர் : கள்வர்
நிற்கும் திருக்கோலம்
மேற்குத் திருமுகம்

தாயார் : அஞ்சிலைவல்லி நாச்சியார்

தீர்த்தம் : நித்ய புட்கரிணி

மங்களாசாசனம் :
திருமங்கையாழ்வார் : 2059

மொத்தம் : 1 பாசுரம்

திருக்கள்வனூர்
(பெரிய காஞ்சீ - 7)

"காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய், பேராதின் நெஞ்சி னுள்ளாய்
பெருமான்உன் திருவடியே பேணி னேன்"

என்று திருமங்கையாழ்வார் 2059 ஆம் பாடலில் பாடுகிறார்.

இந்த தேசம் பெரிய காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மன் கோவிலுக்குள், அம்மன் கர்ப்பகிரகத்துக்கு வலது பக்கத்திலியே இருக்கிறது. ஒரு காலத்தில் சிவனுக்கும் பார்வதிக்கும் சண்டை ஏற்படுகிறது. குடும்பச் சண்டை நமக்கு மட்டுமல்ல, தெய்வங்களுக்குள்ளும் உண்டு என்பதை இந்த நிகழ்வு காட்டுகிறது. சண்டையில் கோபமடைந்த சிவபெருமான் பார்வதிக்கு சாபம் கொடுக்க, பார்வதி நிதானித்து சிவனிடம் மன்னிப்புக் கேட்க, அதற்கு சிவன் செய்த தவறுக்காக ஒற்றைக் காலில் தவமிருக்க கூறினர்.

அதன்படி பார்வதி ஒருகாலால் நின்றபடி வாமனரை நோக்கித் தவம் செய்து காமாட்சி என்று பெயர் பெற்று சிவபெருமானை மணம் புரிந்ததாக புராண வரலாறு கூறுகிறது.

திருநாராயணன் காம கோட்டத்தில், பஞ்ச தீர்த்தக் கரையில் லட்சுமி பார்வதியுடன் விளையாட்டுக்காக சல்லாபம் செய்து மகிழ்ந்து கொண்டிருந்ததை கேட்டாராம். அதற்காகப் பார்வதி பெருமாளுக்கு கள்வன் என்று பெயர் சூட்டியதாகக் கூறுவர்.

பார்வதி கேட்டுக் கொண்டதற்கிணங்க, பகவான் பூதத்தின் மேல் நின்று மறுபடியும் இருந்து, மறுபடி கிடந்த படியால், நின்றான், இருந்தான், கிடந்தான் என்ற சன்னதிகள் ஏற்பட்டுள்ளன.

மேற்சொன்ன பாசுரத்தில் கள்வர் என்ற சொல்லுக்கு சரியான விளக்கம் தெரியவில்லை. இந்த தலத்துக்கு தாயாரும் தீர்த்தமும் இல்லை. காமாட்சியம்மன் திருக்குளத்தின் வடகிழக்கு மூலையில் ஒரு சன்னதியில் மூன்று அடுக்குகளில் "நின்றான், இருந்தான், கிடந்தான்" என்று மூன்று திருக்கோலங்கள் உள்ளன.

"ஆதி வராகக்கள் வர்பஞ்ச தீர்த்தத்தில்
சேதி ஒளிந்திட கேட்டிடல் - நீதியோ?
பார்வதி கோவித்து பாடினாள் கள்வரென்று
சேர்ந்திட்டார் காமாட்சி யாள்"



திவ்யதேசம் - 55



திருப்பவனவண்ணம்
(பெரிய காஞ்சீ - 8)

மூலவர் : பவளவண்ணன்
நிற்கும் திருக்கோலம்
மேற்குத் திருமுகம்

தாயார் : பவளவல்லி

தீர்த்தம் : சக்ர தீர்த்தம்

மங்களாசாசனம் :
திருமங்கையாழ்வார் : 2060

மொத்தம் : 1 பாசுரம்

"வங்கத்தால் மாமணிவந் துந்து முந்நீர்
மல்லையாய்! மதில்கச்சி யூராய்! பேராய்
கொங்கத்தார் வளங்கொன்றை யலங்கல் மார்வன்
குலவரையன் மடப்பாவை யிடப்பால் கொண்டான்
பங்கத்தாய் பாற்கடலாய்! பாரின் மேலாய்
பனிவரையி னுச்சியாய்! பவள வண்ணா
எங்குற்றாய் எம்பெருமான்! உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதரு கேனே!"

என்று திருமங்கையாழ்வார் பாடுவார்.

இந்தத் தலம் காஞ்சீபுரத்தில், காஞ்சீபுரம் ரயில்நிலையத்தின் அருகில் உள்ளது. பவள வண்ணன், பச்சைவண்ணன் என இரண்டு தலங்களாக இவை விளங்குகின்றன. பவளவண்ணரின் தலத்திலிருந்து ஐந்து கி.மீ. மேற்கே பச்சைவண்ணன் சன்னதி உள்ளது. மங்களா சாசனம் செய்யப்படவில்லை. இந்த சன்னதிகள் கங்கை கொண்டான் மண்டபத்திலிருந்து கிழக்காகச் செல்லும் செங்கழு நீரோடைத் தெருவின் இடையில் வலதுபுறம் செல்லும் சாலையில் எதிர் எதிரேயுள்ளன.



பச்சைவண்ணன் ஆதிசேஷன் மீது வீற்றிருக்கும் திருக்கோலத்தில் பரம பதநாதனாக எழுந்தருளியுள்ளார். பவளவண்ணன் பச்சைவண்ணன் இரண்டுமே ஒரே திவ்யதேசமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

"பனிவரையி னுச்சியாய்! பவள வண்ணா" என்பது திருநெடுந்தாண்டகத்தின் பாசுரம் பெருமாள் திருமேனியின் நிறத்தைக் குறிப்படுவதேயன்றி, தலத்தைக் குறிப்பிடுவது அல்ல. ஆகவே இதுதான் உண்மையான திவ்யதேசமா அல்லது வேறா என விளங்க வில்லை. அக்கால வைணவப் பெருமக்கள் வாயளவில் இதையே திவ்யதேசமாகக் கொண்டனரால், அவ்வாறே வழங்கப்படுகிறது.

"பவளவண்ணன் கோயில் பச்சைவண்ணன் கோயில்
இவர்கள் இரண்டொன்றாய் தேசம் - இவற்றின்
தலத்தின் அடையாளம் தக்கதாய் இல்லை
குலத்தவர் கூறியதின் ஊர்"

திவ்யதேசம் - 56



பரமேச்சுர விண்ணகரம்
(காஞ்சீபுரம் - வைகுண்ட
பெருமாள் கோயில் - 9)

மூலவர் : பரமபதநாதன்
வைகுந்தநாதன்
வீற்றிருக்கும் திருக்கோலம்
மேற்கே திருமுகம்

தாயார் : வைகுந்தவல்லி

தீர்த்தம் : ஐரம்மத தீர்த்தம்


மங்களாசாசனம் :
திருமங்கையாழ்வார் : 1128-1137

மொத்தம் : 10 பாசுரங்கள்

"சொல்லுவன் சொற்பொருள் தானவை யாயச்சுவை
யூறொலி நாற்றமும் தோற்றமுமாய்
நல்லரன் நான்முகன் நாரண னுக்கிடந்த
தான்தடஞ் சூழ்ந்தழ காயகச்சி
பல்லவன் வில்லவ னென்றுல கில்பல
ராய்ப்பல வேந்தர் வணங்குகழல்
பல்லவன், மல்லையர் கோன்பணிந் தபர
மேச்சுர விண்ணக ரமதுவே!" (1128)

என்று திருமங்கையாழ்வார் மட்டும் இத்தலத்தைப்பற்றிப் பாடுகிறார்.

கோயில் விமானம் மூன்று அடுக்காக அஷ்டாங்க விமானமாக உள்ளது. அடித்தல அடுக்கில் பெருமாள் வீற்றிருக்கும் கோலத்திலும், இரண்டாம் அடுக்கு மத்தியில் ஸ்ரீதேவி பூதேவி உடனாக ரங்கநாதபர் சயனத் திருக்கோலத்திலும், மேலே மூன்றாம் அடுக்கில் நிற்கும் திருக்கோலத்திலும் உள்ளனர். ஆனால் பூஜை கிடையாது.




விதர்ப்ப தேசத்தை ஆண்டு வந்த விரோசனன் என்ற அரசனுக்குப் புத்திர பாக்யம் கிடைக்கவில்லை. அதனால் அவன் காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதரைப் பூஜை செய்ய இரண்டு மகன்கள் பிறந்தார்கள். பல்லவன், வில்லவன் இரண்டு பேரும் விஷ்ணு பக்தர்களாகவே திகழ்ந்தார்கள்.

அவர்கள் புண்ணிய கோடி விமானத்திற்கு வாயு மூலையில் அசுவமேத யாகம் செய்ய, திருமத், நாராயணன் அவர்களுக்கு திருவைகுண்ட நாதராக காட்சியளித்தார். அதுவே இப்போதும் பக்த கோடிகளுக்கு அருள் வழங்கிக் கொண்டிருக்கிறது.

“இல்லையென வேண்டிய பிள்ளையராய் வந்திட்ட
பல்லவன் மல்லவன் பக்தராகி - சொல்லிய
மெய்வண்ணன் அச்வமேத யாகத்தின் வண்ணம்
வைகுண்டர் வீற்றுள்ளார் வந்து”

திவ்யதேசம் - 57



திருப்புட்குழி

மூலவர் : விஜயராகவப் பெருமாள்
வீற்றிருக்கும் திருக்கோலம்
கிழக்குத் திருமுகம்

தாயார் : மரதவல்லித் தாயார்

தீர்த்தம் : ஜடாயு தீர்த்தம்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1115, 2674 (117)


மொத்தம் : 2 பாசுரங்கள்

"அலங்கெழு தடக்கை யாயன்வா யாம்டற்
கழியுமா லென்னுள்ளம்! என்னும்
புலங்கெழு பொருநீர்ப் புட்குழி பாடும்
போதுமோ நீர்மலைக் கென்னும்
குலங்கெழு கொல்லி கோமள வல்லிக்
கொடியிடை நெடுமழைக் கண்ணி
இலங்கெழில் தோனிக் கென்னினைந் திருந்தாய்
இடவெந்தை யெந்தை பிரானே!"

என்று 1115-ஆம் பாடலில் குறிப்பிடுகிறார்.

இராவணனால் சிறைப் பிடிக்கப்பட்ட சீதையை இராமன் தேடிச் சென்ற போது, இந்த திருப்புட்குழியில் சிறிது காலம் தங்கியிருந்தார். அப்போது ஜடாயுவுக்கு இராமன் நீர்கடா செய்து மோட்சமளித்தார். அப்போது ஜடாயு தீர்த்தத்தை உண்டாக்கினார். அதனால் இத்தலத்திற்கு திருபுள்குழி என்று பெயராகி, இப்போது திருபுட்குழி என்று அழைக்கப்படுகிறது. கோயிலுக்கு எதிரில் ஜடாயு சன்னதி இருக்கிறது.

மூலவர் விஜயராகவப் பெருமாள் தன் தொடையின் மேல் ஜடாயுவை வைத்துக் கொண்டு, பேரருள் செய்யும் நிலையில் எழுந்தருளியிருக்கிறார். அந்த தாபத்தை, கோபத்தைத் தாங்க முடியாத ஸ்ரீதேவியும், பூதேவியும் இடவலமாக மாறி எழுந்தருளியுள்ளனர்.



இந்த தலத்தின் முக்கிய மகிமை, குழந்தை பாக்கியமில்லாத பெண்கள், குழந்தைப் பேறு வேண்டி வரும் போது, கொஞ்சம் பயிற்றம் பருப்பை மடைப்பள்ளியில் கொடுத்து, வறுத்து, நனைத்து மடியில் கட்டிக் கொண்டு தூங்கினால், வறுத்த பயிர் முளைக்கும். அப்படி முளைத்தால் பிள்ளைப்பேறு உண்டு என்று அர்த்தமாம்.

அந்த பருப்பு தாயார் மகிமையால் வறுத்த நிலையிலும் முளைப்பதால் 'மரகதவல்லி' என்ற நாமம் ஏற்பட்டதாம்.

இராமானுசரின் குருவான யாதவப் பிரகாசர், இந்த தலத்தில்தான் தன் சீடர்களுக்கு வேதாந்த உபதேசங்கள் செய்தாராம்.

இராமானுசர், மணவாள முனிகள் ஆகியோர் பலமுறை மங்களாசாசனம் செய்துள்ளனர்.

"திருபுட் குழிவிசய ராகவக் கோயில்
தரும்மக்கட் பேறு பயிறால் - குருவான
யாதவப் பிரகாசர் யாவையும் கற்றிட
ஓதிய மண்ணாம் உணர்"

காஞ்சிபுரம் செல்பவர்கள் 63-நாயன்மார்களில் அடங்கும் ஐயடிகள் நாயனார், கழற்சிங்க நாயனார், திருக்குறிப்புத் தொண்டர் பிறந்து தரிசித்த காஞ்சி ஏகாம்ரேசுவரர் சைவக் கோயிலையும், சாக்கிய நாயனார் தரிசித்த திருச்சங்க மங்கை சாக்கிய நாயனார் கோயிலையும் மற்றும் பல முக்கிய கோவில்களையும் தரிசித்து வரலாம்.



திருமழிசையாழ்வார்



திருமழிசையார்

மான் வயிற்றில் ரிஷிசிங்க முனிவர் பிறந்தார். முயல் வயிற்றில் கௌதமர் கருவானார். பாம்புப் புற்றிலிருந்து வால்மீகி எழுந்தார். மண் குடத்திலிருந்து வசிட்டர் அவதரித்தார் என்று கூறுவார்கள்.

அதுபோல திருமழிசையாழ்வாரின் பிறப்பும் அதிசயமானதாகும். அதேபோல அவர் பிறந்த ஊரும் சிறப்பு வாய்ந்ததாகும்.

"உலகும் மழிசையு முள்ளுணர்ந்து, தம்மில்
புலவர் புகழ்கோலால் தூக்க – உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தும், மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது"

என்ற இருவிகற்ப நேரிசை வெண்பா வொன்றை திருக்கச்சி நம்பிகள் அருளியிருப்பார்.


"பூமியிலே மிகவும் சிறந்த இடம் திருமழிசை. உலகத்தில் புகழ்பெற்ற திருத்தலங்களையெல்லாம் சமமான ஒரு தராசின் ஒரு தட்டில் வைத்து, திருமழிசையை மற்றொரு தட்டில் வைத்தால், திருமழிசையை வைத்த தட்டே வலுவாக இருக்கும்" என்பது அதன் பொருள்.

அப்படிப்பட்ட இடமே தவத்திற்கு ஏற்றது என்று பிரம்மதேவர் ரிஷிகளுக்கு அருள, அவ்வாறு அத்ரி, பிருகு, வசிட்டர், பார்க்கவர் ரிஷிகளெல்லாம் சேர்ந்து திருமிழிசையில் தவமியற்றி வந்தார்கள்.

அவ்வாறு தவமியற்றிய ரிஷிகளின் முதன்மையானவரான பார்க்கவ முனிவருக்கும் அவர் மனைவி கனகாங்காவுக்கும் தை மாதம் மகம் நட்சத்திரத்தில் ஒரு மகவு பிறந்தது. அது எதுவுமே இல்லாத பிண்டமாகப் பிறந்தது. அதை அருவறுக்கத்தக்கதென்று வேண்டாம் என்று கூறி முனிவரும் அவர் மனைவியும் ஒரு மூங்கில் காட்டில் விட்டு விட்டு சென்று விட்டனர்.

அதை காட்டிலிருந்து கண்டெடுத்து வந்த மூங்கில் வியாபாரி திருவானனும், அவன் மனைவி பங்கயச் செல்வியும் வீட்டுக்கு எடுத்து வந்தனர். ஆனால் அந்த குழந்தைக்கு பாலூட்டிய போது பால்குடிக்க மறுத்துவிட்டது. பலநாள் இப்படியே! ஆனால் குழந்தை அழகாகவும், பொலிவாகவும் இருந்தது. எல்லோருக்கும் ஆச்சரியத்தையளித்தது. அந்தக் குழந்தை திருமழிசை இறைவனால் படைக்கப்பட்டதாகக் கருதி, அதற்கு அவர்கள் 'திருமழிசைப்பிரான்' எனப் பெயரிட்டனர்.

ஒருநாள் இந்த அதிசயக் குழந்தையைப் பார்க்க ஒரு ஞானக்கிழவரும் அவர் மனைவியும் வந்தனர். அவர் அந்தக் குழந்தைக்கு தான் கொண்டு வந்த கிண்ணத்தால் பாலை ஊட்டினார். அது குடித்தது. கலகலவென சிரித்தது. அந்தக் குழந்தை கிண்ணத்திலிருந்த பாலை கொஞ்சம் மீதி வைத்துவிட்டு, அந்த கிழவரை கிட்டவர அழைத்து, அதை 'குடி' என்று சைகை காட்டியது. கிழவரும் அவர் மனைவியும் பாலைக் குடித்தனர். அவர்கள் இளம் தம்பதியராக மாறினர். பிறகு அவர்கள் கூடிக் குலவியதில் அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு அவர்கள் கணிக்கண்ணன் என்று பெயரிட்டு அழைத்தனர்.



புத்தம், சமணம் என பல வேத தத்துவங்களையும் கற்ற திருமழிசைபிரான் பிறகு உலகந் தோன்றக் காரணம் சிவபெருமானே என்று முடிவு செய்து தனது பெயரை சிவவாக்கியர் என்று மாற்றிக்கொண்டார்.

பிறகு சிவதலங்களுக்கு யாத்திரை மேற்கொண்ட சிவவாக்கியர் பிறகு மயிலாப்பூர் வந்து விரதம் மேற்கொண்டார்.

அப்போது அங்கு வாழ்ந்த வைணவப் பெரியார் பேயாழ்வாருக்கும், சிவவாக்கியாருக்கும் சைவ-வைணவ போர் நடந்தது. அதில் வைணவ வேதங்களைக் கேட்டு, படித்த சிவவாக்கியார் பிறகு பேயாழ்வாரைக் குருவாகக் கொண்டு அவருடைய சீடரானார்.

அப்போது திருநாராயணப் பெருமாள் அவர்தம் திருத்தேவியோடு அவர்க்கு காட்சியளித்து, தம் புகழ் அருள் செய்தார். அன்று முதல் திருமழிசைப்பிரான் திருமழிசையாழ்வார் என்று அழைக்கப்பட்டார்.

அதன்பிறகு திருமழிசையாழ்வார் தன் திருத்தல யாத்திரையைத் தொடங்கினார். அப்படி அவர் யாத்திரை சென்று வந்த வழியில் சென்னை திருவல்லிக்கேணிக்கு வந்து தவம் மேற்கொண்டார்.

"சாக்கியம்கற் றோம்சமணம் கற்றோம்அ(து) சங்கரனார்
ஆக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம் - பாக்கியத்தால்
செங்கட் கரியதொன்றும் இல்"

என்று வெண்பாப்பாடி யாத்திரையை தொடங்கிய திருமழிசையாழ்வாரை இங்கு திருவல்லிக்கேணியில் சிவபெருமான் சோதிக்க விரும்பினார். தவமிருந்த திருமழிசையாழ்வாரை நோக்கி தன் நெற்றிக் கண்ணைத் திறந்து நெருப்பு சுவாலையைப் பாய்ச்சினார். ஆனாலும் திருமழிசையாழ்வார் தன் கொள்கையில் பற்றி தவமிருந்ததால் அந்த சுவாமியின் வெப்பம் அவருக்கு தெரியவில்லை. அதைப் பாராட்டி சிவபெருமான் அவருக்கு 'பக்தி சாரர்' என்ற நாமம் வழங்கிச் சென்றார்.

இவ்வாறு திருமழிசையாழ்வார் யோக சித்தியில் மூழ்கியிருக்கும்போது, சித்தர்களும், ரசவாதிகளும் அவரை சோதித்துப் பார்த்தனர். அவற்றையெல்லாம் திருமழிசையாழ்வார் முறியடித்து வெற்றி கண்டார்.

திருமழிசையாழ்வார் சென்னை திருவல்லிக்கேணியிலிருந்து போது, அத்தலம் பற்றி நான்முகனந்தாதி பாடினார் அவற்றில் அவர்,

"தாளால் உலகம் அளந்த அசைவேகொல்
வாளா கிடந்தருளும் வாய்த்திறவான் - நீனோநம்
வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்
ஐந்தாலவாய் நாகத் தனை"

என்று பாடுகிறார்.

பிறகு திருமழிசையாழ்வார் ஒரு மலைக்குகையில் தியான நிலையில் இருந்த போது, திருக்கோவலூரில் ஒன்று சேர்ந்த பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னும் முதலாழ்வார்கள் மூவரும் வந்து வாழ்த்திப் பேறு பெற்றனர்.

அதன்பின்னர் திருமழிசையாழ்வாருக்கு வெஃகா என்னும் காஞ்சிபுரம் சென்றார். அங்கு திருமழிசையில் இவரால் இளமை பெற்ற இளந்தம்பதியிருக்குப் பிறந்த கணிக்கண்ணன் இவருக்கு சீடராக வந்து சேர்ந்தார்.

திருவெஃகாவில் திருமழிசையாழ்வார் தவம் மேற்கொண்டிருந்தபோது, ஒரு கிழவி தினந்தோறும் வந்து அந்த இடத்தைசுத்தம் செய்து கொண்டிருந்தாள். அவள் செய்த திருப்பணிக்காக திருமழிசையாழ்வார் அந்த கிழவியை இளம்வயது அழகியாக மாற்றினார். அந்த அதிசயத்தை அந்த நாட்டு பல்லவ மன்னன் பார்த்து வியந்தான். பல ஆண்டுகள் செல்ல செல்ல மன்னன் கிழவன் ஆனான். ஆனால் அந்த கிழவியாகயிருந்து அழகியான பெண் மட்டும் அப்படியே மாறாமல் இளமையாகவே காட்சி தந்து கொண்டிருந்தாள்.

திருமழிசையாழ்வாரால் அந்த மகிமை நடந்தது என்று கேள்விப்பட்ட பல்லவ மன்னன் அவரை அரண்மனைக்கு அழைத்துவர கட்டளையிட்டார். ஆனால் திருமழிசையாழ்வார் வர மறுத்துவிட்டார்.

பிறகு மன்னன் அரண்மனைக்கு பிச்சைக்கு வந்த அவரது சீடர் கணிக்கண்ணனிடம் அவரை அழைத்துவரக் கட்டளையிட்டார். கணிக்கண்ணனும் “அவர் அரண்மனைக்கு வரமாட்டார்” என்று கூறி மறுத்துவிட்டார். அதன்பிறகு மன்னன் யோசனை செய்துவிட்டு, “அப்படியென்றால் எனக்கு மீண்டும் இளமை வர நீயே என்னைப்பற்றி பாடு” என்று கூற, அதற்குக் கணிக்கண்ணன் மன்னனைப் பற்றிப் பாடாமல்,

“ஆடவர்கள் எங்கள் அகல்வார் அருள்சுரந்து
பாடகமும் ஊரகமும் பாம்பணையும் - நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்னர் பொழிற்கச்சி மாண்பு”

என்று திருமாலைப்பற்றிப்பாட, கோபம் கொண்ட மன்னன், “என்ன! என்னைப் பற்றிப் பாடாமல் திருமாலைப் பற்றி பாடுகிறாயே” என்று கூறி கணிக்கண்ணனை பல்லவ நாட்டை விட்டு வெளியேற கட்டளையிட்டான்.

அதைக்கேட்ட திருமழிசையாழ்வார், “நீ செல்லும்போது எனக்கு மட்டும் இங்கு என்ன வேலை?” என்றுகூறி, திருவெஃகா வரதராஜபெருமாள் சன்னதி முன்னே போய் நின்று,

“கணிக்கண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா! நீகிடக்க வேண்டா - துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்
பைநாகப் பாய்சுருட்டிக் கொள்”

என்று பாட, பாம்பணையில் பள்ளி கொண்டிருந்த பெருமாளும் திருமழிசையாழ்வார் பின்னே சென்றார்.

இதையறிந்த பல்லவ மன்னன் தன் தவறையுணர்ந்து, ஓடோடி வந்து, திருமழிசையாழ்வாரிடமும், கணிக்கண்ணனிடமும் பாதம் தொட்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

மன்னனை மன்னித்த திருமழிசையாழ்வார், பெருமாளைப் பார்த்து,

"கணிக்கண்ணன் போக்கொழித்தான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டும் – துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழித்தேன் நீயுமுன்
பைநாகப் பாயப்படுத்துக் கொள்"

என்று பாட, பெருமாளும் கோயிலுக்குள் புகுந்து பள்ளி கொண்டார்.

அவ்வாறு திருமழிசையாழ்வாரின் சொல்லுக்கும் செவிசாய்த்து அவர் சொன்னபடி செய்ததால் அன்று முதல் பெருமாளுக்கு, "சொன்ன வண்ணம் செய்த பெருமாள்" என்ற பெயர் ஏற்பட்டது.

திருமழிசையாழ்வார் தன் சீடர் கணிக்கண்ணனோடு திருக்குடந்தை சென்ற போது, ஒரு அந்தணர் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து ஓய்வெடுத்தார். அப்போது அந்த வீட்டில் வேதம் ஓதிக் கொண்டிருந்த வேதியர், அவரை கீழ்சாதிக்காரர் என்று கூறி, வேதம் ஓதுவதை நிறுத்திக் கொண்டனர். அதை புரிந்து கொண்ட திருமழிசையாழ்வார் அவர்கள் ஓதிய வேத மந்திரத்தையே அவர்கள் மறக்கும்படி செய்தார். பிறகு அந்த அந்தணர்கள் தங்கள் தவறையுணர்ந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.

அதேபோல திருமழிசையாழ்வார் திருப்புலியூர் வழியே நடந்து சென்றபோது, அவர் சென்ற திசையெங்கும் இருந்த திருமால் விக்ரங்களெல்லாம் அவர் பக்கம் திரும்பின. அதைப்பார்த்த திருப்புலியூர் அடிகள் அவரை அழைத்துவந்து வேதபீடத்தில் அமர்த்தி யாகம் செய்தார். அதைப் பார்த்த வேதியர்கள் "கீழ்சாதிக்காரருக்கு வேதமா" என்று இழிவாகப் பேசினர். அதைக்கேட்ட திருமழிசையாழ்வார்,

"அக்கரங்கள் அக்கரங்கள் என்றுமாவது தன்கொலோ
சக்கரக் கொள்கையனே சடங்கர் வாயடங்க
உட்கிடந்த வண்ணமே புறம்பொசிந்து காட்டிடே"

என்று பாடிட, அக்கணமே திருமழிசையார் உருவம் திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட திருமால் திருவடிகளை மலைமகளும் அலைமகளும் வருடும் காட்சியாகத் தெரிய, அவரை அவமதித்த வேதியர் அத்தனைபேரும் வியந்து போய் திருமழிசையாழ்வாரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.

இவ்வாறான இந்த நிகழ்வுகளைப் பார்க்கும் போது ஆழ்வார்களும், நாயன்மார்களும் சாதி மதங்களுக்கு அப்பாற்பட்ட சமூக சீர்திருத்தவாதிகளாக அக்காலத்திலேயே இறைவனால் படைக்கப் பட்டிருக்கிறார்கள் என்று நம்மால் யூகிக்க முடிகிறது.

பிறகு திருமழிசையாழ்வார் திருக்குடந்தை நகருக்குச் சென்று பெருமாளை வணங்கினார். பிறகு காவிரியாற்றுக்குச் சென்று தாம்பாடிய பாசுர ஏடுகளையெல்லாம் நீரிலே விட்டார். அவற்றில் இரண்டு நூலேடுகள் மட்டும் நீரோட்டத்தை எதிர்த்து திரும்ப நீந்தி வந்து திருமழிசையாழ்வாரின் திருவடிகளைத் தொட்டன. அவையே நூற்றிருபது பாசுரங்கள் கொண்ட திருச்சந்தவிருத்தம் மற்றும் தொண்ணூறு பாசுரங்கள் கொண்ட நான்முகன் திருவந்தாதி என்பவையாகும்.


அதன்பிறகு திருமழிசையாழ்வார் அவற்றை எடுத்துக் கொண்டு திருக்குடந்தை பெருமாள் சந்திதானத்தில் அரங்கேற்றம் செய்தார்.

அங்கே நின்ற கோலத்தில் காட்சியளித்த பெருமாளைப் பார்த்து,

"நடந்த கால்கள் நொந்தவோ
நடுங்கு ஞாலமே னமாய்
இடந்தமெய்கு லுங்கவோவி
லங்குமால்வ ரைச்சுரம்
கடந்தகால்ப ரந்தகாவி
ரிக்கரைக்கு டந்தையுள்
கிடந்தவாறெ முந்திருந்து
பேசுவாழி கேசவனே" (812)

என்று பாடினார். இவ்வாறு திருச்சந்த விருத்தத்தில் திருக்குடந்தைப் பெருமாளை 56 முதல் 61 வரை 6 பாடல்களைப் பாடியுள்ளார்.

அதேபோல,



"தூய்மையோக மாயினாய்து
மாயலங்கால் மாலையாய்
ஆமையாகி யாழ்கடல்து
யின்றவாதி தேவ,நின்
நாமதேய மின்னதென்ன
வல்லமல்ல மாகிலும்
சாமவேத கீதனாய்
சக்ரபாணி யல்லையே" (765)

என்று சக்ரபாணியையும்,

"அங்கமாறும் வேதநான்கு
மாகிநின்ற வற்றுளே,
தங்குகின்ற தன்மையாய்த
உங்கடல்ப ணத்தலை
செங்கண்நாக ணைக்கிடந்த
செல்மல்கு சீரனாய்
சங்கவண்ண மன்னமேனி
சாா்ங்கபாணி யல்லையே?" (766)

என்று சாரங்கபாணியையும் பாடுகிறார்.

இவ்வாறு திருமழிசையாழ்வார் திருக்குடந்தை பெருமாளைப் பாடிப்பாடி, பிறகு அங்கேயே இறைவனடி சேர்ந்தார்.

திருப்பாணாழ்வார்



திருப்பாணன்

சோழவளநாட்டில் உறையூரைத் தலைநகராகக் கொண்டு தர்மவர்மன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அப்போது திருவரங்கத்தில் பாணர்சேர் என்று ஒன்று இருந்தது. அப்பாணர்கள் சேரியில் ஒதுக்கப்பட்டவர்களாக வாழ்ந்து வந்தனர்.

ஆனால் அவர்கள் இசைக் கலையில் சிறந்து விளங்கினார்கள். அவர்கள் வீணையோ, யாழோ வாசிக்கும் போது, வானத்துப் பறவைகளும், கானகத்து மிருகங்களும் அந்த இசையில் மயங்கி, தங்கள் அசைவைக்கூட நிறுத்தி கொள்ளும். அப்படியென்றால் மனித குலத்திற்கு சொல்லவும் வேண்டுமோ?

பாணர்களின் பாட்டை மதித்த மக்களுக்கு, அந்த பாமரர்களை மதிக்கத் தெரியவில்லை. அவர்களை எல்லோரும் மிகவும் கீழான சாதியர்களாக ஒதுக்கி வைத்தார்கள். பாணர்கள் தீண்டத்தகாதவர்கள் என்று அந்தணர்கள் அவர்களை விட்டு ஒதுங்கிச் சென்றார்கள்.

அப்படிப்பட பாணர் சாதியில் திருமாலின் திருவருளால், அவருடைய ஸ்ரீவத்யைத்தின் அம்சமாக புர்துர்மதி வருடம் கார்த்திகை மாதம் புதன்கிழமை ரோகிணி நட்சத்திரத்தில் நெற்கதிரின் அருகே ஒரு குழந்தை பிறந்தது. அந்த குழந்தைதான் பிற்காலத்தில் திருப்பாணர் என்று அழைக்கப்பட்டார்.

அவர் காலையில் எழுந்து, நீராடித் திருமண் இட்டு, துளசி, தாமரை மணிமாலைகளை அணிந்து கொண்டு, கையிலே வீணையை எடுத்து அதை ஏந்திய வண்ணம் காவிரிக் கரைக்குச் செல்வார். காவிரியைக் கடந்து சென்றால் திருவரங்கக் கோயில். ஆனால் இவரால் செல்ல முடியாத நிலை? தீண்டத் தகாதவர் யாரும் நீரைக்கூடத் திண்டக்கூடாதென்பது அந்தணர் கூற்று.

ஆகவே திருப்பாணர் காவிரிக் கரையில் முகப்பில் நின்று கொண்டு, திருவரங்க பெருமாளை நினைவிற் கொண்டு, அவன் குணநலன்களை மனதில் கொண்டு வந்து அவற்றை வீணையோடு கலந்து மீட்டி, தன் வளமான குரலில் பாடுவார். அப்போது அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகி வந்து, காவிரியாற்றோடு கலக்கும்.

உலோக சாரங்கமுனி என்பவர் அந்தணர் குலத்தில் பிறந்தவர். அவர் அரங்கநாதருக்கு திருநீராட்டும் பணி செய்து வந்தார். வழக்கம்போல அவர் திருவரங்கன் திருவிக்கிரகத்திற்கு நீராட்டும் திருமஞ்சனத்திற்கு ஆற்று நன்னீர் எடுத்துப் போவதற்கு கையில் பொற்குடம் ஏந்தி அங்கே வந்தார். அங்கே அவர் நீர் எடுக்குமிடத்தில் திருப்பாணர் மெய்மறந்து இறைவனைப் பாடிக்கொண்டிருந்தார். தாம் நீர் எடுக்குமிடத்தில் கீழ்சாதிக்காரன் திருப்பாணர் நிற்பதைக் கண்டு, கடுங்கோபம் கொண்டு, அவரைத் தொட்டால் தீட்டு என்று, தன் கைகளைத் தட்டி பாணரை விலகிப் போகும்படி சைகை மூலம் காட்டினார்.

ஆனால் திருப்பாணரோ தன்னை மறந்து, உலகை மறந்து, திருவரங்கனோடு திருப்பாட்டுப்பாடிக் கொண்டிருந்தார். சாரங்கமுனிவர் கோபத்தின் எல்லைக்கே சென்றார்.

“நான் ஒரு மேல்சாதி அந்தணன். அரங்கநாதனுக்கே திருநீராட்டுபவன். தினந்தோறும் நீரெடுக்கும் வழக்கம் கொண்டவர். இதெல்லாம் தெரிந்திருந்தும் இந்த கீழ் சாதிக்காரன் விலகி வழிவிடாமல் நிற்கிறானே என்று எண்ணி, ஒரு கல்லையெடுத்து பாணர் மீது வீசினார். அந்த கல் பாணர் நெற்றியில் பட்டு, இரத்தம் கொட்டியது. அதனால் வலிபட்ட பாணர், தன் நிலைக்கு

மாறியபோது, எதிரே பெருமாளுக்கு நீர் எடுக்கும் சாரங்கமுனிவர் நிற்பது கண்டு, உடல் நடுங்க, அந்த இடம் விட்டு நகர்ந்தார்".

ஆலயத்திற்கு அரங்கநாதருக்கு நீராட்ட அவர் சன்னதிக்குச் சென்ற சாரங்கமுனிவர், அவர் விக்ரகத்திற்கு முன் சென்றபோது, அதன் நெற்றியிலிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருப்பது கண்டு அதிர்ச்சியடைந்தார். எப்படி என்று எண்ணிப் பார்த்தார். விடை தெரியவில்லை. வானம் பூமி கூட இப்போது கல்லடிபட்ட நெற்றிபோல சிவந்து போனது. இருட்டு வந்தது.

இன்னும் எதுவென்றே தெரியாமல் இல்லம் திரும்பிய சாரங்கமுனிவர் உறங்கப் படுக்கைக்குப் போனார். அப்போது அவர் கனவில், இறைவன் தோன்றி, "சாரங்க முனிவரே! என் சரீரத்திற்கு நீராட்டும் அந்தணர் குலப் பெருமாளே! எம்மீது நீர் காட்டும் அன்புக்கு அளவில்லை. ஆயினும் நீர் இன்று பெருந்தவறிழைத்தீர். பாணர் என்னைப்பாடும் பக்தர், உன்னைவிட எம்மீது பேரன்பு கொண்டவர். அவரை கீழ்சாதி என்று கூறி கல்லெறிந்து காயப்படுத்தி, இரத்தம் வரவழைத்தீர். அது என்னைக் காயப்படுத்தி விட்டது. நான் மனிதர்களைத்தான் படைத்தோம். சாதியை அல்ல. அதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். முன்பு நாம் தேவர்களுக்காக மூன்றடி மண் கேட்டு மகாபலி சக்ரவர்த்தியிடம் வேண்டினோம். அப்போது எம்முடைய உருவம் சுருங்கியது. அவ்வடிவுடன் மகாபலியிடம் சென்ற போது, அந்த அரசன் என்மீது பக்தி கொண்டு அம்மூன்றடி மண்ணை எமக்குத் தந்தான். அவ்வரசன் பக்தியை நான் கண்டவுடன் நான் முவ்வுலகளவுக்கு விசுவரூபம் எடுத்து எம்மைக் காட்டி, அவருக்கு அருள் செய்தோம். அவ்வாறு என்னுடைய அடியவர்களுக்காக என்றும் நாம் எளியவனாகக் காட்சி தருவோம். இன்னும் அவ்வாறே யாம் திருப்பாணரின் நெற்றிக் காயத்தை ஏற்றுக் கொண்டோம். ஆகவே நீர் நாளை விடியற்காலை காவிரிக் கரைக்குச் சென்று, எமக்காக நெஞ்சுருகப் பாடிக்கொண்டிருக்கும் திருப்பாணரை தோளில் ஏற்றி எமது சன்னதிக்கு கொண்டு வருக எனக்கூறி மறைந்தார்.

அவ்வாறே சாரங்க முனிவர் காவிரியாற்றங்கரைக்குச் சென்று திருப்பாணரை அழைக்க, அவர் மறுத்தார். அதற்கு முனிவர் விவரத்தை எடுத்துக்கூறி, அவரைத் தோளில் ஏற்றி திருவரங்கப் பெருமாள் முன்னிலையில் கொண்டு சென்று நிறுத்தினார்.

இதுவரை கண்களாக கண்டிராத திருவரங்கனை கண்முன்னே கண்ட திருப்பாணர், தன் மெய்சிலிர்க்க சிரம்மேல் இருகரம் கூப்பி, அப்படி இறைவன் திருவடி விழுந்து வணங்கினார்.

அதன்பிறகு அவர் பாதமலர்களையே அடியாகக் கொண்டு,

"அமல னாதிபிரா னடியார்க்
கென்னை யாட்படுத்த
விமலன், விண்ணவர் கோன்விரை
யார்பொழில் வேங்கடவன்,
நிமலன் நின்மலன் நீதி வானவன்
நீள்மதி ளரங்கத் தம்மான், திருக்
கமல பாதம்வந் தென்கண்ணி
னுள்ளன வொக்கின்றதே" (927)

என்று தொடங்கினார். இந்த பாசுரம் முதலாக திருப்பாணாழ்வார் பத்துப் பாமாலைகளை பாதத்துக்கே மாலையாகப் பாடினார்.

அதில் ஒரு சிறப்பு என்னவென்றால், பிரவண மந்திரத்திலுள்ள அகரம், உகரம், மகரம் என்று அப்பாசுரங்களில் முதலாம் எழுத்தாக வைத்துப் பாடினார்.

அடுத்து, இரண்டாவதாக அவர் உகரத்தை, முதலெழுத்தாகக் கொண்டு,

"உவந்த வுள்ளத்தனா யுலகமளந் தண்டமுற
நிவந்த நீள்முடியன் அன்றுதேர்ந்த நிசாசரரை
கவர்ந்த வெங்கனைக் காகுத்தன் கடியார்பொழில்
அரங்கத் தம்மான், அரைச்
சிவந்த ஆடையின் மேல்சென்ற
தாமென் சிந்தனையே"

என்று பாடினார்.

பிறகு மூன்றாவதாக, மகரத்தை முதலெழுத்தாகக் கொண்டு,

"மந்திபாய்வட வேங்கட மாமலை வானவர்கள்
சந்திசெய்ய நின்றா னரங்கத்தரவி னணையான்
அந்தி போல்நிறத் தாடையு மதன்மேல்
அயனைப் படைத்த தோரெழில்
உந்தி மேலதன் றோஅடி
யேனுள்ளத் தின்னுயிரே"

என்று பாடினார்.

இவ்வாறு திருப்பாணாழ்வார் திருவரங்கப் பெருமாளை மட்டும், 'அமலனாதிபிரான்' என்ற பெயரில் பத்து பாசுரங்கள் பாடி முடித்தார்.



பத்தாவது பாசுரத்தில் அவர்,

"கொண்டல் வண்ணனைக்
கோவல னாய்வெண்ணெய்
உண்ட வாயன்என்
னுள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோனணி
யரங்கன்என் னமுதினைக்
கண்ட கண்கள்மற்
றொன்றினைக் காணாவே"

என்று பாடி முடித்ததும், அவர் திருவரங்கப் பெருமானின் திருவடிகளில் உட்புகுந்து இறைவனுடன் கலந்தார்.

திவ்யதேசம் - 58



மூலவர் : பக்தவச்லப் பெருமாள்
பத்தராவிப் பெருமாள்
நிற்கும் திருக்கோலம்
கிழக்கே திருமுகம்

தாயார் : சுதாவல்லி (என்னைப் பெற்ற தாய்)

தீர்த்தம் : வருணபுட்கரிணி
விருத்த சீரநதி

மங்களாசாசனம் :
திருமங்கையாழ்வார் : 1089, 1642
மொத்தம் : 2 பாசுரங்கள்

திருநின்றவூர் (திண்ணனூர்)

"ஏற்றி னையிம யத்துளெம் மீசனை
இம்மை யைமறு மைக்கு மருந்தினை
ஆற்ற லைஅண்டத் தப்புறத் துயத்திடும்
ஐய னைக்கையி லாழியொன் றேந்திய
கூற்றி னைகுரு மாமணிக் குன்றினை
நின்ற வூர்நின்ற நித்திலத் தொத்தினை
காற்றி னைப்புன லைச்சென்று நாடிக்
கண்ண மங்கையுள் கண்டுகொண் டேனே"

என்று 1642-ஆம் பாடலில் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார்.



சென்னை சென்ட்ரல் ரயில்நிலையத்திலிருந்து அரக்கோணம் செல்லும் மின்சார ரயிலில் சென்று, திருநின்றவூர் ரயில் நிலையத்திலேயே இறங்கலாம். அங்கிருந்து 2 கி.மீ. தூரம் பேருந்து, ஆட்டோவில் செல்லலாம்.

சென்னையிலிருந்தும் பேருந்து வசதியும் உண்டு.

இந்த திருநின்றவூர்க்குச் செல்பவர்கள், அப்படியே 63-நாயன்மார்களில் ஒருவரான பூசலார் நாயனார் கோயில் இருதயவீசுவரர் திருக்கோயிலையும் தரிசித்து வரலாம். சிவபெருமான் பூசலார் நாயனார் இருதயத்தில் நின்றதால், இதற்கு திருநின்றவூர் என்ற பெயர் வந்தது.




திருநின்றவூர் வருபவர்கள் அப்படியே பக்கத்திலுள்ள திருவள்ளூர் வீரராகவ பெருமாள் கோயிலையும் தரிசித்து வரலாம். 108-திவ்ய தேசங்களில் அதுவும் ஒன்று.

நாராயணப் பெருமாள் ஒரு காலத்தில் தியான நிலையில் கண்மூடி நித்திரையில் இருந்தபோது, திருமதியான மகாலட்சுமி தேவகன்னிகையரும் கூட சக்கரத்தாழ்வார் ஆசிசேடர் ஆகியோருடன் இத்தலத்திற்கு வந்து நின்று, இத்தலத்தில் எல்லா செல்வங்களும் நிரம்ப அருள் புரிந்தாள். ஆகவே திருவாகி லட்சுமி இங்கு வந்து நின்றதால், இந்த தலத்திற்கு 'திருநின்றவூர்' என்ற பெயர் உண்டாயிற்று. இதை திண்ணனூர் என்றும் கூறுவர்.



"திருநின்றூர் பக்தவச்ச லப்பெ ருமாளின்
திருக்கோலம் நின்ற நிலையில் - திருப்பதிபோல்
பெருஞ்செல்வம் காண பெரும்புகழைக் காண
அருள்தர வேண்டினேன் அன்று"

திவ்யதேசம் - 59



மூலவர் : வீரராகவப் பெருமாள்
புஜங்க சயனம்
கிழக்கே திருமுக மண்டபம்

தாயார் : கனகவல்லி

தீர்த்தம் : அருந்தாபநாசினி புட்கரணி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1058-1067, 2674 (116)

திருமழிசையாழ்வார் : 2417

மொத்தம் : 12 பாசுரங்கள்

திருஎவ்வுள் (திருவள்ளூர்)


இந்த திருக்கோயில் சென்னையிலிருந்து 50 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. சென்னை யிலிருந்து அரக்கோணம் வரை செல்லும் மின்சார ரயிலில் செல்லலாம். திருவள்ளூர் ரயில் நிலையத்தில் இறங்கி ஐந்து ரூபாய், பத்து ரூபாய் கொடுத்தால் ஆட்டோவில் ஆலய வாசலுக்கே கொண்டு போய் விடுவார்கள். ரயிலடியிலிருந்து நகர பேருந்துகளும் உண்டு.

"நாகத் தணைக்குடந்தை வெஃகா திருவெவ்வுள்
நாகத் தணையரங்கம் பேரன்பில் - நாகத்
தணைப்பாற் கடல்கிடக்கு மாதி நெடுமால்
அணைப்பார் கருத்தனா வான்"

என்று நான்முகன் திருவந்தாதி 36-ஆவது பாடலில் திருமழிசையாழ்வார் இத்தலம் பற்றி பாடியுள்ளார். இந்தப் பாடல் நாலாயிரம் திவ்ய பிரபந்தத்தில் 2417வது பாடலாக வருகிறது.

"காசை யாடை மூடியோடிக்
காதல்செய் தானவனூர்
நாச மாக நம்பவல்ல
நம்பி நம்பெருமான்
வேச னன்ன தோள்மடவார்
வெண்ணெயுண் டானிவனென்று
ஏச நின்ற வெம்பெருமா
னெவ்வுள் கிடந்தானே"

என்று தொடங்கி,



"இண்டை கொண்டு தொண்டரேத்த
எவ்வுள் கிடந்தானை
வண்டு பாடும் பைம்புறவில்
மங்கையர் கோன்கலியன்
கொண்ட சீரால் தண்டமிழ் செய்
மாலையீ ரைந்தும் வல்லார்
அண்ட மாள்வ தாணையன்றே
லாள்வ ரமருலகே"

என்று முடியும் பெரிய திருமொழி "காசையாடை" இரண்டாம் பத்தில் திருமங்கையாழ்வாரும் இத்தலத்தைப் பாடியுள்ளார்.

"என்னுடைய சின்னமுதை எவ்வுள் திருமலையை" என்று பெரிய திருமடலில் 116-வது அடியில் பாடியுள்ளார்.



"தண்ணமர் மதிபோல் சாந்தத்
தழைத்தசத் துவனே போற்றி
வண்ணமா மணியே போற்றி
மணிவண்ணத் தேவா போற்றி
அண்ணலே எவ்வு ளூரில்
அமர்ந்தருள் ஆதி போற்றி
விண்ணவர் முதல்வா போற்றி
வீரரா கவனே போற்றி!"

"அற்புத திருவை மார்பில்
அணைத்தபே ரழகா போற்றி
பொற்புறு திகிரி சங்கு
பொருந்துகைப் புனிதா போற்றி
வற்புறு பிணிதீர்த் தென்னை
மகிழ்வித்த வரதா போற்றி
வெற்புயர் எவ்வு ளூர்வாழ்
வீரரா கவனே போற்றி"

என்று திருஎவ்வுளூர் வீரராகவனைப் பற்றி அருட்பிரகாச வள்ளலார் பாடியுள்ளார். அவருக்கு வயிற்றுவலி ஏற்பட்ட போது, இப்பஞ்சகம் பாட, அது தீர்ந்தபோது பாடப்பட்டதாம்.

திருவள்ளூர் வீரராகவப் பெருமாள் பற்றி திருமங்கையாழ்வார் 11-பாசுரங்களும், திருமழிசையாழ்வார் ஒரு பாசுரமும் ஆக 12-பாசுரங்கள் பாடியுள்ளார்கள்.

திருஎவ்வுளூர் வரலாற்று மகிமை

அந்தக் காலத்தில் சதானீக மகராசனுடைய மகன் சகஸ்ரானீக மகாராசன் மார்க்கண்டேய ரிஷியிடம் சென்று, "பூலோகத்தில் தவ வலிமையால் விரைவில் மோட்சமடையச் கூடிய தபோவனமும், புண்ணிய தீர்த்தமும், திருமால் சன்னதியும் எந்த இடத்தில் உள்ளது? அதை எனக்கு உபதேசித்தருள வேண்டும்" என்று மண்டியிட்டு, அவர் பாதம் தொட்டு, பணிந்து வேண்டிக் கொண்டான்.

அதைக் கேட்ட மார்க்கண்டேய முனிவர், க்ருதயுகத்தில் தேவபாகர் என்பாருக்கும் சாலிஹோத்ர மகரிஷி என்பாருக்கும் நடந்த கதையைக் கூறத் தொடங்கினார்.

"பத்ரிகாச்சரமத்தில் உள்ள கங்கா தீர நதிக்கரையில் தேவபாகர் என்னும் ஓர் முனிவர் வசித்து வந்தார். அவர் ஒருநாள் சாலிகோத்ர முனிவரிடம் சென்று, மண்டியிட்டு வணங்கி, "மகா முனிவரே, தவத்தினால் விரைவில் சித்தியடையக் கூடிய, அதாவது மோட்சமடையக் கூடிய தூய தபோவனம், மிகக்கொடிய பாவங்களையும், தீமைகளையும் தீர்க்கவல்ல புண்ணிய தீர்த்தமும், இம்மை, மறுமைக்கும் நன்மைகளைத் தந்தருளும் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் எங்கிருக்கிறது? அடியேனுக்கு அதை அருளிச் செய்ய வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அதற்கு சாலிகோத்ர முனிவர், "முனிவரே, நீர் வினவியது பெறுதற்கரியது. ஆயினும் இந்த உலகில் அப்படியொரு திருக்கோயில் உள்ளது. அதை நான் விளக்கமாகச் சொல்லுகிறேன் கேளும்" என்று கூறி அந்த திருத்தலப் பெருமையைக் கூறத் தொடங்கினார்.

விந்திய பர்வதத்தின் அருகில் உள்ளது வெள்ளிமலை. அதன்வழியாக அகஸ்தியாச் சரமத்தில் உற்பத்தியாகி, பெருகி ஓடும் நதியின் பெயர் 'விருத்தக்ஷீரநதி' ஆகும். அதற்கு வடக்காகவும், கல்லாற்றுக்குக் கிழக்காகவும், குசஸ்தல நதிக்குத் தெற்காகவும், சமுத்திரத்திற்கு மேற்காகவும், கிழக்கு மேற்காக ஐந்து யோசனை நீளமும், தெற்கு வடக்காக ஒரு யோசனை அகலமும் உள்ள 'புண்யாவர்த்தகம்' என்றொரு இடமிருக்கிறது. அதில் 'வீசாரண்யம்' என்கிற பிரசித்தி பெற்ற தூய தபோவனமும், தேவதைகளால் உண்டாக்கப்பட்ட 'ஹருத்தாப நாசிநீ' என்ற ஒரு மகாபுண்ணிய தீர்த்தமும், அதன் வடகறையில் ஆச்ரிதர் கண்களுக்கு ஆனந்தகரமான 'திருவிஜயகோடி' என்னும் விமானத்தில் நாகத்தணையில் துயிலும் திருநாராயணனுடைய திருக்கோயிலும் அமைந்திருக்கிறது. நீர் அங்கு சென்று யோகமாகிய தவத்தை மேற்கொண்டீராகில் விரைவில் முக்தி கிடைக்கும்" என்று கூறிச்சென்றார்.

வீசாராண்யம் என்ற தபோவனம் உயர்ந்த மரங்கள் அடர்ந்தும், யாகத்திற்குப் பயன்படக் கூடிய தர்ப்பம், சமித்து, துளசி முதலிய மருத்துவ செடி மரங்களுடனும், மல்லிகை, செண்பகம் போன்ற மலர்களால் நிறைந்தும், சிங்கம், காட்டானைகள் போன்ற கொடிய மிருகங்கள் நடமாட்டம் கொண்டதாயும், மயில்கள் தோகை விரித்தாடவும், குயில்கள் கூவவுமாக, அதிகக் குகைகளும், பர்ணா சாலைகளும், யக்ஞசாலைகளும் அவற்றுக்கு வெளியிடங்களில் நகரங்கள் சூழ்ந்ததாகவும் மிகவும் அழகாக பிரகாசித்துக் கொண்டிருந்தது. அங்கே வசிஷ்டர், வாமதேவர், வியாசர் முதலான ரிஷிகளும், எங்கும் நிறைந்த பிராமணோத்தமர்களும், பராக்கரமத்தால் சத்திய கீர்த்தி பெற்ற சத்ரியர்களும், குபேரனையொத்த வைசியர்களும், பகவானிடமும், பாகவதர்களிடமும் பக்தி கொண்ட, பெருமை வாய்ந்த முக்குண சூத்திரர்களும், தத்தமது நித்திய கர்மங்களை குறைவின்றி செய்து

வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஒரு சமயம் அசுரகுலத்தில் உதித்த மது, கைடபன் என்னும் இரண்டு ராட்சர்களுக்கும், மகாவிஷ்ணுவுக்கும் மிகப் பயங்கரமான ஒரு கொடிய யுத்தம் ஏற்பட்டது. அப்போது அந்த அசுரர்கள் ஆகாயத்தில் பறந்து, பரவி உயர்ந்தமையால் அவர்களுக்குப் பயந்து, சூரிய சத்திரர்களை பிரகாசிக்காமலும், வாயு வீசாமலும், நெருப்பு எரியாமலும் போகவே, தவசிகளும், முனிவர்களும், பிராமணர்களும் யாகங்கள் செய்ய முடியாமலும், வேதங்கள் ஓதமுடியாமலும் நிலை தடுமாறி, அச்சம் மிகக்கொண்டு கதிகலங்கிப் போனார்கள்.

அதைக்கண்ட கிருஷ்ண பகவான், அக்கொடியவர்களை அழிக்கும் பொருட்டு மூவுலகத்தையும் தன் சக்தியால் அழக்கவல்ல சுதர்சனாழ்வானைப் பிரயோகித் தருளினார். மிகப்பெரிய அக்னி சுவாலையுடன் தங்களைத் துரத்தி வந்த சக்ராயுதத்திற்குப் பயந்துபோய், அந்த அசுரர்கள் எங்கு ஓடி ஒளிந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியாத சூழ்நிலையில், இந்த விசாரண்யத்திற்கு ஓடி வந்து மறைந்து கொண்டார்கள். சர்வ சக்தி படைத்த பகவன் அவர்களை விமானத்திலிருந்து சக்ராயுதத்தால் சம்ஹாரம் செய்து, ரிஷிகளையும், எல்லா மக்களையும் காப்பாற்றினார். அப்போது அவர் விஜயஸ்ரீயுடன் விளங்கியதால் அந்த விமானத்திற்கு 'விஜயகோடி வமானம்' என்ற பெயர் ஏற்பட்டது. மது, கைடபன் என்ற ராட்சர்களை வீரப்போர் புரிந்து, வெற்றி கண்டதால், இத்தலப் பெருமாளுக்கு வீரராகவப் பெருமாள் என்ற பெயர் ஏற்பட்டது.

இந்த தலத்தில் யாராகயிருந்தாலும் தெரிந்தும், தெரியாமலும் செய்கின்ற புண்ணியங்கள் ஒன்று ஆயிரமாக விருத்தியடையும். பாவங்கள் மறைந்து போகும். அதனாலேயே இத்தலத்திற்கு "புண்யாவர்த்த ஷேத்திரம்" என்ற பெயர் ஏற்பட்டது.

கொடிய பாவங்கள் செய்த மது, கைடபர்கள் இந்த புண்ணிய தலத்தில் இறந்ததால், பெரும் துயரத்தைத் தரக்கூடிய எமலோகத்தையடையாமல், திருநாராயணனுடைய சுயராஜ்யமான மோட்சத்தை யடைந்தார்கள் என்பதையே அதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

எம்பெருமான் இப்போதும் அந்த மதுகைடபர் அசுரர்களின் பலியீட்டால் உண்டான துன்பங்கள் தீர விஜயகோடி விமானத்தில் அமர்ந்து கொண்டு பக்தர்களுக்கு அருள் செய்து வருகிறார்.

இதுவே திருஎவ்வுள்ளூர் வீரராகவ சுவாமிகள் தலவரலாற்று மகிமை என்று அந்த தலவரலாறு நூல் சமஸ்கிருதம் கலந்து புரியாத தமிழில் நமக்கு கூறுகிறது.

திருவள்ளூர் இரயில் நிலையத்தில் இறங்கி, ஆட்டோவில் வீரராகவப் பெருமாள் கோயிலை தரிசித்து வரும்வரை நான் கண்ட அனுபவம், அது ஆந்திராவை யொட்டியுள்ளதால் ஆந்திர வாடையே வீசுகிறது.

இரண்டாவது அங்கெல்லாம் சாலை வசதியும், போக்குவரத்தும் இன்னும் மேம்படுத்தப்பட வேண்டும் என்று எண்ணுகிறேன்.

அந்த எண்ணத்துடனேயே நான் ஒரு வெண்பா எழுதிவிட்டு, என் திருயாத்திரையை முடித்துக் கொண்டேன்.

"திருவள்ளூர் வீரராகர்சாமி வந்து
அருள்செய்வார் செல்வம் அளித்து - பொருளும்
புகழும் நலமும் பொழிவார் மழையும்
அகலும் இடரெல்லாம் ஆண்டு"

"பேயாழ்வார்"


பேயாழ்வார்

நான் அறுபத்து மூன்று நாயன்மார்கள் திருத்தலங்களுக்கும் சென்று, வணங்கி, அவற்றை எழுதி, அது 'ஆனந்த விகடன்' வாசன் பப்ளிகேஷன் மூலமாக நூலாக வெளிவர, அதனால் எனக்கு ஏற்பட்ட பயன், பெருமை, புகழ், மகிழ்ச்சியின் விளைவே நான் மீண்டும் ஆன்மீகக் கடலுக்குள் நீந்திப் போக ஏதுவாகயிருந்தது.

நான் முதலில் பன்னிரு ஆழ்வார்கள் திருக்கோயில்களுக்குச் செல்லத்தான் முடிவெடுத்துச் சென்றேன். அதன்பிறகுதான் அவர்கள் 108 திவ்ய தேசங்களைப் பாடி, அதாவது மங்களா சாசனம் செய்திருக்கிறார்கள் என்ற செய்தியைப் பார்க்க முடிந்தது. அதன்பிறகே 108 திவ்ய தேசங்களையும் பார்ப்பது என்ற முடிவுக்கு வந்தேன். அந்த திருயாத்திரையையும் தொடங்கினேன்.

அப்படி அந்த புனித யாத்திரை சென்ற போது, இன்னொரு பெரிய செய்தி கிடைத்தது. அது எனக்கு நான் செய்த முட்டாள் தனமாகக்கூடப்பட்டது. எப்படியென்றால் வடதேசங்களைத் தவிர்த்து, தென்னாட்டை எடுத்துக் கொண்டால், அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில் கும்பகோணம், காஞ்சிபுரம், மதுரையைச் சார்ந்த பகுதிகளில் சைவ, வைணவக் கோயில்கள் ஒன்றோடொன்று கலந்தே இருக்கின்றன. சைவ, வைணவர்கள் அவற்றை போட்டி மனப்பான்மையில் கட்டினார்களா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நான் அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருத்தலத்திற்குச் சென்றபோதே, இந்த ஆழ்வார்களின் பெருமாள்கள் கோயிலுக்கும் சென்றிருந்தால் பயணக்காலம், நேரம், பணம் ஆகியவற்றின் அளவு குறைந்திருக்கும். அதிகமான கஷ்டங்கள் குறைந்திருக்கும்.

ஆகவே இனிமேல் சிவத்தலங்களுக்கோ பெருமாள் தலங்களுக்கோ செல்பவர்கள் இரண்டையும் சேர்த்தே பார்த்துவிடுவது என்ற முடிவுக்கு வருவது நல்லது. அது சைவ, வைணவ வேறுபாடுகளை மறந்து எல்லா தெய்வங்களும் ஒன்றே என்ற உணர்வையும் கொடுக்கும்.

சில வருடங்களாக நான் கார்த்திகை – மார்கழி மாதங்களில் திருக்கோயில்களுக்குச் செல்ல, மாலை போடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளேன். அதன்படி ஒருசில வருடங்கள் அறுபடை முருகன் கோயில்களுக்கு மாலை போட்டு வந்தேன். பிறகு நால்வர்களால் பாடப்பெற்ற சிவதலங்களுக்கு மாலை போட்டேன். பிறகு அம்மன் கோயில்களுக்கு மாலை போட்டேன். அதன் பிறகுதான் 63-நாயன்மார்கள் சிவதலங்களுக்கும் மாலை போட்டு, தரிசனம் செய்து வந்தேன். அதன் தொடர்பாகவே இப்போது 'பன்னிரு ஆழ்வார்கள், 108 திவ்ய தேசங்கள்' செல்ல தீர்மானித்து பயணத்தைத் தொடங்கினேன்.

17-11-2006 ஆம் தேதி, அதாவது கார்த்திகை 1-ந் தேதி நான் பன்னிரு ஆழ்வார்கள் திருத்தல யாத்திரை செல்ல 48 நாட்கள் விரதத்தை தொடங்கி, காமாட்சிபுரம் ஆதீனம் அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயிலில் தொடங்கினேன். ஞானகுரு சாக்தஸ்ரீ சிவலிங்கேஸ்வர சுவாமிகளின் ஆசி பெற்றேன்.

பன்னிரு ஆழ்வார்கள் என்பதனால் நான் 16-12-2006 ஆம் தேதிதான் ஆழ்வார்கள் திருக்கோயில் யாத்திரையைத் தொடங்கினேன். அதன்பிறகுதான் எனக்கு அவர்கள் அடியொற்றிய, அவர்களால் மங்களா சாசனம் பெற்ற 108 திவ்யதேசங்களும் செல்ல வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

16-12-2006 ஆம் தேதி அதிகாலையில் தான் எனது ஆழ்வார்கள் திருயாத்திரையை தொடங்கினேன். அன்று காலை நான் சென்னை மயிலாப்பூர் சென்று அருள்மிகு கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருப்பாதங்களை தரிசித்துவிட்டு, அங்கே கச்சேரி சாலையில் அமைந்துள்ள பேயாழ்வார் அவதரித்த திருவிடத்திற்குச் சென்றேன்.

பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் மூவரும் முதலாழ்வார்கள் என்று போற்றப் படுகிறார்கள். இவர்கள் தாய் தந்தையர் வழியில் பிறக்காமல், தானாக இறைவனருளால் இப்புண்ணிய தேசத்தில் வந்து பூத்தவர்கள் ஆவர். இவர்கள் அவதரித்த காலமும் அரிதிட்டு கூற முடியாததாகும். ஆகவேதான் இவர்கள் முதலாழ்வார்கள் என்று மொழியப்பட்டார்கள்.

பயணப்பட்டியல் அடிப்படையிலும், போக்குவரத்து வசதியின் அடிப்படையிலும், நான் முதலில் பேயாழ்வார் திருபீடத்திற்கு வந்தேன்.

பேயாழ்வார் அவதாரத் திருவிடம் வருவோர் சென்ட்ரலிலிருந்து வந்தால் 21, 21சி எண் பேருந்து ஏறி, மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோயில் தெப்பக்குளம் வந்து, அந்த கோயில் வழியாகவே கச்சேரி சாலை வந்து பேயாழ்வார் திருவிடத்தை அடையலாம். எக்மோரிலிருந்து வருபவர்கள் பட்டினப்பாக்கம் செல்லும் பேருந்து ஏறி வரலாம். அல்லது எக்மோரிலிருந்து அண்ணா சாலை, எல்.ஐ.சி. வரை வந்து, பிறகு பேருந்து மாறி மயிலாப்பூர் வரலாம்.

மயிலாப்பூருக்கு மயூராபுரி, மாதவபுரம் என்ற பெயர்கள் உண்டு.

வேதவியாசர் என்ற முனிவர் உலக நன்மைக்காக தவமியற்ற, ஒரு இடம் வேண்டும் என்று நாராயணனை வேண்டிக் கொள்ள, அதற்கு உகந்த இடம் மயூராபுரி தான் என்றும் அங்கே மாதபுரத்தில் பிருகு முனிவர் தவம் செய்வார் என்றும் கூறி அங்கே அனுப்புவித்தார். அங்கே சென்று வேதவியாசர் தவம் செய்தார். அந்த மயூராபுரியே இப்போது மயிலாப்பூர் ஆகும்.

தவிர, அந்த மயிராபுரியில் மாதவன் ஸ்ரீதேவி - பூதேவியுடன் கல்யாண கோலத்தில் 'ஸ்ரீதேவி - பூதேவி சமேத மாதவன்' என்ற பெயரில் காட்சி தந்து வருகிறார். ஆகவே அதற்கு மாதவபுரம் என்று பெயர் வந்தது.

இந்த கோயில் மயிலாப்பூர் திருவள்ளுவர் சிலை, கச்சேரி சாலை, அம்பேத்கார் பாலம், கபாலீஸ்வரர் கோயில் ஆகியவற்றை ஒட்டியுள்ளது. இந்த கோயிலில் அமிர்தவல்லி தாயார் சன்னதியுள்ளது.

பேயாழ்வார் சென்னை மயிலாப்பூரில் உள்ள ஆதிகேசவப் பெருமாள் சன்னதியிலுள்ள 'மணி கைரவம்' என்ற கிணற்றில் செவ்வல்லிப் பூவில் அவதரித்தார். ஐப்பசி மாதம் சதயம் நட்சத்திரத்தன்று திருமாலில் கையிலுள்ள வாளின் அம்சமாக இவர் பிறப்பெடுத்தார். திருமாலின் கரத்திலுள்ள அந்த வாளுக்கு நந்தகம் என்று பெயராகும்.

பேயாழ்வார் மதாவப் பெருமாள் கோயிலில் திருமாலே கதியென்று வாழ்ந்து வந்தார். அங்கே அமிர்தவல்லி தாயார் சன்னதியே கதியென்று இருந்தார். இப்போதும் அச்சன்னதியின் தூண்களில் இவரைப் பற்றி சிற்பங்களைக் காணலாம்.

இவர் திருமாலை எண்ணி பேய்போல் இடம், காடு, மேடு என அலைந்து திரிந்ததால் இவருக்கு பேயாழ்வார் என்று பெயர் ஏற்பட்டது.

இவர் அருளிப்பாடியது அதாவது மங்களா சாசனம் செய்தது நாலாயிரத்திவ்யப் பிரபந்தம் மூன்றாந் திருவந்தாதி ஆகும்.



"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணனன்பால் இன்று"

என்று தொடங்கி,

"சார்பு நமக்கென்றும் சக்கரத்தான், தண்குழாய்த்
தார்வாழ் வரைமார்பன் தான்முயங்கும் - காரார்ந்த
வானமரு மின்னிமைக்கும் வண்டா மரைநெடுங்கண்
தேனமரும் பூமேல் திரு"

என்று முடிய 100 பாடல்கள் எழுதியுள்ளார்.

திருகோவலூரில் இடைகழில் மூன்று ஆழ்வார்களும் சந்தித்த போது, நாராயணன் அவர்களுக்கு காட்சி தந்தார். அப்போது அந்த ஆனந்த பரவசத்தில் மூன்று ஆழ்வார்களும் நூறு பாடல்கள் கொண்ட திருவந்தாதிகளை திருமாலுக்கு மங்களா சாசனம் செய்தார்கள்.

பொய்கையாழ்வார் முதற் திருவந்தாதியும், பூத்தாழ்வார் இரண்டாம் திருவந்தாதியும் பாடினார்கள். அதில் பேயாழ்வார் பாடியதே இந்த மூன்றாந் திருவந்தாதி ஆகும்.

பேயாழ்வார், திருமழிசையில் பிறந்து, 'சிவ சிவ' என்று தவமேற்றிருந்து சிவவாக்கியர் திருமழிசையாழ்வாரை வைணவத்தில் வர ஈர்த்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பேயாழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பட்ட திவ்ய தேசங்கள் திருவரங்கம், திருக்குடந்தை, திருவிண்ணகர், திருமாலிருஞ்சோலை, திருக்கோட்டியூர், திருப்பரமபதம், திருப்பாற்கடல், திருவேங்கடம், திருக்கடிகை, திருவல்லிக்கேணி, திருவெஃகா, திருப்பாடகம், திருவேளுக்கை, திருஅட்டபுயகரம் என 14-தேசங்களாகும்.

மயிலாப்பூர் கச்சேரி சாலை தெருவிலிருக்கும் பேயாழ்வார் அவதரித்த சன்னதி கிணற்றுக்கு நான் சென்று, அதைப் பார்த்து வணங்கினேன். பிறகு சிறிது நேரம் அங்கமர்ந்து தியானித்து ஒரு வெண்பா எழுதினேன்.

**"வாயிலார் நாயனார் வாழும் மயிலையில்
தாய்தந்தை யில்லாமல் தான்தோன்றி - பேயாழ்வார்
கேணி வயிறுதன்னில் செவ்வல்லிப் பூவில்
காண மலர்ந்தார் கனிந்து"**

திவ்யதேசம் - 60



திருவல்லிக்கேணி
(பிருந்தாரண்யம்)

மூலவர் : வேங்கடகிருஷ்ணன்
ருக்மணியுடன் நிற்கும் கோலம்
(பலராமன், சாத்யகி, அநிருத்தன்
இவர்களும் உடன்) கிழக்கு முகம்

உற்சவர் : பார்த்தசாரதி

தாயார் : வேதவல்லி

மூலவர் : ரங்கநாதன் – மன்னாதன்
புஜங்கசயனம்
கிழக்குத் திருமுகம்

தாயார் : வேதவல்லி

மூலவர் : இராமர்-சீதை, லட்சுமணன், பரதன்,
சத்ருக்கன், அனுமான்
ஆகியோருடன் நின்ற திருக்கோலம்
தெற்கே திருமுகம்

மூலவர் : வரதராசன், தேவபெருமான்
கருடன் மீதமர்ந்த திருக்கோலம்
கிழக்குத் திருமுகம்

மூலவர் : நரசிம்மர் (தென்னிய சிங்கர்)
வீற்றிருக்கும் திருக்கோலம்
மேற்குத் திருமுகம்



தீர்த்தம் : அல்லிக் கேணி
இந்த புட்கரிணியில் இந்திரம்,
சோமம், மீன், அக்னி, விஷ்ணு
என்ற ஐந்து தீர்த்தங்கள்
சூழ்ந்ததாக ஐதீகம்.

மங்களாசாசனம் :
திருமங்கையாழ்வார் : 1068-1077
பேயாழ்வார் : 2297
திருமழிசையாழ்வார் : 2410

திருவல்லிக்கேணி! சென்னை மாநகரின் முக்கிய சாலைகளில் இங்குள்ள நெடுஞ்சாலையும் ஒன்று. இந்து-முஸ்லீம்கள் இணைந்து வாழும் ஒரு முக்கியப்பகுதி. அதிகமாக இஸ்லாமிய சகோதரர்கள் இருந்தாலும், அங்கு இந்துக் கோயில்களும் இருக்கின்றன.

ஒரு தெருவுக்கு, சந்துக்கு இஸ்லாமியப் பெயர். இன்னொரு தெருவுக்கு இந்து பெயர். இங்கேதான் அந்த ஒற்றுமையைக் காணமுடியும்.

திருவல்லிக் கேணியை ஒட்டியது, உலகத்திலேயே இரண்டாவது கடற்கரையான மெரீனாக் கடற்கரை. அதையொட்டியது சுவாமி விவேகானந்தர் வந்து தங்கிய விவேகானந்தர் இல்லம் ஐஸ் ஹவுஸ் என்று கூறுவார்கள்.

மிகப்பெரிய தேவாலயம் சாந்தோம் தேவாலயம் கடற்கரையை ஒட்டியே காணப்படுகிறது. வானொலி நிலையம், அரசு அலுவலகங்கள், பறக்கும் ரயில் எல்லாம் இங்கே பார்க்கலாம்.

மகாத்மா காந்தி, காமராசர், திருவள்ளுவர், கண்ணகி, சிவாஜி கணேசன் சிலைகள் இங்கேதான் கடற்கரையோரத்தில் காற்று வாங்கிக் கொண்டுள்ளனர்.

இந்த விசாலமான, நெருக்கடியான, கடற்கரையோரத்தில்தான் திருவல்லிக்கேணியுள்ளது.

சென்னை எழும்பூர் - சென்ட்ரல் ரயில்நிலையத்திலிருந்து 5 கி.மீ. தூரம் தான். பேருந்துகள் புற்றீசல்கள் போல, புறப்பட்டு வந்து போய்க் கொண்டிருக்கின்றன.

"மன்னுதண் பொழிலும் வாவியும் மதிளும்
மாடமா ளிகையும்மண் டபமும்,
தென்னன்தொண் டையர்கோன் செய்த நன்மயிலைத்
திருவல்லிக் கேணிநின் றானை
கன்னிநன் மாட மங்கையர் தலைவன்
காமரு சீர்க்கலி கன்றி
சொன்னசொன் மாலை பத்துடன்வல்லார்
சுகமினி தாள்வார்வா னுலகே"

என்று 1077-ஆம் பாடலில் திருமங்கையாழ்வார் பாடுவார்.

"வந்துதைத்த வெண்டிரைகள் செம்பவள வெண்முத்தம்
அந்தி விளக்கும் அணிவிளக்காம் - எந்தை
ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்வன்
திருவல்லிக் கேணியான் சென்று"

என்று 2297-ஆம் பாடலில் பேயாழ்வார் பாடுவார்.

"தாளால் உலகம் அளந்த அசைவே ரகால்
வாளா கிடந்தருளும் வாய்திறவான் - நீளோதன்
வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்
ஐந்தலைவாய் றாகத் தனை?"

என்று திருமழிசையாழ்வார் பாடுவார்.

திருவல்லிக் கேணியின் புராணகாலத்துப் பெயர் பிருந்தராம்யம் என்பதாகும். துளசி செடிகள் அதிகம் காணப்பட்டதால் இப்பெயர் ஏற்பட்டதாய் கூறுவர். அத்ரி முனிவர், மார்க்கண்டேயர், பிருகு, ஜாபாலி போன்ற மகரிஷிகள் இங்கே வாழ்ந்து வந்தார்கள்.

நான்தான் பெரியவன், நான்தான் பெரியவன் என்று சிவனும், சக்தியும் சண்டையிட்டுக் கொள்வது போல, திருபாற்கடலில் பள்ளி கொண்ட திருமாலும் லட்சுமியும் சண்டையிட்டுக் கொண்டார்கள். லட்சுமி கோபம் கொண்டு வெளியே வந்து விடுகிறார்.

கணவனை விட்டு கலங்கிய கண்ணோடும், மனதோடும் வந்த லட்சுமி திருவல்லிக் கேணியாகிய பிருந்தாயண்யத்தில் ஒரு சந்தன மரத்தடியில் ஒரு பெண் குழந்தையாக அவதரிக்கிறார். அந்த குழந்தையை அதிசயமாகப் பார்த்த பிருகு முனிவர் அதை எடுத்து வளர்க்கிறார். வேதவல்லி என்ற பெயரும் இடுகிறார்.

மனைவியைப் பிரிந்த பெருமாள் அவரைத் தேடிக்கொண்டு, பிறகு பிருந்தாரண்யத்தில் வந்து கண்டு பிடிக்கிறார். ரிஷிகளிடம் தான் யார் என்று கூறிவிட்டு, கணவன் - மனைவி சண்டையை மெதவாகக் கூறுகிறார். அதைக்கேட்ட ரிஷிமுனிவர்கள் திருமால் - லட்சுமியை சேர்த்து வைக்கிறார்கள். இந்த திருவல்லிக்கேணியில் அவர்களே கிருஷ்ணராகவும், ருக்மணியாகவும் காட்சியளிக்கிறார்கள்.

உற்சவ மூர்த்தியின் திருநாமம் இங்கே பார்த்தசாரதியாகும். பார்த்திபன் என்ற பெயர் கொண்ட அர்ச்சுனனுக்கு கிருஷ்ணன் தேரோட்டியதால், இங்கே அவர் பார்த்தசாரதி என்று நாமம் கொண்டு திகழ்கிறார். இங்கே பார்த்தசாரதி மீசையுடன் கம்பீரமாகத் தோற்றமளிப்பது ஒரு சிறப்புக்குரியதாகும்.

மூலவருக்கு இரண்டு திருக்கரங்கள். வலது கரத்தில் சங்கும், இடது கரத்தில் திருப்பதியில் போல் கோலும் உண்டு.

கிருஷ்ணர் குடும்பக்காட்சியாக இருப்பது இத்திருத்தலப் பெருமையாகும். வலதுபுறம் ருக்மணியும், இடதுபுறம் தம்பி சாத்யகியும், தெற்குப்புறம் அண்ணன் பலராமனும், வடக்கில் மகன் பிரத்யுமனனும், பேரன் அநிருத்தனும் உள்ளனர்.

திருப்பதி பெருமாள் சுமதி என்ற அரசனுக்கு இந்த திருத்தலத்தில் வேங்கட கிருஷ்ணராகயிருந்து அருள் பரிபாலிப்பேன் என்று கூறியதால், இது இரண்டாவது திருப்பதி என்று அழைக்கப்படுகிறது.



கிருஷேத்திரப் போரில் கண்ணன் அர்ச்சுனனுக்கு சாரதியாக இருந்தபோது, பீஷ்மர் விட்ட அம்புகளை அர்ச்சுனனுக்காக தான் ஏற்றுக் காயவடு பெற்றார். அந்த வடுக்களை இங்கே உற்சவர் பார்த்தசாரதி திருமுக மண்டலத்தில் காணலாம்.

ஏற்கனவே திருமங்கையாழ்வார் திருநீர் மலை பற்றி மங்களாசாசனம் செய்யுமிடத்தில்.

"நன்றாயபு னல்நறை யூர்திருவா
லிகுடந்தை நடந்திகழ் கோவல்நகர்
நின்றானிருந் தான்கிடந் தான்நடந்தாற்
கிடம்மாமலை யாவது நீர்மலையே"

என்று பாடியிருப்பார்.

அந்த நிலைகளை திருவல்லிக்கேணி திருக்கோயிலிலும் காணலாம். இங்கே வேங்கிட கிருஷ்ண பார்த்தசாரி நின்ற நிலையிலும், யோக நரசிம்மராக அமர்ந்த நிலையிலும், ரங்கநாதராக படுத்த நிலையிலும் மூன்று சன்னதிகளில் தனியாக விளங்குகிறார்.

இந்த கோயிலின் ராசகோபுரம் ஐந்து நிலைகளையுடையதாகும். ஏழு கலசங்கள். பலிபீடம், கொடிமரம், துவஜாரோகண மண்டபம் என பலவும் அழகுறக் காட்சியளிக்கின்றன.


திருவல்லிக்கேணி திருக்கோயிலிருந்து வெளியே வந்தால், ராகவேந்தர சுவாமி திருப்பிருந்தாவன் கோயில், கண்ணனை பல வகையிலும் தான் நேசித்திட்ட மகாகவி பாரதியார் நினைவிடமும் இருக்கிறது. பக்கத்தில் விவேகானந்தர் இல்லமும் இருக்கிறது.

அவ்வப்போது திருவல்லிக்கேணி கோயிலுக்குப் போய் வரும் நான் இப்போது அப்படி செய்து வந்து இந்த வெண்பா பாடல்களைப் பாடி வந்தேன்.


"திருவல்லிக் கேணி திருத்தலம் கண்டேன்
திருவேங்கடம்போல் சிறப்பு - பெரும்விழா
பார்த்தசார திக்குண்டு பார்த்திட மீசையும்
சீர்ஐந்து சன்னதிகள் ஆங்கு"

சென்னைக்கு இத்தலத்திற்கு வருபவர்கள் அப்படியே அருகேயுள்ள மயிலாப்பூர் கபாலீசுவரர், கற்பகாம்பாள், சிவன் கோயிலையும், அதன் பெரிய தெப்பக் குளத்தையும் கண்டு களிக்கலாம். இந்தக் கோயினுக்குள் 63-நாயன்மார்களில் ஒருவரான வாயிலார் நாயனார் சன்னதியையும் காணலாம். இங்கு வருடந்தோறும் நடக்கும் 63-நாயன்மார்கள் திருத்தேர் ஊர்வலம் சிறப்பு வாய்ந்ததாகும்.

திவ்யதேசம் - 61



திருநீர்மலை



இந்த கோயில் சென்னை-தாம்பரம் மின்சார ரயிலில் சென்று, பல்லாவரம் நிலையத்தில் இறங்கி, தென்மேற்கில் 6 கிலோ மீட்டர் பேருந்தில் சென்றால் தரிசிக்கலாம். பல்லாவரத்திலிருந்து 55A எண் பேருந்து செல்கிறது. சென்னையிலிருந்து பல்லா வரத்திற்கு பேருந்திலும் செல்லலாம்.

ஒன்று : மலையடிவாரக் கோயில்

மூலவர் : நீர்வண்ணன்
நீலமுகில்வண்ணன்
நின்ற கோலம்

தாயார் : அணிமாமலர் மங்கை

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1078-87, 1115, 1521, 1554, 1660, 1765, 1848, 2069, 2673(73), 2674(130)

பூதத்தாழ்வார் : 2227

மொத்தம் : 20 பாசுரங்கள்

இரண்டு : மலைக்கோயில்

மூலவர் : சாந்தநரசிம்மன்
வீற்றிருக்கும் கோலம்
(இருந்தான்)

மூன்று

மூலவர் : ரங்கநாதன்
மாணிக்கசயனம் கோலம்
(கிடந்தான்)

தாயார் : ரங்கநாயகி

நான்கு

மூலவர் : திரிவிக்ரமன் நின்ற கோலம்
(நடந்தான்)


தீர்த்தம் : மணிகர்ணிகா தடாகம்
சீரபுட்கரணி
காருண்ய புட்கரிணி
சித்த புட்கரிணி
சுவர்ண புட்கரிணி

திருநீர்மலை திருமால் மலைமேலே ஒரு கோயிலும், அடிவாரத்தில் ஒரு கோயிலும் உள்ளது.

இத்தலத்தில் பெருமாள் **நான்கு திருக்கோலத்தில்** காட்சியளிப்பது ஒரு அபூர்வக் கோலமாகும்.

திருநீர்மலை எம்பெருமான் இங்கே 'நீர்வண்ணன்' என்று வணங்கப்படுகிறார். இந்த ஊரைச் சுற்றி நீர் அரணாக இருப்பதால் இந்த ஊர் மலை திருநீர்மலை எனவாயிற்று.

நாச்சியார் கோயில் என்ற ஊருக்குச் சென்றால் பெருமான் நின்ற கோலத்தில் இருப்பார். திருவாயிலுக்குச் சென்றால், உட்கார்ந்த கோலத்தில் இருப்பார். திருக்குடந்தை என்னும் கும்பகோணத்திற்குச் சென்று பார்த்தால் பள்ளி கொண்ட நிலையில் இருப்பார். திருக்கோயிலூர் என்னும் திருக்கோவலூர் காஞ்சிபுரம் சென்று பார்த்தால் உலகளந்த திருக்கோலத்தில் இருப்பார். இந்த ஊரில் சென்று பார்த்தால் அந்த நான்கு வகைக் கோலத்திலும் காட்சி தந்து கொண்டிருப்பதைக் காணலாம். அந்த திருக்காட்சியைத்தான் திருமங்கையாழ்வார் நாலாயிரம் திவ்ய பிரபந்தம், பெரிய திருமொழியில் 1078 ஆம் பாடலில்,



"அன்றாயர்கு லக்கொடி யோடணிமா
மலர்மங்கையொ டன்பள விஅவுணர்க்
கொன்றானு மிரக்கமி லாதவனுக்
குறையுமிட மாவது இரும்பொழில்சூழ்
நன்றாயபு னல்நறை யூர்திருவா
லிகுடந்தை நடந்திகழ் கோவல்நகர்
நின்றானிருந் தான்கிடந் தான்நடந்தாற்
கிடம்மாமலை யாவது நீர்மலையே"

என்று பாடியுள்ளார்.

பூதத்தாழ்வார் இரண்டாந் திருவந்தாதியில் ஒரு பாடல் மட்டும் பாடியுள்ளார். பாடல் எண். 2227 ஆகும்.

"பயின்ற தரங்கம் திருக்கோட்டி பன்னாள்
பயின்றதுவும் வேங்கடமே பன்னாள் - பயின்ற
தணிதிகழும் சோலை யணிநீர் மலையே
மணிதிகழும் வண்தடக்கை மால்"

இந்தப் பாடல் ஒன்று, திருமங்கையாழ்வார் 19 பாடல்கள் என மொத்தம் 20 பாடல்கள் இந்ததலம் பற்றிப் பாடியுள்ளார்கள்.



வால்மீகி முனிவர் இந்தத் திருத்தலத்திற்கு வந்து, மலைக்கோயிலுக்குச் சென்று ரங்கநாதன், நரசிம்மர், திரிவிக்ரமன் என்ற மும்மூர்த்திகளையும் வணங்கிவிட்டு, கீழே இறங்கி வந்து, அடிவாரத்தில் நின்று கொண்டு இராமபிரானை எண்ணி தியானம் செய்த போது, ரங்கநாதன் இராமனாகவும், லட்சுமி சீதையாகவும், ஆதிசேடன் லட்சுமணனாகவும், சங்கு சக்கரங்கள் சத்ருகன், பரதன் என்பவர்களாகவும், விச்வக்சேனர் சுக்ரிவனாகவும், கருடன் அனுமானாகவும் காட்சி சந்து மறைந்தார்கள் என்று கூறுவார்கள். அப்போது பெருமாள் ரிஷி பிரார்த்தனைப்படி அற்புதக் கோலமான நீர்வண்ணனாக அருள்பரிபாலித்ததாகக் கூறுவர்.

அதேபோல திருமங்கையாழ்வார் இந்த திருத்தலத்திற்கு வந்து 19-பாடல்களைப்பாடி மங்களா சாசனம் செய்ய வந்த போது, இந்த மலையைச் சுற்றி தண்ணீர் சுற்றி நிறைந்து அரண்போல் சூழந்திருந்து, அவரை உள்ளே செல்ல முடியாதபடி தடுத்துவிட்டது. அவர் ஆறுமாத காலம் ஊருக்கு வெளியே தவமிருந்து பிறகு நீர்விலகி வழிவிட்டது என்று கதை கூறுவர். அதனால்தான் இந்த ஊருக்கு திருநீர்மலை என்று காரணம் பெயர் வந்தது என்று கூறுவர். அப்போது திருமங்கையாழ்வார் தவமிருந்து காத்திருந்த அந்த ஊருக்குப் பிறகு திருமங்கையாழ்வார்புரம் என்று பெயர் வந்தது. இன்றும் அந்த பெயர் விளங்கி வருகிறது.

அதையெல்லாம் நான் கண்கூடாகப் பார்த்தும், செவி வழியாகக் கேட்டும் அனுபவித்ததை அங்கேயே ஒரு வெண்பாவாக இயற்றி வந்தேன்.


"திருநீர் மலைமேலே நீர்வண்ணன் ரங்கன்
திருநின்ற கோலமாய் தேசம் - பெருமாள்தான்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தான்பார்
என்றார் திருமங்கை யார்"

திருநீர் மலை

திருமாலுக்கு எட்டுவித சயனங்கள் உண்டு. 108 திவ்யதேசங்களில் அவை எட்டுத் தலங்களில் உள்ளன.

திருவரங்கம் என்னும் ஸ்ரீரங்கத்தில் புஜங்க சயனம், திருவில்லிப்புத்தூர் என்னும் ஸ்ரீ வில்லிப்புத்தூரில் வடபத்ர சயனம், திருவள்ளூரில் வீரசயனம், திருக்கடல்மல்லை என்னும் மகாபலிபுரத்தில் தலசயனம், திருக்குடந்தை என்னும் கும்பகோணத்தில் உத்தான சயனம், இராமநாதபுரம் திருப்புல்லாணியில் தர்ப்பசயனம், திருத்தில்லை என்னும் சிதம்பரத்தில் போகசயனம் என்ற நிலையில், இந்த திருநீர்மலையில் எட்டாவதாக மாணிக்க சயனம் என்ற நிலையில் உள்ளார் என்பது சிறப்புக்குரியதாகும்.

“திருநீர் மலையடியில் நீர்வண்ண னாகப்
பெருமாளும் நின்றார் பெருமை – அருமையாய்
மேலே யிருந்தார் கிடந்தார் நடந்தார்
நாலெனக் கண்டிடத் தான்”



12

திவ்யதேசம் - 62



மூலவர் : ஆதிவராகப் பெருமாள்
சுதாதிருமேனி
ஆறரை அடி உயரம்
லட்சுமிவராகப் பெருமாள்
நின்ற கோலம், கிழக்கே திருமுகம்

தாயார் : கோமலவல்லி

தீர்த்தம் : கல்யாண தீர்த்தம்
வராக தீர்த்தம்

மங்களாசாசனம் :
திருமங்கையாழ்வார் : 1021, 1108-1117, 2673(73), 2674(119)

மொத்தம் : 13 பாசுரங்கள்

திருவிடந்தை
(நித்யகல்யாணி பெருமாள் திருக்கோயில்)



"திவளும் வெண்மதிபோல் திருமுகத்தரிவை
செழுங்கடலமுதினிற் பிறந்த
அவளும் நின்னாகத் திருப்பது மறித்தும்
ஆகிலும் ஆசைவிடாளால்
குவளையங்கண்ணி கொல்லியம் பாவை
சொல்லுநின் தாள் நயந்திருந்த
இவளை உன்மனத்தா லென்நினைத் திருந்தாய்
இடவெந்தை யெந்தை பிரானே"

என்று இந்த திருவிடந்தை தலத்தை திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் பாடியுள்ளார். நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் 1108 முதல் 1117 வரை பத்து பாசுரங்களை இந்த தலத்தைப்பற்றி பாடியுள்ளார்.

இந்த திருவிடந்தை திருத்தலத்திற்கு சென்னையிலிருந்து கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக மகாபலிபுரம் அதாவது மாமல்லபுரம் செல்லும் அனைத்துப் பேருந்துகளிலும் செல்லலாம். தவிர சென்னையிலிருந்து கடற்கரைச் சாலை வழியாக கோவளம் வரை நிறைய சொகுசு பேருந்துகள் செல்கின்றன. பாரி முனையிலிருந்தும் செல்கின்றன. அவற்றின் ஏறி கோவளத்தில் இறங்கினால் கோவளத்திலிருந்து திருவிடந்தைக்கு நிறைய ஷேர் ஆட்டோக்கள் செல்கின்றன. 5 ரூபாய் கொடுத்தால் கோயில் வாசலிலேயே கொண்டு போய் விடுவார்கள்.



திருவிடந்தை பெயர்க்காரணம் எந்தை என்றால் எம்+தந்தை என பொருள். எம் தந்தையாகிய பெருமாள், திரு(லட்சுமி)யை தம் இடப்பாகத்தில் கொண்டுள்ளதால் திருவிடவெந்தை என பெயர் ஏற்பட்டது. பின் மருவி திருவிடந்தை ஆயிற்று.

திருவிடந்தையின் வேறு பெயர்கள் : பெருமாளுக்கு நித்யமும் (தினமும்) திருமணம் நடந்ததால் 'நித்யகல்யாண புரி', பெரிய பிராட்டியார் அவதாரம் செய்த தலமாதலால் 'ஸ்ரீபுரி', ஆதிவராக மூர்த்தியாக நின்று சேவை சாதிப்பதால் 'வராகபுரி', கல்வெட்டுகளில் காணப்படும் பெயர் 'அசுரகுல கால நல்லூர், வாமகவீபுரி' என்றும் பெயர்கள் வழங்கலாயிற்று.

முன்னொரு காலத்தில் வாழ்ந்த மேகநாதன் என்ற அசுரனுக்கு பலி என்ற மகன் பிறந்து நீதிமானாய் அரசாட்சி செய்து வந்தபோது, மாலி, மால்யவான், சுமாலி என்ற மூன்று அசுரர்கள் தங்களுடன் இணைந்து வந்து தேவர்களுடன் போரிட அழைத்ததாகவும், பலி மறுத்து விட்டதாகவும், மூவரும் சென்று தேவர்களுடன் போரிட்டு, தோல்வியுற்று வந்து பலியிடம் சரணாகதி அடைந்ததாகவும், அவர்களுக்காக தேவர்களுடன் போராடி பலி ஜெயித்ததாகவும், தேவர்களுடன் யுத்தம் நடத்திய பாவம் நீங்க இத்தலத்தில் உள்ள வராக தீர்த்தகரையில் பலி கடும் தவம் புரிந்ததாகவும், அவனது தவத்தை மெச்சிய பெருமாள் வராகமூர்த்தியாக காட்சி அளித்ததாகவும் புராணம் கூறுகிறது. எனவே இத்தலத்திற்கு வராகபுரி என்ற பெயரும் வழங்கலாயிற்று.

சம்பு தீவில் சரஸ்வதி ஆற்றங்கரையில் குனி என்னும் முனிவர் தவமியற்றி வந்தார். அவருக்கு பணிவிடை செய்வதற்கு கன்னிகை ஒருத்தி அங்கு வந்து சேர்ந்தாள். நாளடைவில் அம்முனிவர் வீடுபேறெய்தினார். கன்னிகை அம்முனிவரை பின்பற்றி கடும் தவமியற்றி வந்தாள். ஒருநாள் நாரத முனிவர் அவர்முன் தோன்றி திருமணம் செய்து கொள்ளாமல் வீடுபேறு பெற இயலாது என கூறினார். திருமணம் செய்து கொள்ள பல முனிவர்கள் தவமியற்றி வந்த இடத்தை அடைந்தாள். அம்முனிவர்களிள் யாரேனும் ஒருவர் தன்னை மணம் புரிந்து கொள்ள வேண்டினாள். அவளது துயர நிலையை கண்டு காலவ முனிவர் அவளை மணந்து கொண்டார். பெரிய பிராட்டியார் லட்சுமியின் அருளால் ஓராண்டில் அவர்களுக்கு 360 கன்னிகைகள் தோன்றினர். முதல் கன்னிகையின் பெயர் கோமளவல்லி, குழந்தைகளை ஈன்றபின் அவளும் மறைந்தாள். காலவ முனிவர் அக்கனிகைகளை காப்பாற்ற இயாலதவராக சம்பு தீவிற்கு வந்த முனிவர்களிடம் விசனப்படவே, அவர்கள் அவரை திருவிடந்தை சென்று பெருமாளை வழிபட கூறினர். தம்



கன்னிகைகளுக்கு நல்ல வரன்கள் அமையவேண்டுமென அவரும் தம்பெண்களுடன் வந்து பெருமாளை வேண்டினார். பெருமாளும் அவர் வேண்டுகோளை ஏற்று, பிரம்மச்சாரியாக வந்து நாள்தோறும் ஒரு கன்னிகையை திருமணம் செய்து கொண்டு, 360ம் நாள் அனைவரையும் ஒருவராக்கி அகிலவல்லி என்ற திருநாமம் சூட்டி தன் இடப்பக்கத்தில் எழுந்தருள செய்து சரம சுலோகத்தை உலகத்தாருக்கு உபதேசித்து அருளினார். தினமும் திருமணம் செய்து கொண்டதால் பெருமாளுக்கு 'நித்யகல்யாண பெருமாள்' எனவும், இத்தலத்திற்கு 'நித்யகல்யாணபுரி' எனவும் பெயர் வழங்கலாயிற்று.

மூர்த்தி : பெருமாளின் தசாவதாரங்களின் மூன்றாவது அவதாரமாகிய வராக அவதராத்தில் ஆதிவராகப் பெருமாளாய், அகிலவல்லி தாயாருடன் ஆறரை அடி உயரத்தில் அழகுற எழுந்தருளி, அருள்பாலிக்கிறார்.

தலம் : வராகபுரி என்றும், நித்யகல்யாணபுரி என்றும் ஸ்ரீபுரி என்றும் பாராட்டப்படுகின்ற இத்திருவிடந்தை 108 திவ்யதேசங்களில் 62வது திவ்யதேசமாகும்.

தீர்த்தம் : கல்யாண தீர்த்தம், வராக தீர்த்தம், ரங்கநாதர் தீர்த்தம் ஆகிய தீர்த்தங்களை கொண்டது.

கல்யாண தீர்த்தத்தில் சித்திரை மாதத்தில் நீராடி பெருமாளை சேவித்தால் பாவங்கள் அழியும் என்பதும், வராக தீர்த்தத்தில் மாசி மாதத்தில் நீராடி பெருமாளை சேவித்தால் மோட்சம் கிடைக்கும் என்பதும், ரங்கநாதர் தீர்த்தத்தில் மார்கழி மாதத்தில் நீராடி பெருமாளை சேவித்தால் நினைத்தது நடக்கும் என்பதும் பெருமாளின் அருள்வாக்கு.

"திருமண மாகா திருப்போர் வந்து
திருக்குள நீரிதில் நீராட - திருமணத்தை
ஆதி வராகர்தான் அருள்ந்து செய்திடுவார்
ஓதிட வந்தேன் உனக்கு"

"பூதத்தாழ்வார்"


பூதத்தார்

தொண்டை நாட்டில் திருக்கடன்மல்லை என்றொரு நகரம் உண்டு. அதை இன்று மகாபலிபுரம், மாமல்லபுரம் என்று வழங்கி வருகிறார்கள்.

இது ஒரு காலத்தில் பெரிய துறைமுகப் பட்டினம். அப்போது இங்கே சாவகம், புட்பம், இலங்கை, சீனம், யாவனம் போன்ற தூர தேசத்திலிருந்து வியாபார நிமித்தமாக கப்பல்கள் வந்து போகும். இங்கிருந்து முத்து, பவளம், மஞ்சள் போன்ற பொருட்கள் வெளிநாடுகளுக் செல்லும். அங்கிருந்து பல பொருட்கள் இங்கே வந்து சேரும்.

சிற்பக் கலையின் உறைவிடமாகத் திகழும் மாமல்லபுரத்தில் பள்ளி கொண்டிருப்பவர் தலசாயி ஆவார். மற்ற தலங்களில் பாம்புப் படுக்கையில் பள்ளி கொண்டிருப்போன், இங்கே தரையிலே படுத்துள்ளார். ஆகவே இங்கே அரங்கனுக்கு தலசாயி என்ற நாமம் வந்தது.

இங்கே குருக்கத்தி என்னும் மாதவிப் பூவில் சித்தார்த்தி வருடம், ஐப்பசி மாதம் நவமி அவிட்ட நட்சத்திரத்தில் திருமாலின் ஐம்படைகளில் ஒன்றான கௌமோதகி என்னும் கதையின் அம்சமாகப் பூதத்தாழ்வார் அவதரித்தார்.

இவர் எக்காலமும் திருமாலையே தமிழ்மாலையாகப் பாடி வந்தார். இவர் இரண்டாம் திருவந்தாதியாக நூறு பாட்டுகள் பாடியுள்ளார்.

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை யிடுதிரியா – நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்"

என்று பாடுகிறார்.

"யானேதவம் செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதுமாய்
யானே தவமுடையேன் எம்பெருமான் – யானே
இருந்திழ்நன் மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது"

என்று தமிழை உயர்த்திப் பாடுகிறார்.

இவ்வாறு அப்போதே ஆழ்வார்களும், நாயன்மார்களும் மிக்க தமிழ்ப்பணி செய்தார்கள் என்பதற்கு இதைவிட என்ன சான்று தேவை?

திவ்யதேசம் - 63



திருக்கடல்மல்லை (மகாபலிபுரம்)

மூலவர் : தலச்சயனப் பெருமாள்
சயனத்திருக்கோலம்
(தரையில் படுத்திருத்தல்)
புசங்கச் சயனம்

உற்சவர் : உலகுய்ய நின்ற பெருமாள்

தாயார் : நிலமங்கைத் தாயார்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1088-1107, 1195, 1551, 2050, 2060, 2673(73), 2674(119)

பூதத்தாழ்வார் : 2241

மொத்தம் : 27 பாசுரங்கள்

பெருமாள் இங்கே கிழக்குப் பார்த்து திருமுக மண்டலமாகக் காட்சி தருகிறார்.

வலது திருவருள் கரத்தை தன் திருமார்பில் பதித்து, உபதேசம் செய்ய அடையாள முத்திரையாக வைத்து 'ஞானத்தமிழ் புரிந்த நான்' என்பதை விளக்குகிறது.

பொதுவாக வைணவப் புராணக்கதை நூல்களில் வடமொழிக் கலப்பு அதிகமாகக் காணப்படும். சில இடங்களில் அது பொருள் புரியாதவையாகவும் இருக்கும். ஆனால் நாலாயிர திவ்யப்பிரபந்தம் பாசுரங்களைப் படித்துப் பார்த்தால் அதில் அதிக தமிழ்பொருள் கலந்த வாசக எழுத்துக்கள் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். ஆதலால் தமிழ் மொழித் தொண்டு செய்ததில் சைவப் பெரியார்கள் போல, வைணவப் பெரியார்களுக்கும் பங்குண்டு என்பதில் ஐயமில்லை.

"பாராய துண்டுமிழ்ந்த பவளத்தூணைப்
படுகடலி லமுதத்தைப் பரிவாய்கீண்ட
சீரானை எம்மானைத் தொண்டர்தங்கள்
சிந்தையுள்ளே முளைத்தெழுந்த நீங்கரும்பினை
போரானைக் கொம்பொசித்த போரேற்றினைப்
புணர்மருத மிறநடந்த பொற்குன்றினை
காரானை யிடர்கடிந்த கற்பகத்தைக்
கண்டதுநான் கடல்மல்லைத் தலசயனத்தே"

என்று தொடங்கி, திருமங்கையாழ்வார் இத்தலம் பற்றி 26 பாசுரங்கள் மங்களா சாசனம் செய்துள்ளார்.

இத்தலம் பற்றி பூதத்தாழ்வாரும் ஒரு பாடல் பாடியுள்ளார். பாடல் எண். 2251

“தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளும் தண்பொருப்பு வேலை - தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிட்குடந்தை யென்பரே
ஏவல்ல எந்தைக் கிடம்”

என்பது அந்தப் பாசுரமாகும்.



திருக்கடன்மல்லையை, மாமல்லபுரம், மகாபலிபுரம் என்றும் கூறுவர். 108 திவ்யதேசங்களில் இத்தலம் 63 ஆம் தேசமாகும்.

திருக்கடன்மல்லை பூதத்தாழ்வாரால் மங்களாசாசனம் பெற்றதாகும். பூதத்தாழ்வார் முதலாழ்வார்கள் மூவரில் நடுநாயகமாக விளங்குபவர் ஆவார்.

முதல் மூன்று ஆழ்வார்கள் என்பது தாயின் வயிற்றில் பிறக்காமல் தாமாகவே அவதரித்த இறைவழித் தோன்றல்கள் ஆவார்கள். அவதார புருஷர்கள் என்று கூறலாம்.

பூதத்தாழ்வார் இத்தலம் பற்றி அருளியது 100 பாடல்களைக் கொண்ட இரண்டாந் திருவந்தாதி ஆகும்.


“அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா - நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்”

என்று வெண்பாவில் முதல் பாடலாய் தொடங்கி,

“மாலே! நெடியோனே! கண்ணனே விண்ணவர்க்கு
மேலா! வியன்துழாய்க் கண்ணியனே - மேலால்
விளவின்காய் கன்றினால் வீழ்த்தவனே என்றன்
அளவன்றால் யானுடைய அன்பு”

என்று 100-வது பாடலாய் முடியும். இது நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் 2182 எண்ணில் தொடங்கி 2281 ஆம் எண்ணில் முடியும்.

வரலாறு



மாமல்லபுரம் கடற்கரைக் காடுகளில் பல முனிவர்கள் தவமியற்றி வந்தார்கள். அவர்களில் புண்டரீக மகரிஷி என்ற முனிவர் அருகிலிருந்த தெப்பக்குளத்தில் பூத்த தாமரை மலர்களைப் பறித்து திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருந்த பரமன் திருவடிகளில் சமர்ப்பித்து, கடல்நீரை இரவு பகலாக இறைத்துக் கொண்டிருந்தார்.

புண்டரீக மகரிஷியின் இடைவிடாத பக்தியை கண்ட திருமால் நாராயணன் ஒரு முதியவர் வேடத்தில் வந்து, "எனக்கு பசிக்கிறது நீர் போய் உணவு கொண்டு வந்தால், நீ வரும் வரைக்கும் நான் இந்த நீரை இறைவனுக்காக இறைத்துக் கொண்டிருப்பேன்" என்று கூறினார்.

ஒரு முதியவரின் பசியைப் போக்குதல் மாபுண்ணியம் என்று எண்ணிய மகரிஷி உணவு தேடச் சென்றார்.

பிறகு முனிவர் உணவு தேடிக் கொண்டு, திரும்பி வந்த போது, இறைவன் தரையில் படுத்த வண்ணம் நான்கு கரத்துடன் காட்சியளித்துக் கொண்டிருந்தார். அந்த அற்புதமான காட்சியைக் கண்ட முனிவர் இறைவன் தாள் பணிந்து வணங்க, இறைவன் அவருக்கு அருளினார். அதனால் இந்த பெருமாளுக்கு ஸ்தல சயனப் பெருமாள் என பெயர் வந்தது.

இறைவன் எப்போதும் தன் அடியார்களுக்கு நேரடியாக அருளாமல், உதவாமல், வேறொருவர் மூலமோ, வேறு உருவமாகவோ வந்துதான் காட்சி தருவார்.

இந்த திருத்தலத்துக்கு நான் புறப்பட்டபோது அதிகாலை 5.00 மணி. அப்போது சென்னை கலைவாணர் அரங்கத்திற்கு எதிரேயிருக்கும் பேருந்து நிறுத்தத்தில் எக்மோர் மின்சார தொடர் வண்டி நிலையம் செல்ல, பேருந்துக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். 5.30 மணி வரை பேருந்து வரவில்லை. அப்போது கடற்கரையில் நடைப்பயிற்சி செய்துவிட்டு, ஐ.ஓ.பி. வங்கி அதிகாரி ஒருவர் இரு சக்கர வாகனத்தில் என்னைத் தாண்டிப் போனவர், பிறகு நிறுத்தி திரும்பி எங்கே போகிறீர்கள்? என்று கேட்டார். நான் எக்மோர் ரயில்வே ஸ்டேஷன் என்று கூற, அவர் வந்து ஏறிக் கொள்ளுங்கள். என்று கூறி, என்னை எக்மோர் தொடர் வண்டி நிலையம் வரை கொண்டு சென்று விட்டார். நான் அவருக்கு நன்றி கூறி சென்றேன். இதுதான் இறைவன் வேறொருவர் மூலம் நமக்கு அருள் செய்கிறார் என்பதற்கு எடுத்துக்காட்டாகும். இவ்வாறு இந்த 108 திவ்யதேச யாத்திரையில் எத்தனையோ அதிசயங்கள் தமக்கு நிகழ்ந்துள்ளது.

கோயில் வரலாறு



கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் பல்லவ அரசர்கள் கடல் ஓரத்தில் அலையோங்கி வரும் கரைவாயில் இந்த கோயிலை அமைத்தார்கள்.


பிறகு அது கடல் அலை மோதலாலும், கடல் அரிப்பாலும் சேதப்படும் என்று எண்ணி 14ஆம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர்களில் ஒருவனான பராங்குச மன்னர் ஊருக்கு நடுவே ஆகம விதிக்கேற்ப மாட வீதிகள் நடுவே இந்த கோயிலைக் கட்டுவித்தான்.

சென்னையிலுள்ள கிழக்கு கடற்கரைச் சாலை வழியே மாமல்லபுரம் செல்லும் அனைத்துப் பேருந்துகள் மூலமாகவும் இக்கோயிலுக்கு வரலாம். செங்கற்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் வழியாகவும் மாமல்லபுரம் வரலாம். சென்னையிலிருந்து மாமல்லபுரம் 55 கிலோமீட்டர் ஆகும். கடற்கரைச் சாலையில் குளிர்சாதன விரைவு பேருந்தில் பயணம் செல்வது பெரும் சுகம்.

எவன் ஒருவன் இறைவனை மனதார, உணர்வு பூர்வமாக எண்ணி, வணங்கி, தொண்டு செய்ய விரும்புகிறானோ, அவனுக்கு இறைவன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ காட்சியளித்து அருள்வார் என்பது இந்த நிகழ்ச்சி மூலமாக நாம் தெரிந்து கொள்ளலாம்.

இந்தக்காலத்து இளைஞர்கள் சுற்றுலா என்ற பெயரில் எங்கெங்கோ சென்று கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக நாகரீகம், ஆடம்பரம், உல்லாசம் என்ற பெயரில் ஊட்டி, கொடைக்கானல் என இப்படித்தான் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தயவு செய்து 63 நாயன்மார்கள் அவதரித்த திருத்தலங்கள், 12 ஆழ்வார்கள் பாடிய திருத்தலங்கள், அப்பர், சுந்தரர் போன்ற அடியார்கள் பாடி வைத்துள்ள திருத்தலங்களுக்குச் சென்று பாருங்கள். அங்கே எங்கு பார்த்தாலும் இயற்கை சூழல், நீரோடைகள், பழங்கோயில்கள், அவற்றிற்கு எதிரே தெப்பக்குளங்கள், கோயிலுக்குள்ளே தமிழனுடைய பண்பாட்டுக் கலைகள், அங்கே வாழ்ந்து வரும் மக்களின் பழமை மாறாத எளிமையான வாழ்க்கை, இயற்கையான உணவு வகைகள் மற்றும் அமைதியான சூழ்நிலை என அனுபவித்துக் கொண்டே போகலாம்.

அதன் அடிப்படையிலே இந்த மகாபலிபுரம் என்னும் மாமல்லபுரம் விளங்குகிறது. இது ஆன்மீகத் தலம் மட்டுமல்ல. இந்தியாவின் சுற்றுலாத் தலங்களில் மிகச்சிறந்தவற்றில் இதுவும் ஒன்று. சிற்பக்கலைக்கு இந்ததலம் ஒரு எடுத்துக்காட்டாக திகழ்ந்து வருவது வெளிப்படையான ஒன்றாகும்.



இங்குள்ள சிற்பங்களுள் மிக முக்கியமான சிறப்பு வாய்ந்தவை பகீரன் தவம், பஞ்சபாண்டவர் மண்டபம், கோவர்த்தன மண்டபம், அர்ச்சுனன் தவம், பஞ்சபாண்டவர் தவம் மற்றும் சுற்றியுள்ள சிற்ப சிலைகள், சிறுகோயில்கள் எனக் கூறலாம்.




மகாபலிபுரக் கடற்கரை, ஒரு சுற்றுலாத்தல கடற்கரை. நாம் பள்ளிக்கூடம் படித்த காலத்திலிருந்து இன்று படிக்கும் பள்ளிக்குழந்தைகள் வரை அனைவருக்கும் காட்டப்படும் ஒரு காட்சி வரலாற்றுத் தலம். இந்த கடற்கரையில் கட்டப்பட்டுள்ள கோயிலிலும் தலசயனப் பெருமாள் அழகாகக் காணப்படுகிறார். ஆனால் இவருக்கு பூஜை கிடையாது. இக்கோயில்களெல்லாம் விஜயநகர மன்னன் பாராங்குசனால் கட்டப்பட்டதாகும்.

மகாபலிபுரம் என்பது ஒரு மா உன்னதத் திருத்தலம். சிற்பக்கலையின் சிறப்பிடம். தமிழனின் ஆன்மீகம், கலை, பண்பாடு, இயற்கை வளத்தை எடுத்துக்காட்டும் பிறப்பிடம். அந்தத் தலத்தை நான் இப்போது மூன்று முறை தரிசிக்கும் பாக்யத்தைப் பெற்றேன். இறுதியில் நான் ஒரு வெண்பாவில் அதை எழுதி முடித்தேன்.



"திருக்கடல் மல்லை இச்ச யனப்பேர்
பெருமாள் திருவருள் பெற்றேன் - அருளாய்
மணியோசை கேட்க மகிழ்ச்சியும் கொண்டேன்
அணிசெய்வான் யாவும் அறிந்து"

திவ்யதேசம் - 64



திருக்கடிகை - சோளி சிங்கபுரம் (சோளிங்கபுரம்)

இந்த தலத்தில் கீழே ஒரு கோயிலும், மலைமேலே ஒரு கோயிலும் உண்டு.

அதுபோக ஒரு சிறிய மலைபோன்ற குன்றில் ஒரு ஆஞ்சிநேயர் கோயிலும் உண்டு.



1. கீழேயுள்ள கோயில்

மூலவர் : இல்லை

உற்சவர் : பக்தவச்ல பெருமாள் (தக்கவன்) பின்னால் ஒரு ஆதி கேசவப் பெருமாள் கோயிலும் உண்டு.

2. பெரிய மலை

இதை கடிகாசலம் என்று கூறுவர். அந்தக் கால கணக்குப்படி 500 அடி உயரமுடையது.

மூலவர் : யோக நரசிம்மர் (அக்கரைக்கனி) வீற்றிருந்த கோலம் கிழக்கே திருமுகம்

தாயார் : அம்ருதவல்லி

தீர்த்தம் : அம்ருத தீர்த்தம் தக்கான் குளம் பெரிய குளம்

3. சிறிய மலை

சிறிய மலையிலுள்ள யோக ஆஞ்சினேயர் நான்கு திருக்கரத்தோடு, கையில் சங்கு சக்கரத்தோடு காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்.

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1731, 1736, 2673 (73)

பேயாழ்வார் : 2342

மொத்தம் : 4 பாசுரங்கள்

இந்த கோயில் 64வது திவ்ய தேசமாகும். இங்கு செல்ல சென்னை கோயம்பேட்டிலிருந்து நேரடி பேருந்து உண்டு. அரக்கோணம், திருத்தணியிலிருந்தும் நேரடி பேருந்து உண்டு.



சென்னையிலிருந்து மின்சார தொடர் வண்டி அதாவது ரயில் மூலம் அரக்கோணம் சென்று அங்கிருந்து பேருந்து மூலம் சோளிங்கர் செல்லாம். அல்லது சென்னை-திருப்பதி செல்லும் சப்தகிரி துரித வெளியூர் ரயில் மூலம் திருத்தணி சென்று, பிறகு பேருந்து மூலம் சோளிங்கர் செல்லலாம். சென்னையிலிருந்து காலை 6.15 மணிக்கு புறப்படும் கோவை எக்ஸ்பிரஸ் மூலம் அரக்கோணம் சென்று அங்கிருந்து காலை 7.30 மணிக்கு புறப்படும் மின்சார ரயில் மூலம் சோளிங்கர் ரயில் மூலம் சோளிங்கர் சென்று பேருந்து மூலமாகவோ ஆட்டோ மூலமாகவோ சோளிங்கர் அடிவாரம் செல்லலாம்.

சென்னை சென்ட்ரலிலிருந்து அரக்கோணம் செல்ல மின்சார ரயலில்ல கட்டணம் ரூ. 13/- வெளியூர் விரைவு ரயிலில் ரூ. 38/- ஆகும்.

நான் காலை 6.15 மணிக்கு சென்னை சென்ட்ரலிலிருந்து கோவை எக்ஸ்பிரஸ் மூலம் அரக்கோணம் சென்று இறங்கினேன். அங்கே எங்கே பேருந்து நிலையம் என்று எனக்குத் தெரியவில்லை. என்னோடு ஒருவர் சென்னையிலிருந்து அதே ரயிலில் வந்தார். அவரிடம் சோளிங்கர் செல்ல எப்படி போக வேண்டும்? என்று கேட்டேன். உடனே அவர், "சோளிங்கரா? அதோ ரயில் நிற்கிறது. நானும் அங்கேதான் போகிறேன், வாங்க?" என்று கூறினார். ஆனால் நான் டிக்கெட் எடுக்கவில்லை. அதை அவரிடம் கூறியபோது, "வண்டி புறப்பட்டுவிடும், வாங்க" என்று கூற நான் ஏறி உட்கார்ந்து கொண்டேன். வண்டியில் கூட்டமே கிடையாது. ஒருவர் சுண்டல் விற்றுக் கொண்டிருந்தார். என்னை அழைத்து வந்தவர் ஒரு சுண்டலும் வாங்கிக் கொடுத்தார்.

சுண்டல் அனுமானுக்கும், பெருமாளுக்கும் உரியது. அறிமுகமில்லாத ஒருவர் வழிகாட்டியது மல்லாமல், சுண்டலும் வாங்கிக் கொடுத்தார்.

வண்டி புறப்பட்டு சோளிங்கர் வந்து அடைந்தது. அவரும் நானும் இறங்கினோம். அவரிடம் "கோயிலுக்கு போக பேருந்து எப்போது வரும்?" என்று கேட்டேன். "பஸ் 8.30 மணிக்குத்தான் வரும். நீங்கள் ஷேர் ஆட்டோவில் போகலாம் வாங்க" என்று எதிர்திசைக்கு அழைத்துச் சென்றார். அங்கே நிறைய ஷேர் ஆட்டோக்கள் வந்து போய் கொண்டிருந்தன. அவர் என்னை பொறுத்திருக்கச் சொல்லி, பிறகு வந்த ஒரு ஆட்டோவில் ஏறச் சொன்னார். அவரை நான் "நீங்கள்? எனக் கேட்ட போது 'நான் பிறகு வருகிறேன்' நீங்கள் ஆஞ்சநேயனர் சிலைக்குப் பக்கம் போய் இறங்கிக் கொள்ளுங்கள். ஐந்து ரூபாய் கொடுத்தால் போதும்" எனக்கூறி வழியனுப்பி வைத்தார்.

"வந்தவர் யார்? வழிபோக்கரா? பெருமாளா? சுண்டலும் வாங்கிக் கொடுத்து வழிகாட்டி சென்றாரே?"

சோளிங்கர் ரயில் நிலையத்திலிருந்து சோளிங்கர் கோயில் அடிவாரத்திற்கு சுமார் 20 கிலோமீட்டர். ஷேர்ஆட்டோ என்னிடம் வாங்கியது ரூ. 5/- மட்டும். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. சென்னையில் கூட 15 ரூபாய் வாங்கிவிடுவார். கோவையில் 100/- ரூபாய் கேட்பர்.



நான் பக்கத்திலிருந்த உடுப்பி ஹோட்டலில் டிபன் சாப்பிட்டேன். பிறகு உயரமான அனுமான் சிலையை வணங்கினேன். தக்கான் தெப்பக் குளத்தை சுற்றி வந்தேன். அங்கேயே வரதராஜ பெருமாள் கோயில் அதையும் தரிசித்தேன்.

அங்கிருந்து பார்த்தால் தூரத்தில் மலைமேலே உயரமாக லட்சுமி நரசிம்ம சுவாமி பெருமாள் கோயில். ஏறிப்போக முடியுமா? இப்படி இரண்டு மனதோடு அந்த கோயிலை நோக்கி நடந்தேன். சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரம் அந்த ஊர் பெயர் கொண்டப்பாளையம். கோயில் உள்ளதால் சோளிங்கர் என்று ஆகியுள்ளது. நான் சிறிது நேரம் யோசனை செய்து கொண்டே நின்று கொண்டிருந்தேன்.

அப்போது ஒருவர் கோயில் படியிலிருந்து இறங்கி வந்தார். அவரிடம் மலைக்கோயில் தூரமா? என்று கேட்டேன். ‘போகலாம் 1305 படிகள்’, இருங்க டிபன் சாப்பிட்டு வர்றேன் ரெண்டு பேரும் சேர்ந்து போகலாம்” என்று கூறிச் சென்றார். எனக்கு கொஞ்சம் அச்சம் நீங்கி தைரியம் வந்தது. சிறிது நேரத்தில் அவர் வந்தார். ‘வாங்க போகலாம்’ என்று கூற, செருப்பை அடிவாரத்தில் விட்டு விட்டு, அவரைத் தொடர்ந்தேன்.

திருகடிகை என்பது கோயில் பெயர். திருகடிகை லஷ்மி நரசிம்ம சுவாமி கோயில் என்பது பெயர். பில்லி, சூனியம், பைத்தியம் மருந்து வைத்து பாதிக்கப்பட்டிருந்தால் இந்த கோயிலுக்கு வந்து போனால் சரியாக போய்விடும் என்பது நம்பிக்கை.

ஆயிரத்து முந்நூற்று ஐந்து படிகள் இரண்டு புறமும் பாதுகாப்பு சுவர்கள். மேலே வெயில் படாமலிருக்க பிளாஸ்டிக்கில் கூரை வேய்ந்திருந்தார்கள். நான் பயந்த அளவுக்கு இல்லை. படிகளின் எண்ணிக்கையை கூட எழுதியிருக்கிறார்கள்.

வருவோர் போவோரெல்லாம் கையில் பிரம்பு வைத்திருந்தார்கள். முதலில் எனக்கு புரியவில்லை. பிறகுதான் தெரிந்தது. ஒவ்வொரு படிகளிலும் நமது உடன்பிறப்புகள் இரண்டு, மூன்று பேராக நம்மிடம் வழிப்பறி செய்ய உட்கார்ந்திருந்தார்கள். அவர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளத்தான் பிரம்பு. ஆமாம், அவர்கள் குரங்குமார்கள். ஒரு பெண் மல்லிகைப் பூ சூடி செல்ல, ஒரே பாய்ச்சலில் அதை பிடித்து, பறித்து, குதறி விட்டார்கள்.

படியேற முடியாதவர்கள் தூக்கிச் செல்ல வசதியண்டு. அதற்கு டோலி என்று பெயர். இரண்டு பேர் அதில் நம்மை உட்கார வைத்து தூக்கி செல்கிறார்கள். கட்டணம் ரூ. 500/-

எப்படியோ தடைகளைத் தாண்டி படிகளை ஏறி கோயிலை அடைந்தேன். பெரிய கோயில்தான். ஒரு சுற்று சுற்றி வந்தேன். கொஞ்ச நேரத்தில் சன்னதி திறந்தார்கள். நரசிம்மர் உயரத்தில் இருந்தார். ஏறிச்சென்று தரிசனம் செய்தேன். பிறகு என்னை அழைத்து வந்தவருக்கு ஒரு காணிக்கை கொடுத்து விட்டு நன்றி கூறி விடைபெற்றேன்.

"மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை என்னுள்
புக்கானை புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை
தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை அடைந்துய்ந்து போனேனே"

என்று திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி - 3 கைம்மானம் 1731 ஆம் பாடலில் கூறுகிறார்.

"பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில்போல் - வண்டு
வளங்கிளகும் நீள்சோலை வண்பூங் கடிகை
இளங்குமரன் றன்விண் ணகர்"

என்று பேயாழ்வார் 2342-ஆம் பாடலில் திருக்கடிகை பற்றி கூறுவார்.

திருக்கடிகை சோளிங்கரின் மூன்று கோயில்கள் உள்ளன. அடிவாரத்தில் பக்தவச்சலப் பெருமாள். பின்புறம் ஆதிகேசவ பெருமாள்.

மேலே பெரியமலை கடிகாசலம் என்று கூறுவார்கள். நரசிங்க பெருமாள் கோயில் இது 1305 படிகள் கொண்டதாகும். தாயார் அமிர்தவல்லி.

பிறகு சிறியமலை. யோக ஆஞ்சிநேயர். நான்கு திருக்கரங்கள் கொண்டு ஒரு கையில் சங்கு சக்கரத்துடன் விளங்குவார்.

நாம் பேருந்தைவிட்டு இறங்கினால் உடனே தெரிவது பெரிய உயரமான அனுமார் சிலை. பக்கத்தில் பெரிய தெப்பக்குளம் அதையொட்டி வரதராஜ பெருமாள் சந்நதி உள்ளது.

இங்கே வேண்டுதல் செய்து, மொட்டையடித்து, தெப்பக்குளத்தில் குளித்துவிட்டு, ஒரு கடிகை அதாவது அரை மணிநேரம் தங்கிய பிறகு சென்றால் மோட்சம் கிடைக்கும் என்ற ஒரு நம்பிக்கையுண்டு.

அதைவிட முக்கியமானது பில்லி, சூன்யம், மருந்து வைத்தல், பேய், பிசாசு பிடித்தல் போன்ற வியாதி உள்ளவர்கள் இங்கு வந்து தக்கான் குளத்தில் குளித்துவிட்டு, பிறகு மலைமேலே ஏறி நரசிம்ம பெருமாளை தரிசித்தால் நோய் ஒழியும்.

நாராயணனின் நரசிம்மவதாரத்தை காண விரும்பிய சப்தரிஷிகள் இங்கே வந்து தவமிருந்து வேண்ட, உடனே ஒரு நாழிகையில் அவர்களுக்கு பெருமாற் நரசிம்மவதாரக் காட்சி தந்தாராம். அதனால் இத்தலத்திற்கு திருக்கடிகை என்று பெயர் வந்ததாகக் கூறுவர்.





நான் மேலே சென்று பார்த்த போது, பில்லி, சூன்யத்தால் பாதிக்கப்பட்ட பல ஆண் பெண்கள் பலமுறை கோயிலை சுற்றி வந்த வண்ணமாக இருந்தனர். என்னை அழைத்து வந்தவர் கூட ஒரு நோயால் பாதிக்கப்பட்டு தொடர்ந்து வந்து கொண்டிருப்பதாகக் கூறினார். அவ்வாறு வந்து நோய் நீங்கி பின்னரும் அவர்கள் தொடர்ந்து வந்து பெருமாளுக்கு நன்றிக்கடன் செலுத்துகிறார்கள்.

பள்ளிக்கூடத்தில் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் பாடம் படித்தது போல, யோக நரசிம்மர் கோயிலுக்கு 1305 படிகளை எண்ணி இறங்கிய நான் என்ன அனுபவத்தை வைத்து பாடல் இயற்றுவது என்று யோசித்த போது, யோக நரசிம்மர் "அந்தப் படிகளையே அடியெடுத்துப்பாடு" என்று அசரீரி குரல் கொடுக்க நான் வெண்பாப்பாடி அந்த பயணத்தை முடித்தேன்.

"ஆயிரத்து முந்நூற்று ஐந்து படிகள்மேல்
கோயில் திருக்கடிகை சோளிங்கர் - பேயோட
சிங்க முகம்கொண்ட சிம்மப் பெருமாளே
எங்கள் பிணிதீர் எழுந்து"

வடநாட்டுத் திருப்பதிகள் - 11

வடநாட்டுத் திருப்பதிகள் மொத்தம் 11 ஆகும். அவற்றில் திருப்பதி என்னும் திருவேங்கடம், வடமதுரா என்னும் மதுரா, திருவாய்ப்பாடி என்னும் கோகுலம் என்ற மூன்று திவ்யதேசத் தல மண்ணையே என்னால் தரிசிக்க முடிந்தது.

திருப்பதி தமிழ்நாட்டு எல்லையைத் தொட்டியிருப்பதால், பலமுறை அதை தரிசனம் செய்திருக்கிறேன். மற்ற இரண்டு தேசங்களையும் வடநாடு சுற்றுலா சென்றபோது தரிசனம் செய்தேன்.

உத்தரபிரதேசம் ஆக்ராவில் தாஜ்மஹால், ஆக்ரா கோட்டை ஆகியவற்றைப் பார்த்துவிட்டு, செல்லும் வழியில் மதுரா. திருவாய்ப்பாடி தலத்தைப் பார்த்தேன். திருவாய்ப்பாடியில் ஆழ்வார்கள் பாடிய கோயில்கள் இப்போது இல்லை. அதன்பெயரில் புதிதாக ஒரு கோயில் கட்டியுள்ளார்கள்.

மதுரா கோயில் உயர்ந்து விசாலமாகக் காணப்படுகிறது. மூலவர் கோவர்த்தன், பாலகிருஷ்ணன் நின்ற திருக்கோலத்திலேயே காட்சி தந்து கொண்டிருக்கிறார்.

மதுராக் கோயிலை ஒட்டியே முஸ்லீம்களின் பள்ளிவாசல் இருக்கிறது. ஆனால் இதுவரையும் இந்து முஸ்லீம் சண்டைவராமல், ஒற்றுமையாய் இருந்துவருவது மகிழ்ச்சியைத் தருகிறது.

மீதி எட்டு திவ்யதேசங்களை நான் கண்டு தரிசிக்கவில்லை. அதில் ஒரு தேசம் திருச்சாளக்ராமம். நேபாள நாட்டில் உள்ளது. அது நாடு கடந்து, பறந்து செல்ல வேண்டும். அது எல்லோராலும் முடியாது. எனக்கும் முடியாது. முடிந்தால் செல்வேன்.

மீதி ஏழு தேசங்களை நானே தவிர்த்துவிட்டென். வடநாட்டு பருவ நிலை, மலை உயரம் எனக்கு ஒத்துவராது. மற்றவைகளான அயோத்தி போன்றவைகள் பிறகு பார்க்கக்கூடும்.

ஆனால் அதே நேரத்தில் அந்த எட்டு திவ்யதேசங்களையும் நான் வேறுவிதமாக தரிசனம் செய்துவிட்டேன். அவற்றை நான் கண்டு களித்து, தரிசித்து வந்ததாகத்தான் நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

63-நாயன்மார்கள் வரலாற்றை நான் எழுதியுள்ளேன். அந்த 63-சிவதலங்களுக்கும் சென்று வந்துள்ளேன். அந்த நூலை ஆனந்த விகடன் பிரசுரம் செய்துள்ளது. அதில் பூசலார் என்ற ஒரு நாயனார். சென்னை திருநின்றவூரில் அவதரித்தவர் ஆவார். சிவபெருமானுக்கு கோயில் கட்ட விரும்பினார். ஆனால் பொருள் இல்லை. ஆகவே தன் மனதுக்குள்ளேயே கோயில் எழுப்பினார். அப்போது தொண்டை நாட்டு மன்னனும் சிவனுக்கு ஒரு கோயில் கட்டினான். ஆனால் சிவபெருமான் பூசலாருக்குத்தான் காட்சி தந்து அருளினான்.

அவர்போல நானும் என் மனத்தில் அந்த எட்டு திவ்யதேசங்களையும் தரிசனம் செய்துள்ளேன். அது பெருமாளின் திருவருள் ஆகும்.

63-நாயன்மார்களில் சுந்தரமூர்த்தி நாயனார், திருஞானசம்பந்தர் இரண்டு பேரும் அடங்குவர். அவர்கள் எல்லா சிவதலங்களுக்கும் சென்று தரிசனம் செய்து பாடினர். ஆனால் கயிலாயம், இலங்கை நாட்டிற்கெல்லாம் சென்று பாடவில்லை. திருக்காளத்தியில் இருந்து கொண்டே சிவனைப்பாடி அவன் அருளைப் பெற்றார்கள்.

திருஞானசம்பந்தர் இலங்கையிலுள்ள திருக்கோணலை, திருக்கேதீச்சரம் இரண்டு சிவ தலங்களையும் இராமேசுவரத்திலிருந்து பாடி அருள் பெற்றார்.

“தாயினும் நல்ல தலைவர்என்று அடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றுஅகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் கனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே”

என்று திருக்கோண மலையைப் பாடல்களில் இது ஒன்று. பாடும் அடியவர்களின் மனத்துக்குள்ளேயே வந்தமர்ந்து இறைவன் அருள் செய்வாராம்.

அவ்வாறே நான் பாடியுள்ள எட்டு திவ்யதேசத்தையும் நான் தரிசித்து வந்ததாகக் கொள்ள வேண்டும்.

திருக்கேதாரம்

இந்த திருத்தலம் வடநாட்டில் திருக்கேதார மலையில் உள்ளது. சுவாமி கேதாரநாதர். அம்பிகை கேதார கௌரி.

சுந்தரமூர்த்தி நாயனார் திருக்காளத்தி சென்று திருக்காளத்தி நாதரை தரிசித்துவர கொஞ்ச காலம் அங்கிருந்தார். அப்போது அவருக்கு வடநாட்டிலுள்ள திருக்கேதாரம் வேதாரநாதர் எண்ணம் எழுந்தது. ஆனால் அவரால் அங்கு சென்று, பார்த்து தரிசிக்க முடியவில்லை. ஆனாலும் அவர் அந்த கேதார நாதர் மலையை மனத்தால் எண்ணி அங்கு சென்று தரிசித்து மகிழ்ந்தாற்போல 10-பாடல்கள் பாடினார்.

அதில் முதலாவதாக,

"வாழ்வாவது மாயம் இது
மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக் கடல்
பசிநோய் செய்த பறிதான்
தாழாதுஅறம் செய்ம்மின்தடங்
கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக்
கேதாரமென் னீரே"

என்று பாடினார்.

"இந்த வாழ்க்கை நிலையில்லாது மண்ணாய்ப் போவது உண்மை. பசி, நோய், துயரம் இவற்றால் சீரழிந்து போவதும் உண்மை. ஆகவே நல்வினை செய்து வாழுங்கள்" என்பது இதன் அர்த்தமாகும்.

திருக்கேதீச்சரம்

அதுபோல திருக்கேதீச்சரம் என்பது இலங்கையில் உள்ள தலமாகும். இதன் கோயில் கேதீசுவரர். அம்பிகை கௌரியம்மை.


சுந்தரமூர்த்தி நாயனார் சுவாமிகள் இராமேசுவரம் சென்று சாமிதரிசனம் செய்த பிறகு, அங்கிருந்தபடியே இலங்கை ஈழ நாட்டிலுள்ள திருக்கேதீச்சரத்தையும் பாடினார். அதைப்போற்றி பத்துப் பாடல்கள் அவர் பாடினார். அதில் 9வது பாடலாக,

"மூவரென இருவரென
முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில்
மாதோட்டநன் னகரில்
பாவம்வினை அறுப்பார்பயில்
பாலாவின் கரைமேலே
தேவன்எனை ஆள்வான்திருக்
கேதீச்சரத் தானே"

என்ற பாடலைப் பாடினார்.

ஈழம் மாதோட்டம் என்ற ஊரில் மூன்றுகண் மூர்த்தியாக விளங்குகிறார் திருக்கேதீச்சுவரர், அயன், மால், சிவன் என மூவராக விளங்கும் அவர் என்னை ஆள்கிறார் என்பது அதன் பொருளாகும்.

திவ்யதேசம் - 65



திருவயோத்தி
(அயோத்யா)

மூலவர் : இராமர்
சக்ரவர்த்தித் திருமகன்
ரகுநாயகன்
வீற்றிருக்கும் திருக்கோலம்
வடக்கே திருமுகம்

தாயார் : சீதாப்பிராட்டி

தீர்த்தம் : பரமபதஸத்ய புட்கரிணி ஸரயூநதி

மங்களாசாசனம் :
பெரியாழ்வார் : 312, 314, 316, 321, 325, 399
குலசேகராழ்வார் : 724, 725, 741, 748
தொண்டரடிப் பொடியாழ்வார் : 920
திருமங்கையாழ்வார் : 1875
நம்மாழ்வார் : 3381

மொத்தம் : 13 பாசுரங்கள்

"முடியொன்றி மூவுல கங்களு மாண்டு,உன்
அடியேற் கருளென் றவன்பின் தொடர்ந்த,
படியில் குணத்துப் பரதநம் பிக்கு, அன்
றடிநிலை யீந்தானைப் பாடிப்பற
அயோத்தியர் கோமானைப் பாடிப்பற"

என்று 312-ஆம் பாடலில் பெரியாழ்வார் பாடுவார்.

"சுற்றமெல்லாம் பின்தொடரத்
தொல்கான மடைந்தவனே!
அற்றவர்கட் கருமருந்தே!
அயோத்திநகர்க் கதிபதியே!
கற்றவர்கள் தாம்வாழும்
கணபுரத்தென் கருமணியே,
சிற்றவைதன் சொல்கொண்ட
சீரமா! தாலேலோ"

என்று 724 ஆம் பாடலில் குலசேகராழ்வார் தாலாட்டுப் பாடுவார்.

"மேட்டிள மேதிகள் தளைவிடு மாயர்
வேய்ங்குழ லோசையும் விடைமணிக் குரலும்
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை
வாட்டிய வரிசியை வானவ ரேறே!
மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்தியெம் அரசே!
அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்திரு ளாயே!"

என்று 920 ஆம் பாடல் தொண்டரடிப் பொடியாழ்வார் பாடுவார்.

"கவள யானை பாய்புர
வித்தே ரோட ரக்கரெல்லாம
துவள, வென்ற வென்றி
யாளன் றன்தமர் கொல்லாமே,
தவள மாடம் நீட
யோத்தி காவலன் றன்சிறுவன்
குவளை வண்ணன் காண
ஆடீர் குழமணி தூரமே"

என்று திருமங்கையாழ்வார் 1875 ஆம் பாடலில் பாடுவார்.

"கற்பார் இராம பிரானையல்
லால்மற்றும் கற்பரோ?
புற்பா முதலாப் புல்லெறும்
பாதியொன் றின்றியே,
நற்பால் அயோத்தியில் வாழும்
சராசரம் முற்றவும்,
நற்பாலுக் குய்த்தனன் நான்முக
னார்பெற்ற நாட்டுளே"

என்று 3381-ஆம் பாடலில் திருமங்கையாழ்வார் பாடுவார்.

சரயூ நதிக்கரையில் தென்னிந்திய பாணியில் கட்டப்பட்டுள்ளது அம்மாசி மந்திர் என்ற கோயில். அரங்கநாதர் சன்னதியுடன் கூடிய இராமர் சன்னதியும் அதே பாணியில் உள்ளது. இங்கே தென்னிந்திய வைணவர்கள் பூஜை செய்கிறார்கள்.

பிரம்மாவின் முதல் பிள்ளையாகிய சுவாயம்புவமனுவுக்கு ஸ்ரீமந்நாராயணன் வைகுண்டத்திலிருந்து அயோத்தி என்னும் பாகத்தை பிரம்மா மூலமாக மனுசக்ரவர்த்தி கையில் கொடுத்தார். அதை அவர் பூலோகத்திற்கு கொண்டு வந்து சரயூ நதியின் தென்கரையில் படைத்ததால் அம்புயத்தோன் அயோத்தி மன்னருக்கு அளித்த கோயில் என்ற பெயர் வந்தது. ஏழு முக்தி தரும் நகரங்களில் இதுவும் ஒன்று.



இப்போதுள்ள சூழ்நிலையில் இந்த அயோத்தி முக்தியும் தரவில்லை, சக்தியும் தரவில்லை, பக்தியும் தரவில்லை.

கரசேவை, ரதயாத்திரை என்று போய், அயோத்தி ராமர் கோயில் பக்தர்கள் பாபர் மசூதியை இடித்து பாவத்தை வாங்கிக் கொண்டு விட்டார்கள்.

இராமன் கூட தன் மனைவி சீதையைத் தூக்கிச் சென்ற இராவணனை போர்க்களத்தில் இன்று போய் நாளை வா என்று கூறி ஒரு தர்மத்தை நிலை நாட்டினார்.

ஆனால் இன்று அந்த பாபர் மசூதி இடிப்பும், இராமர் கோயிலும் ஒரு பெரிய பிரச்சனையாகி, நாட்டின் ஒற்றுமைக்கு ஊறுவிளைவித்து விட்டது என்பது வெளிப்படையான உண்மை.

காசி – வாரணாசி லக்னோ ரயில் மார்க்கத்தில் பைசாபாத் நிலையத்திலிருந்து வண்டியில் போக வேண்டும். அங்கிருந்து அயோத்தி சுமார் 10 கி.மீ. தூரம். தங்குவதற்கு வசதியுண்டு.

"அயோத்தி ராமா அடிதொட்டுக் காண
வயதும் உடலும் வாரா – தயவுசெய்து
எம்மைப் பொறுத்துக்கொண் டெம்மிடம் வந்தருள்வாய்
கம்பன் கவித்தலை வா!

அயோத்தி ராமனே ஆலயம் என்று
பயமாக்கி விட்டனர் பாவம் – தயவுசெய்து
ஒற்றுமை கண்டிட உன்பூமிச் சண்டையை
முற்றுமாய்த் தீர்க்க முயற்சி!"

திவ்யதேசம் - 66



திருநைமிசாரண்யம்

மூலவர் : தேவராசன் (ஸ்ரீஹரி)
நிற்கும் திருக்கோலம்
கிழக்கே திருமுகம்

தாயார் : ஸ்ரீஹரிலட்சுமி
(புண்டரீகவல்லி)

தீர்த்தம் : சக்ர தீர்த்தம்
கோமுகிநதி நேமி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 998 - 1007


மொத்தம் : 10 பாசுரங்கள்

"வாணிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள்
மாதரார் வனமுலைப் பயனே
பேணினேன், அதனைப் பிழையெனக் கருதிப்
பேதையேன் பிறவிநோ யாறுப்பான்,
ஏணிலே னிருந்தே னெண்ணினே னெண்ணி
இளையவர் கலவியின் திறத்தை
நாணினேன், வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்து ளெந்தாய்"

என்று 998 ஆம் பாடலில் பாடுவார்.

இங்கே பகவான் காரு வடிவாகவே இருக்கிறார். ஒருமுறை தேவர்கள் பிரம்மாவை அடைந்து, பூமியில் தவம் செய்வதற்குச் சிறந்த இடம் எதுவென்று கேட்டனர். பிரம்மா தர்ப்பத்தைச் சக்ரமாகச் செய்து உருட்டினார். அது இக்காட்டில் வந்து நின்றது. தவம் செய்வதற்கு ஏற்ற இடம் என்று காட்டியது. அதுவே நைமிசம் - அரணியம் ஆனாது. ஆரண்யமாக பெருமான் காட்சியளிப்பதால் மக்கள் காட்டையே வணங்குகிறார்கள். கோமுகி நதியில் குளித்து விட்டு, சக்ர தீர்த்தத்தில் மூழ்கிக் குளிக்கலாம். இந்த தீர்த்த நதிக்கரையில் விநாயகர், ராம, லட்சுமணர், சீதை கோயில்கள் உள்ளன.

கோமுகி நதிக்குப் போகும் வழியில் வியாசகட்டீ என்ற இடத்தில் வேதவயாசர் ஆலயம் உள்ளது. இதுதான் வியாச பகவானும் சுகப்ரஹமும் பாரதம், பாகவதம் முதலிய இதிகாச புராணங்களையியற்றிய புண்ணிய பூமியாகும்.



ஊரின், மற்றொரு புறத்தில், புராண மந்திர் என்ற சுகபகவான் ஆலயத்தில் அவருடைய வெண்கலச் சிலை கிளி மூக்குடன் பெரிதாக வைக்கப்பட்டுள்ளது. இதற்கு சற்று அப்பால் ஒரு குன்றின் மேல் அனுமான்கட்டீ என்ற கோயில் மிகப்பெரிய அனுமார், இராம லட்சுமணர்களாக இரு தோள்களிலும் எழுந்தருளச் செய்து கொண்டு, நிற்கும் தி ரு க் கோ ல த் தி ல் காட்சியளிக்கிறார்.

கல்கத்தா – டேராடூன் ரயில் மார்க்கத்தில் பாலமாவ் சந்திப்பு வந்து, அங்கிருந்து சீதாப்பூர் போகும் கிளை ரயிலில் ஏறி வழியிலுள்ள நைமி சாரண்யா நிலையத்தில் இறங்கி 5 கி.மீ. தூரம் வண்டியிலோ, நடந்தோ செல்லலாம்.

"திருநைமி சாரண்யம் தேவராசா உந்தன்
திருவடி காண திசைக்கு – வருவேனா
இப்போது காட்சி எமக்குத் தருவாயாம்
அப்போது நான்வருவேன் ஆம்!

திருநைமி சாரண்யம் தேவராசன் தேசம்
திருக்கோயில் மூர்த்தியும் இல்லை – பெருங்குளந்தான்
காடே கடவுளாக காண்போர் வணங்குவார்
தேடினால் தெய்வம் வரும்"

திவ்யதேசம் - 67



மூலவர் : பரமபுருஷன்
புஜங்க சயனம்
கிழக்கே திருமுகம்

தாயார் : பரிமளவல்லி நாச்சியார்

தீர்த்தம் : இந்திர தீர்த்தம்
கோவர்த்தன தீர்த்தம்
மானஸ நைல்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 958 - 967

மொத்தம் : 10 பாசுரங்கள்

திருப்பிருதி
(ஹோஷமம் - நந்தப்ராயக்)

"ஓதி ஆயிர நாமங்க ளுணர்ந்தவர்க்
குறுதுய ரடையாமல்,
ஏத மின்றிநின் றருளும்நம் பெருந்தகை
இருந்தந லிமயத்து
தாது மல்கிய பிண்டிவின் உலர்கின்ற
தழல்புரை யெழில்நோக்கி
பேதை வண்டு ளெரியென் வெருவரு
பிருதிசென் றடைநெஞ்சே"


என்று 966 ஆம் பாடலில் பாடுகிறார்.

இப்போது ஆதிசங்கரால் கட்டப்பட்ட நரசிம்மர் ஆலயமும், வாசுதேவர் ஆலயமுமே உள்ளன. வாசுதேவர் நிற்கின்ற கோலத்தில் இருக்கிறார். இக்கோயிலுக்கு 2 கி.மீ. தூரம் படியில் இறங்கிச் செல்ல வேண்டும். ஆதிசங்கரர் இவ்விடத்தில் ஒரு முசுக்கட்டை மரத்தடியில் தவமிருந்து திவ்ய ஞானம் பெற்று, சங்கர பாஷ்யத்தை இயற்றியதாக கூறுவர்.

ரிஷி கேசத்திலிருந்து பத்ரிநாத் செல்லும் வழியில் உள்ள ஜோஷிமட் என்ற இடந்தான் திருப்பிருதி என்பது பொதுவான அபிப்ராயம். ஹரித்வாரியிலிருந்து 200 கி.மீ. மேல் வரும். சமுத்திர மட்டத்திலிருந்து 6150 அடி உயரம்.

"திருப்பிருதி காணும் திருப்பரம னாராம்
புருசனைப் போய்ப்பார்க்கப் போகேன் - அருகே
அவரில்லாத் தூரம் அதனால் மனதில்
அவர்கோயில் செய்தேன் அறிந்து"

திவ்யதேசம் - 68



திருக்கண்டமென்னும் கடிநகர்
தேவப்ரயாகை

மூலவர் : நீலமேகப் பெருமாள்
(புருஷோத்தமன்)
நிற்கின்ற திருக்கோலம்
கிழக்குத் திருமுகம்

தாயார் : புண்டரீகவல்லி

தீர்த்தம் : மங்கள தீர்த்தம்
கங்கை நதி

மங்களாசாசனம் :

பெரியாழ்வார் : 391 - 401

மொத்தம் : 11 பாசுரங்கள்

"உழுவதோர் படையு முலக்கையும் வில்லும்
ஒண்சுட ராழியும் சங்கும்
மழுவோடு வாளும் படைக்கல முடைய
மால்புரு டோத்தமன் வாழ்வு
எழுமையுங் கூடி யீண்டிய பாவம்
இறைப்பொழு தளவினி லெல்லாம்
கழுவிடும் பெருமைக் கங்கையின் கரைமேல்
கண்டமென் னும்கடி நகரே"

என்று 395 ஆம் பாடலில் கூறுகிறார்.

கோவிலுக்குப் பின்னால் அழகுவாய்ந்த சிறிய அனுமார் கோயில் உள்ளது. இங்கு அளகநந்தா, பாகீரதி நதிகள் சங்கமிக்கின்றன. ஆதி கங்கையாக இது போற்றப்படுகிறது. ஒரு அற்புதமான, உடலுக்கு இதமான இடமாகும்.

ரிஷிகேத்திலிருந்து பத்ரிநாத் போகும் வழியில் 100 கி.மீ. தூரத்தில் உள்ளது. ஹரித்பாரத்திலிருந்து பத்ரிக்கு செல்லும் வழியில் 120 கி.மீ. தூரத்தில் உள்ளது. பத்ரிநாத் போய் விட்டு, திரும்பும் வழியில் கடிநகர் வரலாம். பேருந்து வசதியும் உண்டு.

"திருக்கண்ட மென்னும் கடிநகர் ஊரின்
புருசோத் துமன்நீல மேகப் - பெருமாள்
உனைவணங்கிப் பாடிட உள்ளத்தில் கோயில்
தனியாகச் செய்திட்டேன் வா!"

திவ்யதேசம் - 69



மூலவர் : பத்ரி நாராயணன்
வீற்றிருக்கும் திருக்கோலம்
கிழக்கே திருமுகம்

தாயார் : அரவிந்த வல்லி

தீர்த்தம் : தப்த குண்டம்

மங்களாசாசனம் :

பெரியாழ்வார் : 399
திருமங்கையாழ்வார் : 968-87, 2673(74)

மொத்தம் : 22 பாசுரங்கள்

திருவதிரியாச்ரமம் (பத்ரிநாத்)



"வடதிசை மதுரை சாளக்கி ராமம்
வைகுந்தம் துவரை அயோத்தி,
இடமுடை வதரி யிடவகை யுடைய
எம்புரு டோத்தம னிருக்கை
தடவரை யதிரத் தரணிவிண் டிடியத்
தலைப்பற்றிக் கரைமரஞ் சாடி,
கடலினைக் கலங்கக் கடுத்திழி கங்கைக்
கண்டமென் னும்கடி நகரே"

என்று 969 ஆம் பாடலில் திருமங்கையாழ்வார் கூறுகிறார். என்ன கூறுகிறார்? முதுமை வருமுன் பத்ரிநாத்தை வணங்கு என்று கூறுகிறார்.

"முதுகு பற்றிக் கைத்த
லத்தால் முன்னொரு கோலூன்றி
விதிர்வி திர்த்துக் கண்சு
ழன்று மேற்கிளை கொண்டிருமி,
இதுவென் னப்பர் மூத்த
வாறென் றிளையவ ரேசாமுன்,
மதுவுண் துண்டு பண்கள்
பாடும் வதரி வணங்குதுமே"

என பெரியாழ்வார் 399-ஆம் பாடலில் கூறுகிறார்.

பத்ரிநாத் கடல் மட்டத்திலிருந்து 10,000 அடிக்குமேல் உயரத்திலும், ஹரித்வாரிலிருந்து சுமார் 450 கி.மீ. தூரத்திலும் உள்ளது.

கங்கைநதியின் எதிர்புறத்தேயுள்ள கரையில் தப்தகுண்டம் என்ற வெண்ணீர் ஊற்றும், எதிரில் பத்ரிநாராயணன் கோயிலும் உள்ளன. கோயிலுக்கு எதிர்புறம் நாராயண பர்வதங்களும், வலதுபுறம் நீலகண்ட பர்வதமும் உள்ளன. தப்தகுண்டத்திலிருந்து சிலபடிகள் மேலேறி சிம்ஹத்வாரத்தில் இருக்கும் கருடாழ்வாருக்கு அஞ்சலி செலுத்திவிட்டு, கோவிலின் பிரகாரத்தை அடைய வேண்டும். கோவிலில் பத்ரிநாராயணன் அரவிந்த வல்லித் தாயார், கருடன், நாரதர், நாரநாராயணன் முதலியரவ்களுடன் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டு காட்சி தருகிறார்கள்.

முறைப்படி கட்டணம் செலுத்தி, வரிசையில் நின்று போய், கர்ப்ப கிருகத்திற்கு அருகிலேயே அமர்ந்து அபிடேகமும், திருமஞ்சனமும், அர்ச்சனையும், கற்பூர அர்ச்சனையும் செய்யலாம். இப்பெருமாளுக்கு திரைபோட்டு மறைத்து வைப்பதில்லை. திருமஞ்சனம், சாத்துப்படி நைவேத்தியம் எல்லாம் மக்கள் எதிரிலேயே நடக்கின்றன. இரவு நேரத்தில் வடநாட்டுப் பிராமணர்கள் சாந்தி பஞ்சகம் போன்ற மந்திரங்களை ஓதி தரிசிக்க, ஆடைகளையும், மாலைகளையும் களைந்துவிட்டு, துண்டு மட்டும் சாத்தும் காட்சிக்கு கீத கோவிந்தம் என்று பெயர். கோயில் பூசை விதிமுறைகளை நன்றாக கற்றறிந்தவர்களாகவும், சமஸ்கிருத மொழியில் தேர்ந்தவர்களையும் நல்லொழுக்கம் உடையவர்களை மட்டுமே இந்த பணியில் அமர்த்துகிறார்கள். இந்த கட்டண முறையில் கட்டணமின்றியும் தரிசிக்கலாம் என்று கூறுகிறார்கள்.

மகாலட்சுமிக்கு விருப்பமான ப்தரி என்னும் இலந்தை மரத்தின் கீழே தான் பத்ரி நாராயணன் வீற்றிருப்பதாக கூறுவர்.

தென்புறத்தில் அரவிந்தத் தாயார் தனி சன்னதி உள்ளது. வட இந்தியர் இவரை மகாலட்சுமி என்று அழைக்கிறார்கள்.

பத்ரி நாராயணன் பத்ரிமரத்தின் கீழ் ஜடாபரிதனாய் சதர்புசனாய் மேல்வலக்கையில் சக்கரமும், மேல் இடக்கையில் சங்கும் தரித்து, கீழ்வலது, இடது கைகளை யோக முத்திரையாகக் கொண்டு, பத்மாசனத்தில் வீற்றிருந்து ஒரு தபசி வேடத்தில் அருள்செய்கிறார்.

கோவிலுக்கு கொஞ்சம் வடக்கே கங்கைக் கரையில் பிரகம பகபாலம் என்ற பெரிய பாறையொன்று இருக்கிறது. இங்கு வித்ருகளுக்கு சிராந்தம் செய்தால் ஈரேழு தலைமுறைக்கும் மோட்சம் என்று கூறப்படுகிறது.

கோயிலுக்கு நாற்புறமும் பனிமலைகளும், எதிரே நாராயண பர்வதங்களும், வலப்புறத்தில் நீலகண்ட பர்வதமும் உள்ளன. தவிர, இத்தலத்தில் வசூதாரா என்ற பனிமலை நீர்வீழ்ச்சியின் திவலைகள் யாத்திரிகள் மீது படும்போது அது புனிதம் என்று கருதப்படுகிறது.

திருவஷ்டாசரமந்திரத்தின் அவதாரத் தலமான இவ்வூரின் பெருமை எல்லைகளுக்கப்பாற் பட்டதாகும். விசாலபுரி என்று அதற்காக கூறுவர்.

பனி பெய்யும் பிரதேசமாகையால் இக்கோவில் தீபாவளியன்று மூடப்படும். தொடர்ந்து ஆறு மாதம் மூடப்பட்டு, பிறகு சித்திரை மாதம் சித்ரா பௌர்ணமியன்று திறக்கப்படும்" என்று கூறுவர்.

யாத்திரைக்கு மழையில்லாத காலமாகிய மே மாதம், செப்டம்பர் பிற்பகுதியுமே சிறந்ததாகும். எப்பொழுதும் கடுங்குளிர் பிரதேசமாக விளங்குவதால் இங்குபோகும் போது கம்பெனி உடைகள் எடுத்து செல்வது மிகவும் அவசியமாகும்.

பத்ரிநாத் செல்வதற்கு முதலில் ஹரித்துவார் சென்று, வசதியான இடத்தில் தங்கிக் கொள்ள வேண்டும். பிறகு பிரகம குண்டம் என்ற குளிக்குமிடத்தில் நீராடிய பின்னர் யாத்திரையை தொடங்க வேண்டும்.

ஹரித்வாரத்திலிருந்து 30 கி.மீ. தூரமுள்ள ஹருஷீகேசத்தை சென்றடைய வேண்டும். பிறகு அங்கிருந்து பத்ரிநாத் போகும் பேருந்து மூலம் தேவப்ராகையை அடைய வேண்டும். இதுதான் "கண்டமென்னும் கிடநகர்" என்ற திவ்யதேசமாகும். பிறகு இங்கிருந்து புறப்பட்டு 1706 அடி உயரத்திலுள்ள ஸ்ரீநகர் என்ற ஊரை ராணுவ தளத்தின் வழியாக அடைய வேண்டும். இங்கிருந்து ருத்ரப்ராகை என்ற இடத்தை அடைய வேண்டும். பிறகு கௌஸார் என்ற விமான தளத்தை அடைந்து, கர்ண பிராகையை அடைய வேண்டும். அதன்பின்னர் நந்த பிராகையை அடைய வேண்டும். இங்கிருந்து சுமார் 15 கி.மீ. தூரத்தில் இராவணன் சிவபெருமானைக் குறித்து கைலாச பர்வதத்தை தூக்கியதாக ஐதீகம். திருப்பரிதி என்ற திவ்யதேசம் இதுதான் என்றும் ஜோஷிமட் இல்லையென்றும் சிலர் கூறுவர்.



பிறகு சமோலி என்ற இடத்தை அடைய வேண்டும். இங்கிருந்து பீபல்கோடி அடைந்து, பிறகு ஜோஷி மடம் அடைய வேண்டும். ஜோஷி மடத்திலிருந்து பத்ரநாத் வரை ஒருவழிப்போக்கு ஏற்பாடு உள்ளது. பிறகு விஷ்ணுப்ராகையை அடைய வேண்டும். இங்கு கடும் குளிர். அதனால் கம்பளி தேவை. அளகாநந்தாவும் தோலிகங்காவும் சங்கமம் ஆகும் இடம். மகாவிஷ்ணு கோயில் கொண்டுள்ளார். நாரதமகரிஷி அஷ்டாஷர மந்திரத்தினால் விஷ்ணுவை பூஜை செய்த இடம். பிறகு பாண்டு கேஷ்வர் என்ற ஊர் வரவேண்டும். பத்ரிநாத் கோயிலுள்ள உற்சவ மூர்த்திகள் பனி மூடிய ஆறுமாத காலம், இங்குள்ள வாசுதேவர் கோவிலில் வைத்துப் பூஜிக்கப்படுகின்றன. இது பாண்டவர்களின் ஜன்மஸ்தானமாகவும், பாண்டுமகாராஜா தவம் செய்த இடமாகவும் கருதப்படுகிறது. இங்கிருந்து அனுமான்சட்டி அதாவது பீமசேனும் அனுமாரும் சண்டையிட்டு கந்தமாதனபர்வதம் சென்று அங்கிருந்து 30 கி.மீ. வளைவுப் பாதையில் சென்று பத்ரிநாத்தை அடைய வேண்டும். அனுமான்சட்டியை தாண்டிய சுமார் 10 கி.மீ. தூரத்திலேயே பத்ரிகாச்மரத்தின் காட்சி எதிரே தென்படும். பேருந்து நிலையத்திலிருந்து ஓரிரண்டு கி.மீ. தூரத்திலேயே அலாஸ்கா நந்தாவின் கரையில் பத்ரி நாராயணன் கோயில் உள்ளது. நாம் சென்று தரிசிக்கலாம்.

"பத்ரிநாத் மேலிருக்கும் பத்ரிநா ராயணா
இத்தேகம் தாங்காது நிற்காது - பித்தனின்
உள்ளத்தில் கோயில் உருவாக்கி வைத்துள்ளேன்
வெள்ளிப் பனியிறங்கி வா!"

திவ்யதேசம் - 70



திருச்சாளக்ராமம்

மூலவர் : ஸ்ரீ மூர்த்தி – முக்தி நாராயணன்
நிற்கும் திருக்கோலம்
வடக்குத் திருமுகம்

தாயார் : ஸ்ரீதேவி நாச்சியார்

தீர்த்தம் : சக்ர தீர்த்தம்
கண்டகி நதி

மங்களாசாசனம் :

பெரியாழ்வார் : 206, 399
திருமங்கையாழ்வார் : 988-997

மொத்தம் : 12 பாசுரங்கள்

"பாலைக் கறந்தடுப் பேற வைத்துப்
பல்வளை யாளென் மகளி ருப்ப
மேலைய கத்தே நெருப்பு வேண்டிச்
சென்றிறைப் பொழுதங்கே பேசி நின்றேன்,
சாளக்கி ராம முடைய நம்பி
சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான்
ஆலைக்க ரும்பின் மொழி யனைய
அசோதைநங் காய்! உன் மகனைக் கூவாய்!"

என்று பெரியாழ்வார் 206 ஆம் பாடலில் கூறுவார்.

"கலையும் கரியும் பரிமாவும்
திரியும் கானம் கடந்து போய்
சிலையும் கணையும் துணையாகச்
சென்றான் வென்றிச் செருக்களத்து
மலைகொன் டலைநீ ரணைகட்டி
மதிள்நீ ரிலங்கை வாளரக்கர்
தலைவன், தலையத் தறுத்துகந்தான்
சாளக் கிராம மடைநெஞ்சே"

என்று திருமங்கையாழ்வார் 988-ஆம் பாடலில் கூறுகிறார்.

இத்தலம் நேபாள நாட்டில் உள்ளது. நேபாள தலைநகர் காட்மாண்டு நகரிலிருந்து 272 கி.மீ. மேல் தூரத்திலுள்ள முக்தி நாராயண தலம் போகும் வழியில் கண்டகி நதிக்கரையில் உள்ளது. சாளக்ராமம் - முக்தீ நாராயண இரண்டும் ஒன்றுதான். இங்குதான் கண்டகி நதி ஆரம்பமாகிறது. கண்டகீ நதிக்கரையில் காட்மாண்டலிருந்து சுமார் 104 கி.மீ. தூரத்தில் உள்ளது சாளக்ராமம் 'தாமோதர குண்ட்' என்றும் கூறுவர்.

சாளக்ராமத்தில் கண்டகீ நதியில்தான் நாம் பூஜை செய்யும் சாளக்ராமங்கள் கிடைக்கின்றன.

யாத்திரிகர்களின் பாதுகாப்பைக் கருதி 50 பேருக்கும் குறைந்த அளவில் நேபாள அரசு அனுமதி வழங்குவதில்லை.

இராமானுசர் இத்தலத்தை மங்களாசாசனம் செய்துள்ளார்.

"திருச்சாளக் ராமம் திருமூர்த்தி சாமி
அருள்மிக்தி நாராயக் காண - வருவாயா
நேபாள நாடுவந்து நேர்காண ஆகாது
பாப்பாட என்னுள்ளம் வா!"



திவ்யதேசம் - 71



மூலவர் : கோவர்த்த நேசன்
பாலகிருஷ்ணன்
நிற்கும் திருக்கோலம்
கிழக்கே திருமுகம்

தாயார் : சத்தியபாமா நாச்சியார்

தீர்த்தம் : இந்திர தீர்த்தம்
கோவர்த்தனா தீர்த்தம்
யமுனா தீர்த்தம்

திருவிடமதுரை (மதுரா பிருந்தாவனம், கோர்வர்த்தனம் அடங்கியது)

மங்களாசாசனம் :

பெரியாழ்வார் : 16, 277, 399, 264-74, 341, 430
ஆண்டாள் : 478, 538, 539, 560, 569, 617, 624, 634, 637-46
தொண்டரடிப் பொடியாழ்வார் : 916
திருமங்கையாழ்வார் : 1512, 1527, 1833, 2673(74)
நம்மாழ்வார் : 3439, 3499, 3559, 66

மொத்தம் : 50 பாசுரங்கள்

"அட்டுக் குவிசோற் றுப்பருப் பதமும்
தயிர்வா வியும்நெய் யளறும் அடங்கப்
பொட்டத் துற்றி,மா ரிப்பகை புணர்த்த
பொருமா கடல்வண் ணன்பொறுத் தமலை,
வட்டத் தடங்கண் மடமான் கன்றினை
வலைவாய் பற்றிக் கொண்டு,குற மகளிர்
கொட்டைத் தலைப்பால் கொடுத்து வளர்க்கும்
கோவர்த் தனமென்னும் கொற்றக் குடையே

என்று பெரியாழ்வார் 264 ஆம் பாடலிலும்,

"மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை"

என்று ஆண்டாள் 478 ஆம் பாடலிலும்,



"வளவெழும் தவள மாட
மதுரைமா நகரந் தன்னுள்
வளமால் யானை கொன்ற
கண்ணனை அரங்கமாலை
துளவத்தொண் டாய தொல்சீர்த்
தொண்டர டிப்பொ டிசொல்
இளையபுன் கவிதை யேலும்
எம்பிராற் கினிய வாறே"

என்று 916-ல் தொண்டரடியும்,

"சீராரும் மாலிருஞ் சோலை - திருமோகூர்
பாரோர் புகழும் வதரி வடமதுரை"

என்று 2673(74) ஆம் பாடலில் திருமங்கையாரும்,

"பொருள்கை யுண்டாய்ச் செல்லக்
காணில் போற்றியென் றேற்றெழுவார்
இருள்கொள் துன்பத் தின்மை
காணில் என்னேஎன் பாருமில்லை
மருள்கொள் செய்கை யசுரர்
மங்க வடமது ரைப்பிறந்தாற்கு
அருள்கொள் ஆளாய் உய்யல்
அல்லல் இல்லைகண் டீரரணே"


என்று 3559 ஆம் பாடலில் நம்மாழ்வாரும் பாடுகிறார்கள்.

வடமதுரையிலிருந்து சுமார் 5 கி.மீ. தூரத்தில் ஜன்மபூமி என்ற புதிய கோயில் கட்டப்பட்டுள்ளது. இது கிருஷ்ணன் பிறந்த சிறைச்சாலை இருந்த இடமாகக் கருதப்பட்டு கட்டப்பட்டுள்ளது.

சுமார் 20 கி.மீ. தூரத்தில் கோவர்த்தன கிரி உள்ளது. மைய இடமாக குறிப்பிடப்பட்டுள்ள பிருந்தாவனத்தில் தென்னாட்டுப் பாணியில் கட்டப்பட்டுள்ள ரங்க மந்திர் என்ற பெரிய கோயிலும் உண்டு.

வடமதுரை திவ்ய தேச எண்ணிக்கையில் ஒன்றாகயிருந்தாலும், மதுரை, பிருந்தாவனம், கோவர்த்தனம் என்ற மூன்று இடங்கலும் அடங்கியதாகும்.

ஒரு காலத்தில் ரிஷிகளின் பிரார்த்தனைப்படி, ராமன் தன் தம்பி சத்ருக்கனை மது நகரத்தின் அசுர அரசனான லவனா சூரனைக் கொல்லச் சொல்லி சுவயம்புவால் மது கைடாபாசு சம்ஹாரத்தில் பயன்படுத்திய பாணத்தைக் கொடுத்தனுப்புகிறார். அதன்படி சத்ருக்கன் லவணா சூரனை சம்ஹாரம் செய்து, யமுனை நதிக்கரையில் அர்த்த சந்திர வடிவமாக, மிக அழகிய மாடமாளிகை மண்டப கோபுர பிரகார வீதி தடாகாதிகள் சூழ்ந்த மதுரா நகரத்தை ஏற்படுத்தியதாக கூறுபவர்.



சத்ருக்கன் வம்சம் ஆண்டதற்குப் பிறகு, மதுரா நகரம் யாதவர் வசமானது. வாசுதேவர் பரம்பரை அதை ஆட்சி செய்தது.

இந்த நகரத்திற்கு 'கிருஷ்ண ஜென்ம பூமி'. 'கிருஷ்ணர் அவதார ஸ்தலம்' என்ற பெயருமுண்டு. இங்கு ஒரே நேரத்தில் பல லட்சம் பேர் பணியாற்றுவதற்கும், தங்குவதற்கும் இடம் கட்டியிருக்கிறார்கள். பூஜைகள் விதிப்படி நடந்து வருகிறது.

கிருஷ்ண ஜன்மாஷ்டமா நாளில் முதல் ஒருவாரம் கிருஷ்ண சரிதம் முழுவதும் நாடகமாக நடிக்கிறார்கள். இதை வருடந்தோறும் பல லட்சக்கணக்கான மக்கள் கண்டு களிக்கிறார்கள்.

இங்கே தமிழ்நாட்டு வைணவப் பெருமக்களே சேவை செய்வதுடன், இங்கிருந்து செல்வோருக்கு அவர்களே தங்குவதற்கும், சாப்பாட்டுக்கும் ஏற்பாடு செய்து தருகிறார்கள்.

டெல்லியிலிருந்து ஆக்ரா செல்லும் ரயில் பாதையில் மதுரா என்ற சந்திப்பு இருக்கிறது. அங்கிருந்து சுமார் 5 கி.மீ. தூரத்தில் ஊரும் கோயிலும் உள்ளது. ஆனாலும் இங்கு தங்கும் வசதி இல்லாமையால், இங்கிருந்து 15 கி.மீ. தூரத்திலுள்ள பிருந்தாவனம் என்ற ஊரில் தங்கிக் கொள்ளலாம். அல்லது டெல்லியில் தங்கியவர்கள் நேராக ரயிலோ, பேருந்திலோ வரலாம்.

வடநாட்டு சுற்றுலா சென்றபோது இந்த திவ்யதேசத்தை நான் தரிசித்தேன். ஆக்ரா சென்று தாஜ்மஹால், ஆக்ரா கோட்டை ஆகியவற்றை பார்த்துவிட்டு, டெல்லி செல்லும் வழியில் நான் மதுரா, திருவாய்ப்பாடி ஆகியவற்றை தரிசித்து சென்றேன்.

கோயில் உயரமாக கட்டப்பட்டுள்ளது. அங்கு உள்ளே சென்று நானும் என் மனைவியும் தரிசித்தோம். நின்ற நிலையில் கிருஷ்ணர் உருவம் எங்களுக்கு காட்சி தந்தது அருகில் மசூதி இருக்கிறது. சண்டை சச்சரவு இல்லை.

"கிருஷ்ணர் பிறந்த இடம்தான் மதுரா
அருகில் மசூதி அழகாய் - ஒருமையாய்
கோவர்த்த நேசனாய் பால கிருஷ்ணன்
ஆவலாய்ப் பாடினேன் பாட்டு"

திவ்யதேசம் - 72



திருவாய்ப்பாடி

(கோகுலம் - கோகுல்)

மூலவர் : மனமோகன கிருஷ்ணன்
நிற்கும் திருக்கோலம்
கிழக்குத் திருமுகம்

தாயார் : ருக்மினி சத்யபாமா பிராட்டியார்

தீர்த்தம் : யமுனா நதி

மங்களாசாசனம் :

பெரியாழ்வார் : 14, 16, 132, 145, 231, 235, 237, 239, 263, 281

ஆண்டாள் : 474, 618, 630, 636, 638

திருமங்கையாழ்வார் : 1021, 1392, 1435, 1993, 1994, 1995, 2673(28)

மொத்தம் : 22 பாசுரங்கள்

"ஓடு வார்விழு வாருகந் தாலிப்பார்
நாடு வார்நம்பி ரானெங்குற் றாளென்பார்
பாடு வார்களும் பல்பறை கொட்டநின்று
ஆடு வார்களு மாயிற்றாய்ப் பாடியே"


என்று 14 ஆம் பாடலில் பெரியாழ்வாரும்,

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்"

என்று 474 ஆம் பாடலில் ஆண்டாள் திருப்பாவையும்,

"ஆழ்கடல்சூழ் வையகத்தா ரேசப்போய், ஆய்ப்பாடித்
தாழ்குழலார் வைத்த தயிருண்டான் காணேடீ
தாழ்குழலார் வைத்த தயிருண்ட பொன்வயிறு,இவ்
வேழுலகு முண்டும் இடைமுடைத்தால் சாழவே"

என்று 1994 ஆம் பாடலில் திருமங்கையாழ்வார் பாடினார்கள்.



ஆழ்வார்கள் பாடிய கோயில்களோ, மூர்த்திகளோ இல்லை. கோகுல் என்ற இடத்தில் புராண கோகுல் என்ற பழைய கோகுல் புதுப்பிக்கப்பட்டுள்ளது. கோயில் வாசலிலேயே யமுனை நதி ஓடுகிறது.

நந்த கோபாலர், யசோதா, பலராமர் விக்ரங்களுக்கடியில் ஒரு குழந்தை கிருஷ்ணர் ஒரு சிறிய தொட்டியில் இருப்பது சிறப்பு.

மதுரா சந்திப்பிலிருந்து 10 கி.மீ. தூரமுள்ளது யமுனைப் பாலம். அங்கிருந்து 10 கி.மீ. தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம். இங்கு எந்த வசதியும் கிடையாது. கார் வைத்துக் கொண்டு செல்வது நல்லது.

மதுரா கோயிலை பார்த்து விட்டு, பிறகு நான் திருவாய்ப்பாடி கோகுலத்தை பார்க்க முயற்சி எடுத்துக் கொண்டேன். இரவு வந்துவிட்ட போதிலும் எப்படியும் கண்டு விடலாம் என்று நினைத்தேன். ஆனால் அங்குள்ளவர்களை விசாரித்த போது, அந்த காலத்தில் ஆழ்வார்கள் பாடியபடி கோயில்களோ, விக்ரகங்களோ அங்கு கிடையாது என்று கூறினார்கள். எல்லாம் மரத்தால் செய்யப்பட்ட விக்ரகங்கள் என்றும் கூறினர். ஆகவேநான் அந்த மண்ணை தொட்டது ஒரு புண்ணியம் என்று கருதியதோடு, அந்த திசையை நோக்கி கும்பிட்டு விட்டு டெல்லி நோக்கி பயணமானேன்.

"திருவாய்மண் கோகுலம் நிற்கும் திசையை
அருள்வேண்டிக் கும்பிட்டேன் அன்று - தரிசிக்க
கண்ணன் குழலோசை காதினில் கேட்டுணர்ந்தேன்
மண்ணதைத் தொட்டு மகிழ்ந்து"

திவ்யதேசம் - 73



மூலவர் : கல்யாண நாராயணன்
துவாரகா தீசன்
நிற்கும் திருக்கோலம்
மேற்கு திருமுகம்

தாயார் : கல்யாண நாச்சியார்
லட்சுமி, ருக்மணி

தீர்த்தம் : கோமதீ நதி
சமுத்திர சங்கமம்

மங்களாசாசனம் :

பெரியாழ்வார் : 333, 398, 399, 415, 472
ஆண்டாள் : 507, 541, 574, 625
திருமங்கையாழ்வார் : 1504, 1524
திருமழிசையாழ்வார் : 2452
நம்மாழ்வார் : 3144

மொத்தம் : 13 பாசுரங்கள்

திருத்வாரகை
(துவரை - துவாராபதி)

"பதினாறா மாயிரவர் தேவிமார்
பணிசெய்யத் துவரை யென்னும்
மதில்நா யகராகி வீற்றிருக்க
மணவாளர் மன்னு கோயில்,
புதநாண் மலர்க்கமல மெம்பெருமாள்
பொன்வயிற்றில் பூவே போல்வான்
பொதுநா யகம்பாவித் திறுமாந்து
பொன்சாய்க்கும் புனல ரங்கமே"

என்று 415 ஆம் பாடலில் பெரியாழ்வாரும்,

"ஆவ லன்புடை யார்தம் மனத்தன்றி
மேவ லன்விரை சூழ்துவ ராபதிக்
காவ லன்,கன்று மேய்த்து விளையாடும்
கோவ லன்வரில் கூடிடு கூடலே"

என்று 541 ஆம் பாடலில் ஆண்டாளும்,

"சேயன் அணியன் சிறியன் மிகப்பெரியன்
ஆயன் துவரைக்கோ னாய்நின்ற - மாயன்அன்
றோதிய வாக்கதனைக் கல்லார் உலகத்தில்
ஏதிலராய் மெய்ஞ்ஞான மில்"

என்று 2452 ஆம் பாடலில் திருமழிசையாழ் வாரும்,

"அன்னையென் செய்யிலென ஊரென்
சொல்லிலென் தோழிமீர்
என்னை யினியுமக் காசை
யில்லை யகப்பட்டேன்
முன்னை யமரர் முதல்வன்
வண்துவ ராவதி
மன்னன், மணிவண் ணன்வாசு
தேவன் வலையுளே"

என்று 3144-ஆம் பாடலில் நம்மாழ்வாரும் பாடிக் களித்துள்ளார்கள்.

திருத்துவாரகை முக்தி தரும் ஏழு தலங்களில் ஒன்றாகும்.

சராசந்தன் மக்களுக்குத் தீமை செய்யாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, கிருஷ்ணர் சமுத்திர ராசனிடம் இடம் கேட்டு வாங்கி, விஸ்வகர்மாவைக் கொண்டு துவாரகையைப் படைத்ததாகக் கூறுவர். மோட்சத்திற்கு வழியாக, துவாரமாகயிருப்பதால் துவாரகை என்று காரணப் பெயர் ஏற்பட்டதாகும்.

பம்பாய், ஆமதாபாத், விராம்காம், ராஜ்கோட், ஜாம்நகர் வழியாக ஓகா துறைமுகம் செல்லும் ரயிலில் சென்றால், துறைமுகத்துக்கு 50 கி.மீ. தூரத்தில் துவாரகா ரயில் நிலையம் உள்ளது. அங்கிருநது 5 கி.மீ. தூரம் கோயிலாகும். வசதிகள் உண்டு. ஆமாதாபாத்திலிருந்து நேராக கோயிலுக்குப் பேருந்துகள் உண்டு.

ரயிவ் வழி என்றால், ஓகள துறைமுகம் பேட் துவாரகை, பிரபாச தீர்த்தம், வராவல் ரயில் நிலையம், கிரிணா ரயில் நிலையம், பாலா நிலையம் கிருஷ்ணர் கோயில் என்று வரும் என்பர்.

**"கல்யாண நாரணா காணேன் துவாரகை
சொல்வார்கள் முக்தி தலமென்று - நல்லதாய்
மோட்சம் கிடைத்திட நும்மைத் தொழுதிட
காட்சி கொடுத்திட வா!"**

திவ்யதேசம் - 74



திருச்சிங்க வேள்குன்றம்
(அகோபிலம்)

கீழ் அகோபிலம்

மூலவர் : பிரகலாதவரதன்
லட்சுமி நரசிம்மன்
வீற்றிருக்கும் திருக்கோலம்
கிழக்கு திருமுகம்

தாயார் : அமிர்தவல்லி
செஞ்சு லட்சுமி

தீர்த்தம் : இந்திர, நரசிம்ம, பாபநாச, கஜ
பார்க்கவ தீர்த்தங்கள்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1008-1017

மொத்தம் : 10 பாசுரங்கள்

கீழ் அகோபிலம்

"அங்கண் ஞால மஞ்ச அங்கோ
ராளிரி யாய், அவுணன்
பொங்க ஆகம வள்ளுகிரால்
போழ்ந்த புனிதனிடம்,
பைங்கணானைக் கொம்பு கொண்டு
பத்திமையால், அடிக்கீழ்ச்
செங்கணாளி யிட்டிறைஞ்சும்
சிங்கவேள் குன்றமே"

என்று 1008 ஆம் பாசுரத்தில் தொடங்குகிறார்.

இங்குதான் அகோபில நரசிம்மன், வராக நரசிம்மன், மாலோல நரசிம்மன், யோகாநந்த நரசிம்மன், பாவந நரசிம்மன், காரஞ்ச நரசிம்மன், சக்ரவட நரசிம்மன், பார்கவ நரசிம்மன், ஜவாலா நரசிம்மன் என்ற 9 நரசிம்மர்கள் கோயில் கொண்டிருப்பதால் இதற்கு நவநரசிம்ம சேத்ரம் என்று பெயராகும்.

மலைமீது பிரகலாத நரசிம்மர், வராக நரசிம்மர், உக்ர நரசிம்மர் சன்னதிகள் இருக்கிறது.

அகோபில மடத்தின் தலைமையிடமே இங்குதான் இருக்கிறது. இவ்வூரில் திருப்பதி தேவஸ்தானம் நடத்தும் விடுதியும், உணவகமும் இருக்கிறது. அஞ்சலகமும் உண்டு.

“செங்க ணாளி யிட்டிறைஞ்சும்
சிங்க வேள் குன்றுடைய
எங்க ளீச னெம்பிரானை
இருந்தமிழ் நூற்புலவன்
மங்கை யாளன் மன்னுதொல்சீர்
வண்டறை தார்க்கலியன்
செங்கை யாளன் செஞ்சொல்மாலை
வல்லவர் தீதலரே”

என்று 1017 ஆம் பத்தாம் பாசுரத்தில் முடிக்கிறார்.

திருமங்கையாழ்வார் என்ற இந்த தமிழ் நூற்புலவன் பாடிய இந்த பத்துப்பாசுரங்களைப் படிப்போர்க்கு தீங்கு வராது என்று கூறிமுடிக்கிறார்.

என்னைப் பொறுத்தவரை மொத்தமாக நாலாயிர திவ்யப் பிரபந்தம் பாடிய அத்தனை தமிழ்புலவர்களான ஆழ்வார்களின் பாசுரங்கள் அனைத்தையுமே படிப்பவர்கள் மோட்சம் பெறுவார்கள் என்பது எண்ணம்.

மேல் அகோபிலம்

மூலவர் : அகோபில நரசிம்மன்
தாயார் : லட்சுமி
தீர்த்தம் : பவநாசினி

சீதையைத் தேடிவரும் ராமன் இலட்சுமணனுடன் அகோபிலம் வந்து, லட்சுமி நரசிம்மனை 5-சுலோகங்களால் துதித்ததால் சீதை கிடைத்தாள் என்று கூறுவர்.

அகோபில மடத்தின் மூலவர் லட்சுமி நரசிம்மவராகவும், உத்சவர் சக்ரவர்த்தி திருமகனாகவும் அருள் செய்கிறார்கள். இந்த மூர்த்தி சுயம்பு வடிவானதாகும். நரசிம்மர் வேடுவனாக வந்து, செஞ்சு லட்சுமியை மணந்ததாகக் கூறுவர்.

மானோர் வேடுவர் குலமாதலால் இன்றும் மாசி மாதம் நடக்கும் பிரமோத்சவத்தின் போது நடக்கும் திருவிழாவில், கூத்தும், ஆட்டம் பாட்டங்களும், சீர்வரிசைகளும் நடைபெறுகின்றன. அதுமலை கருடாத்ரி, கருடாசலம், காருட சைலம் என்று அழைக்கப்படுகிறது.

பவநாசினி என்ற நீர் வீழ்ச்சியின் கரை வழியாக மலைமேல் ஏறிச்சென்று வராக நரசிம்மனைத் தரிசிக்கலாம்.

பிறகு இன்னும் மேலே சென்று 5 கி.மீ. தூரம் செங்குத்தான மலைமேல் உள்ள மேல் அகோபிலத்திலுள்ள சன்னதியில் மாலோல நரசிம்மனைத் தரிசிக்கலாம். இங்கிருந்து 5 கி.மீ. தூரத்தில் நரசிம்மன் வெளிப்பட்ட தூண் உள்ளது. இவ்விடத்திற்குத் துணையோடுதான் செல்ல வேண்டும்.

சவாலா நரசிம்மர் மற்றுமுள்ள எல்லா நரசிம்மர்களையும் தரிசிக்க செல்லும் வழிகள் கடினமானதாகும். அவர்களைத் தரிசிக்க தக்க துணையோடு தான் செல்ல வேண்டும்.

இது காட்டு மிருகங்கள் நடமாடும் பிரதேசமாகையால், நாம் காலையில் சென்று, பிற்பகலுக்குள் தரிசனங்களை முடிக்க வேண்டும்.

அகோபில மடத்து முதலாவது அழகிய சிங்கர், இந்த தலத்திற்கு வந்து, அகோபில மலையில் எழுந்தருளியிருக்கும் நரசிம்மனை தரிசித்த போது, பெருமாள் சத்யாகி உருவத்தில் வந்து, அருள் செய்து, பின்னர் அவருக்கு பிரேச மந்திரத்தை தானே உபதேசம் செய்தாராம்.

ஒருநாள் கருடன் கடுந்தவம் செய்து, பகவானிடம், "பகவானே! முன்பு தாங்கள் நின்ற நரசிம்ம அவதாரத்தை மீண்டும் இப்போது நான் விசுவரூபத்தில் காண வேண்டும் என்று வரம் கேட்டாராம். அதற்காக பகவான் காடுகள் நிறைந்த அகோபில மலையில் நரசிம்மராக அவதரித்து, ஹீரண்ய சம்ஹாரம் செய்தும், பிரகலாதனை காத்ததாகக் காட்டி, அர்ச்சா ரூபமாக ஒன்பது வித திருக்கோலமாகக் கோயில் கொண்டாராம்.

இங்கு கருடன் தவம் செய்தமையால், இந்த மலைக்கு கருடாத்ரி, கருடாசலம், காருஉசைலம் என்று பெயர் விளங்குவதாகப் புராண வரலாறு கூறுகிறது.

இங்கே பகவான் திருவைகுண்டத்தையும் மறந்து, இங்கேயே எழுந்தருளிவிட்டபடியால், மகாலட்சுமியும் செஞ்சுகுலத்தில் பிறந்து பகவானை மணந்ததாக தலவரலாறு கூறுகிறது.

இங்குள்ள அகோபில மடம் மிக பெரியதாகக் கட்டப்பட்டுள்ளது. ஆகவே இங்கே எவ்வளவு யாத்திரிகர்கள் வேண்டுமானாலும் வசதியாகத் தங்கலாம்.

கீழே அகாபிலம் ராஜகோபுரத்திற்கு எதிரில் 80 அடிக்கும் மேலாக உயரத்தில் ஒரே கல்லாலான தூண் இருக்கிறது. பூமிக்குக் கீழேயும் 30 அடி ஆழத்திற்கு புதைந்துள்ளது. இதை ஜய ஸ்தம்பம் என்று கூறுகிறார்கள்.

இந்த மலையில் ஒரு கபாலிகள், ஆதிசங்கர பகவத் பாதாளை கொலை செய்ய முயன்றபோது, நரசிம்மர் வந்து காப்பாற்றியதாக தல வரலாறு கூறுகிறது.

திருச்சிங்கவேள் குன்றம் செல்ல, சென்னை - மும்பை ரயில் பாதையிலுள்ள கடப்பா ரயில் நிலையத்தில் இறங்க வேண்டும்.

அங்கிருந்து பேருந்து நிலையம் 3 கி.மீ. தூரம் செல்ல வேண்டும்.

கடப்பா பேருந்து நிலையத்திலிருந்து 100 கி.மீ. மேல் அர்லகட்டா என்ற ஊரில் இறங்க வேண்டும்.

அங்கிருந்து அகோபிலம் செல்லும் பேருந்தில் ஏறிச்சென்றால் ஒரு மணி நேரத்தில் அகோபிலம் போய்ச்சேரலாம்.

"திருச்சிங்க குன்றம் அகோபிலம் தேசா
பிரகலாதா மேல்நர சிம்மா - வரம்கேட்க
காடு மிருகம் கடந்துவரக் கூடுமோ
பாடுவேன் நீயிங்கே வா!

திவ்யதேசம் - 75



திருவேங்கடம்
(திருப்பதி, திருமலை)



திருப்பதி வெங்கடாசலப் பெருமாள் மூன்று பிரிவாக இங்குள்ளார்.

முதற்பிரிவு

மூலவர் : கோவிந்தராசப் பெருமாள்

தாயார் : புண்டரீக வல்லி

இரண்டாம் பிரிவு - திருமலை

மூலவர் : திருவேங்கட முடையான்
சீனிவாசன்
பாலாஜி
வெங்கடாசலபதி

தீர்த்தம் : 14 தீர்த்தங்கள்
வைகுண்ட தீர்த்தம்
சக்ர தீர்த்தம், ஜாபாலி தீர்த்தம்,
வருண தீர்த்தம்
ஆகாசகங்கை
பாபிவிநாசம்
பாண்டவ தீர்த்தம்
குமாரதரை
இராமகிருஷ்ண தீர்த்தம்
தும்புரு தீர்த்தம்
சேஷ தீர்த்தம்
சுகஸ்தன தீர்த்தம்
யுத்தகள தீர்த்தம்
சிதம்பர தீர்த்தம்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1008-1017

மொத்தம் : 10 பாசுரங்கள்

இந்த திவ்யதேசத்தைப் பற்றி வரலாறும் தேவையில்லை, விளக்கமும் தேவையில்லை என்று நான் நினைக்கிறேன். நாடறிந்த பிராமணனுக்கு பூணூல் எதற்கு?

உலகத்திலேயே பணக்காரசாமி. ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாட்கள் காத்திருந்து போய் தரிசிக்க வேண்டிய சாமி. அவருடைய கருவறைக்கு போகப் போக போர்களம் போல அடிதடி கூட நேரிடும். அங்கே போனால் அந்த காவாளிகள் கழுத்தைப் பிடித்து தள்ளி தெலுங்கு மொழியில் 'போ, போ' என்று விரட்டும் அவமானக்கேடு. அந்த சீர்கேட்டையும் பொருட்படுத்தாமல் திருப்பதியானைத் தரிசித்தி வரும் பரிதாப நிலை. இருந்தாலும் இன்றும் கூட்டம் குறைந்த பாடில்லை.

என்ன ஒரு மாற்றம் என்றால், பணக்கார சாமி என்ற முதல் இடத்தில் இருந்த பாலாஜி, திருவனந்தபுரம் அனந்த பத்மநாபசாமி அந்தரங்க பொற்சுரங்கம் தோண்டி எடுக்கப்பட்ட பிறகு இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார் அவ்வளவுதான்.

இந்த கோயிலின் தரிசனத்தில் ஒரு சிறப்பு இருக்கிறது. இங்கே ஆதிவராக சன்னதி இருக்கிறது. சுவாமி புஷ்கரிணியில் வடமூலையில் இது இருக்கிறது. கோயிலில் படைக்கப்படும் பிரசாத உணவை முதலில் இந்த ஆதிவராகர் பெருமாளுக்கு படைத்த பிறகே சீனாவாச பெருமாளுக்குப் படைக்கப்படுகிறது.

இங்கு ஏழு பர்வதங்கள் உள்ளன. வெங்கடாத்ரி, சேஷாசலம், வேதசாலம், கருடாசலம், வருஷபாத்ரி, அஞ்சனாத்ரி, ஆனாந்தாத்ரி என்பன அவையாகும். இதன் மத்தியில் திருமலைக் கோயில் உள்ளது. ஆதிவராகனுக்கு படைப்பு படைத்து, அவரை தரிசனம் செய்த பிறகே சீனிவாச பெருமாளை தரிசிக்க வேண்டும்.

மூன்றாவது பிரிவு : திருச்சானூர் (அலர்மேல் மங்காபுரம்)

மூலவர் - தாயார் - அலர்மேல் மங்கை பத்மாவதி தாயார்

இந்தக் கோயில் சீனிவாசப் பெருமாள் உத்தரவுப்படி தொண்டமான் என்ற மன்னர் கட்டியதாக வரலாறு. அப்போது பெருமாள் ஆனந்தம் கொண்டு, ஆனந்த தாண்டவம் ஆடிதால், இதற்கு ஆனந்த விமானம் என்ற பெயரும் உண்டு.

தொண்டரடிப் பொடியாழ்வார், மதுரகவியாழ்வார் இருவரைத் தவிர, மற்ற பத்து ஆழ்வார்களும், மங்களாசாசனம் செய்த திவ்யதேசம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

மொத்தமாக பத்து ஆழ்வார்களும் 202 பாசுரங்கள் பாடியுள்ளார்கள்.

"சுற்று மொளிவட்டம் சூழ்ந்து
சோதி பரந்தெங்கும்
எத்தனை செய்யிலும் என்ம
கன்முகம் நேரொவ்வாய்
வித்தகன் வேங்கட வானன்
உன்னை விளிக்கின்ற
கைத்தலம் நோவாமே அம்பு
லீகடி தோடிவா" (52)



என்று பெரியாழ்வார் திருமொழியில் கூறுவார்.



"நாகத்தி னணையானை
நன்னுதலாள் நயந்துரைசெய்
மேகத்தை வேங்கடக்கோன்
விடுதூதில் விண்ணப்பம்
போகத்தில் வழுவாத
புதுவையர்கோன் கோதைதமிழ்,
ஆகத்துவைத்துரைப்பார்
அவரடியா ராகுவரே" (586)

என்று ஆண்டாள் பாடுவார்.

"செடியாய வல்வினைகள்
தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா!
நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரு
மரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன்
பவளவாய் காண்பேனே" (685)

மன்னியதண் சாரல் வடவேங் கடத்தான்றன்
பொன்னியலும் சேவடிகள் காண்பான் புரிந்திறைஞ்சி
கொன்னுவிலும் கூர்வேல் குலசே கரன்சொன்ன
பன்னியநூல் தமிழ்வல்லார் பாங்காய பக்தர்களே" (687)

என்று குலசேகராழ்வார் பாடுவார்.

"வேங்கடமே விண்ணோர் தொழுவதும் மெய்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும் - வேங்கடமே
தானவரை வீழ்த்தன் னாழிப் படைதொட்டு
வானவரைக் காப்பான் மலை! (2429)

என்று திருமழிசையாழ்வார் பாடுவார்.

"அமல னாதிபிரா னடியார்க்
கென்னை யாட்படுத்த
விமலன் விண்ணவர் கோன்விரை
யார்பொழில் வேங்கடவன்,
நிமலன் நின்மலன் நீதி வானவன்
நீள்மதி ளரங்கத் தம்மான், திருக்
கமல பாதம்வந் தென்கண்ணி
னுள்ளன வொக்கின்றதே" (927)

என்று திருப்பாணாழ்வார் பாடுவார்.

"மின்னு மாமுகில் மேவு தண்திரு
வேங்க டமலை கோயில் மேவிய
அன்னமாய் நிகழ்ந்த அமரர் பெருமானை
கன்னி மாமதிள் மங்கை யர்கலி
கன்றி யின்தமி ழாலு ரைத்த,இம்
மன்னு பாடவல் லார்க்கிட மாகும் வானுலகே" (1057)

என்று திருமங்கையாழ்வார் பாடுவார்.

"உளன்கண்டாய் நன்னெஞ்சே! உத்தமன் என்றும்
உளன்கண்டாய், உள்ளுவா ருள்ளத் - துளன்கண்டாய்
வெள்ளத்தி னுள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தி னுள்ளானென் றோர்" (2180)


என்று பொய்கையாழ்வார் பாடுவார்.

"யானே தவம்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான் - யானே
இருந்தமிழ்நன் மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது. (2255)



"பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருக ணிளமூங்கில் வாங்கி - அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங் கடம்கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை" (2256)

என்று பூதத்தாழ்வார் பாடுவார்.



"இறையாய் நிலனாகி எண்டிசையும் தானாய்
மறையாய் மறைபொருளாய் வானாய் - பிறைவாய்ந்த
வெள்ளத் தருவி விளக்கொலிநீர் வேங்கடத்தான்
உள்ளத்தி னுள்ளே உளன்" (2320)

என்று பேயாழ்வார் பாடுவார்.

"போகின்ற காலங்கள் போய காலங்கள்
போகு காலங்கள், தாய்தந் தையுயிர்
ஆகின்றாய்! உன்னைநான்
அடைந்தேன் விடுவேனோ,
பாகின்ற தொல்புகழ் மூவுலகுக்கும்
நாதனே! பரமா, தண்வேங்கடம்
மேகின்றாய்! தண்டுழாய்
விரைநாலு கண்ணியனே!" (2849)

என்று நம்மாழ்வார் பாடுவார்.

பொதுவாய் பன்னிரு ஆழ்வார்கள் பாடிய நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாடல்களில் தமிழ் மொழியின் மேன்மை விளங்கி வருவதைக் காணலாம்.

ஆனால் இந்த தமிழ்ப்பாடிய ஆழ்வார்களும், நாயன்மார்களும், சித்தர்களும், அடியார்களும் உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு போன்றவற்றில் காணால் போவதில் தான் வேதனை தருகிறது.

நான் திருப்பதிக்கு நான்கு அல்லது ஐந்து முறை போயிருக்கிறேன். அதில் மூன்று முறை சென்றது முக்கியமானதாகும்.

ஒருமுறை சென்னை ஸ்ரீதரனோடு விடிய விடிய காத்திருந்து போனது முக்கியமானது. அதற்குமுன் ஒருமுறை இயக்குனர் பாக்யராஜ் நடித்து இயக்கிய, 'இன்றுபோய் நாளை வா' பட வெளியீட்டுக்கு முன், அப்பெட்டியை பூஜை செய்ய எடுத்துப் போனது. பிறகு மனைவி, மகன், மருமகளோடு சென்று, திருப்பதி வெங்கடேசப் பெருமாளைத் தரிசிக்காமல், சித்தரவதைப்பட்டு வந்தது என்பதாகும். அப்போது நாங்க சென்ற போது, ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டி அவர்கள் ஹெலிகாப்டம் விபத்தில் இறந்து போனது அதற்குக் காரணமாகும்.

"திருப்பதி சென்றேன் திருவடி பற்ற
திருப்தி, திருப்தியாயு மில்லை - இருப்பின்
திருப்பதி யானே திருப்புகழ் செய்தேன்
திருப்பொருள் செய்வாய் நிறைத்து"

மலைநாட்டுத் திவ்ய தேசங்கள் - 13

1. திருநாவாய்
2. திருவத்துவக்கோடு
3. திருவனந்தபுரம்
4. திருவட்டாறு
5. திருவண்பரிசாரம்
6. திருவல்லவாழ்
7. திருகடித்தானம்
8. திருசெங்குன்னூர்
9. திருப்புலியூர்
10. திருவாறன்விளை
11. திருவள்ளூர்
12. திருகாட்கரை
13. திருமூழிக்களம்

மலைநாட்டுத் திருப்பதிகள் 13 உள்ளன. இந்த கோயில்களின் அமைப்புகள் தமிழ்நாட்டுக் கோயில்கள் போல் இல்லாமல் வீட்டு அமைப்பு போல ஓடுகள் போடப்பட்டு காட்சியளிக்கின்றன. ஆனால் கடுமையான கட்டுப்பாடுகளோடு விதிமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன.

என்னதான் தமிழ்நாடு அதிகமான திருத்தலங்களைப் பெற்றிருந்தாலும் கோயிலுகளுக்குண்டான வழிமுறைகளை பெரும்பாலும் யாரும் கடைபிடிப்பதில்லை. கோயில்கள் சுத்தமாக வைத்துக் கொள்ளப்படுவதில்லை. சோறு கண்ட இடம் சொர்க்கம் என்பது போல நாம் கோயிலுக்குள்ளே உட்கார்ந்து கொண்டே கட்டிச் சோறின் கட்டவிழ்த்து கோயிலை கெட்டுப்போகச் செய்கிறோம். மூலவிக்ரம் தெரியுமளவுக்கு இருபுறமும் ஒதுங்கி நின்று சாமி கும்பிட வேண்டும். ஆனால் சிலபேர் மற்றவர்களைப் பற்றி கவலைப்படாமல் நடுவில் போய் நின்று கொண்டு சாமி கும்பிடுவான். கோயிலில் எல்லோரும் சமம் என்ற கோட்பாடு பின்பற்றப்படுவதில்லை. யாராவது முக்கிய பிரமுகர்கள் வந்து விட்டால், அர்ச்சகர்களுக்கு அவர்களைத் தவிர வேறு யாரும் தெரியமாட்டார்கள். அர்ச்சனை செய்யும் போது பார்த்தால் மனிதர் யாருக்கும் பொது உணர்வு கிடையாது என்பது புலப்படும். சாமி கும்பிட எல்லோரும் காத்திருப்பார்கள். அர்ச்சனை செய்வோர் ஐந்து நிமிடம், பத்து நிமிடத்திற்கு தன் குடும்பத்திலுள்ள உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாது இருசக்கரம், மூன்று சக்கரம், நான்கு சக்கரம் வளர்க்கப்படுகின்ற ஆடு, மாடு, நாய் எல்லாவற்றிற்கும் பெயர் நாள், கிழமை, ராசி, நட்சத்திரம் என்று எல்லாவற்றையும் கூறி தீபாரதனை ஏற்றி சாமி கும்பிடுவார்கள். ஒரு ஆள்கூட மக்கள் நலமாக, நாடு நலமாக, நாம் நலமாக என்று அர்ச்சனை செய்து பூஜை செய்வதில்லை.

இப்படி நமது வழிபாட்டுத் தலங்களில் நடக்கும் சுயநலக் கூத்துக்களைக் கூறிக் கொண்டே போகலாம்.



ஆனால் மலையாள நாட்டின் வழிபாடுகள் நம்மை விட்டு மாறுபடுகிறது. முதலில் அங்கு கட்டுப்பாடுகள் அதிகம். கெட்ட செயல்பாடு என்றால் தீண்டாமை நோக்கமும் உண்டு. மாபெரும் இசை மேதை யேசுதாஸ் அவர்களையே குருவாயூர் கோயிலுக்குள் அனுமதிக்க மறுத்தார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். கேரள கோயில்களில் அது எந்த கோயில்களாக இருந்தாலும், பெரும்பாலும் பிராமணர்களே பூஜை செய்கிறார்கள். தினந்தோறும் அபிடேகமும், பிரகாரம் ஊர்வலமும் செய்வார்கள். பிரசாதமாக, பூ, சந்தனம், துளசி போன்றவைகளைக் கொடுக்கும் போது, தீட்டுப்பட்டுவிடும் என்பது போல கையில் படாமலிருக்க தூக்கிப் போடுவார்கள். கொடுக்கமாட்டார்கள். தாயார் சன்னதிகள் அங்கே தனியாகக் கிடையாது. பெருமாள் சன்னதிகளில் விபூதி கூட தருவார்கள். மலையாளப் பிராமணர்கள் பூஜை செய்யும் போது, குளித்துவிட்டு ஈரத் துணியுடன் தான் செய்கிறார்கள்.

கர்ப்பகிருகத்தின் ஒரு குறிப்பிட்ட இடத்தை தாண்டி யாரும் உள்ளே செல்லக்கூடாது. சட்டையணிந்து கொண்டு யாரும் கோயிலுக்குள் செல்லக் கூடாது. வெறும் வேட்டி கட்டிக் கொண்டுதான் செல்ல வேண்டும். குடியரசுத் தலைவராக இருந்தாலும் சரி, குடியானவராக இருந்தாலும் சரி, வேறுபாடின்றி வேட்டி துண்டோடுதான் கோயிலுக்குள் அனுமதிக்கப்படுவர். கையில் மூட்டை முடிச்சுகள் எடுத்துச் செல்லக் கூடாது. அப்படி எடுத்துச் சென்றால், அவற்றை வாயிற் காப்போனிடம் கொடுத்துச் செல்ல வேண்டும். அதற்குக் கட்டணம் கிடையாது. பொதுவாக கேரளக் கோயில்களில் தூய்மையும், அமைதியும், ஒழுக்கமும் நிறைந்து காணப்படும். அவர்கள் மனம் ஒன்றி, உணர்வோடு சாமி தரிசனம் செய்வார்கள். இதையெல்லாம் மனதிற் கொண்டே, நான் எனது மலைநாட்டுத் திருப்பதிகள் பயணத்தைத் தொடங்கினேன்.

திவ்யதேசம் - 76



மூலவர் : நாவாய் முகுந்தன் நாராயணன்

தாயார் : மலர்மங்கை நாச்சியார்


தீர்த்தம் : செங்கமல சரஸ்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1520, 1856
நம்மாழ்வார் : 3634 - 44

மொத்தம் : 13 பாசுரங்கள்

திருநாவாய்



"மணாளன் மலர்மங் கைக்கும்மண மடந்தைக்கும்
கண்ணாளன் உலகத் துயிர்தேவர் கட்கெல்லாம்
விண்ணாளன் விரும்பி யுறையும் திருநாவாய்
கண்ணாரக் களிக்கின்ற திங்கென்று கொல்கண்டே?"

என்று நாலாயிர திவ்யப் பிரபந்தம் 3638 ஆம் பாடலில் நம்மாழ்வார் இத்திருத்தலம் பற்றிப் பாடுவார்.



இந்தக் கோயில் பாரதப்புழை ஆற்றை ஒட்டியுள்ளது. எதிர்க்கரையில் சிவனுக்கும் பிரம்மாவுக்கும் கோயில்கள் உள்ளது. இதை காசிக்குச் சமமாக எண்ணி சடங்குகள் செய்கிறார்கள். இந்த இடத்தில் 9 யோகிகள் யாகம் செய்தார்கள் என்று கூறுவர். அதனால் இதற்கு திருநவயோகி என்ற பெயர் ஏற்பட்டது. அதுவே பின்பு மருவி திருநாவாய் என்று ஆனது.

ஒரு காலத்தில், லட்சுமியும், கசேந்திரனும் பாரதப்புழை ஆற்றில் தாமரைப் பூவைப் பறித்து நாராயணனுக்கு அர்ச்சனை செய்யச் சென்றனர். ஆனால் கசேந்திரனுக்கு பூ கிடைக்கவில்லை. அதனால் கசேந்திரன் தமக்குத் தாமரைப்பூ கிடைக்கவில்லையென்று நாவாய் முகந்தனிடம் முறையிட்டது. அதைக்கேட்ட நாராயணன், இனிமே பூப்பறிக்க போக வேண்டாம் என்று லட்சுமியிடம் கூறியதோடு அவரை தம்முடனேயே சிம்மாசனத்தில் இருத்திக் கொண்டு, கசேந்திரர் பூஜையை ஏற்றுக் கொண்டார் என்று கூறுவர்.

கேரள நாட்டில் இந்த ஒரு இடத்தில் தான் லட்சுமிக்கு கோயில் உண்டு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திவ்யதேசம் - 77



மூலவர் : உய்யவந்த பெருமாள்

தாயார் : வித்துவக்கோட்டுவல்லி

தீர்த்தம் : சக்ர தீர்த்தம்

மங்களாசாசனம் :

குலசேகராழ்வார் : 688-97

மொத்தம் : 10 பாசுரங்கள்

திருவித்துக்கோடு

"மீன்நோக்கும் நீள்வயல்சூழ்
விற்றுவக் கோட் டம்மா, என் -
பால்நோக்கா யாகிலுமுன்
பற்றல்லால் பற்றில்லேன்
தான்நோக்கா தெத்துயரம்
செய்திடினும், தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும்
குடிபோன்றி ருந்தேனே"



என்று இந்த திவ்யதேசத்தை 690 ஆம் பாடலில் குலசேகராழ்வார் பாடுவார்.

பாரதப்புழை ஆற்றின் ஓரத்தில் தென்புறத்தில் இந்த கோயில் உள்ளது. சிறிய கோயில்தான். தலைகுனிந்து தான் கோயிலுக்குள் செல்ல வேண்டும். இந்த கோயிலில் முதலில் சிவன் சன்னதியும், அதற்குப் பின்னால் உய்யவந்த பெருமாள் கோயிலும் உள்ளது. பகவான் இங்கு நான்கு வடிவில் உள்ளார். நடுவில் இருக்கும் மூர்த்தியை தர்மபுத்திரரும், மேற்கில் இருக்கும் மூர்த்தியை அர்ஜுனனும், இடப்புறத்திலுள்ள மூர்த்தியை பீமசேனனும், வலப்புறத்திலுள்ள மூர்த்தியை நகுலனும், சகாதவேனும் வழிபட்டனர் என்று கூறுவர். பஞ்சபாண்டவர் ஐந்து பேரும் சேர்ந்து பூஸித்த கோயில் இதுவாகும்.

இரயிலிலோ, பேருந்திலோ பட்டாபி சென்று அங்கிருந்து ஆட்டோ மூலம் இந்த கோயிலுக்குச் செல்வது நல்லது. பேருந்து வசதி குறைவுதான். அப்படியிருந்தும் இந்த ஊர் சாலையிலிருந்து உள்ளே 2 கி.மீ. நடந்து செல்ல வேண்டும்.




"திருவித்தக் கோடிங்கு பாரத ஆற்றில்
பெருமாள் உய்யவந்தான் நின்றார் - அருமை
வயல்சூழ்ந்த காட்சி வளமையான ஆட்சி
வியந்திட வந்தார் விரைந்து"

இந்தக் கோயிலுக்கு நான் என் நண்பர் தண்டபாணியுடன் கோவையிலிருந்து பாலக்காடு சென்று அங்கிருந்து குலப்புள்ளே என்று ஊருக்குச் சென்று, அங்கிருந்து பட்டாம்பி சென்று, பிறகு அங்கிருந்து ஆட்டோவில் சென்றோம்.

வழியும், மொழியும் தெரியாது திகைத்துச் சென்ற எங்களுக்கு அங்கே உய்யவந்த பெருமாள் நவ்ஜித் என்ற கோவை ஆட்டோக்கார இளைஞர் உருவில் வந்து வழிகாட்டிச் சென்றது அதிசய நிகழ்வாகும்.

திவ்யதேசம் - 78



மூலவர் : காட்கரையப்பன் (வாமனன்)
நிற்கும் திருக்கோலம்
தெற்குத் திருமுகம்

தாயார் : பெருஞ்செல்வநாயகி

தீர்த்தம் : கபில தீர்த்தம்

மங்களாசாசனம் :

நம்மாழ்வார் : 3612 - 22

மொத்தம் : 11 பாசுரங்கள்

திருக்காட்கரை

"திருவருள் செய்பவன் போலவென் னுள்புகுந்து
உருவமும் ஆருயிரும் உடனே யுண்டான்
திருவளர் சோலைத்தென் காட்கரை யென்னப்பன்
கருவளர் மேனிஎன் கண்ணன்கள் வங்களே"

என்று நம்மாழ்வார் 3616 ஆம் பாடலில் பாடுவார்.



ஓணம் திருநாளன்று இங்கே பெரிய உத்சவம் நடக்கிறது. இங்கே வாழைத் தோட்டத்துக்குச் சொந்தக்காரன் ஒருவன், தன் தோட்டத்தில் வாழைகளை நட்டுவித்தான். ஆனால் தக்க பருவத்தில் அவைகள் குலை தள்ளாமல் அப்படியே வறண்டு போயின. அதனால் மிகவும் வருத்தமுற்ற தோட்டக்காரன் தங்கத்தால் வாழைக்குலை செய்து, திருகாட்கரையப்பனுக்கு சமர்ப்பணம் செய்தான்.

அதன்பிறகு திருகாட்கரையப்பன் அருளால் வாழைத் தோட்டத்தில் வாழை மரங்கள் வளர்ந்து, செழித்து, வாழைக்குலைகள் இட்டதாம். அவையே நேந்திர வாழை என்று மிகவும் பெயர் பெற்றது.

திருக்காட்கரையப்பன் பொன் வாழை ஒருநாள் காணாமல் போயிற்று. அரசன் அப்பாவியான ஒரு யோகியை தீரவிசாரிக்காமல் தண்டித்து விட்டான். ஆனால் பிறகு பார்த்தால் அந்த பொன் வாழை திருக்காட்கரையப்பன் கர்ப்ப கிரகத்துக்குள்ளேயே இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. ஆனால் தண்டனை பெற்ற அப்பாவி யோகி அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து இறந்து போனான்.



அவன் இறப்பதற்கு முன்னால் சாபம் விட்டு செத்து போனான். அந்த சாபம் நீங்க மக்கள் யோகி சொல்லியபடி, மூங்கில் கோரை ஏற்படுத்திக் கொண்டு, கோரைக் கொள்ளியை வெளிச்சத்திற்கு கொண்டு சாபத்தை நீங்கக் கொண்டார்கள் என்று கூறுவர்.

திருகாட்கரை ஆலவாய் - திருச்சூர் ரயில் மார்க்கத்தில் இருஞாலக்கொடி நிலையத்திலிருந்தும் அங்காலி நிலையாத்திலிருந்தும் வடகிழக்கே சுமார் 20 கி.மீ. தூரத்தில் உள்ளது. ஆலவாய் போகும் பாதையில் 10 கி.மீ. தூரம் சென்று அங்கிருந்து வேறு வழியிலும் செல்லலாம். இந்த தலத்தில் வசதிகள் இல்லை.

"ஆருயிர் பட்ட தெனதுயிர் பட்டது
பேரிதழத் தாமரைக் கண்கனிவாய தோர்
காரெழில் மேகத்தென் காட்கரைக் கோயில்கொள்
சீரெழில் நால்நடந் தோள்தெய்வ வாரிக்கே"

என்று நம்மாழ்வார் பாடிய 3620-ஆம் பாசுரம் கூறும்.

"என் உயிர் பட்டபாடு யாருயிர் பட்டது" என்பது அதன் பொருளாகும்.

உண்மையிலேயே மலையாள தேசத்திலுள்ள திவ்ய தேசங்களைச் சென்று பார்த்து தரிசித்து வருவதென்பது உயிர்கள் விட்டு விட்டுப் போய் வரும் தான். இந்தக் கோயிலைப் பார்ப்பதற்கு நான் பட்ட பாடும் அப்படித்தான்.



**"திருகாட் கரையப்பன் செய்த அருளால்
திருமுகம் கண்டேன் திசையில் - பெருமாளால்
பொன்வாழை நேந்திர பூவாழை யானது
என்றொரு சொல்லுண்டு இங்கு"**

**"திருகாட் கரையப்ப னார்விழா ஓணம்
திருநாளில் உற்சவம் இந்நாள் - ஒரு காலம்
தங்கவாழை தன்னைத்தான் தானம் அடைந்திட்டேன்
செங்கனியால் செய்தான் செழிப்பு"**

திவ்யதேசம் - 79



மூலவர் : திருமூழிக்களத்தான்
அப்பன் (லட்சுமணன்)
நிற்கும் திருக்கோலம்
கிழக்குத் திருமுகம்

தாயார் : மதுரவேணி நாச்சியார்

தீர்த்தம் : பெங்குளம்
சங்க தீர்த்தம், சிற்றாறு

<u>மங்களாசாசனம் :</u>

திருமங்கையாழ்வார் : 1553, 2061, 2674(129)

நம்மாழ்வார் : 3623-33

மொத்தம் : 14 பாசுரங்கள்

திருமூழிக்களம்
(மூழிக்களம்)

"பொன்னானாய்! பொழிலோடும் காவல் பூண்ட
புகழானாய்! இகழ்வாய தொண்ட னேன்நான்
என்னானாய்? என்னானாய்? என்னல் அல்லால்
என்னறிவ னேழையேன், உலக மேத்தும்
தென்னனாய் வடவனனாய் குடபா லானாய்
குலபால தாயினாய் இமையோர்க் கென்றும்
முன்னனாய்! பின்னனார் வணங்கும் சோதி
திருமூழிக் களத்தானாய் முதலா னாயே!

என்று 2061 ஆம் பாடலில் திருமங்கையாழ்வார் பாடுவார்.

"திருமேனி யடிகளுக்குத்
தீவினையேன் விடுதூதாய்
திருமூழிக் களமென்னும்
செழுநகர்வாய் அணிமுகில்காள்,
திருமேனி யவட்கருளீர்
என்றக்கால், உம்மைத்தன்
திருமேனி யொளியகற்றித்
தெளிவி சும்பு கடியுமே?"



என்று நம்மாழ்வாரும் 3626 ஆம் பாடலில் பாடுவார்.

"பனியேய் பரங்குன்றின் பவளத் திரளே
முனியே திருமூழிக் களத்து விளக்கே,
இனியாய்! தொண்டரோம் பருகின் னமுதாய
கனியே, உனைக்கண்டு கொண்டுய்ந் தொழிந்தேனே"

என்று திருமங்கையாழ்வார் 1553-ஆம் பாசுரத்தில் பாடுவார்.

உண்மையிலே இந்த திருமூழிக் களத்தானை கண்டு களிக்க நானும் பட்டொழிந்தேன் என்று கூறலாம்.

"ஒழிவின்றித் திருமூழிக்
களத்துறையும் ஒண்சுடரை,
ஒழிவில்லா அணிமழலைக்
கிரிமொழியாள் அலற்றியசொல்,
வழுவில்லா வண்குருகூர்ச்
சடகோபன் வாய்ந்துரைத்த
அழிவில்லா ஆயிரத்திப்
பத்தும்நோய் அவனுக்குமே"

என்று 3633-ஆம் பாசுரத்தில் நம்மாழ்வார் பாடுவார்.

எனக்கென்னவோ இந்தப் பெருமாளைப் பார்க்கப் போனபோது, நோய் வந்து, பிறகு இவரைப் பார்த்ததும் நோய் தீர்ந்து போனது என்று கூறலாம்.

நான் ஏற்கனவே மலையாள திவ்ய தேசத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளேன். இருந்தாலும் மீண்டும் நினைவு படுத்துகிறேன். மலையாளத்திலுள்ள மொத்தம் திவ்ய தேசங்கள் 13 ஆகும். இவற்றை நாம் நான்கு பிரிவாகப் பிரித்து சென்று தரிசிப்பது நல்லது.

ஒன்று, பாலக்காடு பக்கமுள்ள திருநாவாய், திருவித்துக்கோடு ஆகியவை.

இரண்டாவது, எர்ணாகுளம் - திருச்சூர் பக்கமுள்ள திருகாட்கரை, திருமூழிக்களம்.

மூன்றாவது, ஆலப்புழைப் பக்கமுள்ள திருவல்லவாழ், திருக்கடித்தானம், திருவண்வண்டூர், திருச்செங்குன்றூர், திருக்கடித்தானம், திருவாறன்விளை, திருப்புலியூர் ஆகியன.

நான்காவது திருவனந்தபுரம், திருவட்டாறு, திருவண்பரிசாரம் ஆகியவையாகும்.

நான் கடைசியாகத்தான் எர்ணாகுளம் இரண்டு திவ்ய தேசங்களைத் தரிசித்தேன். அங்கு செல்ல முதலிலேயே பெங்களூர் - கன்யாகுமரி துரித ரயில் வண்டியில் முன்பதிவு செய்து கொண்டேன்.

அதன்படி அதிகாலை 5.30க்குப் புறப்பட்டு எர்ணாகுளம் டவுன் சந்திப்பில் இறங்கினோம். என்னுடன் எனது நண்பர் வங்கி மேலாளராகப் பணி புரிந்த வெள்ளிங்கிரி வந்தார். அங்கிருந்து பேருந்து மூலம் செல்ல முடியாது என்பதால் ஆட்டோ அல்லது வாடகைக்கார் மூலம் செல்ல முடிவு செய்து, ரயில் நிலையத்தில் இறங்கினோம். நமக்கு தகுந்த ஆட்டோவில் செல்ல முடிவு செய்த போது, அது தப்பாகிப் போனது. கேரளாவில் ஆட்டோவில் செல்ல வரிசையாக நின்று, வெளியேயுள்ள ஓரிடத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறுபதிவு அறையில் எங்கே செல்கிறோம் என்று கூறி ஒரு ரூபாய் கொடுத்து பதிவு செய்ய வேண்டும். அவர்கள் அந்த பதிவு ரசீதில் வாடகைத் தொகையை குறித்து நம்மிடம் தருவார்கள். அப்போது அங்கே ஆட்டோக்கள் வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாக ஒழுங்காக வரும். நாம் அந்த வரிசைப்படி வரும் ஆட்டோவில் மட்டும்தான் ஏறி உட்கார்ந்து போக முடியும்.

இது அதிசயமாக இருக்கிறதா? சொல்வதெல்லாம் உண்மை. சத்தியம். நமது கோவையில் இப்படி நடப்பதுண்டா? எந்த ஆட்டோக்காரராவது பக்கத்து புலியகுளம், ரேஸ்கோர்ஸுக்கு உடனே வருவார்களா? மீட்டர் போட்டு அளவான வாடகை வாங்குவார்களா? கேரளாவில் இந்த அதிசயம் நடக்கிறது.

அதன்படி நாங்கள் ஒரு ஆட்டோவில் பதிவு சீட்டை கொடுத்து ஏறினோம். நான் "திருகாட்கரை சென்று விட்டு, திருமூழிக் களம் செல்ல வேண்டும்" என்றேன். அதற்கு அந்த ஆட்டோக்காரன் அதற்கு தனியாக வாடகை கொடுக்க வேண்டும் என்று ஆட்டோவை ஓட்டினார்.

இதற்கிடையில் எனது நண்பன் வெள்ளிங்கிரி பேண்ட் - சட்டையோடு வந்திருந்தார். கேரளாவில் சட்டையோடு கோயிலுக்குள் போகக் கூடாது விடமாட்டார்கள். ஆகவே "வேட்டி துண்டு வாங்க வேண்டும்" என்றார்.

அதற்காக நான் ஆட்டோக்காரர் முதுகைத் தொட்டு, 'வழியில் நிறுத்தும் வேட்டி வாங்க வேண்டும்" என்று கூற இரண்டு விதங்களில் அவன் என்னை வெறுப்படையச் செய்தான். ஒன்று மொழிப் பிரச்:னை. அவனுக்கு தமிழ் தெரியவில்லை. எனக்கு மலையாளம் தெரியவில்லை. ஆங்கிலம், இந்தி, மலையாளம் போன்ற வேறு மொழிகள் தெரியாவிட்டால் என்ன கஷ்டம் என்பது இந்த மாதிரி வெளி மாநிலங்களுக்குப் போய் பார்த்தால்தான் தெரியம். தவளை கூப்பாடு போடக் கூடாது. வேற்று மொழிகளையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அந்த ஆட்டோக்காரன் உடனே என் கையை தட்டிவிட்டு, தொடாதே என்று கூறி, நிற்காமல் சென்று பிறகு ஒரு துணிக்கடை முன் சென்று நிறுத்தினான்.

கேரளாவில் கோயில்களிலும், இதுபோன்ற மற்ற மாநிலத்தவர்கள் செல்லும் போதும் தீண்டாமை பெரும் நோய் தலை விரித்தாடுகிறது என்பதை தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

முதலில் நாங்கள் திருக்காட்கரை கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்தோம். நாங்கள் தரிசனம் செய்தவுடனேயே கோயில் கதவை மூடி விட்டார்கள். அப்போது மணி காலை 11.30 இருக்கும். பிறகு நான் கோயிலை ஒளிப்படம் பிடித்துக் கொண்டேன்.

அதன்பிறகு நாங்கள் திருமூழிக்களம் கோயில் செல்ல வேண்டும். அங்கிருந்து ஒரு பூசைப் பொருட்கள் விற்கும் கடைக்காரரிடம் கேட்ட போது, அவர் அந்தக் கோயில் இந்தக் கோயிலிலிருந்து சுமார் 30 கிலோமீட்டருக்கு மேலிருக்கும் என்று கூறினார். எனக்கு தூக்கி வாரிப்போட்டது. மொழிப் பிரச்:னை, வழி தெரியா பிரச்சனை என எனக்கு குழப்பம் ஏற்பட்டது. வந்த ஆட்டோவில் சென்றால் வாடகை அதிகம் கொடுக்க வேண்டும். தவிர எனக்கு அந்த மொழி தெரியா ஆட்டோக்காரனின் செயலும், பேச்சும் பிடிக்கவில்லை. கொஞ்சம் யோசனை செய்தேன். அவனை விட்டால் வழியும் இல்லையெனத் தெரிந்தது. "எப்படியும் கோயிலைப் பார்த்தே ஆக வேண்டும் செலவானாலும் பரவாயில்லை" என்று முடிவு செய்து விட்டு, ஆட்டோக்காரனிடம் அங்கு போகலாம் என அரைகுறை மொழியில் பேசிப் புறப்பட்டோம்.

ஆட்டோ கொச்சி, ஆல்வாய் என நீண்ட தூரம் சென்று கொண்டிருந்தது. எனக்கு இன்னொரு சந்தேகம் எழுந்தது. இந்த ஆட்டோக்காரன் திருமூழிக்களம் கோயிலுக்குத்தான் செல்கிறானா அல்லது மாறிப் போகிறானா? அவனுக்கும் கோயில் வழி தெரியாமல்தான் இருந்தது. அவனிடம் யாரிடமாவது வழி கேட்கச் சொன்னேன். அவன் போய்க் கொண்டிருந்தான். ஒரு இடத்தில் ஒரு பெயர்ப் பலகையில் திருமூழிக்களம் கோயில் பெயர் போட்ட அம்பு குறி இட்டிருந்தார்கள். எனக்கு அப்பாடா என்று நிம்மதி வந்தது. அதில் 7.5 கி.மீ. என்று தூரமும் எழுதப்பட்டிருந்தது. இப்போது ஆட்டோக்காரன் இன்னொரு ஆட்டோக்காரனிடம் மலையாளத்தில் வழிகேட்டான். அவன் கையை நீட்டிக் கூறினான். எங்கள் ஆட்டோக்காரன் இடது பக்கம் திரும்பி ஆட்டோவை ஓட்டினான்.

ஆனால் ஆட்டோ போய்க் கொண்டேயிருந்தது. ஆமாம். ஆட்டோ இப்போது 10 கி.மீ. தூரத்திற்கும் மேலாக வழிமாறிச் சென்று கொண்டிருந்தது. கோயிலுக்குச் சென்று கொண்டிருந்ததால் நான் அவனிடம் சண்டை போட விரும்பவில்லை. பிறகு அவனிடம் மீண்டும் வழிகேட்க சொன்னோம். அவன் ஒரு பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த இரண்டு பெண்களிடம் வழி கேட்டான். அவர்கள் வழிமாறி வந்து விட்டதாகக் கூறி, வேறு வழித்தடம் கூறினர். எப்படியோ வண்டி பத்து பதினைந்து கிலோமீட்டர் தூரம் அதிகமாக, வாஸ்கோடகாமா மலையாள கடற்கரையை கண்டு பிடித்தது போல, நாங்கள் திருமூழிக்களத்தை தொட்டோம். அங்கே கோயிலை கேட்டோம். அது பக்கத்திலேயே இருந்தது. ஆனால் நடை சாத்தியிருந்தது. கேரளாவில் 12 மணிக்கு நடையை அடைத்து விடுவார்கள்.

நான் ஆட்டோவை விட்டு இறங்கி கோயில் வாசல் சென்று கும்பிட்டு விட்டு, கோயிலை படம் பிடித்தேன். ஆனாலும் எனக்கு சந்தேகம் பக்கத்தில் விசாரித்த போது வந்த கோயில் அதுதான் என்று உறுதியானது.

எனக்கு ஆட்டோக்காரன் மேல் கோபம் என்றாலும், அதை வெளிக்காட்டாமல் அவனுக்கு எலுமிச்சம் பழ குளிர்பானம் வாங்கிக் கொடுத்தேன்.

ஆட்டோக்காரன் மோசம் என்றாலும் அவன் ஆட்டோ ஓட்டியது எனக்கு பிடித்தது. காரை விட வேகமாக ஓட்டினான். எப்படியோ ஒரு மணி நேர பயணத்திற்குப் பிறகு எர்ணாகுளம் ரயில் சந்திப்பில் கொண்டு வந்து சேர்த்தான்.

அவனை வாடகை கேட்டபோது ரூபாய் 950 என்று கூறினான். நான் ஒன்றும் பேசவில்லை. பணத்தை எடுத்து கொடுத்து விட்டேன்.

நான் எர்ணாகுளம் சந்திப்பிலிருந்து கோவை வர இரவு 8.30க்குத்தான் ரயில் பயணச்சீட்டை முன்பதிவு செய்து எடுத்திருந்தேன். ஆனால் அப்போது மணி 1.30 தான் ஆகியிருந்தது. ஆகவே அதை ரத்து செய்து விட்டு மாலை 3.30 ரயிலில் கோவை திரும்பினேன்.

அத்தோடு கேரளாவின் 13 திவ்யதேச பயணம் நிறைவு பெற்றது.

மலையாளக் கோயிலுக்கு மாலைபோட்டுச் சென்றும்
அலையெனப் பட்டேன் அலைச்சல் - தலமெல்லாம்
காட்டுக்குள்ளே கண்டேன் கடும்பயணம் மேற்கொண்டேன்
வேட்டைக்குச் சென்றதுபோல் சென்று.





ஹாரித மகரிஷி திருமூழிக்களத்தானை நோக்கிப் பலவருடங்கள் தவமிருந்தார். அப்போது பகவான் அவர் முன்தோன்றி வர்ணாச்ரம தர்மங்களையும், ஐந்து காலங்களில் செய்ய வேண்டிய அஷ்டானப் பிரகாரங்களையும், யோகத்தையும் பிரதிபலிக்கிற திருமொழியை இயற்றினார். அதனால் இந்த தலத்திற்கு திருமொழிக்களத்தான் என்றாகி, பிறகு திருமூழிக்களத்தான் பெயர் மருவியது.


இராமன் சித்ர கூடத்தில் தங்கியிருந்த போது, பரதன் இராமனை திரும்பவும் அயோத்திக்கு அழைத்துச் செல்ல வருகிறான். ஆனால் லட்சுமணன் அதை தப்பாக நினைத்து பரதனை கொல்ல முயற்சிக்கிறான். பிறகு தான் செய்த தவறையுணர்ந்து திருமூழிக்களத்தானை அடிபணிந்து மன்னிப்பு வேண்டுகிறான். அப்போது பரதன் வந்து லட்சமணனை தழுவிக் கொள்கிறான். இருவரும் சேர்ந்து இறைவனை தொழுகிறார்கள். இன்மொழியாலே இருவரும் இணைந்ததாலே இதற்கு 'திருமொழிக்களம்' என்று பெயரானது.

எர்ணாகுளத்திலிருந்தும் பேருந்தில் வரலாம் அங்குமாலி ரயில் நிலையத்திலிருந்தும் பேருந்தில் வரலாம்.

அங்கமாலி அல்லது ஆல்வாய் ரயில்நிலையத்திலிருந்து இறங்கி இக்கோயிலுக்கு செல்வதுதான் பக்கமாகும். அதன்பிறகு பேருந்து மூலமாகவோ அல்லது ரயில் மூலமாகவோ எர்ணாகுளம் சென்று ஆட்டோ மூலம் திருகாட்கரை கோயிலுக்குச் சென்றால் செலவு குறையும்.

"பரதனார் லட்சுமணன் பக்திமேற் கொண்டு
இருவரும் சேர்ந்திட்டார் இங்கு - உருக
திருமொழி பேசி தியான மிருக்க
திருமூழி யாச்சிவ் விடம்"

திவ்யதேசம் - 80



மூலவர் : கோலப்பிரான்
திருவாழ்மார்பன்
நின்ற திருக்கோலம்

தாயார் : செல்வத்திருகொழுந்து நாச்சியார்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1808-1817

நம்மாழ்வார் : 3205-3215


மொத்தம் : 22 பாசுரங்கள்

திருவல்லவாழ் (திருவல்லா)



"தந்தைதாய் மக்களே சுற்றமென
றுற்றவர் பற்றி நின்ற
பந்தமார் வாழ்க்கையை நொந்துநீ
பழியெனக் கருதி னாயேல்
அந்தமா யாதியாய் ஆதிக்கும்
ஆதியாய் ஆய னாய
மைந்தனார் வல்லவாழ் சொல்லமா
வல்லையாய் மருவு நெஞ்சே"

என்று திருமங்கையாழ்வார் பாடுவார். அவர் 1808 ஆம் பாடல் தொடங்கி 1817 வரை பத்துப் பாடல்கள் பாடியுள்ளார்.



பொதுவாகவே மலைநாடு ஒரு இயற்கை சூழ்ந்த பிரதேசம் ஆகும். அதில் திருவல்லா மட்டும் விதிவிலக்கல்ல. இருந்தாலும் நம்மாழ்வார் திருவலில்லா வாழ்பெருமாளை தரிசிக்கப் போகும்போது அந்த இயற்கையே அவரை தடுத்து நிறுத்தி துன்புறுத்தியதாம். அதை ஒரு தோழியிடம் சொல்வது போல் சொல்கிறார்.

"மானோய் நோக்குநல்லீர்!
வைகலும்வினை யேன்மெலிய
வானார் வண்கமுகும்
மதுமல்லிகை யுங்கமழும்
தேனார் சோலைகள்சூழ்
திருவல்லா வாழுறையும்
கோனா ரைஅடியேன்
அடிகூடுவ தென்றுகொலோ?"



என்று 3205 முதல் 3215 வரை பதினொரு பாசுரங்கள் பாடியுள்ளார்.

நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் திருவல்லவாழ் பற்றி மொத்தம் 22 பாசுரங்கள் உள்ளன.


கண்டாகர்ணன் என்பவன் ஒரு சிவபக்தன். அவன் சிவன் உபதேசம் பெற்றபின் கிருஷ்ண நாமத்தை உச்சரிக்கத் தொடங்கினான். அப்போது அவன் அஷ்டாசர மந்திரத்தை சொல்லிக் கொண்டிருக்கும் போது, தன் காதில் கிருஷ்ணர் பெயர் தவிர வேறு எதும் கேட்காதிருக்க தன் காதில் இரண்டு பொன்மணிகளை அணிந்து கொண்டு, அவைகள் சத்தம் கேட்கும்படி அசைத்துக் கொண்டு தவம் செய்து மோட்சம் அடைந்தான் என்று இந்த தலவரலாறு கூறுகிறது.

இந்த கோயிலில் சுதர்சன சக்கரமும், பொன்தகடும் பொருத்தப்பட்டுள்ளது. இந்த கோயிலுக்குள் பெண்கள் செல்ல அனுமதி கிடையாது. வெளியிலிருந்துதான் தரிசிக்க வேண்டும்.

சங்கர மங்களத்தம்மை என்ற பதிவிரதை ஏகாதசி விரதம் இருந்து, துவாதசியன்று பருகம்மாசாரிக்கு பாரணை செய்து வந்தாள். தோலகா சுரன் என்பவன் அதற்கு இடையூறு செய்து வந்தான். அதனால் பகவான் அவனை கொன்று விட்டு பாரணை வந்த போது, கிருஷ்ணாஜுனம் பருகம்மா சாரியின் திருவாழ்மார்பை மறைத்ததாம். அதை தரிசிக்க பதிவிரதை வேண்ட, பகவான் அருளியதாக வரலாறு.

"திருவல்ல வாழ்திருத் தேசப் பயணம்
பெரும்அருள் பெற்றிட்டப் பேறு - பெருமாள்
மழைபெய்யச் சென்று மகிமை யடைந்தேன்
தழைக்கவேண்டும் வாழ்வு அருள்"

திவ்யதேசம் - 81



மூலவர் : அற்புத நாராயணன்
அமிர்த நாராயணன்
நின்ற திருக்கோலம்

தாயார் : கற்பக வல்லி

மங்களாசாசனம் :

நம்மாழ்வார் : 3502-3512

மொத்தம் : 11 பாசுரங்கள்

திருக்கடிதானம்




"எல்லியும் காலையும் நினைந்தெழ
நல்ல அருள்கள் நமக்கேதந் தருள்செய்வான்
அல்லியந் தண்ணந் துழாய்முடி யப்பனூர்
செல்வர்கள் வாழும் திருக்கடித் தானமே"

என்று 3502 ஆம் முதல் பாசுரம் தொடங்க 11 பாசுரங்கள் இவையும் அந்தாதியாகவே நம்மாழ்வார் பாடியுள்ளார். பொதுவாக நம்மாழ்வார்கள் பாடிய பாசுரங்கள் பெரும்பாலும் அந்தாதிப் பாடல்களாகவே உள்ளன.

ருக்மாங்கதன் என்ற சூரிய வம்சத்து அரசன் ஆட்சி புரிந்த இடம். ஏகாதசி விரதம் இருந்த அதன் நன்மைகளை தேவர்களுக்குக் கொடுத்து அவர்களை தேவலோகம் அனுப்பி வைத்த இடம்.

**"திருக்கடித் தானம் திருக்கோலம் கொண்ட
பெருமாளாம் அற்புதன் பேரில் - அருள்வான்
வருவான் தருவான் வணங்கி யிருந்தால்
வருமாம் பொருளும் வளர்ந்து"**

திவ்யதேசம் - 82



மூலவர் : இமயவரப்பன்

நின்ற திருக்கோலம்

தாயார் : செங்கமல வல்லி



திருச்செந்தூர்

மங்களாசாசனம் :

நம்மாழ்வார் : 3480-3490

மொத்தம் : 11 பாசுரங்கள்

திருச்செங்குன்றூர் (திருச்சிற்றாறு)



"எனக்குநல் லரணை எனதா ருயிரை
இமையவர் தாய்தந்தை தன்னை,
தனக்குந்தன் தன்மை அறிவரி யானைத்
தடங்கடல் பள்ளியம் மானை
மனங்கொள்சீர் மூவா யிரவர்வண் சிவனும்
அயனும் தானுமொப் பார்வாழ்
கனக்கொள்திண் மாடத் திருச்செங்குன் னூரில்
திருச்சிற்றா றதனுள்கண் டேனே"

என்று நம்மாழ்வார் 3485 ஆம் பாடலில் பாடுகிறார். இவையும் அந்தாதியில் எழுதப்பட்ட பாசுரங்கள் ஆகும்.

சூரன், பத்மன் என்ற இருவர் சிவபெருமான் வரத்தைப் பெற்று, ஓர் உடலாக சூரமத்மன் என்று ஆயினர். பின்னர் அவர் அந்த வரம் பெற்ற துணிவால் தேவர் உட்பட எல்லோரையும் துன்புறச் செய்தனர். அதனால் தேவர்கள் அனைவரும் தங்களை சூரபத்மனிடமிருந்த காப்பாற்றம்படி திருச்செந்தூர் முருகனைப் போய் வேண்டிக் கொண்டனர். அதன்படி முருகன் சூரபத்மனை சூரஹம்சாரம் செய்து, சூரன், பத்மன் என்ற இருவரையும் பிரித்து, ஒருவரைத் தன் கொடியில் சேவலாகவும், இன்னொருவரை மயிலாகவும் ஆக்கிக் கொண்டதாக இக்கோயில் வரலாறு.

தர்மபுத்திரர் தனது குருவான துரோணரை யுத்தத்தில் கொல்ல மந்திரம் ஓதி முயற்சி செய்தது. மனசாட்சிப்படி அவருக்கு வருத்தத்தை உண்டு பண்ணியது. அதற்கு பிராயச்சித்தம் செய்ய இந்த தலத்திற்கு வந்து, திருச்சிற்றாற்றில் குளித்து, இந்த கோயிலில் பூஜை செய்ததாகவும் வரலாறு.

**"திருச்செங்குன் றூரின் இமைய வரப்பன்
திருக்கோலம் நின்றே யிருப்பன் - தருமன்
திருச்சிற்றாற் றில்குளித்து நிம்மதி பெற்ற
திருத்தலம் என்பார் சிலர்!"**

**"சூரபத் மரைபோரில் சூரசம்சம் செய்துதான்
வீரமாய் கூராக்கி வேல்முருகன் - பேராக
சேவல் மயிலாக செய்திட்ட செங்குன்றூர்
காவல் தலமாகக் காண்"**

திவ்யதேசம் - 83



திருப்புலியூர் (குட்டநாடு)

மூலவர் : மாயப்பிரான்
நிற்கும் திருக்கோலம்
கிழக்கே திருமுகம்

தாயார் : பொற்கொடி நாச்சியார்

தீர்த்தம் : பூஞ்சுனை தீர்த்தம்

மங்களாசாசனம் :

நம்மாழ்வார் : 3535 - 3545
திருமங்கையாழ்வார் : 2673(71)

மொத்தம் : 12 பாசுரங்கள்



"ஊர்வ ளம்கிளர் சோலையும்
கரும்பும்பெருஞ் செந்நெலும் சூழ்ந்து
ஏர்வ ளம்கிளர் தண்பணைக்
குட்டநாட்டுத் திருப்புலியூர்
சீர்வ ளம்கிளர் மூவுல
குண்டுமிழ் தேவபிரான்
பேர்வ ளம்கிளர்ந் தன்றிப்பேச்
சிலளின்றிப் புனையிழையே"

என்று நம்மாழ்வார் 3538 ஆம் பாடலில் கூறுகிறார்.

"பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர்
ஆராமம் சூழ்ந்த அரங்கம் - கணமங்கை"

என்று திருமங்கையாழ்வார் கூறுகிறார்.

பீமசேனனால் பிரதிஷ்டை என்றும் இந்த கோயிலை அழைப்பர்.



சிபியின் மகன் வருசாதர்பி என்பான் இத்திருப்புலியூரை ஆண்டு வந்தான். அப்போது அங்கு வந்த சப்தரிஷிகளுக்கு அரசன் தானம் செய்ய விரும்பினார். ஆனால் ரிஷிகள் அரசனிடம் தானம் பெறுவது மகாபாவம் என்று கூறிவிட்டு சென்று விட்டார்கள். ஆனால் மன்னர் தந்திரமாக அமைச்சர் மூலம் பொன் கலந்த பழங்களை அனுப்ப, அதை ரிஷிகள் ஞான திருஷ்டியால் உணர்ந்து மறுபடியும் மறுத்து விட்டனர். சினம் கொண்ட அரசன் ஹோமம் செய்து மாரகி என்ற பெண்ணை உண்டாக்கி ரிஷிகளை கொல்ல அவளை ஏவி விட்டான். ஆனால் பகவான் இந்திரன் மூலம் அந்த பெண்ணைக் கொன்று, ரிஷிகளை காப்பாற்றி அவர்களை சொர்க்கத்திற்கு அழைத்துச் சென்றார் என்று தலபுராணம் கூறுவதாகக் கூறுவர்.

82 ஆம் திவ்யதேசக் குறிப்புப்படி செங்கண்ணூரிலிருந்து மேற்கே 5 கி.மீ. தூரத்திலுள்ளது. காரில் செல்லலாம். வசதிகள் கிடையாது.

“திருப்புலியூர் மாயப் பிரானின் தலத்தில்
அருள்வேண்டி நின்றேன் அழுது - கருணை
முகமாக காட்சியை கண்டேன் மனது
சுகமாக வந்தேன் தொழுது”

திவ்யதேசம் - 84



மூலவர் : திருக்குறளப்பன்
நிற்கும் திருக்கோலம்
கிழக்கே திருமுகம்



தாயார் : பத்மாவதி நாச்சியார்


தீர்த்தம் : பம்பா தீர்த்தம்

மங்களாசாசனம் :

நம்மாழ்வார் : 3436 - 3446

மொத்தம் : 11 பாசுரங்கள்

திருவாறன்விளை (ஆரம்முளை)



"இன்பம் பயக்க எழில்மலர்
மாதரும் தானும்இவ் வேழுலகை
இன்பம் பயக்க இனிதுடன்
வீற்றிருந் தாள்கின்ற எங்கள்பிரான்
அன்புற் றமர்ந்துறை கின்ற
அணிபொழில் சூழ்திரு வாறன்விளை
அன்புற் றமர்ந்து வலம் செய்து
கைதொழும் நாள்களும் ஆகுங்கொலோ!"

என்று 3436-ல் நம்மாழ்வார் பாடுகிறார்.

மகாபாரதப் போரில், கர்ணனின் தேர் இடது சக்ரம் பூமயில் புதைந்து போன போது, கர்ணன், தன் ரதத்தைத் தூக்கிவிட்டு வரும்வரை, தன்னைக் கொல்லக் கூடாது என்று கூறுகிறான். ஆனால் வஞ்சகமாக பாணத்தைப் போட்டு, கர்ணனைக் கொன்று விடுகிறார்கள். அதனால் மனம் வருந்திய அர்ச்சுனன் இந்த தலத்திற்கு வந்து தவம் செய்து பாவ விமோசனம் செய்து கோயிலை புனிதம் செய்கிறான்.



கோயிலையொட்டி கோவில் மதிலைத் தொட்டுக் கொண்டு பம்பா நதி ஓடுகிறது.


பிரம்ம தேவனிடமிருந்த வேதங்களை மதுகைடபர்கள் அபகரித்த போது, பிரம்ம ஞான சூனியராக பகவானை குறித்து தவம் செய்ய, பகவான் பிரம்மாவுக்கு ஞானத்தை திரும்பக் கொடுத்த தலம்.

இந்த தலத்திலிருந்து தான் சபரிமலை அய்யப்ப சுவாமிகளின் ஆபரணங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, மகர ஜோதியின் போது, ஊர்வலமாக பக்தர் கூட்டத்தோடு சபரிமலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

திவ்யதேசம் 82ல் கண்டபடி செங்கண்ணூரிலிருந்து 12 கி.மீ. கிழக்கே போக வேண்டும். பேருந்தில் செல்லலாம். சத்திரத்தில் சாப்பிடலாம்.

"திருவா றவிளையாம் ஆரம் முளாவில்
திருக்குற ளப்பன் இருப்பான் - அருள்முகம்
மண்ணும் மனிதரும் நாடும் தமிழ்மொழியும்
விண்ணாய் உயர விதித்து"

திவ்யதேசம் - 85



திருவண்வண்டூர் (திருவமுண்டூர்)

மூலவர் : பாம்பணையப்பன்
கமலநாதன்
நிற்கும் திருக்கோலம்
மேற்கே திருமுகம்

தாயார் : கமலவல்லி நாச்சியார்

தீர்த்தம் : பாபநாச தீர்த்தம்

மங்களாசாசனம் :

நம்மாழ்வார் : 3227 - 3237

மொத்தம் : 11 பாசுரங்கள்

"இடரில் போகம் மூழ்கி
யிணைத்தாடும் மடவன்னங்காள்
விடலில் வேத வொலிமுழங்
கும்தண் திருவண்வண்டூர்
கடலின் மேனிப் பிரான்கண்
ணனைநெடு மாலைக்கண்டு
உடலம் நைந்தொருத் தியுருகும்
என் றுணர்த்துமினே"



என்று தலைவி எம்பிரானிடம் அன்னத்ததைத் தூதுவிட்டுச் சொல்வது போல் நம்மாழ்வார் 3230 ஆம் பாடலில் பாடுகிறார்.

நகுலன் பிரதிஷ்டை செய்த தலம். இவ்வூரில் பூமியைத் தோண்டிய போது புதிய விக்ரங்கள் கண்டெடுக்கப்பட்டதாம். அதற்காக கோயிலில் புதிய சன்னதிகள் கட்டப்பட்டு மண்டபங்களும் உருவாக்கப்பட்டதாம்.

நாரதர் பிரம்மாவினால் சபிக்கப்பட்டு இத்தலம் வந்து ஸ்ரீமந் நாராயணனை தொழுதாராம். அப்போது பகவானிடம் தத்துவ ஞானம் உபதேசிப்பதைத் தொழிலாக கொள்ள வேண்டும் என்ற வரத்தைப் பெற்றது இந்த தலம்.



நாரதர் இங்கே நாரதீய புராணத்தை இயற்றியதாகவும், மகாவிஷ்ணுவே பரத்துவம் என்று உருவாக்கி அவரை பூஜிக்கும் முறை, துதி முதலியன அடங்கிய பெருநூலை இருபத்தைந்தாயிரம் பிரபந்தங்களில் செய்து முடித்ததாகக் கூறுவர்.

இந்தத் தலமும் திவ்யதேசம் - 82ன் படி செங்கண்ணூரிலிருந்து வடக்கே 10 கி.மீ. தூரத்தில் உள்ளது. வசதிகள் கிடையாது. பேருந்து வசதியுண்டு.

பொதுவாக 82, 83, 84, 85 திவ்யதேசங்களை ஆட்டோ மூலமாகவோ கார்மூலமாக சென்று பார்ப்பது நலம்.

"திருவண்டூர் பாம்ப ணையப்பன் கோயில்
கருவாக பூமியில் காண - பெருமாள்
பிறப்பு வியப்பு சிலைகள் சிறப்பு
திறக்கும் அருளின் கதவு"

திவ்யதேசம் - 86



மூலவர் : அனந்த பத்மநாபன்

தாயார் : ஸ்ரீஹரி லட்சுமி

தீர்த்தம் : மத்சய், பத்ம, வராக தீர்த்தங்கள்

மங்களாசாசனம் :

நம்மாழ்வார் : 3678 - 3688

மொத்தம் : 11 பாசுரங்கள்

திருவனந்தபுரம்



“ஊரும்புட் கொடியுமஃதே
யுலகெல்லா முண்டுமிழ்ந்தான்
சேரும்தண் ணனந்தபுரம்
சிக்கெனப் புகுதிராகில்
தீரும்நோய் வினைகளெல்லாம்
திண்ணநாம் அறியச் சொன்னோம்
பேரும்ஓ ராயிரத்துள்
ஒன்றுநீர் பேசுமினே”

என்று நம்மாழ்வார் இத்தலம் பற்றிப்பாடிய 11 பாசுரங்களில் 3680 ஆம் பாடலில் கூறுவார்.

இப்பெருமாள் மிகப்பெரிய திருமேனி கொண்டு விளங்குகிறார். ஆகவே இவரை தலை, உடல், திருவடிகள் என்று மூன்று வாசல்கள் வழியே வந்து தனித்தனியாக தரிசிக்க வேண்டும். தென்புற பிரகாரத்தில் யோக நரசிம்மனும், சன்னதிக்கு முன்னால் அனுமானும், சன்னதிக்குப் பின்னால் கிருஷ்ணனும் காட்சியளிக்கின்றனர்.

இங்குள்ள அனுமான் மீது சாத்தப்படும் வெண்ணெய் எவ்வளவு நாளானாலும் எந்த வெயிற்காலத்திலும் உருகுவதுமில்லை, கெட்டுப்போவதுமில்லை.

லட்சுமி வராகர் கோயிலும், சீனிவாசப் பெரமாள் கோயிலும் தெற்குப் பக்கத்தில் உள்ளன.

திவாகரயோகி என்பவர் ஆசாபாசங்களை விட்டு சீராப்தி நாதனைக் கண்டு முக்தியடைய 'சதாஹரி பூஜை செய்து கொண்டிருக்க, பகவான் அவருக்கு அருள் பரிபாலித்து இரண்டு வயது குழந்தையாக உருவெடுத்து, ஒரு பூஜைப் பொருளையெடுத்து வாயில் போட்டுக் கொண்டது. அதை பார்த்துவிட்ட யோகி, அந்த குழந்தையைக் கண்டிக்க, அந்த குழந்தை ஓடத் தொடங்கியது. ஆனால் அந்த குழந்தையை யோகி விடாமல் துரத்திக் கொண்டு ஓட, குழந்தை ஓடிப்போய் ஒரு மரப்பொந்துக்குள் புகுந்து கொண்டது. அப்போது அந்த மரம் தாங்காமல் கீழே விழுந்து பகவான் பெரிய உருவத்துடன் காட்சியளித்தார். அதைப் பார்த்த யோகி பகவானை அப்படி வேண்ட வேண்டுமென பிரார்த்திக பகவான் திரிதண்ட வடிவமெடுத்து, திருமுக மண்டலம், உடல், பாதம் என முப்பரிமாணம் பெற்றார்.

இத்தலத்திற்கு சென்னை, கோவையிலிருந்து நேரடி ரயில் வசதியுண்டு. நாகர்கோயிலிலிருந்து 50 கி.மீ. தூரம் நேரடி பேருந்து வசதியுண்டு.

மலைநாட்டு திருப்பதிகள் 13 என்று கூறுவன. அவற்றில் திருவனந்தபுரம், திருவட்டாறு, திருவண்பரிசாரம், இந்த மூன்று தலங்களையும் நாகர்கோயிலில் தங்கி தரிசிக்கலாம். அவற்றில் திருவனந்தபுரம் தவிர மற்ற திருப்பதிகள் இப்போது தமிழ்நாட்டு எல்லைகள் வந்துவிட்டன.

"அனந்தபத்ம நாபன் தலைஉடல் பாதம்
எனவாய் தெரிவார் திரியாய் - மனதால்
மகிழ விரைந்தேன் மறைந்தே வொளிர்ந்தார்
அகத்தால் தொழுதேன் அறிந்து"



திருவனந்தபுரம்

இந்த கோயிலுக்கு நான் சென்றபோது இது 108 திவ்யதேசங்களில் ஒன்று அவ்வளவுதான். ஆனால் இப்போது இந்தக் கோயில் உலகப் புகழ்பெற்ற திருக்கோயிலாக உருப்பெற்றிருக்கிறது. தோண்டவரும் நீரூற்றுப் போல, இந்தக் கோயிலுக்குள் உள்ள பாதாள அறைக்குள் ஆயிரம் லட்சம், கோடியென தங்கப் புதையல் வெளிவந்து கொண்டேயிருக்கும் அதிசயம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

உலகத்திலேயே பணக்காரசாமி என்றால் திருப்பதி வெங்கடாசலபதியைத்தான் கூறி வந்தார்கள். இப்போது இந்த திருவனந்தபுரம் பத்மநாபசாமி திருக்கோயில், அதைப்புறந் தள்ளிவிட்டு உலகத்தில் முதல் பணக்கார சாமியாக உயர்ந்து நிற்கிறது.

கொஞ்சகாலம் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் இந்தக் கோயில் பற்றிய செய்திகளே நிரம்பி வந்து கொண்டிருந்தது. அப்படி இந்த கோயிலில் கண்டெடுக்கப்பட்ட அற்புத பொற்குவியல்களை அதிசய செய்திகளை நீங்களும் படியுங்கள்.

இந்தியா என்னும் பாரத தேசம் ஒரு புண்ணிய பூமி. இந்த மக்களாகிய நாம் புண்ணியவான்கள். தர்மம், நியாயம், உண்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு, செயல்முறை, கொடை, தானம், தவம் இவற்றின் அடிப்படையில் நம் முன்னோர்கள் நமக்கு வாழ்க்கை தத்துவத்தை பாடம் புகுத்தி சென்றிருக்கிறார்கள். அவற்றின் அடிப்படையில் எழுப்பப்பட்டனவே ஏராளமான கோயில்களைத் தரிசிக்க நாம் பக்தி என்ற பெயரில் சில விதிமுறைகளையும், ஆகம முறைகளையும் வகுத்துக் கொண்டு இறைவனை வழிபட்டு வருகிறோம்.

அதற்காக எழுதப்பட்டனவே இராமாயண, மகாபாரத இதிகாசங்களும், பெரிய புராணம், நாலாயிர திவ்ய பிரபந்தம் போன்ற பக்தி நூல்களும் ஆகும்.

தென்னாட்டின் குறிப்பாக தமிழ்நாட்டின் அடையாளச் சின்னங்கள் கோயில்கள். “கோயில்கள் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்ற ஒரு கோட்பாட்டை வகுத்துக் கொண்டு தமிழன் வாழ்ந்து வருகிறான். அதனால்தான் ஊர்தோறும் கோயில் உருவாக்கப்பட்டிருக்கிறது.



திருவனந்தபுரம் சென்ட்ரல் ரயில் நிலையம்


பத்மனாப கோயில் நுழைவாயில்

தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்ற மொழிகள் தமிழிலிருந்து பிறந்தவைகள் என்று மொழி ஆராய்ச்சி வல்லுநர்கள் ஆராய்ந்து மெய்ப்பித்திருக்கிறார்கள். அதுபோல அந்த மொழியில் தேசங்களும் சென்னை மாகாணத்தின் உள்ளடக்கமாகவே இருந்தன. சுதந்திரத்திற்குப்பின் மொழிவாரி மாநிலங்களாக அவைகள் பிரிக்கப்பட்ட பிறகு அந்தந்த மாநில மக்களின் நடையுடை, மொழி, பேச்சு, பழக்கவழக்கங்களில் மாற்றமும், வளர்ச்சியும் வெவ்வேறுவிதமாக ஆகியிருக்கின்றது.

இப்போது திருவனந்தபுரம் அருள்மிகு அனந்தபத்மநாபசாமி திருக்கோயிலில் நிகழ்ந்துள்ள அதிசயம் உலகத்தையே உற்றுநோக்க வைத்திருக்கிறது. அந்தக் கோயில், அந்த மலைநாட்டின் வரலாற்றுப் பின்னணியில் தமிழனும், அவனது கலாச்சாரப் பண்பாடும் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அந்த அடிப்படையில் எனக்கு தோன்றுவதையே நான் இங்கு எழுதுகிறேன். அது உண்மையா, பொய்யா என்பதை ஆய்வாளர்களிடம் விட்டு விடுகிறேன்.

சேர, சோழ, பாண்டியர்கள் தமிழ்நாட்டை ஆண்டதாக நாம் பள்ளியில் படித்தோம். அப்படியென்றால் சேர நாடு என்பதும் தமிழ்நாட்டின் உள்ளடக்கம் தான்.

63 நாயன்மார்களில் ஒருவரான சேரமான் பெருமான் திருவஞ்சைக்களம் நாட்டை ஆண்டதாக இருக்கிறது. அந்த திருவஞ்சைக்களம் கோயில் இன்றும் இருக்கிறது. சேரமானும் சுந்தரமூர்த்தி நாயனாரும் நெருங்கிய நண்பர்களாகயிருந்து, பிறகு ஒன்றாகவே கயிலாயம் சென்றார்கள் என்று பெரிய புராணம் கூறுகிறது.

அதுபோல இந்த திருவனந்தபுரம் அனந்த பத்மநாபசாமி திருக்கோயிலைக் கட்டிய திருவாங்கூர் சமஸ்தான மன்னர் மார்த்தாண்ட வர்மாவும், அவரது வாரிசுகளும் கூட தமிழ்வழிப் பரம்பரை என்று எனக்கு எண்ணத் தோன்றுகிறது. அவர்கள் பெயரே தமிழ்ப் பெயராக இருக்கிறது. அதிலும் குறிப்பாக, சிறப்பாக 27 நட்சத்திரங்களில் இடம் பெறும் பெயர்களும் சேர்த்து வருவது அதை உறுதிப் படுத்துகிறது.



இந்தக் கோயிலைக் கட்டியவர் மகாராசா மார்த்தாண்ட வர்மா ஆவார். அவருக்குப்பிறகு இந்த கோயிலை அனுஷம் திருநாள் வீரபால மார்த்தாண்ட வர்மன் கொஞ்சம் மாற்றம் செய்து வடிவமைத்து கோயிலை விரிவாக்கம் செய்துள்ளார். அவருக்குப்பிறகு கார்த்திகை திருநாள் ராமவர்மா நிர்வாகத்தில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. பிறகு சித்திரை திருநாள் பாலராமவர்மா நிர்வாகம் செய்துள்ளார். இப்போது இந்தக் கோயிலை நிர்வாகம் செய்து வருபவர் திருவிதாங்கூர் மன்னர் உத்திராடம் திருநாள் மார்த்தாண்ட வர்மா ஆவார். இந்தப் பெயர்களெல்லாம் தூய தமிழில் நட்சத்திரப் பெயர்களோடு அழகாக சேர்ந்து வருவதை நீங்கள் பார்க்கலாம்.

திருவனந்தபுரம் பத்மநாபசாமி திருக்கோயில் திருவாங்கூர் சமஸ்தானத்தின் மன்னர் குடும்பத்திற்குச் சொந்தமானதாகும். இந்தக் கோவிலின் மொத்தப் பரப்பளவு 7 ஏக்கர் ஆகும். கி.பி. 1566 ஆம் ஆண்டு மன்னர் ஆதித்ய வர்மாவால் இந்தக் கோயிலுக்கு அஸ்திவாரம் பூஜை செய்யப்பட்டது. அதற்காக அப்போது 40 அடி ஆழம் குழி தோண்டப்பட்டது. பிறகு திருப்பணிகள் நடைபெற்றது.

இந்தக் கோயிலின் உயரம் 100 அடி ஆகும். இதில் 7 நிலைகள் உள்ளன. முதல் 5 நிலைகள் மாகாராச மார்த்தாண்ட வர்மாவால் கட்டி முடிக்கப்பட்டதாகும். மீதி 2 நிலைகள் அவருடைய மருமகன் கார்த்திகைத் திருநாள் ராமவர்மாவால் முடிக்கப்பட்டது. ஆக, அகன்று 7 அடுக்குக் கொண்டு காட்சிதரும இந்த விஷ்ணு கோயிலுக்கு 4 புறங்களிலும் வாசல் இருக்கிறது. பிரதான வாயில் கிழக்கு வாசல் ஆகும். 4 வாசல் வழியாகவும் வந்து பக்தர்கள் அனந்த பத்மநாப சாமியை தரிசனம் செய்யலாம்.

கருவறையின் மூலவர் அனந்த பத்மநாபசாமி 18 அடி நீளத்தில் படுத்த நிலையில் பக்தர்களுக்குக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார். இவரது அனந்தசயன நிலை மூன்று பகுதியாகப் பிரிக்கப்பட்டு 3 நடையாக உள்ளன. தலைக்கு ஒரு நடையாகவும், உடலுக்கு ஒரு நடையாகவும், பாதத்திற்கு ஒரு நடையாக தரிசிக்கும் வகையில் இந்த மூலவர் வடிவமைக்கப்பட்டு, விந்தையாக காட்சியளிக்கிறார்.

இந்தக் கோயில் முக்கிய கோட்டைப் பகுதியில் அமைந்துள்ளது. இங்கு ஆறு அரண்மனைகள் உள்ளன. ஆனந்தவிலாச அரண்மனை, கிருஷ்ண விலாசம் அரண்மனை, ஸ்ரீபாதம் அரண்மனை, சுந்திரவிலாசம் அரண்மனை, சரஸ்வதி விலாசம் அரண்மனை, குதிரமாளிகை அரண்ணனை என்பன அவை ஆகும்.

நான் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது கேரளாவுக்கு சுற்றுலா அழைத்துச் சென்ற ஞாபகம் இப்போது எனக்கு வருகிறது. அப்போது இந்த அனந்த பத்மநாபசாமி கோயிலுக்கும் அழைத்துச் சென்றார்கள். காலையில் மன்னர் கோயிலைச் சுற்றி வந்து, அனந்த பத்மநாப சாமியை தரிசனம் செய்துவிட்டு சென்ற பிறகுதான் பிறகு பக்தர்களுக்கு தரிசனம் செய்ய அனுமதிக்கப்படும் என்ற நியதி இருந்திருக்கிறது. அந்த மன்னர் தரிசனம் செய்யும் காட்சியை காட்டவும் எங்களை அந்த நேரத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

அந்த மன்னர் வேகமாக கைகூப்பி வந்து கோவிலைச் சுற்றி, தானும் சுற்றி வந்து சாமி தரிசனம் செய்த நினைவு எனக்கு இப்போது வருகிறது.

திருவாங்கூர் சமஸ்தானத்தின் மன்னர் மார்த்தாண்ட வர்மா கி.பி. 1758 ஆம் ஆண்டு காலமானார். அப்போது அவர் இறக்கும் தருவாயில், "அனந்தபத்மநாபசாமிக்கு இந்த நாட்டை தந்துள்ளோம். எதிர்காலத்தில் இதில் எந்த மாற்றமும் நிகழக்கூடாது. போர் முறையிலோ, வேறு எம்முறையிலோ வேறு நாடுகள் இத்தோடு அவைகள் சேர்ந்தாலும் அதுவும் கோயிலுக்கே சொந்தம். அதுதவிர அனந்த பத்மநாபசாமி கோயிலுக்குச் சொந்தமான எந்த அறக்கட்டளையிலும் மாற்றம் செய்யக்கூடாது" என்று தனது மருமகன் கார்த்திகை திருநாள் ரவிவர்மாவிடம் சத்தியம் வாங்கிக் கொண்டு இறந்துள்ளார். அந்த சத்தியப்படியே மன்னர் குடும்பம் இன்று வரை அதைக் கடைப்பிடித்து வருகிறது.

சேர, சோழ, பாண்டியர்களுக்கிடையே அடிக்கடி போர் நடப்பதுண்டு. அவ்வாறு சோழ மன்னர் புருவன் சேர நாட்டின்மீது படையெடுத்தான். அதில் வெற்றிகண்ட அம்மன்னன் தான் கைப்பற்றிய பொன்னும் பொருளையும் வெற்றிக் காணிக்கையாக இந்தக் கோயிலுக்கு கொடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

வேணாட்டை ஆண்ட வீர ஆதித்ய வர்மன் என்ற மன்னன் யானை உருவம் பதித்த தங்க நாணயங்களையும், ஆபரணங்களையும் காணிக்கை செலுத்தியதாகக் கூறப்படுகிறது.

திருவிதாங்கூர் மன்னர் முன்னோர்களான மன்னர் வீரமார்த்தாண்ட வர்மா போர் குற்றம் நடந்ததற்குப் பிராயச்சித்தமாக தங்கம், வெள்ளி, பணம் ஆகியவற்றை காணிக்கை செலுத்தியுள்ளார்.

அதேபோல திருவாங்கூர் சமஸ்தான மன்னர் பக்கத்து நாடுகளையெல்லாம் போரில் வென்று, அங்கிருந்து கிடைத்த பொன்னையும், பொருளையும் இந்த சாமிக்கு காணிக்கையாக செலுத்தியுள்ளார். தவிர அவற்றையெல்லாம் பாதுகாக்கும் பொருட்டு பாதாள அறை தோண்டி, அவற்றை சேமித்து வைத்துள்ளார். அவர் வேணாட்டையும் போரில் வென்று, அங்கு கிடைத்த பொன்னையும், பொருட்களையும் காணிக்கை செலுத்தியுள்ளார்.

மன்னர் ராம மார்த்தாண்ட வர்மா தங்க யானை செய்து கொடுத்து, பிராயசித்தம் செய்துள்ளார்.

மன்னர் ரவிவர்மா போர் வெற்றிக்காக பொன், வெள்ளி, பணம் ஆகியவற்றைத் தந்துள்ளார்.

இவ்வாறு மன்னர் பரம்பரையினரும், மற்ற மன்னர்களும், இன்னும் பொதுமக்களும், பக்தர்களும் கொடுத்த நன்கொடைகள் சேர்க்கப்பட்டு, பாதாள அறையில் பாதுகாக்கப்பட்டுள்ளன.

அவற்றையெல்லாம் மன்னர் பரம்பரையினர் தங்கள் சொந்த நலனுக்காக பயன்படுத்திக் கொள்ளவில்லை. இன்றுவரை அவற்றை பாதுகாத்தே வருகின்றனர் என்று கூறலாம். சிவன் சொத்து குல நாசம் என்பது போல, அனந்த பத்மநாபசாமி சொத்து முழுவதும் அவனுக்கே சொந்தம். அதை அனுபவிக்க விரும்புவது தெய்வ குற்றம் என்று அவர்கள் கூறி வருகிறார்கள். அதனால் மன்னர் குடும்பத்தினர் கோயிலுக்கு வந்து, பத்மநாபசாமியை கும்பிட்டு விட்டு வெளியே போகும் போது, அந்தக் கோயில் மண் கூட தங்கள் காலில்பட்டு, அரண்மனை வாசலுக்குக் கூட போகக் கூடாது என்ற எண்ணத்தில் தங்கள் இரண்டு கால்களிலுள்ள மண்ணைத் தட்டி, அங்கேயே விட்டுச் செல்கின்ற பழக்கத்தை கடைப்பிடித்து வருகிறார்கள்.

தவிர மன்னர் குடும்பத்தில் ஆண் குழந்தை பிறந்தால், அந்தக் குழந்தையைக் கொண்டு போய் கோயிலில் உட்கார வைத்து, அந்தக் குழந்தையை பத்மநாப தாசனாக அறிவிப்பார்கள். அரண்மனையை எந்த விழாக் கொண்டாடினாலும் கோயிலுக்கென்று காணிக்கை செலுத்துவார்கள்.

இப்போது மன்னர் குடும்பத்தில் திருவிதாங்கூர் மன்னராக உத்திராடம் திருநாள் மார்த்தாண்ட வர்மா இருந்து வருகிறார். இவர் தினந்தோறும் பத்மநாபசாமி கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்து வருகிறார். அவ்வாறு தரிசனம் செய்ய முடியாத நிலையில் சாமிக்கு ஒரு குறிப்பிட்ட தொகை அபராதம் செலுத்த வேண்டும் என்ற வழக்கமும் உள்ளது.

இவ்வாறு திருவிதாங்கூர் முன்னாள் மன்னர் சித்திரைத் திருநாள் பலராம வர்மா முதல் இன்றைய உத்தராடம் திருநாள் மார்த்தாண்டம் வர்மா வரையிலுமுள்ள மன்னர் பரம்பரை இன்று வரை இந்த கோயிலையும், கோயில் சொத்துக்களையும் பாதுகாத்து வருகிறது.

இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, அப்போதைய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் படேல் எல்லா மன்னர் சமஸ்தானங்களையும் ஒருங்கிணைக்க நடவடிக்கை எடுத்தார். அதற்காக மன்னர்களுக்கு மானியமும் கொடுத்தார். அப்போது சித்திரை திருநாள் பலராமவர்மாவிடம் மானியம் பற்றி பேசியபோது, அவர் முன்பு கி.பி. 1758 ஆம் ஆண்டு மன்னர் மார்த்தாண்டவர்மா மரணப் படுக்கையில் தனது மருமகன் கார்த்திகை திருநாள் ராமவர்மாவிடம் சத்தியவாக்கு வாங்கியதை நினைவு கூர்ந்து, மானியம் வாங்க மறுத்ததோடு, நாட்டை விட்டுக் கொடுத்து விட்டு, கோயிலை விட்டுத் தராமல், அவரிடம் கேட்டுப் பெற்றுக் கொண்டார் என்பது மன்னர் குடும்பம் கோயில் மேல் எவ்வளவு பக்தி கொண்டுள்ளார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

முகலாய மன்னர்கள் நமது நாட்டின் மீது படையெடுத்த போதுதான் நமது இந்து கோயில்களுக்கு ஆபத்து வந்தது. அவர்கள் நாட்டின் மீது ஆசை கொண்டுதான் படையெடுத்து வந்தார்கள். ஆனால் இங்கு வந்து பார்த்தபோது, எங்கு பார்த்தாலும், கோயில்கள், பட்டி தொட்டியெல்லாம் கோயில்கள். அவற்றிற்கெல்லாம் ஏராளமான சொத்துக்கள். பூமி, நிலம், தங்கம், வெள்ளி, வைரம், செம்பு இப்படி சொல்லமுடியாத சொத்துக்கள். ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமில்லாமல், மக்கள் கோயில்களுக்கு வேண்டுதல் வைத்து, அது நிறைவேறிய கட்டத்தில் காணிக்கையாக அள்ளித்தந்த பணம், நிலம், நகையெல்லாம் கோயில்களுக்கு பெரும் செல்வங்களாகக் குவியத் தொடங்கின. சாதாரணமாக மக்கள் கோயில்களுக்கு கும்பிடச் சென்றால், காணிக்கை செலுத்துவது கட்டாயம் என்ற பழக்கத்தை இன்றும் காணலாம்.

அப்படி கோயில்களில் குவிந்து கிடந்த சொத்துக்களை மொகலாயர்கள் கொள்ளையடித்துச் செல்லத் தொடங்கினர். குறிப்பாக கஜினி முகம்மது கொள்ளையடித்துச் சென்ற கோயில் சொத்துக்களுக்கு அளவு கூறமுடியாது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் குஜராத்திலுள்ள சோமநாதபுரம் சிவன் கோயிலை அவன் கொள்ளையடித்த சரித்திரம் கொடுமையானது. கொலைவெறி, ரத்த ஆற்றில்தான் அவன் அங்குள்ள பொன்னையும், வெள்ளியையும் கொள்ளையடித்துச் சென்றான் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். நாம் முயற்சி என்பதற்கு கஜினி முகம்மது 17 முறை படையெடுத்தான், 27 முறை படையெடுத்தான் என்று கூறிகிறோம். முயற்சி என்னும் புனிதமான சொல்லுக்கும், செயலுக்கும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற கொடூரத்தைச் செய்த கஜினி முகம்மதுவை உதாரணம் கூறுவது தவறு என்று நான் நினைக்கிறேன்.

முகாலயர்களுக்குப் பிறகு ஆங்கிலேயர்கள், பிரஞ்சுக்காரர்கள், போர்த்துக்கீசியர்கள் ஆகியோர் வாணிபம் செய்ய வந்தனர். வந்தவர்களுக்கு இங்குள்ள கோயில்களும் அவற்றின் சொத்துக்களும் பேராசையைத் தூண்டிவிட்டன. அத்தோடு இங்கு இந்திய நாடு சிறு சிறு குறுநில மன்னர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக் கொண்டு ஒற்றுமையில்லாமல் இருந்தனர். அதைப் பயன்படுத்தி அந்நியர்கள் நம்நாட்டை பிடித்துக் கொண்டனர். இங்குள்ள கோயில் சொத்துக்களையும் அபகரித்துச் சென்றனர். தங்கம், வெள்ளி, வைரம், விக்ரகங்கள் என்று கணக்கிலடங்காத செல்வங்கள் கொள்ளை போயின. அப்படி கொள்ளை போனவற்றில் ஒன்றுதான், இன்னும் பிரிட்டிஷ் ராணியின் மகுடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் கோகினூர் வைரம் ஆகும்.

இவ்வாறு அந்நியர்களிடமிருந்து கோயில் சொத்துக்களைப் பாதுகாக்கும் நோக்கத்தில்தான் பிறகு பாதாள அறைகள் தோண்டப்பட்டு, தங்கம், வைரம், வெள்ளி போன்றவைகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டன.

அப்படி தோண்டப்பட்டதே இப்போது பூதகரமாக எழுந்துள்ள திருவனந்தபுரம் அனந்த பத்மநாபசாமியின் தங்கச் சுரங்கம் ஆகும். திருவிதாங்கூர் சமஸ்தான மன்னர்கள் அந்நியர் ஆட்சியால், இந்தக் கோயில் சொத்துக்கள் அபகரிக்கப்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் இந்த பாதாள அறையை ஏற்படுத்தி இந்த தங்கக் குவியலை சேர்ந்திருக்கலாம் எனக்கூறலாம்.

மனித குலத்தில், குணத்தில் சர்ச்சைகளும் சந்தேகங்களும் இயற்கையாகும். அப்படி திருவாங்கூர் அரண்மனை ஆவணங்கள் மூலம் அனந்த பத்மநாபசாமி ஆலயத்தில் புதையல் இருக்கும் செய்தி தெரிந்த காலம் முதலே மக்களிடையே பலவிதமான சந்தேகங்கள் நிலவி வந்துள்ளன. அதை இப்போது வெட்ட வெளிச்சமாக்கியவர் சுந்தரராசன் என்ற வழக்கறிஞர். இவர் நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்தவர். ஐ.பி.எஸ். அதிகாரி. இந்திராகாந்தி அம்மையார் பிரதமராக இருந்தபோது, அவருக்கிருந்த பாதுகாப்புப் படையில் பணியாற்றியவர். கேரளா அப்போது தமிழ்நாட்டோடு சேர்ந்திருந்த காலத்தில் நாகர்கோயில், கன்னியாகுமரி பகுதி மக்கள் இந்தக் கோயிலுக்குச் சென்று சாமி கும்பிட்டு வருவது வழக்கம். அப்படியே சுந்தரராசன் தந்தையாரும் இந்த கோயிலுக்குத் தினந்தோறும் சென்று சாமி தரிசனம் செய்து வந்தார். அப்போது அவரோடு சுந்தரராசனும் உடன் சென்று வருவது வழக்கம். அந்த வகையில் இந்தக் கோயிலோடு அவருக்கு தொடர்பு ஏற்பட்டுள்ளது. கோயிலைப்பற்றி எல்லா விவரமும் இவருக்கு தெரிய வந்துள்ளது.

இப்போது மன்னராக உள்ள உத்திராடம் திருநாள் மார்த்தாண்ட வர்மா அரிகுமார் என்பவரை கோயில் நிர்வாக அதிகாரியாக நியமித்தார். அதை எதிர்த்து சுந்தரராசன் கேரள உயர்நீதி மன்றததில் வழக்கு போட்டார். அந்த வழக்கில் சுந்திரராசனுக்கு வெற்றி கிடைத்தது. அதை எதிர்த்து மன்னர் மார்த்தாண்ட வர்மா உச்சநீதி மன்றம் சென்றார். உச்சநீதிமன்றம் கோயில் சொதுக்குக்ளை கணக்கீடு செய்ய உத்தரவிட்டது. அப்படி கணக்கெடுக்கும்போது தான்கோயில் பாதாள பூமியிலிருந்து பொற்குவியல் பூதம் கிளம்பி மேலே வந்துள்ளது.

கேரள உயர்நீதி மன்றத் தீர்ப்பை சரியென்று கூறிய உச்சநீதி மன்றம் கோயில் பாதாள அறையைத் திறந்து, அதிலுள்ள நகைகளையும், விலையுயர்ந்த பொருட்களையும் கணக்கீடு செய்து அறிக்கை தாக்கல் செய்யக் கூறியது.

அப்படி அதிகாரிகள் கணக்கெடுக்கச் சென்று பார்த்தபோது, அங்கு 6 பாதாள அறைகள் இருப்பது தெரிந்தது. அதற்கு அதிகாரிகள் ஏ, பி, சி, டி, இ. எப் எனப் பெயரிட்டனர். அதில் 5 அறைகளைத் திறந்த போது அதிசயம் நிகழ்ந்தது. ஏராளமான தங்கக்காசுகள், தங்கக் கட்டிகள், நகைகள், வைரம், வைடூரியப் புதையல்கள், மாயாஜாலப் படத்தில் வருவதுபோல நம்பமுடியாத அளவுக்குப் பொற்குவியல்கள் அப்பப்பா! எப்படி . . . ? அதிகாரிகளுக்கு ஒன்றுமே புரியவில்லை. வைரக்கற்கள், நாகரத்தினம் சுத்தத்தங்கத்தால் ஆன 'ஹிரண்ய கர்ப்ப பாத்திரம்' என நாம் கேட்டிராத, பார்த்திராத தங்கக்குகை ரகசியங்கள். ஆக மொத்தமாக 1.5 லட்சம் கோடிக்கு மேல் பொற்குவியல் இருப்பதாக தற்காலிகமாக கணக்குக் கூறப்பட்டுள்ளது.

இதில் 6வது பாதாள அறை திறப்பதில் சிக்கல். அதை திறந்தால் தெய்வ குற்றம் நிகமும் என அச்சுறுத்தல். நாகபாம்புப் படைகள், படமெடுத்து விஷத்தைக் கக்கும் என்ற பயமுறுத்தல். என்ன செய்வதென்று மக்களுக்கும் தெரியவில்லை, நீதிமன்றத்திற்கும் புரியவில்லை போங்கள்.



இந்த நிலையில் திருவிதாங்கூர் மன்னர் குடும்பமும், கோவில் நிர்வாகமும் சேர்ந்து கோவிலில் தேவ பிரசன்னம் என்ற சோதிட நிகழ்ச்சியை நடத்தியது.

அதில் 'பி' என்ற 6வது அறையைத் திறந்தால், நாட்டுக்கும், மக்களுக்கும், மன்னர் குடும்பத்திற்கும் கேடு நிகழும் என்ற பயமுறுத்தல் கூறப்பட்டுள்ளது.

இது இனி எப்படிப் போய் முடியுமோ தெரியவில்லை. நான் இதை எழுதி முடித்து, நூலாக வெளிவரும்போது என்ன முடிவு ஏற்படும் என்றும் தெரியவில்லை.

இருப்பினும் 108 திவ்யதேசத்தின் வரலாற்றை எழுதும் எனக்கு, அதில் ஒன்றான இந்தக் கோயில் சாதாரணமாக இருந்து இப்போது உலக சரித்திர கோயிலாக மாறியிருப்பதால் இதை விரிவாக எழுத வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதனால் எழுதினேன். நீங்கள் அதிசயமான முதல் பணக்காரக் கோயிலை சுற்றுலாவாகச் சென்று பார்த்து, தரிசித்து வரலாம்.

"அனந்தபத்ம நாபன் அதிசயக் கோவில்
எனத்தான் எழுந்த(து) இன்று - கனகம்
வைரங்களும் வெள்ளி வைடூரி யமுமாய்
வையத்தி லுயர்ந்தது இன்று!"

திவ்யதேசம் - 87



மூலவர் : ஆதிகேசவப் பெருமாள்

தாயார் : மரகதவல்லி நாச்சியார்


மங்களாசாசனம் :

நம்மாழ்வார் : 3722 - 3732

மொத்தம் : 11 பாசுரங்கள்

திருவட்டாறு


"வாட்டாற்றா னடிவணங்கி
மாஞாலப் பிறப்பறுப்பான்
கேட்டாயே மடநெஞ்சே
கேசவனெம் பெருமானை
பாட்டாயப் பலபாடிப்
பழவினைகள் பற்றறுத்து,
நாட்டாரோ டியல்வொழிந்து
நாரணனை நண்ணினமே"



என்று இத்தலத்தை நம்மாழ்வார் பாடுவார்.

இந்தப் பாடல் நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தில் 3723 ஆம் பாடலாக வருகிறது. 3722 ஆம் பாடல் முதல் 3732 ஆம் பாடல் வரை 10 பாடல்களை நம்மாழ்வார் பாடியுள்ளார். நம்மாழ்வார் இத்தலத்தைப் பாடிய காலம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு ஆகும்.

இந்தக் கோயில் சைவ, வைணவ சமயங்களுக்கு பாலமாக விளங்குகிறது. இந்த ஆதிகேசவப் பெருமாள் கோவிலைச் சுற்றி, முஞ்சிறை, திருக்கிறிச்சி, திற்பரப்பு, திருநந்திக்கரை, பொன்மனை, பன்னிபாகம், கல்குளம், மேலாங்கோடு, திருவிடைக் கோடு, திருவிதாங் கோடு, திருப்பன்றிக் கோடு, நாட்டலம் என்று 12 சிவலாயங்கள் உள்ளன. மாசி மாதத்தில் மகாசிவராத்தியின் போது பக்தர்கள் இந்த 12 சிவாலயங்களுக்கும் சென்று தரிசனம் செய்துவிட்டு, 'கோபாலா கோவிந்தா' என்று பாடியவாறே இந்த கோயிலை வந்து அடைவது வழக்கமாக உள்ளது. இந்த 12 சிவாலயங்களும் உருவானதற்கு வைணவ மரபு சார்ந்த வாய்மொழிக் கதை இருப்பதாகக் கூறுவர்.



புறநானூற்றில் இத்தலத்தைப் பற்றிய செய்தி வருகிறது.

இந்த கோயில் வடிவமைப்பில்தான் திருவனந்தபுரம் கோயில் கட்டப்பட்டுள்ளது எனக்கூறப் படுகிறது. இந்தக் கோயிலுக்கு மூன்று வாயில்கள் உள்ளன. பெரிய பிரகாரங்களும் உள்ளன. கிருஷ்ணன் சந்நிதியும் உள்ளது. கர்ப்பகிரகத்தில் மூலவர் திருமுகத்தின் மேல், மாலை வேளையில் இயற்கையாக சூரிய ஒளி விழும்படியாக கோயிலைக் கட்டியுள்ளார்கள்.

கேசி என்ற அசுரன் தேவர்களைத் துன்புறுத்த தேவர்கள் தங்களைக் காப்பாற்றும்படி பகவானிடம் சென்று முறையிட்டார்கள். பகவானும் கேசியுடன் மல்யுத்தம் செய்து அவனைக் கீழே தள்ளி அவன்மேல் படுத்துக் கொண்டார். அப்போது கேசியின் பத்தினி ஆசூரி கங்கையிடம் சென்று வேண்ட, கங்கை தாமிரபரணியுடன் வெள்ளப் பெருக்காக ஓடிவந்தாள். அப்போது பகவான் பூமாதேவிக்கு உத்தரவிட, பூமாதேவி பகவான் இருந்தவிடத்தை மேடாக்கினாள். அப்போது கங்கையும், தாமிரபரணியும் பகவானை வணங்கி மாலை போட இரண்டாகப் பிரிந்து வட்டவடிவமாக சென்றார்கள். அதனால் இந்த தலத்திற்கு திருவட்டாறு என்ற பெயர் உண்டாயிற்று.

ஆதிகேசியை பகவான் தோற்கடித்ததால் பகவானுக்கு ஆதிகேசவர் என்று பெயர் உண்டாயிற்று. கங்கையும், தாமிரபரணியும் பிரிந்த இடம் "மூவாத்து முகம்" என்றும் "தோதை பிரளி" என்றும் வழங்கி வருகிறது.

கருவறையிலுள்ள ஆதிகேசவப் பெருமானின் அளவு 22 அடி நீளமாகும். அவ்வாறு பள்ளி கொண்டிருக்கும் அப்பொருமாளை மூன்று வாசல் வழியாகச் சென்றுதான் நாம் அவரது திருமேனியை தரிசனம் செய்ய முடியும். இவ்வாறுதான் திருவனந்தபுரம் அனந்தபத்மநாபசாமமி கோவிலும் கட்டப்பட்டுள்ளது.

ஆதிகேசவன் பாதுகாப்புக்கு ஐந்துதலை நாகம் குடைவிரித்துக் காணப்படுகிறது. பெருமாள் அருகில் ஸ்ரீதேவி, பூதேவி காட்சியளிக்கிறார்கள். ஆதிகேசவன் அருகில் சிவலிங்கம் காணப்படுகிறது. இது சைவ-வைணவ ஒற்றுமைக் காட்சியாகும்.

முதலாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டு உட்பட 45-க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் இத்தலத்தில் உள்ளன. சோழர்கள், வேணாட்டு அரசர்கள், திருவிதாங்கூர் அரசர்கள் ஆகிய மூன்று மன்னர்கள் காலத்தில் இந்தக் கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் உண்ணாழியைச் சுற்றி அமைந்துள்ள திருச்சுற்று மாளிகை, தஞ்சைப் பெருங் கோயில் திருச்சுற்று மாளிகையின் கலைவடிவில் கட்டப்பட்டுள்ளது. இந்த கோயில் கேரளப் பாணியிலேயே கட்டப்பட்டுள்ளது.



இக்கோயிலின் நான்கு வெளி பிரகாரங்களிலும் 224 தூண்களால் பாவை விளக்குள் வெவ்வேறு விதமாக செதுக்கப்பட்டுள்ளன. இத்தூண்களில் 2300 சிற்பங்கள் உள்ளன.

தீயசக்திகளை தம் பாம்பமையில் அழுத்தி வைத்துக் கொண்டு, அவைகள் மேலே எழுந்து விடாதவாறு கேசவன் உலகைக் காத்து வருகிறார் என்பது இத்தல புராணம் ஆகும்.

இந்தக் கோயிலில் பக்கத்திலேயே பத்மநாபபுரம் அரண்மனை, திருச்சிதறாறு குடைவரைக் கோயில், திற்பரப்பு அருவி, பழமையாக மகாதேவர் கோயில், திருநந்திக்கரை குடைவரைக் கோயில், பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணை ஆசியாவிலேயே மிக உயரமான மாத்தூர் தொட்டிப்பாலம் முதலியன உள்ளன.

இந்தத் தலம் முற்றிலும் மலையாளக் கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இந்தக் கோயில் நாகர்கோவில் திருவனந்தபுரம் சாலையில் 30 கி.மீ. தூரத்தில் உள்ளது. நாகர்கோவிலிருந்து தக்கலை அல்லது மார்த்தாண்டம் சென்று அங்கிருந்து 6 கி.மீ. தூரத்தில் வேறு பேருந்து மாறிச் செல்ல வேண்டும்.

இப்போது திருவனந்தபுரம் அனந்தபத்மநாபசாமி கோவிலில் உள்ள பாதாள அறையில் காணப்பட்ட 1.5 லட்சம் கோடிக்கும் மேல் உள்ள தங்கம், வைரம், வைடூரியம், வெள்ளி, செம்பு முதலிய பொற்குவியில் அதிசயத்தால், அந்தக் கோவில் உலகப் பிரசித்தி பெற்ற கோயிலாக புகழ் பெற்றுவிட்டது.

அந்தக்கோயில் இந்தக் கோயிலை பார்த்துத்தான் கட்டப்பட்டது. அந்தக் கோயிலுக்கும் இந்தக் கோயிலுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. நானும் இந்தக் கோயிலை நேரடியாகப் பார்த்த வகையில் அது உண்மையாக இருக்கும் என்றே நம்புகிறேன். இந்தக் கோயிலிலும் அந்தக் கோயில் போல் ஏராளமான நகைகள் இருந்துள்ளது. ஆனால் அவைகள் கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இருந்தாலும் இன்னும் அந்தக் கோயில் போல் இந்தக் கோயிலிலும் பாதாள சுரங்க அறைகள் இருக்குமோ எனத்தோன்றுகிறது.

அரசாங்கம், நீதிமன்றம், தொல்பொருள்துறை ஆராய்ச்சியாளர்கள், பொதுமக்கள், பக்தர்கள் இதுபற்றி ஆலோசிக்கலாம்!

"திருவட்டார் ஆதிகேச வப்பெருமாள் கண்டேன்
பெருங்கல்லில் மண்டபம் நேர்த்தி - உருவம்
கிடந்தாண்ட மூநிலை விந்தையாம் காட்சி
படர்ந்த மலருடல் பார்"

திவ்யதேசம் - 88



திருவண்பரிசாரம்
(திருப்பதிசாரம்)

மூலவர் : திருக்குறளப்பன்
திருவாழ்மார்பன்
வீற்றிருந்த திருக்கோலம்

தாயார் : கமலவல்லி நாச்சியார்

மங்களாசாசனம் :

நம்மாழ்வார் : 3475

மொத்தம் : 1 பாசுரம்

"வருவார் செல்வார் வண்பரி சாரத் திருந்தஎன்
திருவாள் மார்வற் கென்திறம் சொல்லார் செய்வதென்
உருவார் சக்கரம் சங்கு சுமந்திங் கும்மோடு
ஒருபா டுழல்வா னோரடி யானு முளனென்றே?"

என்று நம்மாழ்வார் இத்தலத்தைப் பற்றி ஒரு பாசுரம் மட்டும் பாடியுள்ளார். இது 3475 ஆம் பாடலாக வருகிறது.

நம்மாழ்வாரின் தாயார் உடைய நங்கை அவதரித்த திருத்தலம் இதுவாகும். அவதரித்த இல்லம் வாயு மூலையில் அமைந்துள்ளது. நம்மாழ்வார் குழந்தை பருவத்தில் இருப்பதுபோல ஒரு அழகிய சிலை உள்ளது.

நரசிம்ம பகவான் இரண்யனை சம்ஹாரம் செய்துவிட்டு, உக்ரரூபமாக இருந்தபோது, லட்சுமி அதற்குப் பயந்து இங்கே தவம் செய்ய வந்தாராம். அப்போது பிரகலாதன் பகவானைப் பணிந்து வேண்ட, பகவான் சாந்தமாகி தவமிருந்த லட்சுமியைத் தேடி வந்தாராம். அதுகண்ட லட்சுமியார் ஆனந்தமாகி, பகவானின் திருமார்பில் குடி கொண்டாராம். அதனால் இப்பெருமாளுக்கு 'திருவாழ்மார்பன்' என்ற நாமம் ஏற்பட்டதாம். லட்சுமி இங்கே குடிகொண்டிருந்ததால் இதற்கு 'திருப்பதி சாரம்' என்ற பெயரும் ஏற்பட்டதாம்.

இங்கே உடைய நங்கை விஷ்ணு பக்தையாக அவதரித்து, காரி என்ற விஷ்ணு பக்தருக்கு மனைவியானார். பிறகு அவர் பிள்ளை பேறு வேண்டி விஷ்ணுவை நோக்கி 41 நாட்கள் விரதமிருந்தார். பிறகு ஆவணி சுக்ல ஏகாதசியான வாமன அவதார தினத்தில் ஊஞ்சல் உற்சவம் நடத்தினார். அதன் காரணமாக உடைய நங்கை கர்ப்பவதியாகி 43வது நாள் வைகாசி விசாகத்தன்று நம்மாழ்வார் அவதரித்தார். பிறகு நம்மாழ்வார் ஆதிநாதன் ஞான அருள் பெற்று, தவழ்ந்து சென்று புளியமரப் பொந்தில் புகுந்து, யோக முத்திரைப்பெற்று, பத்மாசன யோகத்தில் ஆழ்ந்தார். அப்போதுதான் மதுரகவியாழ்வார் இவரை தேடி வந்து, சீடராகி, நம்மாழ்வார் திருவாய் மொழியை அருளினார். இதுதான் திருப்பதி சாரத்தின் தலபுராணம் ஆகும்.

அனுமர் வேண்ட, அகத்தியர் இங்கே இராமாயணம் அருளியதாகவும் கூறுவர். குலசேகர பாண்டியன் இங்கே மண்டபம் கட்டி, கோபுரம் நிர்மானித்ததாகவும் கூறுவர்.

நாகர்கோவிலுக்கு வடக்கே 4 கி.மீ. தூரத்தில் இத்தலம் உள்ளது.

“திருவண் பரிசாரம் செப்பி டுவார்கள்
திருப்பதி சாரம் எனவும் - தருவாய்
திருவாழ்மார் பன்சொல் திருக்குற எப்பன்
அருள்வார் அனைத்தும் அறிந்து”

குலசேகர ஆழ்வார்



குலசேகரர்

சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் தொகை என்னும் பெரிய புராணத்தில் 63 நாயன்மார்கள் சேரமான் பெருமாள் நாயனாரும் ஒருவர். இவர் நாயனார் மட்டுமல்ல. அன்றைய சேர நாட்டின் திருவஞ்சைக்களத்தை ஆண்ட மன்னனும் ஆவார். தினந்தோறும் இவர் சிவபூசை செய்து விட்டுத்தான் அரச மண்டபத்திற்குச் செல்வார். அவ்வாறு இவர் சிவபூஜை செய்யும்போது சலங்கை ஓசை கேட்கும். ஒருநாள் அவ்வாறு சலங்கை ஓசை கேட்காது போகவே, சேரமான் பெருமான் அதற்காகத் தன்னை மாய்த்துக் கொள்ள போக, சிவன் வந்து தடுத்து, நான் சுந்தரர் பாடலில் சொக்கிபோய் விட்டதால் குறித்த நேரத்தில் உமக்கு சலங்கை யொலியுடன் கூடிய அருட்காட்சி தரமுடியவில்லை என்று கூறினார். அது கேட்ட சேரமான் எனக்கும் மேலாக உம்மை ஈர்த்த அந்த சுந்தரரை எமக்கு தோழமை கொள்ளச் செய்வாய் என்று கூற சுந்தரரை இறவைன் சேரமான் பெருமாளுக்கு அறிமுகப்படுத்தினார். இரண்டுபேரும் நண்பர்கள் ஆனார்கள். சேரநாட்டு திருவஞ்சைக் களத்திற்கும், சோழ நாட்டுத் திருவாரூருக்கும் நட்பு ஏற்பட்டது. போக்குவரத்தும் ஏற்பட்டது.

கடைசியாக சுந்ததரர் திருவஞ்சைக் களத்தில் இருக்கும் அவருக்கு மண்ணுலகை விட்டு விண்ணுலக கயிலாயம் செல்ல அவா ஏற்பட்டது. சிவபெருமானை வேண்ட அவரும் சுந்தரரை கயிலாயம் வர அருளினார். அதையறிந்த சேரமான் தானும் தன் பட்டத்தைத் துறந்து கயிலாயம் சென்றடைந்தார்.

முன்னரோ, பின்னரோ அந்த சேரமான் பெருமாள் குலவழியே வந்தவரே குலசேகர ஆழ்வார் ஆவார். உயர்ந்த மலைகளும், பரந்த கடலும், இயற்கை எழிலும் சூழ்ந்த சேரநாட்டில் திருவஞ்சைக் களம் கொல்லி நாட்டை ஆண்டவன் திடவிரதன் என்ற மன்னன் அவனுக்கு திருமாலின் திருவருளால் கௌஸ்துபமணியின் அம்சமாக பராபவ ஆண்டில் மாசித்திங்கள் புனர் பூச நட்சத்திரத்தில் வெள்ளிக்கிழமை நாளில் ஒரு அழகான ஆண்குழந்தை பிறந்தது.

பிறகு அந்த குழந்தைக்கு மன்னர் மரபுக்கேற்றபடி வளர்ப்பும், கல்விக்கலைகளும், போர்க்கால பயிற்சியும் கொடுக்கப்பட்டு, ஒரு மாவீர மன்னராக ஆக்கப்பட்டார்.

குலசேகரன் என்ற நாமம் தரித்த அந்த மன்னன் சேர, சோழ, பாண்டிய நாடுகளை வென்று தன்புகழை நிலை நாட்டினார்.

காலக்கணக்கில் குலசேகரன் ஒரு ஆண் ஒரு பெண்ணுக்கு தந்தையுமானார். அதற்குப் பிறகு அவருக்கு ஆன்மீகத்தில் நாட்டம் ஏற்பட்டது. குறிப்பாக அவருக்கு இராமாயணத்திலும் மகாபாரதத்திலும் ஈடுபாடு ஏற்பட்டது. அதனால் இவருக்கு இராமபக்தி மேலிட்டது.

பித்து நிலை கொண்ட இவரது ராமபக்தியைக் கண்ட அரண்மனை சகாக்கள், ஒருநாள் இவர் கொடுத்த பெருமாளுக்குச் சமர்ப்பிக்கும் வைர நகையொன்றைத் திருடிவிட்டு, பழியை பெருமாள் தொண்டர் மீது சுமத்தி விட்டார்கள்.

அதை நம்பாத குலசேகர பெருமாள், பெருமாள் பக்தர்கள் அப்படி செய்ய மாட்டார்கள். அப்படி செய்திருந்தால் அந்த தண்டனையை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறி, ஒரு குடத்தில் விஷப்பாம்பை இடக்கூறி தன் கையை அதற்குள் விட்டு, பெருமாள் பக்தர்கள் வைரத்தை எடுத்திருந்தால் விஷப்பாம்பு என்னை தீண்டட்டும் என்று கூறினார். ஆனால் அந்தப் பாம்பு அவரைத் தீண்டாமல் வெளியே வந்து, இவரை வலம் வந்து வணங்கிச் சென்றது.

அந்த நிகழ்வுக்குப் பிறகு குலசேகர பெருமாள் துறவறம் பூண்டு, திருவரங்கம் சென்று அடியார்க்குத் தொண்டு செய்யலானார். பிறகு அவர் பல திவ்யதேசங்களுக்கும் சென்று பெருமாளை மங்களாசாசனம் செய்தார்.

திருவரங்கம், திருக்கண்ணபுரம், திருச்சித்ரக்கூடம், திருவித்துவக்கோடு, திருவேங்கடம், திருவயோத்தி, திருப்பாற்கடல் ஆகியவை இவரால் பாடப்பட்ட திவ்யதேசங்களாகும்.

எனினும் குலசேகர ஆழ்வார் இராமன் மீதே மிகப்பற்றுக் கொண்டு விளங்கினார். ஆதலார் இவர் பாடிய பாசுரத் தொகுப்பிற்கு 'பெருமாள் திருமொழி' என்றே பெயராகும்.

இராமாயணத்தை குலசேகர ஆழ்வார் 10 பாக்களில் விவரித்துக் கூறியுள்ளார். அதற்கு "திருச்சித்ரக் கூடம் பதிகம்" என்று பெயராகும்.

இவரது திருக்கண்ணபுரத்து மங்களாசாசனப் பாடல்கள் ராமன் புகழை மேலும் மேம்படுத்துவதாகும்.

மேலும் இவரது திருவித்துவக்கோடு திவ்யதேசத்தைப்பற்றி "திருவித்துக்கோட்டுப் பதிகம்" என்றும் பாடியுள்ளார்.

இவர் திருமலை – திருவேங்கடம் பெருமாளை தரிசித்த போது, அவர் முன்னே நின்று, "திருவேங்கடா உன்னை நான் முன்னே நின்று ஒருநாழி கூட பார்க்க முடியவில்லை. ஆகவே உன் முன்னிலையில் ஒரு படிக்கல்லாகக் கிடந்து இடைவிடாது உன் பவளவாயை பார்க்கிறேன்" என்று பாடுகிறார்.

திருப்பதி தரிசனம் என்பது இப்போது நமக்கு எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஒருநாள் இரண்டு நாட்கள் நீண்ட வரிசையில் நின்று, பிறகு முட்டி மோதி, அவர் சன்னதி வரும்போது நம்மை நின்று தரிசிக்கவிடாமல் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவார்கள். அந்த அவமானத்தையும், நாம் திருவேங்கடபெருமாள் கொடுத்த வருமான அருட்பிரசாதம் என்று பெருமைப்பட்டு வருவோம்.

இந்தக்கதி அந்த காலத்திலேயே நமது குலசேகர பெருமாளுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். படையெடுத்துப் போய் பலநாடுகளை கொன்று முடிசூட்டி அரண்மனைப் படியெங்கும் படைத் தளபதியர் நிற்க பாராண்ட மன்னன் எனக்கு இங்கு அடி போட்டு "போடா போடா" என்று கூறும் அவமான வாழ்த்துத் தேவைதானா என்று அந்த திருப்பதி ஆண்டவனை நொந்து போய் கேட்டிருப்பார் என்று எண்ணுகிறேன்.



குலசேகரர்


அதனால்தான் எப்படியோ வேங்கடப் பெருமாளே விதி என்று வந்துவிட்டேன். இனி என்னுடைய மண்ணை எப்படிப் போய் மிதிப்பது? ஆகவே உன்னுடைய படிக்கல்லாகவே இருந்து விடுகிறேன் என்று பாடுகிறாரோ?

"செடியாய வல்வினைகள்
தீர்க்கம் திருமாலே
நெடியானே வேங்கடவா!
நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரு
மரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன்
பவளவாய் காண்பேனே"

குலசேகர ஆழ்வார் பாடிய இந்தப் பாடல் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் 685வது பாடலாக வருகிறது.

இறுதி காலத்தில் குலசேகர ஆழ்வார் திருப்பதி சாரம் போன்ற திருத்தலங்கலில் கால்பதித்துப் பாடி, பிறகு பாண்டிய நாடு கால்பதித்து திருநெல்வேலி மாவட்டம் மன்னார் கோயில் மண்ணில் பரமபதம் எய்தினார்.

திவ்யதேசம் - 89



திருக்குறுங்குடி

மூலவர் : நின்ற நம்பி
இருந்த நம்பி, வடுக நம்பி
வைஷ்ணவ நம்பி
திருப்பாற்கடல் நம்பி
மலைமேல் நம்பி

உற்சவர் : அழகிய நம்பி

தாயார் : குறுங்குடி வல்லி நாச்சியார்

தீர்த்தம் : திருப்பாற்கடல்
பஞ்சதுறை சிந்துநதி

மங்களாசாசனம் :

பெரியாழ்வார் : 71
திருமழிசையாழ்வார் : 813
திருமங்கையாழ்வார் : 1005, 1399, 1470, 1788-1807, 2065, 2674(114)
நம்மாழ்வார் : 2782, 2986, 3161-71

மொத்தம் : 40 பாசுரங்கள்

"நின்ற வினையும் துயரும் கெடமா மலரேந்தி
சென்று பணிமி னெழுமின் தொழுமின் தொண்டீர்காள்
என்றும் மிரவும் பகலும் வரிவண் டிசைபாட
குன்றின் முல்லை மன்றிடை நாலும் குறுங்குடியே"

என்று திருமங்கையாழ்வார் நாலாயிர திவ்யப் பிரபந்தம் 1806 ஆம் பாடலில் பாடுவார்.



திருமங்கையாழ்வார் பரமபதம் அடைந்த திருஊர் இதுவாகும்.

பெரியாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார் ஆகியோரும் இத்திருத்தலம் பற்றி பாடியுள்ளனர்.



ஒரு ராட்சசன் ஒரு பிராமணனைக் கொல்ல வந்த போது, அப்படிக் கொல்வது பாவம் என்று அந்த பிராமணன் கூறுகிறான். அதற்கு அந்த ராட்சசன் அது என்தொழில் என்று கூறுகிறான். இவ்வாறு அவர்கள் விவாதம் தொடர்ந்து கொண்டே போவதைப் பார்த்த பகவான், ஒரு வேடன் போல வேடம் தரித்து அவர்களுக்கு உபதேசம் செய்கிறார். அவர்கள் அதை ஏற்று திருப்பாற்கடல் நீரில் குளித்துவிட்டு, அங்கிருந்த ரிஷிகளின் உபதேசம் பெற்று, அங்கிருந்த அகத்தியரை வணங்கி முக்தி பெற்று சென்றார்கள் என்பது இத்தலத்தின் வரலாறு ஆகும்.




இந்தக் கோயிலுக்கு செல்ல திருநெல்வேலியிலிருந்து நேரடிப் பேருந்து உண்டு. தூரம் 25 கி.மீ.

இங்குள்ள மலைமேல் நம்பி பெருமாளை தரிசிக்க நான் பேருந்தில் சென்று, பிறகு 10 கி.மீ. மேல் மலைமேல் நடந்தே சென்றேன் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருநெல்வேலியிலிருந்து 33 கி.மீ. தூரம் நான்குநேரி சென்று அங்குள்ள கோயிலை தரிசித்து விட்டு, பிறகு பேருந்து மாறி இங்கு வரலாம்.

"திருபாற் கடல்நம்பி மேல்மலை நம்பி
திருவடுக நம்பி திருவைந் - துருவாய்
குறுங்குடியில் நின்று குணம்மிகக் கொண்டு
நறும்மணமாய்க் காண்பார் நகைத்து"

திவ்யதேசம் - 90



மூலவர் : தோதாத்ரி

உற்சவர் : தெய்வநாயகன்

தாயார் : சிரீவர மங்கை

தீர்த்தம் : இந்திர தீர்த்தம்

<u>மங்களாசாசனம் :</u>

நம்மாழ்வார் : 3183-3193

மொத்தம் : 11 பாசுரங்கள்

சிரீவரமங்கை
(வானமாமலை - நாங்குநேரி)

"ஏன் மாய்நிலங் கீண்டயென் அப்பனே
கண்ணா! என்று மென்னை யாளுடை
வானநா யகனே! மணிமா ணிக்கச் சுடரே
தேன மாம்பொழில் தண்சிரீ வரமங்கலத்
தவர்கை தொழவுறை
வான மாமலை யேஅடி யேன்தொழ வந்தருளே"

என்று நம்மாழ்வார் இத்திருத்தலம் பற்றி 3188 ஆம் பாடலில் பாடுவர்.

பரமபதநாதனாகிய திருவைகுண்டநாதன் இந்த நில உலகத்தில் மக்கள் மகிழ்ச்சியாக நம்மை வந்து வணங்கவும், அவர்கள் பரமபதம் அடையும் வரை நம்பிக்கையோடு வாழவும் அருள்செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறார். அந்த ஆசையை உரோமசர் மூலம் நிறைவேற்றுகிறார்.

உரோமசர் என்பவர் ஒரு தவமுனிவர். தன் உடல் முழுவதும் அடர்த்தியான ரோமம் உடையவர். எனவே அவர் உரோமசர் எனப் பெயர் பெற்றார்.

படைப்புத் தொழிலுக்கு கடவுளாகிய பிரம்மன், அந்த தொழிலுக்காக தனக்கு அளிக்கப்பட்ட நீண்ட ஆயுளுக்காக மிகவும் கர்வம் கொண்டிருந்தார்.

பிரம்மனுடைய வயது என்பது நாம் கணக்கிட்டால் புரிந்து கொள்ள முடியாதது. க்ருதயுகம், தரோதயுகம், தவாபரயுகம், கலியுகம் என நான்கு யுகங்களைக் கூட்டினால் 43,20,000 ஆண்டுகள் என்று கணக்கு வரும். அதை சதுர்யுகம் என்று கூறுவர். இவ்வாறு ஒரு சதுர் யுகங்கள் சேர்ந்து ஒரு மன்வந்தரம் என்று வரும். 14 மன்வந்தரம் ஒரு கல்பம் என்று வரும். இவ்வாறு ஒரு கல்பம் முடிந்த அடுத்து தொடங்கும் ஆயுசை பிரம்மன் பெற்றிருந்தார்.



உரோமசர் கங்கைக் கரையில் பற்பல ஆண்டுகள் தவம் செய்து, முதிர்ச்சியடைந்த பக்தியை அடைய, பரமபதநாதன் அவருக்கு காட்சி தந்தார். அப்போது பரமபதர் உரோமசரை மக்களுக்கு சேவை செய்ய வேண்ட, உரோமசர் அவ்வாறு சேவை செய்ய பரமபதர் நிலவுலகில் வந்து அவதரிக்கவும், தாம் சேவை செய்ய பிரம்மனின் நீண்ட ஆயுளை தமக்கு தரவும் வரம் வேண்ட, இறைவன் அவருக்கு அந்த வரத்தைத் தந்தார். அவ்வாறே பரமபத நாதரும் இங்கே வானமாமலையாக வந்து அவதரித்தார்.

பிரம்மனின் கையிலிருந்த வேதத்தை மதுகைடபர்கள் பிடிங்கிக் கொண்டு சென்ற போது, விஷ்ணு பகவான் அவர்களைத்தன் மடிமீது வைத்துக் கொன்று அவர்களுடைய பூத உடலை பூமியில் வீசி எறிந்தார். ஆனால் பூமித்தாய் மாமிசத்தால் அழுக்கடைந்தாள். அந்த அழுக்கு அகல இங்கே வானமாமலை வந்து தவமியற்றினார். தவமுடிவில் அவர் இங்கே சுயம்புவாக உருவானார். அவரோடு திருத்தேவியும் வந்து சேர்ந்து கொண்டார்.


காரி மகாராசா என்பவர் பாண்டிய நாட்டிற்குட்பட்ட இந்த பகுதியை ஆண்டு வந்தார். அவர் மகப்பேறின்றி வருத்தப்பட்டு தமக்கு மகப்பேறு கிட்ட திருக்குறுங்குடி நம்பியை வேண்டினார். அப்போது நம்பியாகிய இறைவன் அவருக்கு காட்சியளித்து, தாமே அவருக்கு மகனாகப் பிறக்கப் போவதாகக் கூறினார். அதுகேட்டு மகிழ்ந்த காரியார் நம்பிக்கு பெரியதாக ஒரு கோயில் கட்ட விரும்பினார். அப்போது நம்பி காரியார் கனவில் தோன்றி, "'தோதாத்ரி நாதர் ஒரு இடத்தில் மண்ணில் புதைந்துள்ளார். அந்த இடத்திற்கு செல்ல எறும்புகள் வழிகாட்டும். அந்த இடம் சென்றால் கருடன் வானில் வட்டமிடும்" என்று கூறி மறைந்தது.

அவ்வாறே சென்ற காரியார், அந்த இடத்திலிருந்த நீரை நான்கு புறமும் வெட்டி ஏரியாக செய்து, இந்த கோயிலைக் கட்டினார். அதனால் இதற்கு நான்குனேரி என்று பெயர் வந்தது. அதன்பிறகு காரியாருக்கும் அவர் மனவை சிரீவரமங்கல தேவிக்கு ஒரு மகவு பிறந்தது. அவரே நம்மாழ்வார் ஆவார். அவர் அந்த ஊருக்கு சிரீவரமங்கல நகர் என தாயார் பெயரை சூட்டினார். வானத்தைத் தொடும் அளவு இந்த மலை இருந்ததால் இதற்கு வானமாமலை என்று பெயர் வந்தது. அதுவே வடமொழியில் தோதாத்ரி என்பதாகும். இதுவே சிரீவரமங்கை வரலாறாகும்.


இந்த கோயில் திருநெல்வேலியிருந்து 33 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருநெல்வேலி புதிய பேருந்து நிலையத்திலிருந்து நேரடியாகச் செல்லலாம். அல்லது வள்ளியூர் சென்று பேருந்து மாறிச் செல்லலாம்.

"நாங்குனேரி வானமலை நல்லருள் காட்டுவான்
ஓங்கிடும் செல்வங்கள் ஒற்றுமை - நீங்கிடும்
பாவங்கள் நோய்கள் பணிந்திட்டேன் நானங்கே
காவல் வரமங்கை காண்"


பாண்டிய நாட்டு திருப்பதிகள் - 18



பாண்டிய நாட்டுத் திருப்பதிகள்



பாண்டிய நாட்டு நவத்திருப்பதிகள்





நவதிருப்பதிகள் :

பழம்பெரும் பாண்டிய நாடு என்கின்ற தென்மாவட்டத்திலுள்ள நவதிருப்பதிகள் உட்பட்ட சில திவ்யதேசங்களை நாம் பார்க்கப் போகும்போது, அதைச் சுற்றியுள்ள சுற்றுலாத் தலங்கள், மற்ற கோயில்களையும் கணக்கில் எடுத்து, வரிசையாகப் பட்டியலிட்டுச் சென்றால், கால நேரமும், பணச்செலவும் குறையும். உடல் நிலையும் பாதிக்காது. அந்த வகையிலேயே முடிந்த அளவுக்கு எனது பயணத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

நவதிருப்பதிகள் செல்வோர் திருநெல்வேலியிலிருந்தோ அல்லது திருச்செந்தூரிலிருந்தோ தங்களது திருயாத்திரையைத் தொடங்கலாம். இப்பயணத்தில் திருச்செந்தூர் முருகன் கோயிலை தரிசிக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

அதுவும் குடும்பத்துடன் செல்பவர்கள், குடும்ப உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கேற்ப ஒரு காரோ அல்லது சிறிய வேனோ எடுத்துச் சென்றால் வரிசைப்பட்டியலிட்டபடி நவதிருப்பதிகளைப் பார்த்துவிட முடியும். பொதுவாக எல்லா கோயில்களுமே 12 மணி அல்லது 1 மணிக்கு மூடிவிடுவார்கள். அதற்குள் நாம் பெரும்பாலான கோயில்களைப் பார்த்து விடலாம்.

பிறகு மதிய உணவு சாப்பிட்டுவிட்டு சிறிது ஓய்வு எடுத்துவிட்டு, மாலை 4.00 மணிக்கு மீதிக் கோயில்களைப் பார்த்துவிடலாம். இடையிலே வேறுசில கோயில்களையும், குற்றாலம் போன்ற நீர்வீழ்ச்சிகளையும், வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டைகளையும் பார்க்கலாம்.

பிறகு அந்த இரவிலேயே கன்னியாகுமரி நாகர்கோவிலில் வந்து தங்கிவிட்டால், மறுநாள் காலை கன்னியாகுமரி கடற்கரையில் சூரிய உதயம் பார்த்துவிட்டு, அன்னையையும் தரிசிக்கலாம்.

அதன்பிறகு திட்டமிட்டுச் சென்றால், மலைநாட்டுத் திருப்பதிகளில் திருவனந்தபுரம், திருவட்டாறு, திருவண்பரிசாரம் என்னும் திருப்பதிச்சாரம் என்ற மூன்று திருத்தலங்களையும் பார்த்து விடலாம்.


பிறகு அடுத்தநாள் மதுரைப்பகுதியிலிள்ள திருவில்லிப்புத்தூர், திருத்தண்கால், மதுரைத் திருக்கூடல், அழகர்கோயில், திருமோகூர், திருக்கோட்டியூர், இராமநாதபுரம் திருப்புல்லாணி ஆகிய திருத்தலங்களையும் பார்க்கலாம். இதில் மதுரை மீனாட்சி கோயில் போன்றவையும் அடங்கும்.

இந்த வழிகாட்டுதல் அவரவர் வசதிக்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

நவதிருப்பதிகள் :

1. திருவைகுண்டம், 2. திருவரகுணமங்கை, 3. திருப்புளியங்குடி, 4. திருக்குளந்தை (பெருங்குளம்), 5. திருக்கோளூர், 6. ஆழ்வார்திருநகரி, 7. திருத்தொலைவில்லிமங்களம் (இரட்டைத் திருப்பதி, 8. தென்திருப்பேரை.

திவ்யதேசம் - 91



திருவைகுண்டம் (சூரியன்)

மூலவர் : திருவைகுண்டநாதன்
கள்ளப்பிரான்
நின்ற திருக்கோலம்
கிழக்கே திருமுகம்

தாயார் : வைகுந்தவல்லி - பூதேவி

தீர்த்தம் : பருகு தீர்த்தம், தாம்பரபரணி நதி

மங்களாசாசனம் :

நம்மாழ்வார் : 3571, 3575

மொத்தம் : 2 பாசுரங்கள்

"எங்கள்கண் முகப்பே உலகர்கள் எல்லாம்
இணையடி தொழுதெழுந் திறைஞ்சி,
தங்களன் பாரத் தமதுசொல் வலத்தால்
தலைத்தலைச் சிறந்துபூ சிப்ப,
திங்கள்சேர் மாடத் திருப்புளிங் குடியாய்!
திருவைகுந் தந்துள்ளாய்! தேவா,
இங்கண்மா ஞாலத் திதனுளு மொருநாள்
இருந்திடாய் வீற்றிடங் கொண்டே"



என்று இந்த தேசத்தை நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்வார். இந்தப் பாடல் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் 3571-வது பாடலாக வருகிறது.

இந்தத் தலம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். ஒன்பது கைலாயங்களில் இதுவும் ஒன்றாகும். முருகனைப்பாடி குமரகுருபரர் அவதரித்த திருத்தலமும் இதுவேயாகும். அவர்பெயரால் மடங்களும், பள்ளிக்கூடங்களும் கூட இருக்கிறது. இங்கு இராமானுசர் மடமும் இருக்கிறது.

பிரம்மன் எழுந்தருளியுள்ள சத்திய லோகத்தில் ஒரு காலத்தில் எங்கும் நீர் சூழ்ந்து கொண்டது. அப்போது சோமுகாசுரன் என்ற அரக்கன் பிரம்மனுடைய படைப்புத் தொழில் பற்றிய இரகசிய ஏடுகளை திருடி மறைத்து வைத்துவிட்டார். அதை கண்டுபிடிக்க பிரம்மா தாமிரபரணி நதியோரம் சோலைகள் சூழ்ந்த இந்த தலத்தைத் தேர்ந்தெடுத்து, கடுந்தவம் இருந்தார். அப்போது விஷ்ணு வந்து, பிரம்மாவுக்கு காட்சி தந்து இரகசிய ஏடுகளை மீட்டுக் கொடுத்தார்.



அப்போது பிரம்மா விஷ்ணு தமக்கு காட்சி கொடுத்த கோலத்திலேயே இங்கு காட்சியளிக்க வேண்டும் என்று வேண்ட அவ்வாறே விஷ்ணு காட்சியளிக்கிறார்.

இந்த நாட்டை ஆண்ட மன்னன் மக்களுக்கு நன்மை செய்யாது, தானே களியாட்டத்தில் ஈடுபட்டு வந்தான். அவனுக்கு பாடம் புகட்ட எண்ணிய வைகுண்ட நாதர், காலதூஷகன் என்ற திருடன் வேடமணிந்து, அரண்மணையில் கொள்ளையடித்து, அதில் பாதி செல்வத்தை மக்களுக்கு செலவு செய்து வந்தார். ஒருநாள் அவர் பிடிபட்ட போது, திருமால் மன்னனுக்கு காட்சி தந்தார். அப்போது மன்னன் தாம் செய்த தவறை உணர்ந்து மக்களுக்கு நன்மை செய்யத் தொடங்கினான். ஆகவே இந்த கோயிலில் உற்சவர் பெயர் கள்ளபிரான் என்று வழங்குவதாயிற்று.

ஒரு காலத்தில் இந்த திருவைகுண்ட திருக்கோயில் பூமியில் புதையுண்டு போனது. அப்போது இந்ததலம் உள்ள நாட்டை மணப்படைவீடு என்ற ஊரை தலைநகராகக் கொண்டு ஒரு பாண்டிய மன்னன் ஆண்டு வந்தான். அந்த பாண்டிய மன்னனின் பசுக்கள் இந்த தலத்தில் வந்து மேய்த்துப் போவது அப்போது வழக்கமாக இருந்தது. அதில் ஒரு பசு மட்டும் இந்த பூமியில் புதைந்த பெருமாள் கோயில் இடத்தில் மட்டும் பால் சொறிந்து செல்வதை வழக்கமாகச் செய்து வந்தது. ஒருநாள் இதை கண்டு பிடித்த மன்னன் தன் படையுடன் வந்து, அந்த இடத்தை தோண்டியபோது, இந்த பெருமாள் சன்னதி புதையுண்டது கண்டுபிடிக்கப்பட்டது. அதற்குப்பிறகு அந்த பாண்டிய மன்னன் இந்த பெருமாள் சன்னதியை அமைத்ததாகக் கூறுவர்.

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை 6-ம் தேதியும், ஐப்பசி 8-ம் தேதியும் சூரிய ஒளி இந்தப் பெருமானின் பாதத்தை தொட்டு செல்வது ஒரு சிறப்பாகும். அதற்காக இங்கே கொடிமரம் சற்று தள்ளி அமைக்கப்பட்டுள்ளது. இப்போதுள்ள கோபுரம் சந்திரகுல பாண்டியன் என்பவரால் அமைக்கப்பட்டதாகும். வீரப்பன் நாயக்கர் என்பவன் காலத்தில் கொடி மரமும் சந்தான சபாபதி காலத்தில் மண்டமும் கட்டப்பட்டதாம். இந்த கோயில்ல உற்சவமூர்த்தியை உருவாக்கிய சிற்பி, அதுமுடிந்து பார்த்த போது அவனே அதன் கலையழகில் மயங்கி, செல்லமாகக் கிள்ளி மகிழ்ந்ததால் அந்த இடத்தில் வடு உள்ளதை காணலாம்.

"திருவைகுண்டம் கள்ளபிரான் நின்றகோலம் கண்டேன்
பெரும்தா மிரபரணி பெய்ய - பெருமானே
வைகுண்ட வாசா! வைத்துள்ளேன் பேரன்பு
கைதூக்கிக் காட்டு கருணை"

திவ்யதேசம் - 92



மூலவர் : விஜயாசனர்

தாயார் : வரகுணமங்கை

தீர்த்தம் : அக்னி தீர்த்தம்
தேவபுட்கரணி

மங்களாசாசனம் :

நம்மாழ்வார் : 3571

மொத்தம் : 1 பாசுரம்


திருவரகுணமங்கை - நத்தம் (சந்திரன்)

"புளியங்குடிக் கிடந்து வரகுண மங்கை
இருந்துவை குந்தத்துள் நின்று
தெளிந்தவென் சிந்தை அகங்கழி யாதே
என்னையாள் வாயெனக் கருளி
நளிந்தசீ ருலகம் மூன்றுடன் வியப்ப
நாங்கள்கூத் தாடிநின் றார்ப்ப
பளிங்குநீர் முகிலின் பவளம்போல் கனிவாய்
சிவப்பநீ காணவா ராயே"

என்று இத்தலத்தை நம்மாழ்வார் பாடுவார். இந்த பாடல் திவ்யப்பிரபந்தத்தில் 3571 ஆம் பாடலாக வருகிறது.

வரகுணமங்கை என்ற இத்தலம் நத்தம் என்ற பெயரிலேயே விளங்கி வருகிறது.

வேதவி என்ற பக்தர் ஆசனதை என்ற மந்திரம் வேண்டி இறைவனை நோக்கி தவமிருந்தார். அப்போது திருமால் ஒரு பிராமண கிழவராக வேடமிட்டு வந்து "அந்த மந்திரத்தை அடைய வரணகுண மங்கைதான் சிறந்தது என்று கூற, அந்த பக்தன் இத்தலத்திற்கு வந்து கடுந்தவமிருந்து, திருமாலின் அருள் பெற்று, பரமபதம் அடைந்தார் என்று கூறுவர். அதனால் இத்தலத்தின் இறைவனுக்கு விஜயாசனர் நாமம் வந்தது என்று கூறுவர்.



பிரம்மாவின் கர்வத்தை அழித்த ரோமேச மகரிஷிக்கும், கணவனின் உயிர்மீட்ட சாவித்ரிக்கும், அக்னி தேவனுக்கும் இறைவன் சத்திய நாராயணனாக காட்சியளித்த இடம் இது. ஆதிசேடன் குடைபிடிக்க விஜயசானர் என்ற திருநாமத்தில் இறைவன் இங்கே காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்.

திருவைகுண்டத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் இந்த தலம் உள்ளது.

"நத்தம் வரகுண மங்கை விஜயசானர்
சத்தியம் வெற்றிபெற கண்டிடுவான் - இத்தலத்தை
நான்கண்டு மெய்சிலிர்த்து நல்லருள் வேண்டினேன்
தேன்தமிழில் பாட்டெழுதித் தான்"

திவ்யதேசம் - 93



மூலவர் : காய்சின வேந்தன்
பூமிபாலர்

தாயார் : மலர்மகள் நாச்சியார்

தீர்த்தம் : வருண, நிர்ருதி தீர்த்தம்

மங்களாசாசனம் :

நம்மாழ்வார் : 3271 - 81

மொத்தம் : 11 பாசுரங்கள்

திருப்புளியங்குடி - நவதிருப்பதி (புதன்)

"காய்சினப் பறவை யூர்ந்துபொன் மனையின்
மீமிசைக் கார்முகில் போல்,
மாசின மாலி மாலிமான் என்றங்
கவர்படக் கனன்றுமுன் னின்ற
காய்சின வேந்தே! கதிர்முடி யானே!
கலிவயல் திருப்புளிங் குடியாய்
காய்சின ஆழி சாங்குவாள் வில்தன்
டேந்தியெம் இடர்கடி வானே!"

என்று நம்மாழ்வார் பாசுரம் பாடுவார். இந்த பாசுரம் 3573-ஆம் பாடலாகும்.

திருமால் இந்த நதிக்கரையில் லட்சுமி தேவியுடன் தனித்து இருந்தபொழுது, அதுகேட்டு சினங்கொண்ட பூமிதேவி திருமால் தம்மை ஒதுக்குகிறார் என்று எண்ணி பாதாளம் சென்று விடுகிறாள். அதனால் பூமி இருண்டு விட்டது. தேவர்களெல்லாம் பூமிக்கு ஒளி வேண்டும் என்று வேண்ட திருமால் பாதாள உலகம் சென்று பூமிதேவியைப் பார்த்து, 'எனக்கு பூதேவியும் திருமகளும் சமமானவர்களே' என்று கூறி அந்த இரு தேவிகளுடனும் சேர்ந்து இங்கு காட்சி கொண்டார். பூமிதேவியை சமாதானம் செய்து பூமியை காத்ததால் இவருக்கு பூமிபாலகர் என்ற பெயர் ஏற்பட்டது.

இந்திரன் ரிஷியும், ரிஷி பத்தினியும் தனித்து மகிழ்ந்திருந்த போது, ரிஷியை வஜ்ராயுதத்தால் வீழ்த்தியதால் பிரம்மஹத்தி என்ற தோஷத்திற்கு ஆளானான். அதனால் அவர் வியாழன்



ஆலோசனைப்படி இங்கு வந்து பூமிபாலனை வேண்ட தீர்த்தத்தில் நீராட அந்த பரமஹத்தி தோஷம் நீங்கப் பெற்றார். அந்த சாப விமோசனத்தில் மகிழ்ந்து போன இந்திரன் வசிஷ்டரையும் அவருடன் வந்த ரிஷியையும் மதிக்காமல் போக, வசிஷ்டரால் அரக்கனாக சபிக்கப்பட்டார். பிறகு திருமால் அவருக்கு சாப விமோசனம் தந்த திருத்தலம் இதுவாகும்.

இங்கே பெருமாள் ஆதிசேஷன் மீது 12-அடி உயரத்தில் பள்ளி கொண்டுள்ளார். இந்த சயனப் பெருமானின் திருப்பாதத்தை மூலஸ்தானத்தை சுற்றி வரும்போது உள்ள ஜன்னல் வழியில் தரிசிக்கலாம். இங்கு பெருமாள் சன்னதியிலிருந்து ஒரு தாமரைக் கொடி சுவரில் பிரம்மன் வீற்றிருக்கும் தாமரையுடன் சேருகிறது. இங்கு லட்சுமியும், பூமாதேவியும் பெரிய உருவங்களாக பெருமானின் திருப்பாதத்தில் அமர்ந்துள்ளார்கள். குழந்தை பேறு இல்லாதவர்கள் இங்கு வந்து வேண்டினால் அந்தப் பேறு கிட்டும்.

திருவைகுண்டத்திலிருந்து 3 கி.மீ. தூரத்திலும், வரகுணமங்கையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திலும் இத்தலம் உள்ளது.

"திருப்புளி யங்குடி பூமிபால கர்தான்
அருள்செய்வார் தேவை யறிந்து - பெருமாள்
காய்சினி வேந்தர் திருமகள் பூதேவி
போய்நான் துதித்தேன் புகழ்ந்து"

திவ்யதேசம் - 94



திருத்தொலைவில்லி மங்கலம்
இரட்டை திருப்பதி
(இராகு / கேது)

முதல் கோயில்

தாம்பரபரணி நதிக் கரையில் உள்ளது.

மூலவர் : தேவப்பிரான் (ஸ்ரீனிவாசன்)
நின்ற திருக்கோலம்
கிழக்கே திருமுக மண்டபம்

தாயார் : உபய நாச்சியார்கள்

இரண்டாவது கோயில்

தாம்பரபரணி நதி வாய்க்கால் கரையிலேயே உள்ளது.

மூலவர் : அரவிந்த லோசனன்
செந்தாமரைக் கண்ணன்
வீற்றிருந்த திருக்கோலம்
கிழக்கே திருமுக மண்டபம்

தாயார் : கருந்தடங்கண்ணி நாச்சியார்

தீர்த்தம் : வருண தீர்த்தம், தாம்பரபரணி ஆறு

மங்களாசாசனம் :

நம்மாழ்வார் : 3271 - 81

மொத்தம் : 11 பாசுரங்கள்


"குமறு மோசை விழவொ லித்தொலை
வில்லி மங்கலம் கொண்டு புக்கு
அமுத மென்மொழி யாளை நீருமக்
காசை யின்றி அகற்றினீர்
திமிர்கொண் டாலொத்து நிற்கும் மற்றிவள்
தேவ தேவபி ரானென்றே,
நிமியும் வாயொடு கண்கள் நீர்மல்க
நெக்கொ சிந்து கரையுமே"



என்று நம்மாழ்வார் திவ்யப்பிரபந்தத்தில் பாடுகிறார். இப்பாடல் 3272 ஆம் பாடலாக வருகிறது.

இந்தக் கோயிலைப் பற்றி நம்மாழ்வார் 11 பாசுரங்கள் மங்களாசாசனம் செய்துள்ளார்.

இரட்டை திருப்பதியில் இன்னொரு திருப்பதியை மங்களாசாசனம் செய்யும் போது,



"திருந்து வேதமும் வேள்வி யுந்திரு
மாம களிரும் தாம் மலிந்
திருந்து வாழ்பொரு நல்வ டகரை
வண்தொ லைவில்லி மங்கலம்
கருந்த டங்கண்ணி கைதொ முதஅந்
நாள்தொ டங்கியிந் நாடொறும்
இருந்தி ருந்தர விந்த லோசனா!
என்றென் றேனைநந்தி ரங்குமே"

என்று பாடுகிறார்.

இப்பாடல் 3278 ஆம் பாடலாக வருகிறது.



ஆத்ரேய சுப்ரபர் என்ற ரிஷி யாகம் செய்வதற்காக இந்த தலத்திற்கு வந்தார். அப்போது யாகம் செய்வதற்காக ஒரு இடத்தை கூட்டி, சுத்தம் செய்த போது, நிலத்தில் புதையுண்டு கிடந்த ஒளிமிக்க ஒரு வில்லையும், தராசையும் கண்டார். அவற்றை கையில் எடுத்தவுடன் வில் ஆணாகவும், தராசு பெண்ணாகவும் மாறியது. பிறகு அவர்கள் ரிஷையைப் பார்த்து, 'நாங்கள் குபேர சாபத்தில் வில்லாகவும், தராசாகவும் மாறிப் போனோம். ரிஷியாக உங்கள் கைபட்டதும் சாபம் நீங்கப் பெற்றோம்' என்று கூறி, முக்தியடைந்து பரமபதம் அடைந்தனர். அதனால் இத்தலத்திற்கு தொலைவில்லி மங்கலம் என்று பெயர் உண்டாயிற்று.

அதே சுப்ரயர் யாகம் முடிந்து தினந்தோறும் அருகிலிருந்த ஆற்றங்கரையிலிருந்து தாமரை மலர்களை பறித்து வந்து தேவபிரானை வழிபட்டு வந்தார். அதைக் கண்ட அரவிந்த லோசனப் பெருமாள், ஒரு நாள் அவரைப் பின் தொடர்ந்தார். அதை கண்ட சுப்ரபர், "ஏன் என்னை பின் தொடருகிறீர்' என்று கேட்க, பெருமாள் தாம் தாமரை மலர் வாசத்தில் மயங்கிப் போய் விட்டதாகவும், அதனால் தேவ பிரானுக்கு செய்வது போல் தமக்கு பூஜை செய்யக் கூறினாராம். அப்படியே ரிஷியும் இரட்டைத் திருப்பதிக்கும் பூஜை செய்தாராம்.

விபீதகன் என்ற குஷ்டரோகி இங்குள்ள தாமரபரணி தீர்த்தத்தில் நீராடி, குணம் பெற்றதாக இத்தல வரலாறு கூறுகிறது.

**"இரட்டைத் திருப்பதி தேவப் பிரானை
உரத்த குரலில் ஒலித்தேன் - கரத்தில்வெண்
சங்கொலிக்க சுற்றிடும் சக்கரம் கண்டிட
எங்கெங்கும் வந்தார் எழுந்து"**

**"அரவிந்த லோசனா ஆழ்வார் தயமே
கரம்குவித்துக் கண்டேன் கனிந்து - வரமது
திருத்தொலை வில்லி திருவடி கேட்டேன்
அருட்பொருள் தந்தாய் அறிந்து"**

திவ்யதேசம் - 95



மூலவர் : மாயக்கூத்தன் (சீனிவாசன்)

தாயார் : குளந்தைவல்லி
அலமேலு மங்கை

தீர்த்தம் : பெருங்குளம்

மங்களாசாசனம் :

நம்மாழ்வார் : 3561

மொத்தம் : 1 பாசுரம்

திருக்குளந்தை - நவதிருப்பதி
பெருங்குளம் (சனி)



"கூடச்சென் றேனினி என்கொ டுக்கேன்?
கோல்வளை நெஞ்சத் தொடக்க மெல்லாம்,
பாடற் றொழிய இழந்து வைகல்
பல்வளை யார்முன் பரிச ழிந்தேன்
மாடக் கொடிமதிள் தென்கு ளந்தை
வண்குட பால்நின்ற மாயக் கூத்தன்
ஆடல் பறவை உயர்த்த வெல்போர்
ஆழி காலவனை யாத ரித்தே"

என்று நம்மாழ்வார் பாடிய இந்தப் பாடல் திவ்யப் பிரபந்தத்தில் 3461 ஆம் பாடலாக வருகிறது.

பெருங்குளத்தில் வேதசாரண் குமுதவல்லி என்ற தம்பதியர் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு கமலாவதி என்ற ஒரு மகள் இருந்தாள். அவள் "மணம் புரிந்தால் இப்பெருங்குளப் பெருமாளையே மணம் புரிவேன், மற்றபடி மானிடர் யாரையும் மணம் புரிய மாட்டேன்" என்று சபதமேற்று, தவமியற்றி வந்தாள். பெருமாளும் அவளை ஏற்று தன் நெஞ்சில் வைத்துக் கொண்டார். அதனால் மிகவும் மகிழ்ச்சியடைந்த வேதசாரண் இப்பெருமாளுக்குத் தினந்றோதும் பூஜை செய்து வந்தார்.




ஒருநாள் வேதசாரண் மனைவி குமதவல்லி தாமிரபரணியாற்றில் நீராடச் சென்ற போது அச்மசாரன் என்ற அரக்கன் அவளை 'தூக்கிச் சென்று இமயமலையில் சிறைவைத்துக் கொண்டான்'. அதையறிந்த வேதசாரண் பெருமானிடம் சென்ற அழுது முறையிட, பெருமாள் கருட வாகனத்தில் சென்று, அரக்கனை வதம் செய்து, குமுதவல்லியை மீட்டுக் கொடுத்தார். அதனால் இப்பெருமாளுக்கு மாயக்கூத்தன் என்ற பெயர் ஏற்பட்டது. தனக்கு அரக்கனுடன் போர் புரிய உதவி செய்த கருடனுக்கு இப்பெருமாள் உஸ்தவ மூர்த்தியுடன் ஆசனம் அளித்துள்ளார்.



இந்த தலம் திருவைகுண்டத்திலிருந்து ஏரல் செல்லும் சாலையில் 12 கி.மீ. தூரத்தில் உள்ளது. இங்குள்ள குளம் பெரிதாகக் காணப்படுவதால் இதற்கு பெருங்குளம் என்ற பெயர் ஏற்பட்டது. பெருங்குளத்தையொட்டியே இந்த கோயிலும் உள்ளது.

"பெருங்குளம்மா யக்கூத்தா பேர ருளும்தா
அருங்குணம் ஆற்றல் அறிவும் - தருவாய்
வருவாய் துணையாய் வளர்ந்திட வேண்டும்
பெருகிடும் செல்வங்கள் பெற்று"

திவ்யதேசம் - 96



மூலவர் : வைத்த மாநிதி

தாயார் : கோளூர் வல்லி நாச்சியார்

தீர்த்தம் : குபேர தீர்த்தம்

<u>மங்களாசாசனம் :</u>

நம்மாழ்வார் : 3293 - 3303, 3473


மொத்தம் : 12 பாசுரங்கள்

திருக்கோளூர்
(செவ்வாய்)

"உண்ணும் சோறும் பருகும் நீர்
தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்றே
கண்கள் நீர் மல்கி
மண்ணினுள் அவன் சீர்வளம்
மகிக் அவனூர் வினவி
தண்ணம் என் இளமான்
புகும்ஊர் திருக்கோளூரே"

என்று நம்மாழ்வார் மங்களாசாசனம் பாடுவார். இந்தப் பாடல் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் 3293 ஆம் பாடலாக வருகிறது.

குபேரன் சிவனை வழிபடி கைலாயம் சென்றபோது, அங்கே சிவபெருமான் உமாதேவியோடு வீற்றிருந்தார். அந்த காட்சியில் உமாதேவியார் அழகு தேவதையாக காட்சி தர, குபேரன் அவரை காமக் கண்ணோட்டத்தோடு தப்பாகப் பார்த்து விட்டான். அதையறிந்த உமாதேவியார் குபேரனை சபித்தார். அதனால் குபேரனிடமிருந்த நவநிதிகளும் போனதோடு, அவனது உருவமும் விகாரமானது.



அந்த நவநிதிகளும் இங்கு வந்த பெருமாளை அடைக்கலம் அடைந்தன. ஆகவே இப்பெருமாள் வைத்த மாநிதி என்று அழைக்கப்படுகிறார். வைத்தமாநிதி என்றால் அதிகமான நிதிகளை வைத்திருப்பவர் என்று பொருளாகும்.

பிறகு குபேரன் தன் தவற்றை உணர்ந்து சிவபெருமான் அடிபணிந்து சிவபெருமாள் பார்வதியிடம் மன்னிப்புக் கோருமாறு கூறிவிடுகிறார். குபேரன் பார்வதியிடம் சென்று மன்னிப்புக் கேட்க, அவர் அவனை மன்னிக்காமல், "உனக்கு கண் தெரியாது, விகாரமும் மாறாது. உனக்கு மன்னிப்பும், உன்னுடைய நிதிகளும் கிடைக்க வேண்டுமென்றால், நவநதிகளும் தஞ்சமடைந்துள்ள பெருமாளிடம் சென்று தவமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்" என்று கூறி விடுகிறார்.

அவனும் வைத்தமாநிதி பெருமாளிடம் சென்று கடுந்தவமிருக்க, அவர் பாதி நிதியை மட்டும் கொடுத்தார். அந்த செல்வங்களும் நிலையாக ஓரிடத்தில் நில்லாமல் ஓடிக் கொண்டிருக்கும் தன்மையில் லட்சுமிதேவி செய்தாள்.

ஒருவரிடம் செல்வம் நிலையாக இருந்தால், அங்கே நீதியும், தர்மமும் நிலையாக இருக்காது என்பதால், பெருமாள் செல்வத்தை நிலையில்லாததாகச் செய்தார் என்பது தத்துவம்.

இப்பெருமாளை இங்கு வந்து வழிபட்டால், இழந்த செல்வங்கள் திரும்ப கிடைக்கும் என்பது நம்பிக்கை.

வியாச வம்சத்தில் பிறந்த தர்மகுப்தன் என்பவன் வறுமையில் அடிபட்டு, தான்பெற்ற பத்து குழந்தைகளுடன் இங்கு வந்து பெருமாளுக்கு பணிவிடை செய்தான். அவனுக்கு பெருமாள் அருள் செய்து பெருஞ்செல்வம் கொடுத்தார் என்று கூறுவர்.

இங்கே பெருமாள் அளக்கப் பயன்படுத்தும் மரக்கால் நிலையில் சயனத்தில் உள்ளார். இடது கையை உயர்த்தி, இன்னும் எங்கெங்கும் செல்வம் இருக்கிறது என்று மையிட்டுப் பார்ப்பதாக அது உள்ளது.

இங்கு வாழ்ந்த விஷ்ணு நேசருக்கு பிறந்தவரே மதுரகவியாழ்வார் ஆவார்.

ஆழ்வார் திருநகரி - திருச்செந்தூர் சாலையில் 3 கி.மீ. தூரத்தில் இத்தலம் உள்ளது.

**"திருக்கோளூர் கண்டிடும் வைத்தமாநி தின்தான்
பெருஞ்செல்வம் செய்வார் எழுந்து - வருவதும்
போவதுமாய் செல்வம் சுழன்றிடச் செய்திட்டார்
ஆவதும் போகும் அது"**

மதுரகவியாழ்வார்



மதுரகவிகள்

வைத்தமாநிதியார் குடிகொண்டுள்ள திருக்கோளூர் திருத்தலத் தேசத்தில்தான் மதுரகவி ஆழ்வார் அவதரித்தார்.

இவர் ஈஸ்வர வருடத்தில் சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் கருடனின் அம்சமாக சுக்ல சதுர்த்தி திசி வெள்ளிக்கிழமை நாளில் பிறந்தார்.

இவர் தாயார் குறிப்பிடப்படவில்லை. தந்தையார் முன்குடுமிச் சோழிய பிராமண மரபு அந்தணர். ஆண்டு கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.

மதுர கவியாழ்வார் இளம் வயதிலேயே கல்வி கேள்விகளிலும், தென்மொழி, வடமொழிக் கலைகளிலும், ஆகம வேதங்களிலும் புலமை பெற்று திகழ்ந்தார்.

பிறகு துறவறம் கொண்டு, நாராயண பெருமானின் திருவுருவங்களைத் தரிசிக்க விரும்பி வடயாத்திரைத் தொடங்கினார். முதலில் அவர் ஏழு புனிதத் திருத்தலங்களான, மதுரை, காஞ்சி, இராமன் அவதரித்த அயோத்தி, மாயை, காசி, அவந்தி, துவாரகை என்ற ஏழு திருத்தலங்களுக்குச் சென்று நீராடினார்.

அவர் அயோத்தியில் அதிகம் தங்கியிருந்தார். அவ்வாறு தங்கியிருந்த போது, ஒருநாள் ஒரு சோதி அவருக்கு மட்டும் தெரிந்தது. அந்த சோதி மற்றவருக்குத் தெரியாமல் தனக்கு மட்டும்தான் தெரிகிறது என்று உணர்ந்த மதுரகவியாழ்வார் அந்த சோதியைத் தொடர்ந்து, தனது புனித யாத்திரையையும் அத்தோடு தொடர்ந்தார்.

இயேசு பிறந்தபோது, மற்றவர்களுக்கு அதைத் தெரியப்படுத்த ஒரு நட்சத்திரம் வழிகாட்டியது போல, அந்த சோதி இப்போது மதுரகவியாழ்வாருக்கு வழிகாட்டி அழைத்துச் சென்றது.

சோதி விந்தியமலை வந்து பிறகு அது தனது பேரொளியை தெற்கு நோக்கிப் பாய்ச்சியது. மதுரகவியாழ்வாரும் அந்த ஒளி காட்டிய வழியில் திருமலை, திருவரங்கம், திருக்கூடல் வழியாக நம்மாழ்வார் அவதரித்த ஆழ்வார் திருநகரிக்கு வந்ததும் மறைந்து போனது.

இங்கேதான் நமக்கு அடக்கலம் என்று உணர்ந்த மதுரகவியாழ்வார் அங்கிருந்தவர்களிடம், "இந்த ஊரில் என்ன சிறப்பு?" என்று கேட்டார்.

இந்த ஆழ்வார் திருநகரியில் அதோ அந்த புளியமரப் பொந்தில் ஒரு மகாப்புனிதர் அவதரித்திருக்கிறார் என்று கூறினர்.

அந்த புளியமரத்தருகே சென்ற மதுரகவியாழ்வார் அங்கே நம்மாழ்வார் மௌன நிலையில் வீற்றிருப்பது கண்டு வியப்புற்றார். அப்போதே அவரிடம் அவர் மனம் பறிகொடுத்தார்.

பகவான் இராமகிருஷ்ண பரஹம்சரை, சுவாமி விவேகானந்தர் முதல் முதலில் சந்தித்த போது, இவ்வாறுதான் அவருக்கு மின்னலென இராமகிருஷ்ணர் மேல் பக்தி உண்டானது.

நம்மாழ்வாரைக் கண்ட மதுரகவியாழ்வார், அவர் பார்ப்பதையும், பேசுவதையும் சோதிக்க அங்கே கிடந்த ஒரு பெரிய கல்லைத் தூக்கி வந்து சத்தம் ஏற்படும்படி அவர் முன்னே போட்டார். நம்மாழ்வார் கண்ணைத் திறந்தார். அப்போது ஆயிரம் மின்னல்கள் அவரைத் தாக்குவது போன்ற உணர்வைப் பெற்றார் மதுரகவியாழ்வார்.

பிறகு நம்மாழ்வாரை உற்று நோக்கிய மதுரகவியாழ்வார் அவர் பேசுவாரா என்பதை சோதிக்க, "செத்தத்தின் வயிற்றில் சித்தது பிறந்தால், எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?" என்று கேட்டார்.

செவியறிந்து கேட்ட நம்மாழ்வார் அதற்கு, 'அத்தைத் தின்று அங்கே கிடக்கும்' என்றார்.

'சித்' என்றால் உயிர். 'அசித்' என்றால் பொருள்.

உடம்பினுள் உயிர் புகுந்தால் அது எதைத் தின்று வாழும்?

உடம்பு எதையெல்லாம் விரும்பி விரும்பி அனுபவித்துக் கொண்டிருக்கிறதோ? அந்த இன்ப துன்பங்களையெல்லாம் உயிரும் அனுபவித்து வாழும்.

உடம்புக்குள் ஆத்மா இருந்தாலும் உடம்பில் எந்தவொரு இடத்திற்கும் தொடர்வில்லாமல் இருக்கிறது. அதுபோல சித்தையும், அசித்தையும் ஆண்டவன் படைத்தாலும் அதனோடு தொடர்பு இல்லாமல் இருக்கிறான்.

நம்மாழ்வாரின் பதிலைக் கேட்ட மதுரகவியாழ்வார், அக்கணமே கைகூப்பித் தொழுது, அவர் காலடி வீழ்ந்தார். நம்மாழ்வாரும் அவரைத் தன் சீடராக அங்கீகரித்து, தாம் சொல்லும் பாசுரங்களை பாட்டோலையில் எழுதிக் கொண்டிருக்கப் பணித்தார்.

மதுரகவியாழ்வார் தேன் போன்ற சுவையான கவிதைகளை யாத்தமையால் இவர் திருக்கோளூர் மதுரகவியாழ்வார் என்று அழைக்கப்பட்டார்.

நம்மாழ்வார் நாவால் அருளிய ஆயிரம் பாசுரங்களை தமிழ் ஓலையில் எழுதி, தமிழுக்கு புகழ் செய்த பெருமை மதுரகவியாழ்வாருக்குடையதாகும்.

மதுரகவியாழ்வார் எந்த திவ்ய தேசத்தையும் மங்களாசாசனம் செய்யவில்லை. நம்மாழ்வார் ஒருவரையே இறைவனாகப் பாவித்து பதினொரு பாடல்கள் மட்டும் பாடி, ஆழ்வார் வரிசையில் இடம் பெற்றார்.

நம்மாழ்வார் பரமபதம் அடைந்த பிறகு மதுரகவியாழ்வார், அவருக்குத் தனி கோயில் சமைத்து, விக்ரகம் அமைத்து, அவரையே தெய்வமாகக் கருதி அவரது பாசுரங்களையே பாடி வந்தார். நாடெங்கும் அவரது பாசுரங்களை பரப்பியும் வந்தார்.

இந்நிலையில் மற்ற ஆழ்வார்களின் பாசுரங்களை ஏற்றுக்கொண்ட தமிழ்ச் சங்கத்தார் நம்மாழ்வார் பாசுரங்களை ஏற்க மறுத்தனர். அவரது பாசுரங்கள் தென்மதுரை தமிழ்ச்சங்கத்தால் ஏற்கப்பட்டு, சங்கப் பலகையும் அதை ஏற்றுக் கொண்டாலே நாமும் ஏற்போம் என்று கூறிவிட்டனர். அதற்கு மதுரகவியாழ்வார்,

அதற்கு மதுரகவியாழ்வார் "நம்மாழ்வார் பாசுரங்களையெல்லாம் ஏற்க வேண்டாம் ஒரு பாட்டை சங்கப் பலகையில் ஏற்றினாலே போதும்" என்று கூறினார்.

சங்கம் கூட்டப்பட்டது. சங்கப்பலகை ஒரு புறமும், சங்கப்புலவர்கள் ஒரு புறமும் அமர்ந்தார்கள்.

நம்மாழ்வார் பாடிய திருவாய்மொழி பத்தில் கண்ணன் கழலிணை, என்ற தலைப்பில்

"கண்ணன் கழலிணை - நண்ணும், மணமுடையீர்
எண்ணும் திருநாமம் - திண்ணம் நாரணமே"

என்று வருகிறது.

மதுரகவியாழ்வார் அந்த தமிழ்ச்சங்க சபையினர் முன்னே, "கண்ணன் கழலிணை" என்று தொடங்கும் பாசுரத்தின் முதல் வார்த்தையான "கண்ணன் கழலிணை" என்பதை மட்டும் எழுதி சங்கப் பலகையில் வைத்தார்.

மதுரகவியாழ்வார் ஒரு சிறிய ஓலையில் ஒரு சிறிய வார்த்தையை எழுதிச் சங்கப் பலகையில் வைத்ததும், மதுரைச் சங்கப் புலவர்கள் ஏற்கனவே அந்தச் சங்கப் பலகையில் வைத்திருந்த அத்தனை ஏடுகளையும் கீழே தள்ளியது.

அதுகண்டு அதிர்ந்து, ஆச்சர்யப்பட்டுப் போன சங்கத் தலைவர் மதுரகவியாரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, மதுரகவியாழ்வாரைப் போற்றிப் புகழ்ந்து, அவரும் பாடினார்.

"சேமம் குருகையோ; செய்யத் திருப்பாற் கடலோ
நாமம் பராங்குசமோ, நாரணமோ - தாமம்
துளவோ, வகுளமோ, தோளிரண்டோ நான்கும்
உளவோ பெருமாள் உனக்கு"

என்று சங்கத்தலைவரின் பாட்டு மதுரகவியாழ்வை பெருமாளுக்கு ஒப்பாக அமைந்திருந்தது.

மேலும் பாடிய சங்கத் தலைவர்,

"ஈயாடுவதோ கருடற்கெதிர்
இரவிற் கெதிர் மின்மினி யாடுவதோ,
நாயாடுவதோ உறுமிப்புலிமுன்
நரிகேசரி முன் நடையாடுவதோ
பேயாடுவதோ அழகு ஊர்வசிமுன்
பெருமாள் வகுளாபாரணன் அருள் கூர்ந்து
ஓயாதுரை ஆயிர மாமறையின்
ஒருசொற் பெறுமோ உலகிற் கவியே"

என்று நம்மாழ்வார் செய்த தமிழ் வேதப் பாடலின் ஒரு சொல்லுக்கு ஈடாகுமோ மற்ற கவிதைகள் என்று போற்றிப் பாடினார்.

"கருடனுக்கு ஈடாக ஈ பறக்குமோ
கதிர்விரிக்கும் சூரிய ஒளிக்கு ஈடாக
மின்மினிப் பூச்சிகள் ஒளி காணுமோ?
சீறிவரும் புலிக்கு ஈடாக சிறுநாய்
ஊளை கூச்சல் உருப்படுமோ?
யானை நடைக்கு ஈடாக நரிநடை
யாகுமோ?
ஊர்வசிக்கு ஈடாக பேய் ஆடக்கூடுமோ"

என்பதுதான் அந்த பாடலின் அர்த்த வரிகள்.

நம்மாழ்வார் பாசுரங்களை நாடெல்லாம் பரப்பி வந்த மதுரகவியாழ்வார், பிறகு மீண்டும் ஆழ்வார் திருநகரியையடைந்து, அவர் பாசுரங்களையே பாடிப்பாடி பிறகு பரமபதமடைந்தார்.

மதுரகவியாழ்வார் அருளிச் செய்தது "கண்ணி நுண் சிறுத்தாம்பு" என்பதாகும். இது பதினொன்று பாசுரங்களை மட்டுமே கொண்டதாகும்.

12 ஆழ்வார்களில் 11 ஆழ்வார்கள் நாராயணனையே பாடினார்கள். ஆனால் மதுரகவியாழ்வார் ஒருவர் மட்டும் நம்மாழ்வார் ஒருவரை மட்டுமே இறைவனென எண்ணிப் பாடினார். குரு சீடர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு நம்மாழ்வார் - மதுரகவியாழ்வார்களைக் கூறலாம். ஒரு சீடன் குருவுக்குக் கேற்றவனாக எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டு மதுரகவியாழ்வார் ஆவார். ஆண்டவனால் செய்ய முடியாததை அவர் அடியார்கள், சீடர்கள் செய்ய முடியும் என்பதற்கு மதுரகவியாழ்வார் பாடல்கள் மதுவகைத் தேன் போன்றவையாகும்.

மதுரகவியாழ்வார் தாம் அருளிய கண்ணி நுண் சிறித்தாம்பில் நம்மாழ்வாரின் பெருமைகளையே பாடியுள்ளார். மதுரகவிகள் தம் பாசுரங்களில் ஒன்பது இடத்தில் நம்மாழ்வாரை நம்பி என்று குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரின் திருவாய்மொழியை தன் திருவாய் திறந்து பாடுமுன் தான் அவரைப் பற்றிப் பாடிய கண்ணி நுண் சிறுத்தாம்பைப் பாடிவிட்டு அதை பாடுவது வழக்கம்.

"நாவி னால்நவிற் றின்ப மெய்தினேன்
மேவி னேனவன் பொன்னடி மெய்ம்மையே,
தேவு மற்றறி யேன்குரு கூர்நம்பி
பாவி னின்னிசை பாடித் திரிவேனே"

"அருள்கொண் டாடு மடியவ ரின்புற,
அருளி னானவ் வருமறை யின்பொருள்,
அருள்கொண் டாயிர மின்தமிழ் பாடினான்
அருள்கண் டீரிவ் வுலகினில் மிக்கதே"

என்ற இந்த இரண்டு பாசுரங்களும் மதுர கவியாழ்வார் பாடியதாகும். இவை நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் 938, 944 ஆம் பாடல்களாக வருகின்றன.

திவ்யதேசம் - 97



திருப்பேரை (தென்திருப்பேரை)
(சுக்ரன்)

மூலவர் : மகரநெடுங்குழைக்காதன்
வீற்றிருந்த திருக்கோலம்
கிழக்கே திருமுகம்

தாயார் : குழைக்காதுவல்லி நாச்சியார்

தீர்த்தம் : சுக்ரபுட்கரணி, சங்க தீர்த்தம்

மங்களாசாசனம் :

நம்மாழ்வார் : 3359 - 3369

மொத்தம் : 11 பாசுரங்கள்

"நகரமும் நாடும் பிறவும் தேர்வேன்
நாணெனக் கில்லையென் தோழி மீர்காள்,
சிகரம் அணிநெடு மாடம் நீடு
தென்திருப் பேரையில் வீற்றி ருந்த
மகர நெடுங்குழைக் காதன் மாயன்
நூற்றுவ ரையன்று மங்க நூற்ற,
நிகரில் முகில்வண்ணன் நேமி யானென்
னெஞ்சம் கவர்ந்தெனை யூழி யானே"?



என்று இந்த தலத்தை நம்மாழ்வார் மங்களா சாசனம் செய்கிறர். அவர் இந்தத் தலத்தைப்பற்றிப் பாடிய 11 பாசுரங்களில் இந்த பாடல் 3368-ஆம் பாடலாக வருகிறது.

இந்த தலத்தில் வீற்றிருக்கும் மூலவர் பெருமானின் காது மீன் வடிவில் பெரிதாகக் காணப்படுகிறது. ஆகவே நெடுங்குழைக்காதன் என்ற பெயர் ஏற்பட்டது.

திருமலை நாராயணன் திருமலையிலிருந்து வந்து பூமாதேவியுடன் இருக்கிறார். இதையறிந்த திருமகள் துர்வாச முனிவரிடம் சென்று, நான் அழகாக இல்லாத காரணத்தால்தான் நாராயணர் என்னை விட்டுவிட்டு பூதேவியிடம் சென்றுவிட்டார். ஆகவே என்னையும் பூதேவிபோல அழகுடையவளாக ஆக்கித் தாருங்கள் என்று வேண்டினாள். அவ்வாறே செய்வதாகக் கூறிய துர்வாச

முனிவர் பூதேவியின் அழகு எப்படியிருக்கிறது என்று காண அவளிடம் செல்கிறார். அப்போது பூதேவி நாராயணன் மடியில் அமர்ந்து கொண்டு, துர்வாசரை மதிக்காமல் இருந்து கொண்டாள். அதனால் சினம் கொண்ட துர்வாச முனிவர், "நீ லட்சுமியின் உருவத்தை பெறுவாய்" என்று சாபம் விட்டு விட்டு சென்று விடுகிறார்.

அந்த சாபவிமோசனம் பெற பூதேவி இத்திருப்பேரை வந்து, 'ஓம் நமோ நாராயணாய' மந்திரத்தை ஓதி வந்தாள். அவ்வாறு பங்குனி பவுர்ணமி தினத்தில் அவள் ஓதிவிட்டு, ஆற்றில் நீரை அள்ளி எடுக்கும் போது மீன்வடிவிலான இரண்டு மகா குண்டலங்கள் கிடைக்கின்றன. அவற்றை அவள் திருமாலுக்கு அளிக்க பூமா தேவியின் உடல் அழகு பெற்றது. அவ்வாறு திருமகள் உடலுடன் பூமா தேவி தவமிருந்ததால் இந்தத் தலம் தென்திருப்பேரை என்று ஆனது. பெருமாள் மீன்வடிவ குண்டலங்களை அணிந்ததால் மகர நெடுங்குழைக்காதன் என்று பெயர் பெற்றார்.

வருணன் அசுரர்களிடம் போரிட்டுத் தோற்று, இங்கு வந்து வரம் பெற்றதால், இத்தலத்திற்கு மழை வேண்டி, பிரார்த்தனை செய்தால் மழை பொய்க்காது என்பர். சுக்ரனும் இங்கு வந்து அருள் பெற்றார்.

விதர்ப்ப நாட்டு மன்னனும் இங்கு வந்து, தன் நாடு செழிக்க வழிபட்டதால், 12 வருடங்கள் அவன் நாட்டில் பஞ்சம் நீங்கி, செழிப்பு மிகுந்திருந்ததாகக் கூறுவர்.

வேத தத்துவங்களை ஓதுகின்ற வித்தர்களைக் காணவும், ஓடி விளையாடி மகிழ்கின்ற குழந்தைச் செல்வங்களை கண்டு மகிழவும், பெருமாள் கருடபகவானை கொஞ்சம் ஒதுங்கியிருக்கக் கூறினாராம். அதனால் இத்தலத்தில் கருட பகவான் சன்னதி இடது பக்கத்தில் ஒதுங்கிக் காணப்படும். அதைக் கருத்தில் கொண்டே நம்மாழ்வார் ஒரு பாசுரத்தில் பாடும் பொழுது,

"வெள்ளைச் சுகமவன் வீற்றி ருந்த
வேத வொலியும் விழா வொலியும்
பிள்ளைக் குழாவிளை பாட்டொழியும் அறாத்
திருப்பேரையில் சேர்வன் நானே"

என்று கூறுகிறார்.

சுந்தர பாண்டியன் என்பவனுக்கு குழந்தை பேறு இல்லாமல் போன காரணத்தால், அவன் அந்தப் பிள்ளைப் பேற்றைப்பெற ஜெம்முனி சாபவேத வித்தகர்கள் 108 பேரை அழைத்து வந்து தினசரி பூஜை செய்து அந்தப் பேற்றைப் பெற்றானாம்.

அப்படி 108 பேரை அழைத்து வந்த போது, அதில் ஒருவர் காணாமல் போய் விட்டாராம். அரசர் வருத்தப்பட்டு கொண்டு 107 அந்தணரோடு வந்தானாம். ஆனால் இந்த ஊர் வந்து பார்த்த போது 108 அந்தண ஓதுவார்கள் இருந்தார்களாம்.



பெருமாளே காணாமல் போன அந்தணர் வடிவில் வந்தார் என்று அரசர் மகிழ்ந்து போனானாம். ஆகவே இப்போது இவ்வூரில் வாழும் அந்தணர்கள் பெருமாளே தங்களோடு வாழ்ந்து கொண்டிருப்பதாக நம்பிக்கை கொண்டிருக்கிறார்களாம்.

இங்கு பங்குனி மாதம் 5-ஆம் நாள் நடக்கும் பிரம்மோஸ்வத்தில் பெருமாள் கருட சேவையில் பிராதன வாயிலிலிருந்து வெளிமண்டபத்திற்கு வரும் போது மிகவும் அழககாகத் தோற்றமளிப்பாராம். அதைப் பார்த்து நாத்திகனும், ஆத்திகனாவான் என்று கூறுவர். அதனால் நம்மாழ்வார் 3368-ஆம் பாடலில் இப்பெருமாளை நிகரில் முகில்வண்ணன் என்று பாடுவார்.

இந்த தலத்திற்குச் செல்ல, திருநெல்வேலி - திருச்செந்தூர் சாலையில் ஆழ்வார் திருநகரி சென்று விட்டு, அங்கிருந்து 6 கி.மீ. தூரத்திலுள்ள இத்தலம் செல்லலாம்.

"மகரநெடு ங்குழைக் காதன்தென் பேரை
நிகரில்லாப் பேரழகுப் பேரன் - மகிழ
குழந்தை வரமும் குளிர்மழை பெய்வான்
தொழத்தருவான் செல்வம் புகழ்"

திவ்யதேசம் - 98



மூலவர் : ஆதிநாதப் பெருமாள்
(பொலிந்து நின்ற பிரான்)

தாயார் : ஆதிநாதவல்லி

<u>மங்களாசாசனம் :</u>

நம்மாழ்வார் : 3106 - 3116

மொத்தம் : 11 பாசுரங்கள்

திருக்குருகூர் (நவதிருப்பதி)
ஆழ்வார் திருநகரி (வியாழன்)

"விளம்பும் ஆறு சமய
மும்அவை யாகியும் மற்றும் தன்பால்
அளந்து காண்டற் கரிய
னாகிய ஆதிப்பி ரானமரும்
வளங்கொள் தண்பனை சூழ்ந்தழ
காய திருக்குரு கூரதனை
உளங்கொள் ஞானத்து வைம்மின்
உம்மை யுய்யக் கொண்டு போகுறிலே"

என்று நம்மாழ்வார் இத்தலத்தைப் பாடுகிறார். நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் அவர் பாடிய 11-பாசுரங்களில் இது 3114-ஆம் பாடல் ஆகும்.

ஒருநாள் திருமாலிடம் பிரமன் வந்து, தாம் தவமிருக்க தாமரபரணியாற்றில் ஒரு இடம் கொடுக்க வேண்டினார். ஆனால் திருமாலே உமக்கு முன்னரே யாம் இங்கே ஆதியிலேயே தாமிரபரணியாற்றின் கரையில் வந்து எழுந்தருளிவிட்டோம்" என்று கூறினார். ஆகவே இந்த பெருமாளுக்கு ஆதிநாதப் பெருமாள் என்ற நாமம் ஏற்பட்டது. பிரமனுக்கு குருவாக இருந்து இடம் காட்டியதால் இதற்கு குருஊர் என்று காரணப்பெயர் உண்டாயிற்று. அது பிறகு திருகுருகூர் என்றானது.

திருக்குருகூர்

திருக்குருகூர் பல சிறப்புக்களையுடைய ஒரு முக்கிய தலமாகும். இங்கு மூலவரான ஆதிநாதன் தானாகத் தோன்றியதாகும். அதன் பாதம் பூமிக்குள் இருப்பதாக கூறுவர். இத்தலப் பூமியில் அவதரித்த நம்மாழ்வார் சன்னதி முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.இங்கே வராகப் பெருமாள் ஞானப்பிரான் என்ற பெயருடன் விளங்குகிறார். இந்த கோயிலைக் கட்டியவர் மணவாள மாமுனிகள் ஆவார். இங்கே திருவரங்கம் போல, மாதந்தோறும் அந்தந்த நட்சத்திர ஆழ்வார்களின் விழாக் கொண்டாடப்படுகிறது. இந்த தலத்தில் தங்கினால் எல்லா நவதிருப்பதிகளையும் எளிதில் தரிசிக்கலாம். வைகாசி மாதம் கருட சேவையில் நவதிருப்பதி பெருமாள், நம்மாழ்வார், மதுரகவி ஆகியோரின் மங்களாசாசனம் மிகவும் சிறப்பாக இருக்கும். இந்திரன் தன் தாய் தந்தையரை பேணிக்காக்காமல் போனதற்கு, சாபம் பெற்று, இத்தலத்திற்கு வந்து ஆதிநாதனை வழிபட்டு, சாபவிமோசனம் பெற்றதாக புராண வரலாறு. இந்த தலத்தில் லட்சுமணர் புளியமரமாக வளர்ந்திருப்பதாகவும், பகவான் இங்கே பிரம்மச்சரிய யோகம் இருப்பதாகவும் கூறுவர். அதனால் அவர் லட்சுமிதேவியை மகிழமாலையாக மாற்றி தன் மார்பில் அணிந்திருப்பதாகக் கூறுவர்.

இந்த ஊர் பெயருக்கு வேறு காரணமும் கூறுவர். இந்த தாமிரபரணியாற்றில் வந்த ஒரு சங்கு இப்பெருமாளை கும்பிட்டு, மோட்சம் பெற்றதாகக் கூறுவர். சங்குக்கு குருகு என்ற வேறு ஒரு பெயரும் கூறுவர். ஆகவே இந்த ஊர் சிறுகுருகூர் என்று ஆனது என்பர்.

நம்மாழ்வார் அவதரித்த இந்த ஆழ்வார் திருநகரி திருநெல்வேலி – திருச்செந்தூர் சாலையில் உள்ளது.

மாந்தன் என்ற அந்தண சிறுவன் வேதம் படிக்காமல் அதை இழித்துக் கூறியதால் அவன் குரு அவனை சபித்து இழிகுலத்தில் பிறக்குமாறு கூறிவிடுகிறது அந்த சிறுவன் அடுத்த பிறவியில் தாந்தன் என்ற பெயரில் இழிகுலத்தில் பிறந்து, ஒழுக்கத்தில் சிறந்தவனாக விளங்குகிறான். அவன் குருகர் திருச்சங்கண்ணிக்கு வந்து, ஆதிநாதனை வழிபட்டு, தவமேற்கொண்டு வருகிறான். அவனை அந்த ஊர் மக்கள் இழிந்த குலத்தவள் என்றுகூறி ஊரை விட்டு விலக்கி விடுகிறார்கள். ஊரை விட்டு வெளியேறிய தாந்தன் கிழக்கே மறுகரைக்கு வந்து ஆதிபிரானை மணலில் உருவம் செய்து வழிபட்டு வந்தான். அப்போது தாந்தனை ஒதுக்கியவர்களுக்கு கண் தெரியாமல் போனது. அவர்களெல்லாம் பெருமானை வந்து சரணடைய, பெருமாள் அசரீரியாக தாந்தனை போய்ப் பார்த்து மன்னிப்பு கேட்கக் கூறுகிறார். அதன்படி அம்மக்கள் தாந்தனிடம் சென்று மன்னிப்புக் கோர, அவர்கள் கண் ஒளி பெற்றார்கள். பெருமாளும் தாயாரோடு நாந்தனுக்கு காட்சி தந்து, அவளை தன்னோடு சேர்த்துக் கொம்டார். அதனால் இந்த தலத்தை தாந்த சேத்திரம் என்றும் கூறுவர்.

திவ்யதேசம் - 99



திருவில்லிப்புத்தூர்

மூலவர் : வடபத்ரசாயீ
(ரங்க மன்னார்)

தாயார் : ஆண்டாள்

தீர்த்தம் : திருமுக்குளத் தீர்த்தம்

மங்களாசாசனம் :

பெரியாழ்வார் : 133


ஆண்டாள் : 549

மொத்தம் : 2 பாசுரங்கள்



"மின்னனைய நுண்ணுடையார்
விரிகுழல்மேல் நுழைந்த வண்டு,
இன்னிசைக்கும் வில்லிப்புத்தூர்
இனிதமர்ந்தாய்! உன்னைக்கண்டார்,
என்னநோன்பு நோற்றாள்கொலோ
இவனைப்பெற்ற வயிறுடையாள்,
என்னும் வார்த்தை யெய்துவித்த
இருடீகேசா முலையுணாயே"


என்று இத்தலத்தை பெரியாழ்வார் மங்களாசாசனம் செய்வார். நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் இந்தப் பாடல் 133-வது பாடலாக வருகிறது.



"மென்னடை யன்னம் பரந்து விளையாடும்
வில்லிபுத் தூருறை வான்றன்,
பொன்னடி காண்பதோ ராசையி னாலென்
பொருகயற் கண்ணிணை துஞ்சா,
இன்னடி சிலொடு பாலமு தூட்டி
எடுத்தவென் கோலக் கிளியை,
உன்னொடு தோழமை கொள்வன் குயிலே
உலகளந் தான்வரக் கூவாய்"

என்று ஆண்டாள் பாடுவாள். 549 ஆம் பாடலாக இது வருகிறது.

பெரியாழ்வார் : ஆண்டாள்



ஆண்டாள்

விஷ்ணு சித்தர் என்பவர் அந்தணர் குலத்தில் பிறந்தவர். விட்டுசித்தர் என்றும் அழைப்பர். பரமனது ரதத்தின் அம்சமாக ஆனித் திங்கள் சுவாதி நட்சத்திரத்தில் திருவில்லிப்புத்தூரில் அவதரித்தார். எப்போதும் இறைவனையே நினைப்பதும், அவனுக்கு துளசி மாலை தொடுப்பதுமாக வாழ்ந்து வந்தார். இவர் தினந்தோறும் திருத்துழாய் நந்தவனத்துக்குச் சென்று துளசி மற்றும் பூ வகைகளைப் பறித்து, தொடுத்து, இறைவனுக்கு சாத்துவது வழக்கம். ஒருநாள் அவ்வாறு இவர் பூ பறிக்கச் சென்ற போது, அங்கே ஒரு பெண் குழந்தை புன்சிரிப்புடன் கிடப்பதைக் கண்டு, வியந்து, அதை எடுத்து முத்தமிட்டு, வீட்டுக்கு கொண்டு வந்தார். தனக்கு பிள்ளையில்லாக் குறையை இறைவன் நீக்கினார் என்று மகிழ்ந்து அதை வளர்த்து வந்தார். அந்தக் குழந்தையும் சிறுவயது முதற்கொண்டே நாராயணனிடம் பக்தி கொண்டு வளர்ந்தது. வயது ஆக ஆக, ஆண்டாள் என்று திருநாமம் பெற்ற அந்தப் பெண் குழந்தை திருமாலிடம் காதல் கொண்டது. அவனை எண்ணி யெண்ணி மகிழ்ந்தது. சிரித்தது, அழுதது, ஓடியது, பாடியது.

ஒருநாள் ஆண்டாள் இறைவனுக்கு சூட வைத்திருந்த துளசி மாலையை தான் கழுத்தில் அணிந்து கொண்டு, கண்ணாடி முன் நின்று அழகு பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்த விட்டுசித்தர் அவள்மேல் கோபமுற்று, கடிந்து கொண்டார். அன்றிரவு விட்டுசித்தர் கனவில் தோன்றிய எம்பெருமான் "விட்டுசித்தரே, ஆண்டாள் வேறு யாருமில்லை. அவளே திருமகள்" என்று கூறி மறைந்தார்.

பிறகு இறைவன் திருவரங்கம் அர்ச்சகர் கனவில் தோன்றி, "திருவில்லிப்புத்தூர் சென்று, ஆண்டாளை அலங்கரித்து, இங்கு அழைத்து வந்து, எம்மிடம் ஒப்படையுங்கள்" என்று கூறி மறைந்தார். அர்ச்சகரும் அவ்வாறே ஆண்டாளை மணப்பெண்ணாக்கி, பல்லக்கிலேற்றிக் கொண்டு வந்து, இறைவன் கருவறைக்குள் அனுப்பித்தார். இறைவன் ஆண்டாளை இருகரம் கொண்டு, தம் மார்போடு அணைத்துக் கொண்டார்.

பன்னிரு ஆழ்வார்களில் விட்டுசித்தர் மட்டும் பெருமானின் மாமனார் பாக்கியத்தைப் பெற்றதால் அன்று முதல் அவர் "பெரியாழ்வார்" என்று அழைக்கப்பட்டார்.

நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் பெரியாழ்வார் திருமொழி பாடினார். ஆண்டாள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி பாடினார்.

மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களிலிருந்து இத்தலம் செல்ல பேருந்து வசதிகள் உண்டு. தென்காசி - விருதுநகர் ரயில்பாதையில் இங்கு வரலாம். ரயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ. தூரம் ஆகும்.

"திருவில்லிப் புத்தூர் பெரியாழ்வார் ஆண்டாள்
திருஅவ தாரத் திருவூர் - பெருமாள்
கனவினில் தோன்றி யருள்செய்த மண்ணாம்
மனதில் தொழுதால் மகிழ்வு"

திவ்யதேசம் - 100



திருத்தண்கால் எனும் திருத்தங்கள்

மூலவர் : நின்ற நாராயணன்

உற்சவர் : திருத்தண்காலப்பர்

தாயார் : செங்கமலத் தாயார், அன்னநாயகி

தீர்த்தம் : பாபவிநாச தீர்த்தம்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1399, 2068, 2673(71), 2674

பூதத்தாழ்வார் : 2251

மொத்தம் : 5 பாசுரங்கள்


"தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்,
தமருள்ளும் தண்பொருப்பு வேலை – தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிட்குடந்தை யென்பரே,
ஏவல்ல எந்தைக் கிடம்"

என்று திருத்தண்காலை இரண்டாந்திருவந்தாதி 2251 ஆம் பாடலில் இரண்டாவது தலமாக வைத்துப் பாடுவார் பூதத்தாழ்வார்.

"பேரானைக் குறுங்குடி யெம்பெருமானை திருத்தண்கால்
ஊராணைக் கரம்பனூர் உத்தமனை முத்திலங்கு
காரர்திண்கடல் ஏழும் மலைஏழிவ் வுலகேழுமுண்டும்,
ஆராதென் றிருந்தானைக் கண்டது தென்றங்கத்தே"

என்று திருமங்கையாழ்வார் 1399 ஆம் பாடலில் பாடுவார்.

சந்திர வம்சத்தில் பிறந்த புரூரவ சக்ரவர்த்தி என்பான் தன்னுடைய முதுமை காரணமாக தன்னுடைய செழிப்பான நாட்டை தன்மூத்த மகனுக்கு பட்டம் பூட்டி விட்டு, துறவு மேற்கொண்டு, தருமாரண்யன் என்ற காட்டுக்குச் சென்று, மற்ற முனிவர்களோடு தவமேற்றுக் கொண்டார்.



அந்த காலத்தில் நாரதர் அந்த காட்டுப் பகுதிக்குள் வந்த போது புரூரவச் சக்ரவர்த்தி அவரைப் பார்த்து, நாரதப் பெருமானே, எந்த திவ்யதேசத்தில் தவமிருந்தால் திருத்தேவி, பூதேவி, நீளாதேவி உடனமர நாராயண மூர்த்தியை தரிசனம் செய்ய முடியும்" என்று கேட்டார்.

அதற்கு நாரதர், "தென்னாட்டில் திருவில்லிப்புத்தூர் அருகேயுள்ள திருத்தண்கால் என்னும் திருத்தங்கல்" என்று கூறினார். அதற்கு சக்ரவர்த்தி, "இந்த தலத்திற்கு திருத்தங்கல்" என்று பெயர் வரக்காரணம் என்ன? என்றார். அதற்கு நாரதர் இந்த தலவரலாற்றைக் கூறினார்.

திருத்தேவி, பூதேவி, நீளாதேவி ஆகியோரின் தோழிகளுக்குள் எந்தத் தேவி சிறந்தவள் என்ற வாக்குவாதம் ஏற்பட்டது. ஒவ்வொருவரும் தங்கள் தேவியே சிறந்தவள் என்று வாதாடினர்.

அப்போது திருத்தேவி இந்த திருத்தலம் வந்து நாராயணனை எண்ணி கடுந்தவம் மேற்கொண்டாள். அவள் தவத்தின் பயனாக வானம் மழை பொழிந்தது. பூமி பயிர்களை விளைவித்தது. தென்றல் காற்று வீசியது. பூக்கள் மலர்ந்தன. மயில்களும், குயில்களும் ஆடிப்பாடி மகிழ்ந்தன. பூமியே பிரகாசித்தது. அப்போது நாராயணர் திருத்தேவிக்கு காட்சி தந்து "மற்ற தேவியரை விட நீயே சிறந்தவள்! உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்க, நீங்கள் இங்கேயே என்னுடன் தங்கி, மக்களுக்கு அருள்புரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதன்படி நாராயணனும் திருத்தேவியோடு இங்கே தங்கினார். மற்ற இருதேவியரும் திருத்தேவியே சிறந்தவள் என ஒப்புக் கொண்டு அவர்களோடு இங்கை தங்கினார். அதனால் இத்தலம் திருத்தங்கல் என்றாயிற்று.

"திருத்தண்கால் நின்றநா ராயணா உந்தன்
திருத்தலம் வந்தேன் நினைத்து - பெருந்தவமாய்
யாத்திரை மூலமாய் யாவிடத்தும் சென்றுவர
சேர்த்திடு சக்தியை யேற்று"

என்று நான் பாடி விட்டு அத்தலத்தைவிட்டு வந்தேன்.

இத்திருத்தலம் சிவகாசியிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. விருதுநகர், திருவில்லிப் புத்தூரிலிருந்தும் வரலாம்.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, விருதுநகர், புதுக்கோட்டை, திண்டுக்கல், சிவகங்கை என்பன பாண்டியநாடு என்பதாகும். பாண்டிய நாட்டு திருப்பதிகள் மொத்தம் 18 ஆகும். இவற்றை திட்டமிட்டு போய் வந்தால்தான் நாம் பயண நேரத்தையும், தூரத்தையும், செலவையும் குறைக்க முடியும்.

மதுரையில் தங்கி திருக்கூடல், திருமாலிருஞ்சோலை, திருமோகூர் பார்க்க வேண்டும். பிறகு அங்கிருந்து திருச்சி வரும் வழியில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருமெய்யம், திருக்கோட்டியூர் பார்க்க வேண்டும்.


மதுரையில் தங்கியிருக்கும்போதே இராமநாதபுரத்திலுள்ள திருப்புல்லாணியைப் பார்க்க வேண்டும்.

திருநெல்வேலியில் தங்கிக் கொண்டு நவதிருப்பதிகள் 9-யும் பார்க்க வேண்டும். பிறகு நாங்குனேரி, திருக்குறுங்குடி பார்த்து விட்டு, திருநெல்வேலியிலிருந்து திருவில்லிப்புத்தூர் வரவேண்டும். அங்கிருந்து சிவகாசி திருத்தண்கால் வரலாம்.

நவதிருப்பதி	-	9
திருநெல்வேலி	-	4
மதுரை	-	6
மொத்தம்	-	19

மதுரை, திருநெல்வேலி பார்த்துவிட்டு நாகர்கோயில் சென்று தங்கினால் திருவனந்தபுரம், திருவட்டாறு, திருவண்பரிசாரம் என்னும் திருப்பதிசாரம் மூன்றையும் காணலாம். இந்த மூன்றும் மலைநாட்டுத் திருப்பதியில் வரும். ஆக பாண்டியநாட்டு திருப்பதி சென்றால் மலைநாட்டு திருப்பதியோடு 22-திருத்தலங்களைக் காணலாம்.

திவ்யதேசம் - 101



கூடலழகர் பெருமாள்

மூலவர் : கூடலழகர்
வீற்றிருந்த திருக்கோலம்
கிழக்கு திருமுக மண்டபம்

தாயார் : மதுரவல்லி, வருளவல்லி,
வரகுணவல்லி, மரகதவல்லி என்ற
பெயர்களும் உண்டு

தீர்த்தம் : ஹேமபுட்கரணி,
சக்ர தீர்த்தம்,
கிருதமாலா நதி, வைகை நதி

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1762
திருமழிசையாழ்வார் : 2420

மொத்தம் : 2 பாசுரங்கள்

"கோழியும் கூடலும் கோயில் கொண்ட
கோவல ரேயொப்பர் குன்றமன்ன
பாழியும் தோளுமோர் நான்கு டையர்
பண்டிவர் தம்மையும் கண்டறியோம்
வாழிய ரோவிவர் வண்ண மெண்ணில்
மாகடல் போன்றுளர் கையில் செய்ய
ஆழியொன் றேந்தியோர் சங்கு பற்றி
அச்சோ ஒருவர் அழகிய வா"

என்று திருமங்கையாழ்வார் நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தில் 1762 ஆம் பாடலாக இக்கோயிலை மங்களாசாசனம் செய்துள்ளார்.

பாண்டிய நாடு! பலவகையான பேரும் புகழும் பெற்றது. முத்துக்களாலும், முத்தமிழாலும் முத்தரை பெற்று, முவ்வுலகம் மேலோங்கி நின்ற நாடு, முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற முச்சங்கத்தில், இடைசங்கம் என்ற முச்சங்கத்தில், இடைசங்கம் கடவுளாலும், கவிஞராலும், புலவராலும், புவியாண்ட மன்னர்களாலும் தமிழ் வீரநடைபோட்ட சங்கம். அந்த சங்கம் புடைசூழ வந்த நாடு பாண்டிய நாடு. அதன் தலைநகரம் மதுரைமாநகரம். தெய்வங்கள் திருவிளையாடல் புரிந்த ஊர்! வைகை நதியும், பொருனையாறும் பொன்னென, வைரமென மின்னி, மதுரை

மண்ணின் வளத்திற்கு மகுடன் சூட்டிய பேறு. மீனாட்சி தானாட்சி செய்யும் நாடு. மண்ணுக்குக் கண்ணாக, கண்ணகி சிலப்பதிகாரக் கதையும் ஒரு கூறு. அதன் சிறப்பை கூறுவதற்கு மாடுகட்டிப் போரடித்தால் மாளாது என்று ஆனைகட்டிப் போரடித்த அழகான மாமதுரை என்று அற்புதக் கவிதைபாடி அலங்கரித்தார்கள். பழமுதிர் சோலைகளும், மலர்வன நீர்ஓடைகளும், ஆறுகளும் மனம் குளிரச் செய்கின்ற நகரம் மாமதுரையாகும்.

அந்த மதுரை வனக்காட்டிற்கு வில்லி, கண்டன் என்ற அண்ணன் தம்பிகள் வேட்டையாடச் சென்றனர். அப்போது எதிரே வந்த ஒரு புலியால் கண்டன் அடித்துக் கொல்லப்பட்டான். அதுகண்ட அண்ணன் வில்லி அழுது புரண்டு, தன் தம்பியின் உயிரை மீட்டுக் கொடுக்குமாறு விஷ்ணு பரமாத்மாவிடம் வேண்டினான். அதற்கு விஷ்ணு பெருமாள் அவன் கனவில் தோன்றி, மதுரையடுத்த புத்தூரில் ஒரு பாம்பணையில் வீற்றிருக்கிறோம். அங்கே நீ ஒரு கோயில் கட்டுவித்துச் சிறப்புக்கள் செய்க" என்றார். அதற்கு வில்லி, "என் தம்பியை உயிர்ப்பித்தால் அந்த திருப்பணியை நிறைவேற்ற முடியும் என்று கூற, அதன்படி விஷ்ணு அருளால் கண்டன் உயிர் பெற்றான்.

வில்லி சொன்னபடி புத்தூரில் கோயில் கட்டுவித்தான். வில்லி புத்தூரில் கோயில் கட்டியதால் அது வில்லிப்புத்தூர் என்று பெயர் பெற்றது.

அந்த வில்லிப்புத்தூர் முகுந்தப்பட்டர் என்ற குடுமிச்சோழிய பிராமண வேயகுல அந்தனர் வாழ்ந்து வந்தார். அவர் கல்வி கேள்வி வேதங்களில் சிறந்தவர். திருவரங்கப் பெருமானையே வழிபட்டு, அவன் திருத்தொண்டையே சிறந்ததென எண்ணி செய்து வந்தார்.

அவருக்கும் சிறந்த கற்புடைய பெருமாட்டியுமான அவரது மனைவி பதுமவல்லி என்பாருக்குமாக கி.பி. நூற்றாண்டின் பிற்பகுதியில் குரோதன வருடம் ஆனி மாதம் சுக்ல ஏகாதசியன்று சுவாதி நட்சத்திரத்தில் ஒரு மகன் பிறந்தார். அவரே பின்னாளில் விஷ்ணுசித்தர் என்று போற்றப்பட்ட பெரியாழ்வார் ஆவார்.

நாலாயிர திவ்யப் பிரபந்தம் பாடியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள் ஆவர். அவர்களில் ஆண்டாள் பாடிய திருப்பாவையும், திருமங்கையாழ்வார் பாடிய பெரிய திருமொழியும் சிறப்பு வாய்ந்தவைகளாகும்.

மார்கழி மாதம் என்றால் ஆண்டாள் பாடிய திருப்பாவையே, இளங்காலைப் பொழுதில் இனிமை சேர்த்துக் கொண்டிருக்கும்.

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளாம்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆயர்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்"

என்ற பாடல் கேட்காத இல்லமுண்டோ?

ஆனால் நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் முதல் பாசுரமாகத் தொடங்குவதே பெரியாழ்வார் மங்களாசாசனம் செய்த மங்களகரமான பாடலாகும்.

பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண் ணா!உன்
செவ்வடி செவ்விதிருக் காப்பு!

என்பது அப்பாடல் ஆகும்.

அந்த பெரியாழ்வார் தத்து எடுத்து முத்தம் கொடுத்து வளர்த்த மகளே ஆண்டாள் திருப்பாவை ஆவார்.

முகுந்தப்பட்டர் தன் விஷ்ணுசித்தன் சிறுவயது மகன் எல்லா நூற்களையும், வேதங்களையும் கற்று பெரிய ஞானியாக வேண்டும் என்று விரும்பி, அவனை இளமையிலேயே எல்லா நூல்களையும் கற்றுத் தேற குருகுலத்தில் சேர்த்தார். ஆனால் அவருக்கு அந்த நூல்களைக் கற்று தேற ஆர்வம் வரவில்லை. அவருக்கு கண்ணனாக அவதரித்த திருவரங்களாக உருவெடுத்த பரந்தாமன் மேலேயே ஆசை பெருகளாயிற்று. அவருக்குத் திருத்தொண்டு செய்வதிலேயே ஆர்வம் கொண்டார்.

அதற்காக அவர் செம்பருத்தி, ரோசா, செவ்வரளி போன்ற நிலப்பூக்களும், தாமரை, அல்லி போன்ற நீர்ப்பூக்களும், முல்லை, மல்லிகை போன்ற கொடிப்பூக்களும்கோட்டுப் பூக்களும், துளசி செடிகளும் நிறைந்த ஒரு செழித்த, குளிர்ந்த பூஞ்சோலையை அமைத்தார்.

பிறகு விஷ்ணு சித்தர் நாள்தோறும் அந்தப் பூஞ்சோலையில் பூத்த மலர்களைப் பறித்து மாலையாகக் கட்டி, திருமாலுக்கு சூட்டி மகிழும் திருத்தொண்டை செய்து வரலானார்.

அப்போது வல்லவதேவன் என்ற பாண்டிய மன்னன் தென்மதுரையை நீதி வழுவாது, செழுமையாக ஆட்சி செய்து வந்தான்.

ஒருநாள் அவன் இரவு நகர் சோதனைக்காக மாறுவேடம் பூண்டு வந்து கொண்டிருந்த போது, ஒரு வீட்டுத் திண்ணையில் ஒரு வழிப்போக்க அந்தணர் தூங்கிக் கொண்டிருந்தார். மன்னன் அவரை எழுப்பி விசாரித்த போது, தான் வடநாடு, காசி முதலிய தலங்களுக்குச் சென்று கங்கையில் நீராடி விட்டு, உலகளந்த பெருமாளை தரிசித்த பின்னர் இப்போது சேது சமுத்திரத்தில் நீராடி இறைவனை தரிசிக்கச் செல்ல வந்த போது, இருட்டி விட்டது. அதனால் களைப்பும் ஆக இந்த திண்ணையில் படுத்துத் தூங்கி விட்டேன் என்று கூறினார். அதன்பிறகு பாண்டிய மன்னர் தொடர்ந்து அவரோடு பேசிய போது அவர் ஒரு சிறந்த ஞானி என்று தெரிந்து கொண்டார். அதனால் அவரிடம் எதையாவது கற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணிய மன்னர் அவரிடம் உலக நன்னெறிக்கு

வழிகாட்டும் ஒரு சுலோகத்தைக் கூற கேட்டார். பாண்டிய மன்னனின் மாமதியை அறிந்து கொண்ட அந்த அந்தணர், மகிழ்ச்சிக்கு பயன்படும் வகையில் ஒரு தத்துவத்தைக் கூற வேண்டும் என்று எண்ணிக் கொண்டு மன்னா, **"மழை பெய்யும் நான்கு மாதங்களுக்குத் தேவையான பொருட்களையெல்லாம் மழை பெய்யா மற்ற மாதங்களில் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். முதுமைக் காலத்திற்கு தேவையானவற்றை இளமையிலேயே தேடிச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதேபோல மறுமைக்கு மெய்ப்பொருட்களை இம்மையிலேயே சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும்"** என்றார்.

அந்தணரின் பொன்மொழிகளைக் கேட்ட பாண்டிய மன்னர், அவரை அரண்மனைக்கு அழைத்துச் சென்று, அவரை பாராட்டிப் பரிசிற் பொருட்கள் கொடுத்து, மரியாதை செய்து சேதுவில் நீராட அனுப்பி வைத்தார்.

அதன்பிறகு சிந்தனை செய்த பாண்டியன் ஆழ்ந்து சிந்தித்து பிறகு கூட இருக்கும் பொருட்கள் கூட வரா, ஆகவே இறைவனோடு இரண்டறக் கலக்கும் பேரின்ப பெருநிலையையடையும் பெரு முயற்சியை மேற்கொண்டார். ஆகவே அவர் செல்வநம்பி என்னும் அரண்மனைக் குருவை அழைத்து, "பரம் பொருளின் ரகசியம் என்ன? அதன் பொருள் என்ன, அதற்கு விடை கூறும் விற்பன்னர்களையும், ஞானிகளையும், வேதாந்திகளையும் அழைத்து, அதன் உட் பொருளைக் கூறக் கேளும்?" என்று உத்தரவிட்டார். அதற்காக அவர் அரண்மனை கொலு மண்டபத்தில் தன் சிம்மாசனத்திற்கு முன்னால், ஒரு தோரணக் கம்பத்தை நட்டு, அதில் பொற்கிழி கட்டிய ஒரு திரைச் சீரையைக் கட்டி தொங்க விட்டார். யார் அந்த பரம்பொருள் ரகசியத்திற்கு சரியான விடை கூறி பொற்கிழி சீரை அவிழ்ந்து போக செய்கிறார்களோ, அவர்களுக்கு அந்த பொற்கிழி சொந்தம் என்று கூறினார்.

ஆனால் யாராலும் பரம் பொருளுக்கு சரியான விடை கூற முடியவில்லை. இறுதியில் விஷ்ணு பெருமாள் பரம்பொருள் ரகசியத்தை உலகுக்கு உணர்த்த விஷ்ணு சித்தருக்கு பணித்தார். சித்தரோ எதுவுமே கற்றறியாத நான் எப்படி பரம்பொருளுக்கு விடை பகர முடியும் என்று கூறி மறுத்தார். ஆனால் பரந்தாமனோ, "நீர் போம், நாம் அதைச் செய்வோம்" என்று அனுப்பித்தார்.

அரண்மனையில் விஷ்ணு சித்தரைக் கண்ட அமைச்சர்கள், வேதாந்திகள் இவரால் எப்படி பரம் பொருளின் பதிலைக் கூற முடியுமென்று எள்ளி நகையாடினர்.

ஆனால் விஷ்ணு சித்தர் பொற்கிழி கம்பத்தில் போய் நின்றதும், அரங்கனின் அருளோடு அவர் பரம்பொருளின் தத்துவ வேதத்தை அப்படியே ஒப்பித்தார். அதைக் கண்ட அவையோர் வியந்து வந்து அவரைப் பாராட்டிப் போற்றினர்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பாண்டிய மன்னன், "குருவின் மூலம் கற்றறியாத ஒரு பரம்பொருள் ரகசியத்தை விஷ்ணு பெருமாள் மூலம் பெற்று, உலகத்திற்கு உணர்த்தியதற்காக 'விஷ்ணு சித்தர்' பெயரையும், 'பட்டர்பிரான்' என்ற பட்டத்தையும் கொடுத்து கௌரவித்தார்.



அதன்பிறகு அவரை பட்டத்து யானைமேல் அமர்த்தி நகர்வலம் வரச் செய்தார். அவ்வாறு அவர் மதுரை திருக்கூடல் நகர் திருக்கோயில் முன்வந்து தொழுதபோது, திருக்கூடல் வைகுந்தப் பெருமாள் தன் உண்மைத் தோற்றமான முழு பட்டணிந்த, சங்குச் சக்கரத்தோடு, கருட வாகனத்தில் திருமகளோடு காட்சி தந்து நின்றார். அதுகண்டு யானை மேல் அமர்ந்திருந்த விஷ்ணு சித்தர் வேர்த்து வியந்து யானை மணிகளையே இசைவாத்தியங்களாகக் கொண்டு, தம்மையறியாமலேயே வாழ்த்துப் பாடல் பாடினார்.

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயி ரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண் ணா!உன்
செவ்வடி செவ்விதிருக் காப்பு"

என்று பல்லாண்டு பாசுரங்களைப் பாடி வாழ்த்தினார்.

அப்படி பாடி மங்களாசாசனம் பெற்ற தலமே திருக்கூடல் திவ்யதேசமாகும்.

மதுரை திருக்கூடல் கூடலழகர் பெருமாள் திருக்கோயில் 101வது திவ்யதேசமாகும். இந்த கோயில் மதுரை பெரியார் பேருந்துக்குப் பக்கத்தில் உள்ளது. மதுரை மீனாட்சி அம்மன் பெருங்கோயிலும் இதன் அருகாமையிலேயே உள்ளது.

"எந்தா ளெம்பெரு மானுன்ற னக்கடி
யோமென் றெழுத்துப்பட்ட
அந்நாளே, அடி யோங்கள டிக்குடில்
வீடுபெற் றுய்ந்தது காண்
செந்நாள் தோற்றித் திருமது ரையுட்சிலை
குனித்து, ஐந்தலைய,
பைந்நா கத்தலைப் பாய்ந்தவ னே!உன்னைப்
பல்லாண்டு கூறுதுமே"

என்று பெரியாழ்வார் இக்கோயிலை பல்லாண்டு பாடுகிறார்.



இந்த கோயிலின் மேல் தளத்துக்குச் சென்றால் அஷ்டாங்க விமானத்தைப் பார்க்கலாம். இதில் ஒரு தட்டில் பள்ளி கொண்ட பெருமாள் சயனதி திருக்கோலத் திலும், மற்றொரு தட்டில் சூரிய நாராயணன் நின்ற கோலத்திலும் இருப்பதைக் காணலாம்.

ஒரு காலத்தில் உலகமெங்கும் அதிகமாக மழை பெய்த போது, பக்தர்களின் வேண்டுகோளுக்கு கட்டுப்பட்டு, பெருமாள் நான்கு மேகங்கள் ஏவ, அவைகள் இத்தலத்தின் மாடங்கள் போல ஒன்றுகூடி மழையைத் தடுத்துவிட்டதாகக் கூறுவர். மேகங்கள் ஒன்று கூடியதால், இந்த கோயிலுக்கு திருக்கூடல் என்று பெயர் ஏற்பட்டது.

இந்த கோயிலின் உட்சுவர்களின் 108 திவ்ய தேசத்துப் பெருமாள்களின் ஓவியங்கள், அந்தத் திவ்ய தேசத்து விளக்கத்தோடு அழகாக வரையப்பட்டிருப்பதைக் காணலாம்.

"அழைப்பன் திருவேங் கடத்தானைக் காண
இழைப்பன் திருக்கூடல் கூட, மழைப்பே
ரருவி மணிவரன்றி வந்திழிய, யானை
வெருவி யரவொடுக்கும் வெற்பு"

என்று திருமழிசையாழ்வாரும் இந்த கோயிலை 2420 ஆம் பாடலில் மங்களாசாசனம் செய்துள்ளார்.

மதுரை திருக்கூடல் அழகர் கோயிலுக்கு நான் இரண்டுமுறை சென்றேன். இரண்டாம் முறை சென்றபோது இரண்டு கி.மீட்டர் தூரம் நீண்ட வரிசை எனக்கு எப்படி உள்ளே செல்வது என்றே தெரியவில்லை.

அப்போது அடையாளம் தெரியாத ஒருவர் வந்து, "ஏங்க உள்ளே செல்ல வேண்டுமா? வாங்க என் கூட" என்று கூறி என்னை கூடலழகர் அருகில் சென்று கும்பிட வைத்தார் யார் அவர்? இன்று வரை எனக்கு தெரியவில்லை. அந்த மயக்கத்திலேயே இந்த வெண்பாவை எழுதிவிட்டு வந்தேன்.

"திருக்கூ டலழகர் தென்பாதம் காண
விருப்போடு சென்று விழுந்தேன் - உருக
மதுரவல்லித் தாயார் மதுரைமண்ணைக் காக்க
இதயம் குளிர்ந்தேன் இசைத்து

கூட லழகா!நீர் கூப்பிட் டழைத்துப்போய்
கூட அமர்த்தினாய் கும்பிட - பாட
பாடினேன் நெஞ்சுருகப் பாடினேன் உன்னையே
நாடுவேன் நாள்தோறும் நான்"

108-திவ்ய தேசத்தில் பாண்டிய நாட்டு திவ்யதேசத்தை காணச் செல்பவர்கள் குறிப்பாக மதுரை கூடலழகரைக் கான செல்பவர்கள், அப்படியே 63-நாயன்மார்களான மதுரை மீனாட்சி கோயிலுள்ள கூன்பாண்டி நெடுமாறன், மங்கையர்க்கரசியார், மூர்த்தி நாயனார் மூவர் சன்னதிகளையும் கண்டு வரலாம்.

திவ்யதேசம் - 102



திருமாலிருஞ்சோலை
அழகர் கோயில்

மூலவர் : கள்ளழகர்
அழகர் கோயில் என்பதே மக்களிடம் வழக்கத்திலுள்ள பெயராகும்.
மாலிருஞ்சோலை நம்பி என்றும் கூறுவர்.

தாயார் : சுந்தரவல்லி நாச்சியார்

தீர்த்தம் : நூபுரகங்கை, சிலம்பு ஆறு,
தலவிருட்சம் - சந்தன் விருட்சம்

மங்களாசாசனம் :

பெரியாழ்வார் : 71, 258, 338-59, 453-62

ஆண்டாள் : 534, 587-96

திருமங்கையாழ்வார் : 1022, 1114, 1329, 1573, 1634, 1760, 1765, 1818-37, 1855, 1969, 2020, 2034, 2673(74), 2674(125)

பூதத்தாழ்வார் : 2227, 2229, 2235

பேயாழ்வார் : 2342

நம்மாழ்வார் : 2886-2918, 3733-44, 3749

மொத்தம் : 128 பாசுரங்கள்

பெரியாழ்வார், ஆண்டாள், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் என ஏழு ஆழ்வார்களும் சேர்ந்து மொத்தமாக 128 பாசுரங்கள் பாடிய திருத்தலம் இதுவாகும்.


அவற்றில் பெரியாழ்வார் பாடும் போது,



"ஆயிரம் தோள்பரப்பி
முடியாயிர மின்னிலக
ஆயிரம் பைந்தலைய
அனந்தசயன னாளும்மலை
ஆயிர மாறுகளும்
சுனைபல வாயிரமும்,
ஆயிரபூம் பொழிலுமுடை
மாயிருஞ் சோலையதே"

என்று 358-ஆம் பாடலில் பாடுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த கோயில் இயற்கையால் சூழப்பெற்று, கோட்டைக்குள் குடி கொண்ட கோயிலாகும். இந்தக் கோயிலில் பதினெட்டாம் படி கறுப்பு என்ற கோபுர வாசலை தேவதை காத்து வந்ததாகக் கூறுவர். ஆனால் இந்த வாசல் இப்போது உபயோகத்தில் இல்லை. ஆகவே இந்த கோயிலுக்குள் வடக்குப்புறமுள்ள பெரிய வாசல் வழியாகத்தான் செல்ல வேண்டும். கோயில் மூலவர், உற்சவர் இருவரும் பஞ்சாயுதத்துடன் விளங்குகின்றனர். உற்சவர் தங்கத்தால் செய்யப்பட்டவர் ஆவார்.



கோயிலுக்கு மேலே 4-கிலோ மீட்டர் தூரத்தில் திருமாலிருஞ்சோலை மலையுள்ளது. இதற்கு வனகிரி என்ற பெயருமுண்டு. இங்கே சிலம்பாறு என்ற சிறிய அருவி ஓடுகிறது. நூபுரகங்கை என்று இதைக் கூறுவர். திரிவிக்ரமாவதாரத்தின் பொழுது பருகமா பகவான் கமலண்டத்தில் தீர்த்தம் சேர்த்து, அதில் பகவான் தண்டைச் சலங்கையில் நீர் தெரிந்து இங்கே நதியாக ஓடுவதால், அது சிலம்பாறு என பெயர் பெற்றது என்று கூறுவர்.


என்றாலும் சிலம்பாறு அருவியில், கோயிலில் இரண்டிலுமே அசுத்தம் கலந்து காணப்படுவது வருத்தப்படக் கூடியதாகும். சுத்த, சுகாதாரமில்லாத கோயிலிலோ, அருவியிலோ பக்தர்கள் சாப்பிடுவதும், குளிப்பதும் நோயிக்கிடமளிக்குமே தவிர இறைவன் அருள்வார் என்பது மூடத்தனமாகும். அறங்காவல் துறையினரும், நிர்வாகத்தாரும் இதை கவனிக்க வேண்டும்.

இந்த கோயில் மதுரையிலிருந்து 20 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து வசதியுண்டு. மேலே அருவிக்குச் செல்லவும் பேருந்து வசதியுண்டு.



"திருமாலி ருஞ்சோலை திருஅழகர் கோயில்
பெருமானே! செல்வம் பெறநான் – தருவாயே
கல்வி புகழும் கலைகள் பலவகையும்
நல்லோர் பழக்கமும் நல்கு"

திவ்யதேசம் - 103



மூலவர் : காளமேகப் பெருமாள்

தாயார் : மோகவூர்வல்லி, மேகவல்லி

உற்சவர்: திருமோகவூர் ஆப்தன்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 2673 (74)

நம்மாழ்வார் : 3667-77

மொத்தம் : 12 பாசுரங்கள்

திருமோகூர்
காளமேகப் பெருமாள் கோயில்

"தொண்டீர்! வம்மின்நம் சுடரொளி
யொருதனி முதல்வன்,
அண்ட மூவுல களந்தவன்
அணிதிரு மோகூர்,
எண்டி சையும்ஈன் கரும்பொடு
பெருஞ்செந்நெல் விளைய,
கொண்ட கோயிலை வலஞ்செய்திங்
காடுதும் கூத்தே"

என்று நம்மாழ்வார் 3671-ஆம் பாடலில் இக்கோயிலை மங்களாசாசனம் செய்துள்ளார்.



இந்த கோயிலுக்கு மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து உண்டு. பழமுதிர் சோலை செல்லும் வழியில் உள்ளது.

இந்த கோயிலுக்கு அருகிலேயே ஒத்தக்கடையில் நரசிங்க பெருமாள் கோயிலும், அதற்கருகில் மாணிக்க வாசகப் பெருமாள் அவதரித்த திருவாதவூர் கோயிலும் உள்ளது.




"சீராரும் மாலிருஞ் சோலை - திருமோகூர்
பாரோர் புகழும் வதரி வடமதுரை"


என்று இத்திருத்தலத்தை திருமங்கையாழ்வார் பாடுவார்.

நான் இந்த கோயிலுக்குச் சென்ற போது மதியம் ஒரு மணிக்குமேல் ஆகிவிட்டது. ஒரு மணிக்கு கோயில் மூடி விடுவார்கள். ஆனால் நான் இறைவனை வேண்ட, கோயில் திறந்திருக்க, தரிசனம் செய்து வந்தேன்.

"திருமோகூர் காளமேகர் திவ்யதேசக் கண்ணா
பெரும்பேறு உன்னாலே பெற்றேன் - வரவே
கதவு திறந்திட்டாய் காட்சி கொடுத்தாய்
இதயம் குளிர்ந்தேன் இனித்து"



திவ்யதேசம் - 104



திருக்கோட்டியூர்

மூலவர் : உரகமெல்லணையான்

உற்சவர்: சௌம்ய நாராயணன்

தாயார் : திருமாமகள் நாச்சியார்

தீர்த்தம் : தேவபுட்கரணி, திருபாற்கடல்

மங்களாசாசனம் :

பெரியாழ்வார் : 13-22, 173, 360-370

திருமங்கையாழ்வார் : 1550, 1838-1847, 1856, 2674(125)

பூதத்தாழ்வார் : 2227, 2268

பேயாழ்வார் : 2343

திருமழிசையாழ்வார் : 2415

மொத்தம் : 39 பாசுரங்கள்

இராமாநுஜருக்கு சீடராக ஐந்து ஆசாரியர் இருந்தனர். அவர்களில் ஒருவர் திருக்கோட்டியூர் நம்பி என்பது குறிப்பிடத்தக்கது. அப்படி தகுதியுடைய பெரியோர்க்கு இராமானுசர் திருமந்திரப் பொருளை போதித்த இடம் கோட்டியூர் ஆகும்.



"உரகமெல்லணை யான்கையிலுறை
சங்கம்போல்மாட அன்னங்கள்,
நிரைகணம்பரந் தேறும் செங்கம
லவயல்திருக் கோட்டியூர்
நரகநாசனை நாவில் கொண்டழை
யாதமானிட சாதியர்,
பருகுநீரு முடுக்கும் கூறையும்
பாவஞ்செய்தன தாங்கொலோ"

என்று நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் 363-ஆம் பாடலில் பெரியாழ்வார் பாடுவார்.

"ஏறுமேறி இலங்குமொண் மழுப்பற்றும்
ஈசற்கிசைந்து, உடம்பிலோர்
கூறுதான் கொடுத்தான் குலமாமகட் கினியான்
நாறு சண்பக மல்லிகை மலர்புல்கி
இன்னிள வண்டு, நன்னறுந்
தேறல்வாய் மடுக்கும் திருக்கோட்டி யூரானே"

என்று 1841 ஆம் பாடலில் திருமங்கையாழ்வார் பாடுவார்.



இந்த பாடலுக்கேற்ப இந்த கோயிலுக்குள் புகுந்தவுடனேயே சிவன் கோயில் காட்சியளிக்கிறது.

இரணியனைக் கொல்வதற்காக பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும் இங்கே கூட்டாக ஆலோசனை செய்ததால், இந்த ஊருக்கு கூட்டமூர் என்றாகி, பிறகு கோட்டியூர் என்று ஆனது எனக் கொள்ளலாம்.

இந்த கோயில் வலது இடதுமாக நான்கு மாடிக் கோயிலாக அமைந்துள்ளது.

முதல் மாடியில் கதம்ப மகரிஷி தவமியற்றி வணங்கிய உரக மெல்லணையான் சயனத் திருக்கோலத்தில் திருக்கோயில் அமைந்துள்ளது.

நின்ற, இருந்த, கிடந்த, நடந்த என்ற நிலையில் தட்சேணசுவர நரசிம்மர், உத்தரேசுவர நரசிம்மர், சீராப்திநாதர், சதிதநாராயணர் சன்னதிகளைக் காணலாம்.

உரகமெல்லணையான் பெருமாளின் வலது கரத்தில் ஆதிசேசன் காட்சியளிக்கிறார்.

இரண்டாவது மாடிக் கோயிலில் நின்ற திருக்கோலத்திலும், மூன்றாவது திருக்கோயிலில் இருந்த திருக்கோலத்திலும் பெருமாள் காட்சியளிக்கிறார்.

நான்காவது மாடிக் கோயில் பெருமாள் திருமந்திரப் பெருமாளை உலகுக்கு உபதேசித்த இடம்.

இந்த கோயில் விமானம் சிற்ப கலை தத்துவப்படியும், விசுவகர்மாவினாலும் கட்டப்பட்டுள்ளது.

இராமானுசர் திருக்கோட்டியூர் நம்பியாம் திருமந்திரப் பெருமாள் ரகசியத்தை உபதேசமாய் பெற்று, பிறகு இக்கோயில் கோபுரத்தில் ஏறி அந்த ரகசியத்தை உலக மக்களுக்கு வெளியிட்டது குறிப்பிடத்தக்கதாகும். அதற்கு அடையாளமாக எம்பெருமான் திருஉருவச்சிலை கோபுரத்தின் உச்சியில் கோட்டியூரைப் பார்த்த முகமாக இருப்பதைக் காணலாம்.

இராமானுசர்

சென்னையிலிருந்து தென்மேற்கே காஞ்சிபுரம் செல்லும் வழியில் உள்ளது ஸ்ரீபெரும்புதூர் என்னும் திருப்பெரும்புதூர். அதாவது ராஜீவ்காந்தி விடுதலைப் புலிகளால் கொலை செய்யப்பட்ட இடம் என்றால் தெளிவாகப் புரியும். வேறு வழியில்லை. அப்படிச் சொன்னால் தான் இப்போதைய தலைமுறைக்குப் புரியும்.

அந்தக் காலத்தில் அதாவது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, அந்த ஊரில் ஆசூரி கேவசவாச்சாரியார் என்ற அந்தணர் வாழ்ந்து வந்தார். புனிதமானவர். வேள்வி இயற்றுவதில் வல்லவர். வேள்வி வல்லுநர் என்ற பட்டமும் அவருக்கு உண்டு.

வேள்வி என்பது தவம். அதைச் செய்தால் அது நாம் வேண்டியதைக் கொடுக்க வல்லது. தர்மத்திற்கு ஈடானது. இறைவனுக்கு விருப்பமானது. இறைவனிடம் அது நம்மைக் கொண்டு செல்கிறது. ஆகவே வேள்வி உயர்ந்த சக்தியாகிறது.



அப்படிப்பட்ட வேள்வியாளர் ஆசூரி கேசவாச்சாரியார் அதே திருப்பெரும்புதூரைச் சேர்ந்த பெரிய திருமலை நம்பியார் என்பாரின் மகள் காந்திமதி பெண்ணை மணமுடித்தார்.

திருமணமாகி பல ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்கு மகப்பேறு கிடைக்கவில்லை. ஆகவே அவர்கள் சென்னை கடற்கரைக்குப் பக்கத்திலுள்ள விருத்தாரண்யம் என்ற புண்ணிய தலத்திற்கு வந்து, அங்குள்ள பார்த்தசாரதியை வேண்டினர். விருத்தாரண்யம் என்பது இப்போதுள்ள திருவல்லிக் கேணி பார்த்தசாரதி கோவில் ஆகும். விருத்தாரண்யம் பொய்கையின் பெயர் வல்லிக்கேணி என்பதாகும். ஆகவே அது திருவல்லிக்கேணி என்றானது.

கேசவாச்சாரியார் - காந்திமதி தம்பதியர் பார்த்த சாரதியை நோக்கி தங்களுக்கு மகப்பேறு வேண்டும் என்று வேள்வியாற்றினர். அவர்களுக்கு பார்த்தசாரதி காட்சி தந்து, "ஆச்சாரியாரே, உலகின் நன்மை பெருகும் பொருட்டு யாமே உமக்கு மகவாகப் பிறப்போம். நீர் உங்கள் ஊர் செல்லவும் என்று கூறி ஊர் செல்ல அருளினார்.

அதன்படி சக ஆண்டு 939-இல் சித்திரை மாதம் 12-ஆம் தேதி வியாழக்கிழமை சுக்லபட்சம் பஞ்சமியில், கதிரவன் கர்க் கடக ராசி, பிங்கள ஆண்டில் ராமானுசர் அவதரித்தார்.

இராமானுசர் சிறிய வயதிலேயே ஞானம் பெற்று விளங்கினார். வேதப்பாடங்களில் சிறந்து விளங்கினார். படித்த மாத்திரத்திலேயே புரிந்து கொள்ளும் சக்தி பெற்றிருந்தார்.

அந்தக் காலத்தில் காஞ்சிபுரத்தில் திருக்கச்சி நம்பி என்ற பெரிய பக்தர் வாழ்ந்து வந்தார். அவர் தினந்தோறும் காஞ்சியிலிருந்து திருப்பெரும்புதூர் வழியாக பூவிருந்தவல்லிக்கும் சென்று அங்குள்ள பெருமாளை வழிபட்டுச் செல்வது வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஒருநாள் இராமானுசர் ஆசிரியர் வீட்டிலிருந்து வந்த போது, திருக்கச்சி நம்பியாரைச் சந்தித்து, அவர்மீது அன்பு கொண்டு வீட்டுக்கு அழைத்தார். அதற்கு மறுத்த திருக்கச்சி நம்பி, "நான் வேளாள குலத்தைச் சேர்ந்தவர். நீங்கள் பிராமணர். உங்கள் வீட்டுக்கு வர உங்கள் பெற்றோர் அனுமதிப்பார்களா?" என்று கேட்டார். அதற்கு இராமானுசர், "பெரியவரே பூணூல் அணிவதால் மட்டும் ஒருவன் பிராமணன் ஆகி விடுவதில்லை. இறைவனிடம் அன்பும், பக்தியும் கொண்டவன் மட்டுமே பிராமணன் ஆகிறான். திருப்பாணாழ்வார் தாழ்ந்த குலத்தில் பிறந்தார். ஆனால் பிராமணர்கள் பாராட்டும் வண்ணம் பெரும் கீர்த்தி பெற்றார்" என்றார்.

பிறகு திருக்கச்சி நம்பி இராமானுசர் இல்லம் சென்று, விருந்துண்டு சென்றார். அதுமுதல் அன்பு பூண்டு ஒழுகலாயினர்.

இராமானுசருக்கு 16-வயது ஆன போது அவர் தந்தை கேசவாச்சாரியார் அவருக்கு திருமணம் செய்து வைத்தார்.

ஆனால் ஒரு மாதம் கழித்து கேசவாச்சாரியார் ஒரு கொடிய நோயால் பரமபதம் அடைந்தார்.

அதனால் சோகமுற்ற இராமானுசர் பிறகு திருப்பெரும்புதூரில் இருக்கப்பிடிக்காமல் காஞ்சியில் ஒருவீடு கட்டி அங்கு குடிபெயர்ந்தார்.

காஞ்சியில் இராமானுசர் யாதவப்பிரகாசர் என்ற அத்வைதப் பண்டிதருக்கு சீடராக ஆனார். ஆனால் அந்த யாதவப்பிரகாசர் கடவுள் உருவ வழிபாட்டில் நம்பிக்கையில்லாதவர். இராமானுசரோ நம்பிக்கையுள்ளவர். இதில் குருவுக்கும் சீடருக்கும் கருத்து மோதல் ஏற்பட்டது. இராமானுசரின் அறிவுத் திறனை அறிந்த யாதவப்பிராகசர் அவர்மேல் பொறாமை கொண்டு, அவர் குரு தத்துவத்திற்கு மாறாக அவரை கொலை செய்யவும் சதி செய்தார்.

இராமானுசர் சதியை தன் சிற்றன்னையின் மகன் கோவிந்தன் மூலம் அறிந்து, அவனது ஆலோசனையின் பேரில் தப்பித்து காட்டுக்குள் போய் மறைந்தார்.

பிறகு காட்டில் இராமானுசர் ஒரு வேட்டுவத் தம்பதியை சந்தித்தார். அவர்கள் வழித்துணைக்காக இராமானுசரின் உதவியை நாடினார். இராமானுசரும் அதற்கு ஒப்புக் கொண்டார்.அப்போது இரவு வரவே அவர்கள் ஓர் இடத்தில் உறங்கினர்.

அடுத்த நாள் விடிந்த பிறகுவேடன் மனைவிக்கு தாகம் எடுத்தது. அதற்கு வேடன் பக்கத்தில் நல்ல நீர் இருப்பதாகக் கூறி அங்கே அழைத்துச் சென்றான். அங்கே இராமனுசர் அந்தப் படிகளில் இறங்கி, அந்த வேடன் மனைவிக்கு மூன்று தடவை தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார். அப்படியும் அவள் தாகம் அடங்கவில்லை. பிறகு நான்காவதாக இராமானுசர் படிகளில் இறங்கி தண்ணீர் எடுத்துக் கொண்டு மேலே வந்தார். ஆனால் அப்போது அங்கே வேட்டுவ தம்பதியரைக் காணவில்லை. அதேநேரம் இராமானுசர் நின்ற இடம் கோயில் கோபுரங்களையும், பல வீடுகளையும் கொண்டதாக தெரிந்தது. இராமானுசருக்கு ஒன்றுமே புரியவில்லை. தாம் எங்கிருக்கிறோம் என்று தெரியவில்லை. அப்போது அங்கே ஒரு வழிபோக்கன் வந்தான். அவரிடம் இராமானுசர் இது எந்த இடம் என்று கேட்க, அவர், “காஞ்சிபுரம்” என்று கூறிச்சென்றார்.

அப்போது இராமானுசருக்கு மின்னலென ஒரு ஒளி தோன்றியது. அது அவருக்கு வேட்டுவ தம்பதியரின் நினைவைக் கொண்டு வந்தது. அந்த வேட்டுவ தம்பதியர்தான் திருக்கச்சி வரதராச பெருமாள் பேரருளானனும், பெருந்தேவியும் ஆவர் என்றும், தம்மை ஆபத்திலிருந்து காப்பாற்றியவர்கள் அவர்கள்தாம் என்றும் அறிந்து, அவர்கள் பாதம் பணிந்து பாட்டுப்பாடி கண்ணீர் சொறிந்தார்.

காஞ்சிக்கு திரும்பி வந்த இராமானுசர் பிறகு தன் வீட்டிலேயே சாத்திரங்களைப் படிக்கலானார். நாலாயிர திவ்யப் பிரபந்தம் மூலம் பஞ்ச சமஸ்காரம் தத்துவத்தையும், திருக்கச்சி நம்பி மூலம் அவற்றை உபதேசம் செய்யும் குருவாகவும் மாறினார்.

இராமானுசர் திருக்கச்சி நம்பியாரை குருவாக ஏற்றுக் கொள்ள வேண்டினார். ஆனார் திருக்கச்சி நம்பியோ இராமானுசரையே குருவாக எண்ணினார். அதை அவர் அவரிடம் நேரடியாகக் கூறாமல், வேறுவிதமாகக் கூறித் தவிர்த்தார். அதாவது "குழந்தாய்! காஞ்சி பேரருளாலும், பெருந்தேவியோடும் உமக்குக் காட்சி தந்து உம்மை ஆட்க்கொண்டு விட்டனர். நீயும் அவர்கள் மீது பற்று கொண்டு விட்டாய். ஆகவே நீர் இன்று முதல் காஞ்சிசாலக் கிணற்றிலிருந்து நீர் தீர்த்தம் கொண்டு வந்து, பேரருளானம் திருவாரதத்திற்கு செய். வரதாசபெருமாள் உன் விருப்பத்திற்கு அருள் செய்வார் என்று கூறினார்.

பஞ்ச சமஸ்காரம் என்றால் என்ன?

ஒருவன் பிறக்கும் போதே வைணவர் என்று பிறப்பதில்லை. ஓர் ஆசாரியாரைக் குருவாக ஏற்றுக் கொண்டு, பண்டைய குலப்பெருமையைத் தவிர்த்து, தொண்டர் குலத்தில் தீட்சை பெற்ற பிறகு வைணவன் என்ற பெருமையை அடைகிறான். சாதி குலங்களால் வரும் பெருமையைவிட தொண்டர்குலத்தில் இணைந்து வரும் பெருமை மிகவும் உயர்ந்தது என்பது வைணவத் தத்துவமாகும்.

அதற்கு எடுத்துக்காட்டாகக் கூறப்போவோமாயின், நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் பெரியாழ்வார் அருளிய முதற்பத்து திருப்பல்லாண்டை எடுத்துக் கூறலாம்.

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயி ரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண் ணா!உன்
செவ்வடி செவ்விதிருக் காப்பு
அடியோ மோடும்நின் னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதிவ லத்துறை யும்சுட
ராழியும் பல்லாண்டு
படைபோர் புக்குமு ழங்கும்அப் பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே"

"அண்டக் குலத்துக் கதிபதி யாகி
அசுரரி ராக்கதரை
இண்டக் குலத்தை எடுத்துக் களைந்த
இருடீகே சன்தனக்கு
தொண்டக் குலத்திலுள் ளீர்வந் தடிதொழு
தாயிரம் நாமம்சொல்லி
பண்டைக் குளத்தைத் தவிர்த்துப்பல் லாண்டுபல்
லாயிரத் தாண்டென்மினே"

"தீயிற் பொலிகின்ற செஞ்சுட ராழி
திகழ்திருச் சக்கரத்திந்
கோயிற் பொறியாலே ஒற்றுண்டு நின்று
குடிகுடி யாட்செய்கின்றோம்
மயாப் பொருபடை வாணனை ஆயிரந்
தோளும் பொழிகுருதி
பாயச் சுழற்றிய ஆழிவல் லானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே"

இவற்றில் இராமானுசர் கூறிய பஞ்ச சமஸ்காரம் என்பது,

ஒன்று : தீயில் சூடேற்றி சூட்டுக் கோல் மூலம் வலது தோளில் சக்கரத்தையும், இடது தோளில் சங்கையும் முத்தரைகளாகப் பொறித்தல். அப்படி பொறிக்கப் பட்டவனே வைணவன் ஆவான். வேத மந்திரங்கள் ஓதி இந்த சடங்கை செய்தல் வேண்டும்.

இரண்டாவது : திருமண் கொண்டு திருமாலின் கேசவ, நாராயண, மாதவ, கண்ணன், ராகவன் எனப்படும் பன்னிரண்டு திருநாமங்களைக் கூறி, மேல்முகமாக நெற்றி முதலிய இடங்களில், இறைவனின் திருவடிகளின் வடிவில் திருமண் காப்பு இடம் பெறச் செய்ய வேண்டும். இதனிடையே திருவின் சின்னமாக திருசூரணம் அணிய வேண்டும்.

மூன்றாவது : தொண்டன் என்பதற்கும் அடையாளமாக வைணப் பெயரை வைத்துக் கொள்ள வேண்டும். இராமானுசர்தாசன், கண்ணதாசன், இராமதாசன், இரகுநாதன் என்பதுபோல அது அமைய வேண்டும்.

நான்காவது : சீடர்களுக்கு வழிபாட்டுத் தத்துவத்தையும், அதன் முறையையும் கற்றுக் கொடுத்து, அவர்களை திருமாலை வழிபடக் கூறுதல் வேண்டும்.

ஐந்தாவது : "ஓம் நமோ நாராயணாய" என்ற அஷ்டாக்ஷரம் என்னும் எட்டு நாராயண மந்திரத்தையும், "ஸ்ரீமந்நாராயண சரணேவ சரணம்", "ஸ்ரீமதே நாராயண நம" என்ற திவ்ய மந்திரத்தையும், "ஸர்வதர்மான், பரித்யஜ்ய மாமேகம் சரணம்" என்ற கீதா சரமச் லோகத்தையும் பொருளுடன் உபதேசிக்கும் சடங்கை செய்ய வேண்டும். இந்த மந்திரங்கள் ஆண், பெண், சாதி குலம் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் சமமாக உபதேசிக்க வேண்டும். இதுவே பஞ்ச சமஸ்காரம் என்பதாகும்.

நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், அவை :

1.	பொய்கையாழ்வார்	முதல் திருவந்தாதி	100
2.	பூதத்தாழ்வார்	இரண்டாம் திருவந்தாதி	100
3.	பேயாழ்வார்	மூன்றாம் திருவந்தாதி	100
4.	பெரியாழ்வார்	பெரியாழ்வார் திருமொழி	473
5.	குலசேகராழ்வார்	பெருமாள் திருமொழி	105
6.	திருமழிசையாழ்வார்	திருச்சந்த விருத்தம்	216
7.	தொண்டரடிப் பொடியாழ்வார்	திருமாலை, திருப்பள்ளி எழுச்சி	55
8.	திருப்பாணாழ்வார்	அமலானாதி பிரான்	10
9.	மதுரகவியாழ்வார்	கண்ணிநுண் சிறுதாம்பு	11
10.	ஆண்டாள்	திருப்பாவை, நாச்சியார் மொழி	173
11.	நம்மாழ்வார்	திருவிருத்தம், திருவாசிரியம்	1296
12.	திருமங்கையாழ்வார்	பெரிய திருமொழி திருக்குறு தாண்டகம் திருநெடுந்தாண்டவம் திருவெழு கூற்றறிக்கை சிறிய திருமடல் பெரிய திருமடல்	1361
		மொத்தம்	4000

திருக்கச்சியிலிருந்து திருவரங்கம் வந்த பின்பு இராமானுசர் பெரிய நம்பிடையே ஆசார்யாக ஏற்று, அவரிடமிருந்து நியாசதத்துவம், கீதார்த்த சங்கரஹம், சித்தித்ரயம், வியாச சூத்திரங்கள், பஞ்சராத்திர ஆக்ரம முதலியவற்றைக் கற்றுக் கொண்டார். அவர் மூலம் துறவியாக தீட்சை பெற்றுக்கொண்டார்.

அப்படி அவர் பெரிய நம்பியிடம் இவற்றையெல்லாம் பயிலும் போது ஒரு சீடன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடந்து கொண்டார். பயின்ற பிறகு ஒரு சீடன் எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ்ந்து வந்தார்.

"யார் தனது உடல், செல்வம், அறிவு, இருப்பிடம், செயல், பண்புகள், உயிர் ஆகியவற்றையும் தனது குருவுக்காகவே அர்ப்பணம் செய்ய காத்திருக்கிறானோ அவனே உண்மையான சீடன்" என்று கூறுவர்.

இதில் "பாஞ்சராத்திர ஆகமம்" என்பது ஐந்து இரவுகளில் ஸ்ரீமந் நாராயணவே உபதேசித்த வைணவ ஆகம நூல்கள் ஆகும். இந்த ஆகமத்தின் உள்ளடக்கமாக ஏராளமான நூல்கள் உள்ளன. இந்த ஆகமத்தில், கோவில்களைக் கட்டி அமைக்கும் முறை, விக்கரங்களின் இலக்கணங்கள், வழிபாட்டு முறைகள், அர்ச்சக பரிசாரகர்களின் இலக்கணங்கள், வழிபாட்டு முறைகள், அர்ச்சக பரிசாரகர்களின் இலக்கணங்கள், விழாக்கள் கொண்டாடும் முறைகள், தவறுகள் நேர்ந்தால் கடைபிடிக்க வேண்டிய பிராயசித்த முறைகள் முதலிய பல விஷயங்கள் அடங்கியுள்ளன. முக்கியமாக நிறைந்த மந்திர சித்த பெற்றவரே திருமாலுக்கு அர்ச்சகராக வேண்டும். வாழ்வில் அவர் கடுமையான நியமங்களை மேற்கொள்ள வேண்டும். தொண்டர்களும் மிகத் தூயவராக விளங்க வேண்டும். இந்த ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டே திருமால் கோவில்கள் நிர்வகிக்கப்பட வேண்டும்" என்ற கட்டுப்பாடுகளைக் கொண்டதாகும்.

இவற்றையெல்லாம் முழுதும் கற்று, ஒப்பற்ற அறிவாற்றலைப் பெற்ற இராமானுசரின் மகிமையைக் கண்ட பெரிய நம்பி வியந்து, மகிழ்ந்து போய், தன் மகனையே இராமானுசர்க்கு சீடராக இருக்க ஒப்படைத்தார்.

இராமானுசர் மேலும் மேலும் வைணவ தத்துவத்தை கற்க விரும்பிய போது, பெரிய நம்பி திருக்கோட்டியூர் நம்பியை அடையாளம் காட்டினார்.

"திருக்கோட்டியூர் என்ற வளமான ஊரில் திருக்கோட்டியூர் நம்பி என்ற பெருமதி கொண்ட தூய்மையான வைணவர் வாழ்ந்து வருகிறார். அவருக்கீடான வைணவர் இச்சுற்று வட்டாரத்தில் யாருமில்லை எனக் கூறலாம். அவரிடம் நீர் சென்று 'ஓம் நமோ நாராயணாயா' என்ற எட்டெழுத்து மந்திரத்தின் தத்துவப் பொருளை நீர் கற்றுக் கொள்ளலாம்".

பெரிய நம்பி உபதேசித்தப்படி இராமானுசர் திருக்கோட்டியூர் நம்பியிடம் சென்று தன் விருப்பத்தைக கூறியபோது, அவர் 'இன்னொரு நாள் வா' என்று கூறி அனுப்பி விட்டார்.

பெருமாளை எண்ணி தவம் செய்யாதவர்களுக்கும், அவன் மந்திரத்தின்படி வழிபாடு செய்யாதவர்களுக்கும், அவரிடம் ஆழ்ந்த பற்றுதல் இல்லாதவருக்கும் எட்டெழுத்து மந்திரத்தை இயம்பக கூடாது' என்பது திருக்கோட்டியூர் நம்பியின் வாதம்.

அதனால் ராமானுசர் பதினெட்டுத் தடவை பாதம்நோக திருக்கோட்டியூர் நம்பியிடம் வந்து கேட்ட போதும் அவர் அவருக்கு உபதேசம் கொடுக்க மறுத்து விட்டார்.

ஆனால்,

"அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

என்ற குறட்பா போல, இராமானுசரும் தன் முயற்சியை விடவில்லை. ஆனால் வருத்தம் ஏற்பட்டு கண்ணீர் விட்டு அழுதார். அதை கேள்விப்பட்ட திருக்கோட்டியூர் நம்பி, பிறகு இராமானுசரை வரவழைத்து, "இராமானுசா! இந்த எட்டெழுத்து மந்திரத்தின் பொருள் திருமாலுக்குத் தவிர வேறு எவருக்கும் தெரியாது. ஆனால் இந்த மந்திரத்தைக் கற்றுக் கொள்ளவும், அதை ஏற்றுக் கொள்ளவும் நீ தகுதி வாய்ந்தவன்தான் என்று திருமாலே தெரிவித்து விட்டார்.

ஆகவே உனக்கு நான் அந்த மந்திரத்தை ஓதுகிறேன். ஆனால் இந்த மந்திரத்தை நீ யாருக்கும் ஓதக்கூடாது. அப்படி செய்தால் நீ இறந்த பிறகு முக்தியடைந்து வைகுந்தம் செல்லும் தகுதி பெறுவாய் என்று கூறி எட்டெழுத்தை உபதேசித்தார்.

ஆனால் உபதேசம் பெற்றுக் கொண்ட இராமானுசர் பிறகு திருவரங்கம் திரும்பிச் செல்லும் போது திருக்கோட்டியூர் நராயணன் கோயிலையடைந்த போது அவருக்கு திடீரென ஓர் எண்ணம் பளிச்சிட்டது.

அவர் கோயிலின் வாசலில் நின்று கொண்டு போவோர் வருவோரைப் பார்த்து, "மாபெரும் மக்களே! நீங்கள் எல்லோரும் கோவில் பக்கம் வாருங்கள். உங்களுக்கு விலைமதிக்க முடியாத இரத்தினங்கள் தருகிறேன்" என்று கூறியவாறிருக்க, அந்தச் செய்தி ஊர் முழுவதும் பரவ, ஊரே திரண்டு கோயில் பக்கம் வந்து நின்றது.

அப்போது இராமானுசர் திருக்கோட்டியூர் நம்பி உபதேசித்த எட்டெழுத்து மந்திரத்தின் பொருளை தனது இரண்டு சீடர்களான முதலியாண்டான், கூரத்தாழ்வான் ஆகியோருக்கு முதலில் உபதேசித்தார்.

பிறகு அவர் கோவில் உச்சியில் ஏறி நின்று, உரத்த குரலில், "பெரியோர்களே! தாய்மார்களே! தந்தைமார்களே! சகோதர, சகோதரிகளே! நான் உங்களை மிகவும் பிரியத்துடன் நேசிக்கிறேன். நீங்கள் இந்த உலகத்துத் துயரங்களிலிருந்தும் வேதனைகளிலிருந்தும் நிரந்தரமாக விடுபட்டு முக்தியைப் பெற விரும்பினால், நான் உங்களுக்காகக் கொண்டு வந்திருக்கும் 'ஓம் நமோ நாராயணாய' என்ற இரத்தனக் கற்கள் போன்ற மந்திரத்தை மூன்று முறை உச்சரியங்கள். நீங்கள் பெறும் பேற்றினைப் பெறுவீர்கள்" என்று கூற, அங்கிருந்த மக்களெல்லாம் 'ஓம் நமோ நாராயணாய' என்ற மந்திரத்தை மூன்று முறை உரக்க உச்சரித்தார்கள்.

அப்படி உரக்க உச்சரித்த பிறகு அவர்கள் தங்கள் உடலில் ஏதோவொரு புத்தொளி படிவதை உணர்ந்தார்கள். அவர்கள் தங்கள் உள்ளத்தில் புத்துணர்ச்சி பரவுவதை தெரிந்தார்கள். அவர்கள் தங்களிடமிருந்த துன்பங்களும், சோகங்களும், மனதிலிருந்த பாரங்களும் தொலைந்து போனதாக உணர்ந்தார்கள். அவர் மகிழ்ச்சி கொம்டு ஆடினார்கள். தங்கள் முன்னே ஒரு தெய்வ தூதன் வந்திருப்பதாக எண்ணி, யாவரும் இராமானுசர் காலில் விழுந்து வணங்கிச் சென்றார்கள்.

மக்களின் ஆனந்தத்தை கண்டு மகிழ்ச்சியுற்ற இராமானுசர் அதை தம் குருநாதர் திருக்கோட்டியூர் நம்பியிடம் கூறி அவரையும் மகிழ்ச்சி பெறச் செய்தார்.

ஆனால் அதற்கு முன்பாகவே இந்த செய்தியை அறிந்திட்ட திருக்கோட்டியூர் நம்பி, யாருக்கும் தாம் கூறிய மந்திரத்தை கூறக்கூடாது என்று கூறியிருந்த இரகசியத்தை ஊர் முழுவதும் பகிரங்கப்படுத்தி பரப்பிவிட்டாரே என்ற கோபத்தின் எல்லைக்கே சென்றிருந்தார். அவர் இராமானுசரை பார்த்ததும், "துஷ்டனே, தூர விலகிப்போ! குரு துரோகியே, நீ என் சத்திய வாக்கை மீறிவிட்டாய். உமக்கு மந்திரம் உபதேசித்து நான் பாவம் சுமந்தவனாகி விட்டேன் போ" என கர்ஜித்தார்.



அப்போது இராமானுசர் சாந்தமாக, பணிவோடு தன் குரு திக்கோட்டியூர் நம்பியைப் பார்த்து, "குருவே! நான் நரகத்தில் வீழ்ந்து, மூழ்கி, துயரத்தைப் பெறுதல் வேண்டும் என்பதற்காகவே உங்கள் வாக்கை மீறினேன். இந்த மந்திரத்தைக் கேட்பவன் பெறும்பேறு பெற்று சொர்க்கம் அடைவான் என்று தாங்கள் எனக்கு உபதேசம் செய்தீர். ஆகவே நான் நரகம் சென்று உங்கள் உபதேச மந்திரத்தை ஓதினால் அங்குள்ள அத்தனை பேரும் பெறும்பேறு பெற்று சொர்க்கம் அடைவாரன்றோ? அதனால் நான் ஒருவர் மட்டும் துன்பம் எய்தினால் என்னவாகிப் போகிறது? ஒரு உண்மையான வைணவன் என்பவனின் அடையாளமே பிறர் துயர் போக்குதலன்றோ? தேவரீர்! நான் உங்கள் வாக்கை மீறிய பாவம் செய்தவன்தான். அதற்கு எனக்கு நரகம் என்பதும் ஏற்கக் கூடியதே! ஆனால் அதனால் நரகத்திலுள்ள அத்தனை மக்களும் பேரின்பம் அடைவாரன்றோ? அது! ஓம் நமோ நாராயணாய மந்திரத்தில் தத்துவார்த்தமன்றோ?" என்று கூறினார்.

இராமானுசரின் அற்புத மொழிகேட்ட திருக்கோட்டியூர் நம்பி அப்படியே அவரை அணைத்துக் கொண்டு, "இராமானுசரே! குறுகிய மனப்பான்மை கொண்ட இந்த குருடனின் கண்ணைத் திறந்து விட்டாய்! நீர் பரந்த உள்ளம் கொண்ட பரமனின் பிள்ளை. இலக்குமணின் அவதாரம்! ஆகவே "நீர்தான் என் குரு" என்று கூறி தனது மகன் தெற்காழ்வானை சீடராக ஒப்படைத்தார்.

அவரை ஏற்றுக் கொண்ட இராமானுசர், "குருவே! என்றென்றும் நீங்கள்தான் என் குரு என்று கூறி தனது மகன் தெற்காழ்வானை சீடராக ஒப்படைத்தார்.

அவரை ஏற்றுக்கொண்ட இராமானுசர், "குருவே! என்றென்றும் நீங்கள்தான் என் குரு. உங்கள் உபதேச மந்திரத்தை நான் மீறி கூறியிருந்தாலும், அதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பேரின்பம் பெற்றுள்ளார். அதற்கு நீங்கள்தான் காரணம்! ஆகவே நீங்கள் தான் என் குரு" என்று கூறி தம் சீடர்களுடன் திருவரங்கம் புறப்பட்டுச் சென்றார்.

இந்த நிகழ்ச்சியின் அடையாளமாகத்தான் திருக்கோட்டியூர் நாராயணன் திருக்கோயில் கோபுர உச்சியில் இராமானுசர் திருஉருவம் ஊரைப் பார்த்து நோக்கிக் கொண்டிருக்கிறது என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

"உரகமெல்ல ணையான் உறையும்கோட் டியூர்
பிரமன் சிவன்விஷ்ணு சேர்ந்த - கரமாக
இரணியனைக் கொல்ல எடுத்த முடிவூர்
பரணிபாடிச் சொல்லிவைத்தேன் பாட்டு"

இராமநாதபுரம் அரண்மனை



கி.பி. 1605 முதல் இராமநாதபுரம் பகுதியை சீரும் சிறப்புமாக ஆண்ட சேதுபதி மன்னர்கள் வாழ்ந்த அரண்மனை இதுவாகும். இதன் நடுவில் அமைந்துள்ள மாளிகையே இராமலிங்க விலாசமாகும்.

கி.பி. 1725-ல் ஆண்ட முத்து விஜய ரகுநாத சேதுபதிக்கும், தஞ்சை மராட்டிய மன்னர் சரபோஜிக்கும் நடந்த போர் மற்றும் இரகுநாத சேதுபதிக்கு மதுரை நாய்க்க மன்னர் இரத்தின பட்டாபிஷேகம் செய்தல், சேதுபதியை மேலை நாட்டார் வந்து காணுதல் போன்ற வரலாற்று நிகழ்ச்சிகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளது. மேல்மாடியில் சேதுபதி இசை, நடனம் கண்டுகளித்தல் போன்ற இனிய காட்சிகள் ஓவியங்களாக உள்ளன.

வீரபாண்டிய கட்டபொம்மனை ஜாக்ஸன் இவ்விடத்தில்தான் பேட்டி கண்டு கைது செய்ய முயன்றான். அப்போது கட்ட பொம்மு கிளார்க் என்பவனை வீழ்த்தி வெற்றியோடு வெளியேறிய இடம் இது.

இம்மாளிகையை மக்கள் அனைவரும் கண்டுகளிக்க தமிழ்நாடு அரசுக்கு அன்போடு ஈந்தளித்த பெருந்தகை இராமநாத சேதுபதி ஆவர்.

1978-ல் இருந்து இவ்வரண்மனை தொல்லியல் துறையால் தொன்மைச் சின்னமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இராமலிங்க விலாஸ் அரண்மனை, இராமநாதபுரம்.

சேதுபதி மன்னர்களுள் கி.பி. 1674 முதல் 1710 வரை மிகவும் சிறப்பாக ஆட்சி நடத்திய கிழவன் சேதுபதியின் காலத்தில் இவ்வரண்மனை கட்டப்பட்டது. இதில் சேதுபதி மன்னர்களது அவைக்களம், ஆடம்பரமிக்க வசிக்கும் பகுதிகள் போன்றவை அடங்கும். இவ்வரண்மனையைக் கட்டுவதற்கு சேக் அப்துல் காதர் என்ற சீதக்காதி பொருள் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. சேதுபதி மன்னர்களின் வாழ்க்கை முறை, தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களுக்கும், சேதுபதிக்கும் நடந்த போர்கள். சேதுபதி மன்னர்களின் ஐரோப்பியத் தொடர்பு போன்றவற்றை வெளிப்படுத்தும் வகையில் ஏராளமான ஓவியங்கள் தீட்டப்பட்டிருப்பது இவ்வரண்மனையின் தனிச்சிறப்பாகும்.

இப்படி வரலாற்றுச் சிறப்புமிக்க அரண்மனையுள்ள இராமநாதபுரத்தில் எழுந்தருளியுள்ள தலமே திருப்புல்லாணி திருக்கோயிலாகும்.

திவ்யதேசம் - 105



மூலவர் : கல்யாண ஜெகந்நாதர்

தாயார் : கல்யாணவல்லி பத்மாசினி

தீர்த்தம் : ஹேம தீர்த்தம், சக்ர தீர்த்தம் ரத்னாகர சமுத்ரம்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1768-87, 2674(131)

மொத்தம் : 21 பாசுரங்கள்

திருப்புல்லாணி (தெய்வசிலையான்)



"இலங்கு முத்தும் பவளக் கொழுந்து மெழில்தாமரை
புலங்கல் முற்றும் பொழில்சூழ்ந் தழகாய புல்லாணிமேல்
கலங்க வில்லாப் புகழான் கலிய னொலிமாலை
வலங்கொள் தொண்டர்க் கிடமா வதுபாடில் வைகுந்தமே"

"மன்னும் மறைநான்கும் ஆனானை, புல்லாணித்
தென்னன் தமிழை"

என்றெல்லாம் திருப்புல்லாணி தெய்வசிலையானை திருமங்கையாழ்வார் 1777-ஆம் பாடல், 2674-ஆம் பாடல்களில் மங்களாசாசனம் செய்வார்.

இராம்நாடு என்று அழைக்கப்படும் இராமநாதபுரம் சரித்திரப் புகழ் பெற்ற மாவட்டமாகும்.

இந்த நாட்டை ஆண்டவர் மன்னர் சேதுபதித் தேவர் ஆவார். சமயப் பெரு மகாநாட்டுக்கு வருமாறு சேதுபதித் தேவருக்கு அமெரிக்கா சிகாகோ நாட்டிலிருந்து அழைப்பு வந்தபோது அங்கே தான் செல்வதை விட, நரேந்திரன் என்ற பெயர் உடையோன் பின்னாளில் சுவாமி விவேகானந்தர் என்ற பெருமகனாய் உருவான விவேகானந்தர் சென்றால் பெரும் நன்மையுண்டாகும் என்று கருதி, பெருந்தன்மையோடு அந்த அழைப்பை விவேகானந்தருக்கு தந்ததால், அங்கு சென்ற அந்த வீரத்துறவி, சிகாகோ சமய மாநாட்டில் 'சகோதர, சகோதரிகளே' என்று தொடங்கி கர்ஜித்த அந்த தத்துவ உரைக்கு வித்திட்ட தலமே இந்த இராமநாதபுரம். பிறகு அந்த வீரசமயச் சிங்கம் விவேகானந்தர் அமெரிக்காவிலிருந்து திரும்பி கப்பலில் வந்திறங்கி கால் பதித்த புண்ணியத்தைப் பெற்ற பூமி இராமநாதபுரம்.

பிறகு சுதந்திரத்திற்காக போரிட்டு வந்த வீரபாண்டிய கட்டபொம்மன், வெள்ளைக்காரன் சாக்சன் துரையை சந்தித்து, **"உனக்கெதற்கு வரி? எங்களோடு வயலுக்கு வந்தாயா? நாற்று நட்டாயா? நீர் பாய்ச்சினாயா? அங்கு கொஞ்சி விளையாடும் எங்குலப் பெண்களுக்கு மஞ்சள் அரைத்துக் கொடுத்தாயா? இல்லை மாமனா, மச்சானா?"** என்று கேட்டு, அவனோடு போராடிச் சென்ற அரண்மனையுள்ளதும் இந்த இராமநாதபுரம் சீமையில் தான்.



அதற்கு மேலாக இந்த இராமநாதபுரத்தில் மன்னர்கள் அந்தப்புரத்து களியாட்டங்களையும், ஆடல், பாடல் கலைகளையும் கண்டு களித்து மகிழ்ச்சி கொண்ட அரண்மனை மாளிகைக் கூடம் உள்ளதும் இந்த இராமநாதபுரத்தில் தான்.

அந்த இராமநாதபுரத்திலிருந்து 10 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது திருப்புல்லாணி திருக்கோயில் ஆகும். இராமநாத புரத்திலிருந்து 1, 5, 20 ஆகிய எண்கள் கொண்ட பேருந்தில் இங்கு வரலாம்.

சென்னை, கோவை, மதுரை, காரைக்குடி, திருப்பத்தூரிலிருந்து இராமநாதபுரத்திற்கு நேரடிப் பேருந்துகள் உண்டு. மானாமதுரை வழியிலும் பேருந்து, ரயில் வசதிகள் உண்டு.

இராமநாதபுரத்தில் பக்கத்தில்தான் இராமேசுவரம். தனுஷ்கோடி ஊர்கள் உள்ளன. காசி ராமேசுவரம் என்பது போல, இந்தியாவின் தென் எல்லைப் பகுதி இதுதான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த கோயிலை திருமங்கையாழ்வார் மட்டும் மங்களாசாசனம் செய்துள்ளார். 1768 முதல் 1787 வரை 20 பாடல்களும் 2674 ஆம் பாடலில் 131 ஆம் பாடலும் என 21 பாடல்களை இந்த கோயிலைப் பற்றி அவர் பாடியுள்ளார்.

திருப்புல்லாணி கோயிலில் கல்யாண ஜெகந்நாதர் மூலம் தவிர, வேறு சன்னதிகளும் உள்ளன.

இராமன் சன்னதியில் லட்சுமணன் ஆதிகேசவனாக நின்று காட்சியளிக்கிறார். தவிர பட்டாபிஷேக ராமன் சன்னதியும் உள்ளது.

இராமன் இங்கு வந்ததுதான் அணை கட்டினார் என்று கூறுவர். அதனால்தான் இராமநாதபுரம் என்று பெயர் வந்ததாம்.

இராமன் இங்கே வந்த போது கண்வர் இங்கே தவம் செய்து கொண்டிருந்தாராம். அவருக்கு இராமன் திவ்யமாக வில்லை கொடுத்ததால், தெய்வ சிலையார் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர்.

புல்லர் என்ற மகரிஷி எட்டிவித தபம் செய்து கொண்டிருந்த போது பெருமாள் அச்வத்த மரத்தடியில் தோன்றி புல்லருக்கு காட்சி தந்தருளியதால் இந்த கோயிலுக்கும் புல்லாரண்யம் என்ற பெயர் வந்து, பிறகு அது மருவி திருப்புல்லாணி என மாறியதாகக் கூறுவர்.

குழந்தை பாக்கியம் இல்லாத பெண்கள் திருப்புல்லாணியில் வந்து தங்கி தேவிபட்டினத்திலுள்ள நவக்கிரகத்திற்கு பூசை செய்து, சர்ப்ப சாந்தியும் செய்து, தர்பசனரை வணங்கி, பால்பாயாசம் சாப்பிட்டு வந்தால், புத்திரபாக்கியம் உண்டாகும் என்று கூறுவர்.

"திருப்புல்லா ணித்தெய்வம் தென்கோடி சென்றால்
கருவில்லாப் பெண்களுக்குக் கர்ப்பம் - உருவாகும்
கல்யாண நாதர் கருணை அருள்பெற
புல்லாணி செல்வாய் புரிந்து"



திவ்யதேசம் - 106



திருமெய்யம்

மூலவர் : சத்திய கிரிநாதன், சத்திய மூர்த்தி

உற்சவர் : மெய்யப்பன்

தாயார் : உய்யவந்த நாச்சியார்

தீர்த்தம் : கதம்ப புட்கரணி, சத்திய தீர்த்தம், பலா விருட்சம்

மங்களாசாசனம் :

திருமங்கையாழ்வார் : 1090, 1206, 1524, 1660, 1768, 1852, 2016, 2050, 2674(126)

மொத்தம் : 9 பாசுரங்கள்

"நிலையாளா! நின்வணங்க
வேண்டாயே யாகிலும், என்
முலையாள வொருநாளுன்
னகலத்தால் ஆளாயே,
சிலையாளா! மரமெய்த
திறனாளா! திருமெய்ய
மலையாளா, நீயாள
வளையாள மாட்டோமே"



என்று திருமெய்யக் கோயிலை திருமங்கையாழ்வார் 1206-ஆம் பாடலில் மங்களாசாசனம் செய்வார்.

இது ஒரு குடவரைக் கோயில் ஆகும். மலைகற்கோயிலாகக் குடைந்து காணப்படும். இக்கோயில் இப்போது மிகவும் பழுதடைந்து காணப்படுகிறது.

இந்திய தொல்துறை இதை இப்போது புதுப்பித்து வருகிறது. இக்கோயிலின் பெருமாள் திருவரங்கம் பெருமாளை விட பெரிய திருமேனியுடன் காட்சியளிக்கிறார். இங்கு வேறு பல சன்னதிகளும் காணப்படுகின்றன.

ஆதிசேஷன் இந்த கோயிலைப் பாதுகாப்பதாகக் கூறுவர். ஆதிசேஷன் பாதுகாப்பிலிருக்கும் பெருமாளை அசுரர்கள் திருட்டுத்தனமாக தாக்க வந்ததாகவும், ஆதிசேஷன் தன் வாயிலிருந்து விஷக்காற்றை ஊதி அசுரர்களைக் கொன்றதாகவும் கூறுவர்.

இக்கோயில் எதிரில் தெப்பக்குளம் காணப்படுகிறது.

இந்த கோயில் புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டைக்கு 20 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. திருமெய்யம் என்பது திருமயம் என்று கூறப்படுகிறது.

வடக்கு, மேற்கு மாவட்டங்களிலிருந்து இந்த கோயிலுக்கு வருபவர்கள் திருச்சி வழியாக புதுக்கோட்டை வந்து, அங்கிருந்து நகரப் பேருந்தில் திருமயம் வரலாம். திருச்சி, புதுக்கோட்டை யிலிருந்து இராமேஸ்வரம், இராமநாதபுரம், காரைக்குடி செல்லும் வெளியூர் பேருந்திலும் திருமயம் செல்லலாம். தெற்கு மாவட்டங்களிலிருந்து வருபவர்கள் இராமேஸ்வரம், காரைக்குடி, திருப்பத்தூர் வழியாக திருச்சி, புதுக்கோட்டை பேருந்தில் வரலாம்.

"திருமெய்யம் கண்டேன் திகைத்திட நின்றேன்
பெருமலை யூடே பெருமாள் - அருமை
குடைவரைக் கோயில் குடையென சேஷன்
தடைவென்று நின்றான் தகர்த்து"



திவ்யதேசம் - 107

நில உலகில் பார்க்க முடியாத தலம் - 1



திருப்பாற்கடல்

திவ்யதேசம் - 108

நில உலகில் பார்க்க முடியாத ஸ்தலம் - 2



திருப்பரமபதம்
(திருவைகுண்டம்)

“திருப்பாடல் பாடி திருவருள் பெற்று
திருப்பாற் கடலை தெரிந்தேன் - திருமால்
திருவைகுண் டத்தில் திருவடி பற்றி
பெரும்பேறு பெற்றேன் நெகிழ்ந்து”



டால்ஃபின் ராமனாதன் வாழ்க்கை வரலாறு

- சூலூர் கலைப்பித்தன்



அரு.லெ.வீடு. SV.RM.AR.
ராமனாதன் செட்டியார்



RM. விசாலாட்சி ஆச்சி



AR.RM.AR.
அருணாச்சலம் செட்டியார்



AR. சௌந்தரம் ஆச்சி



AR. மீனாட்சி ஆச்சி



அரு.லெ. வளவு முன்வாயில்



அரு.லெ. வீடு தோற்றம்



இலுப்பக்குடிக் கோவில்



மதுரை டால்ஃபின் பள்ளியின் தாளாளர்
டால்ஃபின் அரு. ராமனாதன் அவர்களின்
அலுவலகம்

அரு.லெ. வீட்டின் அழகு தோற்றம்





























AR.RM.AR. அருணாச்சலம் செட்டியார் &
பெரிய தாயார் AR. சௌந்தரம் ஆச்சி




AR.RM.AR. அருணாச்சலம் செட்டியார் &
AR. மீனாட்சி ஆச்சி பேரன் சரவணனுடன்



AR. ராமநாதனும் அவரது சகோதரிகளான
SP. சௌந்தரம் ஆச்சி, AL. உமையாள் ஆச்சி



AR. ராமநாதனின் மகனும், மருமகளும்
RM. சௌந்தர் அருணாச்சலம் – S. உமையாள்



"டால்ஃபின்" ராமநாதன் வாழ்க்கை வரலாறு

- சூலூர் கலைப்பித்தன்

வாழ்க்கை தத்துவம்

நல்லாவின் பால்முழுதும் கன்றுக்கில்லை
நறும்பூவின் மணம் முழுதும் சோலைக்கில்லை
நெல்லாகும் கதிர்முழுதும் நிலத்துக்கில்லை
நிறைகின்ற நீர்முழுதும் குளத்துக்கில்லை
பல்லாரும் கனிமுழுதும் மரத்துக்கில்லை
பண்ணரம்பின் இசைமுழுதும் யாழுக்கில்லை
எல்லாமே பிறர்க்குழைக்கக் காணுகின்றேன்
என்வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும் ! வேண்டும் !!

நன்றி : டாக்டர் வ.சுப. மாணிக்கம்

இந்நூலாசிரியரைப் பற்றி . . .



20-7-1945 ஆம் ஆண்டு கோவை மாவட்டம், சூலூரில் க.ப. கருப்பணத் தேவர் - கருப்பாத்தாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் புலவருக்குப் படித்தவர். மேடையிலும், வானொலியிலும் 60-க்கும் மேற்பட்ட நாடகங்கள் அரங்கேற்றியவர்.

"சாட்டையில்லாத பம்பரம்", "கண்ணத் தொறக்கணும் சாமி", "சுதந்திர பாரதி", "இன்பத்துப்பால்" ஆகிய திரைப்படங்களையும், "அறிவு, இரத்ததானம், படையல், ஓல்டேஜ் ஹோம்" போன்ற குறும்படங்களையும் தயாரித்து, இயக்கி விருதும் பெற்றவர்.

பத்திரிகைகள் உட்பட 1000க்கும் மேற்பட்ட மரபுக் கவிதைகள் புனைந்தவர். 14-வருடங்களாக "கலைப்பித்தன்" மாத இதழை நடத்தி வருபவர்.

'63 நாயன்மார்கள், தீரன் சின்னமலை, சிவப்பு ரோஜாப் பூக்கள், தேவர் காவியம், கலைப்பித்தன் கவிதைகள், ஆயிரம் வெண்பாப் பூக்கள், ஈழத்துப் பரணி, எஸ்.வி.எல். வாழ்க்கை வரலாறு" என பல நூல்கள் எழுதியவர்.

இவர் எழுதிய "63 நாயன்மார்கள், தீரன் சின்னமலை" ஆகிய நூல்கள் ஆனந்த விகடன் பிரசுரம் வெளியிட்டுள்ளது.

"பல்கலைச் செம்மல், வெண்பாச் சித்தர், பல்கலைவேந்தன், சகலகலாநிதி, பேரூர்த் தமிழ்க் கல்லூரி வடமலை மீடியா சார்பாக "தமிழ்ப் பேரறிஞர்" போன்ற பல பட்டங்களைப் பெற்றவர்.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல்கலாம் அவர்களிடம் அவரது "அக்னிச் சிறகுகள்" நூலை ஆய்வு செய்து அவரிடம் பாராட்டுப் பெற்றவர்.

என்னுரை

சென்ற வருட இறுதியில் எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதை எழுதியவர் ஒரு செல்வந்தர், கல்வியாளர், பழுத்த ஆன்மீகவாதி.



அந்தக் கடிதத்தை படித்து முடித்ததும், அதைப் பார்த்து வியந்து மெய்சிலிர்த்துப் போனேன். அப்போது எனக்கு உடனே இரண்டு திருக்குறள்கள் நினைவுக்கு வந்தது.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்"

"எல்லோர்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து"

இப்போது அவர் எழுதிய கடிதத்தைப் படியுங்கள்.

அன்புள்ள ஐயா, "வெண்பா சித்தர், நேசமித்ரா" சூலூர் கலைப்பித்தன் அவர்களுக்கு,

தங்களுடைய "அறுபத்து மூன்று நாயன்மார்கள் – ஒரு சிவ தரிசனம்" என்ற நூலைப் படித்து மெய்சிலிர்த்தோம். தங்களுடைய அரிய முயற்சியால் உருவாகிய இந்த நூல் பலருக்கும் பயனுள்ளதாய், பக்தி வளர்க்கும் வண்ணம், சைவத்தலங்களையும், அடியார்களையும் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய ஓர் அரிய பொக்கிஷம்.

நான் சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை நகரைச் சேர்ந்த நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தில் பிறந்தவன். ஆலவாய் நகரில் வளர்ந்தவன். நான் பிறந்த தேவகோட்டை நகரச்சிவன் கோவிலைப் பற்றி ஓர் சிறப்புச் செய்தி. தேவகோட்டையில் தமிழிசை மாநாடு நடைபெற்ற இடம். தமிழிசைப் பள்ளி 1912 ஆம் ஆண்டிலேயே அமைந்த ஊர். அத்தகைய தேவகோட்டையில் நகரச்சிவன் கோவில் தற்போது அமைந்துள்ள இடம் வன்றொன்றார் நாராயணன் செட்டியார் அவர்கள் பெரிய புராணம் கண்ட சேக்கிழார் மேல் கொண்ட பற்றின் காரணமாக அவருக்கு தனிக்கோவில் அமைக்க வாங்கிய இடமாகும். அந்த இடத்தில் நகரச்சிவன் கோவில் கட்ட தனது எண்ணத்தைச் சொன்ன பொழுது, அவர் தான் அந்த இடத்தை நகரச்சிவன் கோவில் கட்ட சம்மதிப்பதாகவும், அங்கு சேக்கிழாருக்கு தனியாக பூசைகள் நடக்க வேண்டும் என்ற நிபந்தனை கொடுக்க சம்மதித்தார். அவர் விருப்பப்படியே தேவகோட்டை நகரத்தார் நகரச்சிவன் கோவில் அமைத்து அதில் தனியாக சேக்கிழாருக்கு தனி சன்னிதி அமைத்து மூலவருக்கு நடப்பது போலவே அனைத்து விதமான பூசைகளையும் சேக்கிழார் பெருமானுக்கும் செய்து வருகிறார்கள். நான் மதுரையில் 3000 மாணவ, மாணவியர் கல்வி கற்கும் டால்ஃபின் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளி என்ற கல்வி நிறுவனத்தை நடத்தி வருகின்றேன். கல்விப் பணி செய்வதுடன், ஆன்மீகப் பணியையும், தமிழையும் வளர்க்கும் வண்ணம் பல்வேறு ஆன்மீக நூல்களையும், புகைப்படங்களையும், தமிழறிஞர்கள்

படங்களையும் ஒவ்வொரு கால கட்டங்களில் இலவச வெளியீடுகளாக வெளியிட்டு அன்பர்களுக்கு சைவத்தையும், வைணவத்தையும், தமிழையும் பரப்பும் வண்ணம் என்னால் இயன்ற இறைப்பணியைச் செய்து வருகின்றேன். தற்சமயம் நான் “சிவத்தொண்டும், நாயன்மார்களும்” என்ற தலைப்பில் அறுபத்து மூன்று நாயன்மார்கள் படங்களையும், தேவகோட்டை நகரச்சிவன் கோவில் உள்ள அறுபத்து மூன்று நாயன்மார்கள் புகைப்படங்களையும், கோவில் ஆற்றிய பணிகளையும், அவர்களுடைய அவதாரத் தலங்களையும், முக்தித் தலங்களையும், குரு பூசை திருநாட்களையும், தலங்களுக்கு செல்ல வேண்டிய வெளியீடாக மார்கழி ஆருத்ரா தரிசன நன்னாளில் வெளியிட சித்தமாயுள்ளேன்.


மேலும் இந்த ஆண்டு தேவகோட்டை 66-வது ஆண்டு கந்தர் சஷ்டி விழாக் கழகத்தின் தலைவராக பொறுப்பேற்று எட்டுநாள் கந்தன் திருவிழாவில் பல இலக்கிய நிகழ்ச்சிகளையும், பட்டிமன்றங்களையும், இசை நிகழ்ச்சிகளையும் நடத்தும் பாக்கியம் எனக்குக் கிட்டியதும் இறைவன் திருவருளே!

இந்தத் தருணத்தில் நான் தங்களிடம் வைக்கும் விண்ணப்பம் என்னவென்றால், தாங்கள் ஒவ்வொரு நாயன்மாரைப் பற்றியும் எழுதியுள்ள வெண்பாக்கள் மிக அருமையாக உள்ளன. எனவே நான் நாயன்மார்களைப் பற்றி வெளியிடும் நூலில் நான் தொகுத்துள்ள குறிப்புகளுக்குக் கீழே தங்களுடைய வெண்பாக்களைப் பயன்படுத்திக் கொள்ள தங்கள் திருவடிகளை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு வெண்பாவிற்கும் கீழே தங்களது பெயரை “வெண்பா சித்தர் சூலூர் கலைப்பித்தன்” என்று அச்சிடவும் விரும்புகிறேன். தங்களுடைய அனுமதியை என்னுடைய இறைத்தொண்டு தொடர வாயப்பளிக்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த நூல் சுமார் 5000 பிரதிகள் அச்சிடப்பட்டு, மதுரை மாநகரிலும், காரைக்குடியிலும், தேவகோட்டையிலும் இன்னும் பல சைவ சமய ஆர்வலர்களுக்கும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இதுநாள் வரை இலவச வெளியீடாக வெளியிட்டுள்ள சில நூல்களின் பிரதிகளையும், கந்தர் சஷ்டி விழா சிடிக்களையும் தங்களுடைய கனிவான பார்வைக்கு அனுப்பி உள்ளேன்.

தங்களுடைய பாதம் தொட்டு மீண்டும் ஒருமுறை உங்களுடைய அனுமதியை தர வேண்டும்!

இடம் : மதுரை — அன்புடன்,

நாள் : 08-12-2011 — **டால்ஃபின் AR. ராமனாதன்**



தேவகோட்டை


தேவகோட்டை சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது. காரைக்குடியிலிருந்து 16 கி.மீட்டர் தூரத்தில் இராமேசுவரம் செல்லும் சாலையில் உள்ளது.

இங்கு நகரத்தார் என்னும் செட்டியார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் காவிரி பூம்பட்டிணத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் என்று கூறப்படுகிறது. இவர்கள் வாழுகின்ற பகுதியை செட்டிநாடு என்று கூறுவார்கள்.

இந்த பகுதியைச் சுற்றிலும் நகரத்தாருக்குச் சொந்தமான ஒன்பது குல தெய்வக் கோயில்கள் உள்ளன. இளையாற்றாங்குடி, மாத்தூர், நேமங்கோயில், இரணியூர், பிள்ளையார்பட்டி, இலுப்பைக்குடி, சூரைக்குடி, வைரவன் கோயில், வேலங்குடி என்பன அவைகள் ஆகும். செட்டிநாட்டிலுள்ள 75 நகரத்தார் ஊர்களில் அதிக மக்கள் தொகையுள்ள ஊர்கள் தேவகோட்டையும், காரைக்குடியும் ஆகும். இவை இரண்டு மட்டுமே நகராட்சிகள் ஆகும்.

கோயில்களுக்கு திருப்பணிகள் செய்வது நகரத்தாரின் உயிரோடும், ரத்தத்தோடும் கலந்த ஒன்றாகும்.

நகரத்தார் கோவில்கள்



பிறகு இவர்கள் கல்விப் பணி, சமயப்பணி, தமிழ்ப்பணி, இசைப்பணி என எல்லாவற்றிலும் மேம்பட்டு உயர்ந்தார்கள்.

இராமாயண விழா, சேக்கிழார் விழா, கந்தர் சஷ்டி விழா, தமிழிசை இயக்கம் என பல பணிகளை இவர்கள் செய்து வருகிறார்கள்.

விடுதலை போராட்டத்திலும் தேவகோட்டை முக்கிய பங்கு வகிக்கிறது. 1942-ல் நீதிமன்றம் எரித்த வழக்கில் தேவகோட்டை முக்கிய பங்கு வகித்தது. சொக்கலிங்க செட்டியார் போன்ற பல நகரத்தார்கள் நேதாஜியின் இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றி தேசசேவை செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இனி தேவகோட்டையைப் பற்றிய சில சிறப்புக்களைக் காண்போம்.

நகரத்தார்



உண்மையே தாரகமென் றுணர்ந்திட்டார்
அன்பொன்றே யுறுதி யென்பார்
வண்மையே குலதர்ம மெனக்கொண்டார்
தொண்டொன்றே வழியாக் கண்டார்
ஒண்மையுயர் கடவுளிடத் தன்புடையார்
அவ்வன்பின் ஊற்றத் தாலே
திண்மையுறும் ஹிந்துமத அபிமான
சங்கமொன்று சேர்த்திட் டாரே

பலநூல்கள் பதிப்பித்தும், பலபெரியோர் பிர
சங்கம் பண்ணுவித்தும்
நலமுடைய கலாசாலை புத்தகசாலை பலவும்
நாட்டி யுந்தங்
குலமுயர நகருயர நாடுயர வுழைக்கின்றார்
கோடி மேன்மை
நிலவுறஇச் சங்கத்தார் பல்லூழி வாழ்ந்தொளிர்க
நிலத்தின் மீதே!

- மகாகவி பாரதி

நமது குலம் நலங்காண்போம்



பர்மா நிலத்தில் பச்சைவயல் முகங்காட்ட
பச்சை வயலிடையே பச்சரிசி சிரித்திருக்க
அத்தனையும் பொன்னாக ஆக்கிப் படைத்தவர்கள்
நம்மவரே என்றால் நாட்டோர் மறுப்பதில்லை
ஆனாலும் நம்மவர்கள் அடக்கத்தால் இன்றுவரை
தாமாகத் தம்மை தலை தூக்கிக் கொண்டதில்லை
இன்று விழித்திட்டோம், எல்லோரும் ஒன்றுபட்டோம்!
ஒன்று சமுதாயம் என்றுவரும் நாள்வரையும்
தத்தமது சாதியினைச் சாதியினர் போற்றுமட்டும்
சபையில் முழக்கிடுவோர் சாதிக்க வாழுமட்டும்
நாமும் நமதுகுலம் நலங்காணப் போரிடுவோம்
நகரத்தார் நவஉலகை நாளைக்கே நாம்சமைப்போம்!

– கவியரசு கண்ணதாசன்



எண்ணத் தொலையாத எத்தனையோ கோவில்களைக்
கண்ணில் இருத்திக் கலையோடு காத்துவந்தோம்
காசி நகரத்துக் கடவுளரைப் பேச வைத்தால்
காவிரிப்பூம் பட்டினத்தார் கலையுணர்ச்சி தோன்றவரும்
மாசற்ற பொன்னும் மணிவயிரம் ரத்தினமும்
தூசென்று எண்ணித் தூக்கிக் கொடுத்துவந்தோம்
பண்டைத் தமிழ்மரபைப் பண்போடு காத்துவந்தோம்
அண்டை நிலங்கள்நம் ஆண்டவனை ஊன்றிவைத்தோம்
காசிவிசா லாட்சி மதுரைமீ னாட்சி
கட்டியுள்ள ஆடைகளும் கழுத்திலுள்ள பொன்னகையும்
சுற்றியுள்ள மண்டபமும் தூக்கிவரும் வாகனமும்
முற்றும் அழியாத மொட்டைக்கோ புரத்தழகும்
அண்ணா மலையில் அமர்ந்திருக்கும் பேரழகும்
ஆக்கிக் கொடுத்தவர்கள் அமர்ந்திருந்து காத்தவர்கள்
நாட்டுக்கோட் டைவளர்த்த நகரத்தார் அல்லேமோ!

- கவியரசு கண்ணதாசன்

கந்தர் சஷ்டி விழாக் கழகம்

இறைபக்தியும் இசை இலக்கியப் பற்றும் நகரத்தார் இரத்தத்துடன் கலந்தவை. இசையால், கலையால் இறைவழிபாடு செய்யும் நோக்கத்துடன் தேவகோட்டையில் 1946 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் தோற்றுவிக்கப்பட்ட கந்தர் சஷ்டி விழாக்கழகம் 1995இல் தனது பொன்விழாவைக் கொண்டாடியது. சோம. இராமநாதன் செட்டியார், கரு. காசிச் செட்டியார், உ.மு.அ.லெ. லெட்சுமணன் செட்டியார் ஆகியோர் தோற்றுவித்த இக்கழகம் நகரத்தார் முன்னின்று வளர்க்க நாளும் உயர்ந்தோங்கி நல்ல தமிழ்ப்பணி செய்து வருகிறது. ஐப்பசித் திங்களில் அமாவாசைக்கு மறுநாள் தொடங்கி ஆறு நாட்கள் கந்தர் சஷ்டி விரதம் மேற்கொள்ளும் நாட்களாகும். இந்த ஆறு நாட்களோடு தெய்வானை கல்யாணம், வள்ளி கல்யாணம் ஆகிய திருவிழாக்களையும் சேர்த்து எட்டு நாட்கள் விழா நடத்தத் திட்டமிட்டனர். கிருபானந்த வாரியார் சுவாமிகள் கந்தர் சஷ்டி விரத நாட்களில் வர இயலாததால் அவருக்காகவே விரதம் தொடங்குவதற்கு முந்தியநாள் அமாவாசை அன்றே விழா தொடங்குவது வழக்கமாயிற்று. வாரியார் சுவாமிகள் தொடர்ந்து விழாவில் கலந்து கொண்டமையை நினைவு கூர்ந்து அவர் மறைவுக்குப் பின் 1993 இல் அவரது படத்திறப்புவிழா நடைபெற்றது.

முதல் நாள் தொடக்கவிழா, வாரியாரின் இலக்கியப் பேருரை, மூன்றுநாள் சொற்பொழிவு, மூன்றுநாள் இசை நிகழ்ச்சி, சூரசம்ஹார நாளில் காலை மாலை இருவேளையும் புலவர் அவையாகிய பட்டிமண்டபம், இறுதிநாள் நடன நிகழ்ச்சி என ஒன்பது நாள் விழா அமையும். நகரச்சிவன் கோவிலிலுள்ள தண்டாயுத பாணிக்கு ஆறுநாள் லட்சார்ச்சனையும் அபிஷேக அலங்காரங்களும் மிகச் சிறப்பாக நடைபெறும். முதல்நாள் தண்டாயுதபாணி சன்னதியிலிருந்து படம் எடுத்துச் சென்று எழுந்தருளல் செய்வதிலிருந்து விழா தொடங்கும். பத்தாம்நாள் சன்னதியில் விடையாற்றியுடன் விழா நிறைவெய்தும். கந்தரலங்காரம், அனுபூதி, அபிராமி அந்தாதி போன்ற நூல்களில் குழந்தைகட்கு ஒப்புவித்தல் போட்டி நடத்திப் பரிசு வழங்கப் பெறுகிறது. இவ்விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாத தமிழறிஞரோ, கலைஞரோ இல்லையெனலாம். பல ஆண்டுகள் இசை நிகழ்ச்சி வானொலியில் நேரடியாக ஒலிபரப்பப்பட்டது. ஊர்கூடி தேர் இழுப்பது போல, இங்கே ஊர்கூடித் தமிழ் வளர்க்கும் திருவிழா தேவகோட்டைக் கந்தர் சஷ்டி விழா.

சேக்கிழார் விழா

சேக்கிழார் விழா 1947 ஆம் ஆண்டு, சர்வசித்து வருடம் வைகாசித் திங்களில் தேவகோட்டையில் தொடங்கப் பெற்றது. தமிழகத்திலேயே தேவகோட்டை நகரச் சிவன்கோவிலில்தான் சேக்கிழார் பெருமானுக்குத் தனிக் கருவறையுடன் கூடிய சன்னதி அமைந்துள்ளது. சேக்கிழார் திருக்கோவிலுக்கு வாங்கபட்ட இடத்தில்தான் நகரச்சிவன் கோவிலே அமைந்துள்ளது. இலுப்பைக்குடிக் கோவிலைச் சார்ந்த தேவகோட்டை வன்றொண்டச் செட்டியார் சேக்கிழார் பெருமானிடத்துக் கொண்டிருந்த எல்லையற்ற அன்பினால் அப்பெருமானுக்குக் கோவில் கட்ட இடம் வாங்கி, அதற்கான மணி முதலியவற்றையும் தருவித்து வைத்திருந்தார். வார்ப்பு வேலையில் அந்தக் காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த செய்கோனிலிருந்து வரவழைக்கப்பட்ட அந்த மணியில் 'சேக்கிழார் திருக்கோவில்' என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இன்று அந்த மணி தேவகோட்டை நகரச் சிவாலயமணியாகவுள்ளது.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாடுவதற்காகவே வன்றொண்டச் செட்டியாரின் வேண்டுகோளை ஏற்றுத் தேவகோட்டைக்கு வந்து பிள்ளைத்தமிழ் பாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்நாளில் தேவகோட்டையில் நகரச்சிவன்கோவில் இல்லாததால் நகரவாசிகள் அனைவரும் கண்டதேவி, இரவு சேரிக் கோவில்களுக்குத்தான் சிவவழிபாட்டுக்குச் செல்லும்படியாக இருந்தது. தேவகோட்டை நகரத்தார் பெருமக்கள் பலர் நகரத்தில் சிவன்கோவில் இல்லாத குறையை அகற்ற வேண்டும்

என்று கருதிச் சிற்பநூல் முறைப்படி சிவாலயம் நகரத்தின் ஈசான மூலையில் இருக்க வேண்டும்; ஆதலால் அதற்குத் தகுதியான இடம் சேக்கிழார் திருக்கோவிலுக்கு வாங்கிய இடமே என்று முடிவு செய்து, வன்றொண்டரிடம் அந்த இடத்தை உரிய விலை பெற்றுக்கொண்டு சிவன் கோவிலுக்குத் தரவேண்டும் என்று கேட்டார்கள். வன்றொண்டர் அவர்களது விருப்பத்தை ஏற்று அந்த இடத்தைச் சிவன்கோவிலுக்கு விலைபெறாது தருவதாகவும் அதில் அமைக்கும் சிவன்கோவிலில் சேக்கிழார் பெருமானுக்குத் தனிக் கருவறையுடன் ஒரு கோவில் அமைத்துக் கோவிலிலும் பரிவார மூர்த்திகளுக்குப் போல அல்லாமல் மூலத்தான மூர்த்திகளுக்குப் போல் எல்லாக் காலப் பூசைகளும் நடத்திவர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்க, அதற்கு நகரத்தார் இசைவளித்துக் கோவிலைக் கட்டிக் குடமுழுக்கு விழாச் செய்வித்தார்கள். இத்திருக்கோவிலில் உள்ள சேக்கிழார் பெருமான் திருவுருவம் அவரது அவதாரத் தலமாகிய குன்றத்தூர் மலையிலிருந்து கொண்டு வந்த கல்லில் அமைக்கப் பெற்றது.

சேக்கிழாருக்கெனத் தனிக்கோவில் அமைக்கப்பட்டுள்ள தேவகோட்டை நகரச் சிவன்கோவிலில் சேக்கிழாருக்கு விழா எடுக்கச் சேக்கிழார் திருநாட் கழகம் 1947 இல் தோற்றுவிக்கப்பெற்றது. இக்கழகத்திற்குத் தமிழ்வள்ளல் சேவு. மெய்யப்ப செட்டியார் தலைவராகவும், பாலகவி. இராமநாதன் செட்டியார் அமைச்சராகவும் வன்றொண்டர் பரம்பரையில் வந்த தமிழ்ப்புலவர் கரு.ராம. சோம. இராமநாதன் செட்டியார் செயலராகவும் இருந்து சேக்கிழார் விழாவைச் சிறப்புற நடத்தினார்கள். சேக்கிழார் விழா வைகாசி மாதம் திருவாதிரை நாளில் தொடங்கிப் பூச நாளில் நிறைவு பெறும். சேக்கிழார் பெருமான் முத்திபெற்ற வைகாசிப் பூச நாளே சேக்கிழார் திருநாளாகும். அன்று சேக்கிழார் பெருமான் அறுபான் மும்மை நாயன்மார்களுக்குச் சிறப்பான பூசனை வழிபாடுகளும் இரவில் பெரியபுராணத் திருமுறையுடன் வெள்ளி யானை வாகனத்தில் சேக்கிழார் பெருமான் திருவீதி உலாவும் நடைபெறும். மூன்று நாட்களும் சொற்பொழிவுகள், சமயவிரிவுரைகள் நிகழும். தொடக்கவிழா நாளில் திருத்தொண்டர் புராணத்துக்கு விளக்கவுரை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்திய சிவக்கவிமணி, சி.கே. சுப்பிரமணிய முதலியார் தலைமை தாங்கினார். அவரது உரை வெளியீட்டிற்குத் துணை செய்த மூவரில் பழனி ஈசான சிவாசாரியார் சேக்கிழார் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்; பண்டிதமணி தொடக்க உரையாற்றினார், இலக்கணம் முத்துக்குமரத் தம்பிரான் வாழ்த்துரை வழங்கினார்.

இடையில் சில ஆண்டுகள் நின்றுவிட்ட இவ்விழா 1990 முதல் லெ. அழகப்ப செட்டியார் தலைவராகவும், சேது. அருணாசலம் பொருளாளராகவும் தொண்டாற்றும் சேக்கிழார் விழாக் குழுவினரால் தொடர்ந்து சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வருகின்றது.

இவ்வாறாக ஆன்மீகம், கல்வி, வாணிபம், தேச விடுதலை, தமிழ்மொழி இசை வளர்ச்சி, திரைப்படம் என பல துறைகளிலும் சிறப்புப் பெற்ற பழமை வாய்ந்த தேவகோட்டை மண்ணில் தான் டால்ஃபின் ராமநாதன் அவர்களும் பிறந்தார்.



"ஆன்மீகம் கல்வியும் ஆற்றுகின்ற தொண்டுமாய்
மேன்மையாய் வாழுகின்ற மேலோனாய் - வானுயர்ந்து
காணுகின்ற ராமநாதன் காட்சியில் நாயன்மார்
தோணுகின்றார் ஆழ்வாராய் போற்றி!"

"கம்பனுக்குக் கைகொடுத்தான் சடைய வள்ளல்
கண்ணதாசர்க் குப்பின்சின் னப்பத் தேவர்
நம்மவராம் ராமநாதன் நம்பி வந்து
கலைப்பித்தன் எனக்கின்று உதவி செய்தார்
சும்மாயார் ஓடிவந்து உதவி செய்வார்
சுழல்வதெல்லாம் கண்ணனவன் சக்க ரந்தான்
சம்பவங்கள் விந்தையாகத் தெரியு தப்பா
சரணடைந்தேன் சிவன்பெருமாள் சன்ன திக்கு"



டால்ஃபின் அரு.ராம.அரு. ராமநாதன் 31-3-1959 ஆம் ஆண்டு தேவகோட்டை எண். 2, அரு.லெ. வீட்டில் பிறந்தார்.

தந்தையார் பெயர் அரு.ராம.அரு. அருணாசல செட்டியார். தாயார் பெயர் அரு. மீனாட்சி ஆச்சி.

ராமநாதன் அவர்களுக்கு பெரிய தாயாரும் உண்டு. அவர் பெயர் அரு. சௌந்தரம் ஆச்சி.

அரு. ராமநாதன் அவர்களுடைய அப்பச்சி பெயர் அரு. ராமநாதன் செட்டியார். அப்பத்தா பெயர் ராம. விசாலாட்சி ஆச்சி.

ராமநாதன் அவர்களுக்கு பெரிய தாயாரும் உண்டு. அவர் பெயர் அரு. சௌந்தரம் ஆச்சி.

அரு. ராமநாதன் அவர்களுடைய அப்பாரு பெயர் அரு. ராமநாதன் செட்டியார். அப்பத்தா பெயர் ராம. விசாலாட்சி ஆச்சி.

இவர்களுடைய குலதெய்வக் கோயில் இலுப்பைக் குடி. இறைவன் தான்தோன்றீசர். இறைவி சௌந்தர நாயகி. நகர கோயில்கள் ஒன்பதில், இதுவும் ஒன்றாகும். இந்த கோயில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கிழக்கே மாத்தூர் செல்லும் பாதையில் 3 கி.மீ. தூரத்தில் உள்ளது.

மதுரை டால்ஃபின் பள்ளி தாளாளர் அரு. ராமனாதன் அவர்களின் தாத்தா பாட்டி மற்றும் அவரது பூர்வீகம் குறித்து சில தகவல்கள் :

மதுரை டால்ஃபின் தாளாளர் அரு. ராமானதனுடைய பூர்வீக ஊர் சிவகங்கை மாவட்டம் (முன்னாள் ராமநாதபுரம் மாவட்டம்) தேவகோட்டை நகரமாகும். இவர் நகரத்தார் ஒன்பது கோவில்களில் காரைக்குடிக்கு அருகே உள்ள இலுப்பைக்குடி கோவில் அவரது நகர் கோவிலாகும். அங்கு வீற்றுள்ள சௌந்தர நாயகி சமேத தான்தோன்றியீசர் மற்றும் இலுப்பைக்குடி பைரவர் பிராதன தெய்வங்கள். காரைக்குடி மானகிரிக்கு அருகே உள்ள இலங்குடி பூரண புஷ்கலாம்பா சமேக பகச்சால மூர்த்தி அய்யனார் அவரது குலதெய்வமாகும். இவருடைய பூர்விக வீடு தேவகோட்டை தென்னஞ் செட்டி ஊரணிக்கு அருகே உள்ள அரு.லெ. வீடு என்ற விலாசம் கொண்டது. அரு.லெ. வளவு என்று தனி பிரிவே தேவகோட்டை நகரில் உள்ளது. அங்கு எண். 2, அரு. லெ. ஹவுஸ் என்ற விலாசம் உள்ள வீட்டில் தான் இவர்கள் முக்கியமான விசேஷங்களையும், திருமணம் போன்ற வைபவங்களையும் நடத்துவார்கள். தேவகோட்டைக்கு செல்லும் சமயம் வசிக்கும் வீடு, தென்னஞ்செட்டி ஊரணி பிள்ளையார் கோவிலுக்கு எதிரே உள்ள எண். 31, தென்னஞ் செட்டி ஊரணி மேற்கு என்ற விலாசத்தில் உள்ளது. மேற்படி வீடுகள் இவருடைய மூதாதையரால் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட வீடுகள். இன்று வரை பழமை குன்றாமல் நல்ல வலுமையுடன் திகழக்கூடிய தன்மையாய் உள்ளன.

அரு.லெ. வீட்டின் பெருமை :



சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பே, இலங்கையிலும், பர்மாவிலும், செய்கோனிலும் (வியட்நாம்) வியாபாரங்கள் செய்து வந்த குடும்பத்தினர் தொண்டியில் துறைமுகம் பிரபலமாக இருந்த போது, சொந்தமாக கப்பல் வைத்து வாணிபம் செய்த குடும்பத்தினர். இவர்களுக்கு இன்றும் தொண்டியில் பேருந்து நிலையம் அருகே இரண்டு ஏக்கர் பரப்புள்ள கடைகளும், சத்திரமும், பிள்ளையார் கோவிலும் உள்ளன. மேலும், இலங்கையில் கண்டி மாநகரில் புத்தர் கோவிலுக்கு அருகில் சுமார் 3 ஏக்கர் பரப்பளவில் ஒரு திரையரங்கம் ஒன்றும், முருகன் கோவில் ஒன்றும், திருமண மண்டபம் மற்றும் கடைகளும் உள்ளன. இலுப்பைக்குடி நகரத்தார் கோவிலும், பரம்பரை அறங்காவலராக இன்று வரை அரு.லெ. வீட்டில் இருந்து ஒருவர் பதவி வகித்து, அந்தக் கோவிலை நிர்வகித்து வருகின்றனர். தேவகோட்டையில் ஜமீன்தார் குடும்பத்திற்கு அடுத்தபடியாக, குடியேறியவர்கள் என்ற பெருமைக்குரியவர்கள். எல்லாச் சொத்துக்களையும் நிர்வகிப்பதற்கு, அரு.லெ. வீட்டில் வருடந்தோறும் அரு.லெ. சாமி வீடு என்று கோவில் அமைத்து அங்கு திருப்பதி வெங்கடாசலபதியின் உருவப் படத்தை வைத்து, வழிபாடுகள் செய்து, கூட்டங்கள் நடத்தி, தீர்மானங்கள் ஏற்படுத்தி, இன்றளவும் திருப்பணிகளை கூட்டுக்குடும்பமாக சுமார் 150க்கும் மேலானோர் உறுப்பினராகக் கொண்டு சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகின்றனர்.

அப்பா வழி தாத்தா SV.RM.AR. ராமனாதன் செட்டியார் அவர்கள்



அரு.லெ.வீடு. SV.RM.AR.
ராமனாதன் செட்டியார்

பெருமைமிகு அரு.லெ. குடும்பத்தில் பிறந்தவர், இவருடைய அப்பா வழி தாத்தா SV.RM.AR. ராமனாதன் செட்டியார் அவர்கள் ஆவார். இவருடைய அப்பத்தா (அப்பாவின் தாயார்) RM. விசாலாட்சி ஆச்சி ஆவார்கள். இவரது தாத்தா பூர்வீகமாக லேவாதேவி தொழிலையும், சாயப் பவுடர் கம்பெனிகளையும், பங்குத் தொழில் வர்த்தகங்களையும் செய்து வந்தார். அவர் காரைக்கால் அருகே உள்ள திருத்தலைச்சேரி என்று அழைக்கப்படுகின்ற கோவில் பத்து பார்வதீஸ்வரர் சுவாமி கோவில் திருப்பணி செய்தவராவார். மேலும், பல்வேறு கோவில்களுக்கும், உதவிகள் மற்றும் திருப்பணிகள் செய்தவராவார். இவர் நற்சாந்துப்பட்டி நகரத்தில் இருந்து, தேவகோட்டைக்கு SV.RM.AR. குடும்பத்திற்கு ஸ்வீகாரம் வந்து, சீரும் சிறப்புமாக SV.RM.AR. குடும்பத்தை திகழச் செய்தவர். இவருக்கு, நாமக்கல், ராசிபுரம், ஆண்டிப்பட்டி, உத்தமபாளையம் ஆகிய ஊர்களில் வட்டிக்கடைகளும், சென்னை, கடலூர், புத்தூர் (ஆந்திரா), மதுரை, ராஜபாளையம், திருநெல்வேலி, அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் அருணாச்சலம் அன் கோ என்ற பெயரில் சாயப் பவுடர் கடைகளை மிக லாபகரமாக நடத்தி வந்தார். இவருடைய துணைவியாரும், ராமனாதனின் அப்பத்தாவுமாகிய RM. விசாலாட்சி ஆச்சி அவர்கள் தேவகோட்டையில் புகழ்பெற்ற AL.SP.PL. குடும்பத்தில் பிறந்தவர்கள்.



RM. விசாலாட்சி ஆச்சி

AL.SP.PL. குடும்பம் தேவகோட்டையில் மிகப் பெரும் செல்வந்தர்களில் ஒருவர் ஆவார்கள். அவர்கள் திருப்புனவாயில் கோவிலின் திருப்பணிகள் செய்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இந்த இருவருக்கும் 5 பெண் குழந்தைகளும், அதற்குப் பின் இரண்டு குழந்தைகளுக்குப் பின் எட்டாவதாக டால்ஃபின் ராமனாதனின் தந்தை அருணாச்சலம் செட்டியார் பிறந்தார். அதற்குப் பின் டால்ஃபின் ராமனாதன் சித்தப்பா AR.RM.SP. சுப்ரமணியன் செட்டியார் பிறந்தார்.

ராமனாதனின் தந்தை AR.RM.AR. அருணாச்சலம் செட்டியார்



AR.RM.AR.
அருணாச்சலம் செட்டியார்

ராமனாதனின் தந்தை AR.RM.AR. அருணாச்சலம் செட்டியார் அவர்கள் அவர்களுடைய தந்தை வழியிலேயே அருணாச்சலம் & கோவை 1956ம் ஆண்டில் துவக்கி சாயப் பவுடர் தொழிலை பிரபலமாக நடத்தி இந்தியன் டைஸ்டப் இண்டஸ்ட்ரீஸ் (IDI) இண்டோகம் சிக்கா & கோ ஆகிய கம்பெனிகளுக்கு தென் தமிழகத்தின் பல பகுதிகளில் கோவை மாநகரைத் தவிர ஏஜென்சி எடுத்து, மிகப் பிரபலமாக நடத்தி, மிகுந்த பொருள் ஈட்டி வந்தார். இது தவிர கோம்பை, உத்தமபாளையம், தேவாரம், ஆண்டிப்பட்டி, தேனி, போடி ஆகிய பகுதிகளிலும், மதுரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், வட்டிக்கடைத் தொழிலை மிகச் சிறப்பாக செய்து வந்தார். இது தவிர கேரள மாநிலத்தில் உடும்பஞ்சோலை பகுதியில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் ஏலக்காய் தோட்டம் ஒன்றையும், கோம்பை மற்றும் உத்தமபாளையம் பகுதிகளில் விவசாயப் பண்ணைகளையும், நடத்தி விவசாயத்தில் மிக ஈடுபாடு கொண்டிருந்தார். இது தவிர மதுரை மாநகருக்கு அருகே தச்சனேந்தல், பூஞ்சுத்தி, மீனாட்சிபுரம் ஆகிய கிராமங்களில் சுமார் 100க்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயப் பண்ணைகளை தனியாக நடத்தி வந்தார். இவருக்கு உறுதுணையாக, இவருக்கு முதலில் வாழ்க்கைப்பட்டவரும், ராமனாதனின் பெரிய தாயாருமாகிய AR. சௌந்தரம் ஆச்சி இளம் வயதிலேயே காலமாகி விட்டபடியால், ராமனாதனுடைய தாயார் AR. மீனாட்சி ஆச்சியை, தேவகோட்டையில் மிகப் பிரபலமான பெ. வீட்டில், மாயவரம் அபாயம்பிகை கோவிலுக்கு திருப்பணி செய்தவரான வீரப்ப செட்டியார் குடும்பத்தில் பெத்தபெருமாள் செட்டியார் மகளாக பிறந்து, சீரும் சிறப்புடன் வளர்ந்து, AR.RM.AR. அருணாச்சலம் செட்டியாரின் துணைவியராக 1956ல் அரு.லெ. வீட்டிற்கு மருமகளாக வந்தார். அருணாச்சலம் செட்டியார், மீனாட்சி ஆச்சிக்கு இரண்டு பெண் குழந்தைகள் (சௌந்தரம், உமையாள்) மற்றும் ஒரு ஆண் மகன் (டால்ஃபின் பள்ளி தாளாளர் AR. ராமனாதன்) பிறந்தனர். இவர்களை சீரும் சிறப்புமாக படிக்க வைத்து, நல்ல இடங்களில் திருமணம் முடித்து வைத்து, அவர்கள் வாழ்வையும் சிறக்க வைத்தனர். அருணாச்சலம் செட்டியார் அவர்கள் ஏழைக் குழந்தைகளின் கல்விக்கு பொருளுதவியும், ஏழைப் பெண்களுக்கு திருமண உதவிகளையும் எந்த இடத்திலும், சொந்தக்காரர்களுக்கும், பங்காளிகளுக் குள்ளும் ஏதேனும் பகைமை ஏற்பட்டால் அதனை



AR. சௌந்தரம் ஆச்சி



AR. மீனாட்சி ஆச்சி

முன்னின்று தீர்த்து வைக்க உதவிகள் செயது, பிறருக்கு பயனுள்ள வாழ்க்கையை வாழ்ந்தார். மேலும், பல்வேறு ஆலயத் திருப்பணிகளுக்கும் உதவிகள் செய்தும், தான் வாழ்ந்த காலம் வரை அன்றாடம் மதுரை மீனாட்சி அம்மனை தொழுவதையும், ஒரு நிரந்தர கடமையாகக் கொண்டிருந்தார். மதுரை S.S. காலனி திருவள்ளுவர் மன்றம் ஏற்படுத்தி தன்னால் இயன்ற பொருளதவிகளையும், சத்சங்கம் ஏற்பட உதவிகளையும், மற்றபடி எந்தவிதமான பொதுக் காரியங்களுக்கும் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து, 59 ஆண்டுகள் வாழ்ந்து 1991ஆம் வருடம் செப்டம்பர் திங்கள் 5 ஆம் தேதி ஆசிரியர் தினத்தன்று, இறைவனடி சேர்ந்தார்.

AR. ராமனாதன் அவர்களின் பணிகள் :

AR. ராமனாதன் அவர்கள் தனது பணியை தன் தந்தையின் வழியைப் பின்பற்றி, டால்ஃபின் பள்ளியை தொடர்ந்து சிறப்பாக நடத்தி வரத் தொடங்கினார். தனது தகப்பனார் அருணாச்சலம் செட்டியாரின் நினைவு தினத்தை முன்னிட்டு, அவர் போற்றும் ஆசிரியர் தொழிலை கௌரவிக்கும் பொருட்டு, அவரது நினைவு தினத்தன்று, மகாபாரதத்தின் தலைமை குருவான துரேணாச்சாரியார் பெயரில், ஆசிரியர்களை கௌரவிக்கும் பொருட்டு, அவர்களிடம் பள்ளிப்பருவத்தோடு மறைந்து போன திறமைகளை வெளிக்கொணரும் வண்ணம், ஓவியப்போட்டி, கட்டுரைப் போட்டி, நடனம் போன்ற பல்வேறு போட்டிகளை நடத்தியும் Ms. துரோணாச்சாரியா, Mr. துரோணாச்சாரியா எனும் அறிவுத்திறன் போட்டியை நடத்தி, போட்டிகளில் வெற்றி பெற்ற அணிக்கு அருணாச்சலம் செட்டியார் நினைவு டால்ஃபின் சுழற்கேடயம், ரன்னருக்கு சௌந்தரம் ஆச்சி நினைவு டால்ஃபின் சுழற்கேடயம் வழங்கி கௌரவிக்கப்படுகின்றனர். இந்த போட்டிகளில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும், பத்திரிக்கைகள் மூலமாக அழைப்பு விடுத்து, அவர்களை போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்து, போட்டிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் நினைவுப் பரிசுகள், நற்சான்றிதழ்கள் வழங்கி, கௌரவிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு சுவையான விருந்தும் போட்டிகள் நடைபெறும் இரண்டு நாட்களுக்கும் வழங்கப்படுகின்றன. இவரது தாயார் AR. மீனாட்சி ஆச்சி அவர்கள், ராமனாதனுடைய பெரிய தாயார் AR. சௌந்தரம் ஆச்சியை குழந்தைகள் அனைவரையும் வழிபடச் செய்து, வாழ்க்கையில் அவர்கள் முன்னேற்றம் அடையச் செய்த பெருமைக்குரியவர் ஆவார்.

அரு. ராமநாதன் கல்வித் தகுதி பி.காம். ஆகும். அரு. ராமநாதன் துணைவியார் பெயர் அரு. மீனாட்சி ஆச்சி ஆகும். இவருடைய குலதெய்வம் மாத்தூர் கோயில் ஆகும்.

இவர்களுடைய மகன் பெயர் ராம. சௌந்தர் அருணாச்சலம் ஆகும்.

இந்தப் பெயர் வரிசையைப் பார்க்கும் போது, அப்பன் - பாட்டன், அம்மா - ஆத்தா ஆகியோரை மறக்காமல் அவர்கள் நினைவைப் போற்றும் வகையில் நாமம் இடப்பட்டிருப்பது நமக்குத் தெரிகிறது.

அரு. ராமநாதன் மகன் சௌந்தர் அருணாச்சலம் மனைவி பெயர் உமையாள் சௌந்தர் ஆகும். சௌந்தர் அருணாசலம் இப்பொழுது மதுரை Honey Well IT - நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார்.

அரு. ராமநாதன் அவர்களின் பணி என்பது, திருவள்ளுவர் கூறியது போல,

"தாம்இன் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

என்பதாக, கல்விப் பணியும், ஆன்மீகப் பணியும் ஆகும்.

இவர் மதுரை பை-பாஸ் சாலையில் டால்ஃபின் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் தாளாளராக இருந்து வருகிறார்.

நான் இந்தப் பள்ளிக்குச் சென்றபோது, பள்ளியையும், அங்கு இவரது அலுவலகத்தையும் கண்டு வியந்து போனேன்.


இவரது அலுவலக அறை ஆண்டவன் ஆலயம் போல காட்சியளித்தது. எங்கு பார்த்தாலும் இறைவன் படங்களே அங்கு நிரம்பிக் காட்சியளித்தன. அங்கு அவர் என்னை வரவேற்றதும், வழங்கிய மரியாதையும் ஆண்டவன் எனக்குக் கொடுத்த வரம் என்று கூறலாம்.



மதுரை டால்ஃபின் பள்ளியின் தாளாளர்
டால்ஃபின் அரு. ராமனாதன் அவர்களின்
அலுவலகம்

டால்ஃபின் பள்ளி

பற்றிய விபரங்கள் :



பள்ளி தொடங்கிய ஆண்டு	:	29-03-1987
பள்ளி – பெயர்க்காரணம்	:	கடலில் வாழும் மீன்கள் தனது கண்களாலேயே மீன் குஞ்சுகளைப் பாதுகாக்கும். அதுபோல மதுரை மீனாட்சி மக்களைத் தன் கண்களால் பாதுகாப்பவள். அவளருளைக் காரணமாகக் கொண்டு டால்ஃபின் என்று பெயரிடப்பட்டது. "Dolphin" are extremely attentive and careful. The big kind eyes and the constantly smiling mouth express so vividly their friendliness to humab being. "Concern for feloow human being should be the marked feature of every educated man", So learn to be humane from Dolphins, Hence the Name.
டால்ஃபின் மீன்	:	டால்ஃபின் மீனுக்கு ஏதாவது காயம் ஏற்பட்டாலோ அல்லது ஆபத்து ஏற்பட்டாலோ, உடனே அது மற்ற எல்லா டால்ஃபின் மீன்களையெல்லாம் உதவிக்கு அழைக்கும். மற்ற மீன்கள் எல்லா உடனே கூடி வந்து காயம்பட்ட டால்ஃபின் மீனை காப்பாற்றி பாதுகாத்து பார்த்து இருக்குமாம். இவ்வாறு தன் இன டால்ஃபின் மீன்களை கண்போல காத்து நிற்கும் டால்ஃபின் மீனைப்போல் மதுரை மீனாட்சியம்மனும் மதுரை மக்களை காத்து வருகிறாளாம். அதுபோல டால்ஃபின் பள்ளியும் அந்த அடிப்படையிலேயே தம் பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவியரை கண்போல காத்து, கல்விக் கண்ணை கொடுத்து வருகிறது.
ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள்	:	110 ஆசிரியர்கள், 40 ஆசிரியரல்லாத ஊழியர்கள்
வகுப்புகள்	:	LKG முதல் 12 ஆம் வகுப்பு வரை இருபாலாருக்குமான மெட்ரிக் பள்ளி
மாணவ, மாணவியின் எண்ணிக்கை	:	3000 மாணவ, மாணவியர்கள்
பள்ளி விலாசம்	:	டால்ஃபின் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளி டால்ஃபின் ஜெய்நகர், பொன்மேனி, மதுரை – 10. போன் : 0452 2387387, 2387787

பள்ளியின் சிறப்புகள் :

- இந்தப் பள்ளியில் சேர்ப்பதற்கான படிவத்தில் "சாதித் சான்றிதழ்" கேட்பதில்லை. எளிமையான அணுகுமுறையில் குழந்தைகளை சேர்க்கிறார்கள். நன்கொடை இல்லை.
- நாட்டியம், ஓவியம், கராத்தே, சாரணர் இயக்கம் போன்ற கலைகளுக்கான பயிற்சிகள்.
- தமிழக அரசு (அறிவிக்கும்) கல்வி வளர்ச்சி நாள் முதல் மதச் சார்பின்மையை வலியுறுத்தி நவராத்திரி, கிறிஸ்துமஸ், தீபாவளி, பொங்கல், ரம்ஜான் போன்ற பண்டிகைகளை மிகவும் வித்தியாசமாகவும், புதுமையாகவும், சமூக நற்சிந்தனையுடனும் (செய்வது) கொண்டாடுவது.
- மாணவர்களின் பொது அறிவுத் திறனை வளர்க்க ஆசிரியர்கள் தூண்டுகோலாக இருந்து மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி மற்றும் பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெறும் அனைத்து போட்டிகளிலும் பங்குபெறச் செய்து பரிசுகளைப் பெறுவது.
- சதுரங்கத்தில் இதுவரை இரண்டு கிராண்ட் மாஸ்டர்களையும் ஒரு IWM-ம் உருவாக்கிய இந்தியாவில் உள்ள ஒரே பள்ளி இந்த டால்ஃபின் பள்ளி தான்.
- மாவட்ட அளவிலான போட்டிகள் முதல் சர்வதேச அளவிலான போட்டிகள் வரை டால்ஃபின் பள்ளி மாணவர்களின் பங்கேற்பு மிகச் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் அமைய பயிற்சியளிப்பது.
- இந்தப் பள்ளி மாணவன் 'கிப்ட்ஸன் பால்' கராத்தேயில் கின்னஸ் சாதனை புரிந்து தனது பெயரை பதிவு செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.
- ஒவ்வொரு ஆண்டும் நிறுவனர் அரு.ராம.அரு. அருணாச்சலம் செட்டியார் அவர்களின் நினைவு தினமான செப்டம்பர் 5 ஆம் தேதி 'டால்ஃபின் துரோணாச்சாரியார்' சந்திப்பு என்ற பெயரில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளி ஆசிரியர்களுக்கும் போட்டிகள் நடத்தி துரோணாச்சாரியார் விருது வழங்கி வருகிறது.
- மாணவர்களின் உள்ளத்தில் மனித நேயத்தை வளர்க்கும் விதமாக, சுனாமி போன்ற இயற்கை சீற்றங்களால் ஏற்படும் மாற்றங்களில் உண்டான இழப்புகளுக்கு உதவி செய்ய மாணவகளை தயார் செய்தல்.
- மேலும் அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள், கருணை இல்லங்கள் போன்றவற்றிற்கு மாணவர்களின் சார்பிலும் டால்ஃபின் பள்ளி நிர்வாகத்தின் சார்பிலும் பெற்றோர்கள் முன்னிலையில் நிதி உதவி வழங்குதவ்.
- பள்ளி அளவில் மட்டுமல்லாது மதுரை மாநகரில் உள்ள சமூக சேவை மன்றங்கள் மற்றும் மருத்துவமனைகளின் மூலம் நிகழும் மனித நேய சேவைகளாக "பழைய பேப்பர் கொடுப்போம் இதயம் காப்போம்" போன்ற சேவைகளில் டால்ஃபின் பள்ளி மாணவர்களை ஈடுபடுத்துவது.
- இந்தப் பள்ளியின் முன்னாள் முதல்வர் VM. ராதா 2003-2004 ஆம் ஆண்டில் தமிழக அரசின் சிறந்த ஆசிரியைக்கான இராதாகிருஷ்ணன் விருது பெற்றவர். இன்னாள் முதல்வர் எ. பத்மா அவர்கள் 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் இராதாகிருஷ்ணன் விருது பெற்றவர் என்பது பள்ளியின் சிறப்பு ஆகும்.

மனித நேயத் தொண்டுகள்

Everyone has a talent!
Everyone can do a job, big or small, to help!
Everyone has a "builder" inside of them!
Just help, just say "yes" to help!
Buiding houses, building lives!
Hemans help humanity!



என்பதற்கிணங்க, 2001 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி ஏற்பட்ட 'குஜராத் பூகம்பம்' நிவாரண நிதிக்கு, டால்ஃபின் நிர்வாகத்தின் சார்பில் ரூ. 10 லட்சம் ரொக்கப் பணமும், மருந்து பொருட்களும், குழந்தைகளுக்கான உணவு பொருட்களையும், மேலும் ஆசிரியர்களின் ஒருநாள் ஊதியத்தையும் குஜராத்திற்கு அனுப்பி உதவிகளை செய்துள்ளார்கள்.

2004 ஆம் ஆண்டு 'சுனாமி' பேராழி அலைகளினால் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்ய முதலமைச்சர் நிவாரண நிதிக்கு இந்த டால்ஃபின் நிர்வாகத்தின் சார்பில் தாளாளர் AR. ராமனாதன் அவர்கள் ரூபாய் ஒரு லட்சத்து எட்டாயிரத்திற்கான காசோலையை வழங்கினார்.

இந்திய ராணுவ வீரர்களின் வெற்றிக்கு வாழ்த்துக் கோரி, அவர்களுக்கு உதவிடும் வகையில் 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற 'கார்கில் போர்' நிவாரண நிதிக்கு தன் பள்ளியின் சார்பில் நிதியனை திரட்டி அவர்களுக்கு உதவிட செய்தார்.

சென்னை அடையார் கேன்சர் நிறுவனத்திற்கு ரூபாய் 40,000/- வழங்கி உதவி செய்தார்.

மேலும் சர்வதேச 100வது மகளிர் தினத்தை முன்னிட்டு மதுரையில் 08-03-2012 அன்று மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் பிறந்த மூன்று பெண் குழந்தைகளுக்கும் மதுரை மாநகராட்சி மருத்துவமனையில் பிறந்த ஒரு பெண் குழந்தைகளுக்கும் எல்கேஜி முதல் 12 ஆம் வகுப்பு வரை இந்த பள்ளியில் இலவச கல்வி வழங்குவதாக AR. ராமனாதன் அவர்கள் உறுதி செய்துள்ளார்கள்.

பத்தாம் வகுப்பில் வெற்றி பெற்ற முதல் பத்து மாணவர்களுக்கு மேல்நிலைக் கல்வியினை இலவசமாக வழங்கி, அவர்கள் மேல்நிலைக் கல்வியில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்கு ஊக்கமளித்து வருகிறார்.

கல்விப் பணிகள்



"அன்னச்சத்திரம் ஆயிரம் அமைத்தலிலும் சிறந்தது
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற பாரதியின் பாட்டிற்கேற்ப,

இந்தப் பள்ளியில் கல்வி கற்க விரும்பும் குழந்தைகளிடம் நன்கொடை வசூலிப்பதில்லை. மேலும், கல்வித் தகுதியின் அடிப்படையில் தகுதி வாய்ந்த குழந்தைகளுக்கு இலவசக் கல்வியினை வழங்குகிறார்.

மேலும், சதுரங்கம், கேரம் போன்ற பல விளையாட்டுத் துறைகளில் பல வெற்றிகளை குவித்து வரும் வீரர்களுக்கு முற்றிலுமாக டால்ஃபின் பள்ளியில் இலவச கல்வி வழங்குகிறார்.

டால்ஃபின் நிர்வாகத்தின் சார்பில் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் விதமாக தமிழகத்தில் உள்ள அனைத்து ஆசிரிய, ஆசிரியைகளுக்கும் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 5 ஆம் தேதி டால்ஃபின் துரோணாச்சாரியார் சந்திப்பு என்ற தலைப்பில் போட்டிகள் நடத்தி ஆசிரியர்களின் திறமைகளை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பளித்து சிறந்த துரோணாச்சாரியார் என்ற பட்டமளித்து / ஆசிரியர்களின் கல்விப்பணி சிறக்க ஒரு தூண்டுகோலாக டால்ஃபின் AR. ராமனாதன் இருக்கிறார் என்பது தமிழகத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்களின் கருத்தாகும்.

ஆன்மீகப் பணிகள்

- "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற வாக்கினை உறுதி செய்யும் வண்ணம் காசி விஸ்வநாத சுவாமி கோவிலுக்கு கதவுகள் செய்ய ரூபாய். 1,25,000த்தை நகரத்தார் சத்திரத்தின் மூலம் வழங்கியுள்ளார்.
- திருப்பரங்குன்றம் நகரத்தார் மன்ற கல்யாண மண்டபம் கட்டுவதற்கு நிதி உதவி அளித்துள்ளார்.
- யானைமலை ஒத்தக்கடை நரசிங்கப் பெருமாள் கோயில் கும்பாபிஷேக திருப்பணிக்கு மூலவர்க்கு கவசம் செய்ய ரூபாய். 10,00,000 மதிப்புள்ள தூய தங்கத்தினை வழங்கியுள்ளார்.
- நகரத்தார் சமூகத்தினைச் சார்ந்த ஏழை குடும்பத்தினரின் திருமணங்களுக்கு உதவி செய்து வருகிறார். ஒவ்வொரு ஆண்டும் ஆன்மீக அன்பர்களால் கொண்டாடப்பட்டு வரும் ராமநவமி, நவராத்திரி, வைகுண்ட ஏகாதசி போன்ற வைபவங்களில் அந்த நாட்களுக்கான சுலோகங்களை பழைய ஆன்மிக நூல்களிலிருந்து சேகரித்து புத்தகமாக வெளியிட்டு, பக்தகோடி பெருமக்களுக்கு வழங்குவதை, தன் தலையாய கடமையாய் ஆற்றி வருகிறார்.
- 2011 ஆம் ஆண்டு தேவகோட்டை 66வது கந்தர் சஷ்டி விழாவிற்கு தலைவராகப் பொறுப்பேற்று விழாவினை மிகச் சிறப்பாக நடத்தினார்.

சமூக சேவைகள்

- நவராத்திரி, கிறிஸ்துமஸ், ரம்ஜான், பொங்கல் போன்ற பண்டிகைகளின் போது, மதுரை மாநகரில் உள்ள முதியோர் இல்லங்களுக்கும், மனவளர்ச்சி குன்றியோர் இல்லங்களுக்கும், கருணை இல்லங்களுக்கும், அல் அமீன் எத்தீம் கானாவிற்கும் சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி அவர்களுக்கு தேவையானவற்றை கேட்டறிந்து நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார்.
- உடல் ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வாகனம் வழங்குதல், அரசு பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு சீருடை வழங்குதல் போன்ற சேவைகளை செய்து வருகிறார்.
- 'எய்ட்ஸ்' பால்வினை நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிதி உதவியும், மருத்துவ உதவியும் அளித்து, அவர்களுக்கு சமூகத்தில் நல்ல அங்கீகாரம் கிடைக்கச் செய்வதில் மகிழ்ச்சியுடன் தொண்டாற்றுகிறார்.
- 08-03-2010 அன்று கொண்டாடப்பட்ட 100வது மகளிர் தினத்தையொட்டி, அன்று முதல் பிறந்த 4 பெண் குழந்தைகளுக்கு, தலா ஆயிரம் ரூபாய் வழங்கி, "பெண்மையை உயர்த்துவோம், சேவையை செய்வோம்" என்று பெருமையுடன் கூறுகிறார்.
- "குருதி கொடுப்போம் உயிர் காப்போம்" எனும் திட்டத்தின் கீழ் இரத்த தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, "Elite World Record" விருது பெறப்பட்டது.
- ஏழை நகரத்தார் குடும்பப் பெண்களின் திருமணத்திற்கு உதவியாக திருமாங்கல்யம் செய்து கொடுத்தல்.

இறை பணியில் - பக்தி நூல்கள்

தேவகோட்டை அரு.ராம.அரு. ராமனாதன் அரு.லெ. வீடு, தாளாளர், டால்ஃபின் பள்ளியின் சார்பாக இலவசமாக வெளியிட்ட பக்தி நூல்கள்.

1. 108 பெருமாள் தாயார் போற்றி - வைகுண்ட ஏகாதசி - 14.01.2003
2. சொர்ம ஆகர்ஷண பைரவர் - தமிழ்ப் புத்தாண்டு - 14.04.2006
3. அபிராமி பதிகம் - தமிழ்ப் புத்தாண்டு - 14.04.2006 (விய வருடம்)
4. அருள்மிகு யானைமலை ஒத்தக்கடை நரசிம்மர் ஸ்லோகம் - கும்பாபிஷேகம் - 15.03.2006
5. சர்வ ஐஸ்வர்யங்களும் தரும் காயத்ரி மந்திரங்கள் - அரு. ராமனாதன் இல்லத் திருமண விழா - 28.05.2007
6. மங்காத செல்வம் தரும் மகாலெட்சுமி துதி - வரலெட்சுமி விரதம் - 24.08.2007
7. ஆண்டாள் திருப்பாவை - 108 பெருமாள் தாயார் போற்றி - வைகும்ட ஏகாதசி - 07.01.2009
8. சிவபுராணம் - கால பாசந்திருக் குறுந்தொகை - சிவராத்திரி - 23.02.2009

9. ராமகாவியம் – சுதந்திர தினவிழா – 15.08.2009
10. கூரத்தாழ்வான் 1000, கூரத்தாழ்வான் படம், ராமானுசர் படம் – தை ஹஸ்தம் – 03.02.2010
11. ஸ்ரீ ராமர் ஸ்லேகங்கள் – ஸ்ரீராம நவமி – 24.03.2010
12. தேவாரத் தேன் துளிகள் மலர் – AR. ராமனாதனின் தாயார் AR. மீனாட்சி ஆச்சியின் 71வது பிறந்த நாள் விழா – 23.04.2010
13. வளங்கள் தரும் வரலெட்சுமி – வரலெட்சுமி விரதம் – 20.08.2010
14. மூவுலகம் தரும் 32 விநாயக மூர்த்தங்கள் புத்தகம், படம் – விநாயகர் சதுர்த்தி – 11.09.2010
15. அருள்தரும் அபிராமி அந்தாதி – நவராத்திரி வெளியீடு – 10.10.2010
16. காலந்தோறும் தமிழ் வளர்த்த 108 சான்றோர்கள் படத்தொகுப்பு – 2010
17. ஸ்ரீலலிதா சகஸ்ர நாமம் – ஆடி வெள்ளி – தேவகோட்டை நகரச் சிவன் கோவில் லட்சார்ச்சனை
18. ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை – புத்தாண்டு – 01.01.2011
19. ஸ்ரீ குரு தட்சிணா மூர்த்தி – குருப்பெயர்ச்சி – 08.05.2011
20. மண்ணில் நல்ல வண்ணம் வாழ்க – 66வது ஆண்டு கந்தர் சஷ்டி விழா – 26.10.2011
21. குருவாய் வருவாய் அருள்வாய் குகனே – 66ஆவது ஆண்டு கந்தர் சஷ்டி விழா – 26.10.2011
22. ஸ்ரீகாசி விஸ்வநாதர் ஆலயத்தில் உள்ள காசி விஸ்வநாதர், ஸ்ரீ காசி விசாலாட்சி, ஸ்ரீ அன்னபூரணி படங்கள்
23. 63 நாயன்மார்கள் மற்றும் 9 தொகையடியார்கள் – சிவன் மனதில் இடம்பிடித்த செல்வர்கள் – ஆருத்ரா தரிசனம் – 08.01.2012
24. 63 நாயன்மார்கள் மற்றும் 9 தொகையடியார்கள் – சிவன் மனதில் இடம்பிடித்த செல்வர்கள் படத்தொகுப்பு – ஆருத்ரா தரிசனம் – 08.01.2012
25. சூலூர் கலைப்பித்தன் எழுதிய 12 ஆழ்வார்கள் – 108 திவ்யதேசங்கள்
26. இலங்குடி ஸ்ரீபூரண புஷ்கலாம்ப சமேத அருள்மிகு பகச்சால மூர்த்தி ஐயனார் பதிகங்கள் இலங்குடி அய்யனார் கும்பாபிஷேக வெளியீடு – 29.01.2012
27. கூரத்தாழ்வான் – 2012 – கூரத்தாழ்வான் அவதார தினம் – தை வெளியீடு – 12.02.2012
28. குலம்காக்கும் கோமாதா – புத்தகம் – தேவகோட்டை நகரச்சிவன் கோவில் – ஸ்ரீ காயத்ரீ தேனுயந்திரம் கோமாதா படம் வெளியீடு – 04.03.2012
29. சிவன் மனதில் இடம்பிடித்த செல்வர்கள் 63 நாயன்மார்கள் மற்றும் 9 தொகையுடைய மதுரை அண்ணாநகர், சர்வேஸ்வரர் கோயில் திருப்பணி நீராட்டு விழா சிறப்பு வெளியீடு – 8.4.2012
30. வளம் தரும் பைரவர் – தமிழ் புத்தாண்டு வெளியீடு – ஸ்ரீ சௌபாக்ய சுதா அட்சர மாதாக்கள் – படம் வெளியீடு – 13.4.2012
31. ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை வெளியீடு
32. நரசிம்மர் படம் அட்டை வெளியீடு
33. நரசிம்மர் கவசம் வெளியீடு
34. திருமகள் துதி வெளியீடு

டால்ஃபின் AR. ராமனாதன் அவர்கள் ஆன்மீகத் தொண்டு மட்டுமின்றி தமிழ் மொழிமேல் ஆர்வம் கொண்டு, அதற்கும் தொண்டுசெய்து வருகிறார் என்பதற்கு தமிழ் வளர்த்த சான்றோர்கள் படத் தொகுப்பு" என்ற சிறப்பு வெளியீட்டு நூலே சான்றாகும்.

ஒரு நூல் வெளியிடுவது என்பது எவ்வளவு கஷ்டம் என்பது எனக்குத் தெரியும். அதுவும் உயர்ந்த தரமான கலைத்தாளில் அதை அச்சடித்து வெளியிடுவதற்கு எவ்வளவு பெரிய தொகை என்பதும் எனக்குத் தெரியும். அதையெல்லாம் பொருட்படுத்தாமல் தமிழுக்காக மட்டும் வாழ்ந்த தமிழ்ச் சான்றோர்களை அவர் அடையாளம் காட்டியிருப்பது தமிழ்மேல் அவர் கொண்டுள்ள பற்றை காட்டுகிறது.

டால்ஃபின் AR. ராமனாதன் அவர்கள் அந்த சிறப்பு நூலில் படத்தோடு அடையாளம் காட்டியிருக்கும் தமிழ்ச் சான்றோர்கள்.

தமிழ்வளர்த்த சான்றோர்க்கு வந்தனம் - டால்ஃபின் பள்ளி

1. தமிழின் உயர் அறிஞர் - திருவள்ளுவர்
2. திருவருட்பா - இராமலிங் அடிகளார் 1823-1874
3. மகாகவி பாரதியார்
4. பாவேந்தர் பாரதிதாசன்
5. தமிழராய்ச்சி மு. இராகவய்யங்கார்
6. கப்பலோட்டிய தமிழர் குறளுரை கண்டவர் – வ.உ. சிதம்பரனார்
7. ஆராய்ச்சி பேரறிஞர் – பேரா. வையாபுரி பிள்ளை
8. தமிழில் ஒப்பிலக்கணம் வடித்த உயர் அறிஞர் – கால்டுவெல் பாதிரியார்
9. தமிழாய்ந்து தமிழ் வளர்த்த பெருமகனார் – வின்சுலோ பாதிரியார்
10. சிறுவர் சிங்காரகவி கவிமணி தேசிய விநாயகனார்
11. தனித் தமிழியக்க தானைத் தலைவர் – மறைமலையடிகளார்
12. தமிழ்ச்சொற்பிறப்பியல் அகராதி ஆக்கியோர் – சுவாமி ஞானப்பிரகாசர்
13. பெரும்பேராசிரியர் பதிப்பாசிரியர் பாடநூலாலர் – மா. நமச்சிவாயர்
14. பெரும்பேராசிரியர் தமிழ் ஆய்வாளர் – மா. இராசமாணிக்கனார்
15. ஆழ்வார்கள் காலநிலை ஆராய்ச்சியாளர் – மு. இராகவனார்
16. தொல்காப்பிய உரை பதிப்பாளர் – சி. கணேசனார்
17. பெரியபுராணப் பேருரையாளர் – சிவக்கவிமணி சி.கே. சுப்ரமணியனார்

18. பாரி கதைப்படைப்பாளர் – ரா. ராகவனார்
19. பொறியியல் வித்தகர் அறிவியல் தமிழ் – பா.வே. மாணிக்கனார்
20. கம்பன் காடு உரைப் பதிப்பாளர் – வை.மு. சடகோப ராமானுசர்
21. தமிழ் இலக்கிய ஆங்கில மொழி பதிப்பாளர் – மு.சி. பூரணலிங்கனார்
22. நான்காம் தமிழ்ச் சங்கம் அமைப்பாளர் – பொ. பாண்டித்துரைத் தேவர்
23. முதற்குறள் விருத்தியாளர் – அரசஞ்சண்முகனார்
24. ஐரோப்பியர் தமிழ் கற்பிப்பாளர் – சீர்காழி முத்து தாண்டவராயர்
25. நாடகத்தமிழர் பரிமாற்கலைஞர் – வி.கோ. சூரிய நாராயணனார்
26. பத்மாவதி சரித்திர படைப்பாளி – அ. மாதவையா
27. கவித்தொகைப் பதிப்பாளர் – இ.வை. அனந்தராமனார்
28. தென்னக பழங்கதை திரட்டு – எஸ்.எம். நடேசனார்
29. கருணாமிருத சாகரம் – தஞ்சை ஆபிரகாம்
30. தமிழன் ஆண்டு குவரி – பண்டித சவரிராயனார்
31. சித்தாந்த சீபிகை – ஜே.எம். நல்லசாமி
32. தமிழே – கம்பன் திருவள்ளுவர் – தி. செல்வகேசராயர்
33. இசைத் தமிழ் பாடலாசிரியர் – தி. இலக்குமணனார்
34. சதாவதானி தனிப் பெருங் கவிஞர் – செய்குத் தம்பிப் பாவலர்
35. பதிப்பாளா – எஸ். அனவரத விநாயகனார்
36. கந்தன் கருணை – ஞானியாரடிகள்
37. யாழ்ப்பாண பேரகராதி தொகுப்பு – நா. கதிரை வேலனார்
38. இலக்கணப் பெரும்புலவர் – கா.ரா. கோவிந்தராசனார்
39. செந்தமிழ் மாறலைங்காரம் பதிப்பாளர் – திரு. நாராயணனார்
40. கவித்தொகைப் பதிப்பாளர் – பின்னத்தூர் அ. நாராயணசுவாமி
41. குறளுரை – கோ. வடிவேலனார்
42. மொழிநூல் – மாறகல் கார்த்திகேயனார்
43. கம்பன்சாரத் தொகுப்பாளர் – வெ.ப. சுப்பிரமணியனார்
44. அபிதான கோசம் முதல் கலைக்களஞ்சியம் – ஆ. முத்து தம்பியார்

45. தொல்காப்பிய சூத்திரர் – சிவஞான முனிவர்
46. செந்தமிழ் நூல்கள் பதிப்பாளர் – காஞ்சிபுரம் இராமசாமியார்
47. பெத்லகேம் குறவஞ்சி – தஞ்சை வேதநாயகர்
48. சிற்றிலக்கிய புராணர் – மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார்
49. வசனநடையர் – ஆறுமுக நாவலர்
50. தமிழ்ப்பேராசிரியர் தகுமநூல்காரர் – சி. தியாகராசனார்
51. முதல் தமிழ் நாவல் ஆசிரியர் – மாயூரம் ச.வேதநாயகர்
52. இரட்சிணிய யாத்ரிகம் – எச்.ஏ. கிருஷ்ணன்
53. பைந்தமிழ் பாட நூலாசிரியர் – பம்மல் விசயரங்கனார்
54. கலித்தொகை சூடாமணி பதிப்பாளர் – சி.வை. தாமோதரனார்
55. மாங்கனித்தேன் கவிநூலர் – மாம்பழக் கவிசிங்கநாவலர்
56. கச்சிக் கலம்பகம் பாடகர் – பூண்டி அரங்கநாதர்
57. சைவ சித்தாந்த சண்டாம்ருதம் அணையார் – சூளை சோமசுந்தரனார்
58. அருணகிரியார் திருப்புகழ் பதிப்பாளர் – வ.த. சுப்பிரமணியனார்
59. தமிழ் வரலாறு தனி நூல் – தஞ்சை கே.எஸ். சீனிவாசனார்
60. சைவ சித்தாந்த பகவத் கீதை – சர். பொன்னம்பல இராநாதனார்
61. இலங்கை தமிழ்ச் சங்க நிறுவனர் – சர். பொன்னம்பலம் அருணாசலனார்
62. குறவஞ்சிநூல் – வெண்பாப்புலி வேலுச்சாமியார்
63. மனோன்மணீயம் – பெ. சுந்தரனார்
64. ஆயிரத்தொண்ணூறு ஆட்டுகட்டு முற்பட்டு தமிழகம் நூலாசிரியர் – வி. கனகசபையார்
65. அபிதான சிந்தாமணி – ஆ. சிங்காரவேலனார்
66. தமிழ்நூல் பதிப்பாளர் – டாக்டர் உ.வே. சாமிநாதனார்
67. தமிழ் வரலாறு – ச. பூபாலனார்
68. சிலம்பு சிறப்புரை – ந.மு. வேங்கடசாமியார்
69. குறள்வழி குமரேச வெண்பா – செகவீரபாண்டியனார்
70. செந்தமிழ் செல்வி முதல் பொறுப்பாசிரியர் – மணி திருநாவுக்கரசனார்
71. கரந்தை தமிழ்ச்சங்கம் – த.வே. உமா மகேசுவரர்

72. சிலப்பதிகாரம் மணிமேகலை நாடகாசிரியர் – கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலனார்

73. கோவை கிழார் – சி.எம். இராமசந்திரனார்

74. விடுதலைக் கவிஞர் – நாமக்கல் வெ. இராமலிங்கனார்

75. தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர் நாகூர் சட்டப் பேராசிரியர் – கா. சுப்பிரமணியனார்

76. பகவத் கீதை மொழி பெயர்ப்பர் – சேலம் இராமசாமியார்

77. செந்தாப்புலவர் – ஆ. கார்மேகக் கோணார்

78. சைவ சித்தாந்தப் புலவர், பதிப்பாளர் – புலவர் ப. இராமநாதனார்

79. திருக்குறள் விரிவாளர் – நாகை. சொ. தண்டபாணியார்

80. திருக்குறள், நாலடியார் திருவாசகம் ஆங்கில மொழி பெயர்ப்பாளர் – ஜி.யு. போப்

81. நூற்றாண்டுமுன் தமிழ் மருத்துவ நூலாசிரியர் – சாமுவெல் எப். கிறின்

82. திருக்குறள் இலத்தீன் ஜெர்மன் மொழி பெயர்ப்பாளர் – டாக்டர் கிரௌல்

83. குறள் ஆங்கில மொழி பெயர்ப்பாளர் – எச்.ஏ. பாப்ளி

84. 19 ஆம் நூற்றாண்டு குறள் ஆங்கில மொழி பெயர்ப்பாளர் – லாசரஸ்

85. 19 ஆம் நூற்றாண்டு சிந்து வெளி நாகரிகம் திராவிட நாகரிகமே – ஈராசு பாதிரியார்

86. தமிழ் மொழி பெயர்ப்பாளர் – ஆ. முத்துச்சிவம்

87. தமிழ் இலக்கிய ஆராய்ச்சி அறிஞர் – நாவலர் சோமசுந்தர பாரதியார்

88. யாழ்நூல் ஆசிரியர் – சுவாமி விபுலானந்தா

89. தமிழ் இலக்கிய காலக்கணிப்பாளர் – எல்.டி. சாமிக்கண்ணுப் பிள்ளை

90. சமஸ்கிருத நூல் தமிழ் மொழி பெயர்ப்பர் – பண்டிதமணி கதிரேசனார்

91. தமிழ் மொழியியல் அறிஞர் – தேவநேயப் பாவாணர்

92. செக்நாடு தமிழ்மொழி ஆராய்ச்சியாளர் – கமில்வக்னாவ் சுவலபில்

93. தமிழன் இதழ் தமிழாராய்ச்சியாளர் – அயோத்தியதாசப் பண்டிதர்

94. முத்தமிழ்க்காவலர் – கி.ஆ.பெ. விசுவநாதம்

95. முற்போக்கி இலக்கிய கர்த்தா – ப. ஜீவானந்தம்

96. நவீன சிறுகதை உயிர் – புதுமைப்பித்தன்

97. ஆராய்ச்சியாளர் ஆசிரியர் – நா. வானமாமலை

98. இடதுசாரி இலக்கிய ஆய்வாளர் – கலாநிதி கைலாசபதி

99. இடதுசாரி இலக்கிய ஆய்வாளர் – தொ.மு.சி. இரகுநாதர்

100. இடதுசாரி இலக்கிய இயக்க முன்னோடி – கே. முத்தையா

101. மக்கள் நாடகக் காவலர் – கோமல் சுவாமிநாதன்

102. இடதுசாரி இலக்கிய ஆய்வு முன்னோடி – க. சிவத்தம்பி

103. நற்றமிழ் இலக்கியத் தூதுவர் – வல்லிக்கண்ணன்

104. முற்போக்கு இலக்கிய முன்னோடி – தி.க. சிவசங்கரன்

105. ஆத்திசூடி – ஔவையார்

106. குறளமுது குரல் ஒலியோன் – குன்றக்குடி அடிகளார்

107. நாடக தந்தை சங்கரதாச சுவாமிகள்

108. கவிச்சக்ரவர்த்தி – கம்பர்

109. தமிழ் எழுத்து சீர்திருத்த செம்மல் – வீரமா முனிவர்

110. கவியரசு கண்ணதாசன்

வழங்கிய விருதுகள் :

- “சதுரங்க சிற்பி” தமிழ்நாடு சதுரங்கக் கழகம் வழங்கியது

15 ஆண்டுகளாக தொடர்ந்து நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சில் வழங்கும்

- சாதனையாளர் விருது
- சிறந்த கல்வியாளர் விருது
- சிறந்த சமூக ஆர்வலர்
- சிறந்த ஆன்மீகவாதி
- தமிழ் முருகன் திருத்தொண்டர் விருது
- தாயைப் போற்றும் தனயன்

மற்றும் பல விருதுகள்

டால்ஃபின் அரு.ராம.அரு. ராமநாதன் அவர்களுக்கு

பெரியோரின் வாழ்த்துரைகள்!

மதுரை டால்ஃபின் வெள்ளி விழா நாளில் 06-01-2012 அன்று

சிறப்பு விருந்தினர் மாண்புமிகு நீதியரசர் AR. **லெட்சுமணன்** அவர்கள்


மதுரை டால்ஃபின் பள்ளியின் பார்வையாளர் பதிவேட்டில் பதித்த

பொன் எழுத்துக்கள்!

GOLDEN WORDS OF OUR CHIEF GUST OF OUR DOLPHIN SCHOOL'S SILVER JUBILEE CELEBRATIO, DR. JUSTICE AR. LAKSHMANAN RECOREDED BY HIM IN OUR DOLPHIN SCHOOL'S VISITORS BOOK.

"I HAD THE PLEASENT PRIVILEGE TO PARTICIPATE IN THE SILVER JUBILEE CELEBRATION OF DOLPHIN PUBLIC SCHOOL. THE FUNCTION WAS ORGANISED VERY WELL. I TALKED TO MANY PERSONS AND ENQUIRED ABOUT THE SCHOOL. EVERYBODY WAS OF THE UNANIMOUS VIEW THAT THE SCHOOL UNDER THE DYNAMIC LEADERSHIP OF AR. RAMANATHAN IS THE BEST SCHOOL IN TAMILNADU AND IMPARTING VERY GOOD EDUCATION TO THE STUDENTS AND ALSO TRAIN THEM IN ALL OTHER FIELDS. I FOUN THE HEADMISTRESS, WHO HAS BEEN AWARDED THE BEST TEACHER AWARD AND ALL OTHER TEACHING STAFF ARE VERY ENTHUSIASTIC AND DEDICATED THEMSELVES FOR THE WELFARE OF THE SCHOOL. THE SCHOOL HAS PASSED THROUGH 25 YEARS OF USEFUL EDUCATIONAL SERVICE TO THE SOCIETY AT LARGE, WHICH IS NOT EASY IN THESE DAYS. I WISH THE CHAIRMAN OF THE SCHOOL, TEACHING STAFF AND ABOVE ALL THE STUDENTS ALL PROSPERITY AND HAPPINESS IN THE YEARS AHEAD AND SHOULD WORK HARD TO IMPROVE THE STANDARD AND ATMOSPHERE IN PUBLIC INTEREST. I WISH THE SCHOOL A GLORIOUS CAREER. I DECLARE THE SCHOOL THE BEST SCHOOL IN TAMILNADU.

(Sd.)
Dr. Justice AR. LAKSHMANAN
Fomer Judge, Supreme Court of India, New Delhi
Former Chairman, Law Commission of India,
Cheif of Panel Indian Court of Arbitration for Sports (ICAS)



மதுரை டால்ஃபின் பள்ளி தாளாளர் அரு.ராம.அரு. ராமநாதன் பற்றி

சூலூர் கலைப்பித்தன் அவர்கள் வழங்கிய

வெண்பா வாழ்த்து!



தேவகோட்டை ராமநாதன் செந்தமிழ் ஆன்மீகக்
காவலன் தெய்வத்தின் காப்பாளன் - சேவகனாய்
கல்வி சைவவைணவம் காத்து வருவோனுக்கு
நல்லருள் தெய்வமே நாட்டு

குருவாய் வருவான் குகனாய் அருள்வான்
முருகனுக் கோர்நூல் முகமும் - அருராமன்
செய்தசேவை யென்னே? சிறப்புத்தான் என்னவென்றால்
தெய்வத்தின் நல்லருள் தேன்

திருச்சொர்ண க்ரஷண பைரவர் நூலை
பெருஞ்செலவில் செய்திட்ட பேறும் - அருராம்
ராமனாதன் கொண்ட ராசசேவை போலன்றோ
நாமவரைப் போற்றுவோம் வாழ்க!

மண்ணில்நல் வண்ணமாய் வாழ்ந்திட ஆதீனம்
எண்ண அருளுரை யேற்றுத்தான் - அண்ணனார்
ராமநாதன் ஆன்மீக நற்தொண்டாற் றிவருதல்
பூமியில் புண்ணியம் கோடி!

ஆண்டாள் திருப்பாவை பாடுவதற் கோர்நூலும்
வேண்டுதலாய் செய்துள்ளார் வேள்வியாய் - ஆண்டவர்
தூண்டுதலோ ராமநாதன் தூய்மையாம் இப்பணிபல்
லாண்டுபல் லாண்டுகள் வாழ்த்து!

திருவருள் தட்சண மூர்த்திக்கும் ஓர்நூல்
குருவருளோ ராமநாதா கூறும் - பெரும்அருள்
நீர்பெற்று வாழ்க! நிலம்வாழ வாழ்கவாழ்க
பேர்புகழ் பெற்று நிலைத்து.

சர்வைஸ் வர்யங் களும்தரும் காயத்ரி
சர்வமந் திரங்கள் பாடநூல் - அர்ப்பணிப்பு
எண்ணமதை ராமநாதன் எப்போதும் எண்ணுவாரோ
மண்ணிங்கு கண்டில்லை நான்.

காலந்தோ றும்மறக் காமல்தம் செம்மொழி
கோலத் தமிழ்வளர்த்த கோமான்கள் - மேலோங்க
பண்பாய் படத்தொகுப்புப் பட்டியல் நூலையும்
கண்ணொற்ற ராமன்செய் தார்.

ராம நவமி நன்றாகக் கொண்டாட
ராமநாதன் ஓர்நூலும் செய்திட்டார் - ராமா
அவதாரம் நீயோ அவதரித்து வந்தாய்
தவமோ தவம்தான் இது.

அபிராமி அந்தாதி ஆக்கிய அந்த
அபிராமி பட்டர் கதையை - அபியால்
அடியேனும் வானொலியில் ஆக்கிப் படைத்தேன்
படியில்ரா மன்செய்தார் நூல்.

தேவராத் தேன்துளிகள் தித்திக்கும் முக்கனிகள்
ஆவலாய்ப் படிக்கின்றேன் அம்மூன்றை! - தேவாரம்
ராமாநாதா செந்தமிழ் ராகதாள பல்லவி
காமதேனு பால்குடம் ஆம்!

- சூலூர் கலைப்பித்தன்

தாயும் ஒரு தெய்வமே!

பெற்ற தாயைப் போற்றுவதில் ராமநாதன் தலைசிறந்தவராகத் திகழ்கிறார். நான் கூட அந்தக் காலத்தில் ஒரு நாடகத்திற்குப் பாட்டு எழுதிய போது,

"அன்பின் கருவே தாய்மை
அங்கே இருப்பது தூய்மை
பண்பில் வருவது வாய்மை
பாசம் தருவதும் தாய்தான்"

என்று எழுதினேன்.



இவர் தான் அச்சிட்டு வெளியிடும் நூல்களிலெல்லாம் தவறாமல் தன் தாய் மீனாட்சி ஆச்சி தன்னைப் பற்றி பாராட்டி தன் கைப்பட எழுதிய திருக்குறளை போட்டு, தன் தாயின் போட்டோவையும் சேர்த்து வெளியிட்டு வருகிறார்.

இவர் பல விருதுகள் பெற்றுள்ளார். அவற்றைப் பார்த்து, அந்த மீனாட்சி ஆச்சித் தாய் பெற்றதினும் பெரிதாக மனமகிழ்ந்து,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்று கூறி எழுதிக் கொடுத்துள்ளார் போலும்.

அம்மா

உங்களுக்கு
நன்றிப் பாக்கள்!



காணிக்கை கேட்காத கண்கண்ட கடவுள் – அம்மா
நடமாடும் தெய்வம் – அம்மா
கருவறை உள்ள கடவுள் – அம்மா
உயிர் தந்த உயிர், உயிர் வளர்த்த உயிர் – அம்மா
மனதில் அழியாத ஓவியம், மறக்க முடியாத காவியம் – அம்மா
உயிரினங்கள் அனைத்தும் உச்சரிக்கும் உயர்ந்த சொல் – அம்மா
வாய்பேசாத ஜீவன்களும் பேசிடும் ஒரே சொல் – அம்மா
பிள்ளைகளின் வாழ்வு ஒளிர்ந்திட உருகிடும் மெழுகு – அம்மா
உச்சங்களின் உச்சம், உலகின் உச்சம் – அம்மா
அன்பின் சின்னம், அமைதியின் திருவுருவம் – அம்மா
திசை காட்டும் கலங்கரை விளக்கம் – அம்மா
கரை சேர்க்கும் தோணி, உயர்த்திடும் ஏணி – அம்மா
நேசம் பாசம் மிக்கவள் வேசம் அறியாதவள் – அம்மா

(கவிஞர் ரவி)

இளைய தலைமுறையே,

"அம்மாவின் பெருமை உணர்வோம்
முதியோர் இல்லம் தவிர்ப்போம்"

அரு. மீனாட்சி ஆச்சி தாயே!



மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் AR. ராமநாதன் அவரது தாயார் AR. மீனாட்சி ஆச்சி அம்மையாரை ஆசிர்வாதம் செய்தல்!

நல்லதைச் சொல் என்றும்

நல்லதைச் செய் என்றும்

நயம்படச் சொல்லும் தாயே!

கருவில் சுமந்தவளே!

சீராட்டி பாராட்டி வளர்த்தவளே!

பெரியாத்தா சௌந்தரம் துணையிருக்க!

சோதனைகள் வரும்போது துணை நின்றவளே!

பெரியாத்தா வாவரசி பக்கத்திலேயே இருக்கா...

பயமெதுக்கு உனக்கு என்று தைரியம்

சொன்னவளே!

மூச்சை உள் இழுக்க முடியாமல் திணறிய

டால்ஃபினை பிழைக்க வைத்தவளே!

சாதனைகள் படைக்க பக்கபலமாய் நின்றவளே!

நீ உயிராய் வளர்த்த என்னை வீழ்த்த

எதிரிகள் எத்தனித்த போது

எதிர்த்து நின்றாய்!

சிலர் வார்த்தைகளால் ஏளனம் செய்த போது எச்சரித்தாய்!

சிறியோர் இன்று நம்மைப் பார்த்து பேச்சு மூச்சின்றி நின்றார்!

டால்ஃபினை கூறு போட பலர் வந்தார்

இன்று அவர் உன் முன்னாள் கூனி குறுகி நின்றார்!

மரித்து விடுவான் உன் மகனென்று ஊரார் கேலி பேச
முழுசாய் நானிருக்கும் வரை அது நடக்காது என்றாய்!
தர்மம் தலைகாக்கும் என்று சொன்னாய்!
தர்மத்தின் வழியே நீ நின்றாய்!
பெரியத்தா சௌந்தரத்தை கும்பிடச் செய்தாய்!
பெரிய தெய்வம் காக்கும் என்று ஆறுதல் தந்தாய்!
அதனால் அன்று குப்பை மேட்டில் வீசி
எறியப்பட் இருந்த நான்
உன்னால் இன்று குவாலிஸ் காரில்
வலம் வந்து கொண்டிருக்கிறேன்!

டால்ஃபின் பெயரோ சிகரத்திலே!
உன் மகனின் வாழ்வும் உயரத்திலே!
தரமான தங்கம் நீ!
பெரியாத்தா சௌந்தரத்தை மறவாமல் – நீ
பெற்ற பிள்ளைகளையும் கும்பிடச் செய்ததால் – நீ
நினைத்ததெல்லாம் நடந்தது
நிறைந்த வாழ்வும் கிடைத்தது!
உயர்ந்த புகழும் கிடைத்தது!
வாடகைக் கட்டிடங்கள்
சொந்த கட்டிடங்களாயின!

உடைந்த பந்தங்கள் ஒன்று சேர்ந்தன!
கிடைத்த பெயரைக் காப்பாற்றுவோம்!
டால்ஃபின் புகழை பறை சாற்றுவோம்
எனது அன்னை மீனாட்சி தாயே!!
உனது வாழ்நாளிலேயே நான்
இதை சொல்லாமல் போனால்
நன்றி மறந்தவனாவேன்!
பெரியத்தா சௌந்தரம்,
அப்பச்சி அருணாச்சலம் ஆசிகளோடு
நீயும் நானும் இன்று போல்
என்றும் வாழ வேண்டும்!

உனக்கு மன சாந்தி, மன அமைதி,

மன மகிழ்ச்சி கிடைக்க

சுந்தரேச பெருமானை வேண்டி

இந்த பக்தி மலரை உனக்காக

நான் படைத்துள்ளேன்

அனைவரும் படிக்கட்டும்

ஆனந்தம் அடையட்டும்!

ஈசனின் திருவருள்

அனைவருக்கும் கிட்டட்டும்!

படிப்பவரும் பயனுறட்டும்!

உனக்காக

பிரார்த்தனைகள் செய்யட்டும்!

பலநூறு பேரின் பிரார்த்தனையால், நீ

பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி வாழ

மன நிறைவு, மன மகிழ்ச்சி பெற்று வாழ

இந்த உரையை அன்புடன் படைத்துள்ளேன்!

என்னை காக்கும் தெய்வங்கள்

பெரியாத்தா சௌந்தரம் ஆச்சி,

அப்பச்சி அருணாச்சலம் செட்டியார்

ஆசிகளுடன் நீ வாழ்க வளமுடன்!!

வாழ்க பல்லாண்டு!!!

இவண்,

உனது அன்பு மகன்

தேவகோட்டை அரு.ராம.அரு. ராமனாதன்

அரு.லெ.வீடு,

தாளாளர், டால்ஃபின் பள்ளி, பொன்மேனி, மதுரை.

பெருமை பெற்ற மீனாட்சி!

மீனாட்சி செய்கின்ற பாண்டி நாட்டில்
மீனாட்சி காக்கின்றாள் மதுரை மண்ணை
கோனாட்சி செய்தபோது நீதி யன்று
துலாக்கோலும் சீர்தூக்கி நின்ற தங்கு
ஏனாட்சி செய்கின்றாய் என்று கேட்டு
இறக்கிவிட்டாள் பாண்டியனை கண்ண கித்தாய்
மீனாட்சி என்றபேரில் இன்று அங்கே
மெய்மறக்கச் செய்கின்றாள் இன்னொ ருத்தாய்.

ஆன்மீகம் கல்வியும் இரண்டு கண்ணால்
ஆண்டுதோறும் தெய்வத்தாய் வாழ்ந்து காண்பார்
மீன்பெயராம் டால்ஃபின்பள்ளி தொடங்கி வைத்து
மேலோங்க செய்துவைத்தார் ஆச்சி தெய்வம்
கூன்குருடு ஏழைக்கெல்லாம் கல்வி தந்து
கோபுரத்தில் ஏற்றிவிட்டார் மீனா ஆச்சி
வான்முட்ட உயர்த்திவிட்டார் உழைப்பி னாலே
வாசுகியாய் சரஸ்வதியாய் காட்சி கொண்டார்,

தேவர்கள் ஆட்சிசெய்த வீர மண்ணாம்
சிவகங்கை சீமைதன்னில் தேவ கோட்டை
காவலராய் பாவலராய் உயர்ந்து நின்றார்
கண்ணதாசன் ராமநாத செட்டி போன்றோர்!
ஆர்வலராம் ராமநாத செட்டி யார்க்கு
அருணாச்ச லசெட்டியாரும் மகனாய் வந்தார்
மாவழகாய் திகழ்ந்தவர்க்கு துணையாய் வந்தார்
மாதரசி மீனாட்சி ஆச்சி ஆவார்.

அருணாச்ச மீனாட்சி ஆகி யோர்க்கு
அழகுமகன் ராமநாதன் பிறந்து வந்தார்
பெருங்குணமாய் பேராற்றல் கொண்ட சேயாய்
பெரும்புகழும் ஈட்டிவிட்டார் இன்று தானும்
கருவாக்கி உருசெய்த தந்தை யாரை
கனவினிலும் மறக்காத பிள்ளை யானார்
பெரும்பாக்யம் மீனாட்சி ஆச்சி செய்தார்
பெற்றதாயும் கடவுளென்றார் ராம நாதன்.

அன்னையைப்போல் ஒருதெய்வம் இல்லை என்றும்
அவள்அடிசொல் மறப்பவர்கள் மனிதர் இல்லை
என்றசொல்லை இவர்மட்டும் மறக்க வில்லை
எழுத்தாலே எழுதாத ஏடும் இல்லை
நின்றுபோட்ட கோட்டைத்தான் தாண்ட வில்லை
நித்திரையிலும் மீனாட்சி உச்ச ரிப்பால்
கன்றுபோல அம்மாவை பெயரைச் சொல்வார்
காணவில்லை இவர்போல பாசம் தன்னை.

ஈன்றபொழு தின்பெரிது வக்கும் சான்றோன்
எனவாக ராமநாதன் ஆகி விட்டார்
தோன்றின்பு கழோடேதான்தோன் றுகஎன் றாக
தோற்றத்தில் மீனாட்சி பிள்ளை ஆனார்
மூன்றுதமிழ் வளர்த்திட்ட மதுரை மண்ணில்
முத்திரையும் பதித்திட்டார் ராம நாதன்
சான்றாக சரித்திரமும் படைத்து விட்டார்
தாயேநீ மீனாட்சி வாழ்க! வாழ்க!!

- கூலூர் கலைப்பித்தன்



டால்ஃபின் ராமனாதனைப் பற்றியும்
அவரது தாயார் AR. மீனாட்சி ஆச்சி பற்றியும்
மீனாட்சிஅம்மன் கோவில் முன்னாள் தக்கார்
மீனாட்சி மைந்தன்
சென்னை கமலா திரையரங்கு அதிபர்
திரு. V.N. சிதம்பரம் அவர்கள்
அவருடைய 7-6-2012 தேதியிட்ட தனவணிகன்
இதழில் வெளியிட்ட கட்டுரைகள்

அன்னை மீனாட்சியா ?
ஆத்தா மீனாட்சி ஆச்சியா ?



செட்டிநாட்டுப் பகுதியில் பெரும்பாலும் பெற்றோரிடம் அன்பும், பாசமும் கலந்த பிள்ளைகள் ஏராளமாக உள்ளனர். அந்தக் காலத்தில் தாயாரிடம் மிக அன்னியோன்யமாக பிள்ளைகள் இருப்பர். ஆத்தாளின் அருகே அமர்ந்தும், மடியில் படுத்துக்கொண்டும் சிரித்து விளையாடுவார்கள். தாய் மீது கொண்டிருக்கும் அந்தப் பிரியம் தந்தை மீது அவ்வளவாக இருக்காது. இல்லையென்று சொல்லமாட்டேன். தந்தையின் மீது பயம் கலந்த பாசம், அச்சம் கலந்த மரியாதை தான் இருக்கும். தகப்பனார் எதிரே உட்காராத பிள்ளைகள் இன்றும் உள்ளனர்.

என்னுடைய சிறு பிராயத்தில் என் தகப்பனாரிடம் பணம் காசு கேட்கக் கூச்சப்படுவேன். ஆனால் என் அப்பா அழைத்தால் ஒரு பயம் கலந்த மரியாதையுடன்தான் செல்வேன். அவர் உட்கார் என்றால்தான் உட்காருவேன். ஆனால் என் தாயாரிடம் உரிமையுடனும் செல்லமாகவும் காசு கேட்பேன். என் தாயார் எட்டணா கேட்டால் 1 ரூபாய் தருவார். 1 ரூபாய் கேட்டால் ஐந்து ரூபாய் தருவார். இது என் தாயார் என் மீது கொண்டிருந்த பாசம். சிறு பிராயத்திலிருந்து அந்த பாசமும் அன்பும் அவரின் இறுதிக் காலம் வரை என் மீது இருந்து வந்தது. என் தகப்பனாரோ எனது இருபதாவது வயதில் சொத்து முழுவதையும் கொடுத்துவிட்டார்கள். அப்படி ஒரு பாசம்.

ஆனால் டால்ஃபின் ராமனாதனுக்கும் அவருடைய தாய்க்கும் இருக்கும் இந்த பந்தம் தலைமுறை கடந்ததாய் உள்ளது. மீனாட்சி ஆச்சிக்கு என்றும் ராமனாதன் 5வயது குழந்தை மாதிரிதான் தெரிகிறார். ராமனாதனோ தனது தாயாரிடம் செல்லும்போது 5 வயது குழந்தையாகிவிடுகிறார். இவர்களின் இந்த பாச பந்தம் தொடர்ந்துகொண்டே இருக்க வேண்டும். பெற்றோரை முதியோர் இல்லங்களில் தள்ளிவிட்டுவிட்டு, மாதம் தோறும் பணம் அனுப்புகிறேன் என்று கூறும் பிள்ளைகள் எல்லாம் ராமனாதன்-மீனாட்சி ஆச்சியைப் பார்த்து திருந்த வேண்டுமென்பதே என் விருப்பம்.

ராமனாதன் மிக மிக வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்தான். அவரின் அப்பா அருணாசலம் செட்டியாரானாலும் சரி அவரது தாயார் மீனாட்சி ஆச்சி பிறந்த வீடும் சரி செல்வ வளமும், புகழ் வளமும் கொண்டவர்கள்தான். ஆனால் சதியோ என்னவோ ராமனாதனுக்கு தொழிலில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சனைகளில் அவருக்கு துணையாக, நல் ஆலோசகராகத் திகழ்ந்தவர் மீனாட்சி ஆச்சி. பிரச்சனை ஏற்படுத்திய கும்பலிடமிருந்து தன் மகனை சாதுரியமாகக் காத்தவர் மீனாட்சி ஆச்சி. வல்லூறுகளிடமிருந்து கோழி தன் குஞ்சுகளைக் காப்பாற்றுவது போல ராமனாதனைக் காத்த தாய்க்கோழி மீனாட்சி ஆச்சி என்றால் மிகையல்ல.

இன்றைக்கு பள்ளிக் கல்வியில் மதுரையில் ஒரு அடையாளமாக "டால்ஃபின்" பள்ளியைச் சிறப்பாக நடத்தி வருவதும் அப்பள்ளியில் ஏழை, எளிய மாணவர்களுக்கு இலவசக் கல்வியை வழங்கிவரும் சேவைச்செம்மல் திருமகளின் அருளைப் பெற்றவர்கள் கலைமகளைப் போற்ற வேண்டும். கலைமகள் எங்கே இருக்கிறாள். கல்வியிலும் கலையிலும் நிலைத்திருக்கிறாள். ஒரு ஏழைக் குழந்தைக்கு கல்வி தருவதும் கலையில் சிறந்த இளைஞர்களை ஊக்கப்படுத்துவதும் கலைமகளை போற்றுவதன் பொருள்தானே! திருமகள் அருளுடன் கலைமகளாய் போற்றிவரும் கல்விச் சேவைச்செம்மல் ராமனாதனை வாழ்த்தவேண்டுமென்ற எண்ணம் எனக்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு. எந்த ஒரு செயலையும் எளிமையாக ஆரம்பித்து பிரம்மாண்டமாக முடித்துவிடும் ஆற்றல் கொண்டவர். அந்த ஆற்றலைப் பல முறை கண்டு பிரமித்தவன் நான். அதற்காக பல லட்சங்களை செலவு செய்வார். இவ்வளவு செலவு செய்கிறீர்களே என்று கேட்டால்... அன்னை மீனாட்சி தருகிறாள் நான் நல்ல காரியங்களுக்குச் செலவு செய்கிறேன் என்பார். அவர் கூறியது எந்த மீனாட்சி? மதுரையை ஆளும் அரசி அன்னை மீனாட்சியா? ராமனாதனை ஆளும் அவரின் ஆத்தாள் மீனாட்சி ஆச்சியா? என்ற சந்தேகம் அடிக்கடி வந்துபோவதுண்டு! அவர்களின் சகஸ்ரலிங்கம் ஆலயம் அமைக்கும் கனவுத்திட்டம் நிறைவேற மீனாட்சி சொக்கேஸ்வரர் அருள் புரியட்டும் என பிரார்த்திக்கிறேன். சுருக்கமாக சொல்வதானால் கல்விக்கு வள்ளல் அழகப்பர் செய்த சேவைக்குப் பிறகு அதே வழியில் தனக்கு எதுவும் தேவையில்லையென்று சேவை செய்து வருபவர் டால்ஃபின் ராமநாதன் அவர்கள் தான்.



தாயின் மடியில் தலை வைத்திருந்தால் துயரம் தெரிவதில்லை...

– டால்ஃபின் ராமநாதன்

அன்னையர் தினமாக மே 13ஆம் தேதி அறிவிக்கப்பட்டிருக்கிறது. அன்னையரைப் போற்றும் அரிய புதல்வர்கள் யாரையாவது சந்தித்து ஜூன் இதழில் எழுதுங்கள் என நமது ஆசிரியர் தெரிவித்தார்... நாம் யாரைச் சந்திக்கலாம்? என சிந்தனையிலிருந்த போது நமது எண்ணத்தில் மின்னலாக வந்து போனவர் டால்ஃபின் பள்ளி தாளாளர் அரு. ராமநாதன் தான். உடனே நமது

எண்ணத்தை ஆசிரியரிடம் சொன்ன போது "சபாஷ் சரியான தேர்வு" உடனே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்றார். நாம் மதுரை, பொன்மேனியில் உள்ள டால்ஃபின் பள்ளிக்குச் சென்றோம். தனது டிரேட்மார்க் உடையுடனும், அதே புன்னகையுடனும் நம்மை வரவேற்றார். அந்த ஆன்மிக அறையில் அமர வைத்தார். செய்யும் தொழிலே தெய்வம், அதில் திறமைதான் நமது செல்வம் என்ற தாரக மந்திரத்தின் உன்னதம் அறிந்தவர். டால்ஃபின் அரு. ராமனாதன் என்பதை மதுரை அறியும். அதிக நேர்மையும், ஒழுக்கமும் ஏழை எளிய மாணாக்கருக்கு கட்டணமில்லா கல்வி, பாடநூல்கள் என இலவசமாகக் கல்விச் சேவையையும் செய்து பிறரை மகிழ்வித்து தான் வித்தியாசமான மனிதர் என்பதை நமது நகரத்தாரும் மற்ற சமூகத்தினரும் அறிந்த நிகழ்வு தானே. அவரிடம் நாம் உரையாற்றியபோது...

உங்களின் தாயார் மீனாட்சி அம்மாவை தெய்வத்துக்கு நிகராகப் போற்றுவதற்கும் அவரை முன்னிலைப்படுத்தியே எல்லா நிகழ்வுகளையும் ஆற்றுவதிலும் காரணம் என்ன என்று நாம் கேட்டபோது அருவியாய் வந்து விழுந்தன வார்த்தைகள்.. என் தந்தையார் தேவகோட்டை அருணாசலம் செட்டியார் அவருக்கு இரண்டு தாரம். எனது பெரியம்மா சௌந்தரம் ஆச்சி அப்பாவுடன் 4 வருடங்கள் தான் வாழ்ந்திருக்கிறார்கள். அவருக்குப் பிறந்த குழந்தையும் இறந்துவிடுகிறது. அதன்பின்னர் தான் அந்த வீட்டுக்கு இரண்டாம் தாரமாக என் அம்மா வாழ்க்கைப்பட்டிருந்தார்கள். எனது தாயார் ரெட்டையம்பாடி ஜமீன்தாருடைய பேத்தி. மாயவரம் அபயாம்பிகை கோவிலில் 1920களிலேயே 22லட்சம் ரூபாய் செலவில் திருப்பணி செய்த பேறு பெற்ற குடும்பம். தருமைபுரம் ஆதீனத்திற்கு எதிரே 2 ஏக்கர் நிலம் வாங்கி அம்மாவுடைய தாத்தா ஜீவ ஜமாதி அடைந்த மிகச் சிறந்த ஆன்மீகவாதி. (கடந்த 10-05-2012 அவருடைய ஜென்ம நட்சத்திரத்தன்று குருபூஜை செய்து வணங்கிவிட்டு வந்தோம்) அபயாம்பிகை சன்னதி முன்பாக அம்மாவுடைய தாத்தா சிலை இன்றும் உள்ளது. என் தாயார் பாரம்பரியமான பெரிய குடும்பத்தைச் சார்ந்தவர். இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்பட்டு வந்தவர்கள் மூத்த தாரத்தை நாளாக நாளாக மறக்கடிக்கப் பார்ப்பார்கள். இது சகஜமான ஒன்றுதான். ஆனாலும் எனது தாயார் மீனாட்சி அம்மாள் மூத்தவரான சௌந்தரம் ஆச்சி உனது பெரியம்மா அவர்களை தினந்தோறும் வணங்கு. தெய்வமாக இருந்து உன்னைக் காப்பாற்றுவார்கள். எந்தக் கஷ்டம் வந்தாலும் உனது பெரியம்மாவை நினைத்துக் கொள் என்று எனது சிறிய வயது முதலே சொல்லிச் சொல்லி வளர்த்தார் என் தாயார். எனது தந்தையார் கூட பெரியம்மாவைப்பற்றி சொன்னதில்லை.

பல வழிகளில் அம்மா எனக்கு துணையாக இருந்து வருகிறார்கள். என் அம்மா ஆளுமைத்திறன் மிகுந்தவர் "Commanding Lady" என்று கூடச் சொல்லலாம். ஏனெனில் அவர்கள் பள்ளிக்கு வரும் நேரம் குறைவுதான். ஆனால் வீட்டில் நான் அவர்களுடன் அளவளாவிக் கொண்டிருக்கும் பல நேரங்களில் நான் ஒருவரைப் பற்றி கருத்துச் சொல்வதை வைத்தே அந்த டீச்சர் இப்படிப்பட்டவர், அந்த ஆயா இப்படிப்பட்டவர், பிரின்ஸிபால்

இப்படிப்பட்டவர் என மிகச் சரியாகக் கணித்துச்சொல்லும் ஆற்றல் நிறைந்தவர். சில ஊழியர்களால் உனக்கு எந்தப் பிரயோசனமும் இல்லை என்பதையும் சிலரால் உனக்கும் உன் பள்ளிக்கும் பயன் உண்டு என்பதையும் மிகச் சரியாகக் கணித்து விடுவார்கள். இவர்களிடம் நான் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதையும் எனக்கு அறிவுரையாகக் கூறுவார்கள். அவர்கள் சொல்வது நூற்றுக்கு நூறு மிகச் சரியாக இருக்கும் என்பதை பல நேரங்களில் நான் அனுபவித்து உணர்ந்திருக்கிறேன். இயற்கையாகவே வசதியான குடும்பத்தைச் சார்ந்தவன் நான். ஆண்டிப்பட்டி, நாமக்கல் என பல ஊர்களில் வட்டிக்கடைகளும் இருந்தன. அப்பா ஆரம்பித்த டைசன் கெமிக்கல்ஸ் என்ற நிறுவனமும் இருந்தன. எனக்கு அந்தத் தொழிலில் அவ்வளவாக ஈடுபாடு இல்லை. டால்ஃபின் பள்ளியை 1987ல் துவங்கினேன். என் அப்பா தான் புதுக்கணக்கு எழுதி துவக்கி வைத்தார். நான் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பேன். என் அப்பா எங்களை மிகவும் சந்தோசமாகத்தான் வைத்திருந்தார். கோடை காலத்தில் ஊட்டிக்குச் சென்றால் 40நாட்கள் தங்குவோம். புதிதாகத் திரைக்கு வரும் எல்லா படங்களையும் பார்த்துவிடுவோம். என் உடன் பிறந்தவர்கள் ஒரு அக்கா. ஒரு தங்கை, நான் ஒரே பையன் என்பதால் மிகவும் செல்லமாகவும் சீராகவும் வளர்க்கப்பட்டேன். 1991ல் அப்பா இறந்து விட்டார். அந்தக் காலகட்டத்தில் எனக்கு சொல்லமுடியாத பல கஷ்டங்கள், சோதனைகள், பணப்பிரச்சினை, கடன் பிரச்சனை என... இது எப்படி வந்தது? என்றே எனக்குத் தெரியவில்லை. திரும்பிய பக்கம் எல்லாம் தொல்லைகளும், தொந்தரவுதான். விதியின் விளையாட்டா? எதிரிகளின் சதியா? என நான் தவித்த போது, இந்த சோதனைகளிலிருந்து நான் வெளியே வந்தது, என் அம்மாவின் மூலம் தான், அவரின் பெரிய 'வில்பவர்' தான் என்னை மீட்டது தைரியமாக இரு. கவலைப்படாதே, சோர்ந்துவிடாதே, என எனக்கு அடிக்கடி தட்டிக்கொடுத்து ஊட்டும் தைரியத்தால் பல சோதனைகளை முறியடிக்க முடிந்தது. அந்தக் காலங்களில் அவர்களின் மடியில் தலைவைத்துப் படுத்தால் எனக்கு துயரங்களே தெரிவதில்லை. தாயின் மடியில் தலை வைத்திருந்தால் துயரம் வருவதில்லை என்ற கவிஞரின் வரிகளுக்கு உயிர் இருந்தது என்று நான் நம்பினேன்.

மராட்டிய மன்னர் சிவாஜிக்கு அவரது தாயார் ஜீஜி பாய்தான் வீரக் கதைகள் கூறி சிவாஜியை வீர சிவாஜியாக உலகே வியக்கும் வண்ணம் வளர்த்திருக்கிறார்.

ஆன்மீகப்பணியில் என்னை ஈடுபடச் செய்ததும் என் அம்மாதான். கோயில் கும்பாபிஷேகம் உழவாரப் பணிகள் என இருந்துவிடாமல் தேவாரம், திருவாசகம் போன்ற பக்தி இலக்கியங்களில் மனங்கவர்ந்த பாடல்களை தனியாகத் தொகுத்து வெளியிட்டிருக்கிறேன். அதனை இலவசமாக எல்லோருக்கும் வழங்கியும் வருகிறேன். சாமி எப்படி கும்பிடவேண்டும். பெரியம்மாவுக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைக்கும் மல்லிகைப்பூ வாங்கிப் போட்டு வணங்கு எல்லாம் சரியாகி விடும் என்று என்னைச் செதுக்கிச் செதுக்கி ஒருவகைப்படுத்தியவர் என் தாய் தான். அவர் மட்டும் தான்.

ஜமீன்தார் வீட்டுப் பெண்ணாகப் பிறந்து நல்ல வசதியான குடும்பத்தில் வாழ்க்கைப்பட்ட எனது அம்மாவுக்கு நான் சொல்லொண்ணா கஷ்டங்களைக் கொடுத்திருக்கிறேன் நான் கொடுத்த கஷ்டங்களையெல்லாம் தாங்கிக்கொண்டு நான் கஷ்டப்படக்கூடாது என்று இமைப் பொழுதும் என்னைப்பற்றியே சிந்திக்கும் ஜீவன் என் தாய் ஒருவர் மட்டும் தான். அதனால் தான் அவரைக் கொண்டாடுகிறேன்.

இதையெல்லாம் நன்கு அறிந்த அய்யா வி.என்.சிடி அவர்கள் அவரது பாட்டனார் சிலைத்திறப்பு விழாவில் எனக்கு "தாயைப்போற்றும் தனயன்" விருதை டாக்டர் A.C. முத்தையா அவர்களின் மூலமாக வழங்கிச் சிறப்பித்ததை என் வாழ்நாள் உள்ள மட்டும் மறக்க மாட்டேன். இதனைக் கேள்விப்பட்ட காரைக்குடி உ. சிறுவயலைச் சேர்ந்த தமிழ் இலக்கிய மன்ற அறக்கட்டளை ஆண்டுவிழா, கவியரசர் கண்ணதாசன் 27ஆம் ஆண்டுவிழா என இருபெரும்விழாவில் "பெற்றோரைப் போற்றும் பெரியார்" விருது எனக்கு வழங்கப்பட்டதையும் ஒரு பாக்யமாகக் கருதுகிறேன். குன்றக்குடி அடிகளாருக்கும் எனக்கும் அறிமுகம் கிடையாது. ஆனால் என்னைப்பற்றிய செய்திகளை எல்லாம் சேகரித்துப் பேசினார். எவ்வளவு பெரிய பணக்காரனாகவும், பெரிய ஞானியாகவோ இருந்தாலும் அவரும் ஒரு தாய்க்கு குழந்தைதான். துறவிகள் தாய் இறந்தால் ஈமக் கிரியை செய்யக்கூடாது என்பது ஆகமத்தின் விதியாக இருந்தாலும் ஆதிசங்கரரும், பட்டினத்தடிகளும் தனது தாய்க்கு ஈமக்கிரியை செய்தார்கள் என அன்னையின் பெருமையைப் போற்றிப் பேசினார்.





என்னைவிட்டால் அவனுக்கு யாருமில்லை

– மீனாட்சி ஆச்சி

டால்ஃபின் ராமனாதனின் தாயார் மீனாட்சி ஆச்சி அவர்களிடம் தங்கள் மகனைப் பற்றி கூறுங்களேன் என்றவுடன் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு அழுதுவிட்டார். ராமனாதன் சிறுவயதில் அவன் அப்பா இறந்துவிட்டார். நான் தான் அவனுக்கு சுமையாக இருக்கிறேன். பள்ளிக் கூடத்தில் உள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், அலுவலர்கள் தான் அவனுக்கு துணையாக இருக்கிறார்கள். என்னைவிட்டால் அவனுக்கு யாரும் இல்லை. அவனை விட்டால் எனக்கு யாருமில்லையென நா தழுதழுக்கக் கூறினார். எவ்வளவோ ஆன்மீகப் பணிகள் ராமனாதன் செய்கிறார். ஆனால் 108 சிவலிங்கம் ஒவ்வொரு வில்வமரத்துடன் நிறுவவும் சகஸ்ரலிங்கம் ஒன்று பெரியதாக நிறுவ வேண்டும் என்ற லட்சியத்தில் இருக்கிறான். அதை நிறுவி நானும், அவனும் அங்கே போய் தங்கிவிட வேண்டும் என்பதும் கடைசிவரை அவன் கூடவே இருக்க வேண்டும் அவன் என் கூடவே இருக்க வேண்டும் என்பதும் என் எண்ணம்... என்றால்

"இந்தப் பச்சைக் கிளிக்கொரு செவ்வந்திப் பூவினில்

தொட்டிலைக் கட்டி வைத்தேன்

இந்தப் பட்டுத்துகிலுடன் அன்னச் சிறகினை

மெல்லென இட்டு வைத்தேன்

நான் ஆராரோ


என தாலாட்ட

இன்னும் யாரோரோ வந்து பாராட்ட"

என்ற புலமைப்பித்தன் வரிகளுக்கேற்ப

இத்தாய் வாழ்த்திக்கொண்டே வாழ்ந்து வருகிறார்

– திருநாகேஷ்


ஒற்றைக் கண் "மணி"

பெற்றோரைப் போற்றும் பெரியார் என்ற விருது வழங்கும் விழாவில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் கூறிய ஒரு கதையைக் கேட்டு மெய் சிலிர்த்தேன். அந்தக் கதையை தனவணிகனில் கூறுவது சாலச் சிறந்தது எனக் கருதுகிறேன்.

ஒரு ஊரில் மணி என்ற பையன் இருந்தான் அவனுடைய தாயாருக்கு ஒற்றைக் கண் மட்டும் தான் இருந்தது. இன்னொரு கண் இல்லை. அதனால் மணியை ஒற்றைக் கண் மணி என்றே பள்ளி முழுவதும் மட்டுமல்ல ஊரே அழைத்தது. ஒரு நாள் மணி மதிய உணவு டப்பாவை மறந்து வைத்துவிட்டு வந்துவிட்டான். அதை எடுத்துக்கொண்டு மணியின் தாயார் பள்ளிக்கூடத்திற்கு வந்து கொடுத்தார். அதை வாங்கிய மணி இனிமேல் பள்ளிகூடம் பக்கமே நீ வரக்கூடாது! ஏன் வந்தாய் ! ஒரு வேளை சாப்பிடாவிட்டால் நான் செத்தாபோய்விடுவேன்? நீ போ! போய்விடு! என தாயைத் துரத்துகிறான்! சக மாணவர்களின் முன்பாகவே அம்மாவை அவமானப்படுத்தி அனுப்பி விடுகிறான் மணி. ஆனாலும் அந்தத் தாய் பொறுமையாகவே மகன் மீது பாசமழை பொழிந்து கொண்டேதான் இருந்தாள் மணியும் வளர்ந்து திருமணம் எல்லாம் செய்து விடுகிறான் அவனுக்கும் குழந்தைகள் பிறந்துவிட்டன. அப்போது அந்த ஒற்றைக்கண் தாயார் , பேரன் பேத்திகளைப் பார்த்து வரலாமே என மணியைத் தேடி வந்தார். உடனே மணி போ... இங்கே ஏன் வந்தாய்? என்று மீண்டும் விரட்டிவிடுகிறான். பேரன் பேத்திகளையாவது பார்த்துவிட்டுப்போகிறேன் எனக் கெஞ்சுகிறாள் அந்தத் தாய். முடியாது போ. உன் ஒற்றைக் கண்ணைப் பார்த்தால் என் பிள்ளைகளும் கேலி செய்யும் போ...! போ...! என துரத்தி விடுகிறான் சோகத்தைச் சுமந்து சுமந்து நொந்துபோன அந்தத்தாய் நாளடைவில் மரணப் படுக்கையில் கிடக்கிறாள். சாகும் தருவாயில் மகனுக்கு ஒரு கடிதம் எழுதுகிறாள். என் கண்ணின் மணியே! கண் மணியான மணிக்கு, உன்னை எல்லோரும் ஒற்றைக் கண்மணி என்று எல்லோரும் என்னால் தானே உன்னைக் கேலி பேசுகின்றனர். என் கண் ஒற்றைக் கண்ணான கதையை உன்னிடம் சொல்ல விரும்புகிறேன். நீ சிறு பிள்ளையாய் இருந்தபோது விளையாடிக்

கொண்டிருக்கும்போது உனக்கு விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தில் உனது ஒரு கண் பாதித்துவிட்டது. டாக்டர்கள் ஒரு கண்ணைத்தான் காப்பாற்றமுடியும் மற்றொரு கண் செயலிழந்துவிட்டது என்றனர். நான் கெஞ்சி அழுது மன்றாடினேன். எப்படியாவது என் மகனைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்சிக் கதறினேன். எனது உயிரே போனாலும் பரவாயில்லை எனது கண்ணை எடுத்தாவது என் மகனுக்குப் பொருத்திவிடுங்கள். என் மகன் ஒற்றைக் கண் என்று பேர் வாங்கக்கூடாது என்றேன். உடனே எனது ஒரு கண்ணை அறுவைச்சிகிச்சை மூலம் அகற்றி அதனை உனக்கு பொருத்திவிட்டனர். நான் ஒற்றைக் கண் ஆகிவிட்டேன். இந்த உண்மையை நீ உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காக எழுதுகிறேன். இன்றைக்கும் என் கண்மணி மூலமாக வாழ்ந்து கொண்டேயிருப்பேன். இப்படிக்கு உன் பாசமுள்ள அம்மா என அந்தக் கடிதத்தை முடிக்கிறாள் உயிர் துறக்கிறாள் - என்று அடிகளார் உருக்கத்துடன் கூறக் கூற என் கண்களின் நீர்த்தாரை வழிந்தோடியது. என் தாய் மீனாட்சி ஆச்சி யாருக்கும் கெடுதல் செய்யாதே. நல்லது செய். என அறிவுரைகளைக் கூறி என்னை வளர்த்த ஜீஜிபாய்... என் உலகமே அம்மாதான்... அம்மாதான்... என்றார்.

டால்ஃபின் AR. ராமனாதன்

நன்றி : தனவணிகன் 7-6-2012

✻ வாழ்க்கை தத்துவம் ✻

நல்லாவின் பால்முழுதும் கன்றுக்கில்லை
நறும்பூவின் மணம் முழுதும் சோலைக்கில்லை
நெல்லாகும் கதிர்முழுதும் நிலத்துக்கில்லை
நிறைகின்ற நீர்முழுவதும் குளத்துக்கில்லை
பல்லாரும் கனிமுழுதும் மரத்துக்கில்லை
பண்ணரம்பின் இசைமுழுதும் யாழுக்கில்லை
எல்லாமே பிறர்க்குழைக்கக் காணுகின்றேன்
என்வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும்! வேண்டும்!!


நன்றி : **டாக்டர் வ.சுப. மாணிக்கம்**


மனிதன் என்பவர் தெய்வம் ஆகலாம்!



மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
வாரி வாரி வழங்கும்போது வள்ளலாகலாம்
வாழைபோலத் தன்னைத் தந்து தியாகியாகலாம்
உருகியோடும் மெழுகைப் போல ஒளியை வீசலாம்
ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலைகளாகலாம்
உறவுக்கென்று விரிந்த உள்ளம் மலர்களாகலாம்
யாருக்கென்று அழுதபோதும் தலைவனாகலாம்
மனம் . . . மனம் . . . அது கோவிலாகலாம்
மனமிருந்தால் பறவைக் கூட்டில் மான்கள் வாழலாம்
வழியிருந்தால் கடுகுக்குள்ளே மலையைக் காணலாம்
துணிந்துவிட்டால் தலையிலெந்த சுமையும் தாங்கலாம்
குணம் குணம் . . . அது கோயிலாகலாம்!

– கவியரசு கண்ணதாசன்





சூலூர் கலைப்பித்தன் பற்றி
பேரூர் அடிகளார், முதுமுனைவர்
திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி
கயிலைக்குருமணி சீர்வளர்சீர்
சாந்தலிங்க இராமசாமியடிகள்

வாழ்த்து!

தொன்மை வளஞ்சேர் சூலூரில்
துலங்கும் அறிஞர் கலைப்பித்தன்
நன்மை பெறவைத் தியநாதன்
நலஞ்சேர் கோயில் வரலாற்றை
உன்னி உணர்ந்து பலவாய்ந்து
உலகம் அறியத் தந்துள்ளார்
மன்னும் சைவ நெறிமரபை
வளமாய்ச் செய்யும் பணிவாழி!

ஆற்றல் மிகுந்த கலைப்பித்தன்
ஆய்ந்து தமிழில் பலகலைகள்
ஊற்றாய் எழும்ப வடித்துள்ளார்
உயர்வு சேரும் திருத்தொண்டர்
ஏற்றம் மிகுந்த வரலாற்றை
இனிதே உரைக்கும் பணிவாழி
போற்றத் தகுந்த திருமுறையின்
புனிதம் உணர்ந்தார் பணிவாழி!

அன்புள்ள,

தவத்திரு. சாந்தலிங்க இராமசாமியடிகளார்

பேரூராதீனம்

ஆசிரியரைப்பற்றி...



சூலூர் கலைப்பித்தன் திரைப்படத் தயாரிப்பாளர், இயக்குனர்.

சாட்டையில்லாத பம்பரம், கண்ணத்தொறக்கணும் சாமி படங்களைத் தயாரித்தவர். சுதந்திர பாரதி படத்தை திரைக்கதை வசனம், பாடல்கள் எழுதி, தயாரித்து இயக்கியவர்.

இவரது 63 நாயன்மார்கள் தீரன் சின்னமலை இரண்டு நூல்கள் ஆனந்த விகடனால் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர 18 நூல்கள் எழுதியுள்ளார். பல்கலைச் செம்மல், வெண்பாச் சித்தர், பல்கலைவேந்தன், சகலகலா நிதி, தமிழ்ப் பேரறிஞர் போன்ற பல பட்டங்களைப் பெற்றவர்.



தேவகோட்டை

அரு. ராமனாதனின் தந்தை

தெய்வத்திரு. அரு. ராம. அரு. அருணாச்சலம் செட்டியார்

மற்றும் பெரிய தாயார் அரு. சௌந்தரம் ஆச்சி

அவர்களின் நல்லாசிகளுடன் ...

மதுரை டால்ஃபின் பள்ளி

கல்விப் பணியில்... 26ம் ஆண்டு

இந்த நூல் வெளியிட உதவி செய்தவர்

இறைப் பணியில்...

தேவகோட்டை டால்ஃபின் AR. ராமனாதன்

(அரு.லெ. வீடு)

தாளாளர், டால்ஃபின் பள்ளி மதுரை - 10

Phone : 93451 69639, 99439 25200, 0452 - 2387787

Email : dolphinschool2009@yahoo.in



AR. ராமனாதன்

நல்லாசியுடன்

23.4.2010



AR. மீனாட்சி ஆச்சி

AR. ராமனாதனின் தாயார்